# அகளங்கன்

## மணிவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org | aavanaham.org

# அகளங்கன்

(மணிவிழா மலர்)

**மலராசிரியர் :**

**டாக்டர் ஓ.கே.குணநாதன்** M.A.M.Sc.M.Phil

(தலைவர் – மணி விழாக்குழு, மேலாளர் – எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
இலங்கைக்கான இணைப்பாளர் – மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)

**வெளியீடு :**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
ஓ.கே.பாக்கியநாதன் அறிஞர்சோலை
இல.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி
மட்டக்களப்பு, இலங்கை
தொ.பே.065-2226658, 0776041503
மின்னஞ்சல்: okpasolai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் விபரம்


நூலின் பெயர் : **அகளங்கன்** (மணிவிழா மலர்)

ஆசிரியர் : டாக்டர்.ஓ.கே.குணநாதன்

முதலாம் பதிப்பு : 2014

விலை : 1000/-

பதிப்புரிமை : திருமதி.பூ.தர்மராஜா B.A.(Hons)

முகவரி : தமிழ் அதர் - 90, திருநாவற்குளம், வவுனியா.

மின்அஞ்சல் : akalankan04@gmail.com

வெளியீடு : எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
(பிரியா பிரசுரம்)

அச்சுப் பதிப்பு : வாணி கணினிப் பதிப்பகம்,
இல.79, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
தொ.பே: 024 2223658

ISBN : 978 - 955 - 8715 - 96 - 3

---

Name : **Agalangan** (Manivizhaa Malar)

Author : Dr.O.K.Kunanaadan

1st Edition : 2014

Rupees : 1000/-

Copy Rights : Mrs.P.Tharmarajah B.A (Hons)

Address : Thamizh Athar - 90, Thirunavatkulam, Vavuniya.

Email : akalankan04@gmail.com

Publication : Writers Motivation Center
(Priya Prasuram)

Printers : Vaani Computer Printing Centre.
No.79, Kanthasamy Kovil Road,Vavuniya
T.P: 024.2223658, email: vaaniprinting@gmial.com

ISBN : 978 - 955 - 8715 - 96 - 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப்

போதாமை இருட்டில் மூழ்கி

நான் செய்த

இலக்கியப் பயணத்திலும்

இலட்சியப் பயணத்திலும்

நான்

வழி தவறாதிருக்க

பொருள் ஒளி தந்து

பெரு வழி காட்டிய

என்

தந்தைக்கு ஒப்பான

சிவநெறிப் புரவலர், சமூக சஞ்சீவி

**திரு.சீ.ஏ.இராமஸ்வாமி ஐயா (ஈசன்)**

அவர்களுக்கும்

என்

உடன் பிறவாத

உடன் பிறப்பு

**திரு.க.குமாரகுலசிங்கம் (சுவிஸ்)**

(நாகராஜா - சிங்கம்)

அவர்களுக்கும்

**இம் மலர்**

**சிறு**

# காணிக்கை

**- அகளங்கன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

இசைத்திட முடியாது எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.

(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும்.

(இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும்

(இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர்.

(இசைத்....)

**கவிஞர் அகளங்கன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழாக்குழு

தலைவர்

**டாக்டர்.ஓ.கே.குணநாதன்**

(மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்)

உப தலைவர்

**நாடக சிரோமணி க.ஸ்ரீகந்தவேள்**

**இலக்கியச் சுடர் ஐ.கதிர்காமசேகரன்**

**இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன்**

செயலாளர்

**கலை இலக்கியச் சுடர் மாணிக்கம் ஜெகன்**

உப செயலாளர்

**சமூகச்சுடர் செ.சந்திரகுமார்**

பொருளாளர்

**கலைச்சுடர் த.பிரதாபன்**

இணைப்பாளர்

**சைவப்புலவர் இ.நித்தியானந்தன்**

(மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)

செயற்குழு உறுப்பினர்

**சைவமணி.செ.சண்முகரெத்தினம்**

**திருமிகு.இ.கோகுலன்**

**திருமிகு.ப.எ.அன்ரன்**

**செல்வி.நந்தீஸ்வரி துரைராஜா (நந்தா)**

**திருமிகு.செ.சண்முகநாதன்**

**திருமிகு.பா.பாலேந்திரன்**

**திருமதி.ச.கிரிஜா**

**திருத்தியவாணி.திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்**

**செல்வி.கஜரதி பாண்டித்துரை**

**இசைஇளவரசன் கந்தப்பு ஜெயந்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனைக்குழு

**சிவநெறிப்புரவலர்.சீ.ஏ.இராமஸ்வாமி**

(செயலாளர், வவுனியா இந்து மாமன்றம்)

**மக்கள்சேவை மாமணி.நா.சேனாதிராசா**

(தலைவர், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)

**இறைபணிச்செம்மல்.வை.செ.தேவராசா**

(தலைவர், வவுனியா. இந்து மாமன்றம்)

**சிவத்திரு.ஆ.நவரத்தினராசா**

(செயலாளர், வவுனியா கோவில்குளம் சிவன் கோவில்)

**சைவசிரோமணி.க.ந.பாலச்சந்திரன்**

(செயலாளர், வவுனியா கந்தசுவாமி கோவில்)

**சைவசிரோமணி.க.ஜயம்பிள்ளை**

(ஓய்வுநிலை பிரதேச செயலாளர்)

**சைவசிரோமணி.இ.கிருபாமூர்த்தி**

(தலைவர், வவுனியா காளி கோவில்)

**திருமிகு.பொ.நல்லையா**

(தலைவர், சிந்தாமணி விநாயகர் ஆலயம்)

**சைவசிரோமணி.சி.கந்தசாமி**

(தலைவர், சித்தி விநாயகர் ஆலயம் வெளிக்குளம்)

**சைவசிரோமணி.சி.சுப்பிரமணியம்**

(தலைவர், வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

**வர்த்தக சிரோமணி.ரீ.கே.இராஜலிங்கம்**

(தலைவர், வவுனியா வர்த்தக சங்கம்)

**செம்மொழிச்செல்வி.பண்டிதை.யோகலட்சுமி சோமசுந்தரம்**

**வவுனியூர்.இரா.உதயணன்** (லண்டன்)

**திருமிகு.த.குமாரகுலசிங்கம்** (சுவிஸ்)

**வித்தியாரத்தினா.சி.வையாபுரிநாதன்**

(ஓய்வுநிலை அதிபர்)

## மலராசிரியர்

**டாக்டர்.ஓ.கே.குணநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயிலில்

**டாக்டர்.ஓ.கே.குணநாதன்**

**த**மிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்களுக்கும் எனக்கும் இடையிலான நேரடித் தொடர்பின் வயது இருபதைத் தாண்டிவிட்டது.

நான் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தராக வவுனியாவிற்குச் சென்றபோது கரப்பங்காட்டில் அவரது வாடகை வீட்டில் அவரைச் சந்தித்தேன். அவரை அதற்கு முன்பே அவரது ஆக்கங்கள் சிலவற்றின் மூலம் அறிந்திருந்தேன்.

அந்தப் பொழுது, நாள் பார்த்து, நல்ல சுபநேரம் பார்த்து வாய்த்ததில்லை. ஆனால் மிகச் சிறந்த சுபநேரமாகவே வாய்த்துள்ளது.

அப்போது வவுனியாவில் **உடுவை.எஸ்.தில்லைநடராசா** அவர்கள் அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார்கள்.

நாடறிந்த கலைஞரும் நல்ல மனிதருமான அவருடன் இணைந்து நாங்கள் கலை இலக்கியப் பணியாற்றினோம்.

இன்று மணிவிழாக் காணும் அகளங்கன் அவர்கள், இன்று சர்வதேசப் பத்திரிகையாளராக விளங்கும் திரு.பொ.மாணிக்கவாசகம் அவர்கள் ஆகியோருடன் இணைந்து வவுனியாவில் கலை இலக்கியப் பணி ஆற்றிய காலம் என் வாழ்வில் மறக்கமுடியாத காலமாகும்.

**திருமதி.இமெல்டா சுகுமார்** அவர்கள் வவுனியா பிரதேசச் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவராக அகளங்கனும், செயலாளராக மாணிக்கவாசகமும், பொருளாளராக நானும் செயல்பட்டோம். **"கலை மருதம்"** என்ற மலரை வெளியிட்டோம்.

**திரு.க.கணேஷ்** அவர்கள் அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழா வவுனியாவில் நடைபெற்றபோது அகில இலங்கை ரீதியாக சிறுகதை, கவிதைப்போட்டிகளை நடாத்தியதையும் **மருத நிலா** என்ற அற்புதமான பெரிய மலரை வெளியிட்டதையும் மறக்கமுடியாது.

வவுனியா நகரசபைத் தலைவராக பதவி வகித்த **திரு.ஜி.ரி.லிங்கநாதன்** அவர்களோடு இணைந்து வவுனியா நகரசபை நூல் நிலையத்திற்கு இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து ஒவ்வொரு நூலிலும் ஐந்தைந்து பிரதிகள் கொள்வனவு செய்ததும் நீங்காத நினைவாகும்.

அகளங்கன் அவர்களோடு அவரது சகோதரன் போல, அவர் வீட்டுப் பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, உயிர் நண்பன் போல எனப் பலவகையில் பழகினேன். ஆலோசனை பெற்றேன். அறிவுரை பெற்றேன். வழிகாட்டப்பட்டேன். அவரது துணைவியாரும் எனது படைப்புக்களை வாசித்து விமர்சிப்பார். திரும்பத் திரும்ப எழுதினேன்.

**"வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்"** என்ற நூலை எழுதி வெளியிட்டு அந்த மண்ணுக்கு எனது நன்றிக்கடனைச் சிறிதளவு தீர்த்துள்ளதாக மகிழ்ந்தேன்.

இப்பொழுது இந்த **மணிவிழா மலர்** மூலம் வவுனியா மண்ணுக்கு நான் எனது நன்றிக்கடனை பெருமளவுக்கு தீர்த்துவிட்டதாகப் பெருமைப்படுகிறேன். மகிழ்கிறேன்.

அகளங்கன் அவர்கள் பல்துறை அறிஞர். அவரின் மலருக்கு ஆக்கங்கள் கோரியபோது பலரும் போட்டி போட்டுக் கொண்டு அனுப்பபி வைத்தார்கள்.

குறிப்பாக வடமாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர், வடமாகாண அமைச்சர்கள் இருவர். வவுனியாவில் கடமையாற்றிய ஆறு அரச அதிபர்கள், தற்போது கடமையாற்றும் அரச அதிபர் என ஏழு அரச அதிபர்கள், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதிகள், வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் கலாசார உதவிப் பணிப்பாளர்கள், வடமாகாண முன்னாள் கலாசாரப் பணிப்பாளர், சமய நிறுவனங்களைச் சார்ந்தோர். குறிப்பாக நல்லை ஆதீன முதல்வர்., மன்னார் ஆயர், ஆலய பரிபாலன சபையினர் என அரசியல், சமூகம், கல்வி, கலை, இலக்கியம், சமயம் சார்ந்த பெரியோர்கள் தமது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் மனப்பதிவுகளையும் வழங்கியிருக்கிறார்கள்.

இவரோடு தொடர்புபட்ட, நட்புக் கொண்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நண்பர்கள் எனப் பலரது கட்டுரைகளும், கவிதைகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

இவரது சில நூல்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இவரது எழுத்துப் பணியை அலசி ஆராய்ந்து ஆதாரபூர்வமாக இவரது **மேதைமைச்** சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

இந்த மலரில் இவர் பற்றி மட்டுமே ஆக்கங்கள் அமைந்துள்ளன. எந்த மலரிலும் இல்லாத ஒரு விசேட அம்சமாக இவர் கலந்து கொண்ட நிகழ்வுகள் சுருக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவரது துணைவியார் இவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளையும், இவரைப் பற்றிய தகவல்களையும் தவறவிடாது பெருமளவுக்கு கணனியிலே தானே பதிவு செய்து வைத்திருந்தார். இப்படி யாருக்கு வாய்க்கும்.

பல பரிசுகளை சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பெற்றவர் இவர். மத்திய அரசு, மாகாணசபை என்பன சிறந்த கௌரவங்களை வழங்கியிருக்கின்றன. மத்திய அரசின் தமிழ்மணி, கலாபூஷணம் பட்டங்களையும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் விருதையும் பெற்றவர் இவர்.

தனது நூல்களுக்காக தேசிய சாகித்திய மண்டல விருது, வடக்கு கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண, வடக்கு மாகாண விருதுகள், தென்னிந்திய தமிழ்நாட்டுக் கலை இலக்கிய பெருமன்ற விருது என பல விருதுகளை பெற்றவர். அந்த விபரங்கள் யாவும் இம்மலரில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ் இலக்கிய வட்டத்தின் **முத்தமிழறிஞர் சொக்கன் விருது, கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது,** மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம் வழங்கிய **நாவலர் விருது** என்பவற்றையும் பெற்றவர். நாங்களும் எங்கள் தமிழியல் விருது வழங்கும் நிகழ்வில் **தமிழியல் வித்தகர்** விருது வழங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டோம்.

வடக்குக் கிழக்கு மாகாண சபை தனது முதலாவது மாகாண இலக்கியப் பெருவிழாவில் (1991) வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து எழுத்தாளர்களைக் கௌரவித்தது. அப்பொது நாற்பது வயது கூட அடையாதிருந்த அகளங்கன் அவர்களும் அவர்களில் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டார்.

தன் தாய் மண்ணுக்கும், தன் தாய்மொழிக்கும், தன் சமயத்திற்கும் அளப்பரிய சேவைகளைச் செய்த அறிஞர் அகளங்கன் அவர்களது பதின்மூன்று நூல் களை எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய பிரியா பிரசுரம் மூலம் வெளியிட்ட எனக்கு அவரது **மணிவிழா மலரைத்** தயாரிக்கும் வாய்ப்பும் கிட்டியது பெரும்பாக்கியமே. அத்தோடு மணிவிழாக்குழுத் தலைவர் என்ற கௌரவமும் தந்துள்ளார்கள்.

இம்மலர் அகளங்கன் அவர்களது அறிவை, ஆற்றலை, செயற்பாட்டை மட்டுமல்ல, வவுனியாவின் வரலாற்றையும் அவரது வரலாற்றையும் பெருமளவுக்கு வெளிப்படுத்தும் என நம்புகின்றேன்.

அகளங்கன் அவர்களது இலக்கியப் பயணத்தையும், இலட்சியப் பயணத்தையும் இம் மலர் மூலம் பெருமளவிற்கு வெளிக்கொண்டு வந்துள்ளோம்.

தமிழ் அறிஞராக நடமாடும் பல்கலைக்கழகமாக நம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அகளங்கன் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் மன நிறைவுடனும் உடல் ஆரோக்கியத்துடனும் சகல வளங்களுடனும் வாழ்ந்து பணியாற்ற இறை அருளை வேண்டுகின்றேன்.

உங்கள் பார்வைக்கு இம்மலரைத் தந்து நிறைவு செய்து கொள்கிறேன்.

பிரியமுடன்

**ஓ.கே.குணநாதன்**
64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி
மட்டக்களப்பு.
மேலாளர் - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவின் நோக்கம்

இம் மணிவிழாவின் நோக்கம் மலர் வெளியீடுதான். பொதுவாகவே ஆடம்பர விழாக்களை நான் விரும்புவதில்லை. இதுவரையில் நான் எனது பிறந்தநாளை விழாவாகக் கொண்டாடியதில்லை. எனது மனைவி பிள்ளைகளின் பிறந்த நாட்களைக் கூட விழாவாகக் கொண்டாடவில்லை.

எனது மனைவி, நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி விளம்பரங்கள் யாவற்றையும் சேகரித்து ஆவணப்படுத்தி கணனியில் பதிவு செய்து வைத்திருந்தார். நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பெருமளவு நிகழ்ச்சிகள் பதிவாகியிருந்தன.

1974 இல் இருந்து 1992 வரையான நிகழ்ச்சிகளின் ஆதார விபரங்கள் பல தவறிவிட்டன. 1992 இன் பின்னான நிகழ்ச்சிகளில் 99% மானவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

சில விளம்பரம் (Notice) இல்லாத நிகழ்ச்சிகள் பதியப்படவில்லை. இந்த விபரங்களை மற்றவர்களின் பார்வைக்கு வழங்க வேண்டும் என்று அவர் விரும்பினார். 92 இன் பின்னான நிகழ்வுகள் எனது நாட்குறிப்புப் போலவும் பெருமளவுக்கு வவுனியாவின் நாட்குறிப்புப் போலவும் அமைந்துள்ளதாக அவர் அபிப்பிராயப்பட்டார்.

எனவே அந்த விபரங்களை நான் சுருக்கி இம்மலரில் வெளியிடக் கொடுத்தேன். விளம்பரங்களில் இருப்பது போலவே மாற்றாமல் அப்படியே பதிவு செய்திருக்கிறோம். இந்த விபரத்தில் என் காலத்தில் என்னோடு மேடைகளிலே நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் பலரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு மணி விழா மலரை இந்தவகையில் யாரும் தயாரிக்கவில்லை என்ற பூரிப்போடு ஏராளமான பக்கங்களை இதற்கு ஒதுக்கியுள்ளோம்.

எமது வீட்டில் நாங்கள் நடாத்திய **வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்ட** அறிக்கையை எனது மனைவி மிக அருமையாகப் பதிவு செய்து வைத்திருந்தார். அதையும் இங்கே சேர்த்துள்ளோம். இவை இரண்டும் வேறெந்த மலரிலும் காணமுடியாதவை.

எனது ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள் ஆக்கத் தலைப்புடன் திகதி வாரியாக இம்மலரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. என்னைப் பற்றிய விபரங்கள் யாவற்றையும் பெருமளவுக்குப் பதிவு செய்தும், மலராசிரியருக்குத் தகவல்கள் வழங்கியும் என் மனைவி இம் மலராக்கத்திற்காகப்பட்டபாடு சொல்லிலடங்காது. அது பாராட்டுக்கு அப்பாற்பட்டது.

இந்த அடிப்படையில் தான் மணிவிழா நோக்கம் ஏற்பட்டது. ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப் பாக்கள், கட்டுரைகள் என்பவற்றோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆக்கங்கள் பற்றியும் துறை சார்ந்த பெரியோர்களிடம் கட்டுரைகள் பெற்று இம்மலரில் வெளியிடக் கொடுத்தோம்.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்களுக்கும், எனது நூல்கள் பற்றிய ஆய்வுரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் என் நன்றி.

என் சமகால இலக்கிய நண்பர்கள், பெரியோர்கள், பேராசிரியர்கள், ஆலய பரிபாலன சபை முக்கியஸ்தர்கள், கவிஞர்கள் எனப் பலர் என்னைப் பற்றிய தமது மனப் பதிவுகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றி.

எனது இலக்கியப் பயணத்தை இம்மலர் ஓரளவுக்குக் காட்டும் என நினைக்கிறேன். இம்மலரைத் தயாரிப்பதில் ஈடுபட்டு உழைத்த என் நண்பர் டாக்டர் ஓ.கே.குணநாதன் அவர்களுக்கும், ஆக்கங்களை வழங்கியோருக்கும் என் நன்றி.

மணி விழாவினை நடாத்துகின்ற மணிவிழாக் குழுவுக்கும், என்மேல் அன்பு கொண்ட நண்பர்கள், பெரியோர்கள் யாவருக்கும் என் நன்றி.

அன்பு

**அகளங்கன்**

தமிழ்அதர்

90, திருநாவற்குளம், வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. காணிக்கை 03
2. தமிழ்த்தாய் வாழ்த்து 04
3. மணிவிழாக் குழு 05
4. நுழைவாயிலில் 07
5. மணிவிழாவின் நோக்கம் 10
6. பொருளடக்கம் 12

ஆசிச்செய்திகள்

1. நல்லை ஆதீனம் 15
2. மன்னார் ஆயர் 16
3. சிவஸ்ரீ.முத்து ஜெயந்திநாதக் குருக்கள் 17
4. சிவஸ்ரீ.இ.பாலச்சந்திரக் குருக்கள் 18
5. சிவஸ்ரீ.க.கந்தசாமிக் குருக்கள் 19
6. சிவஸ்ரீ.இ.வைத்தியநாதக் குருக்கள் 20

வாழ்த்துச் செய்திகள்

1. முதலமைச்சர் வடமாகாணம் 21
2. எதிர்க்கட்சித் தலைவர் கிழக்குமாகாணம் 22
3. சுகாதார அமைச்சர் 23
4. கல்வி பண். அமைச்சர் 24
5. திரு.G.T.லிங்கநாதன் 25
6. வவுனியா அரச அதிபர் 26
7. மட்டக்களப்பு அரச அதிபர் 27
8. சாந்தி நாவுக்கரசன் 28
9. வவுனியா பிரதேச செயலாளர் 29
10. திரு.K.C.லோகேஸ்வரன் 30
11. திரு.த.லங்காகேசன் 31
12. திரு.சி.தில்லைநடராஜா 33
13. திரு.க.கணேஷ் 37
14. திரு.சி.சண்முகம் 38
15. திரு.கு.சிதம்பரநாதன் 39
16. திரு.இ.நித்தியானந்தன் 40
17. திரு.செ.அழகரெத்தினம் 42
18. திரு.க.பேர்ணாட் 44
19. திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம் 46
20. என்.ஸ்ரீதேவி 49
21. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் 50
22. இந்து மா மன்றம் 52




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சிவன்கோவில் கோவில்குளம் 53
24. கந்தசாமி கோவில் 54
25. ஸ்ரீ சிந்தாமணி கோவில் 56
26. ஸ்ரீ காளி கோவில் 58
27. செங்கை ஆழியான் 59
28. நயினை கி.கிருபானந்தா 60

## கட்டுரைகள்

1. திரு.O.K.குணநாதன் 61
2. தமிழ் அறிஞர் அகளங்கன் 101
3. எனது இலக்கிய 149
4. வெள்ளித் தமிழ்ச் சங்கம் 160
5. என்னைக் கொடுத்து 193
6. தாயிற் சிறந்தொரு 199
7. அம்மா அப்பா அன்றில் பறவைகள் 201
8. திரு.க.ஐயம்பிள்ளை 203
9. திரு.செ.சண்முகநாதன் 206
10. பேராசிரியர் சி.சிவலிங்கராசா 210
11. பேராசிரியர்.நா.சுப்பிரமணியஐயர் (கனடா) 213
12. பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ் 219
13. கலாநிதி ச.அருளானந்தம் 221
14. கலாநிதி முல்லைமணி 228
15. திரு.மு.கௌரிகாந்தன் 230
16. கலாநிதி க.நாகேஸ்வரன் 239
17. திரு.சு.முரளிதரன் 242
18. கலாநிதி ந.இரவீந்திரன் 248
19. பேராசிரியர் செ.யோகராசா 250
20. திரு.அருணா செல்லத்துரை 253
21. காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிவுத்தீன் 257
22. மௌலவி S.அப்துல் சமட் 260
23. திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை 263
24. அருதந்தை தமிழ்நேசன் அடிகள் 265
25. ஸ்தபதி.சு.சண்முகவடிவேல் 269
26. வவுனியூர் இரா.உதயணன் 271
27. அருட்தந்தை அன்புராசா அடிகள் 275
28. ஜனாப்.S.சகாப்தீன் 278
29. டாக்டர்.தி.ஞானசேகரன் 280
30. திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் 283
31. திரு.த.விஜயசேகர் 288
32. திரு.கு.சோமசுந்தரம் 290
33. கம்பவாரிதி.இ.ஜெயராஜ் 292


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்


1. கவிஞர்.சோ.பத்மநாதன் 293
2. சிற்பி.சிவ.சரவணபவன் 295
3. கவிஞர் செ.குணரத்தினம் 296
4. திரு.சீ.ஏ.இராமஸ்வாமி 297
5. பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் 299
6. திரு.க.குமாரகுலசிங்கம் 300
7. திரு.V.S.தனபாலசிங்கம் 301
8. திருமதி.த.நிறைமதி 303
9. கவிஞர் த.ஜங்கரன் 304
10. கவிஞர் நவபாலகோபால் 306
11. மொழியரசி கலா குமரப்பா 308
12. ஜனாப்.M.S.றம்சீன் 310
13. திரு.த.தனசீலன் 312
14. புதியத் தளாவை பாரூக் 314
15. திருமதி. பூரணேஸ்வரி தர்மராஜா 315
16. திரு.த.பிரதாபன் 317
17. திரு.மாணிக்கம் ஜெகன் 318
18. நந்தா 321
19. திரு.வை.கஜேந்திரன் 322
20. திரு.ப.எ.அன்ரன் 323
21. திரு.சீனா.உதயகுமார் 324


## ஆய்வுகள்


1. கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் 325
2. கலாநிதி திருமதி.ரூபி.வலன்ரினா.பிரான்சிஸ் 329
3. பண்டிதை செல்வி.யோகா சோமசுந்தரம் 333
4. திரு.ந.பார்த்திபன் 341
5. திரு.பொ.சத்தியநாதன் 351
6. திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள் 354
7. திரு.ச.பவானந்தன் 372
8. திரு.மிக்கேல் சூசைதாசன் 375
9. திரு.துரைராஜா. இளங்குமரன் 380
10. திரு.கதிர் சுவர்ணராஜா 389

* நன்றி 393
* பிரதிகள் பெற்றோர் 395
* கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் 404




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

குருபாதம்

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
## இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

# ஆசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்-

**த**மிழுக்காகவும் தமிழ் இலக்கியத்திற்காகவும் சைவ சமயத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்து 60 ஆண்டுகளை தொட்டு நிற்கும் **கலாநிதி அகளங்கன்** அவர்களுக்கு இன்று மணிவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். நமது நாட்டில் தமிழுக்காக தங்களை அர்ப்பணித்த அறிஞர்களின் வரிசையில் தன்னையும் இணைத்து தமிழின் பெருமைகளை உலகிற்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் இவர் நீண்டகாலமாக ஈடுபட்டு வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. **திரு.கலாநிதி அகளங்கன்** மென்மேலும் தனது இந்த சேவையினை மேலெடுத்து செல்ல இறைவனுடைய திருவருளை வேண்டி நிற்கின்றோம். இவருடைய இச்செயலினை கௌரவித்து விழா எடுத்து நூல்வெளியிடும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினரை வாழ்த்தி பாராட்டுவதுடன் ஏனைய கலைஞர்கள் கல்விமான்கள் இலக்கிய அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம். விழா சிறப்பாக நடைபெற எங்களுடைய வாழ்த்துக்கள்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் ஆயர்

மேதகு கலாநிதி.இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின்

# ஆசிச் செய்தி

முன்தோன்றிய மூத்த மொழி நம் மொழி, செம்மொழி செழுமைமிகு நம்மொழி, காவியங்கள் பல கண்ட நம் மொழி, அழிவே இல்லாத அழகு மொழி நம்மொழி, அதுவே நம் தாய்மொழி தமிழ்மொழி. நம் தமிழுக்காகவும் தமிழிலக்கியத்திற்காகவும் சுடர்வீசும் சுடரோன்களைத் தமிழ் இலக்கிய வானம் காலத்துக்குக் காலம் கண்டே வருகிறது. அத்தகைய சுடர்களில் தாரகை நடுவே தண்மதிபோல் எமது ஈழத்திருநாட்டின் வடமாகாணத்தில் எம் கண்களுக்கு இன்று புலப்படும் தமிழிலக்கியவாதி **கலாநிதி அகளங்கன்** அவர்கள் என்றுரைப்பது சாலத்தகும். அவரது தமிழிலக்கிய பணியின் முத்தாய்ப்பான அறுபது அகவையின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வரைவதில் அகமகிழ்கிறேன்.

சிலருக்கு கவி புனையும் ஆற்றல் வாய்க்கும், சிலருக்கு கதை சொல்லும் போக்கு கைகூடும். சிலருக்கு கட்டுரை எழுதும் பாங்கு வசப்படும். இன்னும் சிலருக்கு உரைநடை, நாடகம் வனையும் ஈர்ப்பு இயல்பாகிடும். ஆனால் கவி என்றால் என்ன, காவியம் என்றால் என்ன, சிறுகதை என்றால் என்ன, என இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் முத்தெடுத்து தமிழியல் வித்தகராக துலங்கும் தமிழறிஞர் அகளங்கனின் தமிழ்ப்பெருமைகளை எளிதில் சொல்லிவிட முடியாது. கவிதைகள், கட்டுரைகள், இலக்கிய ஆய்வுகள், நாடகங்கள், பேச்சுக்கள் என பரந்த பரப்பில், விரிந்த திசையில் அகளங்கன் ஆக்கிய நாற்பத்துமூன்றுக்கும் அதிகமான படைப்புக்களில் நம் பார்வையைச் செலுத்துவோமாயின் இவரது தமிழறிவையும் தமிழ் மீதான வாஞ்சையையும் துலாம்பரமாக அறிந்துகொள்ள முடியும். அந்தவகையில் கலாநிதி அகளங்கன் அவர்களின் தமிழிலக்கிய சேவையைப் பாராட்டி எழுத்தாளர் ஊக்குவிப்பு மையமும் இலக்கிய அன்பர்களும் இணைந்து எடுக்கும் விழாவிற்கும் அதன் மகுடமாக திகழும் இம்மணிவிழா மலருக்கும் இறையாசீர் இனிதே கூறி வடகிழக்கு மாகாண ஆளுனர் விருதைப் பெற்று தனிநிகராய் நிற்கும் அகளங்கன் என இலக்கிய வானில் துல்லியமாக அடையாளம் காணப்படும்.நா.தர்மராஜா அவர்கள் உயிர்மூச்சுள்ளவரை தமிழின் புகழ்பாடி நாற்றிசையும் எட்டுத்திக்கும் எம்மொழி தமிழ்மொழி பெருமை பெற வகை செய்ய உளமார வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கற்புலத்து மனோன்மணி அம்பாள் துணை

வேதாகம கிரியாகலாநிதி சிவஸ்ரீ.முத்து ஜெயந்திநாதக் குருக்கள் (J.P) அவர்களின்

# ஆசிச்செய்தி

**அ**ன்பு, அறிவு, அடக்கம் ஆகிய பண்புகளுக்கு உரியவரான மணிவிழா நாயகர் **கலாநிதி அகளங்கன்** அவர்களுடன் 1997ம் ஆண்டு முதல் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர் பல விழாக்களுக்குத் தலைமை ஏற்று நடாத்தும் போது நான் ஆசியுரை கூறியதை எனது பாக்கியமாகக் கருதுகிறேன். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய **வித்தியா விநாயகர்** ஆலயம் அமைத்து இரண்டு மஹா கும்பாபிஷேகத்தையும் முன்னின்று நடாத்தி கும்பாபிஷேக மலரையும் வெளியிட்டு ஆலயத்தின் பெயர் அழியா வண்ணம் வித்தியா விநாயகர் மீது தலவிருட்சம் நாவல் மரத்தையும் இணைத்து பல கீர்த்தனைகள் இயற்றியது காலத்தால் அழியாபணி. இவரின் பணியைப் பாராட்டி **வித்தியாசுரபி** என்னும் பட்டம் வழங்கியதை எண்ணி மகிழ்கிறேன்.

மணிவிழா சிறப்புடன் நடைபெறவும், இவ்வரிய மலரை வெளியிட்டு பெருமை பெறும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பணியினைப் பாராட்டுவதோடு விழா நாயகர் தமது தர்மபத்தினியுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற என்து குலதெய்வம் மனோன்மணி அம்பாள் பாதம் பணிந்து நல்லாசி கூறுகிறேன்.

சுபம்

தோன்றிற் புகழோடு தோன்றுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வவுனியா ஸ்ரீ.கந்தசாமிகோவில் பிரதமகுரு
சிவநெறிக் காவலர். பிரம்மஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

**கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** தமிழுக்கும், இலக்கியத்துக்கும், சைவ சமயத்துக்கும் பெரும்பணி ஆற்றி, அறுபது வருடங்கள் பூர்த்தியடைவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். அவரின் பணி தொடர வேண்டும் என்றும் நல்ல ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் ஆண்டவன் கொடுக்க வேண்டும் என்றும் எம்பெருமான் முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

மனிதனின் நிலைப்பாடு இருக்கும் போதுதான் மதிக்கப்படுகிறது. ஆனால் இறந்தும் இறவாமல் இருக்க நாம் ஏதாவது செய்யவேண்டும். அந்தவகையில் அகளங்கனின் ஆற்றல்கள் ஆவணப் படுத்தப்பட வேண்டும். மணிவிழா மூலமும், இந்தமலர் வெளியீடு மூலமும் இவை நிறைவு செய்யப்படுகின்றன.

இம்மணிவிழாவும் இம்மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெறவும், அவருக்கும் நல் ஆசிகளை வேண்டி முருகப்பெருமானை வேண்டிநிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு,

கணபதிச் சித்தர் சிவஸ்ரீ.மு.க.கந்தசாமிக் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

***எனது பால்ய நண்பர்!***

**வ**வுனியா நகரில் தனிப் பெருமையும் இலக்கியத் துறையில் 60 ஆண்டுகளாக கலாநிதி அகளங்கன் அவர்களின் மணி விழாவும் வன்னி நகருக்கு தனி பெருமையை தேடித் தந்த கலாநிதி அகளங்கனுக்கு.

பல்லாண்டு காலம் வாழ இலக்கிய துறையில் சேவையாற்ற ஆசி வழங்குகிறேன். அன்னார் எனது பால்ய நண்பர். அத்துடன் சமய சேவையில் சிறந்த ஆற்றல் உடையவராயும் உள்ளார். இலக்கிய துறை, எழுத்தாற்றல். என்னால் எவ்வளவு என்று கூற முடியாது. பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் சமய விளக்க உரையில் சிறந்தவராக விளங்குவதால் அன்னாரின் சேவைக்கு சித்தி விநாயகர் பாதம் பணிந்து நல்லாசிகள் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அகில இலங்கை சமாதான நீதவான், சிவாச்சாரிய பூஷணம், அரச சேவை இளைப்பாறுனர், தேசபந்து கலாநிதி, சிவாச்சாரியர், ஈசான தீட்சிதர். சிவஸ்ரீ.மு.இரத்தின வைத்தியநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்பர். சொல்லும் போது மற்றவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும்படி சொல்வதும் பிறர் சொல்வதிலுள்ள நுட்பத்தையும் உண்மையையும் அறிந்து கொள்ளும் அறிவும் படைத்த பெருந்தகை **தமிழ் அறிஞர் கலாபூஷணம் கலாநிதி கவிஞர் தமிழ் மணி அகளங்கன்** அவர்கள் வவுனியா மண் பெற்றெடுத்த பேராற்றல் கொண்டவர். பல பட்டங்களை தன் இடத்தே தேடாமல் தேடிக் கொண்டவர்.

தன் நாட்டிலும் பன் நாட்டிலும் முத்தமிழைப் பரப்பி விதைகள் பல விதைத்தவர். அவர் தம் செயற்கரிய செயல்களால் தமிழ் உலகத்தில் பல அறிஞர்கள் போற்றுகிறார்கள் என்றால் அது மிகையாகாது. பல பரிசில்களும் விருதுகளும் அவரை நாடி ஓடி வந்தன. வவுனியாவில் இலக்கிய விழா, ஆன்மிக விழாக்கள் இவர் இல்லாமல் இயங்குவதில்லை. பட்டிமன்றம் உட்பட தமிழுக்காகவும் தமிழ் இலக்கியத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்த அறுபது ஆண்டுகள் சிந்திக்க வேண்டியனவே. பல வகையிலும் மணி விழா ஆண்டு மேலும் ஊக்குவிப்பை பெற்றுக்கொடுக்கும். சகல அன்பர்களும் ஒன்றிணைந்து விழா எடுப்பதை நினைத்து மனம் மகிழ்கிறோம். அவருக்கு இவ் ஆசிச்செய்தி மூலம் மேலும் பல பட்டங்களையும் பரிசில்களையும் பெற்று பல்லாண்டு புகழுடன் சேமத்துடன் வீரியம் தைரியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து நிற்கிறோம்.

வாழ்க வளர்க

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண சபையின் கௌரவ முதலமைச்சர்
நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கலாநிதி அகளங்கன் அவர்கள்
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி
மட்டக்களப்பு.

**கலாநிதி அகளங்கன்** அவர்களின் மணிவிழா கொண்டாடப்படுவதையிட்டு மகிழ்ச்சி. அவருடைய 25 வருடகால ஆசிரிய சேவை அத்துடன் சமய, சமூக, இலக்கிய, கலைச் சேவை ஆகியன மக்களுக்குப் பயன் பட்டதால்தான் மக்கள் மணிவிழா கொண்டாடுகின்றார்கள். தொடர்ந்து அவரின் சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட இறைவன் அருள் புரிவானாக!

நன்றி

க.வி.விக்னேஸ்வரன்
நீதியரசர்
முதலைமைச்சர்,
வடமாகாண சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின்

# வாழ்த்துரை

கலாநிதி அகளங்கன் அவர்களதுகலை, இலக்கிய, கல்விப் பணிகளை பாராட்டும் வகையில் எடுக்கப்படும் மணிவிழாவை யொட்டிவெளியிடப்படுகின்ற நினைவு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி அகளங்கன் அவர்களை அவ்வப் போது சந்திக்கும் போது நட்புடன் உரையாடிக் கொள்ளும் வழக்கம் உள்ளது. அவரது இலக்கிய ஆளுமை பற்றியும், அவர் ஆற்றிவரும் தமிழிலக்கியப் பணிகள் தொடர்பாகவும் நான் அறிந்து வைத்துள்ளேன்.

மொழியின் கையாளுகை தொடர்பான திறன்களை எமது இளையோருக்கு கற்றுக்கொடுத்தல் என்பது ஆசிரியர்களினதும், அறிஞர்களினதும் காத்திரமான கடமையாகும். தமிழ்மொழி, இலக்கியத் துறைகளில் இளையோரைப் பயிற்றுவிக்கும் இவரதுமுயற்சிகள் பாராட்டப்படவேண்டியதாகும்.

மாணவர்களது மொழி, இலக்கியத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகளில் தமிழ்மொழித்தினப் போட்டிகள் வருடாந்தம் நடைபெறுகின்றன. கலாநிதிஅகளங்கன் அவர்கள் தான் ஆசிரியராக கடமையாற்றிய பாடசாலைகளில் இப்போட்டிகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் மிகக் கரிசனையான பணியை ஆற்றியிருந்தார் என்பதை நானறிவேன்.

பேச்சு, விவாதம், சிறுகதை, நாடகங்கள் என சகல துறைகளிலும் மாணவர்களைப் பயிற்றுவித்து வெற்றிகளைத் தேடிக் கொடுத்தார். இவரால் வழிகாட்டப் பட்டமாணவர்கள் இன்று சிறந்த பேச்சாளர்களாகவும் இலக்கியவாதிகளாகவும் திகழ்ந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். கலாநிதி அகளங்கன் அவர்கள் இன்றுதமிழ் மொழி, இலக்கியம் தொடர்பானபல்வேறுஅரங்குகளில் நடுவராகவும், முதன்மைப் பேச்சாளராகவும் மிளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு பெருமைப்படுகின்றோம்.

கலை, இலக்கியச் செயற்பாடுகளிலே இவர் கொண்டிருந்த அதீத ஈடுபாட்டின் காரணமாக அரச விருதுகள், இலக்கியப் பேரவைகளின் பாராட்டுக்கள் என்பவற்றை பெற்றுள்ளார். இன்றுமணிவிழாக் காணும் கலாநிதிஅகளங்கன் அவர்கள் தொடர்ந்தும் மொழி,கலை இலக்கியத் துறைகளில் ஆர்வமுடன் ஈடுபடுவாரெனஎதிர்பார்க்கின்றேன்.

மணிவிழா நாயகனுக்கு எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் கௌரவ டாக்டர் ப.சத்தியலிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## கலாநிதி அகளங்கன் ஒரு சர்வதேசக் கலைஞன்

**த**மிழிற்கும் தமிழிலக்கியத்திற்கும் தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவையை பாராட்டி கலாநிதி அகளங்கள் (நா.தர்மராஜா) அவர்களுக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் வெளியிடப்படவுள்ள மணிவிழா சிறப்பு மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மனமகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி அகளங்கன் அவர்கள் எங்கள் மண்ணிற்கு பெருமைசேர்த்த மண்ணின் மைந்தன். இவரை கவிஞராக, சிறந்தபடைப்பாளியாக, தமிழறிஞராக, சிறந்த கல்விமானாக,கலாச்சார விழுமியங்களை கடைப்பிடிக்கும் பண்பாளனாக காண்கின்றேன். இவர் வவுனியாவின் பழம்பெரும் கிராமமான பம்பைமடுவில் பெரியார் நாகலிங்கம் அவர்களின் கனிஸ்ர புத்திரராவார். இவரது தந்தை புராணங்களுக்கு பயன்(கருத்து) சொல்லுவதோடு சாஸ்த்திரங்களை மெய்ப்பிப்பதில் சிறந்து விளங்கியவர். இதனால்தான் என்னவோ தந்தை வழியில் தனயனும் சிறுவயதிலேயே தமிழிலக்கியம் மீதும், கவிதை எழுதுவதிலும் ஈடுபாடுடையவராக இருந்தார். சங்ககால புலவனுக்குரிய தான்கொண்ட கொள்கை மீதுள்ள அடங்காபிடிவாதமும் இறுமாப்பும் இவரில் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆரம்பத்தில் சிறுகதைகள், கவிதைகள், நாட்டுப்புற பாடல்கள் என தனது கலைப்பணியை ஆரம்பித்து இன்று சிகரம் தொட்டு நிற்கும் சிறந்த கல்விமானாக சிறப்புடன் விளங்குகின்றார். இதற்காக இவருக்கு கிடைத்த கௌரவ கலாநிதிப்பட்டம் இவரை மேலும் ஒருபடி மேலுயர்த்தியுள்ளது. பணத்திற்கு முன்னுரிமை வழங்கும் இன்றைய அவசர உலகில் கலைத்துறையை வியாபாரமாக செய்யும் சிலர் மத்தியில் எதையுமே எதிர்பார்க்காது உயிர்மூச்சாய் கலைத்துறையில் பணியாற்றும் ஒரு உத்தமரிவர். அதனால்தான் என்னவோ யாரும் சம்பாதிக்கமுடியாத சமூகப்புகழை இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பெற்றுள்ளார். எனவே கலாநிதி அகளங்கன் ஓர் சர்வதேச கலைஞன்.

ஆணின் வெற்றிக்கு பின்னால் பெண் இருப்பாள் என்ற கூற்றிற்கு அமைய இவரின் வளர்ச்சியில் உறுதுணையாக இருக்கும் இவரது பாரியாரையும் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

இவர் சேவை எம்சமூகத்திற்கு தேவை.கலப்படமில்லாத இவர் பணி தொடரட்டும். வாழ்த்தி வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இயற்கையின் நியதியில் பல்வேறு பருவ காலங்கள் வந்து போவது போன்று மனிதனின் வாழ்விலே பல்வேறு பருவங்கள் வந்து போகின்றன. இயற்கையிலே பருவகாலங்கள் மாறிமாறி வந்து கொண்டிருக்கும். ஆனால் மனிதருடைய வாழ்விலே இப்பருவங்கள் போனது போனது தான். அவை மீண்டும் ஒருமுறை வராது. இக்காலத்திலே ஒவ்வொரு மனிதராலும் ஆற்றப்படுகின்ற செயல்கள் அவரவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு வெளிப்படுகின்றன.

மணிவிழா என்பது ஒருவரது வாழ்வு, அவரின் பணிகள், சாதனைகள் என்பவற்றை அவர் வாழும் காலத்திலேயே அவரைப் பாராட்டவும், ஏனையோருக்கு அவரை வழிகாட்டியாக்கவும் பேருதவியாக அமைகின்றது. இத்தகைய மணிவிழாவினைக் காணும் நாயகன், **அகளங்கன்** என அழைக்கப்படுகின்ற **கலாநிதி.என்.தர்மராஜா** அவர்கள் தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதில் பேருவகையடைகின்றேன்.

மனிதன் வாசிப்பதனால் பூரணமடைகின்றான். வாசிப்பு பழக்கமுள்ள ஒருவரால் தான் எழுதமுடியும். அகளங்கன் அவர்கள் பல நூல்களை எழுதினார் என்றால் அதற்கு அடிப்படை வாசிப்புப் பழக்கம் இருந்தமையே என்றால் அது மிகையாகாது. **கவிதை, கட்டுரை, வானொலி நாடகம், நாட்டிய நாடகம், சிறுவர் பாடல், சிறுகதை நாவல், இசைப்பாடல், ஆய்வுக் கட்டுரை, சமயநூல்** என பல்வேறு துறைகளில் இவர் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

இவரது ஆக்கங்கள் தேசிய சாகித்திய மண்டலப் பரிசுகளையும், வடக்கு மாகாண சபையின் சிறந்த நூல்களுக்கான பரிசினையும் பல தடவைகள் பெற்றுள்ளன. அத்துடன் **கங்கையின் மைந்தன்** எனும் வானொலி, மேடை நாடகங்கள் என்ற நூலுக்கு **தேசிய சாகித்திய மண்டலப்பரிசு, வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு, தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்ற சிறந்த நாடக நூலுக்கான பரிசு, இலங்கை இலக்கியப் பேரவைப்பரிசு** என பல பரிசில்களைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எழுத்துத் துறையுடன் மட்டும் நிற்காது அரச சேவையிலே இரண்டரை தசாப்தகாலம் சேவையாற்றி பெருமைக்குரிய நாயகனாக திகழ்கின்ற இவர் ஆசிரியராக தனது கல்விச்சேவையை வழங்கியதோடு தமிழுக்கும் சமயத்திற்கும் இவர் ஆற்றிய சேவை இன்று இவரை சமூகத்தின் முன் அடையாளப்படுத்தியுள்ளது இவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென இறைவனை வேண்டி மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்.

பொன்னாடை கௌரவங்களுடன் இல்லத்தில்

துணைவியாருடன்...

பிள்ளைகளுடன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் அநபாயன்.B.Sc.Engineering.

மகள் அநிந்திதை - B.A

மகன் அநபாயன்
மருமகள் நித்தியா

அகள் அநிந்திதை
மருமகன் கேசவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் அநபாயனின் கலாநிதி பட்டமளிப்பு நிகழ்வு.
Phd in Structurl Engineering. QUT. (Australia)

மகன் வழிப் பேத்தி ஆதிரா

மக்கள், மருமக்களுடன் தம்பதியினர்



மகன் வழிப் பேத்தி ஆதிராவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றில் பறவைகள் வானொலி நாடக நூலுக்கான தேசிய சாகித்திய மண்டல விருது
ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடமிருந்து-1995

அதே விழாவில் விருது பெற்றவர்கள் மற்றும் சிலருடன் -1995

சின்னஞ்சிறிய சிறகுகள் குழந்தைப்பாடல் நூலிற்கான தேசிய சாகித்திய மண்டல
விருது. கலாசார அமைச்சர் ரீ.பி.எக்கநாயக்கவிடமிருந்து -2013

பிரான்ஸ் ஒலி, ஒளி நிறுவன வானொலி நாடகப்போட்டிப் பரிசு. தபால்
தொலைத்தொடர்பு வெகுசன தொடர்பு சாதன பிரதி அமைச்சர்
அனுர பிரியதர்சன யாப்பாவிடமிருந்து - 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு கவிராஜ யோகி கபில வாணன் அவர்களால்
கௌரவிக்கப்படல் - 1995

கொழும்பு இராம கிருஸ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கணாநந்தா ஜி
அவர்களிடமிருந்து புராண படன புகழ்தகை பட்டம் பெறுகிறார்-1999

யாழ் நல்லை ஆதீன முதல்வரால் கௌரவிக்கப்படல் -2003

தமிழக அறிஞர் பெ.சு.மணி, சுவாமி ஆத்ம கணாநந்தா ஜி,
புலவர் ஈழத்து சிவானந்தன் ஆகியோருடன் -1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து கலாசார அமைச்சின் அறநெறி விழாவில் - கொழும்பு - 1997

நாவற்குழியூர் நடராஜன் கவிதைப்போட்டிப் பரிசு.
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பணிப்பாளரிடமிருந்து.

இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்களிடம்
கௌரவம் பெறல். அருகில் உடுவை சி.தில்லைநடராஜா

தென்றலும் தெம்மாங்கும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில்
இந்து கலாசார அமைச்சர் பி.பி.தேவராஜ், கல்வி இராஜாங்க அமைச்சர்
திருமதி.இராஜமனோகரி புலந்திரன் ஆகியோருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா அரச அதிபர் திரு.க.கணேஷ் அவர்களால் கௌரவிக்கப்படல்

ஆலயத்தில் சொற்பொழிவு

தொடர் சொற்பொழிவு இறுதியில் சிவஸ்ரீ.இ.பாலச்சந்திரக் குருக்களிடம் காளாஞ்சி பெறல்

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் புராண படனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் அமரர்.செ.பத்மநாதன் அவர்களால் கௌரவிக்கப்படல். அருகில் தலைவர், செயலாளர்.

வவுனியா பிரதேச செயலாளர்.S.அமிர்தலிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படல்

வவுனியா அரசாங்க அதிபர் திரு.சி.சண்முகம் அவர்களால் கௌரவிக்கப்படல்

வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் திரு.க.சிவபாதம் அவர்களால் கௌரவிக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா அரசாங்க அதிபர் உடுவை திரு.சி.தில்லை நடராசா அவர்களால் கௌரவிக்கப்படல். அருகில் அமரர் சு.வீரசிங்கம் அவர்கள்

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களால் கௌரவிக்கப்படல்

அகளங்கன் கவிதைகள் நூலிற்காக வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்களிடம் பரிசு பெறுகிறால் - 1996

வடக்கு கிழக்கு மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் திரு.எதிர்மன்னசிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண இலக்கிய விழாவில் சின்னஞ்சிறிய சிறகுகள் குழந்தை பாடல் நூலிற்கான பரிசை பிரதம செயலாளர் திருமதி.அ.விஜயலக்ஷ்மியிடம் பெறல்

வடமாகாண இலக்கிய விழாவில் வேரும் விழுதும் நூலிற்கான பரிசை ஆளுனர் திரு.ஜி.ஏ.சந்திரஸ்ரீயிடம் இருந்து பெறல்

வடமாகாண இலக்கிய விழாவில் பத்தினித் தெய்வர் நூலிற்கான விருதை ஆளுனர் திரு.ஜி.ஏ.சந்திரஸ்ரீ அவர்களிடம் இருந்து பெறல்

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி விழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையார் அச்சுதன் அவர்களிடம் பரிசு பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி ஆண்டு விழாவில் வடமாகாண ஆளுனர் திரு.ஜி.ஏ.சந்திரஸ்ரீயிடம் பட்டம் பெறல்.

காத்தான்குடியில் தமிழ் முஸ்லீம் நல்லுறவு இலக்கிய விழாவில் கிழக்கு இலங்கை மனிதவள மேம்பாட்டு அலுவலக பணிப்பாளர் வண.பிதா த.ஸ்ரீதரன் சில்வெஸ்ரர் அவர்களிடம் கௌரவம் பெறல் - 2003

அதே விழாவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி K.M.H.காலிதீன் அவர்களிடம் கௌரவம் பெறல்.

அதே நிகழ்வில் டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன், ஓ.கே.குணநாதன் ஆகியோருடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழியல் வித்தகர் விருது பெற்றவர்களுடன்

தமிழியல் விருது. கங்கையின் மைந்தன். மட்டக்களப்பு
மேலதிக அரசாங்க அதிபர் திரு.விமலநாதன் அவர்களிடமிருந்து

தமிழியல் விருது. சின்னஞ்சிறிய சிறகுகள். கிழக்குப் பல்கலைக்கழக
விரிவுரையாளர் திருமதி.ரூபி வலண்டினா பிரான்சிஸ் அவர்களிடமிருந்து

தமிழியல் விருது. அலைக்குமிழ் நாவல். மட்டக்களப்பு அரச
அதிபர் திருமதி.பி.எஸ்.எம் சார்ல்ஸ் அவர்களிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை கீதம் இயற்றியமைக்காக வடமாகாண முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன் அவர்களிடம் கௌரவம் பெறல். அருகில் வணிக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன்

இலக்கிய நண்பர்கள் வட்ட ஆண்டு விழாவில் சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் வாழ்த்துப்பா வழங்குகிறார்.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருதை செங்கை ஆழியானிடமிருந்து பெறுகிறார்

ஞானம் சஞ்சிகையின் சிறுகதைப்போட்டியில் முதற் பரிசை பேராசிரியர் சபா ஜெயராஜாவிடமிருந்து பெறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்ற பரிசு. கங்கையின் மைந்தன் நூலிற்கு. இரா.நல்லகண்ணு. முனைவர் சு.அழகேசன். பொன்நீலன்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்ற பரிசு. கங்கையின் மைந்தன் நூலிற்கு. இரா.நல்லகண்ணு. முனைவர் சு அழகேசன். பொன்நீலன். ஓ.கே.குணநாதன்

அதே நிகழ்வில் தமிழக அறிஞர்கள் மற்றும் ஈழத்து படைபாளிகள் வவுனியூர் இரா.உதயனன். ஓ.கே.குணநாதன் ஆகியோரோடு

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் நூற்றாண்டு விழாவில் நடிகர் மேயர் சுந்தரராயன் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக படைப்பாளி கு.சின்னப்பபாரதி மற்றும்
ஓ.கே.குணநாதன் ஆகியோரோடு

வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன்
அவர்களிடம் பரிசு பெறல்

நெடுங்கேணி பிரதேச கலை இலக்கிய விழாவில்

நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி ஆண்டு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பரிவு
விளையாட்டுப் போட்டியில்

வவுனியா கந்தசாமி கோவில் கும்பாபிஷேக மலர் ஆசிரியருக்கான
கௌரவத்தினை துணைவியார் பெறுகிறார். - 2002

பம்பைமடு கிராமத்தில் கௌரவிக்கப்பட்ட போது -1988

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுடன் - 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெற்ற மணி விழாவில் - 2014

ஸ்கந்தவரோத கல்லூரியில் நடைபெற்ற மணி விழாவில் - 2014

தமிழக அறிஞர்களுடன்.

சிரித்திரன் ஆசிரியர் திரு.சி.சிவஞான சுந்தரம் அவர்களின் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஆதீன முதல்வர் பட்டம் வழங்கி
கௌரவிக்கிறார்

பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களால்
கௌரவிக்கப்படல்- மட்டக்களப்பு

வட கிழக்கு மாகாண ஆளுனர் விருது
பிரதம செயலாளர் திரு.ஜி.கிருஸ்ணமூர்த்தியிடம்
இருந்து பெறல்

கௌரவ கலாநிதிப் பட்ட விருதுக்கான
கோல உடையுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட நூல்கள்

வெளியிட்ட நூல்கள்

பெற்ற பரிசில்கள் சில

தயாரித்த மலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்பதிவாளர், இயக்குனர் பாலுமகேந்திராவுடன்

வெளியிட்ட நூல்கள்

கிளிநொச்சியில் கௌரவம் பெறல்

கொழும்பில் பரிசு பெறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி

# அகளங்கன் அவர்களின்

## மணிவிழா அழைப்பிதழ்

**காலம்**

**20.07.2014 ஞாயிறு காலை 9.00 மணி**

**இடம்**

**வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்.**

**தலைமை**

கலைஞர் திருமிகு.உடுவை சி.தில்லைநடராஜா அவர்கள்

**கௌரவ விருந்தினர்கள்**

கௌரவ சுகாதார, சுதேச வைத்திய அமைச்சர்

டாக்டர் ப.சத்தியலிங்கம் அவர்கள்

(வடமாகாண சபை)

கௌரவ கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர்.

திருமிகு.த.குருகுலராஜா அவர்கள்

(வடமாகாண சபை)

**விசேட விருந்தினர்**

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர்

திருமிகு.சி.தண்டாயுதபாணி அவர்கள்

(கிழக்கு மாகாண சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பிரதிநிதிகள் சார் அதிதிகள்

கௌரவ ந.சிவசக்தி ஆனந்தன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி)
கௌரவ அ.செல்வம் அடைக்கலநாதன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி)
கௌரவ வினோநோகராதலிங்கம் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி)
கௌரவ. திரு.ஜி.ரி.லிங்கநாதன் அவர்கள்
(வடமாகாண சபை உறுப்பினர்)
கௌரவ. திரு.ம.தியாகராஜா அவர்கள்
(வடமாகாண சபை உறுப்பினர்)
கௌரவ.இ.இந்திரராசா அவர்கள்
(வடமாகாண சபை உறுப்பினர்)
கௌரவ.க.சிவலிங்கம் அவர்கள்
(தவிசாளர். பிரதேச சபை -வ.தெ.தி)
கௌரவ.மு.பாலசுப்பிரமணியம் அவர்கள்
(தவிசாளர். பிரதேச சபை -நெடுங்கேணி)
கௌரவ. கபிரியல் அந்தோனிஜயா அவர்கள்
(தவிசாளர்.பிரதேச சபை - செட்டிகுளம்)

## சட்டத்துறை சார் அதிதி

திருமிகு.மு.சிற்றம்பலம் அவர்கள்
(மூத்த சட்டத்தரணி, ஜனாதிபதி சட்டத்தரணி)

## நிர்வாகத்துறை சார் அதிதிகள்

திருமிகு.எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர அவர்கள்
(அரசாங்க அதிபர் - வவுனியா)
திருமிகு.கா.உதயராஜா அவர்கள்
(பிரதேச செயலாளர் - வவுனியா)
திருமிகு.க.பரந்தாமன் அவர்கள்
(பிரதேச செயலாளர் - நெடுங்கேணி)
திருமிகு.என்.கமலதாசன் அவர்கள்
(பிரதேச செயலாளர் -செட்டிகுளம்)
திருமிகு.இ.நித்தியானந்தன் அவர்கள்
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர் - வவுனியா)
திருமிகு.வி.முத்துராஜா அவர்கள்
(கிராம சேவை உத்தியோகத்தர்-தாண்டிக்குளம்)
திருமிகு. க.சத்தியசீலன் அவர்கள்
(செயலாளர், நகரசபை -வவுனியா)
திருமதி. சுகந்தி கிஸோர் அவர்கள்
(செயலாளர், பிரதேச சபை - வ.தெ.த.பி)
திருமிகு.சு.விஜயதாஸ் அவர்கள்
(செயலாளர், பிரதேச சபை - செட்டிகுளம்)
திருமிகு.ம.மனோகரன் அவர்கள்
(செயலாளர், பிரதேச சபை - நெடுங்கேணி)

## கல்வித்துறை சார் அதிதிகள்

திருமிகு க.அருள்வேல் அவர்கள்
(முதல்வர்-யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்)
திருமிகு.கு.சிதம்பரநாதன் அவர்கள்
(பீடாதிபதி- வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி)
திருமதி.எஸ்.அன்ரன் சோமராசா அவர்கள்
(கல்விப்பணிப்பாளர். வவுனியா தெற்கு வலயம்)
திருமதி.பராசக்தி கணேசலிங்கம் அவர்கள்
(கல்விப்பணிப்பாளர். வவுனியா வடக்கு வலயம்)
வித்தியாரத்தினா சி.வையாபுரிநாதன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)

## வைத்தியத்துறை சார் அதிதிகள்

டாக்டர் கே.அகிலேந்திரன் அவர்கள்
(வைத்திய அத்தியட்சகர் பொது வைத்தியசாலை வவுனியா)
டாக்டர் சு.சின்னத்துரை அவர்கள்
டாக்டர் திருமதி.செந்தில்வல்லி சின்னத்துரை அவர்கள்
டாக்டர் த.முத்துலிங்கம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய, சமூகத்துறை சார் அதிதிகள்

**மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா அவர்கள்**
(தலைவர் - வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)
**இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அவர்கள்**
(தலைவர் - இந்துமாமன்றம், வவுனியா)
**சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி அவர்கள்**
(செயலாளர் - இந்துமாமன்றம், வவுனியா)
**சிவத்திரு மு.சபாநாதன் அவர்கள்**
(தலைவர் - சிவன்கோவில், கோவில்குளம்)
**சிவத்திரு ஆ.நவரத்தினராசா அவர்கள்**
(அறங்காவலர் - சிவன்கோவில், கோவிற்குளம்)
**சைவசிரோமணி க.ந.பாலச்சந்திரன் அவர்கள்**
(செயலாளர் - தர்மகர்த்தா சபை, கந்தசாமிகோவில், வவுனியா)
**சைவசிரோமணி பொ.நல்லையா அவர்கள்**
(தலைவர் - வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்)
**சைவசிரோமணி இ.கிருபாமூர்த்தி அவர்கள்**
(தலைவர் - ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானம், குருமன்காடு)
**திருமிகு.இ.அமிர்தலிங்கம் அவர்கள்**
(தலைவர்- வரசித்தி விநாயகர் ஆலயம் - கரப்பங்காடு)
**திருமிகு.ந.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்**
(பிரதிப்பணிப்பாளர்-நீர்ப்பாசனத்திணைக்களம், முல்லைத்தீவு)
**அருட்கலைவாரிதி. ஸ்தபதி சு.சண்முகவடிவேல் அவர்கள்**
**திருமிகு.வி.சுரேந்திரன் அவர்கள்**
(அமைப்பாளர் - சுரேந்திரன் நற்பணி மன்றம்)
**திருமிகு.க.சிவபாதசுந்தரம் அவர்கள்**
(தலைவர் - சித்திவிநாயகர் ஆலயம், குடியிருப்பு, வவுனியா)
**திருமிகு.எஸ்.எம்.தேவராஜா அவர்கள்**
(தலைவர் - வைரவர் கோயில், வைரவபுளியங்குளம், வவுனியா)
**திருமிகு. க.தெய்வேந்திரன் அவர்கள்**
(தலைவர் - குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயம், வவுனியா)
**சைவசிரோமணி ஆ.கோடீஸ்வரன் அவர்கள்**
(தலைவர் - அறநெறிப்பாடசாலைகளின் ஒன்றியம், வவுனியா)
**சைவசிரோமணி சி.சுப்பிரமணியம் அவர்கள்**
(தலைவர் - பலநோக்கு கூட்டுறவு சங்கம், வவுனியா)
**திருமிகு.க.கந்தசாமி அவர்கள்**
(தலைவர் - கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்கம், வவுனியா)
**வர்த்தக சிரோமணி ரி.கே.இராஜலிங்கம் அவர்கள்**
(தலைவர் - வர்த்தகர் சங்கம், வவுனியா)
**திருமிகு.க.சிவபாலன் அவர்கள்**
(ஓய்வுநிலை முகாமையாளர் -இலங்கை வங்கி)

## நிகழ்ச்சிநிரல்

| | |
|---|---|
| **மங்கல விளக்கேற்றல்** | : |
| **தமிழ்வாழ்த்து** | : **செல்வன் ஞானவேல் வசந்** அவர்கள் |
| **வாழ்த்து நடனம்** | : நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் |
| **வரவேற்புரை** | : நாடக சிரோமணி **கந்தையா ஸ்ரீ கந்தவேள்** அவர்கள் (துணைத்தலைவர் மணிவிழாக்குழு) |
| **தலைமையுரை** | : |
| **ஆசியுரை** | : |
| **மணிவிழா மலர்வெளியீடு** | |
| **சிறப்புப்பிரதிகள்** | : **சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி** அவர்கள் (செயலாளர்- இந்துமாமன்றம், வவுனியா)<br>**சிவத்திரு மு.சபாநாதன்** அவர்கள் (உரிமையாளர் - நீம் மில், வவுனியா)<br>**திருமிகு. சிவபாதசுந்தரம் ஞானசம்பந்தன்** அவர்கள் (உரிமையாளர G.H.A.D.E சில்வா & கொம்பனி)<br>**பழைய மாணவர்கள்** (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)<br>**செல்வன் சசிகரன் சிந்துசன்** அவர்கள் (எழுத்தாளர் செட்டிகுளம் பசுந்திரா சசி அவர்களின் மகன்) |
| **வெளியீட்டுரை** | : **டாக்டர் ஓ.கே.குணநாதன்** அவர்கள் (தலைவர்- மணிவிழாக்குழு, மலர்ஆசிரியர்) |
| **அறிமுகஉரை** | : **இன்தமிழ்இனியன் எஸ்.எஸ்.வாசன்** அவர்கள் (துணைத்தலைவர் - மணிவிழாக்குழு) |
| **சிறப்புரை -1** | : **திருமிகு.மு.கௌரிகாந்தன்** அவர்கள் (விரிவுரையாளர்.யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்வெளிமீடு -1 : முற்றத்துக்கரடி (சிறுகதை)
சிறப்புப்பிரதிகள் : அருட்கலைவாரிதி ஸ்தபதி **சு.சண்முகவடிவேல்** அவர்கள்
**திருமிகு.வி.சுரேந்திரன்** அவர்கள்
(அமைப்பாளர், சுரேந்திரன் நற்பணி மன்றம்)
**திருமிகு.க.செல்வராஜா** அவர்கள்
(உரிமையாளர், காஞ்சனா நகையகம்)

அறிமுக உரை : **வித்தியாரத்தினா ந.பார்த்திபன்** அவர்கள்
(விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி)

சிறப்புரை - 2 : மகாவித்துவான் கலாநிதி **கனகசபாபதி நாகேஸ்வரன்** அவர்கள்
(விரிவுரையாளர் - சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

நூல்வெளிமீடு -2 : வன்னிப்பிரதேச வயற்பண்பாடு (ஆய்வு)
சிறப்புப் பிரதிகள் : சைவசிரோமணி **க.ந.பாலச்சந்திரன்** அவர்கள்
(செயலாளர் - தர்மகர்த்தா சபை, வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயில்)
**திருமிகு.த.பிரமேந்திரராஜா** அவர்கள்
(உரிமையாளர், தம்பா உல்லாச விடுதி, கோவிற்குளம்)
**திருமிகு.சி.நாகராஜா** அவர்கள்
(உரிமையாளர், சின்பொன் வெதுப்பகம்)

அறிமுகஉரை : கவியெழில் மௌலவி அல்ஹாஜ் **எஸ்.அப்துல் சமட்** அவர்கள்
(பிரதி அதிபர், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்)

சிறப்புரை - 3 : கலாநிதி **கந்தையா ஸ்ரீ கணேசன்** அவர்கள்
(விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்)

இறுவெட்டு வெளியீடு : தமிழ் வாழ்த்து (இசைத்திடமுடியாது....)
சிறப்புப்பிரதிகள் : சமூகச்சுடர் **செ.சந்திரகுமார்** அவர்கள்
(தலைவர் - வரி இறுப்பாளர் சங்கம், வவுனியா)
**திருமிகு.ஆ.இராஜேந்திரன்** அவர்கள்
(வெங்கடேஸ்வரா சுப்பர் மார்க்கெட்)

அறிமுக உரை : செம்மொழிச்செல்வி, பண்டிதை
செல்வி **யோகலட்சுமி சோமசுந்தரம்** அவர்கள்

சிறப்புரை -4 : இலக்கியச்சுடர் **ஐ.கதிர்காமசேகரன்** அவர்கள்
(ஆசிரியர் இ.தி.த.மகாவித்தியாலயம் - வவுனியா)

வாழ்த்துரை : பேராசிரியர் **சி.சிவலிங்கராஜா** அவர்கள்
(வருகைநிலை யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியை **அம்மன்கிளி முருகதாஸ்** அவர்கள்,
(கிழக்குப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் **செ.யோகராஜா** அவர்கள்
(கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி **ச.அருளானந்தம்** அவர்கள் - திருகோணமலை
(முன்னாள் பிதுதிக் கல்விப்பணிப்பாளர் வ.கி.மா)
காப்பியக்கோ. டாக்டர் **ஜின்னாஹ் ஷரிபுத்தீன்** அவர்கள் -கொழும்பு
அருட்தந்தை **தமிழ்நேசன் அடிகளார்** அவர்கள் -மன்னார்
ஊடக மாமணி **அருணா செல்லத்துரை** அவர்கள் - முல்லைத்தீவு
திருமிகு **சு.முரளிதரன்** அவர்கள் - மலையகம்
(பணிப்பாளர், தமிழ்ப்பாடசாலைகளின் அபிவிருத்தி.
இணைப்பாளர் ஜனாதிபதி நிகழ்ச்சித்திட்டங்கள் கல்வி அமைச்சு)
திருமிகு.**எஸ்.எதிர்மன்னசிங்கம்** அவர்கள் -மட்டக்களப்பு
(வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப்பணிப்பாளர் ஓய்வுநிலை)
எழுத்தாளர் திருமிகு வவுனியூர் **இரா.உதயணன்** அவர்கள் -லண்டன்
திருமிகு **க.குமாரகுலசிங்கம்** அவர்கள் -சுவிஸ்
திருமிகு **க.ஐயம்பிள்ளை** அவர்கள்
(ஓய்வுநிலை பிரதேச செயலாளர்)

**விருந்தினர் உரை:**
**கௌரவிப்பு :**
**பதிலுரை : தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** அவர்கள்
**நன்றியுரை : கலை இலக்கியச் சுடர் மாணிக்கம் ஜெகன்** அவர்கள்
(செயலாளர் மணிவிழாக்குழு)
**அறிவிப்பாளர் : சித்திரக்குரலோன் சி.நாகராஜா** அவர்கள்

**குறிப்பு**
- காலை 8.00மணிக்கு வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் விசேட பூசை,
- காலை 8.30 மணிக்கு சுவாமி விபுலாநந்தர் நினைவு தின நிகழ்வு சிலை அருகில்
- ஊர்வலம் விபுலாநந்தர் சிலை அருகில் இருந்து சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்...**

**மணிவிழாக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவரும், வடமாகாண சபை உறுப்பினருமாகிய

திரு.G.T.லிங்கநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**வ**வுனியா நகரசபையின் தலைவராக நான் பொறுப்பேற்கும் முன்பே நான் தமிழ்மணி அகளங்கன் அவர்களை அறிந்திருந்தேன். இருப்பினும், எனது பதவிக்காலத்தில் தான் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

நாம் நடாத்திய **பௌர்ணமிக் கலை விழாக்களில்** தமிழ்மணி அகளங்கனின் பங்கு மிக முக்கியமானது. நாங்கள் அவரின் பல்துறை ஆற்றலை மதித்து **"பல் கலை எழில்"** என்று பட்டம் வழங்கிக் கௌரவித்தோம். அவரது நூல் வெளியீட்டுக்கு நிதி உதவியும் செய்தோம்.

வவுனியா நகரச் சந்திகளில் சிலைகளை வைக்க நாம் விரும்பிய போது எங்களுக்கு பல ஆலோசனைகளை வழங்கி ஊக்குவித்தவர். அத்தோடு **நகரசபைக் கீதத்தை** மிகச் சிறப்பாக எழுதித் தந்தவர்.

**வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம்** என்ற இலக்கிய அமைப்பை பதினெட்டு ஆண்டுகளாக நடத்திவரும் இவரையும் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தனது நூல் வெளியீடுகளுக்கு என்னையும் அழைத்துக் கௌரவித்துள்ளார். எமது மண்ணின் சொத்தாக விளங்கும் தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு மணிவிழா நடைபெற இருப்பதனை அறிந்து மகிழ்கிறேன்.

மணிவிழா நினைவு மலர் சிறப்புறவும், மணிவிழா நாயகர் குடும்ப சமேதராய் மகிழ்வோடும். மண நிறைவோடும் உடல் ஆரோக்கியத்தோடும். வாழவும் வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்ட அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான

திரு.M.K.பந்துல ஹரிஸ்சந்திர அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**வ**ன்னி வளநாட்டின் பம்பைமடுப் பிரதேசம் ஈந்த அருங்கொடையே **கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** அவர்கள். அவர் கணிதத்துறையில் தனது கால் தடங்களைப் பதித்தபோதிலும் இயல்பாகவே இவரிடம் காணப்படும் இலக்கிய ஆர்வம் இவரை உலகம் அறியவைத்தது.

சமுதாயத்தை நேரிய பாதையில் வழிப்படுத்திச் செல்பவை இலக்கியங்கள். வாழ்வியல் நடைமுறைகளை கலை இலக்கியப் படைப்புக்களாக வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு கலைஞரினதும் தலையாய கடமையாகும்.

இதற்கேற்றாற்போல் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு இலக்கியப் பணியில் தனித்துவமான இடமுண்டு, இவரது நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், இசை, நடனம், சிறுகதைகள், சிறுவர் ஆக்கங்கள், சமயக் கட்டுரைகள், பாடசாலைக் கீதங்கள் எனப் பல்வேறு இலக்கியப் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. இவர் நாட்டின் பல பாகங்களிலும் கவியரங்குகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் போன்ற நிகழ்வுகளிலும் பங்குபற்றி தன் இலக்கியப் பணியை மேற்கொண்டுள்ளார். இவர் புராணபடனங்களைச் செய்வதிலும் விற்பன்னர்.

தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்கள் பல்வேறு சிறப்புக்களையும் புகழையும் பெற்றுள்ளார். வவுனியா மாவட்ட செயலாளர் என்ற வகையில் வவுனியா மாவட்ட மக்களினது கலை கலாசார இலக்கிய பண்பாட்டு வளர்ச்சிக்கும் சிறந்ததோர் உரைகல்லாகவும் நின்று இவர் ஆற்றிவரும் தொண்டுகளை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

இவரது இலக்கியப் பணிக்கு மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் பல்வேறு இலக்கிய மன்றங்கள் பட்டங்களையும், விருதுகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

தமிழிற்காகவும், சைவத்திற்காகவும் அர்ப்பணித்த கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தனது 60 வது ஆண்டில் காலடி வைத்துள்ளார். மணிவிழா நாயகனை நீடூழி வாழ்கவென வாழ்த்துவதுடன் இவரது இலக்கியப் பணி மேன்மேலும் தொடரவும் வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபரும், மட்டக்களப்பு அரச அதிபருமாகிய திருமதி.P.S.M.சார்ள்ஸ் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எழுத்தாளரும் இலக்கியவாதியுமான தமிழறிஞர் கலாபூசணம் கலாநிதி அகளங்கனுக்கு அவரது இலக்கிய சேவையின் மணிவிழாவினையொட்டி அவரை கௌரவிக்கும் முகமாக எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் வெளியிடப்படும் மணி விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு அக மகிழ்கின்றேன்.

அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்கு அழகு சேர்க்க பல தமிழியல் விற்பன்னர்கள் அவனியில் அவதரித்து அரும்பணியாற்றி வந்துள்ளார். இவ் வரிசையில் ஈழத்திரு நாட்டில் உதித்து தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் நாற்பது ஆண்டுகளாக தன்னை அர்ப்பணித்து, அளப்பரிய சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கும் கலாநிதி அகளங்கன் அவர்களின் சேவை போற்றுதலுக்குரியது.

கலாநிதி அகளங்கனின் தமிழ் பாண்டித்தியத்தின் பரிமாணங்கள் இயல் இசை நாடகம் எனும் முத்தமிழையும் சிறப்பிக்கும் வகையில் அவரது படைப்புக்கள் அமைந்திருப்பதிலிருந்து துலங்குகின்றது. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், மெல்லிசைப் பாடல்கள், மேடைநாடகங்கள், நாட்டிய நாடகங்கள், சிறுவர்பாடல்கள், மழலை இலக்கியங்கள், ஆய்வு நூல்கள், விளக்க உரைகள் மற்றும் ஆய்வு நூல் கள் என எண்ணிலடங்காத பலதரப்பட்ட படைப்புக்களை தமிழ் இலக்கியத்திற்கு ஈந்துள்ளார். இன்னாரது சொல்லாண்மையினையும் முத்தமிழ் புலமையினையும் இலக்கிய சேவையினையும் அங்கீகரிக்கும் முகமாக "தமிழ்மணி, செஞ்சொற் சிலம்பன், முத்தமிழ் சுரபி, காவியமாமணி, பல்கலை எழில், சைவத்தமிழ் கோ, வித்யா சுரபி" என பல விருதுகள் காலத்துக்கு காலம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இவருக்கு வடகிழக்கு மாகாண ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

"மெல்லத் தமிழ் இனிச்சாகும், அந்த மேற்கு மொழிகள் ஓங்கி வளரும்" என்ற கூற்றை மெய்ப்பிப்பது போல் இன்று தமிழ்மொழி மேற்கு மொழிகளின் வளர்ச்சியால் தனது தனித்துவத்தையும் பிரபல்யத்தினையும் இழந்து கொண்டிருப்பது கண்கூடு. ஆதலால் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழிவகுத்து, வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர்களை வாழ்த்துவதும் அவர்களது பணியை ஊக்குவிப்பதும் காலத்தின் கட்டாயம் ஆகும். அவ்வகையில் கலாநிதி அகளங்கனின் நாற்பது ஆண்டு தமிழ்ச் சேவையினைச் சிறப்பித்து மணி விழா எடுக்கும் மணிவிழாக் குழுவினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அவர்கள் எடுக்கும் ஆக்கபூர்வமான பணிகள் தொடர எனது வாழ்த்துக்களையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்
சாந்தி நாவுக்கரசன் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

**வ**வுனியா பம்பைமடு பிரதேசத்தைச்சேர்ந்த **திரு.நாகலிங்கம் தர்மராஜா** அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், இலக்கிய வாதியாகவும் விளங்குபவர். **கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், அனைத்து நாடக வகைகள்** எனப் பல்துறைகளிலும் திறமையுடையவர். **அகளங்கன்** என்ற புனைபெயர் கொண்டு இலக்கியப்பணி செய்துவரும் இவர் **புராணபடனம், சமய சொற்பொழிவுகள்** செய்வதிலும் வல்லவர். இவரின் அறுபதாவது அகவையின் பூர்த்திக்கும் அதனை முன்னிட்ட மணிவிழாவிற்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆன்மீக சேவையிலும் சமூக சேவையிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அரும்பணி ஆற்றிவரும் இவரை எல்லோரும் நன்கு அறிவர். எமது திணைக்களத்தின் செயற்றிட்டங்கள் பலவற்றுள் பங்கெடுத்தவர். குறிப்பாக இந்து சமய விழாக்களில் சமய சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்**

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய இவரது சமய இலக்கியப்பணிகள் மூலம் தமிழ் கூறும் நல்லுலகத்தவர் மத்தியில் நன்கு அறியப்பட்டவராக விளங்குகின்றார். இவ்வுலகில் பிறந்து அறுபது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து **மணிவிழா** நாயகனாக விளங்கும் இவர் மேலும் பல காலம் சீருடனும் சிறப்புடனும் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன். இவரது சமய, சமூக பணிகள் மேலும் சிறப்படையவும், அனைத்து நலனும் பெற்று நீண்டகாலம் வாழவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றேன்.

இல.248, 1/1 காலி வீதி,
கொழும்பு - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராஜா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**கலாநிதி அகளங்கனின்** மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். வளம் பெருகு வவுனியாவின் கலை இலக்கிய கர்த்தாக்களில் பெயர் குறித்துச் சொல்லப்படுபவர் கலாநிதி அகளங்கன். தமிழுக்காகவும் தமிழிலக்கியத்திற்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்துச் செயலாற்றி வருவதுடன் இதுநாள் வரையில் 43 நூல்களை இவர் எழுதி வெளியிட்டிருக்கின்றார் என்ற செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன் பாலர்கள் முதல் முதியவர்கள் வரையில் படித்து பயனுறக் கூடியனவும் சிந்தித்துச் செயலாற்றக் கூடியவையுமான இலக்கியப் படைப்புக்கள் இவரது கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

இலக்கியங்களை காலத்தின் கண்ணாடி என்பர். அந்த வகையில் கால தேச வர்த்தமானத்திற்கேற்ப தமிழ்மொழியை கற்றலிலும் கற்பித்தலிலும் அதனை விருப்புடன் கற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான உபாயங்களை இவர் பின் பற்றியுள்ளார் என்பதற்கு இவரது நூல்கள் சான்றாக அமைந்துள்ளன. மொழியின் வளர்ச்சிக்கு மேலதிகமாக, சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக குறிப்பாக சைவசமய மாணவர்கள் தோத்திரப் பாடல்களை இலகுவில் மனனம் செய்யக் கூடியவாறும் பொருளறிந்து அவற்றினூடான அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறான நூல் களும் இவரால் வெளியிடப் பட்டுள்ளமை இவரது சமூகத்தின் மீது கொண்ட பற்றுறுதியை காட்டிநிற்கின்றன.

**ஆசிரியப் பணியுடன், எழுத்தாக்கம், புராண படனம், கலைப்பணி, சமூகப் பணி, சமயச் சொற்பொழிவு** என அகன்று விரிந்த இவரது பணிகளில், வவுனியா மாவட்டத்தின் **நாட்டிய நாடகத்துறையின்** வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளும் குறிப்பிடத்தக்கவை. முக்கியமாக, அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளின் போது கலாநிதி அகளங்கனின் கைவண்ணத்திலான நாட்டிய நாடகங்களுக்கு தேசிய ரீதியில் தொடர்ச்சியாக **முதலாவது** இடங்கள் கிடைத்தமையை இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் **தலைவராக,** பின்னர் **உப தலைவராக** இருந்து இவர் ஆற்றிய பணிகள் என்றும் மனம் கொள்ளத்தக்கவை. அத்துடன் வவுனியா **பிரதேச செயலகத்தின் கீதமும்** அண்மையில் கலாநிதி அகளங்கனால் இயற்றப்பட்டமை முக்கியமானதாகும். எனவே, தான் வாழும் பிரதேசத்தின் பல்துறை வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி மணி விழாக்காணும் கலாநிதி அகளங்கன் தம்பதியினரை, பிரதேச செயலாளர் என்ற வகையிலும், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சார்பிலும் மனதார வாழத்துவதுடன், அவர்கள் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த செல்வத்துடனும் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர்

## திரு.K.C.லோகேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தமிழறிஞர் கலாபூசணம் கலாநிதி கவிஞர் தமிழ்மணி அகளங்கன் என்று புகழப்படும் தர்மராஜா அவர்களை அவரது இளம் பராயத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வவுனியாவில் பண்டாரவன்னியன் சிலை அமைத்து அன்னாருக்கு கச்சேரி முன்றலில் சிலையெடுத்து பெருவிழா நடாத்திய போது வெளியிட்ட சிறப்பு மலரை என்னுடன் சேர்ந்து பதிப்பித்தவர் அகளங்கன். உண்மையிலேயே அவ்வெளியீட்டை வெளிக்கொணர்வதில் அவர் மட்டுமே அயராது உழைத்தார். நான் செய்தது மிகவும் சொற்பம். அவருடைய பிரதேசப்பற்று, இலக்கிய ஆர்வம், சொல்வன்மை இலக்கிய ஆர்வலர்களை ஊக்குவிக்கும் ஆற்றல் வியப்படையச் செய்யும். பல ஆண்டுகளாக பல துறைகளில் வன்னி மக்களின் வாழ்வை மேம்படச் செய்யும் கைங்கரியங்களில் அவர் ஆற்றிக்கொண்டு வரும் தொண்டு மென்மேலும் வளர வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

மறைந்தும், மறந்தும் இருக்கும் வன்னிப்பிரதேசத்தின் தொல்பொருளியல், வரலாறு, வழிபாட்டு முறைகள், சமூக ஒற்றுமை, வறுமை ஒழிப்பு போன்ற விடயங்களை ஆழ ஆராய்ந்து அவை பற்றி பேசுவதற்கும் எழுதுவதற்கும் பல இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டுமென அகளங்கனை வாழ்த்துகின்றேன். அவரது பணிகள் தொடர மக்களின் ஊக்குவிப்பு ஓயாது இருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர்

## திரு.த.லங்காநேசன் அவர்களின்

# வாழ்த்துரை

கலாநிதி, கலாபூஷணம், தமிழ்மணி,அகளங்கன் அவர்கள் அறுபது வயதினை நிறைவு செய்வதை முன்னிட்டு அவர்களின் அபிமானிகள் மணிவிழாவுக்கு ஏற்பாடு செய்யும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நான் வவுனியா மாவட்டத்துக்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று வந்த 1976 ஆம் ஆண்டு தொடக்கம் "அகளங்கன்" என்னும் புனை பெயருடனிருந்த திரு.நாகலிங்கம் தருமராசா அவர்களை நன்கறிவேன். 1982 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வன்னியின் மன்னன்,தேசிய வீரன் "மாவீரன் பண்டாரவன்னியன்" சிலை திறப்புவிழா தொடர்பான பல்வேறுபட்ட பணிகள் தொடர்பாகவும், பண்டாரவன்னியன் விழாமலர் தொடர்பாகவும் அவருடன் நெருக்கமாகச் செயலாற்றும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இவரது சிந்தனை, செயல் பேச்சு,ஆகியவற்றை அவதானித்த நான் இவர் எதிர்காலத்தில் ஓர் தலைசிறந்த வன்னி மண்ணின் மைந்தனாக விளங்குவார் என உள்ளத்தில் மதிப்பீடு செய்திருந்தேன். இலக்கியத்துறையில் அவர் படைத்த சாதனைகள், எனது மதிப்பீடு சரியானதென்பதை இப்போது உணர்ந்து பெருமிதமடைகின்றேன்

இவர் இயற்கையாகவே தமிழிலும் சைவத்திலும் கொண்ட ஈடுபாட்டாலும் இடை விடாத முயற்சியாலும் தாமாகவே தமிழையும் சைவ சமய சாஸ்திரங் களையும் தேடிக்கற்றும், அறிஞர் பெருமக்களது உரைகளைக் கேட்டறிந்தும் தமிழிலும் சைவத்திலும் சிறப்பறிவைப் பெற்றுக்கொண்டார், கவிதை, கட்டுரை, புனைகதை, நாடகம்,போன்ற துறைகளில் தடம் பதித்த எழுத்தாற் றலாலும் பட்டிமண்டபம், கவியரங்கம்,கருத்தரங்கம் போன்றவற்றில் துலங்கிய கருத்தாழம் மிக்க பேச்சாற்றலாலும், தனக்கென்றே அபிமானி களைக் கொண்டிருப்பவர்.

தமிழ் உலகத்தில் இவரால் நாற்பத்து மூன்று (43) நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இச்சாதனை சாதாரண எழுத்தாளர்களால் அடைய முடியாத ஒன்று.

இந்நூல்களுள் சில இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழ்,தேசிய சாகித்திய மண்டல விருது, வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டல விருது, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற விருது,மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம் வழங்கிய நாவலர் விருது,யாழ் "இலக்கிய வட்டம் வழங்கிய கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது, முத்தமிழறிஞர் சொக்கன் விருது,வடகிழக்கு மாகாண ஆளுநர் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுக் கொடுத்தன. இவரது படைப்பால் மேலும் பல நூல்கள் எமது கரங்களில் தவழ வைக்கவேண்டுமென ஆசைப்படு கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்கும் சைவத்துக்கும் இவராற்றிய பங்களிப்பின் காரணமாக பல் வேறு கலை இலக்கிய மன்றங்களும் சமய நிறுவனங்களும் ஆலயங்களும் பட்டங் களை வழங்கிக் கௌரவித்துள்ளன. மேலும் இந்து கலாசார திணைக்களத் தால் 1993 இல் "தமிழ் மணி" என்னும் பட்டமும் 2013 இல் "கலாபூஷணம்" என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார். இவ்வாறான அரிய சாதனைகளால் மணிவிழா நாயகர் என்னும் கௌரவத்துக்கு உரித்துடையராக திகழ்கிறார்.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட கலாநிதி, தமிழ்மணி அகளங்கன் தமது குடும்பத்தினருடன் நீண்ட காலம் உடல் நலத்தோடு வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தமது மண்ணுக்கும் தொடர்ந்து அருந்தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்

**த.லங்காநேசன்**
இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை
முன்னாள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் வவுனியா
முன்னாள் புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்
முன்னாள் கப்பற்துறை, துறைமுகங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்
நிகோர்ட் வடகிழக்கு அபிவிருத்தி திட்டப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் அரச அதிபர், முன்னாள் மேலதிக கல்விச் செயலாளர், கலைஞர்.உருவை.எஸ்.தில்லைநடராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## நான் அறிந்த அறிஞர் அகளங்கன்

**வ**வுனியா நகரசபை மண்டபத்தில் கவியரங்குடன் சேர்ந்த ஓர் இலக்கிய நிகழ்வை நண்பர்கள் சிலருடன் சேர்ந்து ஆயத்தம் செய்த போது, பங்கு பற்றுவதற்கான சிலரை எனது நண்பர்களும் ஒழுங்கு செய்தார்கள். வேலைப் பளு காரணமாக நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரத்துக்கு சில நிமிடங்கள் இருக் கும் போது தான் மண்டபத்துக்கு செல்ல முடிந்தது. கவியரங்கில் கவிதை வாசிப்போர் பட்டியலில் நா.தர்மராஜா என்ற பெயரைப் பார்த்ததும் என் முகம் கறுத்தது.

நான் ஒருபோதும் கேள்விப்படாத பெயர். அன்றைய நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் ஆர்.தியாகலிங்கத்துக்கு (தற்போதைய வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவர்) பிரபல கவிஞர்கள் கலந்து சிறப்பிக்கும் நிகழ்ச்சி எனவும் சொல்லி விட்டேன். கோபம் நிறைந்த எனது பார்வைக்கு நண்பர் சரவணையூர் சுகந்தனின் புன்சிரிப்பு:- "சேர் இரண்டாவது வரிசையில் இருக்கிறவர் தான் தர்மராஜா student. இன்னும் popular ஆகவில்லை. நல்லாக் கவிதை எழுதுவார்., வாசிப்பார்."

சரவணை யூர் சுகந்தன் சுட்டிக்காட்டியவரைப் பார்த்தேன். அரைக்கை சேர்ட் கட்டைக் காற்சட்டையுடன் ஒரு பள்ளிக்கூட மாணவன். நான் நினைக்கின்றேன் அந்த மண்டபத்தில் தர்மராஜா (அகளங்கன்) ஒருவர் தான் கட்டைக் காற்சட்டை யுடன் கலந்து கொண்டவர். **வன்னியூர்க் கவிராஜர், சரவணையூர் சுகந்தன், பூநகர் மரிய தாஸ், கந்தசாமி** ஆகியோர் வேட்டி நாஷனல் என கவிஞர்களது கோல உடை. **வ.ஐ.ச.ஜெயபாலன், சோ.ராமேஸ்வரன், ஸ்ரீ ரங்கன், சிவபாதசுந்தரம்** நீளக் காற்சட்டையுடன், கையில் சில நூல்கள் மற்றும் கோவைகளுடன் எழுத்தாளர்களுக்குரிய முழுத்தோற்றம்.

இருந்தாலும் அன்றைய கவியரங்கில் மாணவன் தர்மராஜா (அகளங்கன்) தன் குரல் வளத்தாலும் பொருள் நயத்தாலும் அருமையான கவி பாடி அசத்தி எல்லோ ருடைய பாராட்டுகளையும் தனதாக்கிக் கொண்டார்.

இந்த சம்பவம் நடந்தது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு. அன்று தான் அகள ங்கனும் நானும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகினோம். நட்பு ஆரம்பமாகி, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இலக்கியம்தான் இருவரையும் இணைத்து நண்பர்களாக்கியது.

பின்னர் அவர் அசுர வேகப் படைப்பாளியாக உள்ளூர், வெளி நாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளுக்கு விடயதானம் செய்பவராகவும், மேடை வானொலி தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை கலை இலக்கிய ஆற்றல் குரல் வளம் தோற்றப்பொலிவு ஆகியவற்றால் மெருகேற்றி வளப்படுத்துபவராகவும் வளர்ந்துள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதையை சிறிது நினைத்துப் பார்க்கின்றேன்.

1973-74-75 காலப் பகுதியில் வவுனியாவில் நான் கடமையாற்றிய கால கட்டத்தில் அடிக்கடி அகளங்கனையும் அவரது சகோதரர்களையும் சந்திக்கும் சந்தர்ப்பம். 75 இறுதியில் என் இடமாற்றத்தின் பின்னர் அவரை நேரில் சந்தி க்கவில்லை. அவர் எழுதியவற்றை பத்திரிகைகள், சஞ்சிகைகளில் படித்து மகிழ்ந்திருக்கின்றேன். பழந்தமிழ் இலக்கியப் புலமையும் அவற்றை சமகால நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தும் திறமையும் இடையிடையே மின்னலிடும். பிறரைப் புண்படுத்தாத நகைச்சுவையும் அகளங்கனை தனித்துவம் மிக்க படைப்பாளியாக அடையாளம் காட்டின.

1982 இல் வவுனியாவில் "பண்டார வன்னியன் விழா" பார்க்கச் சென்றிருந்த வேளை என்னைச்சந்தித்து தனது நூல்களைக் கையளித்து சுகநலம் விசாரித்து-கலை இலக்கிய பங்களிப்பு தொடர்பாக உரையாடி இடைக்காலத்தில் ஏற்பட்ட இடைவெளியை இல்லாமல் செய்து விட்டார்.

1983 இல் மீண்டும் வவுனியாவுக்கு இடமாற்றம் கிடைக்க அகளங்கனோடு அதிகமான மேடை நிகழ்வுகள். **கேணிப்பித்தன் எஸ்.அருளானந்தம், பி.மாணிக் கவாசகம், நிறைமதி** என எங்களுடன் இணைந்து கொண்ட கலை இலக்கிய நண்பர்கள் பட்டியல் நீண்டது.

"கவியரங்கா" "நடன அரங்கேற்றமா" "நாடகமா" "பட்டி மன்றமா" "பாராட்டு விழாவா" "சமயச்சொற்பொழிவா" எந்த ஒரு நிகழ்வானாலும் அதைச்சிறப்பிக்க அகளங்கனை அழைக்க வேண்டுமென்பதை ஏற்பாட்டாளர்கள் புரிந்து கொண் டார்கள். எனக்குத் தெரிந்த தமிழில் சொல்வதானால் எப்போது அழைத்தாலும் விலை வைக்காமல் எல்லோருடனும் ஒத்துழைத்ததோடு-வவுனியாவில் பலரை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவித்து மற்றவர்கள் வளர்ச்சி கண்டு மனம் பூரித்தார்.

1991 இல் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இலக்கிய விழாவை பெரிய அளவில் கொண்டாடியபோது சிறப்புரை ஆற்றிப் புகழ்பெற்றவர் **செஞ்சொற்செல்வர்** அகளங்கன்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கல்லூரிகள் தோறும் இலக்கிய சொற்பொழிவுகள் நடாத்திய போது, அநேகமான கல்லூரிகளில் இலக்கிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியவரும் **இலக்கியச்சுடர்** அகளங்கனே.

அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களை, அதையொத்த வரலாற்று நிகழ்வு களுடன் அல்லது இலக்கிய நிகழ்வுகளுடன் அழகுற சித்திரித்து எழுதும் திறமை கைவரப் பெற்றவர் **முத்தமிழ்ச்சுரபி** அகளங்கன், உதாரணமாக **அசுவமேத யாகம், போர்க் காலத் தூது** போன்ற ஆக்கங்களைக் குறிப்பிடலாம்.

தனது காரியங்களை நிறைவேற்றும் போது, மற்றவர்கள் பாதிக்கப்படக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலும் அகளங்கன் அக்கறையோடு செயற்பட்டார். வவுனியா நகருக்கு அப்பால் இயங்கிய ஆயுதக்குழுக்கள் துண்டுக் கடிதங்கள் மூலம் நகரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த காலத்தில் அகளங்கன் **இலக்கியத்தேறல்** நூல் வெளியீட்டுக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்.

வழமையான நூல் வெளியீடுகளில் பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர், என சிரேஸ்ட அரசாங்க உத்தியோகத்தர் கலந்து சிறப்பிப்பார்கள். ஆயுதக்குழுக் களின் எச்சரிக்கை காரணமாக விழாவில் கலந்து கொள்ள அரசாங்க உத்தி யோகத்தர் எவரும் விரும்பவில்லை. ஒரு நூல் வெளியீட்டில் கலந்து கொள் வதற்காக தண்டனை அனுபவிக்க வேண்டி வந்தால் அதற்கு நான் தயார் என அகளங்கனிடம் தெரிவித்தேன். எனது சம்மதத்தை அவர் பக்குவ செய்தியாக ஆயுதக்குழுவுக்கு தெரிவித்து விழாவையும் சிறப்பாக நடாத்தி என்னையும் தண்டனையிலிருந்து தப்ப வைத்தார்.

வவுனியாவில் நடைபெறும் வழமையான நிகழ்வுகள் மட்டுமல்லாமல் வித்தி யாசமான நிகழ்வுகளிலும் விசேட இடம் **தமிழ்மணி** அகளங்கனுக்குத்தான். இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் ஆ.செந்தில்வடிவேல் 1987ல் அறிவுத் திற அளவெண் என்ற பொது நுண்ணறிவு விவேக நூலை வெளியிட்ட போது, பல சிரேஸ்ட உத்தியோகத்தர் நிகழ்வை சிறப்பித்தாலும், சிறப்புரை ஆற்றிய பெருமை **பல்கலை எழில்** அகளங்கனுக்கே உரியது

சிற்பக்கலை வல்ல **அருட்கலைவாரிதி.சு.சண்முகவடிவேல் ஸ்தபதி,** ஆன்மீகத் துறையில் ஈடுபாடு மிக்க **சிவநெறிப்புரவலர்.சி.ஏ.இராமசாமி** மற்றும் **கலா பூசணம் தேவராஜா, மனிதநேய மாமணி.நா.சேனாதிராஜா,** நடனக் கலை வளர்க்கும் **திருமதி. சூரியயாழினி வீரசிங்கம்,** மிருதங்கக் கலைஞர் **கலாபூசணம் கனகேஸ்வரன்,** வயலின் வாத்தியக் கலைஞர். **கலாபூசணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன்,** சோதிட நூல் எழுதிய **கவிஞர் கண்ணையா**, சாஸ்திரிய சங்கீதக் கலை வளர்க்கும் **கிருஷ்ணகுமாரி** இளங்கலைஞர் **இசைவேந்தன்.கந்தப்பு ஜெயந்தன்** எல்லோருடனும் நட்பு பாராட்டி வவுனியாவை முன்னணிக்குக் கொண்டு வர தனது பங்களிப்பை நல்கியவர் அகளங்கன்.

70களின் ஆரம்பத்தில் அரைக்கை சேர்ட் கட்டைக் காற்சட்டையுடன் மேடைகளில் தோன்றிய பள்ளிக்கூட மாணவன் அகளங்கன், 80கள், 90களில் நீளக்காற்சட்டை, நீளக்கையுடன் மேற்சட்டை அணிந்து அரங்குகளை அலங்கரித்த ஆசிரியராக **தமிழறிஞர் அகளங்கன்,** கடந்த பல வருடங்களாக எந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், தூய வெள்ளை வேட்டி,வெள்ளை சேர்ட், தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான கழுத்துச்சால்வை, நெற்றியில் விபூதி, சந்தன குங்குமப்பொட்டு சகிதம் **திருநெறிய தமிழ் வேந்தர்** என்ற பட்டத்துக்கு பொருத்தமான தோற்றம்.

எல்லோரையும் மதிக்கும் பண்பும், அனேகமாக எல்லாவற்றையும் கையாளக் கூடிய ஆற்றலும் நிறைந்தவர் அகளங்கன். அதனால் வவுனியா அரச அதிபர் களாகக் கடமையாற்றிய **கே.சி.லோகேஸ்வரன், ரி.லங்காநேசன், எஸ்.தில்லை நடராசா,கே.கணேஷ்** ஆகியோரின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்ற வராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினார். கச்சேரி நடாத்திய நிகழ்வுகளில் முக்கியமானவராக இருந்ததோடு The Manual of Vanni Districts என்னும் நூலின் மொழி பெயர்ப்புக் குழுவின் இணைச் செயலாளராகவும் கடமையாற்றினார்.

பல்வேறு அரசியல் வாதிகளோடு பழகியும் அரசியலுக்குள் தன்னை நுழைத் துக் கொள்ளாமல் கலை, இலக்கிய,சமய சமூகப்பணிகளோடு திருப்தி அடை ந்து வருபவர் அகளங்கன்..

நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியரான இவர் இலங்கையிலும் வெளி நாடுகளிலும் இலக்கியப் போட்டிகளில் பல பரிசில்கள் பெற்றதோடு பல வெளிநாட்டு இலக்கியப் பயணங்களையும் மேற்கொண்டு, அறுபது கடந்த நிலையிலும் இளைஞனுக்கு உரிய உற்சாகத்துடன் சுறு சுறுப்பாக பணியாற் றுவது பாராட்டுக்குரியது..

அகளங்கனின் காரியங்கள் யாவினும் கை கொடுக்கும் அவர் **காதல் மனை யாள்** - அவர் சகோதரர்கள் ,மக்கள் மருமக்கள் எல்லோரும் பாராட்டுக்குரிய வர்கள் தான் !

வவுனியா என்ற எல்லையைக் கடந்து, இலங்கை முழுவதும் என்பதை விட உலகப்பந்தில் தமிழ் தெரிந்தவர்கள் வாழுமிடமெல்லாம் கலாநிதி தமிழ நிஞர் அகளங்கனை நன்கு தெரிந்து வைத்திருக்கும் பலர் இருப்பதை நன்கு அறிந்துள்ளேன். தமிழ் இலக்கியம் கலை என்று பேசும்போதும் எழுதும் போதும் அகளங்கனின் பங்களிப்பையும் சேர்த்துக் கொண்டால் தான் முழுமை பெறும் என்பது எனது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா, யாழ் மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபர்
## திரு.க.கணேஷ் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

எழுத்தாளர் தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு மணிவிழா நடைபெற இருப்பதையும், மணிவிழா நினைவுமலர் வெளியிடப்பட இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் வவுனியாவில் கடமையாற்றிய காலத்தில் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் கலை இலக்கிய சமயத்துறையில் எனக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியவர். மாவட்ட இலக்கிய விழாக்களை நடாத்தத் துணையாக இருந்தவர். வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழா வவுனியாவில் நடைபெற்ற போது **"மருதநிலா"** என்ற சிறந்த மலரை எமது செயலகம் பொறுப்பெடுத்து வெளியிட்டது. அதன் மலராசிரியராக அகளங்கன் செயற்பட்டார். அவருக்கு திரு.ஓ.கே.குணநாதன் துணை நின்றார்.

அகில இலங்கை ரீதியில் **சிறுகதை, கவிதைப்** போட்டிகளை வைத்து பரிசுகளை வழங்கினோம். இந்த ஏற்பாடுகளைச் செய்து முடிப்பதிலும் தரமான ஆக்கங்களைப் பெற்று அந்த மலரை உயரிய தரத்தில் வெளியிடவும் அகளங்கனின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் போது **வவுனியா, மன்னார்** மாவட்டங்களின் தலைவராக நானும் **செயலாளராக அகளங்கனும்** செயற்பட்டோம். இரண்டு மாவட்டங்களிலும் அவ்விழா சிறப்பாக நடைபெற்றது. அந்த நினைவுகளை மறக்கமுடியாது.

அகளங்கனின் நூல் வெளியீடுகள் பலவற்றில் கலந்து கொண்டிருக்கிறேன். **வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம்** நடாத்திய ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டு அகளங்கனும் அவரது நண்பர்களும் செய்கின்ற தமிழ்ப்பணியைப் பாராட்டியிருக்கிறேன். அகளங்கனின் ஆற்றலும் அறிவும் தமிழுக்கும், சமயத்துக்கும், அர்ப்பணிக்கப்பட்டவை.

அவர் உடல் உள ஆரோக்கியத்தோடு இன்னும் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்கும் சமயத்திற்கும், சமூகத்திற்கும் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டி வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு.சி.சண்முகம் அவர்களின் இதயத்திலிருந்து

### அன்னை தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றுபவர்

**வ**வுனியா அரசாங்க அதிபராக நான்கு ஆண்டுகள் கடமையாற்றி எதிர்பாராத இடமாற்ற உத்தரவின் பேரில் வடக்கு மாகாணத்தினை விட்டு கிழக்கு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்து விட்ட இச்சந்தர்ப்பத்தில் தங்களுடன் பழகிய, தங்களுடன் சேர்ந்து தமிழுக்காகவும் இந்து சமயத்திற்காகவும் எமது கலாச்சார மேம்பாட்டிற்காகவும் நாம் ஒருங்கிணைந்து வவுனியா மாவட்டத்தில் ஆற்றிய பணிகளைச் சில வேளைகளில் நினைத்துப் பார்க்கின்றேன்.

வன்னிவள நாட்டின் மைந்தனாகப் பிறந்த தாங்கள் தமிழுக்கும், இலக்கியத்துக்கும், சமயத்திற்கும், கலைகளின் எழுச்சிக்கும் அரும்பணியாற்றி வருவது மிகவும் மகிழ்ச்சி தருவது மட்டுமல்லாது தங்களது **அறிவு, ஆற்றல், பேச்சுத் திறமை, நிருவாக ஒழுங்கமைப்புத் திறன்** என்பன என்னைச் சில நேரங்களில் ஆச்சிரியப்பட வைத்தன. அதுமட்டுமல்ல ஒரு ஆக்க எழுத்தாளனாகத் தாங்கள் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை உருவாக்கித் தமிழுக்கு சமர்ப்பித்துள்ளமை அத்துடன் **கவிதை, கட்டுரை, நாடகம், நகைச்சுவை, விமர்சனம், இலக்கிய ஆய்வு** போன்ற துறைகளில் தங்களுக்குள்ள திறமை பாண்டித்தியம் என்பன மெச்சப்படவும் மென்மேலும் வளர்க்கப்படவும் வேண்டியன. இத் திறமைகளையெல்லாம் அன்னை தமிழுக்குத் தாங்கள் ஆற்றுகின்ற பணிகளாக நான் பார்க்கின்றேன். **தங்களைப் பெற்றெடுத்த பெற்றோரும், வன்னிவள நாடும், அன்னை தமிழும் தங்களால் பெருமையடைகின்றது.**

தமிழ் மக்கள் வாழ்வில் துன்பமும் துயரமும் நிறைந்த காலத்தில் நாம் வாழ்ந்தாலும் நாமும் கூட பல துயரங்கள் நிறைந்த பாதையூடாகப் பயணித்த போதும், அத்தனை சவால்களையும் தாண்டி தாங்கள் ஆற்றுகின்ற தமிழ், சமயப் பணிகள் மேலும் தொடர வேண்டுமென்று உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

வவுனியா மாவட்ட கலாச்சார பேரவையின் தலைவராக நான் பணியாற்றிய அந்த நாட்களில் அதன் ஆலோசகராகத் தாங்கள் எனக்கு வழங்கிய ஆதரவு, ஆலோசனை, ஒத்துழைப்பு என்பவற்றை எண்ணி எனது உள்ளம் உவகையும் நன்றியும் உணர்கின்றது என்பதனை அன்போடு அறியத்தருகின்றேன்.

நன்றி

**சி.சண்முகம்**
02.11.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி
## திரு.கு.சிதம்பரநாதன் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

### ஆதீத முயற்சியாளர்

**ம**ணிவிழாக் காணும் திரு.நாகலிங்கம் தர்மராஜா (தமிழ்மணி அகளங்கன்) அவர்களுக்கு வாழ்த்துரை எழுதுவதில் மகிழ்ச்சி. உலகில் ஒரு மனிதருடைய வாழ்வுமுறையும், சமூக நற் செயல்களும் அவருக்கு புகழ் பூத்த பிரதிமையைத் தர வேண்டும். இதனைத்தான் வள்ளுவரும்.

**"தோன்றில் புகழொடு தோன்றுக அ.திலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"** என்று பெருமைபடப் பேசினார். இயற்கையே ஒருவருக்கு பெருமையைத் தருவதைவிட, தனது மனம், வாக்கு, காயத்தால் ஒருவர் புகழடைவதே சாலப் பொருத்தமான தோற்றம் என்பது எனது எண்ணம்.

**வவுனியாவில், பம்பைமடு** எனும் கிராமத்தில் பிறந்து கல்வியாலும், இடைவிடாத முயற்சியாலும், தன்னை இந்த பெருமையுறு நிலைக்கு உயர்த்திக் கொண்டமை ஓர் அசாத்தியமான துணிவின் அடையாளமே. ஆசிரியராகக் கடமையாற்றியும், தொடர்ச்சியான, தமிழ் மீது கொண்ட ஆர்வத்தால் தான் நினைத்தவற்றையும், தேடியறிந்தவற்றைப் புதுக்கியும், தன்னுடைய பாணியில் எழுதியமையும் அவரைச் சமூகத்தில் உயர்த்திற்று. இலக்கியத் தேடலிலும், நாடகம், கவிதை எழுதுவதிலும், இலக்கியப் படைப்பிலும் அவருக்கிருந்த ஈடுபாடும், முயற்சியும், அவருக்கேயுரித்தான இலக்குகளை நோக்கி அவர் வீறுநடைபோட அவருக்கு உதவிற்று.

பொதுவாக இன்றைய உலகப்போக்கில் வசதி படைத்தவர்களுக்கே வாய்ப்புக்கள் அதிகம் என்று எண்ணக்கூடிய நிலையில் சாதாரண குடும்பத்தில் பிறந்து ஆர்வம், சமூக ஈடுபாடு, அதீத முயற்சி ஆகியவற்றால் தன்னை வெளிக்காட்டிக் கொண்டமை பேறுபெற்ற ஓர் அம்சமாகும்.

இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் கூட இன்றைய சமூக பொருளாதார சூழ்நிலைகளில் எழுத முடியாமல் சிக்கலில் உள்ள போது தனியொருவராக நின்று தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஏறத்தாழ 40 இலக்கியப் படைப்புக்களை ஆக்குவதென்பதும் தொடர்ச்சியான இலக்கிய உசாவலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும் பிரமப் பிரயத்தனமே. மணிவிழாக் காணும் தமிழ்மணி அகளங்கன் அவர்களது வாழ்வும், சீரிய பணிகளும் சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகிறேன்.

"எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்"
நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் M.A அவர்கள்

# கலாநிதி அகளங்கனுடன் நான்

## எல்லோருடைய மரியாதைக்கும் உரியவர்.

**க**லாநிதி அகளங்கனின் எழுத்துருக்களை புத்தக வடிவிலும், பத்திரிகைகள் வாயிலாகவும் படித்து அவற்றினூடான அறிவைப் பெற்ற எனக்கு, வவுனியா மாவட்டத்திற்கு கிடைத்த இடமாற்றம் அவருடன் இணைந்து கலை, இலக்கியப் பணியாற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தந்தது.

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையை பொறுப்பேற்ற எனக்கு, உடனடியாக கலைஞர்களுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனினும், "உதயன்" பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றியவேளை அவ்வப்போது கலாநிதி அகளங்கனால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்த இலக்கியக் கட்டுரைகள் உள்ளிட்ட எழுத்துருக்களை விரும்பிப் படித்தவன் என்றவகையில், அவரை நேரடியாக சந்திக்க விரும்பி ஒரு நாள் மாலைப் பொழுதில் **திருநாவற்குளத்தில்** உள்ள இவரது இல்லத்திற்கு சென்றிருந்தேன்.

"வணக்கம், வாருங்கள்" எனக்கூறி கனிவுடன் வரவேற்ற அவருக்கு சுருக்கமாக என்னை அறிமுகமும் செய்து கொண்டேன். **எழுத்தாளன் ஒருவன், தான் பேசும் மொழியின், எழுதும் எழுத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறெல்லாம் தொண்டாற்ற முடியுமோ அதேவேளை, இத்தகைய தொண்டுகளால் எழுத்தாளனுக்கு எத்தகைய பெருமைகள் வீடு தேடிவரும் என்பதற்கும் அகளங்கன் ஆசிரியரின் இல்லமே சான்று** என்பதையும் அன்றைய தினமே நான் உணர்ந்தும் கொண்டேன்.

இவ்வாறு, அன்று முதல் ஆரம்பித்த கலை மூலமான உறவு, வவுனியா பிரதேச செயலகம் 2007களில் முன்னெடுத்த சிறந்த பாடகர் தேர்வு, வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா, "ஏக்கம்" குறும்படத் தயாரிப்பு, வவுனியா பிரதேச மற்றும் மாவட்ட கலை இலக்கியப் பெருவிழாக்கள், கலைஞர்கள் கௌரவிப்பு, கலை இலக்கியச் சந்திப்புக்கள் எனவாறு விரிவடைந்து சென்றமை எனது கலை, இலக்கிய அரச பணிக்கு பெரும் பக்கபலமாகவும் வழிப்படுத்தலாகவும் அமைந்தன.

வவுனியா கலைஞர்கள் யாவர்? அவர்களது கடந்த கால பணிகள் எவை? இவ்வாறான கலைஞர்களுக்கு அரச அலுவலர்களாகிய எம்மால் எவ்வாறெல்லாம் சேவை வழங்க முடியும் என்பது தொடர்பில் கலாநிதி அகளங்கன் அவர்கள், பல படிமுறைகளில் எனக்கு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார். இத்தகைய வழிகாட்டுதல்கள்தான், வவுனியாவின் மூத்த கலைஞர்களுக்கும், வளர்ந்துவரும் கலைஞர்களுக்கும் கௌரவங்கள் பெற்றுக் கொடுப்பதற்கும், மாகாண, தேசிய மட்டங்களில் அவர்களது ஆற்றுகைகளை மேடையேற்றுவதற்கும் சந்தர்ப்பமாக அமைந்தன என்பதை இக்கணத்தில் நன்றிப் பெருக்குடன் நினைவுகூருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி அகளங்கன் அவர்கள், தான் புரியும் கலை, இலக்கியப் பணிகள் எவற்றிற்கும் எதுவித பிரதியுபகாரங்களும் பெறுவதில்லை. பணத்திற்காக கலையை பேரம் பேசுபவர்கள் வாழும் இன்றைய காலகட்டத்தில், கலை, இலக்கியத் தேடலுக்காக தன்னை நாடி வருவோருக்கு சிற்றுண்டி மற்றும் உணவளித்து நேரகாலம் பாராது கலை, இலக்கியப் பணியாற்றுபவர் எங்கள் அகளங்கன் ஆசிரியர் அவர்கள்.

வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எந்தவொரு செயற்றிட்டத்தை முன்னெடுக்கின்ற போதிலும் கலாநிதி அகளங்கனிடம் ஆலோசனை, வழிகாட்டுதல்கள் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதையும் இந்தச்சமயத்தில் கூறியே ஆகவேண்டும். வடக்கு கிழக்கு மாகாணசபை, பின்னர் வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னரும்கூட நடாத்தப்பட்ட மாகாண தமிழ், இலக்கியப் பெரு விழாக்கள் அனைத்திலும் ஏதோ ஒருவகையில், அகளங்கன் ஆசிரியர் சம்பந்தப்பட்டிருக்கின்றார். இவ்வாறு தொடர்பைப் பேணியவர்கள் வேறு யாராவது இருக்கின்றார்களா? என்பதை நான் அறியேன். இதுவே, கலாநிதி அகளங்கனுடன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தொடர்ந்தும் உறவைப் பேணுவதற்குக் காரணம்.

கலை, இலக்கியப் பணிகளில் தவறிழைப்பவர்கள் யாரெனினும் அவர்களை தட்டிக்கேட்டு முறைப்படி கருமங்கள் நடைபெற வேண்டும் என்பதில் அகளங்கன் ஆசிரியர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தவர். 2011 ஆண்டு இடம்பெற்ற இளம் கலைஞர் கௌரவிப்பின் போது (கலைஞர் தெரிவில்) ஆசிரியர் என்னுடன் முரண்பட்ட சந்தர்ப்பமும் உண்டு. இவை எல்லாம் என்னால் மறக்கமுடியாத நினைவுகள். இதேவேளை, மாகாண இலக்கியப் பெருவிழாக்களின் போது வெவ்வேறு மாவட்டங்களுக்கும் செல்லும் நாம், அங்கு தங்கியிருக்கும் இரவுப்பொழுதுகளை இலக்கிய ஆய்வு, கருத்தாடல்கள் மூலம் சந்தோசமாக கழித்ததையும் (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார்) இந்தத்தருணத்தில் எண்ணிப் பார்க்கின்றேன்.

அகளங்கன் ஆசிரியர் அவர்கள், வவுனியாவில் இடம்பெறும் எந்தவொரு கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் தவறாமல் என்னையும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடுத்தி விடுவார். இதனால் அரச கடமைப் பொழுதிற்கு மேலதிகமாக, ஏனைய நாள் பொழுதுகளும் தவப்பொழுதாக கழிந்ததையும் நினைத்துப் பார்க்கின்றேன்.

சுருங்கக்கூறின், ஆசிரியர் பணிக்கு மேலதிகமாக, எழுத்தாளராக (சிறுகதை, நாவல், கவிதை, பாடல்) சொற்பொழிவாளராக, ஆய்வாளராக, பௌராணிகராக, குறும்பட கதை ஆசிரியராக, நாட்டிய நாடக பிரதி ஆக்குனராக, விமர்சகராக, வர்ணனையாளராக, முன்னுதாரணமான குடும்பத் தலைவராக விளங்கி எல்லோராலும் மரியாதைக்குரியவராக போற்றப்படும் கலாநிதி அகளங்கன் அவர்கள், தம்பதி சமேதராக இன்னும் பல ஆண்டுகள் நலமுடனே வாழ்ந்து வவுனியா மண்ணிற்கு கலை இலக்கியப் பணிகள் ஆற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி, திரு.செ.அழகரெத்தினம் அவர்கள்

# அன்பும் அருளும் அமைந்த அறிஞர் அகளங்கன்

**த**மிழ்மணி அகளங்கன் அவர்களின் அறுபதாவது அகவை பூரணத்துவம் பெறும் நிலை தொடர்பில் அமையவிருக்கும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்

அகளங்கன் அவர்கள் 1991ம் ஆண்டு எனக்கு அறிமுகமானவரெனினும், 1993ல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முதலாவது பீடாதிபதியாக நான் பதவியேற்ற காலமுதல் அவரை நன்கு தெரிந்தவரானேன். அன்னாரின் அளவற்ற தொடர்புகளும் ஆக்கபூர்வ பங்களிப்புக்களும், உவப்பான உதவிகளும் எனக்கு ஏராளமாகவும் தாராளமாகவும் ஒன்று குவிக்கப் பட்டிருந்தன. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியைக் கட்டிக்காப்பதில் அவரதும் அவரைச் சார்ந்தவர்களினதும் ஒத்துழைப்பை இன்றும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

குறிப்பாக அன்றைய நிலையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு.நா.சேனாதிராசா, வீரகேசரி நிருபர். திரு.P.மாணிக்கவாசகம், வவுனியா இணைந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.க.ஸ்ரீகணேசன், சமூக ஆர்வலர் எஸ்.என்.ஜீ.நாதன். இந்து மாமன்றத் தலைவர் திரு.சி.ஏ.இராமஸ்வாமி, வணபிதா பங்குத் தந்தை ரீ.பாக்கிய ரஞ்சித், ஸ்ரீ சத்திய சாயி சமித்தி தலைவரும் மேலதிக அரச அதிபருமான திரு.சி.இரகுநாதபிள்ளை, மௌலவி அப்துல் சமட், தமிழருவி த.சிவகுமாரன் போன்ற பலர் எனக்குப் பக்கபலமாக விருந்தனர். அத்துடன் அப்போதைய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.ஆ.பொன்னையா, வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அமரர்.திரு.க.தங்கராஜா, வவுனியா தமிழ் மத்திய தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அமரர்.திருமதி.V.R.A.ஒஸ்வோல்ட், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபரும் பின்னர் கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்தவருமான அமரர்.திரு.க.சீனிவாசகம், இந்துக் கல்லூரி அதிபர் திரு.க.சிவஞானம், அரச அதிபர்.திரு.க.கணேஷ் போன்றோரின் ஒத்துழைப்பையும், உதவிகளையும் என்னால் மறக்கவே முடியாது. அகளங்கன் போன்ற நல்லிதயங்களின் உதவிகளும் ஊக்கங்களும் பல்வேறு பிரச்சினைகள் மலிந்திருந்த அக்கால கட்டத்தில் எனது கல்விப் பணிக்கு உரமூட்டி உற்சாகப் படுத்தின.

தற்போது தொடர்புகள் சற்று அருகியிருப்பினும் கூட, அகளங்கன் அவர்கள் என் அகத்தில் என்றும் அசையா விடம் பெற்றிருக்கும் அன்பர்களுள் ஒருவராவார். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் எனக்கும் உரிய இடம் ஒதுக்கி, பல்வகைக் கலை இலக்கியத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் பாங்கினை அறிந்த பண்பாளர் அகளங்கன். வவுனியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஏற்பாட்டில் இடம்பெற்ற கலை இலக்கிய விழாக்கள், கருத்தரங்குகளில் பல்வகைப் பொறுப்புக்களை வழங்கி என்னையும் கௌரவித்தவர். **கலை மருதம், மருத நிலா** போன்ற மலர்களில் எனது ஆக்கங்களும் இடம்பெற வழிவகுத்தவர். சுட்டிக்காட்டிச் சொல்லின், வவுனியாப் பகுதிக்குப் புதிதாக வந்திருந்த என்னை, அக்காலகட்டத்தில் வவுனியா கல்விச் சமூகத்திற்கும், கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்திற்கும், மற்றும் பிரமுகர்கள் பலருக்கும் அறிமுகப் படுத்தி எனது கல்விப் பணிக்கு பக்கபலமான பங்களிப்பை நல்கிய பெருமனம் படைத்தவர்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு, கல்லூரிக் கீதம் ஒன்றினை ஆக்கி அளிக்குமாறு நான் வேண்டிய வேளையில் உடனடியாக கனதியானதும் மிகப் பொருத்தமானதுமான ஒரு **கல்லூரிக் கீதத்தை** ஆக்கியளித்த பெருமையும் அகளங்கனையே சாரும்.

தான் மட்டும் தலையெடுத்து வாழ்ந்திருந்தால் போதும் என்ற சுய உள்ளுணர்வு ஓங்கி நிற்கும் இன்றைய காலப்போக்கில், தன்னைச் சார்ந்தவர்களையும் இயன்றவரை ஊக்கியும் தூக்கியும் உயர்த்திவிடும் உன்னத உள்ளம் உடையவர் அகளங்கன் என்பதையும் உரத்து உரைப்பதில் எனக்கும் என்றும் உவகைதான். அவரது கல்வி, கலை இலக்கிய சேவைகளுக்காகப் பல விருதுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டவர்.

கலை இலக்கிய நண்பர்கள் வட்ட நிகழ்வுகளில் அகளங்கனது கனதியான கருத்துக்களும், தாக்கமுறு சிந்தனைச் சிதறல்களும், சுருக்கமான சொல்லாடல்களும் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துவனவாக இருந்தன. இவரது கல்விச் சேவைகள், சமயப் பணிகள், சமூகத் தொண்டுகள் காலத்தேவைக்குப் பொருத்தமான முறையில் செம்மையாகச் செயற்படுத்தப்பட்டமை பாராட்டத்தக்கதாகும்.

அகளங்கன் அவர்களோடு பழகிய நிகழ்வுகள், நினைவுகள், கருத்துப் பரிமாறல்கள் இன்றும் என்நெஞ்சில் நிறைந்து நிலைத்து நிற்கின்றன. தமிழ்க் கலாசாரப் போக்கும், இனிய இதயமும் கொண்ட மனிதப் பண்பாளரான அகளங்கனை என்னால் என்றுமே மறக்க வியலாது என்பேன்.

**".....இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்.**
**இவர்போல யாரென்று ஊர் சொல்லவேண்டும் ....."** எனும் சினிமாப் பாடல் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருபவர் கலாநிதி அகளங்கன் அவர்கள்

"வேரோடும் விறைப்போடும் விழுதூன்றி விளக்கமுடன்
ஊரோடும் உறவோடும் உயர்ந்தோங்கும் உள்ளமுடன்
பேரோடும் புகழோடும் பெருமை பெறு பூரிப்புடன்
சீரோடும் சிறப்போடும் **அகளங்கன்** செழிப்புறுக."
என வாழ்த்துகிறேன்

".....கற்றாரைக் கற்றாரே, காமுறுவர்...." என்பதற் கேற்ப இயல்பான பண்பும் பக்குவமும், தூர நோக்கும், துணிந்த போக்கும், பூரண பொறுமையும் தன்னுள் பொதிந்திருக்கும் அகளங்கன் அவர்கள் உடல் நலத்துடன் உள உரத்துடனும் உண்மை உணர்வுடனும் இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு வாழவும் அவரது பல்வேறு பணிகள் தொடரவும் இறைவனை இதயபூர்வமாக இறைஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி
திரு.க.பேர்ணாட் அவர்கள்

# நான் கண்ட தமிழ்மணி

## வவுனியா மண் பெருமை பெற்றது

ஒவ்வொரு மனிதனும் அவனது தடங்களால் இனம் காணப்படுகின்றான். அத்தடங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதாக அமைய வேண்டும் எனவும் உழைக்க வேண்டும். இந்தவகையில் நான் கண்டு ஆச்சரியப்பட்ட, எவ்வாறு இவர்களால் முடிந்தது என வியந்து நின்ற மனிதர்களுள் **தமிழ்மணி அகளங்கனும் ஒருவர்** என்பதிலும் தமிழ்மணி அகளங்கனுடன் எனக்கு பழக்கம் உண்டு என்று கூறுவதிலும் **நான் பெருமையடைகின்றேன்.**

தமிழ்மணி அகளங்கன் என ஒரு எழுத்தாளர் வவுனியாவிலிருக்கின்றார் என பத்திரிகைகள் வாயிலாக மட்டும் அறிந்திருந்த நான் 1993ம் ஆண்டு உத்தியோக பதவி நிமித்தம் வவுனியாவுக்கு வந்த பின்பு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பௌர்ணமி விழாவின் ஊடாக தமிழ்மணி அகளங்கன் அவர்களை நேரில் சந்திக்கும் அந்தப் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது குறித்து நான் நினைத்துப் பார்க்க முடிகின்றது.

தமிழ்மணி - அகளங்கன் - தர்மராசா ஆகிய மூன்று பெயர்களாக நான் பார்த்தபோது 'தமிழ்மணி' என்ற பெயராலேயே அதிகம் அறியப்பட்ட மனிதராக இவர் காணப்படுகின்றார். வவுனியா என்றால் தமிழ்மணியைத் தெரியுமா, எனக் கேட்கின்ற பலரை நான் சந்தித்திருக்கின்றேன். இன்று தமிழ்மணி என பலர் பட்டம் சூடிக் கொண்டிருந்தாலும் அப்பெயரினால் அகளங்கன் மட்டுமே அறியப்பட்டவராக காணப்படுகின்றார். அதனால் அகளங்கன் என்ற பெயரும் இரண்டாம் பட்சமானதே! தமிழ்மணி என்ற பெயரால் அகளங்கன் பெருமைப்படுத்தப்படுகிறாரா? அகளங்கனால் "தமிழ்மணி" என்ற இலக்கியப் பட்டம் பெருமைப்படுத்தப்படுகின்றதா? என நான் நினைத்துப் பார்க்கின்றேன். தமிழுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ்மணி அகளங்கன் ஆற்றிய பங்குபற்றியும் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு.

இவரது தமிழ் இலக்கியப் பணிகளையும் இவரது தமிழ் இலக்கிய அறிவு ஆழம் குறித்தும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். தமிழ் இலக்கியத்தினூடாக சமயப்பணிகளா? இந்துசமயப் பணிகளினூடாக தமிழ் இலக்கியமா? என வழி கேட்க வேண்டுமாயின் தமிழ்மணி அகளங்கனிடமே அதைக் கேட்க வேண்டும் அகளங்கனின் நூல்கள் என்ற நீண்ட பட்டியல் கண்டும் அவருக்கு கிடைத்த பட்டங்கள், பாராட்டுக்கள், பரிசுகள் குறித்தும் நான் வியந்து பார்க்கின்றேன். இவரது இலக்கியப் பணியால் வவுனியா மண் பெருமை பெற்றது எனலாம். இன்னும் உலக ரீதியாக அறியப்பட்ட தமிழ் அறிஞர் இவர் என்பதால் உலக தமிழ் இனமே இவரால் பிடித்து நிறுத்தப்படுகிறது எனவும் நான் காண்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித வாத்தியார் எவ்வாறு தமிழ் அறிஞர் - தமிழ் இலக்கியம் பேசும் தமிழ்மணி ஆனார் என்பதையும் நான் வியந்து பார்க்கின்றேன். தான் உண்டு தனக்கென வேலையுண்டு என இருந்துவிடாமல் தமிழ் இலக்கியப் பணிகளையும் இந்துசமயப்பணிகளையும், சமூகசேவை பணிகளையும் இணைத்துக் கொண்டு எவ்வாறு இவரால் செயல்பட முடிந்தது என்றும் நான் வியந்து பார்த்ததுண்டு.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியுடன் இவர் கொண்டிருந்த தொடர்புகளையும் நான் இங்கு குறிப்பிடாவிட்டால் நான் நன்றி மறந்தவனாகிவிடுவேன். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் இன்றும் பெருமையுடன் பாடப்படும் **கல்லூரிக்கீதம்** இவராலேயே ஆக்கித் தரப்பட்டது என்பதை நினைத்து கல்லூரி பெருமை அடைகின்றது.

பல் சமூகம் கொண்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்பாக ஒரு **சரஸ்வதி சிலை** அமைக்க வேண்டும் என நான் விரும்பிய போது, எனது விருப்பத்தை குருமன்காடு காளிஅம்மன் தேவஸ்தானத்தின் உதவியுடன் திரு.இ.கிருபா மூர்த்தி நிறைவேற்றித்தந்தவர். இன்னும் பல இலக்கிய நிகழ்வுகளை கல்லூரியில் நடத்துவதற்கும், மாணவ ஆசிரியர்களது ஆக்கங்கள், வெளியீடுகளை விமர்சனம் செய்தும் வழிகாட்டியும் ஊக்கமளித்தவர். மாணவ ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமாக இவரை கல்லூரிக்கு அழைத்து நிறுத்த நினைத்த போது எதிர் அடையாளம் காட்ட நினைத்தவர்களும் இல்லாமல் இல்லை. இன்று அவர்களும் அகளங்கனின் நண்பர்களாகிவிட்டமையும் கல்லூரிக்கு பெருமைதரும் விடயமாகும்.

"தமிழ்மணிக்கு மணிவிழா" நினைத்துப் பார்க்கின்றேன். எவ்வளவு பொருத்தம். தமிழ்மணி அகளங்கனை மணிவிழா நாயகனாக காணும் அதே வேளை அவருக்கு இன்னும் நீண்ட ஆயுளையும் மாறாத ஆற்றல்களையும் இறை வழங்கி தமிழ் சிறக்க, மேன்மையடையவும் வன்னி மண்ணின் சிறப்பு மேலோங்கவும் அருள்புரிய வேண்டும் என இறையாசி வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் கலாசார உதவிப்பணிப்பாளர்.
திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம் அவர்கள்

# மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

## மறக்க முடியாத மனப்பதிவுகள்

**க**ல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு முதன்முதலாக 1989,90 காலப்பகுதிகளில் வெளிவந்த இலக்கிய நூல்களுக்கு பரிசுவழங்கும் விழாவை 1991ல் திருக்கோணமலையில் கொண்டாடியது. அப்போது அமைச்சின் செயலாளராக **ஜனாப் காதர் முகைதீன்** அவர்களும், பிரதிச் செயலாளராக **உடுவை தில்லை நடராஜா** அவர்களும் இருந்தார்கள்.

விழாவில் கௌரவிக்கப்பட்ட ஐந்து எழுத்தாளர்களில் **திரு.நா.தர்மராஜா அகளங்கன்** அவர்களும் ஒருவராவார். அப்போது இருந்து தான் அகளங்கனுடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இலக்கியக் கூட்டங்கள் நூல் வெளியீடுகள் என்று அடிக்கடி வவுனியாவிற்குச் செல்லும் போது அகளங்கன் நண்பர் **திரு. பி.மாணிக்கவாசகம்** போன்றவர்களைச் சந்திக்கத் தவறுவதில்லை.

ஆரம்பத்தில் அவர் **கரப்பங்காட்டில்** உள்ள வீடொன்றில் இருந்தார், என நினைக்கின்றேன். அங்கு சென்றால் பண்பான உபசரிப்பு இடம்பெறும். ஏனென்றால் அவருக்கு வாய்த்த துணைவியாரும் அவரைப்போன்ற பண்பாளர். **தமிழ்க் கலாசாரத்திற்குரிய சேலையிலேயே** அவர் காட்சியளிப்பார். அகளங்கன் அவர்களும் வீட்டில் சாரம் அணிந்தாலும் வெளியில் வேட்டி சருகைமடித்த சால்வையுடனேயே தோற்றமளிப்பார். கரப்பங்காட்டில் அவர் இருந்த வீட்டிற்கு ஒரு தடவை எனது மனைவியுடன் சென்று விருந்துண்டமை இன்னும் பசுமையான நினைவாகும்.

1994ம் ஆண்டிற்குரிய இலக்கிய நூல் களுக்கான பரிசில்களில் **இலக்கிய நாடகங்கள்** என்னும் அகளங்கனின் நூலுக்கும் 1996ம் ஆண்டில் நடைபெற்ற இலக்கிய விழாவில் பரிசு வழங்கப்பட்டது. இந்நூல் 1994ம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்கான பரிசிற்குள் அடங்கும். 1996ம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற இலக்கியவிழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் **"மருதநிலா"** மிகவும் சிறப்பாக அமைந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றது. இதற்கான சகல செயற்பாடுகளும் **அளங்கனுடன்** சேர்ந்த மலர்க்குழுவினரான திரு.ஓ.கே.குணநாதன், திரு. பி.மாணிக்கவாசகம், திரு.எஸ்.சுமந்திரன், திரு.எஸ்.இராமமூர்த்தி முதலானோரால் மேற்கொள்ளப்பட்டன.

அகளங்கன் அவர்களுடனான நட்பு மேலும் இறுக்கமடைவதற்குக் காரணமாக அமைந்தது இலக்கிய நூல் பரிசு தேர்வுக் குழு நடுவர்களில் ஒருவராக அவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்டது. சமய இலக்கியம், நாடகம், சிறுகதை ஆகிய துறைகளுக்கான நடுவர்களில் ஒருவராகச் செயற்பட்டார். இதன்காரணமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி அவரை நான் சந்திக்க நேர்ந்தது. இதன்போது அகளங்கன் அவர்கள் பின்னர் குடியிருந்த **உக்கிளாங்குளத்திலுள்ள** வீட்டில் ஒரு தடவை மதிய உணவை அளித்து, அவரும் அவரது துணைவியாரும் எம்மை மகிழ்வித்தமை இன்றும் நினைவிலுள்ளது.

மட்டக்களப்பில் நடைபெறும் இலக்கிய விழாக்கள், மற்றும் நூல்வெளியீடுகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்போதும், எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளர் **கலாநிதி ஓ.கே.குணநாதன்** அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் **தமிழியல் விருது வழங்கும் விழாவிற்கு** வருகை தரும் போதும் சந்தித்து அளவளாவத் தவறுவதில்லை. ஒருதடவை வவுனியாவில் நடைபெற்ற மரண வீடொன்றில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்ற போது முழுகிக் குளிப்பதற்காகவும், தங்குவதற்காகவும் அகளங்கன் தற்பொழுது வசிக்கும் **திருநாவற்குளத்திலுள்ள** வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது எனது சகலன் ஒருவரையும் அழைத்துச் சென்றபோதும் உடனடியாக சாப்பாட்டிற்கு பிட்டு அவித்து கறிகளும் சமைத்து எம்மை உபசரித்த விதம் பசுமை நினைவுகளாக இன்றும் உள்ளன.

**மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.** என்பதற்கு ஏற்ப அகளங்கன் அவர்களுக்கு பண்பான துணைவியும் பாசமுள்ள பிள்ளைகளும் வாய்த்துள்ளனர்.

கூட்டங்களில் மிகச்சுவையாகப் பேசும் ஆற்றல் அகளங்கனுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. ஒரு தடவை மட்டக்களப்பிற்கு அவர் வந்த போது எமது ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அவரை வரவழைத்து சிறந்ததொரு சமயச் சொற்பொழிவினை அவர் ஆற்றிய நிகழ்வு இன்றும் நினைவிலுள்ளது. அகளங்கன் அவர்களின் கலை இலக்கியப் பணிகளைக் கருத்திற்கொண்டு **2000ம் ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனர்** விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அவர் கலந்து ஆளுனர் விருது பெற்றுச்சென்றமை இன்றும் நினைவை விட்டகலாத நிகழ்வாகவுள்ளது.

வடக்கு மாகாணம் தனியாகப் பிரிந்ததன் பின்னர் அங்கு பண்பாட்டுத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள கலாசாரப் பணிப்பாளர் **திருமதி.ஸ்ரீதேவி** அவர்கள் வட்டாரவழக்குச் சொற்களை பாகுபடுத்தி நூலுருவாக்கும் பணிக்காக மட்டக்களப்பிலிருந்து என்னையும், **பேராசியர் எஸ்.யோகராசாவையும்,** வவுனியாவிலிருந்து **அகளங்கன்** அவர்களையும், மன்னாரில் இருந்து **திரு.செபமாலை (குழந்தை)** அவர்களையும், அம்பாறையில் இருந்து **இரு முஸ்லிம்** அன்பர்களையும் அழைத்துக் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் பணிக்கு அப்பால் நானும் அகளங்கனும் குழந்தை மற்றும் கலாநிதி யோகராசா அவர்களும் சேர்ந்து ஒன்றாக அளாவளாவிய விடயங்கள் இன்றும் பசுமையாகவுள்ளன.

நான் ஓய்வு பெற்ற பின்னர் 2003ல் எனக்கொரு **மணிவிழா** எடுக்க வேண்டுமென விருப்புக் கொண்ட எழுத்தாளர் ஊக்குவிப்புமைய மேலாளர் கலாநிதி ஓ.கே.குணநாதனும் அகளங்கன் அவர்களும் இணைந்து பெருமுயற்சி எடுத்து **எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும்"** என்ற நூலையும் அச்சிட்டு, மட்டக்களப்பில் இந்துக் கல்லூரிக் கலையரங்கில் பெருவிழாவாக மணிவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வவுனியாவிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்து விழாவிலே கலந்து என்னைப் பற்றிச் சிறப்புரை ஆற்றியமை என்றும் மறக்கக் கூடிய செயலன்று.

வடக்கு மாகாண இலக்கிய விழாவொன்றின் போது வவுனியாவிலிருந்து அகளங்கன் குடும்பத்தோரும், மட்டக்களப்பிலிருந்து நானும் சென்று யாழ்ப்பாணம் உதயன் நிறுவனத்தின் விருந்தினர் விடுதியில் தங்கி ஒன்றாக உண்டு மகிழ்ந்த நிகழ்வு என்றும் பசுமையாகவுள்ளது. அன்புள்ளம் கொண்ட அகளங்கனின் தொடர்புகள் யாவும் என்றும் மனப்பதிவிலிருந்து நீங்காதவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர்
திருமதி.என்.ஸ்ரீதேவி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**அ**களங்கன் என்ற புனைபெயரால் தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த நா.தர்மராஜாவின் இலக்கியப் பணியை சேணுயர் தேசம் நன்கறியும்.

கல்வியமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினுடைய கலை இலக்கிய செயற்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் **நல்ஆசானாக, நல் மந்திரியாக, நல்வழிகாட்டியாகத்** திகழ்ந்து வருபவர் அகளங்கன். வடக்குக் கிழக்காக இருந்தபோதும் பின்னர் வடக்கு என்ற தனி அலகாகப் பிரிந்த பின்னரும் அவர் ஆற்றிய பணியைத் திணைக்களம் சார்ந்து என்னால் அளவிட முடியும்.

தமிழுக்கு வருடா வருடம் திணைக்களம் எடுக்கும் விழாவிற்குத் **தலைவனும், ஆய்வாளனும்** அவனே. வடக்குக் கிழக்கின் உயரிய விருதான கௌரவ ஆளுநர் விருது அகளங்கனுக்கும் கிடைக்கப் பெற்றதில் திணைக்களம் பெருமை கொண்டது. இவர் பல்துறை சார்ந்த எழுத்தாளர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வு, நாடகம் எனப் பல் துறையில் பவனி வருபவர். அனைத்துத் துறைக்கும் இவருக்குச் சிறந்த இலக்கிய கர்த்தா என விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

எமது இலக்கியங்களை அளந்தறியும் தெரிவுக்குழுவில் அகளங்கனும் மிக முக்கியமான ஒருவர் என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். அந்தவகையில் பண்பாட்டலுவல்கள் திணைக்கள வரலாற்றில் அகளங்கன் என்ற நாமம் பதிக்கப்பட்டுள்ளது.

இவரது கலைப்பணி, இலக்கியப்பணி தொடர வேண்டும். இவர் சேமமுடன் வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து மணிவிழாக் காணும் இச் செம்மலுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் மக்கள் சேவை மாமணி திரு.நா.சேனாதிராசா J.P அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எனது இளைய சகோதரன் (நா.தர்மராஜா) **கலாநிதி அகளங்கன்** அவர்களுக்கு மணிவிழா மலர் வெளியிட முயற்சி செய்த அனைவருக்கும் எனது அன்பார்ந்த நன்றிகள். எமது தந்தையார் அமரர்.சே.நாகலிங்கம் அவர்கள் வாழ்ந்த காலத்திலே இலக்கியத் துறையிலே மிகவும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். பல இலக்கிய நூல்களை கற்றறிந்தது மட்டுமன்றி சோதிட நூல்களையும் கற்றிருந்தார். துரதிஷ்ட வசமாக அவர் வாழ்ந்த காலத்தில் அவரது திறமைகள் வெளிக்கொண்டுவர வாய்ப்புக்கள் இருந்திருக்கவில்லை. இதனால் இவரது திறமைகளை தனக்குள்ளேயே புதைத்து வைத்திருந்தார்.

தம்பி கலாநிதி அகளங்கன் அவர்கள் வவுனியா மகாவித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) வரை விஞ்ஞான கல்வி கற்று இருந்தார். அன்றைய சூழ்நிலையில் விஞ்ஞானக் கல்வி கற்றால் தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தினாலும், எமது குடும்ப பொருளாதார நிலை காரணமாகவும் தொடர்ந்தும் அவரை விஞ்ஞான கல்வி கற்க யாழ்.சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு க.பொ.த (உ/த) கற்க அனுப்பி வைத்தோம். அங்கிருந்து அவர் யாழ் பல்கலைக்கழகம் சென்றார். ஆனால் அவர் விஞ்ஞான கல்வியை விட தமிழ் இலக்கிய நூல்களை பல்கலைக் கழக நூலகத்திலிருந்தும், யாழ் பொது நூலகத்திலிருந்தும் பெற்று தனது தமிழ் அறிவை வளர்த்துக் கொண்டார். அத்துடன் அங்கே சேவையாற்றிய தமிழ்ப் பேராசிரியர்களுடைய விரிவுரைகளையும் கேட்டு தமிழ் இலக்கியத்திலேயே கூடுதலான ஈடுபாடுகளைக் கொண்டார். பல்கலைக் கழகத்திலேயே **தமிழ் மன்றத்தினைத் தலைமைதாங்கி** நடாத்தி இருக்கிறார்.

இக்காலத்திலேயே **சிரித்திரன்,** ஏனைய தேசிய பத்திரிகைகளுக்கு பல கட்டுரைகளையும், கவிதைகளையும், கதைகளையும் எழுதிவந்தார். இவர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் கல்வி கற்றிருந்தால் தமிழ்ப் பேராசிரியராக திகழ்ந்திருக்கமுடியும். அவர் பிற்காலத்தில் பல பட்டங்களை அரசாங்கத்திடம் இருந்தும், தனியார் நிறுவனங்களிடம் இருந்தும் பெற்றுக் கொண்டார்.

**முன்னைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அம்மையார்** அவர்களிடம் இருந்து பரிசுப் பொருட்களை பெற்றுக் கொண்டார். இவருக்கு பல பட்டங்கள் கிடைத்தாலும் **இந்து சமய கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட தமிழ்மணி** என்ற பட்டம் சால பொருத்தமானது என நான் கருதுகிறேன். தற்போது கலாநிதி பட்டத்தையும் பெற்று அறுபதாவது வயதில் மணிவிழா காண்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய 8 சகோதரர்களுக்குள்ளும் ஒரு பிரபலமான எழுத்தாளன், இலக்கிய சமய சொற்பொழிவாளன், கவிஞன், நாடகாசிரியன் இன்னும் பல சமூகத்தால் மதிக்கப்படுகின்ற உயர்ந்த நிலையில் இருக்கின்ற இவரை வாழ்த்துவதில் சகோதரர்களாகிய நாங்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம். எமது வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் சார்பாகவும் இவரை வாழ்த்துகின்றோம்.

இவர் சுமார் 40 இற்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதி பல **சாகித்திய மண்டல பரிசுகளையும்** ஏனைய பரிசுகளையும் **இலங்கையிலும், இந்தியாவிலும்** பெற்றுக் கொண்ட பெருமைக்குரியவர். வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் பல ஆண்டுகளுக்கு முன் தன்னை இணைத்துக் கொண்டு **துணைத் தலைவர்களில்** ஒருவராக சங்கத்தில் நடைபெறும் சகல இலக்கிய நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்து நடாத்தி சங்கத்தின் பெயர்புகழுக்கு உழைத்தது மட்டுமன்றி வவுனியா மாவட்டத்தில் தமிழும் சைவமும் வாழ அரும்பணியாற்றி வருகின்றார்.

இவருக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்ல தேக ஆரோக்கியத்தையும், அமைதியான வாழ்வையும் வழங்கி இன்னும் பல வருடங்கள் தனது சேவைகளை ஆற்றுவதற்கு **பம்பைமடு, புதுக்குளத்து வைரவர்** துணை நிற்க வேண்டும் என வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வவுனியா இந்துமாமன்றத் தலைவர் இறைபணிச் செம்மல், கலாபூஷணம், வை.செ.தேவராஜா அவர்களின்

# வாழ்த்துரை

எனது அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய தமிழ்மணி அகளங்கன் அவர்கள் வவுனியாவில் என்னோடு பல ஆண்டுகளாக பல வழிகளிலும் பழகியவர். அவர் எனது உடன்பிறவாத சகோதரரும் ஆவார். அவரது தந்தையார் திரு. நாகலிங்கம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் தனது பிள்ளைகள் எல்லோரும் ராசாக்கள் அதில் தம்பி தேவராசா அவரும் எனக்கு ராசா தான் என்று கூறுவார். எனக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மிக நெருங்கிய தொடர்பு பல காலமாக உண்டு. சமயம், இலக்கியம், அரசியல், பொதுத் தொண்டு என்று நாம் வாழ்ந்தவர்கள்.

திரு.அகளங்கனுக்கு பல பட்டங்கள் இருந்த போதும் அகளங்கன் என்ற புனைபெயரே யாவற்றிலும் மேலானது. மனதில் பதிந்திருப்பது அதுவே. எனது வாழ்வின் முன்னேற்றத்துக்கும் அவர் வழிகாட்டியவர் என்பதில் பெருமை கொள்கிறேன். அவர் வாழ்வில் எல்லா பெருமைகளும் கிடைத்து நீடுவாழ எனது குல தெய்வமான சிவனை வேண்டுகிறேன்.

வணக்கம்

இறைபணிச் செம்மல், திருவாசகசெல்வர்

கலாபூஷணம், ஈழத்து சிவதொண்டன்

**வை.செ.தேவராஜா** *J.P*

தலைவர் இந்துமாமன்றம்

வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கோயிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில் அறங்காவலர் சிவத்திரு.ஆ.நவரெத்தினராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## புலமையும், வித்துவமும் மிக்க புராண வித்தகர் டாக்டர் அகளங்கன்

புராணபடன வித்தகராக புராணங்களுக்கு ஆலயங்களில் பயன் கூறும் வல்லாராக மிளிர்பவர் மணிவிழா நாயகர் கலாநிதி.தமிழ்மணி அகளங்கன் அவர்கள். எமது கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலிலேயும், திருத்தலங்களிலும் ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக புராணப் பயன் கூறி அடியார்களை சிவ வழிபாட்டிலே ஈர்த்து நிர்ப்பவர். நமது மதிப்பார்ந்த அகளங்கன் அவர்கள்.

மணி விழா நாயகர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் புராணாசிரியருக்குரிய தகைமைகள் நிரம்பியவர். பராண படனம் குலவித்தையாகவே வருவது. மிகவும் உயரிய தத்துவக் கருத்துக்கள் திருவருள், திருவிளையாடல்கள், அற்புதங்கள் என வரும் சந்தர்ப்பங்களிலும் அசரீரி மெய்ப்பாடு, உணர்வு, நலன் எனும் சந்தர்ப்பங்களிலும் தளம்பாது பொருள்விரித்து, நல்ல உதாரணங்கள் காட்டி பயன்கூறும் வித்துவமிக்கவர் அகளங்கன் அவர்கள். சைவசமயப் பரிமாணம் என்பது புராணபயன் கூறுபவருக்கு மிக மிக இயல்பாய் அமைய வேண்டியது. இத்தகு சிறப்பு வாய்ந்த அறிஞராயும், உரைஞராயும், திகழ்பவர் கலாநிதி அகளங்கன்.

நாவலர் மரபு, பண்டிதமணி மரபு என்று நிலவும் தொன்மையின் வரன்முறையே இன்று வவுனை மண்ணிலே விரல் விட்டு எண்ணக்கூடிய புலமையாளர்கள், பேரறிஞர்கள், வரிசையில் நமது அகளங்கனுக்கு தனித்துவமானதோர் இடமுண்டு என்பது என் கருத்து. எமது திருக்கோயிலில் இடம்பெறும் புராணபடன வைபவங்களின் போது பயன்கூறும் வித்தகத்துடன் ஒத்துழைத்து அடியார்கள் பலரும் வியந்து பாராட்டும் வண்ணம் உருக்கமுடன், பக்திபூர்வமாக பயன்சொல்லும் அகளங்கனினது புலமைப்பணி மேன்மேலும் வளம்பெறச் செழித்துப் பயன்பட ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருவருளைச் சிந்தித்து விந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வவுனியா ஸ்ரீ கந்த சுவாமி கோயில் தர்மகர்த்தா சபைச் செயலாளர், திரு.க.ந.பாலச்சந்திரன் J.P அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

**பல முகங்கள் கொண்ட படைப்பாளி**

*"தோன்றிற் புகழொடு தோன்றுக அ.:.திலார்*
*தோன்றலிற் தோன்றாமை நன்று"*

*எனும் பொய்யா மொழியின் வாக்கிற்கிணங்க தோன்றி, தமிழுக்காகவும் தமிழ் இலக்கியத்திற்காகவும் சைவ சமயத்திற்காகவும் தொண்டாற்றி மணிவிழாவினை கண்டு நிற்கும்* ***தமிழறிஞர், கலாபூஷணம், கலாநிதி, கவிஞர், தமிழ்மணி,*** *எனும் பல உயரிய அழகிய சொற்கள் ஆள* ***அகளங்கன்*** *எனும் பெயரால் உலகறியப்பட்ட திரு.தர்மராஜா அகளங்கனை வாழ்க! வாழ்க! என வாழ்த்துவதில் வவுனியா கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை பெருமிதமடைகின்றது.*

*மண்ணிற் பிறந்த பயனென் னிதுவோ*
*கண்ணினாற் கண்டோம் சேவை செம்மல்*
*வான்புகழ் ஓங்க விருதுகள் பெற்றே*
*நான் மறை அறங்கள் காத்தீர் வாழ்க!*

*பல நல்லறிவாளர்களைத் தந்த இந்த ஈழமண்ணில் தோன்றியதால் சமய சமூக இலக்கிய நோக்குடைய கருத்துக்களை மக்கள் மனத்தில் ஆழமாக பதிவு செய்து, மனித குலத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்து வருவதனால் வவுனியா நகரம், வவுனியா கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை, என்னுடைய மனம் என்பன மகிழ்ச்சியில் பெருமிதமடைகின்றது. கலாநிதி அகளங்கன் காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் மனித பிறவி எடுத்ததன் பயன் பெற்றோம் என மகிழ்வடைகின்றோம். அகத்தின் அழகை இவரது வதனத்தில் என்றும் காணலாம். இலக்கிய சமய சேவைகள் அனைத்திலும் இறைவன் சிருஷ்டிப்பதாகவே உணரலாம். சிரித்த முகம். அன்பு தவழும் பார்வை. தன்னை சிறுமைப் படுத்தியவர்களையும் மன்னிக்கும் குணம், எல்லோரையும் மதிக்கின்ற மாண்பு. இவையனைத்தும் மணிவிழா நாயகரின் சொத்துக்கள் எனலாம்.*

*சமயம் சார்ந்து, ஆய்வுகள் சார்ந்து, இலக்கியம் சார்ந்து, சிறுவர்கள் சார்ந்து, பெரியார் வாழ்வியல் சார்ந்து, பல பரிமாணங்களில் இவரது சேவை காரணமாக உலகறிந்த பெருமகனார். இலக்கிய துறையில் தனக்கோர் இடத்தை பெற்றவர்.*

*சமய இலக்கிய தமிழ் பேச்சாளனாக,* ***புராணபடன புகழ்தகையாக, இலக்கிய சுடராக, சிவனருட் செல்வராக, ஆசிரிய மணியாக, சைவ தமிழியற்கு ஒரு கோ-வாக***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழில் ஒரு கலைச் சுடராக எல்லாவற்றிற்கும் மேலாக **தமிழறிஞராக** பல முகங்களை கொண்டு வாழ்வாங்கு வாழ்வதனால் கலாபூஷணம் கலாநிதி எனும் உயரிய கௌரவங்களை தனதாக்கிக் கொண்டவர்.

தாரணி போற்றும் தமிழ் மொழியே - உன்
தாளணி செய்வேன் கவி வழியே.

என்றவாறு வாழ்வதனால் இவரது தர்மராஜா எனும் இயற் பெயர் தொக்கி நிற்க "அகளங்கன்" எனும் புனை பெயர் புகழ் பெற்றது.

எமது வவுனியா கந்தசுவாமி கோயிலோடு பல நெடுங்காலம் தொடர்பு கொண்டவர். வருடா வருடம் இடம் பெறும் கந்தசஷ்டி பெருவிழாவில் **கந்த புராணபடனம்** செய்பவர். பல நிகழ்வுகளில் சொற்பொழிவுகளாற்றியவர். தர்மகர்த்தா சபைக்கு பல நல்லாலோசனைகள் நல்குபவர். எமது **கும்பாபிஷேக மலருக்கு பிரதம கௌரவ ஆசிரியராகப் பணியாற்றி** மிக உயர்தரத்தில் அம்மலரை ஆக்கித் தந்தவர். எமது **திருமண மண்டபத் திறப்பு விழாவைத் தலைமை தாங்கிச் சிறப்பாக நடாத்தி தந்தவர்.**

எமது ஆலயத்தோடு குடும்பமாக ஒன்றியவர். இதன் காரணமாக அனைவரது மனத்திலும் இடம் பிடித்தவர். வெற்றி பெற்ற ஆணுக்குப் பின் நிற்கும் பெண்ணாகி அவர் காரியம் யாவிலும் கைகொடுக்கும் வாழ்க்கைத் துணையும், குறிப்பறிந்து பணி முடிக்கும் ஏவா மக்களும் அன்பு பேரப்பிள்ளையும் வாய்க்கப் பெற்ற இவர்கள் தம் மணிவிழா சிறப்புறவும் அவ்விழா நோக்கி வெளிவரும் மலர் மணம் பரப்பவும் இனிதே வாழ்த்துகின்றோம்.

வாழ்வாங்கு வாழ்ந்திட்ட பெருந்தகையே - இன்னும்
வாழ்வாங்கு பலகாலம் வளமாய் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.பொ.நல்லையா அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

## புராண படன மரபைப் போற்றி வளர்ப்பவர்

**வ**வுனியா பம்பைமடு கிராமத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கேள்வி பாண்டித்தியம் போன்றவற்றால் பட்டை தீட்டப் பெற்ற வைரமாக விளங்கும் **கலாநிதி, கலாபூஷணம், தமிழ் மணி அகளங்கன்** அவர்கள் நாடு தழுவிய ரீதியாக அவரது அறிவொளியால் பரந்த பயன்பாட்டை நல்கிய **மூதறிஞராவார்**. அது மட்டுமல்ல நாட்டின் எல்லை கடந்து சைவத்தமிழ் மக்கள் மிகுதியாக வாழும் நாடுகளான **ஐக்கிய இராச்சியம் (U.K) ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், சிங்கப்பூர்** போன்ற நாடுகளிலும் தமது பேச்சாற்றலாலும், எழுத்தாற்றலாலும் சிறப்பிடம் பெற்றுக் கொண்ட பெரியாராவார். அவர் இப்பொழுது தனது 60 வயதை நிறைவு செய்து மணிவிழாக் காணுவதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சேவை அர்ப்பணிப்புள்ள ஆசிரியராகப் பணியாற்றிய இவர், சங்க கால இலக்கிய நூல்கள் தொடக்கம், தற்கால நாவல், சிறுகதை, புதுக்கவிதை போன்ற பல் துறை இலக்கியங்களையும் கற்று ஆளுமை படைத்த விற்பன்னராக விளங்குவதோடு கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த 43 நூல்களை ஆக்கி அச்சிட்டு வெளியிட்டுள்ள பெரியாராவார். மேலும் பல நூல்களை எழுதி வெளியிடும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்றார்.

இவரைத் தலைவராகக் கொண்ட "கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்" மூலம் கலை இலக்கியத் துறைக்கு பல இளைஞர்களை அறிமுகஞ் செய்ததோடு அவர்களது ஆற்றலைப் பலருங் கண்டு கொள்ளும் படியாக களம் அமைத்துக் கொடுத்து வருகின்றார். ஆலய பரிபாலன சபைகள் உட்பட பல்வேறு கலை இலக்கிய சமய நிறுவனங்களதும் கும்பாபிஷேக மலர்கள், ஆண்டு மலர்கள் போன்றவற்றுக்கு பிரதம கௌரவ ஆசிரியராகவிருந்து அவற்றை திறம்பட உருவாக்கி வெளியிட்ட பெருமைக்குரியவராவார்.

எமது ஆலயத்துக்கென அமைக்கப்பெற்ற "சிந்தாமணி" அன்னதான கலாசார மண்டபத் திறப்பு விழா நினைவாக வெளியிடப் பெற்ற **"சிந்தாமணி"** மலருக்கு பிரதம ஆசிரியராகவிருந்து அம் மலர் சிறந்த ஆக்கங்களைக் கொண்ட அரியதொரு மலராக மிளிர்ந்து மணங்கமழ உதவி புரிந்தவராவார். எங்களுடைய ஸ்ரீ சிந்தாமணி விநாயகராலயத்தில் பரிவார மூர்த்தியாக அமைக்கப்பட்டு 1992ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்ட வள்ளி தெய்வயானை சமேத முருகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் ஆலயத்தில், அதே ஆண்டு **கந்த புராண படனம்** உற்பத்தி காண்டம் முதல், தக்ஷ காண்டம் வரை உள்ள படிப்பைத் தொடக்கி வைத்து தொடர்ந்து இன்றுவரை ஒவ்வோராண்டும் அப் புராண படனம் ஒழுங்காக நடைபெறுவதற்குத் தாமே முன்னின்று சிறந்த முறையில் பயன் விரித்துரைத்ததோடு பலரைப் புராணம் வாசிக்கவும், சிலரைப் பயன் சொல்லப் பயிற்சியளித்தும் ஆறுமுகநாவலர் பெருமான் தோற்றுவித்த புராண படன மரபை பேணிக்காத்த பெருமைக்குரியவராவார்.

இவ்வாலயத்தில் நிகழும் மகோற்சவங்களிலும் ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்து சொற்பொழிவாற்றி வருபவராவார். ஆண்டு தோறும் நிகழும் தேர்த்திருவிழாவின் போது தேர்த்திருவிழா பற்றிய அரிய கருத்துக்களைச் சுமந்து வரும் நேர்முக வர்ணனைகளை நிகழ்த்தி வரும் முதறிஞராக விளங்குகின்றார்.

இவ்வாறு பலவழிகளாலும் எமது ஆலய வளர்ச்சியோடு ஆழமான மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்ட தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்கள் அகவை 60ஐ நிறைவு செய்து மணிவிழாக் காணும் இத்தருணத்தில் அவரும் அவரது குடும்பத்தினரும் மேலும் பல்லாண்டு காலம் பயனுறு வாழ்க்கை வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானது பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

**"வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுத்து வரும்"**

வணக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான தலைவர்,
## திரு.இ.கிருபாமூர்த்தி அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

### சைவத் தமிழியற் செல்வர் அகளங்கன்

**அ**றுபது ஆண்டு கால வாழ்வைத் தொட்டுவிட்டு சிறப்புடன், நேர்மையாக நிமிர்ந்து நின்று தமிழ்ப் பணியாற்றும் வன்னி மண் தந்த **தமிழறிஞர் கலாநிதி அகளங்கன்** அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வு கொள்கின்றோம்.

பம்பைமடு கிராமத்தில் பிறந்து வளர்ந்து பாரம்பரிய கருத்தொடராக வந்த **புராணபடன வித்தகர்** என்ற புகழைப் பெற்றமைக்காக முதற்கண் வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழக கல்வியிலே தமிழ்த்துறையை தேர்ந்து படிக்காமலே **தமிழறிஞனாக,** தமிழிலே, இலக்கியத்துறையிலே, இந்து சமயத் துறையிலே உயர் ஞானம் பெற்ற வித்தகராக, தமிழறிஞர், கலாபூஷணம், கலாநிதி, என பல்கலைப் பட்டங்களால் பாராட்டப் பட்டு உயர்ந்த எங்கள் அகளங்கனை வாழ்த்துகின்றோம்.

தமிழும் சைவமும் வன்னி மண்ணிலே நிலைத்து வாழ்ந்திட அயராது பணியாற்றும் **சைவத் தமிழியற் செல்வர்** அகளங்கன் அவர்களை வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.

தனது சொல்லாண்மையாலும், எழுத்தாற்றலாலும் வியந்து பார்த்து வியக்கவைக்கும் நினைவாற்றலாலும் சிறந்து விளங்கும் கலாநிதி அகளங்கன் அவர்கள் வன்னித் தமிழறிஞர்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் தகமையுடனும் தற்பெருமை கொள்ளாத தமிழ்த் தொண்டனாகவும், மேன்மேலும் புகழுடன் தன்பணி தொடர வாழ்த்துகின்றோம்.

தமிழை ஆட்சி செய்ய, தமிழால் தலைமை கொள்ள, தமிழை ஆராட்சி செய்து தரமுயர்த்த இம் மண்ணில் தமிழ்மணி அகளங்கன் வாழ்கின்றார். என்ற துணிவில் தமிழ் வாழ வாழ்த்துகின்றோம்.

தருமராஜா என்றால் அறியாதவர் கூட தமிழ்மணி அகளங்கன் என்றால் அறிந்திடுவார். தமிழறிஞரென, தமிழ்க் கவிஞரென கவியென்றால் அகளங்கனின் கவிகளே எங்கும் வாழும். அவர்கவியாக எங்கும் ஒலித் திட வாழ்த்துகின்றோம்.

தகுந்த நேரத்தில் மணிவிழா எடுத்து கலைஞரை ஊக்குவித்து மகிழ்விக்கும் அவையினரை மனதார வாழத்துவதுடன் விழாமலர் மணம் வீசி சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.

மணிவிழா காணும் சிறப்புக் கலைஞர் தமிழ்மணி கலாநிதி அகளங்கன் அவர்கள் நீளாயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி தமிழ்ப் பணி தொடரவும், அவர்தம் வாழ்க்கைத் துணையுடன் மக்கட் செல்வங்களும் வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இலக்கிய வட்டம், இலங்கை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் தலைவர் சாஹித்ய இரத்னா செங்கை ஆழியான் (கலாநிதி க.குணராசா) அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## முத்தமிழிலும் ஆற்றல் மிக்க படைப்பாளி

**வ**ன்னி மண்ணின் நவீன டைபாபளிகள் என் மனதில் நிலைத்து நிற்பவர் அகளங்கன் ஆவார். **நா.தருமராஜா** என்ற **அகளங்கன்** ஒரு சிறந்த ஆக்க இலக்கிய கர்த்தா என்பதை மறுப்பார் எவருமில்லை.

இவர் **இயல், இசை, நாடகம்** ஆகிய துறைகளில் பல படைப்புக்களை படைத்துள்ளமை வியப்பிற்குரியது. காரணம் இவர் ஒரு கணித ஆசிரியராக இருந்தும் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக தன் ஆற்றலை வெளிக்கொணர்ந்து இலக்கியத்துறையில் தடம்பதித்துள்ளார்.

இவர் இலக்கியத்தின் பல்துறைகளிலும் ஆழமாக காலை ஊன்றி ஆற்றல் மிக்க சிறந்த நூல்களைப் படைத்துள்ளமை அவரது திறமையை வெளிக்காட்டுகிறது. இவருக்கு மணிவிழாவா? என்றறிய என் மனம் மறுக்கிறது. அறுபது என்பது மீண்டும் இளமையைத் தூண்டும் வயது. கடிகாரமுள் அறுபதின் பின் 1, 2 எனவலம் வரும். அவ்வாறு அகளங்கனும் இலக்கியத்தில் இன்னும் நல்ல காத்திரமான நூல்களைப் படைக்க வேண்டும். அதற்கேற்ற ஆற்றல் அவருக்குண்டு. வயது ஒரு தடையல்ல. அவர் மேலும் பல நூல்களை கல்விச் சமூகத்திற்கும் இலக்கியத்திற்கும் படைத்து வழங்க எனது ஆசிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

செயலாளர் – யாழ்.இலக்கியவட்டம், பொருளாளர் – கம்பன் கழகம். யாழ்ப்பாணம்
நயினை திரு.கி.கிருபானந்தா அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

## சான்றோர் சுரபி

**"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு"** எந்த எதிர்பார்ப்புமின்றி உலகின் செழிப்புக்கு விடாது பொழியும் மழை கண்டு வியப்புறுகிறார் வள்ளுவர் - "இம்மாரிக்கு என்ன கைமாறு செய்ய முடியும்" என எண்ணியவர் ஒப்புரவாளர் தம் உயர்வோடு ஒப்பிடுகிறார். மாரி போல் மற்றார்க்குத் துணைபுரியும் ஒப்புரவாளர் **அகளங்கன்** மாரியை விஞ்சிய பாரி. இன்று அகவை அறுபது எய்துகிறார் எனும் செய்தியால் இவ்வுலகமே இறும்பூ தெய்துகிறது. அவர் தம் நீண்ட ஆயுளுக்காய் வேண்டி நிற்கின்றது.

ஆலமரமாய் விரிந்த அவர்தம் அறிவுக்கிளைகளில் இன்று உலகம் முழுவதும் விழுதாய் வேர் விட்டுக்கிடக்கும் அன்புள்ளங்களின் எண்ணிக்கை ஆயிரமாயிரம். இன்றும் அந்த மூத்தமரம் விழுதுகளால் தாங்கப்படாமல் விழுதுகளைத் தாங்கும் கம்பீரத்தோடு நிற்கிறது.

அறிவு ஜீவிதம் - பரந்த மனித நேயம், மானுடத்தில் ஆரோக்கியமான நம்பிக்கை, அறிவு, நாணயத்தில் விளைந்த ஒரு கம்பீரம், மனித உள்ளத்தின் ஆழங்களில் நிழலாடும் மெல்லதிர்வுகளையும் துல்லியமாகப் படம்பிடிக்கும் எக்ஸ்ரே திருஷ்டி, பொருளார்ந்த நவீனத்துவம், இளமைத்துடிப்புள்ள முதிர்ச்சி. ஆனால் முதுமையின் நிழல் கூட அவரின் ஆளுமையின் நிழலைத் தீண்ட முடியாது.

வளைந்தும் குழைந்தும் நேரத்திற்குத் தக்கபடி அனுசரித்துப் போகும் உலகில் அவர் ஒரு நிமிர்ந்த தென்னை மரம். அவரின் நிலத்தில் தோன்றிய விளைச்சல்களுக்கு அவரே விதை. அவரே நீர்! அவரே உரம்!

அவருடைய பேச்சிலும் எழுத்திலும் வேகமும் - வீரமும் இருக்கும். ஆனால் விஷம் இருக்காது. அவரின் பல்வேறு திறமைகளுள்ளே தலையாயது. அவர் எவருக்கும் எந்நேரமும் இனியவராய் விளங்குவதே. இந்தப் பண்பு எல்லார்க்கும் சாத்தியமான ஒன்றல்ல. அசாத்தியத்தை சாத்தியமாக்குவது தானே சாதனை. மற்றவர்க்கு உதவி செய்வதில் மனநிறைவு காணும் ஒரு மானுடம் மற்றவர்களின் மனம் நோகப் பேசாத ஒரு மா மனிதம். **என் இரத்த உறவை இரண்டாம் உறவாக்கியது இவர் உறவு.**

இவருக்கு, தமிழ்ச் சொற்களும் தமிழ் மொழியும் கைகட்டிச் சேவகம் செய்கின்றன. இன்றும் அவருடைய எழுத்தின் முதல் ரசிகன் யான்.

**"அரியவற்று ளெல்லாம் அரிதே. பெரியாரைப் பேணித் தமராக் கொளல்"** என்ற வள்ளுவர் வாக்கின்படி எவராலும் பேணித்தமராகக் கொள்ளத்தக்க பெருந்தகையாக, எவரும் பாதம் தொழுது தொழுது அவரிடம் பயன் பெற்றுக் கொண்டு இருக்கும் காமதேனுவாக நீள நினைந்து நினைந்து நித்தலும் கைதொழும் என் தெய்வம் "மணிவிழா" பொலிவோடு மேலும் பல்லாண்டு வாழ்ந்து என்னை வாழ்விக்க வேண்டும் என்று என் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# தமிழ் அறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

**டாக்டர்.ஓ.கே.குணநாதன்.** M.A. M.Sc.M.Phil.

***ஊரும் உறவும்:-***

**பு**வியியல் அடிப்படையில் **ஈழ நாட்டின்** இதயமாக விளங்குவது **வன்னிப் பிரதேசம்.** இன்று உலகத்தின் இதயத்தை நெகிழ வைத்த பிரதேசமாக விளங்குவது இப்பிரதேசம்.

உல்கின் கடைசித் தமிழ் இராச்சியம் வன்னி இராச்சியமே. உலகின் கடைசித் தமிழ் இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் மாவீரன் பண்டார வன்னியன். வன்னிப் பெரு நிலப்பரப்பில், வடக்கின் தலை வாசலாகத் திகழ்வது **வவுனியா நகர்.**

வவுனியா நகருக்கு மேற்கே, மன்னார் பிரதான வீதியில் நகரிலிருந்து எட்டு கிலோ மீற்றர் தூரம் சென்று, பின் வடக்கே காட்டுப் பாதையூடாக மூன்று கிலோ மீற்றர் தூரம் சென்றால், ஒரு சிறிய கிராமத்தைக் காணலாம்.

மான், மயில், மாடு, குரங்கு, காடு, வயல், பெரிய குளம் என இயற்கை அழகு விம்மிப் பூரித்திருந்த சிறிய கிராமம் அது. இருபது குடும்பங்கள் வரை மட்டுமே உள்ள குக் கிராமமாக அது இருந்தது. **பம்பைமடு** என்பது அவ்வூரின் பெயர். அங்குதான் இவர் பிறந்தார்.

அடிப்படை வசதிகளை இயற்கையாக மட்டுமே கொண்டிருந்த அந்தக் கிராமத்திற்கு, பம்பைமடு என்று ஏன் பெயர் வந்தது என்று கேட்டால் சொல்லி விளக்கக்கூடிய ஒருவர் இவரது தந்தையார் மட்டுமே. அவரது பெயர் **நாகலிங்கம்.**

அவர் படித்தது 5ம் வகுப்பு வரை தான். ஆனால் வில்லி பாரதப் பாடல்களில் அவருக்கு பல பாடல்கள் மனப்பாடம். இராமாயணத்திலும் பல பாடல்கள் மனப்பாடம். நளவெண்பா, நைடதம், அரிச்சந்திர புராணம் என்பவற்றோடு பல தனிப் பாடல்களும் அவருக்கு மனப்பாடம். நான்காம் ஆண்டிற்கு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

அவரது ஊரிலும், அவரது அயற்கிராமமாக இருக்கும் சாஸ்திரி கூழாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்திலும், பிள்ளையார் புராணத்திற்குப் பயன் சொல்லுவது (புராண படனம்) அவர்தான். சில கவிதைகளும் எழுதியிருக்கிறார்.

மிகவும் நயமாக பாடல்களைப் பாடி, பாடல்களில் உள்ள சிறப்புக்களை எடுத்து விளக்குவார். மகாபாரதக் கதையை அவர் சொல்லும்போது, தான் நேரே பார்த்துக்கொண்டு நின்றது போல மிகவும் உணர்வு பூர்வமாக சுவையாகச் சொல்லுவார்.

வெள்ளை வேட்டியைத் தவிர வேறெந்த உடுப்பையும் வீட்டிலுங்கூட உடுக்க மாட்டார். தலைக்கு மேலால் கழற்றும் வெள்ளைச் சேட்டு (நைசனல் போல) வெள்ளைச் சால்வை அணிவது வழக்கம். நல்ல சிவந்த நிறம். நல்ல உயரம்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்றால் அவரைத் **தமிழ்ப் பண்டிதர்** என்றுதான் அழைப்பார்கள். தோற்றம், உடுப்பு, அறிவு, பண்பாடு, அதன் வெளிப்பாடு யாவும் அவரை ஒரு பெரிய தமிழ்ப் பண்டிதராகத்தான் பார்ப்பவர்களுக்குக் காட்டும்.

காலையிலே நித்திரையால் எழும்புவது தொடக்கம், மாலை நித்திரைக்குச் செல்வது வரை ஏதாவது பழந்தமிழ் இலக்கியப் பாடலை முணு முணுத்து ராகம் பாடிக்கொண்டுதான் இருப்பார்.

இவரது மூத்த சகோதரர் **நடராஜா** அவரிடம் கேட்டு சில பாடல்களை ஒரு கொப்பியில் எழுதிப் பாடமாக்கத் தொடங்கினார். இவருக்கும் அந்தப் பழக்கம் தொடங்கியது.

இவரது வீட்டில் இவரோடு எட்டுப்பேர் பிள்ளைகள். ஆறு பேர் ஆண்கள். இரண்டு பேர் பெண்கள். வீட்டில் ஆண்களுக்குள்ளே இவர் தான் கடைக்குட்டி. இவருக்குக் கீழே ஒரு தங்கை. இவர் ***04.12.1953*** இல் பிறந்தார்.

ஊரிலுள்ள யாவருக்கும் சாதகம் குறித்துக் கொடுப்பது இவரது தந்தையார்தான். நாள் பார்த்துக் கொடுப்பதும், ஊரிலும் பக்கத்து ஊர்களிலும் வீட்டு நிலையம், கிணற்று நிலையம் என்பவற்றை எடுத்துக் கொடுப்பதும் இவருடைய தந்தையார் தான். அதற்காகப் பணம் எதுவும் பெறுவதில்லை.

பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும்போது எண் சோதிடப்படியும், பஞ்சாங்கம் பார்த்து நட்சத்திரப்படி முதல் எழுத்து பார்த்தும் வைப்பதுதானே பொது வழக்கம்.

ஆனால் இவரது தந்தையார், கிரக நிலைகளை ஆராய்ந்து, அதன் தன்மைக்கு ஏற்ப, பிள்ளைகளுக்குப் பெயர் வைத்திருந்தார். அதன்படி இவருக்கு வைத்த பெயர் **தருமராசா**.

ஆனால் இவரது பிறப்புச் சான்றிதழில் **Dharmadasa** என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதை உரிய முறையில் மாற்றுவதற்கு வழிதெரியாத நிலையில் சத்தியக் கடுதாசி மூலம் பாடசாலையில் சரியான பெயர் பதிவு செய்யப்பட்டது.

இத்தனைக்கும் பதிவு செய்தவரின் பெயர் நடராஜா என்பது தான் வேதனைக் குரிய விடயம்.

இவர் க.பொ.த.சாதாரண தர வகுப்புப் படிக்கும் போது, பிறப்புச் சான்றிதழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரை மாற்ற முயன்ற போது, சிங்களப் பெயர் இந்த நாட்டில் மிகவும் பயன்படும், அதனால் மாற்ற வேண்டாம் என்று பலர் இவரின் தந்தையாரிடம் ஆலோசனை கூறினர்.

இவரின் தந்தையார் மறுத்து விட்டார். இவரும் தமிழ்ப் பெயரே வேண்டும் என்று கூறிவிட்டார். பின் இவரது பெயர் பிறப்புச் சான்றிதழில் மாற்றப்படும் போது **Tharmarajah** என எழுதப்பட்டது. அதனால் பாடசாலையில் **தர்மராஜா** என பதியப்பட்டது. இவரின் தாயாரின் பெயர் **நல்லம்மா**.

இவருக்கு தருமராசா என்று பெயர் வைத்ததற்கு இவருடைய தந்தையார் கூறிய காரணம் வியப்பானது. இவர் அதுபற்றிக் கேட்டபோது அவர் சொன்னாராம்.

"உன்ர கிரக நிலைப்படி உனக்கு ஒன்பதில வியாழன் நிக்குது, அது புண்ணியவான்களுக்குத்தான் அமையும். நீ ஒரு தர்மவானாக இருப்பாய்" என்று. அது மிகவும் உண்மை.

இலக்கியப் பாடல்கள் மட்டுமன்றி சோதிட, வைத்தியப் பாடல்கள் பலவும் அவருக்கு மனப் பாடம். இவரது தந்தையார் சோதிட, இலக்கிய, சமய அறிவு நிரம்பக் கொண்டிருந்தவர்.

சாதகம் பார்த்துப் பலன் சொல்லும்போது ஆதாரத்திற்காகச் சாதகாலங்காரப் பாடல்களை சொல்லிக் காட்டுவார். அது கேட்பவர்களை வியப்பில் ஆழ்த்தும்.

முழுக்க முழுக்க தமிழ்ச் சைவ விவசாயக் குடும்பங்களையே கொண்டிருந்தது அக்கிராமம். சாதாரண விவசாயியாகிய இவரின் தந்தையார் தனது எட்டுப் பிள்ளைகளில் ஒரு பெண் பிள்ளை உட்பட ஐந்து பிள்ளைகளை க.பொ.த.சாதாரண தரம்வரை கற்பித்தார். இரண்டு பிள்ளைகளை பல்கலைக்கழகம் அனுப்பிப் படிப்பித்தார்.

இவரது ஊரிலிருந்த அ.த.க.பாடசாலையின் நிலம், இவரது தாயாரின் தாய் வழிப் பாட்டனின் அன்பளிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இவரது தந்தையார் தனது கிராம முன்னேற்றத்திற்காக பல பதவிகளை கிராம மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் நகர மட்டத்திலும் வகித்திருக்கிறார்.

இவர் பம்பைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு வரை கல்வி கற்ற பின் ஆறாம் ஆண்டில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத் திற்குக் கல்வி கற்கச் சென்றார். இப்போது அது தமிழ் மத்திய மகாவித்தியாலயம். தேசியப் பாடசாலை. பின் இங்கு தான் கணித ஆசிரியராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றார்.

சகோதரர்கள் யாவரும் பல இடங்களிலும் படித்துக் கொண்டிருந்தனர். விடுமுறையில் இவரும் இவரது சகோதரர்களும் ஒன்றாக வீட்டில் நின்றால் வீடு திருவிழாக் கோலம் கொள்ளும். யுத்த களமாகவும் இருக்கும்.

**பாட்டுக்குப் பாட்டு :-**

இவர் தனது இலக்கியச் சூழல் பற்றிப் பின்வருமாறு சொல்கிறார்

"மார்கழி விடுமுறையில் எங்கள் வயலில் களை பிடுங்கச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு பத்து ஏக்கர் வரையில் நெற்காணி இருந்தது. பெரிய நிலச் சுவாந்தர்கள் யாரும் எம் ஊரில் இல்லை. எமது குடும்பமும் சாதாரண விவசாயக் குடும்பம் தான்.

எமது வயலில் களை பிடுங்கிக் கொண்டிருக்கும்போது எனது தந்தையார் ஒரு போட்டியை வைப்பார். போட்டி என்ன தெரியுமா? "பாட்டுக்குப் பாட்டு." ஆச்சரியமாக இருக்கிறதா.? நான் சொல்வது 1966 ற்கு முந்திய கதை. பாட்டுக்குப் பாட்டு என்றால் சினிமாப் பாட்டுக்குப் பாட்டு அல்ல.

பழந்தமிழ் இலக்கியப் பாட்டு ஒன்றை அப்பா பாடி முடிப்பார். அவர் பாடிய பாட்டின் இறுதிச் சொல்லை முதற் சொல்லாகக் கொண்டு யாராவது பாடல் பாட வேண்டும். அந்தாதி முறை என்று சொல்லலாம். யாராவது பாடுவோம். ஒருவரும் பாடாது விட்டால் அவரே ஒரு பாடல் பாடுவார்.

வயலில் களை பிடுங்கும் போதே, எமக்குத் தமிழ் அறிவையும், தமிழ் இலக்கிய நாட்டத்தையும் ஏற்படுத்திய அவரது கல்வித் திட்டத்திற்கு நிகராக எந்தக் கல்வித் திட்டத்தையும் என்னால் சொல்ல முடியாது.

மாலையில் வீட்டுக்கு வந்தபின் நாங்கள் எல்லோரும் தீவிரமாக பழந்தமிழ்ப் பாடல்களை ஆயத்தப்படுத்துவோம். மறுநாள் பாட்டுக்குப் பாட்டு இன்னும் கலகலப்பாகும். பாராட்டு அமோகமாகக் கிடைக்கும். அம்மாவும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்.

அம்மா மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தவர். அம்மாவின் தாயார் **பம்பைமடுவைச்** சேர்ந்தவர். அம்மாவின் தந்தையார் **யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவிலைச்** சேர்ந்தவர். அங்குதான் அம்மா படித்தார்.

அப்பாவின் தாய் **இரணை இலுப்பைக்குளப்** பகுதியைச் சேர்ந்த **ஆவரங்குளத்தைச்** சேர்ந்தவர். அப்பாவின் தந்தையார் **வவுனியா மருக்காரம் பளையைச்** சேர்ந்தவர். இருவரும் வன்னியைச் சேர்ந்தவர்கள்.

எனது தந்தையார் வவுனியா, இலங்கைக் கிறிஸ்தவத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் [C.C.T.M.S] ஐந்தாம் ஆண்டுவரை கல்வி கற்றார். தற்போது இப்பாடசாலையின் பெயர் இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலயம்.

தான் நாலாம் ஆண்டில் **கம்ப இராமாயணம்** கற்றதாகவும், ஐந்தாம் ஆண்டில் **வில்லி பாரதம்** கற்றதாகவும், பின் ஒரு வருடம் நாலாம் ஆண்டுக்குக் கற்பித்ததாகவும் சொல்லுவார். அப் பாடசாலையில் அதற்குமேல் படிக்க வழியில்லை. வவுனியாவில் அதற்குமேல் வகுப்பு இல்லை. அவரது தமையனார் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் படித்தவர்.

அக்கா, தங்கைக்கு இந்த வாய்ப்பு இல்லை. அவர்கள் வயல் வேலைகளுக்கு வருவதில்லை. இப்படித் தொடங்கியது எனக்குப் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் ஆர்வமும்.

பம்பைமடு என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்கு என் தந்தையார் கூறிய காரணம் என்ன தெரியுமா? **பம்பை** மரங்கள் குளத்தில் நின்றதால் தான் பம்பைமடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயர் வந்தது என்றார். ஆனால் பம்பை மரங்கள் நாங்கள் அறிய எங்கள் குளத்தில் இல்லை. அப்படி ஒரு மரம் இருப்பதாகவே எங்களுக்குத் தெரியாது.

கம்ப இராமாயணத்தில் **பம்பைப் படலம்** என்றொரு படலம் உண்டு. பம்பை நதி என்று ஒரு நதி பற்றி கம்பர் பாடியிருக்கிறார். அந்த நதிக்கரையில் பம்பை மரங்கள் நின்றதால் தான் அந்த நதிக்கு அந்தப் பெயர் வந்தது என்று ஆதார பூர்வமாக விளக்கி, பம்பைமடுக் குளத்திலும் அப்படி மரம் நின்றிருக்கும் என்பார். (மடு - நீர் நிலை) எனது **இலக்கியத்தேறல்** நூலை **பம்பைமடு**விற்கே சமர்ப்பணம் செய்தேன்.

இதை எங்கள் மட்டத்தில் மட்டுமல்ல படித்தவர்கள், அதிகாரிகள் கலந்து கொள்கிற கிராமத்துக் கூட்டங்களிலும் அழகாகச் சொல்லி விளக்குவார். இதை ஏன் விரிவாகச் சொல்கிறேன் என்றால், கணித விஞ்ஞான மாணவனாகக் கல்வி கற்று, கணித ஆசிரியராகக் கடமை புரியும் எனக்கு, பழந்தமிழ் இலக்கிய ஆர்வம் எப்படி வந்தது என்பதற்கு இது தேவை.

ஒரு குழந்தைக்குத் தந்தையே சிறந்த குரு என்பது, என்வரையில் மிகப் பொருத்தமே." என்கிறார்.

**கல்வி – கலை – இலக்கியம்:–**

க.பொ.த. சாதாரண தர வகுப்புக்கு இவர் வந்த போது, ஒன்பதாம் வகுப்பிலேயே இவரைக் கெட்டிக்கார மாணவனாகக் கருதி கணிதத் துறையில் பிரித்து விட்டார்கள்.

இவர் வகுப்பில் முதலாம் பிள்ளையாக வரும் மாணவனாக இருக்கவில்லை. இரண்டாம், மூன்றாம், நான்காம் பிள்ளையாகத்தான் வந்தார்.

தூய, பிரயோக கணிதங்கள், பௌதிகவியல், இரசாயனவியல், மெக்கானிக்கல் றோயிங், தமிழ், இந்துசமயம், ஆங்கிலம். ஆகிய எட்டுப் பாடங்களைக் கற்றார். பொறியியல் துறைக்குரிய பாடங்கள் இவை.

தமிழ் ஒரு பாடம். தமிழிலக்கியம் கற்க முடியாது. தமிழ், இந்து சமயம், கணித பாடங்களில் இவர் அதி கூடிய புள்ளிகள் வாங்கும் மாணவன் என்பது உண்மைதான். இருப்பினும் இவரது ஆர்வம் இலக்கியத்திலேயே இருந்தது.

இவர் 6, 7, 8, ம் வகுப்புகளில் சங்கீதம் படித்தார். பின் அந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. இருப்பினும் இவருக்கு அப்போது **பௌதிகவியல்** பாடம் கற்பித்த **திரு.நா.சண்முகானந்தா** ஆசிரியர் இவருக்கும் நடனம் கற்பித்தார். மேடைகளில் காவடி நடனக் குழுவில் ஒருவனாக ஆடியிருக்கிறார். பரத நாட்டியமும் சிலவாரங்கள் கற்றார். இது பாடத்திட்டத்திற்குப் புறம்பாகவே நடந்தது.

9ம் வகுப்பில் விவேகானந்த சபை நடாத்திய சைவ சமயப் பரீட்சையில் **முதலாம் பிரிவில்** சித்தி எய்தினார். பத்திரிகைகளில் இவரது பெயரும் வந்தது. மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டார். பத்திரிகையில் முதன் முதல் இவரது பெயர் வெளிவந்தது அப்போதுதான்.

முதலாம் பிரிவில் சித்தி எய்திய இவருக்கு பரிசாக வழங்கப்பட்ட புத்தகம் என்ன தெரியுமர்? **கலிங்கத்துப் பரணி!** பதினைந்து வயது முடிந்த பருவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசாகக் கிடைத்த கலிங்கத்துப் பரணியில் கடை திறப்புப் பாடல்களைப் படிக்கப் படிக்க அதிலிருந்த காமச் சுவை கலந்த இலக்கியச்சுவை இவரைக் கவிஞனாக்க முயன்றது.

ஓரிரு கவிதைகளை எழுத முயன்றார். பாடசாலையில் மாணவ மன்றக் கூட்டங்களில் பேச முயன்றார். முதற் தடவையாக மனனமாக்கி ஒரு விஞ்ஞானியைப் பற்றிப் பேசினார்.

பதினாறு வயது நடந்து கொண்டிருந்த பொழுது, வருடாந்த நவராத்திரி விழாவில் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் நாற்பது நிமிடங்கள், கையில் எந்தக் குறிப்புமின்றி, இலக்கியம் கலந்து காளமேகப் புலவரின் சிலேடைப் பாடல்களோடு சேர்த்து சுவாரஸ்யமாகச் சமயச் சொற்பொழி வொன்றை ஆற்றினார். இவரைப் புலவர் என்றே இவரது நண்பர்கள் அழைத்தனர்.

இவருக்கு மட்டுமல்ல யாவருக்குமே ஆச்சரியம்தான். அதே விழாவில் வில்லுப்பாட்டொன்றை எழுதித் தயாரித்து தனது நண்பர்களோடு மேடையேற்றினார் பேச்சு, கலை இலக்கியப்பணி அப்போது தொடங்கியது. பதினேழு வயதில் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். மாணவர் மன்றத்தின் செயலாளராக இருந்தார்.

இவரது மூத்த சகோதரர் **திரு.நா.சேனாதிராசா** தமிழரசுக் கட்சி அரசியல் மேடைகளிலும் வேறு கூட்டங்களிலும் பேசத் தொடங்கியிருந்ததால் இவருக்கு பேச்சில் ஆர்வம் ஏற்பட்டது.

## வாசிப்பு - சுவாசிப்பு :-

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மார்கழியில் முடிந்தால், அதன் பெறு பேறுகள் வந்து சேர குறைந்தது ஏழு, எட்டு மாதங்களாவது பிடிக்கும்.

வவுனியா நகரில் தங்கியிருந்து படித்த இவர் பரீட்சை முடிந்து பம்பைமடுவில் வீட்டில் இருந்த நேரத்தில், வீட்டில் இருந்த தந்தையாரின் இராமாயணப் புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார்.

கம்பராமாயணத்து சுந்தர காண்டமும், கிஷ்கிந்தா காண்டமும் வீட்டில் இருந்தன. வை.மு.கிருஷ்ணமாச்சாரியினது உரையுடன் அமைந்த புத்தகங்கள் அவை. கிடைக்க முடியாத சொத்து.

வீட்டுக்கு வந்து செல்லும் படித்தவர்கள் இவரை இத்தகைய புத்தகங்களை வாசிக்க வேண்டாமென்று கூறினர். அவர்களின் விருப்பம் இவர் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதாக இருந்திருக்கலாம். (இப்போது இவரது மகன் பொறியியல் துறையில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.) பலரும் ஏச,ஏச இவர் கேட்காமல் அப்புத்தகங்களில் ஈடுபட்டார்.

க.பொ.த.சாதாரணப் பெறுபேறு சாதகமாக அமையவில்லை. மீண்டும் பரீட்சைக்குத் தோற்றினார். மெக்கானிக்கல் றோயிங் பாடம் கற்பிக்கப் படாமையால் அப் பாடத்திற்குப் பதிலாக விவசாய பாடத்தைச் சுயமாகப் படித்துப் பரீட்சை எழுதினார்.

பரீட்சைப் பெறுபேற்றுக்காகக் காத்திருந்தார். வாசிப்பு மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது.வாசிப்பு, வாசிப்பு, வாசிப்பு. அதே காலத்தில் இவரது மூத்த சகோதரர் **திரு.நா.தியாகராசா பீ.ஏ.** பட்டம் பெற்று விட்டு வேலை கிடைக்காமல் காத்திருந்தார். அவர் வவுனியா நூலகத்தில் இருந்து சரித்திர நாவல்களைக் கொண்டு வந்து வாசிப்பார்.

பொன்னியின் செல்வன், சிவகாமி சபதம், பார்த்திபன் கனவு முதலான கல்கியின் நாவல்களும், வெற்றித் திருநகர், வேங்கையின் மைந்தன், கயல்விழி முதலான அகிலனின் நாவல்களும், கடல் புறா, ஜலதீபம், ராஜமுத்திரை முதலான சாண்டில்யனின் நாவல்களும், கோ. வி. மணிசேகரன், கௌசிகன் முதலான பலரின் சரித்திர நாவல்களும் இவருக்கும் பெருவிருந்தாகின.

இதே காலத்தில் இவரது இன்னொரு சகோதரர் **திரு.நா.வில்வராசா** சமூக நாவல்களைக் கொண்டு வந்து வாசிப்பார். அவர் கொண்டு வந்த பொன்விலங்கு,குண்டு மல்லிகை, போராட்டங்கள், பெண்மனம், அலை ஓசை, கரித்துண்டு, பெற்ற மனம் என, பார்த்த சாரதி, ரா.சு.நல்ல பெருமாள், லக்சுமி, வரதராஜன், கல்கி, அகிலன், மகரிஷி முதலானோரின் பல சமூக நாவல்கள் இவரின் இலக்கியப் பசிக்குப் பெருந்தீனிகளாயின.

இவரது இன்னொரு சகோதரர் **திரு.நா.நடராசா** வீரகேசரி நாவல்கள் வாசிப்பதில் பெரும் விருப்பம் கொண்டவர். எழுபதுகளில் வெளிவரத் தொடங்கிய வீரகேசரிப் பிரசுர நாவல்கள் யாவும் வீட்டுக்கு வந்து சேர்ந்து விடும். அவருக்கு முன்னால் அவற்றை இவர் வாசித்து முடித்து விடுவார்.

இத்தகைய வாய்ப்பு வேறு யாருக்கும் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. இவைகளைப் படித்துக்கொண்டு இலக்கிய இன்பத்தில் மூழ்கித் திளைத்திருந்த சமயத்தில் க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறு வந்தது. பாடசாலையில் முதல் மாணவனாகச் சித்தி எய்தினார்.

க.பொ.த.உயர்தர விஞ்ஞானம் படிக்க வவுனியாவில் பாடசாலை இல்லை. கலை வகுப்புக்கள் தொடங்கி இருந்தன. கணித விஞ்ஞானப் பாட வகுப்புக்கள் அப்போது இல்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, முதலான பெரிய பாடசாலைகளில் நேர்மையாக முயன்று அனுமதி கிடைக்காததால், சிபார்சு மூலம் இன்னுமொரு பெரிய பாடசாலையான சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அனுமதி கிடைத்தது.

இவரது சகோதரர் திரு.தியாகராசா உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் சென்றது அங்கிருந்து தான். அதுவும் இவருக்கு அனுமதி கிடைக்க ஒரு காரணம் தான். அத்தோடு சாவகச்சேரியில் (நுணாவில்) இருந்த இவரது தாய்வழி மாமன் முறை உறவினரான ஆசிரியர் திரு.குருசாமி அவர்களின் சிபார்சும் அதற்கு ஒரு காரணம். 1971ல் அங்கு சென்று சேர்ந்தார்.

அங்கே படித்த காலத்தில் அங்குள்ள நூலகத்தில் இருந்த பழந்தமிழ் இலக்கியப் புத்தகங்களில் பலவற்றைத் தூசு தட்டிச் சுவைத்தார். பாடசாலையில் கவியரங்குகளில் கவி பாடினார். மாணவ மன்றக் கூட்டங்களில் பேசினார். மாணவர் மன்றம், விடுதி மாணவர் மன்றம் ஆகியவற்றின் தலைவராக இருந்தார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் அப்போது கடமையாற்றிய **திரு.எஸ்.தில்லைநடராஜா** (உடுவை எஸ்.தில்லை நடராஜா) அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவொன்றில், கவியரங்கில் வன்னியூர்க் கவிராயரோடு கலந்து கவி பாடினார்.

க.பொ.த. உயர்தரம் முடித்த பின் பல்கலைக்கழகத் தெரிவை எதிர்பார்த்துக் காத்திருந்த காலத்தில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். எல்லாத் துறை நூல்களையும் நிறையவே வாசித்தார்.

வவுனியாவில் கல்வி கற்ற காலத்தில் விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வமாக இருந்தார். விளையாட்டுப் போட்டிகளில் பல பரிசுகள் பெற்றார். கால் பந்தாட்டக் குழு (Second11), கரப் பந்தாட்டக்குழு (Second 11) ஆகியவற்றில் தலைமைப் பதவி வகித்தார். இல்ல விளையாட்டுப் போட்டியின்போது இளங்கோ இல்லத்தின் செயலாளராகப் பதவி வகித்தார்.

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற காலத்திலும் விளையாட்டுப் போட்டிகளில் பல பரிசுகள் பெற்றார். பாடசாலையின் கால் பந்தாட்டக் குழுவிலும் இடம் பெற்றார்.

**எழுத்து முயற்சி:-**

க.பொ.த.உயர்தரப் பெறுபேறு போதாமையால் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றினார். பரீட்சை முடிந்து வீட்டுக்கு வந்தபின் மீண்டும் வாசிப்பில் சுகங்கண்டார்.

வவுனியாவில் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து நாலு மாத பயிற்சி பெற்றார். இக்காலத்தில் தான் **தமிழமுது** வெளியீடாக **சரவணையூர் சுகந்தன்** தொகுத்து வெளியிட்ட **சுவடுகள்** என்ற புதுக் கவிதைத் தொகுப்பில் இவரது **எடுப்பதோ பிச்சை** என்ற புதுக்கவிதை இடம் பெற்றது. **வன்னி வளவன்** என்ற புனைபெயரில் இக் கவிதையை இவர் எழுதியிருந்தார். 24.04.1975.

1974 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தில் இரண்டாவது தொகுதி மாணவனாக (2nd Batch) விஞ்ஞான பீடத்தில் கணித புள்ளி விபரத் துறையில் பட்டப் படிப்பு படிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

முதலாம் வருடம் வட்டுக்கோட்டையில் இருந்த யாழ்ப்பாணக் கல்லூரி வளவில் விரிவுரைகள் இடம்பெற்றன. அங்கேயே தங்கியிருந்து கல்விகற்றார். **(1975)** அந்த ஆண்டு நடைபெற்ற சரஸ்வதி பூசையின் போது வில்லுப் பாட்டு எழுதி நண்பர்களோடு சேர்ந்து பாடினார்.

அக்காலத்தில் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் நினைவாக இயங்கும் தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலைய நூலகத்தின் **கதிரொளி** என்ற கை எழுத்துச் சஞ்சிகையில் **மதன்** என்ற புனை பெயரில் பல கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும், எழுதினார். அவர்களின் ஆண்டு விழாவிலும் பேசியிருக்கிறார்.

பல்கலைக் கழக வளாக மலர்கள் பலவற்றில் கவிதைகள், சிறுகதை, இலக்கியக் கட்டுரைகள் எழுதினார். வளாக தமிழ் மன்றத்தின் முதலாவது ஆண்டு மலரான **செந்தழல்** என்ற மலரில் "1976-1977" இவரது **இலக்கியத்தேறல்** என்ற கட்டுரை **நா.தர்மராசா.** என்ற பெயரில் வெளிவந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் பல கவியரங்குகளில் பங்கு பற்றினார். அங்கிருந்து வவுனியாவிற்கு வந்தும் கவியரங்குகளில் கலந்து கொண்டார்.. பல பட்டி மண்டபங்களில் பேசியிருக்கிறார். பல ஆலயங்களிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கிறார்.

இன்று மிகவும் பிரபலமாக விளங்கும் **கம்பவாரிதி இ.ஜெயராஜ்** கம்பன் கழகத்தைப் புதுப்பிப்பதற்கு முன்பே பேச்சுத் துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அவர் யாழ். இந்துக் கல்லூரியில் க.பொ.த.உயர்தர (கணிதத் துறை) மாணவனாக இருந்த காலம். சண்டிலிப்பாயில் நடை பெற்ற பட்டிமண்டபம் ஒன்றிற்கு இவரையும் அழைத்துச் சென்றிருக்கிறார். வேறும் சில பட்டி மண்டபங்களில் அவரோடு பேசியிருக்கிறார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், திரு.ஆ.சிவநேசச்செல்வன் ஆகியோரோடு இவரும் இவரது சக நண்பர்களான திரு.மு.திருநாவுக்கரசு, (பிரபல பேச்சாளரும், ஆய்வாளரும். இன்று தமிழகத்தில்.) திரு.சி.சிவலிங்கராஜா. (இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஒய்வு நிலைப் பேராசிரியர்.) திரு.க.நாகேஸ்வரன். (இன்று சப்பரகமுவ பல்கலைக் கழகத்தில் மூத்த விரிவுரையாளர்.) ஆகியோரும் பண்டாரவளைப் பாடசாலை ஒன்றில் நடை பெற்ற முத்தமிழ் விழாவில் பட்டி மண்டபம் ஒன்றில் பேசுவதற்காகச் சென்று பேசியிருக்கிறார்கள்

இந் நிகழ்வை ஏற்பாடு செய்தவர் திரு.க.கமலநாதன். (இன்று ஓய்வு நிலைப் பீடாதிபதி யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியல் கல்லூரி)

யாழ்ப்பாண வளாகத்தின் கால் பந்துக்குழுவில் இரண்டு வருடங்கள் விளையாடியிருக்கிறார்.

யாழ்ப்பாண வளாகத் தமிழ் மன்றம் நடாத்திய முதலாவது முத்தமிழ் விழாவில் **அமரேந்திரா** என்ற பெயரில் ஒரு புரட்சிகர நாடகத்தை எழுதி மேடையேற்றினார். திரு.ச.பேரின்பராசா இயக்கினார். நம் நாட்டுப் பிரச்சினையை அரச நாடகமாக்கி, கனல் தெறிக்கும் வசனங்களை எழுதி நண்பர்களோடு தானும் நடித்தார்

இந்நாடகம் **யாழ். அரியாலை நாடக மன்றத்தினாலும்,** திருகோணமலை **மூதூர் சேனையூர் நாடகமன்றத்தின்** சார்பில் **பால.சுகுமாரினாலும்** பின்பு மேடை யேற்றப்பட்டது. பால.சுகுமார் பின்பு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரை யாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தற்போது இலண்டனில்)

அப்போது வளாகத் தலைவராக இருந்த **பேராசிரியர் க.கைலாசபதி** முதல் சாதாரண சிற்றூழியர்வரை அத்தனை பேருடனும் அறிமுகமானார்.

அடுத்த ஆண்டில் யாழ்.வளாகத் தமிழ் மன்றத்தின் தலைவரானார். தமிழ் மன்றம் சிறப்பாக இயங்கியது. **தமிழ் மன்றத்தின் கீதத்தை** எழுதினார். இவர் எழுதிய **முதல் கீதம்** இதுவே.

**அலைக்குமிழ்** என்ற சமூக நாவலை (1977) எழுதினார். **செங்கையாழியானிடம்** சென்று அந் நாவல் பற்றி அபிப்பிராயம் கேட்டார். அவர் கூறிய திருத்தங்களுடன் மீண்டும் நாவலைப் புதிதாக எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரிப் பிரசுரமாகக் கொண்டு வருவதற்காக வீரகேசரி நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தார். முயற்சி வெற்றியளிக்க வில்லை. பின் செங்கையாழியான் அந் நாவலை மித்திரன் பத்திரிகையில் தொடராக வெளியிடலாம் என ஆலோசனை கூறி தானே அதற்குரிய முயற்சியையும் செய்வதாகக் கூறினார்.

**சிரித்திரன்** ஆசிரியர் **திரு.சி.சிவஞானசுந்தரம்** அவர்களின் தொடர்பு அப்போது ஏற்பட்டதால் நாவலை நூலாக்கும் முயற்சியைக் கைவிட்டார். பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார்.

செங்கையாழியான் அந்நாவலை **வரதர்** வெளியீடாகக் கொண்டுவரலாம் என ஆலோசனை கூறி நாவலை இவரிடம் இருந்து வாங்கி வரதரிடம் கொடுத்தார்.

வரதர், நாவலை வாசித்து எழுத்துப் பிழைகள் சிலவற்றைத் திருத்தி அச்சிடத் தயாரானார்.

வரதரின் நூல் வெளியீட்டு முயற்சிகள் பொருளாதாரத் தோல்வியினால் நின்று போய்விட்டன. அதனால் அவர், இவரை அழைத்து தனது இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தார். நாவலைப் பாராட்டினார்.

மீண்டும் நூல் வெளியீடு தொடங்கினால் இவரது நாவலையே முதல் நூ லாக வெளியிடுவதாக வாக்குறுதி அளித்தார். **கலாநிதி.அ.சண்முகதாஸ்** அவர்களின் அணிந்துரையோடு நாவல் முடங்கிக்கிடந்தது.

முப்பத்தி இரண்டு வருடங்களின் பின் இவரது இந் நாவலை வாசித்த எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நூலாக்கி வெளியிட விரும்பினேன். அதன் முதல் முயற்சியாக, இந் நாவலை இவரது அனுமதியோடு **வீரகேசரி வாரமலர் கதம்பம்** பகுதிக்கு அனுப்பிவைத்தேன். 24-01-2010 முதல் 04-07-2010 வரை **இருபத்திநான்கு கிழமைகள்** இந்நாவல் வெளிவந்து. பெரும் பாராட்டைப் பெற்றது. பின் 2011 இல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பிரியா பிரசுரத்தின் 63 ஆவது நூலாக இந் நாவலை வெளியிட்டேன்.

முப்பத்தினாங்கு வருடங்களின் பின் நூலாக வெளிவந்த இந் நாவல் தேசிய சாகித்திய மண்டல விருதுச் சிறப்புச் சான்றிதழ், கொடகே தேசிய சாகித்திய விருதுச் சான்றிதழ், இலங்கை இலக்கியப் பேரவைச் (யாழ் இலக்கிய வட்டமும்) சான்றிதழ், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத் தமிழியல் விருது, ஆகிய வற்றைப் பெற்றது. இந் நாவலை இவர் செங்கை ஆழியான் அவர்களுக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

1977 இன் முற் பகுதியில் அலைக்குமிழ் நாவல் எழுதப்பட்டது. அதே ஆண்டின் நடுப்பகுதியில் **மலர்ந்தும் மலராத** என்ற நாவலை எழுதினார். இந் நாவல் இன்னும் நூல் வடிவம் பெறவில்லை.

## போராட்டங்கள்:-

யாழ் வளாகத்தின் தமிழ் மன்றத் தலைவராக இருந்த அதே காலத்தில், வளாகத்தின் இந்து மன்றத்தின் குழு உறுப்பினராகவும், அனைத்து வளாக மாணவ மன்றத்தின் துணைத் தலைவராகவும் இருந்தார். ஈழத் தமிழ் மாணவ மன்றத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகவும் இருந்தார் திரு.இ.ஓங்காரமூர்த்தி பொருளாளராக இருந்தார். திரு. ஓங்காரமூர்த்தி யாழ் மத்திய கல்லூரியில் அதிபராக இருந்து தற்போது ஓய்வு நிலையில் இருக்கிறார்.

தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கவும், வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மல்லிகைச் செடிவளர்க்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி **போர்** என்ற சிறு நூல் ஒன்றையும் இவர்கள் வெளியிட்டனர். தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார வளம் பற்றிப், பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் உரையாற்றினர்.

அவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காகப் பாடுபட்டனர். யாழ்ப்பாணத்தில் **திரு.வெ.யோகேஸ்வரனை** ஆதரித்தும், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தும் இறுதிக் கூட்டத்தை மாபெரும் எழுச்சிக் கூட்டமாக யாழ் கோட்டை மைதானத்தில் நடாத்தினர். இவரே அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

சாதி ஒழிப்பு நோக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி, உடுப்பிட்டித் தொகுதியின் வேட்பாளராக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த **திரு.இராசலிங்கத்தை** நிறுத்தியிருந்தது.

இவரது தலைமையில் யாழ் வளாக மாணவர்கள் உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு.இராசலிங்கத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்தனர்.

மலையகத்து **டெல்டாத் தோட்டம், டெவன் தோட்டம்** ஆகியவற்றில், நிலங்களை சிங்களவர்களுக்குக் கொடுத்து, நீண்டகாலமாக அங்கு வாழ்ந்து வந்த மலையகத் தமிழரை அரசாங்கம் ஏமாற்றிய போது அங்கு கலவரம் தொடங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட **சிவனு லக்ஷ்மணன்** என்ற தோட்டத் தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார். லயங்கள் பல எரிக்கப்பட்டன. மக்கள் அகதிகளாக்கப் பட்டனர்.

யாழ்ப்பாண வளாகத்து மாணவர்கள் இவரது தலைமையில் போராட்டத்தில் இறங்கினர். திருநெல்வேலியிலிருந்தும் வட்டுக்கோட்டையிலிருந்தும் மாணவர்கள் யாழ்ப்பாண பஸ் நிலையத்தைச் சென்றடைந்தனர்.

கால் நடையாக ஊர்வலமாக யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்றனர்.அங்கு ஆர்ப்பாட்டக் கூட்டம் நடத்தினர். அரசின் காட்டுமிராண்டித் தனமான செய்கையைக் கண்டித்தும், நீதி கோரியும் போராட்டம் நடத்தினர். யாழ் அரச அதிபர் வெளியில் சென்றிருந்ததால் மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மாணவர்களை முதன் முதல் வளாகத்துக்கு வெளியே அழைத்துச் சென்று அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர் இவரே.

வீடுவீடாகச் சென்று உடுப்புக்கள் சேகரித்து, இவரது தலைமையில் ஒரு குழு மலையகத்துக்குச் சென்று அவற்றைப் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான தந்தை **சா.ஜே. வே.செல்வநாயகம்** அவர்கள் மறைந்த போது வளாகத்தினுள் இரங்கல் கூட்டத்தை நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி ஊர்வலத்தின் போது இவரது தலைமையில், வளாக மாணவர்களோடு, அனைத்துப் பாடசாலை மாணவர்களும் அணி திரண்டனர்.

இவர் எழுதிய இரண்டு அஞ்சலிக் கவிதைகளையும், திரு.சி.சிவலிங்கராஜா, அறிஞர் அண்ணா இறந்த போது கலைஞர் கருணாநிதி பாடிய அஞ்சலிக் கவிதை போன்ற வகையில் அதே குரல் வளத்தோடு வாசித்தார்.

இவர்கள் ஒலி பரப்பிய கவிதைகளை அதே பாணியில் பலர் வாசிப்பதைக் கேட்டு, சூழலையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் இவர் உடனுக்குடன் கவிதைகளை எழுதிக் கொடுக்க சிவலிங்கராஜா அற்புதமாக வாசித்தார்.

இந்தக் கவிதைகள் தான்: **"செல்" "வா" என்று ஆணையிடாய்.** என்ற பெயரில் சிறிய கவிதை நூலாக இவரால் வெளியிடப்பட்டது (1977-12-17) இக்கவிதைத் தொகுப்பு நூலின் பிரதிகள் பெருமளவுக்கு எரித்து அழிக்கப்பட்டன. நாட்டு நிலை இவரது இந்நூலுக்கு இத்தகைய முடிவைத் தேடித்தந்தது. இவரது தந்தையாருக்கும், சகோதரர்களுக்கும் வேறு வழி தெரிந்திருக்கவில்லை.

இவர் யாழ் வளாகத் தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்த காலத்தில் **தேன் துளிகள்** என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. பல மாணவர்களின் ஆக்கங்கள் அச் சிறு நூலில் உள்ளன. **காத்திருந்தேன் வந்தாள்** என்ற தலைப்பில் **நா.தர்மராஜா** என்ற பெயரில் இவரது காதல் கவிதை மரபுக் கவிதையாக இடம்பெற்றுள்ளது.

**திரு.த.ம.தேவேந்திரனின்** "தீ" என்ற நூல் வெளியீட்டைத் தமிழ் மன்றம் மூலம் வேம்படி மகளிர் கல்லூரி ரிம்மர் மண்டபத்தில் நடாத்தினார். எதிர்க்கட்சித் தலைவர் **திரு.அ.அமிர்தலிங்கம்** அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பேராசிரியர் **சு.வித்தியானந்தன்** அவர்கள் தலைமை வகித்தார். திரு.த.ம.தேவேந்திரன் பின்பு வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் விளையாட்டுத் துறை விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

யாழ்ப்பாணத்து ஸ்டான்லி வீதியிலிருந்த கடைகளை இலங்கை அரசு தீவைத்துக் கொளுத்தியபோது, இவரது தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் திருநெல் வேலியிலிருந்து ஸ்டான்லி வீதி நோக்கி புறப்பட்டது.

படையினர் சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என்றும் வீணான உயிரிழப்பு ஏற்படும் என்றும் சில பேராசிரியர்கள் கூறி ஊர்வலத்தைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டதற் கிணங்கி பாதி வழியில் ஊர்வலம் கைவிடப்பட்டது.

இருப்பினும் இவரும், தமிழ் மன்றச் செயலாளர் **திரு.செ.சண்முகநாதனும்** மற்றும் சில நண்பர்களும் சென்று யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் **திரு.வெ.யோகேஸ்வரன்** அவர்களை அவரது வீட்டில் சந்தித்தனர்.

அவரது வீடு பலாலி வீதியில் வைத்திய சாலைக்கு எதிரில் இருந்தது. ஸ்டான்லி வீதிக்கடைகள் எரிவதை அங்கிருந்தே பார்க்கக் கூடியதாக இருந்தது. அவரது வீட்டில் அப்போதைய **எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம்** அவர்களும் அவரோடு இருந்தார். அவர்களோடு உரையாடியபோது அவர்கள் தமது இயலாமையை வெளிப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது யாழ் வளாகத்தில் கற்றுக் கொண்டிருந்த சிங்கள மாணவர்களைப் பாதுகாப்பதிலும் அவர்களது ஊர்களுக்கு அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதிலும் முக்கிய பங்காற்றினார்.

**பேராசிரியர் க.கைலாசபதிக்குப்** பின் வளாகத்தின் தலைவராக **பேராசிரியர் சு.வித்தியானந்தன்** அவர்களைக் கொண்டு வருவதற்காக எதிர்க்கட்சித்தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களிடம் இவரும் தமிழ் மன்றச் செயலாளர் திரு. செ.சண்முகநாதனும் சென்று வற்புறுத்தினர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைவராக நியமிக்கப் பட்டார். பின், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறியபோது பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களே முதல் துணை வேந்தராகவும் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பட்டபின், அவர்களைக் கொண்டு போராட்டம் நடாத்தி அவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுத்தார்.

இவரது இசைப்பாடல்கள் பல அப்போது அங்கு கற்றுக்கொண்டிருந்த மாணவர்களால் இசையமைக்கப்பட்டு பல மேடைகளிலும் பாடப்பட்டன. இசையமைத் தவர்களில் **உமாகாந்தனையும்** பாடியவர்களில் **மாணிக்கராஜா** என்பவரையும் இவர் நினைவு கூர்கிறார்

**"வவுனியாவில் காடைத்தனம்"** என்ற கட்டுரையே இவர் எழுதி பத்திரிகையில் முதல் வெளிவந்த கட்டுரையாகும். **மனிதன்** என்ற பத்திரிகையில் செப்டெம்பர் 1977இல் இது வெளிவந்தது. "த - ஜா" என பெயர் போடப்பட்டுள்ளது.

**செந்தழல்** என்ற தமிழ் மன்ற மலரின் இரண்டாவது இதழை தமிழ் மன்றப் பத்திராதிபர் **திரு.ச.பேரின்பராஜா** தயாரித்துக் கொண்டிருந்தார். இரண்டாவது முத்தமிழ் விழாவுக்கான முயற்சிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இனக் கலவரத்தின் பின் யாழ் வளாகத்தில் நடை பெற்ற முதலாவது ஒன்று கூடலின் போது, வளாக மாணவ மன்றத் தலைவர் தலைமை உரையை ஆங்கிலத்தில் ஆற்றினார். நிகழ்ச்சிகள் தமிழ் ஆங்கில மொழிகளில் அறிவிக்கப்பட்டு நடாத்தப்பட்டன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சு.வித்தியானந்தன் "சிங்கள மாணவர்கள் எவரும் இல்லாத தனித்தமிழ் மாணவர்களை மட்டுமே கொண்ட இவ்விழாவில் ஆங்கிலத்தின் அவசியமென்ன. தனித் தமிழிலேயே நடத்தலாமே" எனத் தனது தமிழ்ப் பற்றைப் புலப்படுத்தி ஆலோசனை வழங்கினார்.

யாவரும் கைதட்டி வரவேற்று ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சியின் போது சிங்களப் பாடலை ஒரு மாணவன் பாடத் தொடங்க இவர் ஆட்சேபனை தெரிவித்தார். அம்மாணவன் நிறுத்தாமல் பாடியதால் கோபமுற்ற இவர் அம் மாணவனிடமிருந்து ஒலி வாங்கியைப் பறித்தெடுத்தார். ஒன்றுகூடல் குழப்பத்தில் முடிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தலைமையிலான தமிழ் மன்றத்துக்கும் இவ் ஒன்று கூடலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லாதபோதும்.தொடர்ந்து தமிழ் மன்றத்தின் தலைவராக இருக்க விரும்பாமல் இராஜினாமாச் செய்தார்.

இவரோடு செயலாளர் **திரு.செ.சண்முகநாதன்,** பொருளாளர் **திரு.ஜாபர் சாதிக்** ஆகியோரும் பதவி விலகினர். முத்தமிழ் விழாவை நடாத்தி முடிப்பதற்காக துணைத் தலைவர் **திரு.மு.சிவதாஸ்,** துணைச் செயலாளர் **திரு.அ.ஜெ.செ.சவரிமுத்து,** ஆகியோர் பொறுப்பெடுத்து **திரு.க.கணேசனை** பொருளாளராக நியமித்து விழாவைச் சிறப்பாக நடாத்தி முடித்தனர்.

செந்தழல் இரண்டாவது மலர் (1977-1978) அரசியல், போராட்டம் சம்பந்தமான பல ஆக்கங்களைக் கொண்டிருந்ததாலும் சமர்ப்பணம் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டிருந்ததாலும், தடைசெய்யப்பட்டது.

இவரது சக மாணவன் **திரு.வி.குணசேகரன் பஸ்தியாம்பிள்ளை** கொலை வழக்கோடு சம்பந்தப்படுத்தப்பட்டு சிறைச்சாலையில் இருந்தார். அரசின் கழுகுக் கண்கள் யாழ் பல்கலைக் கழகத்தின் மீது பதிந்து கிடந்தன.

செந்தழலின் சமர்ப்பணம் "இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு ஒரேயொரு வழியான தமிழ் ஈழம் மீட்கும் பணியில் ஈடுபடும் விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இச் செந்தழலைச் சமர்ப்பணம் செய்கிறோம்."

இச் செந்தழல் (1977-1978) இதழில் **"தமிழ் வீரம்"** என்ற தலைப்பில் **அகளங்கன்** என்ற புனைபெயரில் இவரது பதினேழு மரபுக் கவிதைகள் இடம் பெற்றிருந்தன.

அத்தோடு **"இருள் விலகுகிறது"** என்ற சிறுகதையும் **அகளங்கன்** என்ற புனைபெயரில் இடம்பெற்றிருக்கின்றது. இச் சிறுகதையே அச்சில் வந்த இவரது முதல் சிறுகதையாகும் (1977-1978)

தமிழ் வீரம் என்ற கவிதை புறநானூற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இக் கவிதைக்காகவும் தமிழ் மன்றத் தலைவர் என்பதற்காகவும் அரசின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இவரோடு "ஓர் ஆசிகுள வாசியின் ஆகஸ்ட் அனுபவங்கள்." என்ற கட்டுரையை எழுதிய **திரு. குமார் தம்பையா,** மற்றும் பத்திராதிபர் **திரு.ச.பேரின்பராசா** உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

திரு.ச.பேரின்பராசா, திரு.வி.குணசேகரன் ஆகியோர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் [E.P.R.L.F] முக்கிய உறுப்பினர்களாக, இன்பம், குண்சி என்ற பெயர்களில் பின்பு விடுதலைப் போரில் ஈடுபட்டு தற்போது விலகியிருக் கின்றனர். பேரின்பராசா இப்போது வங்கி அதிகாரி. குணசேகரன் இப்போது சட்டத்தரணி.

குமார் தம்பையா, கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் விரிவுரை யாளராகக் கடமை ஆற்றிய காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர். **திரு.அ.ஜெ. செ.சவரிமுத்து** இப்போது அருட் தந்தை. [Fathar]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தழல், அட்டை இல்லாமல் சில பக்கங்கள் இல்லாமல் வெளிவந்தது. அட்டையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், தமிழ் ஈழம். என விலாசமிடப்பட்டிருந்ததும் ஒரு காரணம். தமிழ் மன்றத்தின் மகுட வாசகமான

**"வேழம் நிகர்த்த தமிழா - தமிழ்**
**ஈழம் அமைக்க எழடா.**

என்ற வாசகம் அட்டையில் பொறிக்கப்பட்டிருந்ததும் ஒரு காரணம். அத்தோடு தமிழ் ஈழ வரை படமும் அட்டையில் அச்சிடப்பட்டிருந்தது.

கடிதத்தாள் [Letterhead], கடித உறை [Envelope] கோப்பு [File] முதலிய யாவற்றிலும், இவ் வாசகமும், இவ்விலாசமும் இடம் பெற்றிருந்தன. இக்கடிதத் தாழில் எழுதி இக்கடித உறையில் இட்டு ஜனாதிபதி வரைக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன

இவரும் இவரது நண்பர்களான **திரு.மு.திருநாவுக்கரசு, திரு.மு.இராஜரட்ணம், திரு.ச.பாலசுப்பிரமணியம், திரு.அ.வரதராஜன்,** ஆகிய ஐந்து பேரும் சேர்ந்து **மாலை** என்ற பெயரில் ஒரு **சிறுகதைத் தொகுப்பு** வெளியிட்டனர்.

10-10 1978 இல் இது வெளிவந்திருக்கிறது. இந் நூலின் வெளியீட்டுவிழா யாழ் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்றது. துணை **வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்** தலைமையில், **பேராசிரியர் க.கைலாசபதி, விரிவுரை யாளர் திரு.மு.நித்தியானந்தன்** முதலானோர் விமர்சன உரையை ஆற்றினர். இவரது **"மீண்டும் கோழையாய்"** என்ற சிறுகதை **அகளங்கன்** என்ற புனை பெயரில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்த நூலில் எழுதிய ஐந்து பேரில் திரு.மு.இராஜரட்ணம் இவரது அடுத்த தொகுதி கலைப் பீட இளைய மாணவன். திரு.ச.பாலசுப்பிரமணியம் இவரது மூத்த தொகுதி விஞ்ஞான பீட மாணவன். திரு.மு.திருநாவுக்கரசு இவரது சம தொகுதி கலைப்பீட மாணவன். திரு.அ.வரதராஜன் இவருக்கு அடுத்தடுத்த தொகுதி இளைய மாணவன்.

இவர்களில் திரு.மு.திருநாவுக்கரசு சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தவர். ஈழம் சார்ந்த பல சிறந்த ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டவர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரசாரப் பேச்சாளராக விளங்கியவர். யாழ் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகவும் சிலகாலம் பணியாற்றியவர்.

திரு.அ.வரதராஜன் வடக்குக் கிழக்கு மாகாணசபையின் முதல் முதல்வராக தமிழ் ஈழ புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் **அண்ணாமலை வரதராஜப்பெருமாள்** என்ற பெயரில் பதவி வகித்தவர். என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் இவர் எழுதிய **அனிச்ச மலர்** என்ற சமூக சீர்திருத்த நாடகம் வவுனியாவில் நடை பெற்ற நாடகப் போட்டியொன்றில் முதலாமிடம் பெற்றது. இதனை **செ.பரராஜசேகரம்** என்பவர் இயக்கித் தயாரித்திருந்தார் (.1978)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரித்திரன் தொடர்பு:-

சிரித்திரன் ஆசிரியர் **திரு.சி.சிவஞானசுந்தரம்** அவர்களின் அறிமுகம் இவரது இளைய தொகுதி கலைப்பீட மாணவன். **திரு.சி.சிவலிங்கராஜா** மூலம் இவருக்குக் கிடைத்தது. சி.சிவலிங்கராஜா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி இன்று ஓய்வு நிலையில் இருகிறார்.

சிரித்திரன் ஆசிரியர் "தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை இருக்கிறதா? இருந்தால் எழுத முடியுமா" எனக் கேட்டாராம். இருக்கிறது எனச் சொல்லி எழுதத் தொடங்கினாராம்.

சிரித்திரனில் 1979ல் **"இலக்கியச் சிமிழ்"** என்ற தலைப்பில் **"அகளங்கன்"** என்ற புனை பெயரிலும், **"இலக்கியத்தில் நகைச் சுவை"** என்ற தலைப்பில் இவரது சொந்தப் பெயரான **சே.நா.தர்மராஜா** என்ற பெயரிலும் பல இலக்கியக் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார்..

**ஐம்பத்தைந்து** சிரித்திரன் இதழ்களில் இவரது பல ஆக்கங்கள் பல பெயர்களில் வெளி வந்துள்ளன. அவற்றில் சில கட்டுரைகளைத் தொகுத்து **"இலக்கியச் சிமிழ்"** என்ற கட்டுரைத் தொகுப்பாக 1992ல் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் வெளியிட்டது. இரண்டாம் பதிப்பு மட்டக்களப்பு உதயம் பிரசுராலயத்தின் பத்தாவது வெளியீடாக (1993) இல் வெளிவந்தது.

இவர் தன்னை இலக்கியத்துறையில் வளர்த்து ஆளாக்கியது சிரித்திரன் சஞ்சிகை என்றும், தன்னைச் செதுக்கிய சிற்பி சிரித்திரன் ஆசிரியர் அமரர் சி.சிவஞானசுந்தரம் என்றும் குறிப்பிடுகிறார்.

இவர் தனது **"சேரர் வழியில் வீரர் காவியம்"** என்ற குறுங்காவியத்தை சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கும், சிரித்திரன் சஞ்சிகைக்கும் சமர்ப்பணம் செய்துள்ளார். **அகளங்கன் கவிதைகள்** நூலை சிரித்திரன் ஆசிரியர் திரு.சி.சிவஞானசுந்தரம் அவர்களுக்கு காணிக்கை ஆக்கியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## வாலி-ஆய்வு:-

**பேராசிரியர் கா.சிவத்தம்பி** அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது மாணவர்களுக்கு இராமாயணம் பற்றிக் கற்பிக்கும் போது, வாலிவதை ஒரு சுவாரஸ்யமான, தீர்வு காணமுடியாத பிரச்சனை எனக் கற்பித்ததைக் கேள்விப் பட்டு, வாலி வதை சம்பந்தமாக ஆராய்ந்து **"வாலி" "கொலைச் சரமும் கேள்விச் சரமும்"** என்ற பெயரில் ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

அக் கட்டுரையை இவரது நண்பர் திரு.செ.சண்முகநாதன் அவர்கள் ஈழ நாடு பத்திரிகை உதவி ஆசிரியர் திரு துரைராஜா அவர்களுக்கு பண்டத்தரிப்பு நிருபர் திரு.மா.கந்தசாமி அவர்கள் மூலமாகக் கொடுத்தார். அக் கட்டுரை 1979ல் **ஈழநாடு வார மலரில் எட்டு வாரங்கள்** தொடர்ச்சியாக வெளிவந்தது. (26.08.1979-14.10.1979)

அந்தக் கட்டுரை இவரைப் பெரிதும் பிரபலப் படுத்தியது. இவருக்குப் புகழ் சேர்த்து ஒரு அங்கீகாரத்தையும் கொடுத்தது. பின்னர் 1987ல் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.சண்முகதாஸ் அவர்களின் உதவியுடனும், அணிந்துரையுடனும் **"வாலி"** என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றது.

அகில இலங்கைக் கம்பன் கழகம் இதனை வெளியிட்டது. இதற்கு யாழ். இலக்கிய வட்டமும் அகில இலங்கை இலக்கியப் பேரவையும் சிறந்த நூலுக்கான சான்றிதழ் வழங்கின. **"வாலி"** பின்பு **புலவர் ஈழத்து சிவானந்தன்** (புலவர் சிவானந்தன்) அவர்களின் முயற்சியால் ஸ்ரீ லங்கா அச்சகத்தாரால் (1989) இல் மறு பதிப்பும் செய்யப் பட்டது.

இந்நூலின் சிறப்புக்கருதியும், பேராதனைப் பல்கலைக் கழக கலை முதற் தேர்வு தமிழ்ப்பாட மாணவர்களின் தேவை கருதியும் இந் நூலின் மூன்றாம் பதிப்பை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பிரியா பிரசுர 39ஆவது நூலாக (2006) நான் வெளியிட்டேன்.

இந் நூலின் முதற் பதிப்புக்குரிய செலவின் பெரும் பகுதியை இவரது தாயாரின் இளைய சகோதரியின் மகனாகிய இவரது இளைய சகோதரர் **க.குமாரகுலசிங்கம்** அவர்கள் (நாகராஜா - சிங்கம்.) வழங்கியிருந்தார்.

இவரே அகளங்கனைப் பல வகைகளிலும் உற்சாகப் படுத்தி வருபவர். இவரைச் **சுவிற்சலாந்து** நாட்டுக்கு அழைத்து பல இடங்களிலும் **சொற்பொழிவாற்ற வைத்தவரும்** இவரே. பல நூல்களை வெளியிட நிதியுதவி செய்து வருபவரும் இவரே.

வாலி என்ற நூலை இவர் தனது தந்தையாருக்குச் சமர்ப்பணம் செய்திருந்தார். இந்நூலின் முப்பத்தி ஏழு பக்கங்களை வாசித்து அடையாளமிட்டு வைத்த தந்தையார் அன்றே இயற்கை மரணம் எய்தினார்.

உயிரோடிருந்தவருக்குச் சமர்ப்பணம் செய்தது தவறு என்று பலரும் அபிப்பிராயம் சொன்னார்கள். வெளியீட்டு விழாவுக்கு முன்பே இவரது தந்தையார் இறந்தது பலருக்கும் அதிர்ச்சியை அளித்தது. இவரும் இவரது தந்தையாரும் இத்தகைய மூடக் கொள்கைகளை நம்பாதவர்கள்.இவர் தனது தந்தையாரின் சம்மதத்தோடு தான் சமர்ப்பணம் செய்திருந்தார்.

வாலியின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் யாழ் பல்கலைக் கழக தமிழ் சிரேஸ்ட விரிவுரையாளர் **கலாநிதி. இ.பாலசுந்தரம்** அவர்களின் தலைமையில் கம்பன் கழகத்தினால் நடாத்தப்பட்டது. வாலியின் அறிமுக விழா வவுனியாவில் வவுனியா முத்தமிழ்க் கலா மன்றத்தினால் **திரு.ச.அருளானந்தம்** அவர்களின் தலைமையில் நடாத்தப் பட்டது (27.09.1987)

இவ்விழாவில் உரையாற்றிய எழுத்தாளர் **திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்** அட்டைப் படத்தை அழகாக வர்ணத்தில் அச்சிட்டிருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார். அவரின் ஆலோசனைக் கிணங்கி இவர் தனது அடுத்த நூலான **"இலக்கியத் தேறல்"** என்ற கட்டுரைத் தொகுப்பு நூலை அழகான நாலு வர்ண அட்டையோடு வெளியிட்டார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முதன் முதல் நாலு வர்ண அட்டையோடு வெளிவந்தது இவரது இலக்கியத் தேறல் நூலே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப் பாணத்தில் இந்திய அமைதி காக்கும் படையுடன் விடுதலைப் புலிகள் போர் புரிந்த காலத்தில் இடம் பெயர்ந்தபோது அங்கு வைத்திருந்த வாலியின் பல பிரதிகள் பழுதடைந்து விட்டிருந்தன. அதனால் எற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய இவரது மூத்த சகோதரர் திரு. வில்வராசா வவுனியா வர்த்தகர் சங்கத்து உறுப்பினர் **T.K.இராஜலிங்கத்திடம்** இவரை அழைத்துச் சென்றார்.

அவர் ஈசன்ஸ் கடை உரிமையாளர் **திரு.சி.ஏ.இராமஸ்வாமி** அவர்களை அறிமுகப் படுத்தினார். திரு.இராமஸ்வாமி அவர்கள் ஐயாயிரம் ரூபா பணம் கொடுத்து. தான் வர்த்தகர் சங்கத் தலைவரிடம் கதைத்து அப்பணத்தைப் பெற்றுக் கொள்வதாகக் கூறினார்.

ஆனால் வர்த்தகர் சங்கம் பணம் கொடுக்காததால் அவரது தனிப்பட்ட பணமே இவருக்குக் கிடைத்தது. **சிவநெறிப் புரவலர்** என்று அழைக்கப்படும் திரு. சி.ஏ.இராமஸ்வாமி அவர்கள் பிற்காலத்தில் இவரது பல நூல் வெளியீடுகளுக்கும் நிதி உதவி செய்திருக்கிறார். அத்தோடு இவருக்கு ஏற்பட்ட பணப் பிரச்சனைகளையும் தீர்த்து வைத்திருக்கிறார்

**தாய்லாந்து** நாட்டுச் சுற்றுப்பயணம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்து உதவியிருக்கிறார். இவர் முதன் முதல் விமானப் பயணத்தை மேற்கொண்டதும், வெளிநாட்டுக்குச் சென்றதும் அவரது உதவியினாலேயே 2002 இல் **தாய்லாந்துக்குச்** சென்று ஐந்து நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

வவுனியா இந்து மா மன்றத்தின் தலைவராக திரு.இராமஸ்வாமி அவர்கள் பதவி வகித்தபோது இவரைக்கொண்டு **ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, சிவபுராணம்,** ஆகிய நூல்களுக்கு உரை எழுதுவித்து வெளியிட்டார்.

அத்தோடு இவரது **நாமறிந்த நாவலர், பன்னிரு திருமுறை அறிமுகம்,** ஆகிய உரை நடை நூல்களையும் வெளியிட்டார். தனது மணி விழாவின்போது இவரது **வெற்றிவேற்கை** உரை நூலையும் வெளியிட்டார்.

தனது சி.ஏ.இராமஸ்வாமி அறக்கட்டளை நிதியத்தின் மூலம், **திருவெம்பாவை, சகலகலா வல்லிமாலை** ஆகியவற்றை இவரது உரையுடன் வெளியிட்டார்.அதனால் அகளங்கனின் இலக்கியப் பயணத்தில் இவர் முக்கிய பங்காளியாவார்.

1979-1980 காலப்பகுதியில் யாழ் இலக்கிய வட்டத்தின் துணைத் தலைவராக பதவி வகித்தார். யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக இருந்த **கலாநிதி நா.சுப்பிரமணியன்** அவர்கள் அப்போது தலைவராகப் பதவி வகித்தார்.

யாழ் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தின் **இந்து நெறி** என்ற மலரில் **நல்லை நகருறைகின்ற** என்ற தலைப்பிலான இவரது இசைப் பாடல் அகளங்கன் என்ற பெயரில் வெளிவந்தது. (1977-1978)

அத்தோடு யாழ் பல்கலைக்கழக **முஸ்லிம் மஜ்லிஸ்** வெளியிட்ட **இங்கிலாப்** என்றமலரில் இவரது **பிணைக்குப் பிணை** என்ற கட்டுரை நா.தர்மராஜா என்ற பெயரில் வெளிவந்தது (1977-1978)

1979 மார்ச் உடன் பல்கலைக்கழகக் கல்வி முடிவடைந்தது. பரீட்சைப் பெறுபேறு இவருக்குச் சாதகமாக அமையவில்லை. தவறவிட்ட பாடங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் படித்துச் சித்தி எய்தக்கூடிய சூழ்நிலை இல்லை. கடவுள் பாதையை மாற்றிவிட்டார்.

தனக்குப் பிடித்தமான **சட்டத்துறையில்** கல்விகற்க விரும்பினார். சட்டக் கல்லூரி நேர்முகப் பரீட்சைக்குச் சென்றார். க.பொ.த.சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி இல்லாதகாரணத்தால் அனுமதி கிடைக்கவில்லை. இவரது மருமகன் அதாவது இவரின் மகளின் கணவன் சட்டத்தரணி என்பது குறிப்பிடத் தக்கது.

**ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி,** முதலான பத்திரிகைகளிலும், **சிரித்திரன், சுடர், சோதிடமலர், ஆலயமணி** முதலான சஞ்சிகைகளிலும் எழுதினார்.

வவுனியா பம்பைமடு என்னும் தனது சொந்தக் கிராமத்தில் மிளகாய்த் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டார். அரசியல், போராட்ட ஈடுபாடுகள் யாவற்றையும் விட்டுவிட்டு சாதாரண விவசாயியாக வாழ்ந்தார்.

1979 இல் **வவுனியா இலக்கிய வட்டம்** என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் தலைவராகச் செயற்பட்டார். வவுனியாவின் முதல் இலக்கிய அமைப்பு இதுவேயாகும். இதன் செயலாளர் இன்று பிரபல மூத்த சர்வதேச ஊடகவியலாளரும் லண்டன் பீ.பீ.சீ. நிரூபருமான **திரு.பி.மாணிக்கவாசகம்** அவர்கள் என்பதும். உப தலைவர், விடுதலைப் புலிகளின் முக்கிய மூத்த உறுப்பினராக இருந்த **தமிழ்க்கவி** என அழைக்கப்பட்ட **தமயந்தி** என்பதும் குறிப்பிடத்தக்கது.

1983 இனக்கலவரம் வரை இது இயங்கியது. இக்காலத்தில் வவுனியாவில் கல்விப் பணிப்பாளராக பிரபல கவிஞர் இ.முருகையன் பணியாற்றினார். அவரது சகோதரரும் சிறந்த நாடகவியலாளருமாகிய திரு.இ.சிவானந்தன் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணி யாற்றினார். இவர்களோடு இணைந்து வவுனியா இலக்கிய வட்டம் சிறப்பாக இயங்கியது.

தமிழகத்தின் சிறந்த பெண் எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன். தமிழக காமராஜர் காங்கிரஸ் தலைவர் **குமரி அனந்தன்** ஆகியோரை இலக்கியவட்டம் வரவேற்றுக் கலந்துரையாடியது.

இவர் எழுதிய **"சேற்று வயல் காட்டினிலே"** என்ற கிராமிய மெல்லிசைப் பாடல் **கலாநிதி நா.சுப்பிரமணியன்** அவர்கள் மூலம் **திரு.அருணா செல்லத்துரை** அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

தென் இந்தியத் தமிழ்த் திரைப்படப் பிரபல இசையமைப் பாளர்களான மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் இராமமூர்த்தி இரட்டையர்களில் ஒருவராகிய **திரு.T.K.இராமமூர்த்தி** இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வந்தபோது இவரது பாடலை அருணா செல்லத்துரை அவரிடம் கொடுத்தார்.

இவரது பாடலை திரு.இராமமூர்த்தி அவர்களின் அருமையான இசையமைப்பில் T.கிருஷ்ணன் அவர்களது ஆரம்ப ஒலியோடு **திரு.பத்மலிங்கம், திருமதி.ஜெகதேவி விக்னேஸ்வரன்** ஆகியோர் அற்புதமாகப்பாடினர்.

அப்பாடல் விவசாய நிகழ்ச்சி, மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சி, விரும்பிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவை என நாளொன்றுக்கு மூன்று தடவைகள் ஒலிபரப்பாகிய காலம் ஒன்று இருந்தது. (1979)

தொடர்ந்து சில மெல்லிசைப் பாடல்கள் எழுதினார். பிரபல சிங்களத் திரைப்படப் பின்னணிப் பாடகி **சுஜாத்தா அத்தநாயக்கா** முதலான பலர் இவரது மெல்லிசைப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

இவரது **"வேலிகளும் போலிகளும்"** என்ற சிறுகதை காவலூர் எஸ்.ஜெகநாதன் தொகுத்த **ஈழத்துச் சிறுகதை மஞ்சரியில்** வெளிவந்தது (1980) இவரது **"தீக்குளிப்பு"** என்னும் சிறுகதை ஈழநாடு வார மலரில் 1981இல் வெளிவந்தது.

**திருமணம்:-**

இவரோடு யாழ் பல்கலைக் கழகத்தில் இவரது இளைய தொகுதி கலைப் பீட மாணவியாகக் கல்விகற்ற **வவுனியா கள்ளிக்குளத்தில்** பிறந்த உறவினரான **பூலோகசிங்கம் பூரணேஸ்வரியைக்** காதல் திருமணம் செய்துகொண்டார். **(24.04.1981)** பல்கலைக் கழகத்தில் எற்பட்ட காதல் **(20.11.1976)** மிக மிக எளிமையாக இவரின் விருப்பம்போலத் திருமணமாகக் கனிந்தது.

தமிழ்த் திருமண முறைப்படி ஐயர், ஓமத்தீ, மந்திரம், தாலி இல்லாமல், மாலை மாற்றலோடு எளிமையாகக் கள்ளிக்குளத்தில் பெண் வீட்டில் இரு வீட்டுப் பெற்றோரினதும் வாழ்த்தோடு புரட்சித் திருமணமாக நடந்தேறியது. சீதனம், எனப் பணம் எதுவும் பெறவில்லை. திருமணத்தின் போதும் அன்பளிப்புப் பணம் எதுவும் பெறவில்லை.

மனைவி **21.05.1957** இல் பிறந்தவர். **பொருளியல் சிறப்புப் பட்டதாரி. [B.A. Hons]** தமிழையும் தன் கணவனையும் தன் உயிராக நேசிப்பவர். இவர் சொல்லச் சொல்ல அவர் மிக வேகமாக எழுதுவார். பின் அழகாகத் தெளிவாகப் பிரதி செய்து கொடுப்பார்.

புத்தகங்கள் அச்சிடும்போது பிழை திருத்திக் கொடுப்பார். புத்தகங்களை சரியாக இருக்கின்றனவா என்று பக்கம் பக்கமாகப் பார்த்து உதவுவார். தனது அபிப்பிராயத்தையும், ஆலோசனையையும், சொல்லுவார். பாராட்டி உற்சாகப் படுத்துவார். இவரது முதல் வாசகியும், முதல் விமர்சகியும், இவரே. இவரது உறு துணை இல்லாதிருந்திருந்தால் தன்னால் இவ்வளவு ஆக்கங்களைப் படைத்திருக்கவே முடியாது என்று இவர் அடிக்கடி சொல்லுவார்.

ஐம்பத்தினான்கு வயதின் பின் சுயமாகக் கணணியைக் கற்று இவர் பற்றிய தகவல்கள் யாவற்றையும் தேடி ஆராய்ந்து பதிவு செய்து வைத்துள்ளார். எனக்குப் போதிய தகவல்களைத் தந்தவரும் இவரே.

அகளங்கன் அவர்கள் இக்காலத்தில் நெல் விவசாயம், மிளகாய்த் தோட்டம், வெங்காயப் பயிர்ச் செய்கை முதலானவற்றில் ஈடுபட்டு சாதாரண விவசாயியாக உழைத்து குடும்பத்தைக் காப்பாற்றினார். இவரது எழுத்துப் பணிக்கு மட்டுமன்றி விவசாய வேலைகளுக்கும் இவரது மனைவி உறு துணையாக இருந்தார்

இவர் மிகுந்த வறுமையோடு போராடிய காலங்களில் இவரது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை யோடும், திறமையோடும் மிகவும் சிக்கனமாகக் குடும்பத்தை நடாத்தி, பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதில் தனது படிப்புத் திறமையையும் ஆற்றலையும், முழுமையாகப் பயன்படுத்தி உதவினார்.

இக்காலத்தில் **வீரகேசரி, தினகரன்,** ஆகிய தேசியப் பத்திரிகைகளில் பல இலக்கியக் கட்டுரைகளை எழுதினார். **இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில்** பல இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றினார்.

1981.01.15 இல் மகன் பிறந்தான். 1984.06.25 இல் மகள் பிறந்தாள். காதலித்த காலத்தில் தமக்கு முதலில் ஒரு ஆண் பிள்ளை பிறக்கும் என்றும், அதற்கு **அநபாயன்** என்று பெயர் வைக்கவேண்டும் என்றும், இரண்டாவதாக ஒரு பெண் பிள்ளை பிறக்கும் என்றும், அதற்கு **அநிந்திதை** என்று பெயர் வைக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருந்தனர்.

அதன்படியே பிள்ளைகள் பிறந்தன. பெயர்களும் வைக்கப் பட்டன.பெரிய புராணத்தைச் சேக்கிழாரைக் கொண்டு பாடுவித்தவன் **அநபாயசோழன்.** தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன்னால் ஓடுகள் போட்டு வேய்ந்து, போன்வேய்ந்த சோழன் எனப் புகழப்பட்டவன் அநபாய சோழன்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயத்தில் ஆலால சுந்தரர் என்ற பெயரில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராய் இருந்த காலத்தில், உமையம்மையாரின் தோழிப்பெண்களாக இருந்த இரண்டு பெண்களில் ஒருவர் **அநிந்திதை**.

இவரது மனைவியின் பெயர் உமாதேவியாரின் பெயரான **பூரணேஸ்வரி.** இவரின் புனைபெயரான **அகளங்கன்** என்பது இறைவனின் பெயர்.களங்கம் இல்லாதவன் அகளங்கன்.

மகன், க.பொ.த. உயர்தரத்தில் மாவட்டத்தில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்று அதிகூடிய பெறுபேறு [SUPPER MERIT] பெற்ற மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டு, மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் கல்வி கற்று முதல் வகுப்பில் சித்திஎய்தினார். [FIRST CLAAS]

புலமைப் பரிசில் பெற்று **அவுஸ்ரேலிய பிரிஸ்பேன்** இலுள்ள **குயின்ஸ்லாந்துப்** பல்கலைக்கழகத்தில் **கலாநிதிப்** பட்டம் [Ph.D] பெற்றார். வவுனியா **திரு.க.சற்குணராசா** அவர்களின் மகள் டாக்டர் **நித்தியா** (M.B.B.S - யாழ். பல்.) அவர்களைத் திருமணம் செய்து தற்பொழுது அவுஸ்ரேலியாவில் வாழ்கின்றனர்.

இவர்களுக்கு **ஆதிரா** என்ற பெயரில் ஒரு பெண் குழந்தை உண்டு. மணிமேகலையின் அமுத சுரபியில் (அட்சய பாத்திரம்) முதல் அன்னமிட்ட பதி விரதையின் பெயர் ஆதிரை. சரஸ்வதிக்கும் ஆதிரை என்று ஒரு பெயர். இந்த அழகான பெயரை மகனும் மருமகளும் தேர்ந்தெடுத்து வைத்ததில் **திரு. அகளங்கனும்** அவரது துணைவியாரும் மிகவும் மகிழ்கின்றனர்.

மகள், தமிழ் சிறப்பு (B.A.Hons- யாழ். பல்.) பட்டதாரி. தொகுதி முதன்மைச் சித்தி பெற்றவர் [.BATCH TOP] ஆங்கில பாட டிப்ளோமா சிறப்பு பட்டம் பெற்றவர் (dip in Eng, Merit - யாழ் பல். வவுனியா வளாகம்) சில மாதங்கள் வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் தற்காலிகமாகத் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் கணவன் **திரு.தியாகராஜா கேசவராஜன்** திருகோணமலையில் பிறந்தவர். சட்டத்தரணி. [L.L.B-Colombo,Attorney At.Law.Commissioner For Oaths] இவர்கள் திருகோணமலையில் வாழ்கிறார்கள்.

மகள், மனைவி ஆகியோர் தகுந்த பட்டப்படிப்புப் படித்திருந்தும் உத்தியோகம் பார்க்கவில்லை.

**பண்டார வன்னியன் விழா:-**

வவுனியா மாவட்ட சபை வவுனியாவில் பிரமாண்டமான முறையில் முத்தமிழ் விழாவை நடாத்த ஏற்பாடு செய்தது. விழாவில் ஒரு மலர் வெளியிட விரும்பியது. மலர்க்குழுவில் இவரையும் சேர்த்தனர்.

அப்போதைய அரசாங்க அதிபர் **திரு.கே.சி.லோகேஸ்வரன்** அவர்கள் மலர் ஆசிரியராகவும், திட்டமிடல் பணிப்பாளராக இருந்த **திரு.த.லங்காநேசன்**, அவர்கள், ஓமந்தை மகாவித்தியாலய அதிபர் **திரு.கே.லோகசிங்கம்,** அவர்கள் ஆகியோரோடு இவரும் மலர்க்குழுவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

மலரைத் தயாரிக்கும் பணி முழுமையாக இவரிடம் விடப்பட்டது.மலருக்கு முத்தமிழ் விழா மலர் என்று பெயர் வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.பண்டார வன்னியனுக்குச் சிலை வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அப்போதைய வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் **திரு.தா.சிவசிதம்பரம்** அவர்கள் இவரை அழைத்து மலர் பற்றியும், விழா பற்றியும் கதைத்து ,ஆலோசனை கூறினார்.

விழாமலருக்கு **"பண்டார வன்னியன் விழாமலர்"** என்ற பெயரை இவர் வைத்தார். அதனால் முத்தமிழ் விழா என்ற பெயரில் மூன்றுநாட்கள் நடைபெற்ற அப் பெரு விழா இன்று **"பண்டாரவன்னியன் விழா"** என்றே அழைக்கப்படுகிறது.

வன்னி பற்றிய பல சிறந்த கட்டுரைகளைக் கொண்ட அந்த மலரைத் தயாரித்ததை இவர் மிகவும் பெருமையாகக் கருதுகிறார். மலரில் **"எம் வன்னி மன்னனே இறுதி மன்னன்"** என்ற தலைப்பில் எட்டு மரபுக் கவிதைகள், கவிஞர் "அகளங்கன்" (நாகலிங்கம் தர்மராஜா) என்ற பெயரில் இடம் பெற்றிருக்கிறது.

பண்டார வன்னியன் கொடிக்கு முன்னால் இருக்கும் **"நெற்றியில் நிலைத்த நீறும்..." தோற்றலும் வெற்றிப்பாதை தொடர்தலும்"** ஆகிய இரு கவிதை களும் இவருடையவை.. பண்டார வன்னியன் சிலைக்கு முன்னால் இருக்கும் **"கல்லெனத் திரண்ட தோளும்"** என்ற கவிதையும் இவருடையதே. மலரில் இவர் தனது கவிதை என்று குறிப்பிடவில்லை.

தமிழகத்திலிருந்து வந்திருந்த தமிழக சட்ட மன்றப் பேரவைத் தலைவர். **திரு.க.இராசாராம்** அவர்கள் விழாவில் பேசும்போது மேலே குறிப்பிட்ட மூன்று விருத்தப் பாக்களையும் கம்ப ராமாயணப் பாடல்களோடு ஒப்பிட்டுப் பேசினார்.

தமிழகத்திலிருந்து வந்திருந்த பாடகி **குமாரி பிரேமிளா** அவர்கள் இப் பாடல்களையும் தனது கச்சேரியின் போது இசையமைத்துப் பாடினார்.

இவ் விழாவிற்கு மாவட்டசபைத் தலைவர் சட்டத்தரணி **திரு.மு.சிற்றம்பலம்** அவர்கள் தலைமை தாங்கினார். தமிழகத்திலிருந்து **தமிழ்க்குடிமகன், அவ்வை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடராஜன், பகீரதன்** மற்றும் **நடிகர் விஜயகுமார், மஞ்சுளா,** தமிழக ஆஸ்த்தான நர்த்தகி **சுவர்ணமுகி, உஷா ராஜேந்தர்** முதலான பலர் வருகைதந்து கலந்து கொண்டனர்.

16.JULY. 1982,17,18 ஆகிய மூன்றுதினங்கள் இவ்விழா நடை பெற்றது.இவ் விழாவில் இவரது **"சேரர் வழியில் வீரர் காவியம்"** என்ற குறுங்காவியம் விநியோகிக்கப்பட்டது.

சிலப்பதி காரத்தின் வஞ்சிக் காண்டத்தினைக் குறுங்காவியமாக "சேரர் வழியில் வீரர் காவியம்" என்ற பெயரில் இவர் எழுதினார். இந் நூலின் பெரும் பகுதி அன்றைய சூழ்நிலையின் காரணமாக இவரது சகோதரர்களால் எரிக்கப்பட்டது.

இவரும் இவரது சகோதரர் **குமாரகுலசிங்கமும்** சேர்ந்து இவரது தோட்டத்தில் முதல் முறையாக வெங்காயம் பயிரிட்டு வந்த வருமானம் முழுவதும் இப்புத்தகம் அச்சிடுவதற்கு செலவளிக்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

**வீரகேசரியில்** வெளிவந்த இவரது முதல் கட்டுரை **"ஊடலால் எரிந்தது கூடல் மாநகர்"** (18.04.1982) **தினகரனில்** வெளிவந்த இவரது முதல் கட்டுரை **"புகழ்ச்சியையே இகழ்ச்சியாகப் பாடும் புலவர் காளமேகம்"** (22.06.1985) தொடர்ந்து தேசியப் பத்திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஒன்றில் இவரது முதல் பேச்சு **"பக்திக்கவி சேக்கிழாரும் காவியக்கவி கம்பனும்"** என்ற தலைப்பில் ஒலிபரப்பாகியது. (24.09.1984) தொடர்ந்து வானொலியில் பல உரைகளை ஆற்றியிருக்கிறார்.

கள்ளிக்குளம், மாமடு என்ற சிங்களக் கிராமத்திற்கு அருகில் இருக்கிறது. கறுவல் புளியங்குளம், வீமன்கல்லு ஆகிய கிராமங்கள் 1977 இனக்கலவரத்தோடு முற்றாக இடம் பெயர்ந்தபின் கள்ளிக்குளம் மட்டும் மீண்டும் திரும்பிவந்து தனித்து இருந்தது.

1983 இனக் கலவரத்தின் போது கள்ளிக்குளம் எல்லைக்கிராமமாக இருந்ததால் இடம் பெயர்ந்தது. மீண்டும் திரும்பிச் சென்று விவசாயம் செய்து வாழ்ந்தபோது எற்பட்ட பெரு மழையால் விவசாயம் பெரும் நட்டத்தில் முடிய வெறும் மனிதனாக அரசாங்க உத்தியோகத்தை நாடினார்.

**ஆசிரியப் பணி:-**

05-08-1984 இல்ஆசிரியப்பணி கிடைத்தது. நுவரெலியா மாவட்டத்திலுள்ள **ஹோல் புரூக் தமிழ்** மகாவித்தியாலயத்தில் **கணித ஆசிரியராகப்** பதவி ஏற்றார். குடும்பமாகச் சென்று அங்கேயே தங்கியிருந்தார்.

அப் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக இருந்த **திரு.சு.முரளிதரனும்** இவரும் சேர்ந்து பல நாடகங்களை மேடையேற்றினர். **"சமவெளி மலைகள்"** என்ற ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டனர். (1985)

பின்பு முரளிதரன் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குப் படிக்கச்செல்லத் தனித்து இயங்கினார். மலையகத்து எழுத்தாளர்கள் பலரின் அறிமுகம் முரளிதரன் மூலம் இக்காலத்தில் இவருக்குக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளிதரன் தற்போது பிரபல எழுத்தாளராகவும், மலையகத்தின் சிறந்த கல்விமானாகவும், கல்வி அமைச்சில் உயர்பதவியில் இருக்கிறார். முரளிதரன் இவரது விருப்பத்துக்குரிய நெருக்கமான நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் தாயகம் சஞ்சிகையின் அறிமுகவிழா தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது **திரு.ந.இரவீந்திரனின்** அறிமுகம் கிடைத்தது.பின் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இரவீந்திரனும் இவரும் சிலகாலம் ஒன்றாகப் பணியாற்றினர்.

இரவீந்திரன் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விரிவுரையாளராக ஆகிய பின்பு இருவருக்கும் நெருக்கம் அதிகமாகியது. **மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்** என்ற இவரது ஆய்வுநூலை தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ் சென்னை, நிறுவனம் வெளியிட இரவீந்திரனே காரணம். (JULY1994)

1997 இல் இவரும், இரவீந்திரனும், கந்தையா ஸ்ரீகணேசனும் சேர்ந்து பெப்ரவரி போயா (பெப்ரவரி பௌர்ணமி) நாளில் **வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்** என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

இவ்வமைப்பு இன்றுவரை சிறப்பாக இயங்குகிறது. இவர் இதன் தலை வராகவும் கந்தையா ஸ்ரீகணேசன் செயலாளராகவும் இயங்குகின்றனர். இரவீந்திரன், ஸ்ரீகணேசன் ஆகியோர் தற்போது வவுனியாவில் இல்லை.

இவ்வமைப்பின் மூலம் **மாருதம்** என்ற பெயரில் சஞ்சிகையின் **பதின் நான்கு** இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. **இருபது** மூத்த கலைஞர்கள், கல்விமான்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்கள்.

**ஏடு** என்ற குறும் படம், **வன்னி ஊற்று, TRAIN,** ஆகிய இசைப்பாடல் இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. நூற்றி அறுபதிற்கும் மேற்பட்ட முழு நிலாக் கருத்தாடல் நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பலதுறை சார்ந்த இருபத்தி ஒன்பது நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மலையகத்தில் பணியாற்றிய காலத்தில் வானொலி நாடகங்களை எழுதினார். இவரது முதல் வானொலி நாடகம் **"அவர்கள் படித்தவர்கள்"** இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஒன்றில் (20.06.1987) இல் ஒலிபரப்பாகியது.

சமூக, இலக்கிய, வானொலி நாடகங்கள் பலவற்றை இவர் எழுதியிருக்கிறார். **"அன்றில் பறவைகள்" "இலக்கிய நாடகங்கள்" "கூவாத குயில்கள்" "கங்கையின் மைந்தன்"** என்ற தலைப்புக்களிலான நாடக நூல்களில் அவை வெளிவந்திருக்கின்றன.

இலங்கையில் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற முதல் வானொலி நாடக நூல் இவரது **"அன்றில் பறவைகள்"** என்பது குறிப்பிடத்தக்கது. (1992)

இவரது **"இலக்கிய நாடகங்கள்"** என்ற நூல் வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும், கொழும்புத் தமிழ்ச்சங்கப் பரிசையும் பெற்றது. (1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது **"கங்கையின் மைந்தன்"** (2009) என்ற இலக்கிய நாடக நூல், வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய சர்வதேச இலக்கியப் போட்டியில் அறந்தை நாராயணன் நினைவுப் பரிசு, எழுத்தாளர் ஊக்குவிப்புமைய செந்தமிழ்ச் செல்வர் சு.ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருது, இலங்கை இலக்கியப் பேரவை விருது, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ், ஆகியவற்றைப் பெற்றது.

1991 இல் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வியமைச்சு ஆசிரியர்களுக் கிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்திய நாடகப் பிரதியாக்கப் போட்டியில் இவரது **"உருகி எரியும் கர்ப்பூரங்கள்"** என்ற நாடகப் பிரதி முதலாம் பரிசு பெற்றது. இந்நாடகம் இவரால் வானொலி நாடகமாகவும் மாற்றப்பட்டு நடிக்கப்பட்டது. இந் நாடகத்தை **திரு.சு.பூபாலசிங்கம்** ஆசிரியர் அவர்கள் MELTING CAMPHORS என்ற தலைப்பில் மொழிபெயர்த்து மேடையேற்றினார். நூலாகவும் வெளியிட்டார்.

1987 இல் யாழ்ப் பாணம் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இயங்கிய பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு கணிதத்துறைப் பயிற்சி ஆசிரியராகச் சென்றார். அக் காலத்தில் தான் இவரது **"வாலி"** வெளிவந்தது.

இவரது **"இலக்கியத்தேறல்"** கட்டுரைத் தொகுப்பு 1988இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது **"நக்கீரர் ஒரு விதண்டாவாதி"** என்ற இத்தொகுப்பில் இடம்பெற்ற ஆய்வுக்கட்டுரை பெரிதும் போற்றப்பட்டது. இந் நூலை இவர் தனது பிறந்த ஊரான **பம்பைமடு** விற்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

இக் கட்டுரை வீரகேசரியிலும், பல மலர்களிலும், வெளிவந்து இவருக்குப் பெரும் புகழைக் கொடுத்தது. வாலி ஆய்வுக்குப்பின் இக்கட்டுரையே பெரிதும் பேசப்பட்ட ஆக்கமாகும். இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் இத் தலைப்பில் உரையாற்றியுமிருக்கிறார்.

**சொந்த ஊரில் கௌரவம்:-**

இவரது பிறந்த ஊரான பம்பைமடுவில் தான் இவருக்குப் பொன்னாடைக் கௌரவமும் பரிசில் வழங்கிப் பாராட்டும் வைபவமும் முதன் முதலில் நடைபெற்றன.

1987 பிற்பகுதி முதல் 1989 பிற்பகுதி வரையான இரண்டு ஆண்டுக்காலத்தில் **"வாலி"** ஆய்வு நூல், **"இலக்கியத்தேறல்"** கட்டுரைத் தொகுப்பு நூல், **"நளவெண்பா"** உரைநடை நூல், ஆகிய மூன்று நூல்களை வெளியிட்டமைக்காக இப் பாராட்டுக் கூட்டம் நடாத்தப்பட்டது.

ஊரவர்கள் சேர்ந்து விழா எடுத்தார்கள். **திரு.பூ.குமாரகுலசிங்கம்** அவர்கள் தலைமை வகித்தார். வவுனியா கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பணிரிந்த **திரு.ச.அருளானந்தம்** அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

திரு.ச.அருளானந்தம் அவர்கள் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தின் தலைவராகவும் இருந்தவர். இவரது **"இலக்கியத் தேறல்"** (கட்டுரைத் தொகுப்பு -1988) **அன்றில் பறவைகள்** (நாடகங்கள்-1992) **இலக்கியச் சிமிழ்** (கட்டுரைத் தொகுப்பு-1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்றலும் தெம்மாங்கும்** (கிராமியக் கவிதைகள்-1993) **இலக்கிய நாடகங்கள்**-1994, **அகளங்கன் கவிதைகள்** (கவிதைத்தொகுப்பு.-1996) **"இலக்கியச்சரம்"** (கட்டுரைத் தொகுப்பு - 2000) ஆகிய ஏழு நூல்களை இம் மன்றத்தின் மூலம் வெளியிட்டவர்.

இன்று பிரபல எழுத்தாளராக விளங்கும் திருகோணமலை **கேணிப்பித்தனே** திரு.ச.அருளானந்தம் அவர்கள். இந்நிகழ்வு 1989 இல் பம்பைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் இவரது **அரிவரி** வகுப்பு ஆசிரியர் **திருமதி.தவமணிதேவி நடராசா** பங்குபற்றியதையும், இவர் அரிவரி முதல் ஐந்தாம் ஆண்டுவரை படித்த பாடசாலையிலேயே இந்நிகழ்வு நடைபெற்றதையும் ஊரவர்கள் சேர்ந்து விழா எடுத்ததையும் இவர் பெருமையாகக் கருதுகிறார்.

இவ் விழாவில் இவருக்கு திரு.ச.அருளானந்தம் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். இதுவே இவருக்குக் கிடைத்த முதல்ப் பொன்னாடைக் கௌரவம். ஒரு நல்லமனிதரின் நல்லுள்ளத் தோடான இச்செய்கை பிற்காலத்தில் இவருக்குப் பொன்னாடைக் கௌரவங்கள் வந்து குவியக் காரணம் என்று இவர் சொல்கிறார்.

**அமரர்.கா.கனகசிங்கம்** ஊரவர் சார்பில் ஒரு கைக் கடிகாரத்தைப் பரிசளித்தார். இவ் விழாவில் வவுனியா இந்து மாமன்றத்தின் தலைவர் **அமரர் ந.செல்லையா** அவர்களும் கலந்து கொண்டார்.

## சொற் பொழிவுகள் :-

திரு.ந.செல்லையா அவர்களே இவரைத் தொடர் சொற் பொழிவாற்றத் தூண்டி வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி ஆலயத்தில் வவுனியா இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் மஹாபாரத விரிவுரையை ஆற்றச் செய்தவர்.

**மஹாபாரதத் தொடர் சொற்பொழிவு** (14.04.1990 - 24.04.1990) பதினொரு நாட்கள் இரண்டு மணித்தியாலச் சொற் பொழிவுகளாக நடந்தது. நிறைவு நாள் (24.04.1990) இவரது திருமண நாளாகவும் அமைந்திருந்தது.

அன்று பலர் இவருக்குப் பொன் ஆடைகளைப் போர்த்தினார்கள். இவருக்குக் **"காவியமாமணி"** என்ற பட்டம் **வவுனியா இந்து மாமன்றத்தின்** சார்பில் எழுத்தாளர் திக்கவயல் சி.தர்மகுலசிங்கத்தினால் வழங்கப்பட்டது.

இதுவே இவர் பேச்சுத்துறைக்காக முதன் முதல் பெற்ற பட்டம். பின்பு இந்து கலாசார இராஜாங்க அமைச்சு **"தமிழ் மணி"** என்ற பட்டத்தை 1993இல் வழங்கிக் கௌரவித்தது. தொடர்ந்து பலபட்டங்கள் பல நிறுவனங்களாலும், பல ஆலயங்களாலும் வழங்கப்பட்டன.

வவுனியாவில் ஏராளமான தொடர் சொற் பொழிவுகளை இவர் ஆற்றியிருக்கிறார் **மஹா பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம்,** முதலானவையும், மற்றும் தனித்தனித் தலைப்புக்களும் இவரது தொடர் சொற் பொழிவுகளாகின..

இலங்கையின் பலபாகங்களிலும் இவர் இலக்கிய சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கிறார். **வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், மலையகம், திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, முருங்கன் உடப்பு, மாத்தளை, கொழும்பு, நாவலப்பிட்டி, கல்முனை,** எனப் பல இடங்களைக் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் மாதாஜி ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மா அவர்களின் ஏற்பாட்டில் ஸ்ரீ அபிராமியம்மன் ஆலயத்தினர் நடாத்திய **இலண்டன் வானொலி ஆன்மீகமாலை** நிகழ்வில் இருபத்தி ஆறு ஆன்மீகத் தொடர் சொற்பொழிவுகளை, ஒவ்வொரு மணித்தியால நேரடி ஒலிபரப்புச் சொற் பொழிவுகளாக இங்கிருந்தே நிகழ்த்தினார்.

## புராண படனம்.

1987 இல் இவரது தந்தையாரின் மறைவுக்குப்பின் தந்தையார் செய்துவந்த புராணபடன நிகழ்வு இவரது ஊர்க் கோவிலில் நடைபெறாது போகும் நிலை வந்த போது இவரது மூத்த சகோதரர் **திரு.யோகராசா** வின் பெரு முயற்சியால் இவரால் நிறை வேற்றப்பட்டது.

ஒரு புராண நூலை ஒருவர் இராகத்தோடு வாசிக்க இன்னொருவர் இராகத்தோடு பொருள் சொல்வதே புராண படனம் என்பர். இதனைப் பயன் சொல்லுதல் என்று சொல்லுவார்கள்.

பம்பைமடு குளக்கட்டடி முருகன் கோவிலிலும், சாஸ்திரி கூழாங்குளம் முருகன் கோவிலிலும் இவரது தந்தையாரே புராண படனம் செய்து வந்தார். சாஸ்திரி கூழாங்குளத்தில் இவர் போகாவிட்டாலும் புராண படனத்திற்கு வேறு ஏற்பாடுகளைச் செய்ய வசதி இருந்தது.

பம்பைமடுவில் இவரது தந்தையாரை விட்டால் வேறு ஆள் இல்லை. இவர் தனது தந்தையாருக்கு வாசித்துக் கொடுத்து சிறிது பயிற்சியும் பெற்றிருந்தார். தந்தையாரின் வற்புறுத்தலினால் ஒரு தடவை பத்துப் பாட்டுக்களுக்கு பயன் சொல்லியிருக்கிறார்.

பிள்ளையார் புராணம் புத்தகம் தொலைந்து போன ஒரு காலத்தில், அப் புத்தகத்தை வவுனியாவில் எங்கும் வாங்க முடியாதிருந்த நிலையில் இவரது தந்தையார் அப்புத்தகத்திலிருந்த நூற்றி இருபத்தியொரு பாடல்களையும் சொல்லச் சொல்ல இவர் எழுதியிருக்கிறார்.

அதனால் இவரது சகோதரரது வற்புறுத்தலால் இவர் பயன் சொல்லி, தந்தையாரின் வெற்றிடத்தை நிரப்பினார். பின் சகோதரருக்கும் வேறு சிலருக்கும் பயன் சொல்லக் கற்றுக்கொடுத்தார்.

இன்று, கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம் முதலான புராணங்களுக்குப் பயன் சொல்லக்கூடிய பலர் இவரால் உருவாக்கப் பட்டுள்ளனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் 1991 முதல் கந்த சஷ்டிக் காலத்தில் கந்தபுராண படனத்தைத் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார். வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம், குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயம், கரப்பங்காடு வரசித்தி விநாயகர் ஆலயம், நகரப் புளியடி விநாயகர் ஆலயம், ஆகியவற்றில் விநாயக சஷ்டி விரத காலத்தில் பிள்ளையார் புராணத்திற்குப் பயன் சொல்லிவருகிறார்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இவருக்கு **"புராண படனப் புகழ்தகை"** என்ற பட்டத்தைக் கொடுத்தது. (12.06.1999). அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சியப்பர் கழகம் **"புராண படன வித்தகர்"** என்ற பட்டத்தைக் கொடுத்தது (1999) பல ஆலயங்கள், நிறுவனங்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டி கௌரவித்துள்ளன.

**மீண்டும் மலையகம்:-**

தனது ஆசிரிய கலாசாலைக் காலத்தை முடித்த பின் 1989 இல் மீண்டும் தனது பழைய பாடசாலைக்குச் சென்றார். அங்கே இவரது நண்பர் சு.முரளிதரன் பட்டப் படிப்பை [B.Sc.] முடித்துக் கொண்டு ஆசிரியராகக் கடைமை ஆற்றிக் கொண்டிருந்தார்.

குடும்பத்தோடு அங்கே வாழ்ந்த காலத்தில் மலையக எழுத்தாளர்கள் பலரோடு பழகும் வாய்ப்பு முரளிதரன் மூலம் இவருக்குக் கிடைத்தது. வானொலியில் பல உரைகளை ஆற்றினார். வானொலி நாடகங்கள் பல எழுதினார்

**சோதிடம் :-**

பல் கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் (1978) இவருக்குச் சோதிட ஆர்வம் ஏற்பட்டது. பல்கலைக் கழக நூல் நிலையத்தில் இருந்த பல சோதிட நூல்களைப் படித்தார். அவற்றில் **சப்தரிஷி நாடி** முக்கியமானது.

**சாதகாலங்காரம், புலிப்பாணி சோதிடம், ஜாதக பாஸ்கரன், சோதிட வினாவிடை,** முதலான பல நூல்களைப் படித்தார். பல ஆராய்ச்சிகளைச் செய்தார். **சோதிட மலர்** சஞ்சிகையில் பல சோதிடக் கட்டுரைகளை எழுதினார்.

சாதகம் குறிக்க, பார்க்க, வீட்டு நிலையம், கிணற்று நிலையம் எடுக்கப் பழகியுள்ளார். தொழிலாகச் செய்யாமல் தொண்டாகவே செய்தார்.

இவரது தந்தையார் இவற்றில் ஆற்றல் மிக்கவராக இருந்தார்,அதனால் அவரிடமிருந்தும் பலவிடையங்களைக் கற்றார். வவுனியாவில் பிரபல சோதிடராக விளங்கிய திரு.கா.மகேஸ்வரலிங்கம் அவர்களிடமும் சோதிட நுட்பங்களைக் கற்றுக் கொண்டர். இலக்கிய, சமய, சமூகப் பணிகளோடு, தனது ஆசிரியப் பணியும் சேர்ந்ததால் அந்தச் சுமையைக் குறைக்க சோதிடத்தைக் கைவிட்டு விட்டார்.

**மீண்டும் வவுனியாவில்:-**

வவுனியாவின் கொடூரமான இடப்பெயர்வின் பின், விடுவிக்கப்பட்ட பிரதேசமாக இருந்த வவுனியா நகரில், கடுமையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசதத்தில் 1991பிற் பகுதியில் வாழத்தொடங்கினார்.

இவரது பிறந்த ஊரான பம்பைமடு, மனைவியின் ஊரான கள்ளிக்குளம் ஆகிய இரண்டு ஊர்களும் இடம் பெயர்ந்து சென்றிருந்தன. வவுனியா நகர்க்குள்ளும் சற்று வெளியிலேயுமாக நான்கு இடங்களில் வாடகை வீடுகளில் இருந்து பின் 2002 இல் சொந்தமாக வீடொன்றை அரைகுறையாகக் கட்டிக் குடிபுகுந்தார்.

1992 பெப்ருவரியில் இடமாற்றம் பெற்று வவுனியாவிலேயே வாழ்கிறார். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகிய தேசியப் பாடசாலைகளில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இரண்டாவது தடவை பணியாற்றிக் கொண்டிருந்த போது தனது **55வயது** நிறைவோடு 30.09.2009 இல் ஆசிரியர் தரம் ஒன்றில் ஓய்வு பெற்றார்.

கணித ஆசிரியரான இவர் தனது ஆசிரியப் பணிக் காலத்தில் **கணிதம், தமிழ் மொழி, சைவசமயம், தமிழ் இலக்கியம்** ஆகிய பாடங்களைக் கற்பித்தார். க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு, **தமிழ்ப் பாடத்தையும்** கற்பித்திருக்கிறார்.

ஆசிரிய மாணவர்களுக்கான கணித பாட **பகுதி நேர விரிவுரை** யாளராகவும், கணித பாட **ஆசிரிய ஆலோசகராகவும்** பதவி வகித்தும், ஆசிரியப் பணியின் விருப்பினால் ஆசிரியராகவே கடமையாற்ற விரும்பி ஏனைய பதவிகளை விட்டுவிட்டு ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த திரு.ச.அருளானந்தம் அவர்களுடன் இணைந்து பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி **கலைப் பட்டப்படிப்பு** மாணவர்களுக்கு **தமிழ்** கற்பித்தார்.

திரு.அருளானந்தம் அவர்கள் மாற்றலாகிச் சென்றபின் தானே முன்னின்று ஏனைய பாட ஆசிரியர்களோடு தானும் தமிழ் கற்பித்தார். இன்று இவரிடம் தமிழ் கற்ற கலைப் பட்டதாரிகள் பலர் உயர் பதவிகளில் இருக்கிறார்கள்.

யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீ கணேசன் இக் காலத்தில் இவரோடு அறிமுகமானார். இருவரும் நீண்டகாலமாக வவுனியாவில் இலக்கியப் பணி ஆற்றிவருகின்றனர்..

அதில் முக்கியமானது வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தை ஆரம்பித்ததும், அதன் மூலம் பணியாற்றியதுமாகும்.

## நானும் அகளங்கனும்:-

இக் காலத்தில் தான் நான் வவுனியாவிற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தராகச் சென்றேன். அகளங்கன் அவர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருந்ததால் அவரைச் சென்று சந்தித்தேன்.

எமது மன்றச் செயற்பாடுகளுக்கும், எனது எழுத்துப் பணிக்கும் பல ஆலோசனைகளைச் சொல்லியும், அறிவுரைகளைத் தந்தும் பலவகைகளிலும் உதவினார். வவுனியாவில் எனது பணி உயிராபத்தோடு கூடிய பணியாக இருந்தது. அக் காலத்தில் தனது குடும்ப உறுப்பினராக என்னை நினைத்து ஆதரவும் அன்பும் காட்டினார். எனது நூல் வெளியீடுகளுக்கு உதவினார்.

வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவராக அவரும் செயலாளராக நானும் இணைந்து பணியாற்றினோம். **"கலைமருதம்"** என்ற மலரையும் இருவரும் இணைந்து தயாரித்தோம்.

வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழா வவுனியாவில் நடை பெற்றபோது **"மருதநிலா"** என்ற பெயரில் அற்புதமான ஒரு மலரைத் தயாரித்தோம். அகில இலங்கை மட்டத்திலான சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தி தங்கப்பதக்கம் உள்ளிட்ட உயர்ந்த பரிசுகளை வழங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா நூலகத்திற்கு ஈழத்து எழுத்தாளர்களது நூல் களில் ஐந்தைந்து பிரதி களைக் கொள்வனவு செய்து கொடுத்துப் பாதுகாக்க உதவினோம். எனது **"வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்"** என்ற ஆய்வு நூல் ஆக்கத்திற்கும், வெளியீட்டிற்கும் பல உதவிகளையும் செய்து தந்தார்.

வவுனியா நகரசபைத் தலைவராக இருந்த **திரு.G.T.லிங்கநாதன்** அவர்கள் வவுனியா அரசாங்க அதிபர்களாக இருந்த **திரு.உடுவை எஸ்.தில்லை நடராஜா** அவர்கள், **திரு.க.கணேஷ்** அவர்கள் ஆகியோர் எமது ஆலோசனைகளைக் கேட்டு முழு ஒத்துழைப்பும் தந்தனர்.

அகளங்கன் அவர்களின் "கூவாத குயில்கள்" (நாடகங்கள் - 2001), பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003) "சுட்டிக் குருவிகள்" (மழலைப்பாடல்கள்-2003), "சின்னச்சிட்டுக்கள்" (சிறுவர் பாடல்கள்-2005), "வாலி" (ஆய்வு, மூன்றாம் பதிப்பு-2006), "நறுந்தமிழ்" (கட்டுரைகள்-2006) "பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்" (ஆய்வு-2007), "வேரும் விழுதும்" (கட்டுரைகள்-2008), "கங்கையின் மைந்தன்" (நாடகங்கள் - 2009), "அலைக்குமிழ்" (நாவல்-20011), "சின்னஞ்சிறிய சிறகுகள்" (சிறுவர் பாடல்கள் -2012), ஆகிய பதினொரு நூல்களை எனது எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய பிரியா பிரசுரம் மூலம் வெளியிட்டிருக்கிறேன்.

2009 இல் இவரது குடும்பத்தினரோடு சேர்ந்து தமிழ் நாட்டுக்குச் சுற்றுப் பயணம் சென்றேன். இவரது நூல் வெளியீடுகளுக்கு ஆரம்பம் முதல் உதவிவரும் இவரது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.க.குமாரகுலசிங்கம் அவர்களும் குடும்பத்தோடு வந்திருந்தார்.

2010 இல் இவரும் இவரது மனைவியும், நானும் தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூசெஞ்சரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய சர்வதேசத் தமிழ் நூற் தேர்வுப் போட்டியில் பரிசுபெறுவதற்காகத் தமிழ் நாட்டுக்குச் சென்றோம். எழுத்தாளர் **வவுனியூர் இரா.உதயணனும்** பரிசு பெற எம்மோடு இணைந்திருந்தார்.

கேரள மாநிலத்து திருவனந்தபுரம் விமான நிலையத்தில் நாங்கள் இலங்கையில் இருந்து சென்று இறங்கினோம். உதயணன் இலண்டனிலிருந்து வந்து அவ் விமான நிலையத்தில் காத்திருந்தார்.

அன்றைய மீதிப் பகலையும், இரவையும் அங்கு கழித்துவிட்டு மறுநாள் தமிழ் நாடு திருநெல்வேலிக்குச் சென்றோம். மறுநாள் திருநெல் வேலி யிலுள்ள பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் பரிசளிப்பு விழாவும், கருத்தரங்கும் நடைபெற்றன. எங்கள் மூவருக்கும் பரிசுகள் தந்தார்கள்

2009ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்திய நான்கு ஆண்டுகளுக்குமாக ஐந்து ஆண்டுகளில் சர்வதேச அளவில் வெளிவந்த சிறந்த தமிழ்ச் சிறுவர் இலக்கியத்துக்கான பரிசு "குறும்புக்கார ஆமையார்" (சிறுவர் நாவல்) நூ லுக்காக எனக்கும், நாடகத்திற்கான பரிசு "கங்கையின் மைந்தன்" நாடகநூ லுக்காக இவருக்கும், நாவல் இலக்கியத்துக்கான பரிசு "நூல் அறுந்த பட்டங்கள்" நூலுக்காக உதயணனுக்கும் வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பயணத்தின் போது நானும் இவரும் இவரது மனைவியுமாக இராமேஸ்வரம் சென்று திரும்பினோம். பிரபல ஒளிப் பதிவாளர், இயக்குநர் **பாலு மகேந்திராவைச்** சந்தித்து அவருக்குரிய, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் **உயர் தமிழியல் விருதைக்** கொடுத்தோம்.

2012 இல் கு.சின்னப்பபாரதி சிறுவர் இலக்கிய விருது எனக்குக் கிடைத்தபோது இவரும் நானும் தமிழகம் சென்றோம். நாமக்கலில் அவ் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த எழுத்தாளர் திரு. உதயணனோடு கேரளா விற்குச் சென்றோம். அங்கு நடைபெற்ற உதயணனதும், டென்மார்க் ஜீவகுமாரன், திருமதி கலாநிதி ஜீவகுமாரன் ஆகியோரது நூல்களின் மலையாள மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டிலும், புலம்பெயர் இலக்கியக் கருத்தரங்கிலும் கலந்துகொண்டோம்.

எங்களோடு அன்ரனி ஜீவா, உபாலி லீலாரத்ன ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அகளங்கன் அவர்கள் என்னைப் பற்றித் தனது "நானும் எனது இலக்கியப் பயணமும்" என்ற கட்டுரையில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஓ.கே.குணநாதனை எனது உடன்பிறவாத் தம்பி என்று சொல்லலாம். தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்பது போல. குணநாதனைத் தம்பியாகப் பெற்ற நான் நூல் வெளியீட்டுக்கு அஞ்ச மாட்டேன். நான் இலக்கியச் சோர்வுற்ற போதெல்லாம் அவரே ஊக்கமாத்திரை தருபவர்.

எனது சிறுவர் இலக்கிய நூல்கள் வெளிவர இவரே காரணம். எனது மூன்று சிறுவர் பாடல் நூல்களை இவர் வெளியிட்டிருக்கிறார்.

திம்புப் பேச்சு வார்த்தைக் காலத்தில் ஈழ விடுதலை இயக்கங்களும், இலங்கை அரசும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்திருந்த போதும், ஆங்காங்கே யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களும், யுத்தமுறை அத்து மீறல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சமகாலச் சம்பவங்களோடு ஒப்பிட்டும், நினைவு கூரத்தக்க வகையிலும் பல இலக்கியக் கட்டுரைகளை ஈழ முரசு பத்திரிகையில் நான் எழுதி வந்த காலம் அது. அந்தக் கட்டுரைகள் எல்லாம் பெரும் வரவேற்பைப் பெற்றன.

அந்த அடிப்படையில் "மகா பாரதப் போரில் யுத்தமுறை அத்து மீறல்களும், யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களும்" என்ற தொடர் கட்டுரையை எழுதினேன். அக்கட்டுரை **ஈழமுரசு** பத்திரிகையில் **ஏழு வாரமலர்களில்** ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவந்தது. *(24-11-1985 - 05-01-1986)*

பெரும் வரவேற்புப் பெற்ற இத் தொடர் கட்டுரையை 2003ல் **"பாரதப் போரில் மீறல்கள்"** என்ற நூலாக வெளியிட்டார். பதினேழு வருடங்களின் பின் அது நூலாகியது. இதேபோல் எனது **"அலைக்குமிழ்"** நாவலை முப்பத்தி நான்கு ஆண்டுகளின் பின் இவரே நூலாக்கினார்.

எனது **"கங்கையின் மைந்தன்"** என்ற நாடக நூல் வெளிவந்ததற்கும் இவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம். இப்பொழுது எனது **முற்றத்துக் கரடி சிறுகதைத் தொகுப்பு, வன்னிப் பிரதேச வயற் பண்பாடு** ஆகிய நூல்களோடு சிறுவர் பாடல் நூல் ஒன்றையும் அச்சிட்டுக் கொண்டிருக்கிறார்.

எனக்குப் பல்வேறு வகைகளிலும் உற்ற துணையாக இருந்து உதவிவரும் ஓ.கே.குணநாதனுக்கு நன்றியை வாய் வார்த்தை களாலும் சொல்லி முடியாது. எழுத்தில் வடித்தும் அடங்காது."

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மூலம் **தமிழியல் விருது** வழங்கத் தீர்மானித்தபோது இவரே எனக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டார். இப்பொழுதும் இவர் ஆலோசகராகச் செயற்படுகிறார்.

**வானொலியில்:-**

வானொலியில் பல கவியரங்குகளிலும் கலந்து கொண்டார். பல கவியரங்குகளுக்குத் தலைமை வகித்தார். 1998ன் பிற்பகுதியில் கவிதைக் கலசம் என்ற பதினைந்து நிமிட நிகழ்ச்சியை நடாத்தினார். அந்நிகழ்ச்சியில் அதுவரை, நேயர்கள் அனுப்புகின்ற கவிதைகளையும், தாங்கள் படித்த சுவையான சில கவிதைகளையும் தான் ஒலிபரப்பி வந்தார்கள்.

சில்லையூர் செல்வராஜன், இளையதம்பி தயானந்தா, கவிஞர் நீலாபாலன் ஆகியோர் இவ்விதமாகச் செய்து வந்தனர்.

இவர் அப் பொறுப்பை ஏற்ற போது பதினைந்து நிமிட நேரத்தில் முதல் ஐந்து நிமிடங்களுக்கு கவிதை பற்றிய உரையை நயமாக ஆற்றி, அதன் பின்பே கவிதைகளை வாசித்தார். இவரோடு **மாவை வரோதயனும்** அடிக்கடி கவிதை வாசித்துள்ளார்.

இந்நிகழ்ச்சி **திரு.மதியழகன்** அவர்கள் பணிப்பாளராக இருந்த காலத்தில் நிகழ்ந்தது. **திருமதி.ஜமுனா சர்வானந்தா** அவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்தார்.

இவரது வித்தியாசமான அந்த முயற்சிக்கு அவர்கள் ஆதரவளித்தனர். முப்பத்தி எட்டு வாரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இரவு 9.30 ற்கு கவிதைக் கலசம் நிகழ்ச்சி ஒலிபரப்பப் பட்டது.

பின்பு 2001ல் மீண்டும் கவிதைக் கலசம் நடாத்தும் பொறுப்பு இவருக்குக் கிட்டியது. அப்போது அது அரை மணி நேர நிகழ்ச்சி. அந்நிகழ்ச்சியில் 10-15 நிமிடங்கள் வரை இவரது இலக்கியம், சமூகம், கவிதை சம்பந்தப் பட்ட உரை நிகழும். அதைத் தொடர்ந்தே கவிதைகள் வாசிக்கப் பட்டன. ஓராண்டுக்கு மேல் கவிதைக் கலசம் நிகழ்ச்சியை நடாத்தினார். இவரோடு திரு.சு.உதயகுமாரும் கலந்து கொண்டார்.

அப்போது **திருமதி.அருந்ததி ஸ்ரீரங்கநாதன்** அவர்கள் பணிப்பாளராகவும், **திரு.உருத்திராபதி** அவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்தார்கள்.

தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி பலரை வானொலி நிலையத்துக்கு அழைத்துச் சென்று கவிதை வாசிக்க வாய்ப்பளித்தார். கவியரங்குகளில் பங்கு பற்றவும் வாய்ப்பளித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டிய நாடகங்கள்:-**

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை இவர் எழுதியுள்ளார். அவற்றில் தமிழ்த் தினப் போட்டிகளில் மூன்று நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளன.இரண்டு நாட்டிய நாடகங்கள் இரண்டாமிடம் பெற்றன,

வட மாகாண கல்வி அமைச்சு நடாத்திய ஒருமணிநேர நாட்டிய நாடகப் போட்டியில் இவரது **"பத்தினித் தெய்வம்"** நாட்டிய நாடகம் முதலிடம் பெற்றது.

**பத்தினித் தெய்வம்** என்ற இவரது நாட்டிய நாடகநூல் வடமாகாண சாகித்திய மண்டல விருதைப் பெற்றது. இவரது பல நாட்டிய நாடகங்கள் வேறுபல பரிசுகளையும் பெற்றுள்ளன. எனது வேண்டுகோளுக்கிணங்கி **மாமாங்கேஸ்வரர்** என்ற நாட்டிய நாடகத்தை எழுதித் தந்தார். அது இன்னும் அரங்கேற்றப்படவில்லை.

இவரது நாட்டிய நாடகங்களை **திருமதி.சூரிய யாழினி வீரசிங்கம்** மற்றும் பலர் தயாரித்துள்ளனர். இவரது பல நாட்டியப் பாடல்களுக்கும், பல, நாட்டிய நாடகப் பாடல் களுக்கும், மற்றும் பல பாடல்களுக்கும் **திருமதி.தேவிமனோகரி நாகேஸ்பரன்** இசையமைத்துள்ளார்.

திரு.சோ.ஜெயச்சந்திரா, திரு.கந்தப்பு ஜெயந்தன், கலாபூசணம் விமலலோஜினி கனகேஸ்வரன் மற்றும் பலர் இசையமைத் துள்ளனர்.

கலாபூசணம் க. கனகேஸ்வரன், கந்தப்பு ஜெயந்தன், உசேனி ஸ்ரீ தரன் செல்வன் ஞா.வசந்த் முதலான பலர் இவரது பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

பல பா நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். அவை நூல் வடிவம் பெறத் தொகுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

**குறும் படம்:-**

வவுனியா நகரசபை இவரது **"யாழ் தேவி"** என்ற குறும் படத்தைத் தயாரித்தது.இதன் கதை வசனத்தை இவர் எழுதினார். **திரு.அருணா செல்லத்துரை** அவர்கள் இயக்கினார் திரு.புவனேஸ்வரன் (போனெக்ஸ்) ஒளிப்பதிவு செய்தார். (1994) வவுனியாவில் வெளிவந்த முதல்க் குறும்படம் இதுவே.

இவரது "செஞ்சோற்றுக்கடன்" என்ற நாடகத்தை **திரு.சு.பூபாலசிங்கம்** அவர்கள் ஆங்கிலத்தில் GRATITUTE என்ற பெயரில் மொழிபெயர்த்தார். அதனை கிருஷ்ணகுமார் என்பவர் குறும் படமாகத் தயாரித்தார். (2005)

**தொலைக்காட்சி:-**

இலங்கை **ரூபவாஹினியில்** பல கவியரங்கு களில் கலந்து கொண் டிருக்கிறார். தலைமையும் தாங்கியிருக்கிறார். பல தடவைகள் பேட்டியளித் துள்ளார். இவரது பல பாடல்களுக்கான நாட்டிய நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. **வசந்தம்** தொலைக் காட்சியிலும் இவரது பேட்டி ஒளிபரப்பாகியிருக்கிறது.

புது வருடப் பிறப்பு நிகழ்வாக ரூபவாஹினி தயாரித்த **"வந்தது வசந்தம்"** என்ற ஒரு கலாசார விவரணக் குறும்படத்தில் இவரும் இவரது மனைவியும் நடித்திருக்கின்றனர். (1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசு - கௌரவம்:-**

1991 இல் சர்வதேச ஆசிரியர் தினம் முதன் முதல் உலகளாவிய ரீதியில் கொண்டாடத் தொடங்கப்பட்ட போது, இலங்கையில் ஆசிரியர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டன.

அதில் நாடகப் பிரதியாக்கப் போட்டியில் இவரது **"உருகி எரியும் கர்ப்பூரங்கள்"** என்ற நாடகம் முதலாம் இடம் பெற்று ஜனாதிபதிப் பரிசைப் பெற்றது. இந்நாடகத்தை பின்பு வானொலி நாடகமாக மாற்றி எழுதினார். அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் ஒலிபரப்பப் பட்டது.

**"அன்றில் பறவைகள்"** என்ற நாடக நூலில் இடம்பெற்ற இந் நாடகம் ஆங்கிலத்தில் "MELTING CAMPHORS" என்ற பெயரில் திரு.சு.பூபாலசிங்கம் அவர்களால் மொழி பெயர்க்கப் பட்டு, வவுனியாவில் மேடையேற்றப் பட்டதும் குறிப்பிடத் தக்கது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் முதல் இலக்கிய விழா திருகோணமலையில் 1991இல் நடாத்தப் பட்டபோது கௌரவிக்கப் பட்ட ஐந்து எழுத்தாளர்களில் இவரும் ஒருவராக இருந்தார்.

1993 இல் இந்து கலாசார அமைச்சு **"தமிழ் மணி"** பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. 2000 இல் வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் இவரது முப்பது வருட கலை, இலக்கியப் பணியைப் பாராட்டி வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு **ஆளுநர் விருது** கொடுத்துக் கௌரவித்தது.

2003 இல் எகேட் நிறுவனத்தின் மூலம் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் மட்டக்களப்பு காத்தான்குடியில் விழாவொன்றை ஏற்பாடு செய்திருந்தது. வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவுக்காக, இலக்கியப் பங்களிப்புச் செய்த இரண்டு பேரைக் கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழா அது.

அந்த விழாவில் இவரும் டாக்டர் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனும் கௌரவிக்கப் பட்டனர்.

இக் கௌரவம் இவருக்குக் கிடைப்பதற்கு முக்கிய காரணம் இவர், டாக்டர் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் இரண்டு காப்பியங்களை ஆய்வு செய்ததே..

கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் "புனித பூமியிலே" "மஹ்ஜபின் காவியம்" ஆகிய இரு காவியங்களையும் ஆராய்ந்து, இவர் எழுதிய நூலை கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் நூலாக்கினார்.

அந் நூல் **"கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு"** என்ற பெயரில் சென்னையில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆறாம் மாநாட்டில் தமிழக ஆளுநர் பாத்திமா பீபியினால் வெளியிடப் பட்டது.

கவிஞர் ஜின்னா இவரது மிக நெருக்கமான நண்பர். ஜின்னாவை இவர் தனது உடன் பிறவா மூத்த சகோதரர் என்று குறிப்பிடுகிறார். ஜின்னாவின் காவியங்களைச் சரியான வகையில் ஆராய்ந்து வெளிப்படுத்தி பெரும் புகழைத் தேடிக்கொடுத்தவர் இவரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது **"அன்றில் பறவைகள்"** நாடகத்தை தொலை நாடகமாக (Tele Drama) தயாரிக்க அனுமதித்தார்கள். இருப்பினும் அது இன்னும் தயாரிக்கப் படவில்லை.

இவரது **"யாழ்தேவி"** குறும் படம் ரூபவாகினி கூட்டுத்தாபனத்தினரால் தயாரிக்கப்பட இருந்தும் அரசியல் பிரச்னை என்று காரணம் காட்டி தயாரிக்கப் படாமல் விடப்பட்டது.

**சர்வதேச நாடகங்கள்:-**

**அவுஸ்திரேலிய** "முத்தமிழ் முழக்கம்", "முத்தமிழ் மாலை" ஆகிய வானொலிச் சேவைகளில், **"அன்றில் பறவைகள்", "இயந்திர இல்லறம்"** ஆகிய நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டன **திரு.எஸ்.செல்வராஜா** இவற்றைத் தயாரித்துத் தானும் நடித்தார்.

**சர்வதேச ஒலிபரப்புச்** சேவையில் (I.B.C) **திரு.தேவராஜா** அவர்களால் **"அன்றில் பறவைகள்"** என்ற இவரது நாடகம் தயாரிக்கப் பட்டு ஒலிபரப்பாகியது. கனடா, சுவிஸ், பிரான்ஸ், முதலான நாடுகளிலும் இவரது நாடகங்கள் ஒலிபரப்பாகியதுடன், மேடையேற்றப் பட்டுமுள்ளன.

**கனடா (C.T.R)** வானொலியில் இவரது **"பப்புருவாகனன்"** என்ற நாடகம் **"தர்மம் வெல்லும்"** என்ற பெயரில் **திரு.எஸ்.எஸ்.துரை** அவர்களால் தயாரிக்கப் பட்டு பல தடவைகள் ஒலிபரப்பப் பட்டுள்ளது. பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

**கவிதைகள்:-**

கவிதைதான் இவரது முதல் ஆக்க இலக்கிய வடிவம். அந்த வகையில் பல கவியரங்குகளில் பங்குபற்றி, பல கவியரங்குகளுக்குத் தலைமை வகித்திருக்கிறார்.

"செல்" "வா" என்று ஆணையிடாய், "சேரர் வழியில் வீரர் காவியம்", "சமவெளி மலைகள்", (அகளங்கன், சு.முரளிதரன்), "தென்றலும் தெம்மாங்கும்", "அகளங்கன் கவிதைகள்", "இசைப்பாமாலை" "சுட்டிக் குருவிகள்" (சிறுவர் பாடல்கள்), "சின்னச் சிட்டுக்கள்" (சிறுவர் பாடல்கள்) "சிரிக்க விடுங்கள்" (சிறுவர் பாடல்கள்) "பந்து அடிப்போம்" (சிறுவர் பாடல்கள்) "சின்னஞ் சிறிய சிறகுகள்" (குழந்தைப் பாடல்கள்) என்பன இவரது. கவிதை நூல்கள்.

இவற்றில் "அகளங்கன் கவிதைகள்" நூல் வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய நூல் பரிசைப் பெற்றது (1996), சின்னஞ்சிறிய சிறகுகள் குழந்தைப் பாடல்கள் நூல் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்றது. (2012). தமிழியல் விருது, வடமாகாண சிறுவர் இலக்கிய விருது என்பவற்றையும் பெற்றது.

**இசைப் பாடல்கள்:-**

கும்மி, கரகாட்டம், கோலாட்டம், போன்ற கலை வடிவங்களுக்காகவும் பாடல்கள் எழுதியுள்ளார். பொங்கல், புதுவருடம், தொழில், கிராமியம் எனப் பல பாடல்கள் எழுதியுள்ளார்.

"வன்னி ஓடை", "வன்னி அருவி", "வன்னி ஊற்று", "சிறகுகள்" "TRAIN" "இதயத்தின் ஓசை" எனும் பெயர் கொண்ட பாடல் தொகுப்பு, ஒலிப் பேழைகளிலும் இவரது இசைப் பாடல்கள் வெளிவந்துள்ளன.

இவரது "சின்னச்சிட்டுக்கள்" நூலிலுள்ள பாடல்கள் மீள் கல்விச் செயற்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் நான்கு மாணவரின் "மழலைக்குரல்" இறுவட்டாக வவுனியா தமிழ் மத்திய மகா வித் தியாலயத்தினால் வெளியிடப்பட்டது.

**டென்மார்க்** பிரெண்டா ஸ்ரீ அபிராமி அம்மன் பற்றி இவரெழுதிய பன்னிரண்டு பக்திப் பாடல்கள் **"ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பாடல்கள்"** என்ற பெயரில் இறுவட்டாக வெளிவந்திருக்கிறது. தென் இந்திய இசையமைப்பாளர் எல்.ஷீவனேஷ் இன் இசையமைப்பில் புஷ்பவனம் குப்புசாமி முதலானோர் பாடியிருக்கிறார்கள்.

**கீதங்கள்:-**

பல மன்றங்களுக்கும், நிறுவனங்களுக்கும் பல பாடசாலைகளுக்கும் கீதங்களை எழுதிக் கொடுத்துள்ளார். இவர் முதல் எழுதிய கீதம் **யாழ் வளாகத் தமிழ் மன்றக் கீதம்.**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா நகரசபை, வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபை, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை, நெடுங்கேணி பிரதேச செயலகம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பாலர் பாடசாலை, வவுனியா இந்து மாமன்றம். வவுனியா பெண்கள் அபிவிருத்தி மையம். வவுனியா விபுலம் அரங்கியற் கலைக் கழகம். வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வணிக மன்றம்.

வவுனியா பம்பைமடு அ.த.க.பாடசாலை, வவுனியா ஒலுமடு அ.த.க. பாடசாலை, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், செட்டிகுளம் கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயம், வவுனியா கணேசபுரம் விநாயக வித்தியாலயம், முதலான வற்றின் கீதங்களை இயற்றியுள்ளார்.

இவரது **"இசைத்திட முடியாது எங்கள் பெருமை....."** எனத்தொடங்கும் தமிழ் வாழ்த்துக் கீதம் மிகவும் சிறப்பானது. வவுனியா கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் நாள்தோறும் பாடப்படுகின்றது. இவரது **வித்தியா விநாயகர்** துதிப் பாடல் **திங்கட்கிழமை** தோறும் காலைப் பிரார்த்தனையின் போது, **வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி யாலயத்தில்** பாடப்பட்டு வருகிறது

இவரது **வவுனியா பிரதேச செயலகக் கீதம்** வவுனியா பிரதேச செயலகத்தில் **நாள்தோறும் காலையில்** ஒலிபரப்பப் படுகிறது.

**கட்டுரைகள்:-**

இவரது நானூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. பல மலர்களுக்கு பல தலைப்புகளில் இலக்கிய, சமய, சமூகஞ் சார்ந்த பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். பல ஆய்வுக் கட்டுரைகளும், கட்டுரைகளும், பரிசுகளையும் பெற்றுள்ளன. சில கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

இவரது கட்டுரைகள், வீரகேசரி, தினகரன், தினக்குரல், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, முதலான பத்திரிகைகளிலும், சிரித்திரன், சுவைத்திரள். ஆலயமணி கிருத யுகம், தமிழமுதம், சோதிட மலர். பூரணி, சுடர், ஞானம், மாருதம், கொம்பறை, முதலான சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா மலர்கள், கும்பாபிஷேக மலர்கள், மற்றும் பல மலர் களிலும் வெளிவந்துள்ளன.

**மன்றங்கள்:-**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தொடர்பு 1979இல் இவரது மூத்த சகோதரர் மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா அவர்கள் மூலம் கிடைத்தது. இச் சங்கத்தில் பலபதவிகளை இவர் வகித்திருக்கிறார். போசகராகவும் இருந்திருக் கிறார். தற்போது துணைத் தலைவராக இருக்கிறார்.

வவுனியா இந்து மாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான இவர் தற்போது போசகராக இருக்கிறார்.

இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா தற்போது இந்துமா மன்றத்தின் தலைவராக இருக்கிறார். தேவராசா அவர்களின் ஐநூறு திருவாசக முற்றோதல்களின் நினைவுப் பாராட்டு விழாவின் போது இவர் **"திருவாசகத்தேன்"** என்ற மலரை ஆக்கிக்கொடுத்தார்.

**ஆக்கிக் கொடுத்த நூல்கள்:-**

கவிஞர் கண்ணையா அவர்களுக்கு அவரது **"கவிதைப் பூக்கள்"** என்ற நூலையும், கலாநிதி முல்லைமணி அவர்களுக்கு அவரது **"வன்னியர் திலகம்"** என்ற நூலையும், கலாபூசணம் செபமாலை அவர்களுக்கு அவரது **"குயிலும் மயிலும்"** என்ற நூலையும், பொன்.சந்திரசேகரி அவர்களுக்கு அவரது **"மலரும் நினைவுகள்"** என்ற நூலையும், இரா.சுப்பிரமணியம் அவர்களுக்கு அவரது **"தந்தை செல்வா ஒரு காவியம்"** என்ற நூலையும், ஞா.ஜெகநாதன் அவர்களுக்கு அவரது **"நாகர் எழு வன்னி"** என்ற நூலையும் இவர் பொறுப் பெடுத்து ஊதியம் எதுவும் பெறாமல் செய்து கொடுத்துள்ளார்.

J.P.LEWIS அவர்களின் "MANUAL OF THE VANNI DISTRICTS" என்ற நூலை தமிழ் மொழியில் **"இலங்கையின் வன்னிமாவட்டங்கள் ஒரு கையேடு"** என்ற பெயரில் வெளியிட தமிழ் மொழியாக்கக் குழுவின் செயலாளராகச் செயற்பட்டு பெரும் உதவி செய்தார்.

**நன்றிக்குரியோர்:-**

**சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி** அவர்கள் இவரது நூல் வெளியீடுகள் பலவற்றிற்கு உதவி செய்து உற்சாகப் படுத்தியுள்ளார். **ஸ்தபதி, அருட்கலை வாருதி, கலாபூசணம், சு.சண்முகவடிவேல்** அவர்கள் இவரது பல நூல் வெளியீடுகளுக்கு உதவி செய்திருக்கிறார். குறிப்பாக இவரது **"பத்தினித்தெய்வம்"** நாட்டிய நாடக நூல் வெளியீட்டுக்கு உதவியதைக் குறிப்பிடலாம்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் இவருக்கு மூத்த சகோதரனாக அன்பு செலுத்துபவர். நயினை கி.கிருபானந்தா அவர்கள் இவரை மிகவும் உரிமையோடு தனது சொந்தச் சகோதரராக நினைத்துப் பழகுபவர். பல உதவிகளையும் செய்தவர்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்** அவர்கள் இவரது வாலி நூல் வடிவம் பெறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இருந்தவர். **"சாகித்தியரத்னா" செங்கை ஆழியான்** அவர்கள் இவரது அலைக்குமிழ் நாவல் வெளிவரப் பாடுபட்டவர்.

எழுத்தாளர் **வவுனியூர் இரா.உதயணன்** இவருக்குப் பல வகைகளிலும் உதவிவருபவர். இவரது "முற்றத்துக் கரடி" என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட உதவியவர்.

வவுனியாவின் மூன்று பிரதேசச் செயலகங்களிலும் பிரதேசச் செயலாளராகக் கடமை புரிந்த **திரு.க.ஐயம்பிள்ளை** அவர்கள் இவருக்குப் பலவழிகளில் உதவியிருக்கிறார். வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தின் போசகராக இருந்த இவர் அகளங்கனின் தாய் வழிச் சிறிய தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

**அமரர் சுப்பையா வீரசிங்கம்** அவர்கள் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த போது இவருக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறார்.

**இறைபணிச்செம்மல், கலாபூஷணம் வை.செ.தேவராஜா, திரு.க.ந.பாலச்சந்திரன், திரு.T.K.இராஜலிங்கம்** முதலான பல வர்த்தகர்கள் இவரது நூல் வெளியீடுகளுக்கு உதவியுள்ளனர், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் பல வகைகளிலும் இவருக்கு உதவியிருக்கிறது.

**முதல்வர்:-**

தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற முதல் வானொலி நாடக நூல் இவரது **அன்றில் பறவைகள்** *(1992)*

ஒரே ஆண்டில் இரண்டு துறைகள் சார்ந்த இரண்டு நூல்களுக்காக வடமாகாண சாகித்திய மண்டல விருதுகளைப் பெற்ற ஒரே படைப்பாளி இவரே.

**பத்தினித் தெய்வம்** என்ற இவரது நாட்டிய நாடக நூலும், **வேரும் விழுதும்** என்ற கட்டுரைத் தொகுப்பு நூலும் 2008 இல் பரிசு பெற்றன.

அதிக நாட்டிய நாடகங்களை எழுதியவர் இவரே. இவர் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதியுள்ளார்.

மன்றங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள், சபைகள், செயலகங்கள், முதலான வற்றுக்காக இருபதுக்கும் மேற்பட்ட கீதங்களை எழுதியுள்ளார்.

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, ஆய்வு, இசைப்பாடல், நாடகம், நாட்டிய நாடகம், சிறுவர் இலக்கியம், பா நாடகம், கீதம், வில்லுப் பாட்டு, சோதிடம், புராண படனம், பேச்சு, உரை விளக்கம், நாட்டியப் பாடல்கள், வானொலி நாடகம், குறும் படம், கவியரங்கம், என அதிக துறைகளில் படைத்து வருபவர்.

யாழ்ப் பாண வளாகத்தில் படித்தவரால் எழுதப்பட்ட முதல் நாவல் இவருடைய அலைக்குமிழ் *(1977)*

பலதுறைகளில் அதிக நூல்களை எழுதி வெளியிட்டவர்.நாற்பத்தி நான்கு நூல்கள். இன்னும் பலவற்றின் முதல்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியாவில்:-**

முதன் முதல் வானொலியில் உரையாற்றியவர். முதன் முதல் வானொலியில் கவியரங்கில் பங்கு பற்றியவர். முதன்முதல் வானொலியில் கவியரங்கத் தலைமை வகித்தவர். முதன் முதல் வானொலி நாடகம் எழுதியவர், முதன் முதல் வானொலி நிகழ்ச்சியை நடாத்தியவர்.

முதல் நாவலை எழுதியவர். இவரது அலைக்குமிழ் நாவலே வவுனியாவில் பிறந்த ஒருவரால் எழுதப்பட்ட முதல் நாவலாகும். இது 1977 இல் எழுதப்பட்டது. வெளிவந்தது 2010 இல்.

தொலைக் காட்சியில் முதன் முதல் பேட்டி வழங்கியவர். தொலைக்காட்சியில் முதன் முதல் கவியரங்கில் கலந்து கொண்டவர். தொலைக்காட்சியில் முதன்முதல் கவியரங்கிற்குத் தலைமை வகித்தவர். முதன் முதல் தொலைக்காட்சியில் நடித்தவர்.

முதற் குறும் படமான "யாழ் தேவி" யின் கதை வசனம் எழுதியவர்.

முதன் முதல் நாட்டிய நாடகம் எழுதியவர். முதன் முதல் நாட்டிய நாடக நூலை வெளியிட்டு வடமாகாண சாகித்திய மண்டல விருதையும் பெற்றவர். (2008)

முதன் முதல் தேசிய சாகித்திய விருது பெற்றவர் (1992), முதன் முதல் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றவர். (2000), முதன் முதல் இந்து கலாசார அமைச்சின் தமிழ் மணி விருது பெற்றவர் (1993),

முதன் முதல் வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டல விருது பெற்றவர் (1994), முதன் முதல் வடமாகாண சாகித்திய மண்டல விருது பெற்றவர் (2008),

முதல் இலக்கிய அமைப்பான வவுனியா இலக்கிய வட்டத்தின் தலைவராக இருந்தவர்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள், முதலானவற்றில் நானூறுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை எழுதியவர்.

அதிக எண்ணிக்கையான நூல்களை வெளியிட்டவர். இதுவரை நாற்பத்தி நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார்.

அதிக எண்ணிக்கையான பரிசுகளைப் பெற்றவர்.வவுனியாவில் முதன் முதல் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். வவுனியா இந்து மாமன்றம் இவருக்கு **காவியமாமணி** என்ற பட்டம் வழங்கியது.

நூலுக்கான சர்வதேச விருதை முதன் முதல் பெற்றவர். இவரது கங்கையின் மைந்தன் நாடகநூல் இந்தியாவில் பரிசு பெற்றது.

ஒரே நூலுக்காக ஐந்து பரிசுகளைப் பெற்றவர். இவரது கங்கையின் மைந்தன் நாடகநூல் ஐந்து பரிசுகளைப் பெற்றது.

இலங்கை இலக்கியப் பேரவையின் நூற் பரிசை முதன்முதல் பெற்றவரும், அதிக தடவைகள் பெற்றவரும் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக மெல்லிசைப் பாடல்களை எழுதியவர் இவரே.ஒரே நூலின் அதிக பதிப்புக்களைக் கண்டவரும் இவரே. இவரது "வாலி" ஆய்வு நூல் மூன்று பதிப்புக்கள் கண்டது.

வெளி நாடுகளில் நடிக்கப்பட்ட அதிக நாடகங்களை எழுதியவரும் இவரே. வெளிநாட்டுப் போட்டிகளில் அதிக பரிசுகளைப் பெற்றவரும் இவரே.

கட்டுரை, நாடகம், நாட்டிய நாடகம், ஆய்வு, சிறுவர் இலக்கியம், வானொலி நாடகம், விளக்க உரை, இசைப் பாடல், முதலான துறைகளில் முதன் முதல் நூல் வெளியிட்டவர்.

**செம்மாங்கனி** என்ற உலகத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் தனது கவிதை மூலம் இடம் பிடித்தவர். (1982)

இன்னும் பலவற்றின் முதல் கலைஞராகவும் இவர் திகழ்கிறார்.

**ஓ.கே.குணநாதன்.**
64,கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

**"வாலி"** ஆய்வு நூல் பற்றி அந்நூலின் மதிப்புரையில் **பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் Ph.D** (தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

கம்பராமாயணத்தில் வாலிவதை ஒரு சர்ச்சைக்குரிய சுவையான பகுதியாகும். இது தொடர்பாகப் பல கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்துள்ளன. இப்பகுதியினை புதிய கோணத்தில் நின்று பார்ப்பதாக அகளங்கன் அவர்களுடைய **வாலி** என்னும் இந்நூல் அமைகின்றது. இந்நூலாசிரியர் கணிதத்துறையிலே பயிற்சி பெற்றவர். இவர் தமிழ் இலக்கியம் ஒன்றினை ஆழமாக நோக்கிப் புதுமையான கருத்துக்களையும், நுணுக்கமான விளக்கங்களையும் பொருத்தமான வாதங்களையும் முன்வைத்து இந்நூலை எழுதியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயம். இரு வேறுபட்ட துறைகளின் சேர்க்கை புதிய பரிணாமங்களைத் தோற்றுவிக்கலாம் என்பதற்கு இந்நூலாசிரியரின் முயற்சி நல்ல எடுத்துக்காட்டு. (1987)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# தமிழ் அறிஞர் அகளங்கன் அவர்கள்

**பிறந்த இடம்:**

ஈழ வள நாட்டின் இதயப் பகுதியாக விளங்கும், **வட மாகாணத்தின்** தலை வாசலாகத் திகழும், **வவுனியா** நகரின், மேற்கே மன்னார் வீதியில் எட்டுக் கிலோ மீற்றர் தூரம் சென்று, பின் வடக்கே காட்டுப் பாதையூடாக மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வட மேற்குத் திசையில் இருக்கும் **பம்பைமடு** என்னும் அழகிய சிறிய விவசாயக் கிராமம்.

**பரம்பரை:**

இவரது தந்தை வழிப் பாட்டன் **சேனாதிராசா** வவுனியா **மருக்காரம்பளையைச்** சேர்ந்தவர். தந்தை வழிப் பாட்டி **நாகமுத்து** வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த **ஆவரங்குளத்தில்** வாழ்ந்தவர்.

தந்தை வழிப்பூட்டன் **அருணாசலம் மருக்காரம்பளையைச்** சேர்ந்தவர் அவரின் தந்தையார் (கொப்பாட்டன்) **தாமோதரம்பிள்ளை முதலியார்** வவுனியா **தவசியாகுளத்தில்** வாழ்ந்தவர். அவரின் தந்தையார் **கதிரவேலு** உடையார். அவரின் தந்தை யார் **தேவர்.** தாயார் **பத்தினியார்.**

இவர்களின் பிறப்பிடம் வவுனியா மாவட்டம் என்பதைத் தவிர வேறு தகவல்களை அறிய முடியவில்லை.

தந்தை வழியில் **முதலியார், உடையார்** முதலிய பதவிகளை இவரது மூதாதையர்கள் வகித்திருக்கிறார்கள். **பத்தினியார் மகிழங்குளம்** என்ற ஊர்ப் பெயர் இவரது பரம்பரையிலிருந்து வந்திருக்கலாம்.

இவரது தந்தையின் தாய் வழிப் பாட்டன் **சரவணமுத்து**, தாய்வழிப்பாட்டி **தெய்வானை** ஆகியோர் **ஆவரங்குளத்தைச்** சேர்ந்தவர்கள். தாய் வழிப்பூட்டன் **சுப்பிரமணிய வாத்தியார்** யாழ்ப்பாணம் **நீர்வேலியைச்** சேர்ந்தவர். பூட்டி **பண்டார இலுப்பைக்குளத்தை** சேர்ந்தவர் (வன்னி).

இவரது தாய்வழியில், தாய்வழிப் பூட்டன் **கந்தையா**, பூட்டி **நாகம்மா.** இருவரும் யாழ்ப்பாணம் சாவகச்சேரி **நுணாவிலைச்** சேர்ந்தவர்கள். தாய்வழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டன் **வேலுப்பிள்ளை நுணாவிலைச்** சேர்ந்தவர். தாய்வழிப்பாட்டி **தங்கமுத்து வவுனியா பம்பைமடுவைச்** சேர்ந்தவர்.

**பெற்றோர்:**

தந்தையார் **சேனாதிராஜா நாகலிங்கம்** தாயார் **நல்லம்மா.** தந்தையார் வில்லி பாரதம், கம்பராமாயணம், முதலான இதிகாசங்களிலும் ஏனைய இலக்கியங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். பல பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தவர். ஆலயங்களில் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் புராணம் முதலான புராணங்களுக்கு புராண படனம் (விரிவுரை) செய்பவர். சோதிடத்திலும், வீடு, கிணறு முதலானவற்றுக்கு நிலையம் எடுப்பதிலும் வல்லவர். சமூக சேவகர். பிரதேச மட்டத்தில் சமூக சேவைக்கெனப் பல பதவிகளை வகித்தவர்.

**சகோதரர்கள்:**

**சேனாதிராசா, தியாகராசா, வில்வராசா, நடராசா, யோகராசா (அமரர்)** என ஐந்து மூத்த ஆண் சகோதரர்களையும் **கமலாவதி** எனும் ஒரு மூத்த சகோதரி, **புனிதவதி** எனும் ஒரு இளைய சகோதரி என எட்டுப் பேர் கொண்ட குடும்பத்தில் ஏழாவது பிள்ளை.

**பிறந்த திகதி : 1953.12.04.**

**பெயர் : நா.தர்மராஜா.**

**புனைபெயர் : அகளங்கன்**

**மனைவி:**

வவுனியா நகரின் கிழக்குத் திசையில் கொறவப் பொத்தான வீதியில் மூன்று கிலோ மீற்றர் தூரம் சென்று, பின் வடக்கே ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் வட கிழக்குத் திசையில் உள்ள **கள்ளிக்குளம்** எனும் கிராமத்தில் **மா.பூலோகசிங்கம் சின்னம்மா** தம்பதிகளின் மகளாகப் பிறந்தவர். பெயர் **பூரணேஸ்வரி** யாழ் பல்கலைக் கழக பொருளியல் சிறப்புப் பட்டதாரி B.A.(Hons-Economics)

**பரம்பரை:**

இவரின் தாய்வழிப் பாட்டன் **கணபதிப்பிள்ளை றியிஸ்ட்ரார்** (பதிவாளர்) வவுனியா கள்ளிக்குளம். தாய்வழிப் பூட்டன் **சின்னத்தம்பி உடையார்.** (வவுனியா, ஓமந்தை நாவற்குளம்) இவரின் தந்தை, தாய் வழியில் **சித்த வைத்தியர்கள். முதலியார் உடையார்** முதலான பதவிகளை வகித்தவர்கள் இருந்திருக்கின்றனர்.

**பிள்ளைகள்:**

இரண்டு பிள்ளைகள். மூத்தவர் **அநுபாயன்** க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 3A சித்தியோடு (Supermerit) மாவட்டத்தில் முதலிடம் பெற்று, மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் கல்வி கற்று **1ம் வகுப்பில்** (1st class) சித்தி எய்தி, புலமைப்பரிசில் பெற்று **அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து** (QUT) **பல்கலைக் கழகத்தில் பொறியியல்** துறையில் **கலாநிதிப்பட்டம்** பெற்றவர்.

தற்போது வவுனியா திரு.க.சற்குணராசா அவர்களின் மகள் **டாக்டர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நித்தியா** (M.B.B.S யாழ். பல்கலைக்கழகம்.) அவர்களைத் திருமணம் செய்து அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவர்களுக்கு **ஆதிரா** எனும் பெண் குழந்தை 15.7.2013ல் பிறந்துள்ளது.

அடுத்தவர் மகள் **அநிந்திதை.** யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டப் படிப்பில் **தொகுதி முதன்மைச் சித்தி** (Batch Top) பெற்றவர். தமிழ் சிறப்புப் பட்டதாரி B.A(Hons Tamil). யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாகத்து ஆங்கில மொழி **டிப்ளோமா பட்டம்** முதன்மைச்சித்தி (Dip in Eng - Merit) பெற்றவர்.

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதி நேர தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். தற்போது திருகோணமலையைச் சேர்ந்த சட்டத்தரணி (வழக்கறிஞர்) திரு.தியாகராஜா கேசவராஜன் L.L.B.Attorney.At Law Commissioner For Oaths. (கொழும்புப் பல்கலைக் கழகம்) அவர்களைத் திருமணம் செய்து திருகோணமலையில் வாழ்கிறார்.

**கல்வி:**

ஆரம்பக்கல்வி, **பம்பைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.** இடை நிலைக் கல்வி **வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்** (6 - தொடக்கம் க .பொ. த. சாதாரண தரம் வரை) உயர் கல்வி. க.பொ.த உயர் தரம் **யாழ்ப்பாணத்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.** கணித விஞ்ஞானத் துறை. பல்கலைக்கழகக் கல்வி. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கணித புள்ளி விபரவியல் துறையில் பட்டப் படிப்பு.

**தொழில்:**

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் (**05.08.1984** முதல்) கணித ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய போது **30.09.2009** ல் ஓய்வு பெற்றார்.

**கலை இலக்கிய ஈடுபாடு:**

பாடசாலைக் காலத்திலேயே (**1970**) கவிதை எழுதத் தொடங்கினார். **வில்லுப்பாட்டு** எழுதி நண்பர்களோடு மேடை ஏற்றினார். **கவியரங்குகளில்** பங்கு கொண்டார். **பேச்சுத்** துறையில் ஈடுபாடு கொண்டார்.

**முதல் ஆக்கம்:**

வவுனியாவின் முதல்ப் புதுக்கவிதைத் தொகுப்பான **சுவடுகள்** எனும் கவிதைத் தொகுப்பில் இவரது முதல் ஆக்கமான **"எடுப்பதோ பிச்சை"** எனும் கவிதை வெளிவந்தது. (**1975**)

**முதன் முதலில் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை:**

**"வவுனியாவில் காடைத்தனம்"** எனும் கட்டுரை **மனிதன்** பத்திரிகையில் வெளிவந்தது. (**1977 செப்டம்பர்.**)

**முதன் முதலில் ஒலிபரப்பாகிய மெல்லிசைப்பாடல்:**

**"சேற்று வயற்காட்டினிலே"** எனும் பாடல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் இராமமூர்த்தி இரட்டையரில் ஒருவரான. T.K.இராமமூர்த்தி அவர்களால் இசையமைக்கப்பட்டது. **1979.**)

**வானொலியில் முதற் பேச்சு:**

**"பக்திக்கவி சேக்கிழாரும் காவியக்கவி கம்பனும்"** எனும் பேச்சு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் இடம் பெற்றது. **(24.09.1984)**

**வானொலியில் ஒலிபரப்பாகிய முதல் நாடகம்:**

**"அவர்கள் படித்தவர்கள்"** என்னும் நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. **(20.06.1987)**

**தொலைபேசி இலக்கம் :** 0242221676, 0779606893.

**E.Mail Address** : akalankan04@gmail.com

**முகவரி :** அகளங்கன்; தமிழ் அதர்.
இல.90, திருநாவற்குளம், வவுனியா.

## படைப்பிலக்கிய முயற்சிகள்

**ஆய்வுகள் :**

இவரது **"வாலி"** என்ற ஆய்வு நூல் மிகவும் சிறப்புப் பெற்றது. **மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்** (ஆய்வு), **கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு, பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்** ஆய்வு என்பவை சிறந்த ஆய்வு நூல்களாக வெளிவந்துள்ளன.

**கட்டுரைகள் :**

இவர் **இலக்கியத் தேறல், இலக்கியச் சிமிழ் இலக்கியச்சரம், பாரதப்போரில் மீறல்கள், நறுந்தமிழ், வேரும் விழுதும், கம்பனில் நான்** ஆகிய கட்டுரைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

இவரது **நானூறுக்கும்** மேற்பட்ட கட்டுரைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன. இவை, இலக்கியம், சமயம், சமுகம், ஆய்வு, நகைச்சுவை, சமாதானம் போன்ற வகையைச் சார்ந்தவை.

வீரகேசரி, தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, தினக்குரல் முதலான பத்திரிகைகளிலும், சிரித்திரன், சுவைத்திரள், ஆலயமணி, கிருதயுகம், தமிழமுதம், சோதிடமலர், பூரணி, சுடர், செந்தழல், சுவடுகள், இந்துநெறி, வாழ்க்கை, புது ஊற்று, ஞானம், தடம், மாருதம், கொம்பறை, கவின்தமிழ், கம்பன் மலர், புது வசந்தம், கலாவதி மற்றும் பல விழா மலர்களிலும் கும்பாபிஷேக மலர்களிலும் மேற் கூறப்பட்ட கட்டுரைகள் வெளியாகியுள்ளன. தொடர் கட்டுரைகளும் இதில் அடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகங்கள் :**

பல வானொலி நாடகங்களையும், பல மேடை நாடகங்களையும், பல நாட்டிய நாடகங்களையும், பல பா நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். **"அன்றில் பறவைகள்" "இலக்கிய நாடகங்கள்" "கூவாத குயில்கள்" "கங்கையின் மைந்தன்" ஆகிய நாடக நூல்களையும் "பத்தினித் தெய்வம்** என்ற நாட்டிய நாடக நூலையும் வெளியிட்டுள்ளார்.

**புனைக் கதைகள் :**

பழந்தமிழ் மரபு இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை,நாவல், புதுக்கவிதை என்பவற்றின் மீதும் கவனம் செலுத்தியுள்ளார். இவருடைய "மீண்டும் ஒரு குரு ஷேத்திரம்", "யாழ்தேவி", "மண்ணின் மைந்தர்கள்", "துருவ நட்சத்திரம்", "மனித தெய்வங்கள்","இந்தப் பிள்ளைக்கு" "கொக்குக் குஞ்சுகள்", "வத்துக்குளம்" "முற்றத்துக் கரடி" ஆகிய சிறுகதைகள் தேசிய, சர்வதேச மட்டங்களில் பரிசு பெற்றன.

மேலும்,"வெய்யில் மட்டுமா சுடும்" , "தீக்குளிப்பு", "வேலிகளும் போலிகளும்", "உறவு தரும் உயிர்ப்பு", "இருள் விலகுகிறது", "நாளைக்கும் பூ மலரும்", "விழா ஒன்று நடைபெறுகிறது", "வழக்குத் தவணை", "குண்டுமணிச் சாமியார்", "கொண்டல் பிசின்" "பேயாய்க் கணங்களாய்" மீண்டும் கோழையாய், ஒரு கால், பாம்பின் குட்டி பாம்பு, வேலை தேடி முதலான பல சிறுகதைகள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்தன.

இவர் 1977ல் எழுதிய **"அலைக்குமிழ்"** சமூக நாவல் 2010ல் வீரகேசரி ஞாயிறு வாரமலரில் தொடராக வெளிவந்தது. பின் நூலாக வெளிவந்தது. (2011)

**கவிதைகள் :**

**"செல்" "வா" என்று ஆணையிடாய், "சேரர் வழியில் வீரர் காவியம்", "சமவெளி மலைகள்", "தென்றலும் தெம்மாங்கும்", "அகளங்கன் கவிதைகள்" "இசைப்பாமாலை", "சுட்டிக்குருவிகள்", "சின்னச்சிட்டுக்கள்", "சிரிக்க விடுங்கள்", "பந்து அடிப்போம்" "சின்னஞ் சிறிய சிறகுகள்"** ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பல கவியரங்குகளில் பங்கேற்றுள்ளார். பல மேடைகளில் கவியரங்க நிகழ்வுகளில் தலைமை வகித்தும் கவிதை படித்தும் உள்ளார்.

பத்திரிகை, சஞ்சிகை விழா மலர்கள் போன்றவற்றில் பல கவிதைகள் எழுதியுள்ளார். மேலும் இசைப் பாடல்கள் பல வற்றையும் எழுதியுள்ளார்.

பண்டாரவன்னியன் விழா மலரில் இடம் பெற்ற இவரது மூன்று கவிதைகள் வவுனியாவில் நடைபெற்ற பண்டார வன்னியன் விழா நிகழ்வில் தென்னிந்தியப் பாடகி குமாரி பிரமிளாவால் இசையமைத்துப் பாடப்பட்டன.

**"நெற்றியில் நிலைத்த நீறும்....."**
**"தோற்றலும் வெற்றிப் பாதை....."**
**"கல்லெனத் திரண்ட தோளும்....."** *(1982.07.16,17,18.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீதங்கள் பாடல்கள் :**

இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாக தமிழ் மன்றக் கீதம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக் கீதம், வவுனியா நகரசபைக் கீதம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக் கீதம், வவுனியா பிரதேச செயலகக் கீதம், நெடுங்கேணி பிரதேச செயலகக் கீதம், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபைக் கீதம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கீதம், வவுனியா இந்து மாமன்றக் கீதம், வவுனியா பெண்கள் அபிவிருத்தி மையக்கீதம், வவுனியா விபுலம் அரங்கியற் கலைக் கழகக் கீதம், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிக் கீதம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வணிக மன்றக் கீதம், மற்றும் வவுனியா பம்பைமடு பாடசாலைக் கீதம், வவுனியா ஒலுமடு பாடசாலைக் கீதம், வவுனியா சுந்தர புரம் சரஸ்வதி வித்தியாலயக் கீதம், செட்டிகுளம் கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயக் கீதம், வவுனியா கணேசபுரம் விநாயக வித்தியாலய கீதம் முதலான பல பாடசாலைகளின் கீதங்களையும் இவர் இயற்றியுள்ளார். அவை எல்லாம் பாடப்பட்டு வருகின்றன.

இவரது **இசைத்திட முடியாது எங்கள் பெருமை** எனத் தொடங்கும் தமிழ் வாழ்த்துக் கீதம் மிகவும் சிறப்பானது. இக் கீதம் வவுனியா கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் நாள்தோறும் பாடப்பட்டு வருகின்றது. இவரது **வித்தியா விநாயகர்** துதிப் பாடல் திங்கட்கிழமை தோறும் காலைப் பிரார்த்தனையின் போது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பாடப்பட்டு வருகின்றது

**மெல்லிசைப் பாடல்கள் :**

**"சேற்று வயற் காட்டினிலே"** எனும் பாடல் இந்திய பிரபல திரைப்பட இசை அமைப்பாளர் திரு.T.K.ராமமூர்த்தி (மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி இரட்டையரில் ஒருவர்) அவர்களால் 1979ல் இசை அமைக்கப்பட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பப் பட்டு வருகிறது. "சலசலக்கும் ஓசையிலே" "காற்று வந்தால் நாணமென்ன", "பொன்மாலை நேரம்". "காலைப் பனிக்குளித்து", "தாமரை மலர் செய்த தவமோ", "மல்லிகைத் தோட்டத்திலே", "குன்றாத இளமையுடன் குமரன்" முதலான இவரது மெல்லிசைப் பாடல்கள் 1980களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பப்பட்டு வந்தன.

பல நாட்டிய நாடகங்களையும், கும்மி, கரகாட்டம், கோலாட்டம் வரவேற்பு நடனம் முதலான கலை வடிவங்களுக்கான பல பாடல்களையும் பல மெல்லிசைப் பாடல்களையும் இவர் எழுதியுள்ளார். மேலும் பல பக்திப் பாடல்களையும் எழுதியுள்ளார். அவை கும்பாபிஷேக மலர்களில் வெளிவந்தன. பல மாநாட்டு மலர்களிலும் சஞ்சிகைகளிலும் பல பாடல்களையும், கவிதைகளையும் எழுதியுள்ளார்.

**"இசைப் பாமாலை"** என்ற பெயரில் சில இசைப் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். **டென்மார்க்** பிரெண்டா ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பற்றி இவர் எழுதிய 12 பக்திப் பாடல்கள் **"ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பாடல்கள்"** என்னும் இறுவெட்டாக வெளிவந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியப் பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். சகானா கமலேந்திரன், சனுசா கிருஷ்ணதாசன் ஆகிய மாணவியரின் பரத நாட்டிய அரங்கேற்றம் **கனடாவில்** நடைபெற்றது. அந் நிகழ்வில் இவரது பிறந்த ஊரான பம்பைமடு பற்றிய இவரது பாடலுக்கு சகானா நடனம் ஆடினார். சகானாவின் தந்தையின் பிறந்த ஊர் பம்பைமடு. (07.08.2011.)

## சொற்பொழிவு :

1989ல் இருந்து இலக்கிய, சமயத், தனி, தொடர் சொற்பொழிவுகளை ஆற்றி வருகிறார். மகா பாரத, பெரியபுராண, கந்தபுராணத் தொடர் சொற்பொழிவுகளையும், மற்றும் பொதுவான சமய இலக்கிய விடயங்களையும் தலைப்புகளாகக் கொண்ட சொற்பொழிவுகளையும் ஆற்றி வருகிறார்.

இலங்கையின் பல இடங்களிலும், அதாவது வவுனியா, **மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, கொழும்பு, குருநாகல், மாத்தளை,** மற்றும் மலைநாட்டின் சில பகுதிகளில் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

## தொடர் சொற்பொழிவுகள் சில :

1) **"மகாபாரதம்"** வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம் (1990 சித்திரை 14-24)
2) **"நவராத்திரி"** வவுனியா கந்தசுவாமி ஆலயம் (1991 புரட்டாதி 08-16).
3) **"பெரிய புராணம்"** வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம் (1992சித்திரை)
4) **"பெரிய புராணம்"** வவுனியா குருமன்காடு காளி கோவில் (1998 ஆனி)
5) **"பெரிய புராணம்"** வவுனியா வைரவ புளியங்குளம் வைரவர் ஆலயம் (1998வைகாசி)
6) **"மகா பாரதம்", "கந்த புராணம்", "பெரிய புராணம்"** ஆகியவை வவுனியா உக்கிளாங்குள விநாயகர் ஆலயம். (1996-2000)
7) **"பெரிய புராணம்"** வவுனியா முதிரைத் தோட்டம் தேடி வந்த பிள்ளையார் ஆலயம். (1998 ஆவணி)
8) **"பெரிய புராணம்"** வவுனியா சாஸ்திரி கூழாங் குளம் சிவபுரம் சிவபுர சுந்தரேஸ்வரி சமேத சிவபுர சுந்தரேஸ்வரர் ஆலயம். (05.09.2001)
9) **"பெரிய புராணம்"** வவுனியா வைரவ புளியங்குளம் வைரவர் ஆலயம் (2003)
10) **"மகா பாரதம்"** வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயம் (2003).
11) **"மகா பாரதம்"** வவுனியா கண்ணன் கோவில். கோவில்குளம் (2003)
12) வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய மகோற்சவ காலத்தில் பத்து நாட்களுக்கு வருடாந்தம் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார். (1990...)
13) டென்மார்க் ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தினர் நடாத்துகின்ற "லண்டன் வானொலி ஆன்மீக மாலை" நிகழ்வில் (மாதாஜி அபிராமி உபாசகி அம்மா) ஆன்மீகம் சம்பந்தமான பேச்சு 06.04.2011 தொடக்கம் இலங்கை நேரம் 9.30க்கு தொலைபேசி ஊடாக நேரடி பேச்சு ஒவ்வொரு புதன்கிழமையும் தொடர்ந்து எட்டுக் கிழமைகள் இடம்பெற்றன. பின் 20.07.2011 தொடக்கம் பதினெட்டு பேச்சுக்கள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புராண படனம் :**

**கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம்,** முதலான புராணங்களைப் படனம் செய்தல் முறையில் பொருள் விரித்துரைக்கும் பணியையும் செய்து வருகிறார்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் 1991 தொடக்கம் கந்தபுராண படனத்தை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. வவுனியா நெளுக்குளம் முருகன் கோவில், வவுனியா சிந்தாமணி விநாயகர் கோவில், தாண்டிக்குளம் முருகன் கோவில், கோவில் குளம் சிவன் கோவில், குடியிருப்பு சித்தி விநாயகர் கோவில், புளியடிப் பிள்ளையார் கோவில், சாஸ்திரி கூழாங்குளம் சிவன் கோவில் ஆகிய கோவில்களிலும், புதுக்குளம் சித்தி விநாயகர் கோவில், பம்பைமடு முருகன் கோவில், செக்கடிப் புலவு பிள்ளையார் கோவில், வேப்பங் குளம் பிள்ளையார் கோவில், குருமன்காடு பிள்ளையார் கோவில் கரப்பங்காடு பிள்ளையார் கோவில் ஆகிய கோவில்களிலும் பிள்ளையார் புராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம் ஆகியவற்றுக்கும் புராணபடனம் செய்து வருகிறார்.

**தமிழ் அறிஞர் அகளங்கன் அவர்கள் பற்றி மேலும் சில.....**

சிரித்திரன் ஆசிரியர் **திரு.சி.சிவஞானசுந்தரம்** அவர்களின் அறிமுகம் **திரு. சிவலிங்கராஜா** அவர்கள் மூலம் கிடைத்தது. 1979 தொடக்கம் இலக்கியச் சிமிழ், இலக்கியத்தில் நகைச்சுவை போன்ற பல கட்டுரைகளை 55 சிரித்திரன் இதழ்களில் தொடர்ந்து எழுதினார். அவற்றில் சில **இலக்கியச் சிமிழ்** என்ற கட்டுரைத் தொகுப்பாக 1992ல் வெளிவந்தது.

மேலும் மலர்க் குழு ஆசிரியராக இருந்து பல மலர்கள், சஞ்சிகைகளை தயாரித்துள்ளார். குறிப்பாக, **பண்டார வன்னியன் விழாமலர்**, தவத்திரு ஆறுமுக நாவலர் சைவ வினாவிடை தொகுப்பு, சுத்தானந்தம், கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக மலர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தசாப்த சிறப்பு மலர், சுத்தானந்தம் பொன்விழா மலர், கதிராளி, **மருதநிலா**, கலைமருதம், மருததீபம், காளி தரிசனம், சிந்தாமணி போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் ஆகியவற்றில் பங்கு கொண்டும் தலைமை வகித்தும் உள்ளார்.

**எழுதிய நூல்கள்**

1) **"செல்" "வா" என்று ஆணையிடாய்** (அஞ்சலிக் கவிதை) - 1977
2) **சேரர் வழியில் வீரர் காவியம்** (குறுங்காவியம்) - 1982
3) **சமவெளி மலைகள்** (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்) - 1985
4) **வாலி** (ஆய்வு நூல் மூன்று பதிப்புகள் 1987, 1989, 2006) இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ் - 1987
5) **இலக்கியத் தேறல்** (கட்டுரைகள்) - 1988
6) **நளவெண்பா** (கதை) - 1989
7) **அன்றில் பறவைகள்** (நாடகங்கள்) தேசிய சாகித்திய மண்டலப் பரிசு - 1992
8) **முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்** (வரலாறு) - 1992


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) **இலக்கியச் சிமிழ்** (கட்டுரைகள் - இருபதிப்புக்கள்) - 1992, 1993
10) **தென்றலும் தெம்மாங்கும்** (கவிதைகள்) - 1993
11) **பன்னிரு திருமுறை அறிமுகம்** (சமயம்) - 1994
12) **மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்** (ஆய்வு) - 1994
13) **இலக்கிய நாடகங்கள்** (நாடகங்கள்), வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு - 1994, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு - 1994
14) **ஆத்தி சூடி** (விளக்கவுரை) - 1995
15) **கொன்றை வேந்தன்** (விளக்கவுரை) - 1996
16) **அகளங்கன் கவிதைகள்** (கவிதைகள்), வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு - 1996
17) **வாக்குண்டாம்** (மூதுரை - விளக்கவுரை) - 1997
18) **சிவபுராணம்** (பொருளுரை) - 1997
19) **செந்தமிழும் நாப்பழக்கம்** (பேச்சுக்கள்) - 1997
20) **நாமறிந்த நாவலர்** (சிறு குறிப்புக்கள் - இரு பதிப்புக்கள்) - 1997, 2008.
21) **நல்வழி** (பொழிப்புரை - விளக்கவுரை) - 1998
22) **இசைப்பாமாலை** (இசைப் பாடல்கள்) - 1998
23) **கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு** (ஆய்வு) - 1999
24) **இலக்கியச் சரம்** (கட்டுரைகள்) - 2000
25) **வெற்றி வேற்கை** (நறுந்தொகை - உரை) - 2000
26) **கூவாத குயில்கள்** (நாடகங்கள்) - 2001
27) **திருவெம்பாவை உரை** (சமயம்) - 2002
28) **பாரதப் போரில் மீறல்கள்** (கட்டுரை) - 2003
29) **சுட்டிக் குருவிகள்** (மழலைப் பாடல்கள்) - 2003
30) **சின்னச் சிட்டுக்கள்** (சிறுவர் பாடல்கள்) - 2005
31) **நறுந் தமிழ்** (கட்டுரைகள்) - 2006
32) **பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்** (ஆய்வு) - 2007
33) **பத்தினித் தெய்வம்** (நாட்டிய நாடகங்கள்), வடமாகாண சாகித்திய மண்டலப் பரிசு - 2008
34) **வேரும் விழுதும்** (கட்டுரைகள்), வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு -2008
35) **கங்கையின் மைந்தன்** (நாடகங்கள்), வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு - 2009, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு - 2010, தமிழியல் விருது - 2009, தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ் - 2009, இலங்கை இலக்கியப்பேரவை விருது - 2009
36) **பந்து அடிப்போம்** (சிறுவர் பாடல்கள்) - 2010
37) **சிரிக்க விடுங்கள்** (சிறுவர் பாடல்கள்) - 2010
38) **சகல கலா வல்லிமாலை** - உரையுடன் - 2011
39) **அலைக்குமிழ்** (நாவல்) - 2011, கொடகே தேசிய சாகித்திய சான்றிதழ் - 2011, இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழ் - 2011, தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ் - 2011, தமிழியல் விருது - 2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) **சின்னஞ் சிறிய சிறகுகள்** (குழந்தைப் பாடல்), தேசிய சாகித்ய மண்டலப் பரிசு. - 2012, வடமாகாண சிறந்த சிறுவர் இலக்கியப் பரிசு - 2012, தமிழியல் விருது - 2012

41) **கம்பனில் நான்.** கட்டுரைகள் - 2013

42) **முற்றத்துக் கரடி** (சிறுகதைகள்) - 2014

43) **தமிழ்த் தூது, வண.பிதா.தனிநாயகம் அடிகளார்.** (சிறு குறிப்புக்கள்) - 2014

## தயாரித்த மலர்கள் – சஞ்சிகைகள்

1) **"பண்டார வன்னியன் விழா மலர்"** வவுனியாவில் நடைபெற்ற பண்டார வன்னியன் விழாவின் போது வெளியிடப்பட்டது. - 1982

2) **"தவத்திரு ஆறுமுகநாவலர் சைவ வினாவிடைத் தொகுப்பு"** - 1997

3) **"சுத்தானந்தம்"** வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் புதிய மண்டபத் திறப்பு விழா மலர் - 1999

4) **"வவுனியா கந்தசுவாமி கோவில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்."** - 1999

5) **"வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தசாப்த சிறப்பு மலர்."** - 1999

6) **"வவுனியா வெளி வட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய முகபத்திர வட்ட (வேசரம்) சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா மலர்"** - 2001

7) **"சுத்தானந்தம்"** வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பொன் விழா மலர் - 2003

8) **"கதிராளி"** வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய கல்லூரிச் சஞ்சிகைகள் இரண்டு (2004 - 2005)

9) **"சிவ தத்துவ மலர்"** வவுனியா சிவன் கோவில் கும்பாபிஷேக மலர் (1995 - மலர்க் குழு உறுப்பினர்)

10) **"கலை மருதம்"** வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் மலர் (1995 - மலர்க் குழுத் தலைவர்)

11) **"மருத நிலா"** வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு வவுனியாவில் நடாத்திய இலக்கியப் பெருவிழா மலர் (1996 - மலர்க் குழுத் தலைவர்.)

12) **"மருத தீபம்"** வவுனியா மாவட்ட கலாசாரப் பேரவை மலர். (2006)

13) **"காளி தரிசனம்"** வவுனியா, குருமன்காடுகாளிகோவில் கும்பாபிஷேகமலர்.(2006)

14) **"திருவாசகத் தேன்"** இறைபணிச் செம்மல் வை.செ.தேவராஜா அவர்களின் 500 திருவாசக முற்றோதல்கள் நிறைவு நினைவு மலர் - 2007

15) **"சிந்தாமணி"** வவுனியா வெளி வட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார அன்னதான மண்டபத் திறப்பு விழா சிறப்பு மலர். (22.10.2010)

16) **அறிவொளி** - புதுக்குளம் மகாவித்தியாலய மலர். (2004)

## பெற்ற பட்டங்கள்

1. 24.04.1990ல் வவுனியா இந்துமாமன்றம் **"காவிய மாமணி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
2. 22.08.1993ல் இந்து கலாசார இராஜாங்க அமைச்சு **"தமிழ்மணி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 27.12.1995ல் யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம் **"திருநெறிய தமிழ்வேந்தர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
4. 31.10.1997ல் இலங்கை மெய்கண்டார் ஆதீனம் **"கவிமாமணி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
5. 03.04.1998ல் வவுனியா நகராண்மைக் கழகம் **"பல்கலை எழில்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
6. 19.02.1998ல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் வவுனியா மாவட்டத்தின் முதன்மைத் **"தமிழறிஞர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
7. 12.06.1999ல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் **"புராணபடன புகழ்தகை"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
8. 1999ல் அகில இலங்கை கச்சியப்பர் கழகம் **"புராண படன வித்தகர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
9. 05.09.2001ல் சாஸ்திரி கூழாங்குளம் சிவபுரம் சிவன் ஆலயம் **"சிவனருட் செல்வர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
10. 30.03.2002ல் சர்வதேச இந்துமத குருபீடம் **"வாகீச கலாநிதி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
11. 02.08.2007ல் வ/புதுக்குளம் மகாவித்தியாலயம் **"செஞ்சொற் சிலம்பன்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
12. 17.09.2008ல் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் **"வித்தியா சுரபி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
13. 09.05.2010ல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் **"தமிழியல் வித்தகர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
14. 29.09.2010ல் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி **"முத்தமிழ்ச் சுரபி"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
15. 22.10.2010ல் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் **"செந்தமிழ்க் கொண்டல்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
16. 04.11.2010ல் வவுனியா பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து **"முத்தமிழ்க் கலைச் சுடர்"** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தன.
17. 2011ல் தேசிய விருது - பட்டம் வழங்கலுக்கான தலைமை நிறுவனம் கௌரவ **"கலாநிதி"** (The Head Of The National Award Graduation Institute) பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
18. 02.06.2013ல் **"சைவத் தமிழியற்கோ"** எனும் பட்டம், வவுனியாவில் நடைபெற்ற கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவின் போது வவுனியா மணிவிழாக் குழுவினால் வழங்கப் பெற்றது.
19. 02.06.2013ல் **"இலக்கியச் சுடர்"** எனும் பட்டம் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது யாழ் மணிவிழாக் குழுவினரால் அதே விழாவின் போது வழங்கப் பெற்றது.
20. 15.12.2013ல் **"கலாபூஷணம்"** எனும் பட்டம், கலாசார அமைச்சினால், கலைத் துறைக்கு உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவித்து நடாத்தும் 29 வது கலாபூஷண அரச விருது வழங்கும் வைபவத்தில் வழங்கப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்ற கௌரவங்கள்

1) 1991ல் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு தனது முதலாவது சாகித்திய விழாவில் கௌரவித்தது.
2) 05.11.2000ல் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு **"ஆளுநர் விருது"** வழங்கிக் கௌரவித்தது.
3) 31.01.2003ல் அகில இலங்கைக் கலைக் கழகம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகம், இந்துமாமன்றம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து நடாத்திய வன்னிப் பிரதேசத் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் என்னும் நிகழ்வின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.
4) 2007ல் **"ஞானம்"** சஞ்சிகை ஜுலை 86 வது இதழில் அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது. அதிதிக் கட்டுரை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களால் எழுதப்பட்டது.
5) வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா இந்துமாமன்றம், வவுனியா நகரசபை, வைரவர் புளியங்குளம் கிராமோதய சபை, வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிறந்த ஊரான பம்பைமடு கிராமம், வவுனியாவில் உள்ள பல ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியன பல தடவைகள் பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் பாராட்டி கௌரவித்தன.
6) **மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கம்** அவர்களின் **நினைவு விருது** (2011ம் ஆண்டுக்கான) **யாழ் இலக்கிய வட்டத்தால்** வழங்கப்பட்டது. (16.12.2013)
7) வவுனியாவிற்கு வெளியேயும் அதாவது யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, மலையகம், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான பல இடங்களிலும், இலக்கியம், சமயம் சார்ந்த பல நிகழ்வுகளின் போது கௌரவங்கள் கிடைக்கப் பெற்றன.
8) 2003ல் **காத்தான் குடிப்** பிரதேச இளைஞர் கழகங்களின் பங்கேற்றலுடன் **கிழக்கிலங்கை** மனிதவள மேம்பாட்டு நிறுவனமும் **எழுத்தாளர் ஊக்குவிப்பு மையமும்** இணைந்து வழங்கும் தமிழ் முஸ்லீம் நல்லுறவு இலக்கிய விழா நிகழ்வின் போது தமிழ் முஸ்லீம் நல்லுறவுக்காக, இலக்கிய மூலமான பங்களிப்புச் செய்தமைக்காக கௌரவம் வழங்கப்பட்டது.
9) ஜனவரி 6,7,8,9ஆம் திகதிகளில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடாத்திய சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் ஆய்வரங்கு இணைத்தலைவர் (சிறுவர் இலக்கியம்) ஆகப் பங்குபற்றிச் சிறப்பித்தமைக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. (2011)
10) பல வருட காலமாக சமய ஆன்மீக தமிழ்ப்பணிகளை ஆற்றி சைவத் தமிழுக்காய் பணி பல புரிந்து வரும் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு, **மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தினால்,** மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் நடாத்தப் பெற்ற நாவலர் விழாவில் **"நாவலர் விருது"** வழங்கிக் கௌரவிக்கப்பட்டது (20.11.2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) **கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நினைவு நாடகச் சாதனையாளர் விருது** யாழ் இலக்கிய வட்டத்தினால் வழங்கப்பட்டது (26.2.2012.)

12) கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டில் சிறுவர் இலக்கிய ஆய்வரங்கின் இணைத்தலைவர். (2012)

## நூல்களுக்கான பரிசுகள்.

1) **"வாலி"** என்ற ஆய்வுநூல் 1987ல் வெளிவந்த சிறந்த இலக்கிய நூலுக்கான பாராட்டை, இலங்கை இலக்கியப் பேரவையிடம்பெற்றது.

2) **"அன்றில் பறவைகள்"** என்ற வானொலி நாடகநூல் 1992ல் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

3) **"இலக்கிய நாடகங்கள்"** என்ற நாடக நூல் 1994ல் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும், கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசையும் பெற்றது.

4) **"அகளங்கன் கவிதைகள்"** என்ற கவிதை நூல் 1996ல் வெளி வந்த சிறந்த கவிதை நூலுக்கான வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

5) **"பத்தினித் தெய்வம்"** என்ற நாட்டிய நாடக நூல் 2008ல் வெளிவந்த சிறந்த நாடகத்துறை நூலுக்கான வடக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

6) **"வேரும் விழுதும்"** என்ற கட்டுரை நூல் 2008ல் வெளிவந்த பல்துறையின் கலை இலக்கியப் பிரிவில் சிறந்த நூலுக்கான வடக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

7) **"கங்கையின் மைந்தன்"** என்ற நாடக நூல் 2009ல் வெளி வந்த சிறந்த நாடகத் துறை நூலுக்கான வடக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

8) **"கங்கையின் மைந்தன்"** என்ற நாடக நூல் 08.10.2010ல் தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய இலக்கியப் போட்டியில் அறந்தை நாராயணன் நினைவுப் பரிசைப் பெற்றது. (இந்தியா தமிழ்நாடு திருநெல்வேலியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நிகழ்வு இடம் பெற்றது.)

9) 2009ல் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழை இவரது **கங்கையின் மைந்தன்** நாடக நூல் பெற்றுக்கொண்டது. (30.10.2010)

10) எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் சிறந்தநாடக நூலுக்கான தமிழியல் விருதினை இவரது **கங்கையின் மைந்தன்** எனும் நாடக நூலுக்கு வழங்கியது. (2010)

11) இலங்கை இலக்கியப் பேரவை 2009ல் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான பரிசை இவரது **கங்கையின் மைந்தன்** நாடக நூலுக்கு வழங்கியது. (12.06.2011)

12) **"அலைக்குமிழ்"** நாவல் கொடகேதேசிய சாகித்திய மண்டலம், இலங்கை இலக்கியப் பேரவை, தேசிய சாகித்திய மண்டலம் ஆகியவற்றின் சிறப்புச் சான்றிதழ் களையும், தமிழியல் விருதினையும் பெற்றது. (2011)

13) **"சின்னஞ் சிறிய சிறகுகள்"** குழந்தைப் பாடல். தேசிய சாகித்ய மண்டலப் பரிசு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண சிறந்த சிறுவர் இலக்கியப் பரிசு, தமிழியல் விருது ஆகியவற்றைப் பெற்றது. (2012)

## சர்வதேச ரீதியான பரிசுகள்

1) 1996ல் **அவுஸ்திரேலிய** இலங்கைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் **"சிந்தனை செய் தமிழா"** என்ற கவிதை 2ம் பரிசு பெற்றது.
2) 2002ல் **அவுஸ்திரேலிய** இலங்கைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் **"உலகே உனக்குக் கண்ணில்லையா"** என்ற கவிதை 2ம் பரிசு பெற்றது.
3) 1998ல் **பிரான்ஸ்** தமிழ் ஒலி நிறுவனம் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய சில்லையூர் செல்வராசன் ஞாபகார்த்த வானொலி நாடகப் போட்டியில் **"சிலம்பு பிறந்தது"** என்ற நாடகம் 2ம் பரிசு பெற்றது. (ரூபா 30,000 பரிசு)
4) 2006ல் **"ஞானம்"** சஞ்சிகை நடாத்திய கலாபூஷணம் டாக்டர் புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் **"மண்ணின் மைந்தர்கள்"** என்ற சிறுகதை ஆறுதல் பரிசு பெற்றது.
5) 2009ல் **"ஞானம்"** சஞ்சிகை நடாத்திய அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் **"இந்தப்பிள்ளைக்கு"** என்ற சிறுகதை 3ம் பரிசு பெற்றது.
6) 2009ல் **"ஞானம்"** சஞ்சிகை நடாத்திய கலாபூஷணம் டாக்டர் புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் **"கொக்குக் குஞ்சுகள்"** என்ற சிறுகதை 3ம் பரிசு பெற்றது.
7) 2009ல் **புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்** நூற்றாண்டு விழா சர்வதேச மரபுக் கவிதைப் போட்டியில் **"மாநிலத்தில் அமைதி ஒளி ஏற்றி வைப்பீர்"** என்ற கவிதை 3ம் பரிசு பெற்றது.
8) 2010ல் **"ஞானம்"** சஞ்சிகை நடாத்திய அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் **"வத்துக் குளம்"** என்ற சிறுகதை ஆறுதல் பரிசு பெற்றது.
9) 2011ல் **ஞானம்** சஞ்சிகை நடாத்திய அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் **"முற்றத்துக் கரடி"** என்ற சிறுகதை முதற் பரிசு பெற்றது.

## ஏனைய பரிசுகள்

1) 1985ல் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணம் ஈழமுரசு பத்திரிகையினால் நடாத்தப்பட்ட சிறுகதைப் பொன்விழாச் சிறுகதைப் போட்டியில் **"மீண்டும் ஒரு குருஷேத்திரம்"** என்ற சிறுகதை இரண்டாம் பரிசு பெற்றது.
2) 1991ல் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு. கல்வியமைச்சு ஆசிரியர்களுக் கிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்திய நாடகப் பிரதியாக்கப் போட்டியில் **"உருகி எரியும் கர்ப்பூரங்கள்"** என்ற நாடகப் பிரதி முதலாம் பரிசு பெற்றது.
3) 1994ல் கலாசார அமைச்சு அகில இலங்கை ரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டியில் **"யாழ்தேவி"** என்ற சிறுகதை இரண்டாம் பரிசு பெற்றது.
4) 1995ல் மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.T.பாக்கியநாயகம் நினைவு நகைச்சுவைக் கட்டுரைப் போட்டியில் **"தமிழிலக்கியத்தில் நகைச்சுவை"** என்னும் கட்டுரை முதலாம் பரிசு பெற்றது.

5) 1996ல் மாத்தறை மக்கள் சமாதான இலக்கிய அமைப்பு அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் **"ஒற்றுமைப் பாட்டு"** என்ற கவிதை சிறப்புப் பரிசு பெற்றது.

6) 1996ல் கொழும்புத் தமிழ்ச்சங்கம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய பேராசிரியர் க.கைலாசபதி நினைவுக் கட்டுரைப் போட்டியில் **"மகாகவி பாரதியார் காட்டும் வாழ்வியல் முறை"** என்ற கட்டுரை முதலாம் பரிசு பெற்றது.

7) 1996ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட நாவற்குழியூர் நடராஜன் நினைவுக் கவிதைப் போட்டியில் **"சமாதானம் துளிர்க்க வேண்டும்"** என்ற கவிதை இரண்டாம் பரிசு பெற்றது.

8) 1996ல் சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் அசிரியர்களுக்கிடையே நடாத்திய சிறுகதைப் போட்டியில் **"துருவ நட்சத்திரம்"** என்னும் சிறுகதை திறமைச் சான்றிதழ் பெற்றது.

9) 1997ல் மேற்கூறப்பட்ட போட்டியில் **"மனித தெய்வங்கள்"** என்ற சிறுகதை பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது.

10) கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு நடாத்திய தேசிய மட்டத்திலான அரச சேவையாளர்களுக்கான நிருமாண போட்டித் தொடரில்,

1. 2004ல் சிறுகதை தலைப்பு **"நாளைக்கும் பூ மலரும்."**
2. 2005ல் கவிதை **"யாம் நினைக்கில் சமாதானப் பூக்கள் பூக்கும்."**
3. 2006ல் பாடலாக்கம் **"சிரிக்க விடுங்கள்."**

ஆகிய ஆக்கங்கள் மிகச்சிறந்ததெனத் தெரிவு செய்யப்பட்ட பத்து ஆக்கங்களில் இடம் பிடித்துச் சான்றிதழ் பெற்றன.

11) 2009ல் வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கிடையிலான கவிதைப் போட்டியில் இவரது கவிதை முதலாம் பரிசைப் பெற்றது.

12) கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடாத்திய மரபுக் **கவிதைப்** போட்டியில் **"நாளை மலரும் நல்வாழ்வு"** எனும் கவிதை 3ம் பரிசைப் பெற்றது. (24.12.2011)

## வகித்த, வகிக்கும் பதவிகள்

1) இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தமிழ்மன்றத்தலைவர்.(1977)
2) இலங்கைப்பல்கலைக்கழக அனைத்துவளாக மாணவர்மன்ற உபதலைவர். (1977)
3) இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக இந்து மன்ற குழு உறுப்பினர்.(1977)
4) ஈழத்தமிழ் மாணவமன்றத் தலைவர். (1977)
5) வவுனியா இலக்கிய வட்டத்தலைவர். (1979 ....)
6) வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் (2004 ல் இருந்து)
7) வவுனியா பிரதேச கலாசாரப் பேரவைத்தலைவர் (1995 - 2005)
8) யாழ் இலக்கிய வட்ட உப தலைவர் (1980)
9) யாழ்.பலாலி ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றத் தலைவர். (1988)
10) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் துணைத் தலைவர். (2000...)
11) வவுனியா இந்து மாமன்றப் போசகர். (1996...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தச்சபை (வவுனியா) பொருளாளர். (1998 -2001)
13) வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் போசகர். (2000...)
14) வவுனியா நிருத்திய ஸ்ருதி நாட்டியக் கலாலயத்தின் போசகர் (2010...)
15) இரண்டாவது உலக இந்து மாநாட்டுக்கான வவுனியா, மன்னார் மாவட்டக் கிளையின் செயலாளர். (2003...)
16) தமிழ்ப் பாட வாசிப்புத் துணை நூல் ஆக்கக்குழு கொழும்பு மகரகம தேசியக் கல்வி நிறுவனம், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு உறுப்பினர்.
17) "தமிழியல் விருது" நூல் தேர்வுக்குழு உறுப்பினர். (2009....)
18) தேசிய சாகித்திய மண்டல நூல் பரிசு தேர்வுக் குழு உறுப்பினர். (1992...)
19) வடக்கு கிழக்கு மாகாண நூல் பரிசு தேர்வுக் குழு உறுப்பினர். (1992-2007)
20) வடக்கு மாகாண நூல் பரிசு தேர்வுக் குழு உறுப்பினர். (2008....)
21) அன்பகம் சிறுவர் இல்லத் துணைத் தலைவர். (2012.....)
22) வவுனியா பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கப் பொருளாளர். (2012..)
23) வவுனியா மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர். (2013....)
24) இந்து ஸ்வயம் சேவகசங்கத் துணைத்தலைவர். (அகில இலங்கை) (2013)
25) வட மாகாண தமிழ் இலக்கியக் குழு வவுனியா மாவட்டப் பிரதிநிதி. (2013.....)

## ஏனைய சிறப்புக்கள்

1) 2002ல் மாகாண மட்டத் தமிழ்த்திறன் போட்டியில் 5ம் பிரிவுக்கான கவிதை நயம் போட்டிக்கு இவரது **"அகளங்கன் கவிதைகள்"** என்ற நூலில் உள்ள **"சிந்தனை செய் தமிழா"** என்றதலைப்பிலான கவிதைகளில், **"வேலிக்குச் சண்டையிட்டு..."** எனத் தொடங்கும் கவிதை சேர்த்துக்கொள்ளப்பட்டது.
2) 2006ல் தமிழ்த்திறன் போட்டியில் இசை தனி, பிரிவு 4 - (தரம்10,11)க்கு **அகளங்கன் கவிதைகள்** நூலிலுள்ள **"மனித நேயம் செழிக்க வேண்டும்"** என்ற தலைப்பிலான கவிதைகளில், **"தனித்துவங்கள் பேணுமொரு சமத்துவத்தில் சேர்ந்து"** எனத் தொடங்கும் கவிதை சேர்த்துக் கொள்ளப்பட்டது.
3) க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு, சங்கீத பாடத்திட்டத்தில், நாட்டார் பாடல் பகுதியில், **"சேற்று வயல் காட்டினிலே"** எனும் இவரது பாடல் சேர்க்கப் பட்டுள்ளது. (2012)
4) இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபை **"சுட்டிக் குருவிகள்"** என்ற மழலைப் பாடல்கள் நூலைத் தேர்ந்தெடுத்து (2003)ல் 20,000 ரூபா பெறுமதியான பிரதிகளைக் கொள்வனவு செய்தது.
5) இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபை **"சின்னச் சிட்டுக்கள்"** என்ற சிறுவர் பாடல்கள் நூலைத் தேர்ந்தெடுத்து (2005)ல் 40,000 ரூபா பெறுமதியான பிரதிகளைக் கொள்வனவு செய்தது.
6) கலாசார அலுவல்கள் அமைச்சும் மத்திய கலாசார நிதியமும் **"பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்"** என்ற இவரது ஆய்வு நூலைத் தேர்வு செய்து. (2007)ல் 50,000 ரூபா பெறுமதியான பிரதிகளைக் கொள்வனவு செய்தது.
7) இலங்கை நூலக ஆவண ஆக்கல் சேவைகள் சபை இவரது **"வேரும் விழுதும்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூலைத் தேர்வு செய்து (2008ல்) 50,000 ரூபா பெறுமதியான பிரதிகளைக் கொள்வனவு செய்தது.

8) கிழக்கு மாகாண முன்பள்ளி பாடத்திட்டத்தில் இவரது சின்னஞ் சிறிய சிறகுகள் என்ற குழந்தைப் பாடல் நூலிலுள்ள **"அம்புலி மாமா"** என்ற குழந்தைப் பாடல் சேர்க்கப்பட்டுள்ளது.

## ஆக்கங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்.

1) **"அகளங்கன் ஆக்கங்கள் ஒரு கண்ணோட்டம்"** கலை முதற் தேர்வுக்காக. சு.ஜெயச்சந்திரன் கிழக்குப் பல்கலைக்கழகம். (1992).

2) **"அகளங்கன் ஆக்கங்கள் ஓர் ஆய்வு"** கலை முதற் தேர்வுக்காக செல்வி க.சாந்தி யாழ்.பல்கலைக் கழகம் (1993)

3) **"அகளங்கன் ஆக்கங்கள் ஓர் ஆய்வு"** கலை இறுதித் தேர்வுக்காக.செல்வி சசிரஜனி புலேந்திரன்.சப்ரகமுவ பல்கலைக்கழகம் (2002).

4) **"வவுனியா வாழ் தமிழ்ப் புலவர் தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களின் பாடல்களில் ஆடலாக்கம்"** நடனமாணிப் பட்டத்திற்கான ஆய்வு. (வெளிவாரி) யாழ்.பல்கலைக்கழகம். திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் (2003).

5) **"அகளங்கனின் இலக்கியப்பணி"** ஓர் ஆய்வுக் கண்ணோட்டம். செல்வி.சோபிதா தெய்வேந்திரராசா சிறப்புக்கலைமாணித் தேர்வுக்காக யாழ்.பல்கலைக்கழகம். (2003)

6) **"எழுத்தாளர் அகளங்கனின் நாடகங்கள் ஓர் ஆய்வு"** செல்வி.மச்சயராசா இன்பமதி கலை இறுதித் தேர்வுக்காக சப்ரகமுவ பல்கலைக்கழகம் (2004).

7) **"அகளங்கனின் இலக்கியப் படைப்புக்கள்"** செல்வி. வி.சுலக்சனா தேசிய கல்வியியற் கல்லூரி மட்டக்களப்பு. (2008)

8) **"தமிழ் இலக்கியம் "கட்டுரைகள்"** இந்த ஆய்வில் **"இலக்கிய அறிஞர்கள்"** பகுதியில் **"இலக்கிய அறிஞர் தமிழ்மணி அகளங்கன்"** எனும் தலைப்பில் இவர் பற்றிய ஆய்வு சேர்க்கப்பட்டுள்ளது. செல்வி.வனிதா வரதராஜா. நூலக டிப்ளோமா தகவல் விஞ்ஞான தரம் 2 பகுதி 2 பாடநெறியினை பூர்த்தி செய்வதற்கு எழுதப்பட்டது (2010)

## ஆவணங்களாகப் பதிவாகியுள்ள படைப்புக்கள்

1) **"செஞ்சோற்றுக்கடன்"** என்னும் இலக்கிய நாடகம் திரு.சு.பூபாலசிங்கம் ஆசிரியர் அவர்களால் ஆங்கிலத்தில் "Gratitude" என்னும் நாடகமாக மொழி பெயர்க்கப்பட்டு திரு.S.கிருஷ்ணகுமார் அவர்களின் இயக்கத்தில் K.K, ARTS films இனரால் வ.சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இறுவட்டு ஆக வெளியிடப்பட்டது 15.12.2005

2) **"உருகி எரியும் கர்ப்பூரங்கள்"** என்ற நாடகம் திரு.சு.பூபாலசிங்கம் அவர்களால் ஆங்கிலத்தில் "Melting Camphors" என்ற பெயரில் மொழி பெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட்டதோடு நூலாகவும் வெளியிடப்பட்டது (18.06.2005)

3) **"செந்தாமரைக் குளங்கள்."** பாடல் **"வன்னி ஓடை"** இசை நாடாவில் இடம்பெற்றது. கலை கலாசார மன்றம் வவுனியா வளாகத்தினால் வெளியிடப்பட்டது. இசை ஜே.ஜஸ்டின், சோ, ஜெயச்சந்திரா.

4) **"அடங்காத பற்றுக் கொண்ட..."** பாடல் **"வன்னி அருவி"** இசை நாடாவில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது.கலை கலாசார மன்றம் வவுனியா வளாகத்தினால் வெளியிடப்பட்டது. இசை ஜே.ஜஸ்டின், சோ.ஜெயச்சந்திரா. (05.07.2000)

5) **"இசைத்திட முடியாது..."** பாடல் **"வன்னி ஊற்று"** இசை நாடாவில் இடம் பெற்றது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டது. (10.06.2003) இசை.சோ.ஜெயச்சந்திரா.

6) **"உள்ளம் பேசும் வார்த்தை" "ட்ரெயின்"** இசைப் பாடல் தொகுப்பில் இடம் பெற்றது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டது. இசை சோ.ஜெயச்சந்திரா. (2001)

7) **"சிரிக்கும் முல்லைகளே.." "சிறகுகள்"** சிறுவர் பாடல் இசைத் தட்டில் (C.D). இடம் பெற்றது. இசை சோ ஜெயச்சந்திரா. வெளியீடு பாலர் கல்விக் கழகம். அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. கொட்டகலை. (அக்டோபர் 2003)

8) **சின்னச் சிட்டுக்கள்** நூலில் உள்ள பாடல்கள் மீள் கல்விச் செயற்றிட்டம் தரம் நான்கு மாணவரின் மழலைக் குரல் இறுவட்டாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் வெளியிடப்பட்டது. (2007)

9) **"அமுத கானமே"** எனும் இவரது இசைப் பாடல் இசை இளவரசர் கந்தப்பு ஜெயந்தனின் இசை ஆக்கத்தில் **"இதயத்தின் ஓசை"** எனும் இறுவட்டில் வெளி வந்தது. (2009)

10) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சுவிஸ் நாட்டில் நடாத்திய செந்தமிழ் மாலை மாபெரும் நிகழ்வில், உலகத் தமிழ் அறிஞர்கள், தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், கந்தப்பு ஜெயந்தனது இசையில் உருவாகிய அகளங்கன் அவர்கள் எழுதிய தமிழ்மொழி எழுச்சிப்பாடல் **"தமிழே நம் மொழியாகும்..."** ஒலிபரப்பப்பட்டு பிரபல பாடகர் தீபன் சக்கரவர்த்தி, மற்றும் பல பிரமுகர்களால் பாராட்டப்பட்டது.(2011)

11) **பிரெண்டா, டென்மார்க்** நகரிலே அருளாட்சி புரியும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பற்றி அகளங்கன் அவர்களால் எழுதப்பட்ட பன்னிரண்டு பக்திப்பாடல்கள். **"ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பாடல்கள்"** எனும் இறுவட்டாக இந்தியாவில் இசை **அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதற்கு இசை அமைத்தவர்** எல்.ஷிவனேஷ்.

1. "அருள் ஆட்சி செய்கின்ற" ..... பாடியவர்: வீரமணி ராஜு.
2. "டென்மார்க் தேசத்திலே"..... பாடியவர்: புஷ்பவனம் குப்புசாமி.
3. "நா ஒன்று போதாது"..... பாடியவர்: பவன்.
4. "நெற்றியில் இருப்பது"..... பாடியவர்: பார்த்திபன்.
5. "டென்மார்க் மண்ணிலே"..... பாடியவர்: ரேணுகா.
6. "கருமாரி அவதாரமே"..... பாடியவர்: வீரமணி ராஜு.
7. "வேப்பிலையில்"..... பாடியவர்: முருகேஷ்
8. "தென் நாட்டில் உருவெடுத்து" .... பாடியவர்: பார்த்திபன்.
9. "முன்னின்று அருளும்" ..... பாடியவர்: ரமேஷ் பாரதி.
10. "பிரண்டாவின் பேரொளியே" ..... பாடியவர்: கனகராஜ்.
11. "காலமெல்லாம்" ..... பாடியவர்: கண்மணிராஜா.
12. "மங்கல 'ரூபிணி" ..... பாடியவர்: உமாமகேஸ்வரி.

**பாடப் பட்டு வரும் இவர் இயற்றிய கீதங்கள் சில.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தமிழ்வாழ்த்துப் பாடல்.
2) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக் கீதம்
3) வவுனியா நகரசபைக் கீதம்.
4) வவுனியா பிரதேச செயலகக் கீதம்
5) நெடுங்கேணி பிரதேச செயலகக் கீதம்.
6) வெங்கலச் செட்டிகுள பிரதேச செயலகக் கீதம்.
7) வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேசசபைக் கீதம்
8) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கீதம்.
9) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலைக் கீதம்.
10) வவுனியா இந்து மாமன்றக் கீதம்.
11) வெங்கலச் செட்டிக்குளப் பிரதேச சபைக் கீதம்.
12) வவுனியா நிருத்திய நிகேதன நுண் கலைக் கல்லூரிக் கீதம். மற்றும் பல மன்றங்கள், பாடசாலைகளின் கீதங்கள்.

## வானொலி, தொலைக்காட்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தமிழ்ச் சேவையில் இவரது பல நாடகங்களும் மெல்லிசைப் பாடல்களும் ஒலி பரப்பாகின.

இதில், இந்தியத் தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர் T.K.இராம மூர்த்தி (விஸ்வநாதன் இராமமூர்த்தி இரட்டையரில் ஒருவர்) யினால் இசையமைக்கப்பட்ட **"சேற்று வயல் காட்டினிலே நாற்று நட வந்த பெண்ணே"** என்ற கிராமிய மெட்டுக் கொண்ட பாடல் மிகவும் பிரபலம் பெற்றது. (1979)

சிங்களத் திரையிசைப் பாடகியான **சுஜாத்தா** அத்த நாயக்காவும் ஒரு பாடலைப் பாடியுள்ளார். பத்து பாடல்களுக்குமேல் ஒலிபரப்பாகின.

அத்தோடு பல உரைகளையும் ஆற்றியிருக்கிறார். பல கவியரங்குகளில் பங்குகொண்டும், தலைமை வகித்தும் சிறப்பித்துள்ளார்.

**கவிதைக் கலசம்** என்ற நிகழ்ச்சியை 1998ம் ஆண்டில் 38 வாரங்களும், 2001ல் ஆண்டு முழுவதும் நடாத்தியுள்ளார். வெள்ளிக்கிழமை தோறும் இரவு 9.30 மணிக்கு இந்நிகழ்ச்சி இடம் பெற்றது.

இவரது சமூக நாடகங்களும், இலக்கிய நாடகங்களும் வானொலியில் ஒலிபரப்பாகின. பின் அவை நூலுருப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை **ரூபவாகினியில்** பல கவியரங்குகளில் பங்கு கொண்டும், தலைமை வகித்தும் உள்ளதோடு பல பேட்டிகளையும் வழங்கியுள்ளார். வசந் தொலைக்காட்சியிலும் இவரது பேட்டி இடம்பெற்றுள்ளது.

மேலும் அவுஸ்திரேலிய **"முத்தமிழ் முழக்கம்" "முத்தமிழ் மாலை"** ஆகிய வானொலிச் சேவைகளிலும், **சர்வதேச ஒலிபரப்புச் சேவை** (I.B.C) யிலும், **கனடா** (C.T.R) வானொலியிலும் மற்றும் பல இடங்களிலும் இவரது நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

**கனடா** தமிழ் வானொலி நிலையம் (C.T.R) சிறந்த நாடக எழுத்தாளருக்கான கௌரவ விருதினை வழங்கிக் கௌரவித்தது. (04.07.2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது **"பப்புருவாகனன்"** என்ற இலக்கிய நாடகத்தை **"தர்மம் வெல்லும்"** என்ற பெயரில் வானொலி நாடகமாகத் தயாரித்து **கனடா தமிழ் வானொலியில்** (C.T.R) பல தடவைகள் ஒலிபரப்பி, சிறந்த நாடகத்துக்கான விருதை திரு. S.S.துரை அவர்கள் வீட்டுக்கு கொண்டு வந்து தந்தார். (2003)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இவர் கல்வி கற்ற போது (அப்போது வளாகம் 1977) முத்தமிழ் விழாவில் இவரது கதை வசனத்தில் உருவாகிய **"அமரேந்திரா"** நாடகம் மேடையேறியது.

கனல் தெறிக்கும் வசனங்களால் பெயர் பெற்ற இந்நாடகம் **யாழ்.அரியாலை நாடக மன்றத்தாலும்** மேடையேறப்பட்டது. **திருகோணமலை மூதூர் சேனையூர் நாடக மன்றத்தினராலும்** மேடையேறப்பட்டது.

**"அனிச்சமலர்"** என்ற இவரது சமூக சீர்திருத்த நாடகம் வவுனியாவில் நடைபெற்ற நாடகப் போட்டி ஒன்றில் முதலிடம் பெற்றது.

நு/ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த காலத்தில் (1985) பல இலக்கிய நாடகங்களை எழுதி, இயக்கி மேடையேற்றியுள்ளார். திரு.சு.முரளிதரன் ஆசிரியர் அவர்கள் இவருக்குத் துணையாக இருந்தார்.

பல வானொலி நாடகங்களை எழுதியுளார். **"அன்றில் பறவைகள்", "கூவாத குயில்கள்", "இலக்கிய நாடகங்கள்," "கங்கையின் மைந்தன்"** என நான்கு நாடக நூல்களாக அவை வெளி வந்ததன.

**"யாழ்தேவி"** என்ற தொலைக்காட்சி நாடகப் பிரதி ரூபவாகினி சிரேஸ்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு.அருணா செல்லத்துரையின் நெறியாள்கையில், வவுனியா நகரசபையினால் குறும் படமாகத் தயாரிக்கப்பட்டது. இது வவுனியாவில் வெளிவந்த முதல் குறும்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (1994)

அவுஸ்திரேலிய "முத்தமிழ் முழக்கம்" "முத்தமிழ் மாலை" ஆகிய வானொலிச் சேவைகளில், **"அன்றில் பறவைகள்", "இயந்திர இல்லறம்"** ஆகிய நாடகங்கள் ஒலி பரப்பப்பட்டன. சர்வதேச ஒலி பரப்புச் சேவையில் (I.B.C.) திரு.தேவராஜா அவர்களால் **"அன்றில் பறவைகள்"** நாடகம் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாகியது. இவை கனடா, சுவிஸ், பிரான்ஸ் முதலான நாடுகளிலும் ஒலிபரப்பாகியதுடன் மேடையேற்றப்பட்டுமுள்ளன.

**"அன்றில் பறவைகள்"** என்ற இவரது வானொலி நாடக நூல் 1992ம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது. இந்த விருது பெற்ற முதல் வானொலி நாடக நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது

இவரது **"இலக்கிய நாடகங்கள்"** நூல் 1994ம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும், கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசையும் பெற்றது.

இவரது **"கங்கையின் மைந்தன்"** நாடக நூல் 2009க்கான வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றத்தின் பரிசையும், தமிழியல் விருதையும், தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழையும், (யாழ் இலக்கிய வட்டமும்) இலங்கை இலக்கியப்பேரவை விருதையும் பெற்றது .

இவர் பாடசாலைகள், மன்றங்கள் போன்றவற்றிற்காக பல மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களையும், பல நாட்டிய நாடகங்களையும் "பா" நாடகங்களையும் எழுதியுள்ளார்.

"பா" நாடகங்களில் **"நம்பி ஆரூரர்"** சிறப்பிடம் பெறத்தக்கது. விவாத நாட்டிய நாடகமும் எழுதியுள்ளார்.

**நாட்டிய நாடகங்கள், பா நாடகங்கள்**

இவர் எழுதிய நாட்டிய நாடகங்கள் பல பரிசுகளைப் பெற்றுள்ளன. இவரது **"பத்தினித் தெய்வம்"** என்னும் நாட்டிய நாடக நூல் 2008ம் ஆண்டுக்கான வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

1996 தமிழ்த்தினப் போட்டியில் இவரின் **"அகதிகளாகிப் படும் அவலம்"** நாட்டிய நாடகம் "வடக்கு கிழக்கு மாகாணமட்டப் போட்டியில்" இரண்டாம் இடம் பெற்றது.

2007ல் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய மாகாண மட்ட காவியக்கதா நாட்டிய நாடகப் போட்டியில் **"பத்தினித் தெய்வம்"** (சிலப்பதிகாரம்) எனும் ஒரு மணித்தியால நாட்டிய நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

2007 தமிழ்த் தினப்போட்டியில் **"கங்குலும் பகல் பட வந்தான்"** என்னும் நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது

2008 தமிழ்த் தினப்போட்டியில் **"மீண்டும் சுயம்வரம்"** (நளவெண்பா) என்னும் நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் முதல் இடம் பெற்றது.

2009 தமிழ்த் தினப்போட்டியில் **"பக்த பிரகலாதன்"** எனும் நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.

2010 தமிழ்த் தினப்போட்டியில் **"உயிர் நீப்பர் மானம் வரின்"** எனும் நாட்டிய நாடகம் வடக்கு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.

2011 தமிழ்த் தினப்போட்டியில் **"சூர சம்ஹாரம்"** எனும் நாட்டிய நாடகம் வடக்கு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.

2012 தமிழ்த் தினப் போட்டியில் **"தாருகாவனம்"** எனும் நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் 2 ம் இடம் பெற்றது.

2013 தமிழ்த்தினப் போட்டியில் **கண்ணகி** எனும் நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றது.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், மற்றும் இலங்கைக் கலைக் கழகத்தின் அரச நடன மற்றும் நாட்டிய நாடக குழுவினரால் நடாத்தப்படும் 2011 அரச நாட்டிய நாடக விழா நிகழ்வில் **"சூரசம்ஹாரம்"** எனும் இவரது நாட்டிய நாடக எழுத்துருவாக்கத்திற்கு 2ம் பரிசு கிடைத்துள்ளது. (கருணை ரூபி 2011)

மேற்படி போட்டியில் சிறுவர் பிரிவில் இவரது **"பக்தப் பிரகலாதன்"** எனும் நாட்டியநாடக எழுத்துருவாக்கத்திற்கு முதலாம் பரிசு கிடைத்துள்ளது. அத்துடன் இந் நாட்டிய நாடகத்திற்கு மொத்தம் பதினொரு பரிசுகள் கிடைத்துள்ளன. (அ.சுஜேந்திரா - 2011)

மற்றும் **"நம்பி ஆரூரர்", "பாஞ்சாலி சபதம்", "சமாதானம்", "வழி பிறக்கும்",**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பெண்", "மாமாங்கேஸ்வரம்" "மானுடம் வாழ்க", "கற்பு இயல்", "பஞ்ச பூதங்களும் மனித வாழ்க்கையும்", "வாலி வதை", "மயானகாண்டம்", "தமயந்தி சுயம்வரம்"** முதலான நாட்டிய நாடகங்களையும் **"நம்பி ஆரூரர்," "சூலை செய்த வேலை," "பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்," "திருவாதவூரர்"** போன்ற பா (கவிதை) நாடகங்களையும் எழுதியுள்ளார்.

இவரது நாட்டிய நாடகங்கள் பெருமளவுக்கு திருமதி சூரயயாழினி வீரசிங்கம் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டது. (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

## மேடை நாடகங்கள் சில

**"முற்பகல் செய்யின்"** என்னும் மேடை நாடகம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் இவரது நெறியாள்கையில் மேடையேறப்பட்டது. (1992)

இவரது **"அன்றில் பறவைகள்"** என்னும் நாடகம் **திரு.கதிர்.சுவர்ணராஜா** அவர்களின் நெறியாள்கையில், வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவர்களால் மேடையேறப்பட்டது. (1992) இது தமிழ்த் தினப் போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது.

இவரது **"கவரி வீசிய காவலன்"** என்னும் நாடகம் நுவரேலியா ஹோல் புறுக் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களால் **சு.முரளிதரன்** அவர்களதும் இருவரதும் கூட்டு நெறியாள்கையில் மேடையேறப்பட்டது (1985)

இவரது **"அசோகவனம்"** எனும் இலக்கிய நாடகம் 2009 தமிழ்த் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இவரது **"சிலம்பின் பரல்கள்"** எனும் இலக்கிய நாடகம் 2010 தமிழ்த் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது.

இவ்விரு நாடகங்களும் **திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள்** ஆசிரியரால் நெறியாள்கை செய்யப்பட்டது. (வவுனியா விபுலானந்தாக் கல்லூரி.)

## வானொலி, தொலைக்காட்சி ஆக்கங்கள்

1) "அவர்கள் படித்தவர்கள்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (20.06.1987).
2) "அம்மா நான் வெளிநாடு போறேன்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (09.01.1990)
3) "ஆற்றில் விழுந்த மலர்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (17.03.1990)
4) "இயந்திர இல்லறம்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (27.10.1990).
5) "அன்றில் பறவைகள்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (16.03.1991)
6) "உருகி எரியும் கர்ப்பூரங்கள்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (16.11.1991)
7) "செஞ்சோற்றுக் கடன்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் .கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (11.12.1991)
8) "பப்புருவாகனன்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (24.03.1992).

9) "பாரி வள்ளல்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (27.10.1992).

10) "புத்திர சோகம்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (28.07.1992)

11) "மாற்றங்கள் மாற்றவில்லை" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (04.12.1993).

12) "சிலம்பு பிறந்தது" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (12.07.1994)

13) "கங்கையின் மைந்தன்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (15.06.1996)

14) "கூவாத குயில்கள்" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (04.08.1996)

15) "ஆனை கட்டிய அரியாத்தை" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது. (16.05.1998)

16) "வாலி" எனும் இவரது நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் ஒலிபரப்பாகியது(01.08.1998).

17) "பக்திக்கவி சேக்கிழாரும் காவியக்கவி கம்பனும்" எனும் இவரது பேச்சு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் இடம் பெற்றது. (24.09.1984)

18) "நயத்தக்க நாகரிகம்" எனும் இவரது பேச்சு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் இடம் பெற்றது. (19.01.1990).

19) "குறளும் சிலம்பும்" எனும் இவரது பேச்சு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் இடம் பெற்றது. (23.04.1990)

161) திரு.எஸ்.முத்துக்குமாரன் அவர்களின் **"ஸ்ரீ ரங்கனா கள்வன்"** எனும் நாடக நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது. (2012)

162) திரு.தவராசா தர்சன் அவர்களது **"மௌன மொழிகள்"** எனும் கவிதைத்தொகுப்பு நூலில் இவரது **அணிந்துரை** வெளிவந்தது. (26.01.2013)

163) கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களின் **"திருகோணமலை மாவட்ட கிராமியப் பாடல்கள்"** எனும் நூலில் இவரது **அணிந்துரை** இடம்பெற்றது (30.01.2014).

164) **"கிராமிய விளையாட்டில் அடையாள அணிவகுப்பு"** எனும் கட்டுரை **ஞானம்** சஞ்சிகையில் வெளிவந்தது. (பெப்ரவரி 2013. இதழ் 153)

165) **"வவுனியா மாவட்ட நெற்செய்கையும் பண்பாட்டுக் கோலங்களும்"** எனும் கட்டுரை வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய 125 ஆண்டு விழா மலர் **"கலை ஒளி"** யில் வெளிவந்தது. (14.02.2013)

166) வன்னியூர் செந்தூரன் என்பவரது **"நிலவைத் தேடும் வானம்"** எனும் கவிதை நூலில் இவரது **அணிந்துரை** வெளிவந்தது.

167) **சென் அன்ரனிஸ்** தனியார் கல்வி நிலைய செய்தி மலரில் **விசேட செவ்வி** இடம்பெற்றது. (10.02.2013)

168) **"தடாகத்துத் தாமரையே தனிமலரே"** எனும் கவிதை **கலாநிதி கனகசபாபதி. நாகேஸ்வரன்** அவர்களின் மணிவிழா மலரில் வெளிவந்தது. (06.04.2013)

169) **திருஞானசம்பந்தன் பார்த்திபன்** என்பவரது கவிதைத் தொகுப்பு நூலில் இவரது **அணிந்துரை** வெளிவந்தது. (2013 வைகாசி)

170) திரு.எஸ்.வி.விஜிதரனின் **"அடிப்படைத் தமிழ் இலக்கணத் தெளிவு"** எழுத்தியல் நூலில் இவரது **அணிந்துரை** வெளிவந்தது. (2013)

171) **"ஒரு கால்"** எனும் சிறுகதை ஞானம் சஞ்சிகையில் வெளிவந்தது. (இதழ் 156. மே 2013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172) **"வன்னிப் பிரதேச குளத்து மீன் வளம்"** எனும் கட்டுரை **ஓட்டு சுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவை விழா மலரான "முத்தெழில்"** மலரில் வெளிவந்தது.(2013)

173) **"வவுனியா மாவட்டத்தில் குறும்பட வளர்ச்சி"** எனும் கட்டுரை வடமாகாணம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்வி அமைச்சு இதழான **"வடமாகாண தமிழ் இலக்கியத்தின் செல் நெறிகள்"** எனும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பில் வெளிவந்தது. (2013)

174) **"இந்துக்களின் திருமண முறைகளும் இல்லற வாழ்வும்"** எனும் கட்டுரை **வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இந்துமா மன்ற இந்துமாநாட்டு சிறப்பு மலரில்** வெளிவந்தது. (13.09.2013)

175) வவுனியா **இயங்கராவூர்** பதி ஸ்ரீ விக்னேஸ்வரர், கண்ணகை அம்பிகை, வீரபத்திரர், நரசிங்க மூர்த்தி ஆலய வரலாறு மலரில் இவரது **வாழ்த்துச் செய்தி** இடம்பெற்றது. (2013)

176) **"வவுனியா மாவட்ட கிராமிய வழிபாட்டு மரபில் புதூர் நாகதம்பிரான்"** எனும் கட்டுரை புதூர் அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலரான **"ஸ்ரீ நாகமலர்"** ல் வெளிவந்தது. (2013)

177) **"வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்களில் கல்விச் சிந்தனையும் செயற்பாடும்"** எனும் கட்டுரை **ஞானம்** சஞ்சிகையில் வெளிவந்தது. (இதழ் 161 ஒக்டோபர் 2013)

178) **"வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்களில் கல்விச் சிந்தனையும் செயற்பாடும்"** எனும் கட்டுரை வட மாகாண தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர் **"கவின் தமிழ்"** மலரில் வெளிவந்தது. (2013)

179) வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை இலக்கிய விழா மலரான **"மருதமுகிழ்"**ல் பிரதேச கீதமும், **"வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்களில் கல்விச் சிந்தனையும் செயற்பாடுகளும்"** எனும் கட்டுரையும் வெளிவந்தன. (2013)

180) சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் ஸ்ரீமதி ஜெயகௌரி தம்பதிகளின் மணிவிழா மலரில் **"திருக்குறளில் பிறன் இல் விழையாமை"** எனும் கட்டுரையும் **"சீரோடும் சிறப்போடும் வாழ்க"** எனும் வாழ்த்தும் இடம்பெற்றன. (01.07.2013)

181) மன்னார் திரு.ந.பிரதீப் அவர்களது **அகரச் சிதறல்கள்** எனும் கவிதை நூலில் அணிந்துரை இடம்பெற்றது. (15.07.2013)

182) திருமதி.மேரி மெக்டலீன் ஜெயக்கெனடி அவர்களது **"இதயதாகம்"** எனும் கவிதை நூலில் இவரது **அணிந்துரை** இடம்பெற்றுள்ளது. (09.11.2013) (ம.ப.பா)

183) முருங்கன் திரு.பி.பி.அந்தோனிப்பிள்ளை அவர்களின் **சிறுவர் பாடல்** நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது. (2013)

184) திரு.இ.சயந்தன் (சட்ட மாணவர்) அவர்களின் **"ஒரு மௌனம் என்னை விலை பேசுகிறது"** எனும் கவிதை நூலில் இரவது **அணிந்துரை** இடம்பெற்றுள்ளது.

185) டாக்டர்கள் பா.திலீபன், செ.மதுரகன் இருவரும் இணைந்து வெளியிட்ட **"இருளைப் படைத்தல்"** எனும் கவிதை நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது. (2013)

186) திருமதி.பேபி சுதாகரன் அவர்களது **"மனதைக் கவரும் மழலைப் பாடல்கள்"** எனும் நுலில் இவரது **வாழ்த்துரை** இடம்பெற்றுள்ளது. (2013)

187) கிண்ணியா எம்.ரி.சயாத் அவர்களது **சிறுவர் பாடல்** நூலில் இவரது **அணிந்துரை** இடம்பெற்றது. (2013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188) **"அன்றைய இதிகாசப் பாரதமும் இன்றைய பரிகாசப் பாரதமும்"** என்னும் கட்டுரை **ஞானம்** சஞ்சிகையில் வெளிவந்தது. (இதழ் 166, மார்ச் 2014)

189) **"தமிழ்த்தூது வண. பிதா தனிநாயகம் அடிகளார்"** கட்டுரை, **"நெல்சன் மண்டேலா"** கவிதை, **"வவுனியாவின் முதல் புதுக் கவிதைத் தொகுப்பு"** கட்டுரை ஆகியன மாருதம் சஞ்சிகையில் வெளிவந்தன. (இதழ் 14 - 15.01.2014)

190) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் அவர்களின் **"மணிவிழா வாழ்த்து மலரில்" "சமூகத்தோடு இணைந்து பணியாற்றிய சாதனையாளர்"** எனும் **வாழ்த்துச் செய்தி** இடம் பெற்றது. (2014 - ஜனவரி)

191) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் அவர்களின் **"மணி விழா மலரில், வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்களில் கல்விச் சிந்தனையும் செயற்பாடும்"** எனும் கட்டுரை வெளிவந்தது (ஜனவரி 2014)

192) திரு.வே.முல்லைத்தீபன் என்பவரது **"கடவுளிடம் சில கேள்விகள்"** எனும் கவிதை நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது (22.03.2014)

193) பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்களின் **"இலக்கண மரபுகளும் மொழி வரலாறும்"** எனும் நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது. (23.02.2014)

194) திரு.கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்களின் **"குட்டி முயலும் வேட்டை நாயும்"** எனும் சிறுவர் நாடக நூலில் இவரது **அணிந்துரை** இடம் பெற்றது. (29.03.2014)

195) **"அன்றைய இதிகாசப் பாரதமும் இன்றைய பரிகாசப் பாரதமும்"** எனும் கட்டுரை **ஞானம்** சஞ்சிகையில் வெளிவந்தது. (இதழ் 166, மார்ச் 2014)

196) மன்னார் திரு.வை.கஜேந்திரன் அவர்களது **"துடிக்கும் விழிகள்"** எனும் கவிதை நூலில் இவரது அணிந்துரையும், இவரது **"இசைத்திட முடியாது ..."** எனும் தமிழ் வாழ்த்தும் இடம் பெற்றன. (சித் 2014)

## சிரித்திரன் சஞ்சிகையில் வெளிவந்தவை

1. **"இலக்கியச் சிமிழ்," "பிறந்தநாள் இன்று பிறந்தநாள்",** ஆகியவை **அகளங்கன்** என்ற பெயரிலும் **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **நா.தர்மராஜ்** எனும் பெயரிலும் வைகாசி இதழில் வெளிவந்தன. (1979)

2. **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை, **"பேராசிரியர் ஆறு அழகப்பனுடன் ஒரு சந்திப்பு", "புவி இயல் இதுவோ"** எனும் அஞ்சலிக் கவிதை, **"மனுநீதி கண்ட சோழன் போக்குவரத்து சேவை" "மனோரம்மியம்"** எனும் நாட்டிய விமர்சனக் கட்டுரை (**மேகலை** எனும் பெயரில்) ஆகிய இவரது ஆக்கங்கள் ஆனி இதழில் வெளிவந்தன. (1979)

3. **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **நா.தர்மராஜா** எனும் பெயரிலும் **"நகையினால் விளைந்த காவியங்கள்"** எனும் தகவல், **"ஏன் இப்படி"** எனும் தகவல் **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை ஆகியன **அகளங்கன்** எனும் பெயரிலும் ஆடி இதழில் வெளி வந்தன. (1979)

4. **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை, **"திரேதா யுகத்தில் மாப்பால்"** எனும் செய்திக் குறிப்பு, **"மாமியை மிஞ்சிய மருமகள்"** ஆகியன **அகளங்கன்** எனும் பெயரிலும், **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **சே.நா.தர்மராஜன்** எனும் பெயரிலும் ஆவணி இதழில் வெளிவந்தன. (1979)

5. **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும் **"இலக்கியத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகைச்சுவை" சே.நா.தர்மராசா** எனும் பெயரிலும் **"தசரதனின் உடலை எம்பாம் செய்தனர்"** எனும் கட்டுரை **மறையூரர்** எனும் பெயரிலும் **"மூன்றடி மண் கேட்டான்"** எனும் கட்டுரையும் புரட்டாதி - ஐப்பசி இதழில் வெளிவந்தன. (1979)

6. **"கொடுத்து வைத்தவன்", "சொல் நயம்", "இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை ஆகியன **அகளங்கன்** எனும் பெயரில் நவம்பர் இதழில் வெளிவந்தன. (1979)
7. **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **சே.நா.தர்மராஜா** எனும் பெயரிலும் **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும் டிசம்பர் இதழில் வெளிவந்தது. (1979)
8. **"இலக்கியச் சிமிழ் "பணயக்கைதிகள்"** எனும் கட்டுரை **"சிறை", "பாவம்," "ஏலோர் எம்பாவாய்"** எனும் கட்டுரை ஆகியன **அகளங்கன்** எனும் பெயரிலும் **"இலக்கியத்தில் நகைச்சுவை" சே.நா தர்மராஜா** எனும் பெயரிலும் ஜனவரி இதழில் வெளிவந்தன. (1980)
9. **"இலக்கியச் சிமிழ், மயில் முறைக்குலத்துரிமை"** எனும் கட்டுரை, அகளங்கன் எனும் பெயரிலும், **"வாசனைத்திரவியம்", "அம்மையே அப்பா"** ஆகியன மறையூரர் எனும் பெயரிலும் **"ஏவு வாள்"** என்பது **தர்மராஜா** எனும் பெயரிலும் பெப்ரவரி மார்ச் இதழில் வெளிவந்தன. (1980)
10. **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **நா.தர்மராஜா** எனும் பெயரிலும் **"பெண் என்றால் பேயும் இரங்கும்"** என்பது **அகளங்கன்** எனும் பெயரிலும் **"வாசனைத்திரவியம்", "தண்டனை"** ஆகியனவும் ஏப்ரல் இதழில் வெளிவந்தன. (1980)
11. **"ஆண்டவன்", "வெட்கங்கெட்ட ரோசா", "அறிவும் உணர்வும்"** ஆகிய சிறு கட்டுரைகள் **அகளங்கன்** எனும் பெயரிலும் **"சதாவதானி"** எனும் சிறு கட்டுரை சே.நா.தர்மராஜா எனும் பெயரிலும், **"செல்லாத காசு"** எனும் கவிதையும் மே இதழில் வெளிவந்தன. (1980)
12. **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **சே.நா.தர்மராசா** எனும் பெயரில் ஜூலை இதழில் வெளிவந்தது. (1980)
13. **"திரைகடல் ஓடியும்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும் **"பாலும் தயிரும்"** எனும் கட்டுரை **தர்மராஜா** எனும் பெயரிலும் **"க.வி.யின் கருத்துச் சுவைகள்"** என்பதும் ஆகஸ்ட் செப்டம்பர் இதழில் வெளிவந்தது.(1980)
14. **"அரிச்சுவட்டில்"** எனும் புதுக்கவிதையும் **"தம் "பதிகள்"** என்பதும் **அகளங்கன்** எனும் பெயரிலும் **"க.வி.யின் கவின் சுவைகள்"** எனும் கட்டுரை **தர்மராஜ்** எனும் பெயரிலும் **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **தர்மராஜா** எனும் பெயரிலும் அக்டோபர் இதழில் வெளிவந்தன. (1980).
15. **"பாரதியாரின் நகைச்சுவை"** எனும் கட்டுரை **சே.நா.தர்மராசா** எனும் பெயரில் நவம்பர் இதழில் வெளிவந்தது. (1980)
16. **"பிணைமானும் துணைமானும்"** எனும் இவரது கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் டிசம்பர் இதழில் வெளிவந்தது. (1980)
17. **"அம்புலி மாமாவான, விதம்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும், **"தமிழனும் சுடுதண்ணிப் போத்தலும்"** எனும் கட்டுரையும், **"நகைச்சுவை"** எனும் கட்டுரையும் **தர்மராஜா** எனும் பெயரிலும் ஜனவரி இதழில் வெளி வந்தன. (1981)
18. **"கோவலன் சிலம்பை அடகு வைத்திருந்தால்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் பெப்ரவரி இதழில் வெளிவந்தது. (1981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. **"சமூகம்" "உண(ர்)வு",** ஆகிய இரு புதுக்கவிதைகளும் **அகளங்கன்** எனும் பெயரில் மார்ச் இதழில் வெளிவந்தன. (1981)
20. **"பெண்கள் இடதுசாரிகள்"** எனும் கட்டுரை ஏப்ரல் இதழில் வெளிவந்தது. (1981)
21. **"பாரிக்குப் பொற்கிளிகள்"** என்பதும், **"இலக்கியச் சிமிழ்" "நாலும் ஒன்றும்",** எனும் கட்டுரையும், **"காரிய ஆலயம்"** எனும் புதுக்கவிதையும் **அகளங்கன்** எனும் பெயரில் ஜூலை இதழில் வெளிவந்தன. (1981)
22. ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இரு இதழ்களிலும் வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. (1981)
23 **"ரிஷிமூலங்கள்"** எனும் குறிப்பு **அகளங்கன்** எனும் பெயரில் அக்டோபர் இதழில் வெளிவந்தது. (1981)
24 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரையும் **"தமிழர் வாழ்வில் வலது பக்கம்"** எனும் குறிப்பும் **அகளங்கன்** எனும் பெயரில் நவம்பர் இதழில் வெளிவந்தன. (1981)
25 **"எத்திக்காய் சென்றானோ"** எனும் கவிதை **அகளங்கன்** எனும் பெயரில் டிசம்பர் இதழில் வெளிவந்தது. (1981)
26 **"இலக்கியத்தில் நகைச்சுவை"** எனும் கட்டுரை **சே.நா.தர்மராசா** எனும் பெயரில் ஜனவரி இதழில் வெளிவந்தது. (1982)
27 பெப்ரவரி இதழில் வெளிவந்த ஆக்கங்களின் விபரம் பெற முடியவில்லை. (1982)
29 **"இலக்கியச் சிமிழ் "காது அற்ற ஊசி"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் மார்ச் இதழில் வெளிவந்தது. (1982)
30 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும் **"சிவாஜிக்கு எம்.பி பதவி"** எனும் கட்டுரை **நா.யோகராஜா** எனும் பெயரிலும் ஏப்ரல் இதழில் வெளிவந்தன. (1982)
31 **"இலக்கியச் சிமிழ்" "தேன் வந்து பாயுது காதினிலே"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் மே இதழில் வெளிவந்தது.(1982)
32 **"இலக்கியச் சிமிழ்"** கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஆகஸ்ட் இதழில் வெளிவந்தது. (1982)
33 **"இலக்கியச் சிமிழ் "விமானக்கடத்தல்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் செப்டம்பர் இதழில் வெளிவந்தது. (1982)
34 **"இலக்கியச் சிமிழ் "புலவனும் புத்திரனும்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் டிசம்பர் இதழில் வெளிவந்தது. (1982)
35 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஜனவரி இதழில் வெளிவந்தது. (1983)
36 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் மார்ச் இதழில் வெளி வந்தது. (1983)
37 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஜூன் இதழில் வெளிவந்தது. (1983)
38 **"இலக்கியச் சிமிழ் "காணி நிலம்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஜூலை இதழில் வெளிவந்தது. (1983)
39 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் டிசம்பர் இதழில் வெளிவந்தது. (1983)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 **"இலக்கியத் தேன்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் பெப்ரவரி இதழில் வெளிவந்தது. (1984)

41 **"இலக்கியச் சிமிழ்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரிலும் **"தமிழ் இலக்கியத்தில் தீ விபத்துக்கள்"** எனும் கட்டுரை **அநபாயன்** எனும் பெயரிலும் ஏப்ரல் - மே இதழில் வெளிவந்தன. (1984)

42 **"கர்ணாமிர்தம்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஜுன் இதழில் வெளிவந்தது. (1984)

43 **"அத்தான் அக்கரையில்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் ஜுலை இதழில் வெளிவந்தது. (1984).

44 **"கலைஞனும் கவிஞனும்"** எனும் கட்டுரை **அநபாயன்** எனும் பெயரில் சிரித்திரன் அக்டோபர் இதழில் வெளிவந்தது. (1984)

45 **"இலக்கியத்தில் சோகம்" "கானகத்தில் காரிருளில்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் சிரித்திரன் நவம்பர் இதழில் வெளிவந்தது. (1984)

46 **"தோள் கண்டார் தோளே கண்டார்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் சிரித்திரன் ஜுன் இதழில் வெளிவந்தது. (1985)

47 **"இலக்கியச் சிமிழ் "விதியும் வீதியும்"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் சிரித்திரன் ஆகஸ்ட் இதழில் வெளிவந்தது. (1985)

48, 49,50,51,52 சிரித்திரன் செப்டம்பர் 1985, மார்கழி 1985 சிரித்திரன் மாசி 1986, ஆவணி 1986, புரட்டாதி1986 ஆகிய ஐந்து இதழ்களிலும் வெளி வந்த ஆக்கங்கள் கிடைக்கப் பெறவில்லை.

53 **"இலக்கியச் சிமிழ்" "தமிழ் இலக்கியத்தில் பாதுகாப்பு வலயம"** எனும் கட்டுரை **அகளங்கன்** எனும் பெயரில் சிரித்திரன் ஐப்பசி- கார்த்திகை இதழில் வெளிவந்தது. (1986)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

## எனது இலக்கியப் பயணத்தில்....

**தந்தை : பம்பைமடு சேனாதிராசா நாகலிங்கம்** அவர்கள் **ஜாதகம் (சோதிடம்) குறிப்பதிலும், பலன் சொல்லுவதிலும்** ஆற்றல் படைத்தவர். சோதிடப் பாடல்கள் பலவற்றை மனனஞ் செய்து வைத்திருந்தார். **வீட்டு நிலையம், கிணற்று நிலையம்** எடுப்பதிலும் வல்லவர். பழந்தமிழ் இலக்கியப் பாடல்கள் பலவற்றை மனனஞ் செய்து வைத்திருந்தார். ஓய்வாக இருக்கும் நேரங்களில் ஓயாமல் ஏதாவது ஒரு பழந்தமிழ் இலக்கியப் பாடலை முணுமுணுத்தபடியே இருப்பார்.

**கம்பராமாயணம், வில்லி பாரதம்** என பல பாடல்கள் அவருக்கு ஞாபகம். **பிள்ளையார் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், சிவராத்திரி புராணம்** முதலிய வற்றுக்கு பயன் சொல்லுவார். (புராண படனம்) **கூட்டுறவுத் துறையிலும், சமூகசேவைத் துறையிலும்** ஈடுபட்டவர். அவரின் விருப்பப்படி அவரிடம் கேட்டு பாடல்களை கொப்பியில் எழுதிப் பாடமாக்கத் தொடங்கினேன். அவர் சில பாடல்களை இயற்றியிருக்கிறார். பாடல்களை சந்தம் மாறாமல் அப்படியே பாடிக் காட்டுவார். நயம் கூறுவார். விமர்சனமும் செய்வார். அவரே என் தந்தையார். அவரே என் முதற்குரு.

இம் மலரில் **மலராசிரியர்** மற்றும் **கலாநிதி .ச.அருளானந்தம், திரு.க.ஐயம்பிள்ளை** ஆகியோர் எனது தந்தையார் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். எனது இலக்கிய உணர்வு தந்தைவழிச் சொத்து. அவர் தனது சமய, இலக்கிய, சோதிட ஆற்றல் மூலம் பணம் சம்பாதிக்கவில்லை. கடுமையான உழைப்பாளியான அவர் விவசாயம் மூலம் தனது எட்டுப் பிள்ளைகளையும் ஆளாக்கிவிட்டார். ஒரு சிறு கிராமத்துச் சாதாரண விவசாயியின் சாதனை தான் இன்று எனது மணிவிழாவாகவும் இந்த மலர் வெளியீடாகவும் மலர்ந்து மணம் வீசுகிறது. எனது **வாலி** என்ற ஆய்வுநூலை என் தந்தையாருக்கே **சமர்ப்பணம்** செய்தேன்.

**தாய் :** புராண இதிகாசக் கதைகள் தெரிந்தவர். இரசனை மிக்கவர். எல்லாவகையிலும் என் தந்தையாரோடு ஒத்துப் போனவர். **நல்ல தங்காள், மாரியம்மன் தாலாட்டு** முதலானவற்றிலுள்ள பாடல்களைப் பாடிக் காட்டுவார். எனது படைப்புக்களை வாசித்திருக்கிறார். எனது பேச்சுக்களையும், நான் புராணபடனம் செய்ததையும் அருகிருந்து இரசித்திருக்கிறார். எனக்குக் கிடைத்த பல பெருமைகளைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். **நல்லம்மா** என்ற பெயருக்கேற்ற நல்ல அம்மாவாக 91 வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை வாழ்ந்து நிறைவாழ்வு பெற்றவர். எனது **'கம்பனில் நான்'** என்ற நூலை என் தாயாருக்கே சமர்ப்பணம் செய்தேன்.

**சகோதரர்கள் :**

**திரு.நா.சேனாதிராசா** : எனது மூத்த சகோதரர். வவுனியாவில் சமய, சமூக, அரசியல் பணிகள் மூலம் பிரபலம் பெற்றவர். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர். வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரதேசசபை என்பவற்றின் தலைவராகப் பணியாற்றியவர்.நான் க.பொ.த (சா/த) படிக்கும் போது இவர் பொதுச் சேவைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். அரசியல் மேடைகளில் பேசத் தொடங்கிவிட்டார். எனது **பேச்சு ஆர்வத்துக்கு இவரே முதல் காரணி.** சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நான் இணைந்து கொண்டதற்கும் இவரே காரணியாவார்.

**நா.தியாகராசா** : கலைப்பட்டதாரி. இவர் கொண்டுவந்து வாசிக்கும் **சரித்திர நாவல்கள்** எனக்கும் விருந்தாயின. சிறுகதை, கவிதை, எழுதும் ஆற்றல் படைத்தவர். இவரது 'சோமு சம்சாரியாகிவிட்டான்' என்ற சிறுகதை சிரித்திரன் சஞ்சிகையின் போட்டி ஒன்றில் முதலிடம் பெற்றது. இப்பொழுதும் கவிதை, கட்டுரை, சிறுகதை என எழுதுகிறார். எழுத்துத் துறையில் நான் ஈடுபட இவரும் ஒரு உந்து சக்தியே.

**நா.வில்வராசா : சமூக நாவல்களை** வாசிப்பதில் அதிகம் விருப்பம் கொண்டவர். அவர் மூலம் பல நல்ல சமூக நாவல்களை வாசித்தேன். இன்றும் எனக்கு இலக்கியத் துறையில் ஊக்கம் தருபவராக விளங்குகிறார்.

**நா.நடராசா** : **வீரகேசரிப் பிரசுர நாவல்களை** வாசிப்பதில் விருப்பம் கொண்டிருந்தவர். அவர் மூலம் ஈழத்து மண்வாசனை நாவல்கள் எனக்கு வாசிக்கக் கிடைத்தன. எங்கள் வீட்டிலிருந்து இலக்கியத் துறையில் பிரகாசித்திருக்க வேண்டியவர் இவரே. எனது தந்தையாரும் இவரையே இத்துறையில் எதிர்பார்த்தார். இன்று நல்ல இரசிகராக விளங்குகிறார்.

**அமரர்.நா.யோகராசா** : என்னைப் **புராண படனம்** செய்யத் தூண்டியவர் இவரே. எமது தந்தையாரின் மறைவு (1987) க்குப் பின் அந்த வெற்றிடத்தை நிரப்ப என்னை நிர்ப்பந்தித்து ஈடுபடுத்தியவர். என்னோடிருந்து பழகித் தனியாகப் புராணபடனஞ் செய்தவர். இலக்கிய இரசனை மிக்கவர். சமய ஈடுபாடு கொண்டவர். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு. எனது முற்றத்துக் கரடி சிறுகதை தொகுப்பை இவருக்கு சமர்ப்பணம் செய்துள்ளேன்.

இந்த ஐந்து சகோதரர்களும் எனக்கு மூத்தவர்கள் **கமலாவதி** மூத்த சகோதரி, **புனிதவதி** இளைய சகோதரி இருவருக்கும் இலக்கிய இரசனை உண்டு. வெளிப்படுத்த வாய்ப்புக்கள் அமையவில்லை.

**மனைவி : வவுனியா கள்ளிக்குளம் மா.பூலோகசிங்கம்** அவர்களின் மகள் **பூரணேஸ்வரி.** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது இளைய தொகுதி மாணவியாக **பொருளியலை** சிறப்புப் பாடமாகக் கற்று **சிறப்புப் பட்டம்** பெற்ற கலைப்பட்டதாரி. B.A.(Hons). பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட காதல் திருமணமாகக் கனிந்தது. திருமணத்திற்கு முன் நாங்கள் போட்ட திட்டங்கள் பெருமளவுக்கு நிறைவேறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன. திருமணத்திற்கு முன்பே பிள்ளைகளின் பெயர்களைத் தீர்மானித்திருந்தோம். அதன்படி மூத்தவர் மகன் - **அநபாயன்**, அடுத்தவர் மகள் - **அநிந்திதை**.

நான் நடந்து கொண்டும், இருந்துகொண்டும், கிடந்து கொண்டும் வேகமாகச் சொல்லச் சொல்ல அவற்றை ஒன்றும்விடாமல் எழுதி எடுப்பார். இது ஒரு அபார ஆற்றலே. பின் அழகாக எழுதித்தருவார். ஆலோசனை சொல்லுவார். விமர்சனம் செய்வார். தனக்குப் பிடிக்கவில்லை என்றால் காரணம் சொல்லி மறுப்பார்.

எனது **"செஞ்சோற்றுக்கடன்"** என்ற நாடகத்தில் குந்திதேவிக்கும் கர்ணனுக்கும் இடையிலான உரையாடலின் போது கர்ணன் சொல்வதாக நான் ஒரு வசனம் சொன்னேன். **"ஐந்தா ஒன்றா என்ற வியாபாரத் தாய்மை விபச்சாரத்துக்கு ஒப்பானது"** என்று, அவரோ **விபச்சாரத்துக்கு ஒப்பானது** என்பதை எழுத மறுத்துவிட்டார். அதைத் தவிர்க்கும்படி வேண்டினார்.

கவிதை, கட்டுரை, நாடகம் என எல்லா இலக்கிய வகைகளிலும் நான் சொல்லச் சொல்ல அப்படியே எழுதித் தருவார். **வியாசருக்கு விநாயகர்** கிடைத்த மாதிரி எனக்கு என் மனைவி. எனது **அலைக்குமிழ்** நாவலில் காதல் காட்சிகள் வரம்பை மீறி எழுதப்பட்டதாக சொல்லி வாதாடினார். அந்நாவல் எனது 23 வயதில் என்னால் எழுதப்பட்டது. வெளியிடப்படும்போது வயது 57. இந்த வயதிற்கு அது பொருத்தமில்லை என்று கருத்துச் சொன்னார்.

எனது மகள் தமிழை சிறப்புப்பாடமாகக் கற்ற பட்டதாரி. அவரிடம் நாவலைக் கொடுத்து அபிப்பிராயம் கேட்டபோது, "நாவலிலக்கியம் என்று பார்க்கும் போது அப்பாவின் எழுத்து விரசம் இல்லை" என்று தாய்க்குச் சமாதானம் சொன்னார். அதன் பின்பே அந்நாவலை வெளியிட்டோம்.

நூல் வெளியீடுகளின் போது **அச்சுப்பிழை** பார்ப்பது முதல் நூல் வடிவம் பெற்ற பின் பக்கம் பக்கமாகப் பார்த்து பிழையான புத்தகங்களைப் பிரித்து வேறாக்குவதும் இவரே. நான் **எழுதும் சூழலை முழுமையாக** ஏற்படுத்தித் தந்து வீட்டுக்கடமைகள் முழுவதையும் தானே பொறுப்பெடுத்துக் கொள்வார். **எனது சிந்தனை சிதறாதவண்ணம் என்னை எழுதவிட்டு அழகு பார்த்த என் மனைவியைப் போல் எந்த எழுத்தாளனுக்கும் வாய்த்திருக்க முடியாது.**

பட்டதாரியாக இருந்தும் உத்தியோகத்திற்குச் செல்லாது கணவன், பிள்ளைகளே தன் உயிர்மூச்சு என்று வாழ்பவர். வீட்டில் எப்போதும் **சேலைகட்டி முழுநேரத் தமிழ்ப் பெண்ணாகக் காட்சி தருபவர்.** இலக்கிய நண்பர்களோடு அன்பாகப் பழகி உபசரிப்பவர். விருந்து கொடுப்பதில் விருப்புக் கொண்டவர். அன்பு, பண்பு, அடக்கம், பொறுமை, திறமை, மனவைராக்கியம் இவை குறைவில்லாமல் கொண்டவர். தனது 55 வயதின் பின் கணினியைச் சுயமாகக் கற்று இம்மலரில் இடம்பெற்றுள்ள பல கட்டுரைகள், தகவல்களை தானே பதித்தவர்.

எமது திருமணத்தின் போது நான் வாங்கிக் கொடுத்த மிக மிக எளிமையான சேலையை உடுத்ததோடு **தமிழ்த் திருமண முறைப்படி** (ஐயர், மந்திரம், ஓமத்தீ எதுவுமின்றி) மாலைமாற்றி திருமணஞ் செய்ய பெற்றோரை சம்மதிக்கச் செய்தவர். **தாலி கூடக் கட்டாத தமிழ்த் திருமணம் அது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தை ஆடம்பரச் செலவின்றி நடாத்தி கடனற்ற வாழ்வை வாழ வழிகாட்டியவர். பிள்ளைகளையும் நல்லொழுக்கத்தினோடு வாழப் பழக்கியவர். தனிப்பட்ட முறையில் எமது குடும்ப வாழ்க்கையைப் பற்றி நிறையவே எழுதலாம். அதைத் தவிர்த்து இலக்கியப் பயணத்தை மட்டுமே எழுதுகிறேன். **ஒரு எழுத்தாளனுக்கு மனைவி எப்படி அமைய வேண்டும் என்பதற்கு என் மனைவியே தக்க எத்துக்காட்டு.** நான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் விளம்பரங்களை (Notice) சேமித்துப் பாதுகாத்து இம்மலருக்கு வழங்கியிருக்கிறார். எமது வீட்டு நூல் நிலையத்திலுள்ள நூல்களை வரிசைப்படுத்தி பட்டியல் தயாரித்து வைத்திருக்கிறார். எந்த நேரத்தில் என்ன தகவல் கேட்டாலும் உடனடியாக எடுத்துத் தருவார்.

எனது எழுத்து வேலைகளுக்காக தனது வீட்டு வேலைகளை விரைவாக முடித்து, பிள்ளைகளின் கடமைகளையும் முடித்து, மகிழ்ச்சியோடு எழுதுவதற்கு அமர்வார். மனைவியின் இத்தகைய ஒத்துழைப்பு இல்லாதிருந்தால் என்னால் எதையும் **படித்திருக்கவும் முடியாது. படைத்திருக்கவும் முடியாது. இவரை மனைவியாகத் தந்த இவரின் பெற்றோருக்கும், இறைவனுக்கும்** எப்படி நன்றி சொல்ல. **நல்வினைப் பயன்** என்பது இதுதான். எனக்கு கடவுள் தந்த **அருட்கொடையே** என் மனைவி. எனக்கு என்னிலும் இனியாள் என்னிலும் நல்லாள் என் இல்லாள்.

**மகன் :** ஒரேமகன். **அநபாயன் பொறியியல்** துறையில் **கலாநிதிப்பட்டம்** பெற்றவர். தற்போது **இலண்டனில்** தொழில் புரிகிறார். இலக்கியத்தில் நாட்டம் உள்ளவர். தந்தையை தகுந்த முறையில் விளங்கிக் கொண்ட தனயன். **மருமகள் நித்தியா டாக்டர்.** கலைத்துறையில் ஆர்வமுள்ளவர். இவர்களது **மகள் ஆதிரா** மூவரும் எமது பூர்வபுண்ணிய சொத்துக்கள். அரிய முத்துக்கள்.

**மகள் :** ஒரே மகள் **அநிந்திதை.** தமிழ் சிறப்புப் பட்டதாரி. **மருமகன் திரு.தி.கேசவராஜன் சட்டத்தரணி.** மகள் இலக்கிய நாட்டம் உள்ளவர். தமிழ் மொழித்தினப் போட்டிகளில் தேசிய மட்டப் பரிசுகள் பெற்றவர். கலைத்துறையில் நாட்டம் கொண்டவர். குடும்பப் பெண்ணாக வாழ்கிறார். மருமகன் **கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத் தலைவராகச் செயற்பட்டவர்** (2001 - 2002). தமிழிலும், தமிழிலக்கியத்திலும் கலைகளிலும் ஆர்வம் கொண்ட **மகள், மருமகன்** இருவருமே எங்கள் நல்வினைப் பயனாய் வந்த நல்முத்துக்கள். சொத்துக்கள்.

**திரு.உடுவை எஸ்.தில்லை நடராஜா :** வவுனியாவில் பல பதவிகளை வகித்து மக்களின் மனதில் இடம்பிடித்த நாடகக் கலைஞர் உடுவை எஸ்.தில்லை நடராஜா அவர்கள் என் சிறுபராயத்து இலக்கிய வழிகாட்டி. எனது இலக்கியத்துறை வளர்ச்சி கண்டு மகிழ்ந்து பூரித்துப் போன **தாயுள்ளம்** கொண்டவர். வவுனியாவில் அவர் **அரச அதிபராகப்** பணியாற்றிய காலத்தில் அவரோடு இணைந்து செய்த கலை இலக்கியப் பணிகள் கனதியானவை. எழுத்தாளர்களிடமிருந்து 500 பிரதிகளைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை, இரண்டு ஆண்டுகள் நடைமுறைப்படுத்தி பல எழுத்தாளர்களின் வயிற்றில் **பாலை வார்த்தவர்.** எனது **இலக்கியச்சரம்** நூலுக்கும் அந்த வாய்ப்புக் கிடைத்தது. வவுனியாவின் கலை இலக்கிய வளர்ச்சியில் மதிப்பு வைக்கத்தக்க பணிகளை ஆற்றியவர். என் இலக்கியப் பயணத்திலும் தான்.

**செங்கை ஆழியான் :** ஈழத்தின் பிரபலமான நாவலிலக்கியப் படைப்பாளியாகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியானின் தொடர்பு எனக்கு எனது 23 வயதில் ஏற்பட்டது. அவரிடம் எனது **அலைக்குமிழ்** நாவலைக் கொடுத்தேன். வாசித்து பல திருத்தங்களைச் செய்யச் சொன்னார். திரும்ப எழுதினேன். அந்நாவலை நான் எனது 57 வயதில்தான் வெளியிட்டேன். அந்நாவலை **அவருக்கே சமர்ப்பணம்** செய்தேன்.

**திரு.சி.சிவலிங்கராஜா** : இப்போது ஓய்வுநிலைப் பேராசிரியராக இருக்கும் சி.சிவலிங்கராஜா யாழ்.பல்கலைக் கழகத்தில் எனது இளைய தொகுதி மாணவன். இவரே என்னை சிரித்திரன் ஆசிரியர் திரு.சி.சிவஞானசுந்தரம் அவர்களிடம் அறிமுகப்படுத்தியவர்.

**அமரர்.சி.சிவஞானசுந்தரம்** : எனது எழுத்துத் துறைக் குரு. **சிரித்திரன்** சஞ்சிகையில் எனது பல ஆக்கங்கள் வெளிவந்தன. அவர் என்னிடம் ஒரு முறை கூறினார். **"அகளங்கன்! உம்மட எழுத்து, உமது மனைவியும் உமது மகளும் ஒன்றாயிருந்து வாசிக்கக்கூடியவாறு விரசமின்றி அமைய வேண்டும்"** என்று. அப்போது நான் திருமணமாகாதவன். ஆனால் பிற்காலத்தில் எனது **தாயும்** எனது **மனைவியும்** எனது **மகளும்** ஒன்றாக இருந்து வாசிக்கக்கூடிய படைப்புக்களையே படைத்திருக்கிறேன். பழந்தமிழ் இலக்கியத்தை நடைமுறை வாழ்வோடு பொருத்திச் சிந்திக்கவும் எழுதவும் கற்றுத் தந்த ஆசான். எனது **'சேரர் வழியில் வீரர் காவியம்'** நூலை அவருக்கும் சிரித்திரன் சஞ்சிகைக்கும் சமர்ப்பணம் செய்தேன். **அகளங்கன் கவிதைகள்** நூலை அவருக்கே சமர்ப்பணம் செய்துள்ளேன்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்** : யாழ்.பல்கலைக்கழக மாணவனாக நான் கல்வி கற்ற காலத்தில் எனது **அலைக்குமிழ்** நாவலுக்கு அணிந்துரை தந்தவர். எனது நூல் ஒன்றுக்காக நான் முதன் முதல் அணிந்துரை பெற்றது இவரிடமே. பின்பு 1987ல் எனது **வாலி** ஆய்வு நூலை அச்சிடவும், வெளியிடவும் இவரே உற்சாகம் தந்து உதவியவர். சிறந்ததொரு அணிந்துரையும் வழங்கியவர்.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்** : எனது **வாலி** ஆய்வு நூலைத் தமது அகில இலங்கைக் கம்பன் கழகம் மூலம் வெளியிட்டவர். பல பட்டிமண்டபங்களில் என்னைப் பேச அழைத்துப் பெருமை சேர்த்தவர்.

**திரு.செ.சண்முகநாதன்** : யாழ் பல்கலைக்கழகத்தில் எனது மூத்த தொகுதி மாணவன். அங்கு இருந்த தமிழ் மன்றத்தில் **தலைவராக** நானும், **செயலாளராக திரு. செ.சண்முகநாதனும்** செயற்பட்டோம். நண்பர்களாகி ஒரே அறையில் தங்கினோம். எனது திருமணத்திற்கு **சாட்சிக் கையெழுத்திட்டவர்** இவரே. எனது **வாலி** ஆய்வுக் கட்டுரை ஈழநாடு பத்திரிகையில் வெளிவரக் காரணமாக இருந்தவர். நல்ல இரசிகர். உயிர் நண்பர். 1995 முதல் 2000 வரை வவுனியா உக்குளாங்குளத்தில் வாடகை வீடொன்றில் இரண்டு குடும்பத்தவர்களும் மற்றும் உறவினர்களும் ஒன்றாகக் குடியிருந்தோம்.

**திரு.க.குமாரகுலசிங்கம்** : எனது தாயின் சகோதரியின் மகன். எனது **ஒன்றுவிட்ட சகோதரன் உறவுமுறையில். உடன்பிறந்த சகோதரன் உணர்வு நிலையில்**. 1979ல் இருந்து என் அருகில் இருந்தவர். என்னையே தன் உலகமாய் சுற்றி வந்தவர். இப்போது உலகம் முழுவதும் சுற்றி எனக்குத் தகவல் தருகிறார். எனது படைப்புக்களுக்கெல்லாம் சிறந்த இரசிகர். எனது ஆக்கங்கள் யாவும் நூலுருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற வேண்டுமென்று என்னிலும் அதிகம் விருப்பம் கொண்டவர். என்னோடு சேர்ந்து **வெங்காயத் தோட்டச் செய்கையில்** ஈடுபட்டு அதில் கிடைத்த முழுவருமானத்தையும் எனது **'சேரர் வழியில் வீரர் காவியம்'** என்ற குறுங்காவியத்தை வெளியிடத் தந்தவர். இது 1982ல் நடந்தது.

1987ல் எனது **வாலி** ஆய்வுநூலை வெளியிட பண உதவி செய்தவர். எனது நூல் வெளியீடுகளுக்கு மட்டுமன்றி எனது இலக்கிய, இலட்சிய வாழ்க்கையில் நான் சோர்ந்துவிடக்கூடாதென்று எனக்கு உறுதுணையாக இருந்து வருபவர். **இவரை நான் தம்பியாகப் பெற என்ன தவம் செய்தேனோ.**

எனது மனைவியை தனது சகோதரியாக **'அக்கா'** என்றே அழைப்பார். என் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல் கருதுவார். நான் **நாகராஜா** என்று அவரை அவரது வீட்டுப்பெயர் சொல்லி அழைப்பேன். எனது வானொலி நாடகங்களிலும், சிறுகதைகளிலும் **'குமார்'** என்ற பெயர் ஒரு பாத்திரத்திற்கு வைக்கப்பட்டிருக்கும். அது இவரது பெயரே. **குமார குலசிங்கம் - குமார்.** இப்போது **சுவிஸ்** நாட்டில் வாழ்கிறார். அங்கே **சிங்கம்** என்றால் தான் தெரியும். இவர் எனது வாழ்க்கைப் பயணத்திலும் இலக்கியப் பயணத்திலும் செய்த உதவிகளைச் சொல்லி முடியாது. **தம்பியாய், பிள்ளையாய், நண்பனாய்** எனப் பல பரிமாணங்களில் இவரை நான் பார்க்கிறேன் விரிக்கில் நீளும்.

தனது சுவிஸ் நாட்டுக்குத் தன் செலவில் அழைத்து 40 நாட்கள் அங்குள்ள ஆலயங்களில் பேசுவதற்கு வழி வகுத்தவர். குடும்பமாக எங்களை இந்தியாவுக்கு அழைத்துத் தன் செலவில் தமிழகத்துச் சிறப்புக்களை 21 நாட்கள் கண்டுகளிக்கச் செய்தவர். இரு குடும்பங்களும் குதூகலத்தில் குளிர்ந்துபோன நாட்கள் அவை. **இன்னும் பிறப்புண்டேல் ஏழேழு பிறப்பும் இவர் எனக்கு இதே அன்போடு தம்பியாக வந்து பிறக்க வேண்டும்.**

**திரு.க.ஐயம்பிள்ளை** : என்தாய்வழி உறவுமுறையில் இவர் எனக்கு சிறிய தந்தையார். வவுனியாவின் மூன்று பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராக கடமையாற்றியவர். எனது **இலக்கியத் தேறல்** நூல் வெளியீட்டுக்கு உதவியவர். வாடகை வீடுதேடி நான் அலைந்த நேரத்தில் (1995) தனது வீட்டில் குடியிருக்கச் செய்தவர்.

**கலாநிதி.ச.அருளானந்தம் : கேணிப் பித்தன்** என்ற பெயரில் தற்போது பிரபலமாக விளங்குபவர் கலாநிதி.ச.அருளானந்தம். வவுனியாவில் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் முத்தமிழ்க் கலா மன்றத்தின் தலைவராக இருந்தவர். எனக்கு எனது சொந்த ஊரான **பம்பைமடுவில்** பாராட்டுவிழா நடாத்தியபோது **பொன்னாடை போர்த்தி மகிழ்வித்தவர்.** மகிழ்ந்தவர். எனக்கு **முதன் முதல் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தவர் இவரே.** என்னை **பட்டப் படிப்புக்குத் தமிழைக் கற்பிக்கச் செய்தவர்.** என்றும் என் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்.

**திரு.T.K.இராஜலிங்கம்** : எங்களது குடும்ப உறுப்பினர் போல் யாவருடனும் பழகுபவர். **வாலி** ஆய்வு நூற் பிரதிகள் பல 1987ல் இந்திய அமைதிகாக்கும் படையோடு போராளிகள் நடாத்திய போரில் சிதைந்து போன போது அந்த நட்டத்தை ஈடுகட்ட இவரை எனது சகோதரர் **நா.வில்வராசா** அவர்களோடு சென்று சந்தித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக சங்கத்தின் மூலம் உதவுவதாக வாக்களித்து **திரு.சீ.ஏ.இராமஸ்வாமி ஐயா** அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். திரு.சீ.ஏ.இராமஸ்சுவாமி ஐயா அவர்கள் 5000 ரூபா பணத்தை தந்து உதவினார். வர்த்தக சங்கம் உதவவில்லை.

இந்தியாவுக்குச் சென்று வரும் பொழுதெல்லாம் எனக்கு வேட்டியும், எனது மனைவிக்கு சேலையும் வாங்கிவந்து தரும் அன்புள்ளம் கொண்டவர். எனக்கு வேறு வழிகளிலும் உதவி செய்த நன்றிக்குரியவர். 1964 இலிலிருந்து எம்மோடு யாவற்றிலும் இணைந்து செயற்படுபவர்.

**திரு.சீ.ஏ.இராமஸ்வாமி :** சிவநெறிப் புரவலர், சமூகசஞ்சீவி முதலான பட்டங்களுக்குச் சொந்தக்காரரான சீ.ஏ.இராமஸ்வாமி ஐயா அவர்கள். T.K.இராஜலிங்கம் அவர்கள் மூலம் 1987ல் எனக்கு அறிமுகமானார். அறிமுகமான அன்றே 5000 ரூபா தந்து **வாலி** நூலின் நட்டத்தை ஈடுசெய்தார். பின்பு 1990இல் வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நான் **மகாபாரதத் தொடர் சொற்பொழிவாற்றிய போது** அதனைக் கேட்டு பிரமித்து அதனை நடாத்திய இந்துமாமன்றத் தலைவர் திரு.ந.செல்லையா அவர்களிடம் 1000 ரூபாவைக் கொடுத்துச் சென்றார். அது நிகழ்ச்சிச் செலவுக்குப் பயன்பட்டது.

அதன் பின் 1991 பிற்பகுதியிலிருந்து அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் இந்து மா மன்றத்தின் தலைவராக பணியாற்றிய காலத்தில் **'ஆன்மீகப் பௌர்ணமி விழா'** வை மாதந்தோறும் நடாத்தினார். அவற்றில் பல தலைப்புக்களில் உரையாற்ற வாய்ப்புத் தந்தார்.

நான் **பொருளாதாரப் போதாமை இருட்டுக்குள் மூழ்கியபோதெல்லாம் உதவி வெளிச்சம் தந்தவர்.** எனது முகவாட்டத்தைப் பார்த்தே என் பிரச்சனையை விளங்கிக் கொண்டு பண உதவி செய்த பெருந்தகை. எனது நூல் வெளியீடுகளுக்குப் பல வகையிலும் உதவியவர். தன் சோர்வைப் பொருட்படுத்தாது என் சோர்வு போக்கி உதவிய சுடர்ஒளி.

இந்துமா மன்றம் மூலமும், சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி அறக்கட்டளை மூலமும் தனது பணத்தில் எனது பல சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிட்டு தமிழ்த் தொண்டு செய்தவர். ஆத்திசூடி உரை முதல் சகலகலாவல்லிமாலை உரை வரையில் எட்டு நூல்களும், நாமறிந்த நாவலர், பன்னிரு திருமுறை அறிமுகம் ஆகிய நூல்களும் இவ்வகையில் வெளிவந்தன.

இவரோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு என் பூர்வ புண்ணியமே. பழக இனிய பண்பாளரான இவரின் உதவி "காலத்தினால் செய்த நன்றி..." அது "ஞாலத்தின் மாணப் பெரிது". நான் **தாய்லாந்துச்** சுற்றுப் பயணம் (ஒரு கிழமை) செய்தது இவரின் ஏற்பாட்டிலேயே. முதன் முதல் அப்போதுதான் ஆகாயவிமானத்தில் பயணித்தேன். அது 2002 இல் நிகழ்ந்தது.

**புலவர் ஈழத்துச் சிவானந்தன் :** எனது **வாலி** ஆய்வு நூலின் **இரண்டாம் பதிப்பை** ஸ்ரீலங்கா அச்சகம் மூலம் கொண்டு வந்தவர். எனது **இலக்கியத் தேறல்** நூல் வெளியீட்டுக்கு பிரதிகள் வாங்குவதற்கு சிலரை ஏற்பாடு செய்து தந்தவர்.

**அமரர்.ந.செல்லையா** : வவுனியா இந்து மாமன்றத்தை 14.04.1982ல் ஆரம்பித்தோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தலைவராகப் பணியாற்றியவர். 1990ல் எனது **மகாபாரதத்தொடர் விரிவுரையை** வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் ஏற்பாடு செய்தவர். இதுவே **எனது முதலாவது தொடர் சொற்பொழிவு** என்பது குறிப்பிடத்தக்கது. எனக்கு **"காவிய மாமணி"** என்ற பட்டமும் வழங்கியவர் இவரே.

**திரு.சு.முரளிதரன் :** என்னோடு நு/ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். எனக்குக் கிடைத்த **மலை மாணிக்கம். அரிய நண்பர். உயர்ந்த சொத்து.** நானும் இவரும் இணைந்து **'சமவெளி மலைகள்'** என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டோம். மலையக எழுத்தாளர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர். **குடும்ப உறவாக மாறியது இலக்கிய உறவு.** இன்று மலையகத்தின் உயர்ந்த கல்விமானாகவும், சிறந்த படைப்பாளியாகவும், உயர் பதவியில் இருப்பவர். **முரளி என் மோகன முரளி. அன்புக்குரியவர். நன்றிக்குரியவர். மலையகத்தில் நான் ஆசிரியப் பணி** புரிந்த காலத்தில் எனக்கு சகல வகைகளிலும் உதவியவர். இப்போதும் அப்படியே.

**திரு.வை.செ.தேவராசா :** இறைபணிச் செம்மல், கலாபூஷணம் வை.செ.தேவராசா அவர்கள் இந்துமா மன்றத் தலைவர். மணிவாசகர் சபைத் தலைவர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்க முன்னாள் தலைவர். திருவாசகத்தோடு எனக்கு அதிக தொடர்பை ஏற்படுத்தியவர். நீண்ட காலம் சமயப்பணியில் ஈடுபட்டு வருவதோடு என்னையும் இணைத்துக் கொண்டவர். எனது நூல் வெளியீடுகளுக்கு உதவுபவர்.

**அமரர்.சு.வீரசிங்கம் :** அமரர் சுப்பையா வீரசிங்கம் அவர்கள் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராகப் பணியாற்றியவர். என்மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தவர். எனது இலக்கியப் பயணத்தில் ஆர்வமாக ஒத்துழைத்தவர். ஆண்டுதோறும் எழுதுதாள்களை எனக்கு இலவசமாகத் தந்தவர். எனது நூ ல் வெளியீடுகளுக்கு உதவியதோடு, பாராட்டுக் கூட்டம் நடாத்தி பரிசு வழங்கி உற்சாகப்படுத்தியவர். மறைந்தாலும் மறையாத பெருந்தகை.

**கலாநிதி.ந.இரவீந்திரன்** : எனது ஆசிரிய நண்பர். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தை ஆரம்பித்த முதல்வர்கள் மூவரில் ஒருவர். எனது **"மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்"** ஆய்வு நூலை 1997ல் **தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்** இணைந்து **சவுத் ஏசியன் புக்ஸ்** வெளியிடக் காரணியாக இருந்தவர்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்** : வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தைத் தோற்றுவித்த மூவரில் ஒருவர். என்னோடு உற்சாகம் தந்து பணியாற்றுபவர். எனது **மணிவிழா** யாழ் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற போது தலைமை தாங்கிச் சிறப்புச் செய்தவர்.

**திரு.அருணா செல்லத்துரை :** எனது **'சேற்று வயல்க் காட்டினிலே'** என்ற பிரபலமான வானொலி மெல்லிசைப் பாடல் T.K.இராமமூர்த்தியின் இசையில் வெளிவரக் காரணியாக இருந்தவர். இப்பாடலே **எனது முதல் வானொலி மெல்லிசைப் பாடல்** என்பது குறிப்பிடத்தக்கது.

**பேராசிரியர் நா.சுப்பிரமணியன் :** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை இணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தற்போது கனடாவில் வாழ்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது **'இலக்கியத் தேறல்'** நூலுக்கு அணிந்துரை வழங்கியவர். எனது **'சேற்று வயல் காட்டினிலே...'** பாடலை திரு.அருணா செல்லத்துரைக்கு அனுப்பி அப்பாடல் வெளிவர உதவியவர்.

**கலாநிதி க.நாகேஸ்வரன்** : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை எனக்கு அறிமுகப்படுத்தியவர். முதன் முதல் நேரடி ஒலிபரப்பில் என் குரல் ஒலிக்க உடனடியாக ஏற்பாடு செய்தவர். யாழ்.பல்கலைக் கழகத்தில் ஒரே தொகுதி மாணவ நண்பர். தற்போது சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் மொழித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்.

**திரு.ஓ.கே.குணநாதன் :** இப்போது டாக்டர் ஓ.கே.குணநாதன். எனது பல நூல்களை வெளியிட்டவர். இம்மணிவிழா மலரையும் அவரே தயாரித்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரியாக வவுனியாவிற்கு **மட்டக்களப்பிலிருந்து** வந்த இவர் எனது **பிள்ளை போல, சகோதரன் போல** அன்பு செலுத்தி பழகியவர். எனது சுகதுக்கங்கள் யாவற்றிலும் துணை நின்றவர். **எனது இலக்கியத்துறை வெற்றிக்கு பெரும் பங்களிப்பு இவருடையதே.** என்னைச் **சிறுவர் இலக்கியத் துறையில் ஈடுபடுத்தி, பல பயிற்சிக் கருத்தரங்குகளில் பங்குபெற வைத்து உருவாக்கியவர்.**

எனது இலக்கியப் பயணத்தில் மட்டுமன்றி தனிப்பட்ட வாழ்க்கையிலும் இவர் எனக்குச் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. **என் இலக்கிய வாழ்வின் பாக்கியம் ஓ.கே.குணநாதன். பூர்வ புண்ணிய பயன். நல்ல நண்பனாய், நல்ல சகோதரனாய், நல்ல ஆலோசகனாய், நல்ல வழிகாட்டியாய், நல்ல ஏவலாளனாய்,** பாரதி பாடிய கண்ணனாய் விளங்கும் **உத்தம நண்பர். "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்".**

**ஸ்தபதி.சு.சண்முகவடிவேல் :** அருட்கலை வாரிதி, சிற்பசிரோமணி, கலாபூஷணம் சு.சண்முகவடிவேல் ஸ்தபதி அவர்கள் என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய **பெரியவர்.** எனது நூல் வெளியீடுகளுக்குப் பல வழிகளிலும் உதவி வருபவர். எனது **பத்தினித் தெய்வம்** நாட்டிய நாடக நூல் வெளிவருவதற்கு இவரது நிதி உதவியே முக்கிய காரணம். குடும்ப உறவினர் ஆகிவிட்ட இலக்கிய உறவினர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எனது மணிவிழாவிற்கு குடும்பமாக வந்து வாழ்த்திய இவரின் அன்பு என்னை நெகிழ வைத்தது. **இவரோடு பழக வைத்த இறைவனுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்.** இவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்.

**கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் :** கவிதைப் போட்டியில் ஏற்பட்ட நட்பு. உறவாய் மாறி உரிமைச் சகோதரனாய் ஆக்கியது. எனது மூத்த சகோதரனாக நான் வரித்துக் கொண்ட உறவு. 10000ற்கும் மேற்பட்ட பாடல்கள், 10 காவியங்கள். அப்பப்பா. அத்தனையும் என் கண்ணிலும் பட்டுள்ளன. எந்த நேரத்திலும் எந்த உதவியையும் எந்த நிலையிலும் எனக்குச் செய்யத் தயாராக இருக்கும் **ஏந்தல். சிவபெருமானா, அல்லாவா அல்லது இருவருமா** எனக்கும் இவருக்கும் இந்தப் பிணைப்பை உண்டாக்கி வைத்தவர் எவராக இருந்தாலும் **அவரே கடவுள். அதுவே கருணை. அதுவே அருள்.** சமயம் கடந்த இந்த உறவு எல்லோருக்குள்ளும் ஏற்படுமானால் உலகம் எவ்வளவோ உயர்வடையும்.

**வவுனியூர் இரா உதயணன்:** உறவினராக இருந்தும் இலக்கிய உறவே இறுக்கிப் பிணைத்தது. எனக்கு எப்படியெல்லாம் உதவலாம் என்று எப்பொழுதும் சிந்திப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மூலம் ஏழை மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி செய்து வருபவர். இரண்டு தடவைகள் **தமிழகத்திலும், கேரளத்திலும்** இவரோடு சேர்ந்து தங்கியிருக்கிறேன். முதல் தடவை நானும் **எனது மனைவியும் ஓ.கே.குணநாதனும்** தங்கினோம். அடுத்த தடவை **நானும் ஓ.கே.குணநாதனும்** தங்கினோம்.

உலகறிந்த எழுத்தாளராக விளங்கும் **வவுனியூர் இரா.உதயணன் எனக்குக் கிடைத்தது இறைவனின் கொடையே.** இலக்கியம் மூலம் நான் சம்பாதித்த பெருஞ் சொத்துக்களில் இரா.உதயணனும் ஒருவர்.

**நயினை கி.கிருபானந்தா :** எனது இன்னொரு **உடன்பிறவா உடன்பிறப்பு.** என் எழுத்துக்கள் மூலம் இரசிகனாகித் தம்பியாகிய இவரை நயினை நாகபூஷணி அம்மன் என்னோடு உறவாக்கினார். குடும்ப உறவினராக ஆகிவிட்டோம். எனது மகள் யாழ்.பல்கலைக் கழகத்தில் கற்ற காலத்தில் கிருபானந்தா குடும்பமே **தாய் தந்தையாக** விளங்கியது. இத்தனை அன்புப் பிணைப்பை இலக்கியம் ஏற்படுத்துமா. இன்னும் **இக்கேள்வி எனக்கு உண்டு**. ஆனால் ஏற்படுத்தி விட்டதே. இதை எப்படி விபரிக்க. "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்...." என்னென்ன பெருமைகளையெல்லாம் எனக்குச் சேர்க்க முடியுமோ அவற்றையெல்லாம் எனக்குச் சேர்த்து வைக்க அரும்பாடுபடுபவர். **கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது, முத்தமிழறிஞர் சொக்கன் விருது** அவற்றில் சில. மணிவிழா அடுத்தது. **கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு** என்பது என்ன என்று எனக்கு உணர்த்தியவர் தம்பி நயினை கிருபானந்தா. **நல்லூர் முருகனா, நயினை அம்மனா** இருவரும் போட்டி போட்டு இவரையும் இவர் குடும்பத்தையும் வாழ வைக்க வேண்டும்.

**திரு.மு.கௌரிகாந்தன் :** யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பேயே என்னைச் சரியாக இனங்கண்டு கட்டுரை எழுதியவர். அக்கட்டுரை இப்போதுதான் இம்மலரில் தான் வெளிவருகிறது. எனக்கு நான் க.பொ.த. உயர்தரம் கற்ற ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மணிவிழாச் செய்து அழகு பார்த்த அருந்தகை. எனது எழுத்துப் பணியை எவ்வகையில் பார்க்க வேண்டும் என்று ஒரு பார்வையை வழங்கிவரும் என் நண்பர். என் இலக்கியப் பயணத்தில் மறக்க முடியாதவர்.

**திரு.க.ந.பாலச்சந்திரன் :** வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபைச் செயலாளர். 1991 இலிருந்து இன்றுவரை கந்தசஷ்டி காலத்தில் அக்கோவிலில் யுத்த காண்டம் சூரபன்மன் வதை படலம் பயன் சொல்லி வருகிறேன். இருபது ஆண்டுகளுக்கு மேல் இப்பணியைச் செய்ய இவரே. முக்கிய காரணி. இவ்வாலயத்தில் கட்டப்பட்ட அழகிய திருமணமண்டபத்தின் திறப்பு விழா நிகழ்வைத் தலைமை தாங்கி நடாத்தும் பொறுப்பை என்னிடம் வழங்கி என்னைக் கௌரவித்தவர். எனது நூல் வெளியீட்டுப் பணிக்கு உதவுபவர்.

**இ.கிருபாமூர்த்தி :** வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர். தமது அழகான இந்து கலாசார திருமண மண்டபத்தின் ஒரு பக்கக் கதவை திறந்து வைக்கும் பெரும்பாக்கியத்தை எனக்கு வழங்கி என்னையும், என் சமயப்பணியையும் அங்கீகரித்தவர்.

**திரு.பூ.குமாரகுலசிங்கம் :** எனது பிறந்த ஊரான பம்பைமடுவில், நான் ஆரம்பக்கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற பாடசாலையில் எனக்குப் பாராட்டுக் கூட்டம் நடாத்திப் பரிசு வழங்கிக் கௌரவித்தவர்.

**வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் :** எனது இலக்கியப் பயணத்தில் பல மலர்களைத் தூவியுள்ளது. **'புராண படன புகழ்தகை'** என்ற பட்டம் தந்ததோடு பல தடவைகள் பாராட்டு விழாக்களையும் நடாத்தியுள்ளது.

**இந்து மாமன்றம் :** எனக்கு **'காவிய மாமணி'** என்ற பட்டம் தந்து கௌரவித்தது. இதுவே நான் பெற்ற **முதல்ப் பட்டமாகும்.** அப்போதைய தலைவர் அமரர் ந.செல்லையா அவர்கள்.

**வவுனியா பல.நோ.கூ.சங்கம்: திரு.சூ.ஞானப்பிரகாசம், அமரர் சு.வீரசிங்கம், திரு.க.சிவலிங்கம், திரு.பூ.குமாரகுலசிங்கம், திரு.சி.சுப்பிரமணியம்** ஆகியோர் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்த காலங்களில் எனது நூல் வெளியீட்டுப் பணிக்கு உதவியுள்ளனர்.

**வவுனியா நகரசபை :** வவுனியா நகரசபையின் தலைவராக **திரு.ஜி.ரி.லிங்கநாதன்** அவர்கள் பணியாற்றிய காலத்தில் எனது நூல் வெளியீட்டுப் பணிக்கு உதவி செய்தார். **'பல்கலை எழில்'** என்று பட்டமும் தந்து உற்சாகப்படுத்தினார்.

எனக்கு உதவிய, வழிகாட்டிய பெருந்தகைகளுக்கும் நிறுவனங்களுக்கும் எப்படி நன்றி சொல்ல. நான் தமிழ்ப்பணி, சமயப்பணி செய்திருப்பதாக உளமார இவர்கள் ஏற்றுக்கொண்டால் அதுதான் இவர்களுக்கு நான் செலுத்தும் நன்றிக்கடனாகும்.

தமிழ் அதர்
90, திருநாவற்குளம்
வவுனியா

**அன்புடன் அகளங்கன்**

---

**இலக்கியச் சிமிழ்** நூலின் அகளங்க உரையில் **புலவர் ஈழத்துச் சிவானந்தன்**

ஈழத்து இலக்கிய வானில் வட்டமிடும் நட்சத்திரம். ஒரே நேரத்தில் கண்ணுக்குள்ளும், காதுக்குள்ளும் நிற்பார். இவர் கட்டுரைகளைப் படிக்கும் போது இவர் குரலோசையும் காதில் கேட்கும். இவரோடு பழகியவருக்கு இது புரியும். மேடையில் பேசும்போது எடுத்துக்காட்டுக்களையும், கோட்பாடுகளையும் அள்ளி வீசுவார். அந்த வீச்சில் அக்கோட்பாடுகளைச் சொன்னவர் பெயர்களையும் மேடையில் தூவுவார். அவர்கள் சங்க காலத்தவராகவுமிருப்பர். சமகாலத்தவராகவும் இருப்பர். உண்மையாக கலையுணர்வு இவருள் ஊறிநின்று எழுவதால் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதவர். உள்ளத்தின் உண்மை ஒளியே இவர் வாக்கின் ஒளியாகும். இவருடைய துறுதுறுப்பில் கறுப்பு கடுகளவும் இருக்காது. கலைத்துறைக்குக் களங்கம் அற்றவர்கள் தேவை. அத்தேவையை நிறைவு செய்யும் அகளங்கன் இவர். *(1992)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# வெள்ளித் தமிழ்ச் சங்கம்

**திருமதி.பூரணேஸ்வரி தர்மராஜா அகளங்கன்**

**இ**லங்கை மணித் திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் மலை நாட்டின் கண்ணே வனப்பு மிகு மாவட்டமாக விளங்குவது நுவரெலியா மாவட்டம்.

அம் மாவட்டத்தில் அமைந்துள்ள தலவாக்கலைப் பிரதேசத்தில் அமைந்து காணப்படும் அழகான ஊர் ஹோல்புரூக் ஆகும்.

**தமிழ்மணி அகளங்கன்** அவர்கள் ஆசிரியப்பணி புரிவதற்காக 1984ல் ஹோல்புறுக் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு சென்றிருந்த காலம்.

அவருடன் நானும் பிள்ளைகளும் அங்கு வசித்து வந்த காலம். அக் காலப் பகுதியில் ஆசிரியப் பணியை மிக்க கண்ணியத்துடனும், சேவை மனப்பான்மையுடனும், கடமை உணர்வுடனும் பணியாற்றி வந்ததுடன், இலக்கியப் பணியினையும் செய்து வந்தார்.

அக் காலப்பகுதியில், நாடகம், வானொலி நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்றவற்றை எழுதியதுடன் வானொலிப் பேச்சுக்கள் பலவற்றைப் பேசியுள்ளார்.

தற்பொழுது பிரபல எழுத்தாளராக, கல்விமானாக, உயர்பதவி வகிக்கும் **திரு.சு.முரளிதரன்** அவர்களும் அப் பாடசாலையில் சிலகாலம் ஆசிரியராகப் பணி புரிந்தார். இருவரும் இணைந்து பல இலக்கிய, சமூகப் பணிகளை மேற்கொண்டனர்.

முதற் தடவை ஆசிரியப் பணியை அங்கு மேற்கொண்டு பின்பு, பலாலி ஆசிரியர் கலாசாலைக்குச் (கோப்பாய்) சென்று சிறிது காலத்தின் பின் மீண்டும் அதே பாடசாலைக்கு சென்ற காலப்பகுதி.

இக் காலப் பகுதியில் எமது இரு குழந்தைகளுடன், எமது பெறா மகன் (இவரது மூத்த சகோதரர் **திரு.நா.சேனாதிராஜா** அவர்களின் மகன்) காண்டீபனும் எம்முடன் தனது படிப்பைத் தொடர்வதற்காக வந்திருந்தார்.

எமது திருமணம் **24.04.1981**ல் நடைபெற்றது. மூத்தவர் **மகன்**. பெயர் **அநுபாயன்** 15.01.1983ல் பிறந்தார். மகள் அடுத்தவர். பெயர் **அநிந்திதை** 25.06.1984ல் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் திருமணம் இரண்டு வீட்டுப் பெற்றோரினதும் ஆசீர்வாதத்துடன் நடந்த காதல்த் திருமணம். இருவரும் இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் கல்வி கற்ற காலத்தில் (20.11.1976) மனமொருமித்திருந்தோம்.

எமக்கு ஒரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் பிறக்கும் என்றும் அவர்களுக்கு அநபாயன், அநிந்திதை என்றும் பெயர் வைக்க வேண்டும் என்றும் திருமணத்திற்கு முன்பே தீர்மானித்திருந்தோம்.

அதன்படியே நடந்தது. இரண்டரை வயதிலேயே இருவருக்கும் ஏடு தொடக்கி விட்டோம். இரண்டு வயதிலேயே பழந்தமிழ் இலக்கியப் பாடல்கள், தேவாரம், மழலைப் பாடல்கள், கதைகள் என பலவற்றையும் சொல்லிக் கொடுப்போம். அவர்களும் பாடமாக்கி மழலை மொழியில் சொல்லி எம்மை மகிழ வைப்பார்கள்.

நாம் எமது பெற்றோரிடமிருந்து அன்பு, பண்பு, ஒழுக்கம், பொறுமை, பக்தி போன்ற பண்பாட்டு விழுமியங்களைப் பெற்றுக் கொண்டது போல, எம் குழந்தைகளும் எம்மிடமிருந்து அந்த அழியாச் சொத்துக்களை பெறவேண்டும் எனும் பெருவிருப்பு எமக்கிருந்தது.

நாங்கள் யாழ்ப்பாணத்தில் வசித்த காலத்தில், சிரித்திரன் சஞ்சிகையில் பல ஆக்கங்களை இவர் எழுதிக்கொண்டிருந்தார். சிரித்திரன் ஐயா **(அமரர்.சி.சிவஞான சுந்தரம்)** அவர்களின் வீட்டிற்கு குடும்பமாகச் செல்வோம். சிரித்திரன் ஐயாவும், அம்மாவும் (அவரது மனைவி) எங்களுடன் மிகவும் அன்பாகப் பழகுவார்கள்.அம்மா தனது அனுபவங்கள் பற்றிக் கூறுவார்.

அவர் சிரித்திரன் சஞ்சிகை வெளியாவதற்கு ஐயாவுடன் இணைந்து தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவார்.

என்னிடம் ஒரு தடவை, "பிள்ள! நான் என்ர பிள்ளையளுக்கு சமைக்கிற அரிசியையும் கொட்டி விளையாடச் செய்து போட்டு, ஐயாவுக்கு சஞ்சிகை வெளியிட ஒத்தாசையாக இருப்பன்" என்று கூறினார். அவர் ஒரு உத்தமமான குடும்பத் தலைவி. அவரது உணர்வு என்னை ஆட்கொண்டது.

எமது குழந்தைகள் எந்தக் காரணம் கொண்டும் இவரின் எழுத்துத் தொடர்பான எந்தப் பொருட்களையும் தொடமாட்டார்கள். "அப்பா முக்கியமான வேலை செய்கிறார். அவரைக் குழப்பக் கூடாது. மேசையில் உள்ள எதையும் எடுக்கக் கூடாது" என்று அவர்களே சொல்லிக் கொள்வார்கள்.

மகன் இரண்டு வயதிலேயே தனது மழலைக் குரலில் **"திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்"** எனும் கந்த புராண காப்புப் பாடலை பாடிக் காட்டுவான். அத்துடன் **"வாரணம் பொருத மார்பும்"** எனும் இராமாயணப் பாடலைப் பாடிக் காட்டி அதற்குரிய கதையையும் சொல்லிக் காட்டுவான்.

ஒரு சரஸ்வதி பூஜைக் காலத்தில், இவர் ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்தில் படிப்பித்த போது, மகளையும் கூட்டிச் சென்றார். மகளுக்கு அப்போது இரண்டரை வயதிருக்கும். அவள் சகல கலா வல்லி மாலைப் பாடல்கள் முழுவதையும் வரிசைக் கிரமமாக பாடி முடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோல் புறுக் பாடசாலை விடுதியில் தங்கியிருந்தோம். அக்காலப் பகுதியில் இவர் பல வானொலிப் பேச்சுக்களை ஆற்றியுள்ளார். கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் போன்ற பல ஆக்க இலக்கியங்களைப் படைத்துள்ளார். தீவிரமாக எழுதிய காலம் என்று கூறலாம்.

தங்கு தடையின்றி வெகு விரைவாக அழகான வசன நடையில் கூறிக் கொண்டே இருப்பார். அந்த வேகத்திற்கு பிழை விடாது கவனமாக எழுத வேண்டும். சொல்லச் சொல்ல இயன்ற வரையில் கவனமாக எழுதுவேன்.

எம்முடன் எமது பெறா மகன் காண்டீபன் தனது படிப்பைத் தொடர்வதற்காக எம்முடன் தங்கி இருந்தார். அவர் பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். அவருக்கும் பாடம் சொல்லிக் கொடுப்போம்.

பிள்ளைகளுக்கு தமிழ், சமயம் தொடர்பான அறிவை வளர்க்க வேண்டிய தேவை இருந்தது. இப்படியான ஒரு சூழலில் தோன்றியது தான் **வெள்ளித் தமிழ்ச் சங்கம்.**

எமது "வெள்ளித் தமிழ்ச் சங்கம்" ***1989 ம் ஆண்டு ஜுன் மாதம் 2ந்*** திகதி (ஹோல்புறுக் ஆசிரிய விடுதி) எமது வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இவர் **(அகளங்கன் - தர்மராஜா)** தலைவராகவும், நான் **(திருமதி.பூரணேஸ்வரி தர்மராஜா)** செயலாளராகவும், **செல்வன். சே.காண்டீபன், செல்வன். த.அநபாயன், செல்வி. த.அநிந்திதை** ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்தோம்.

எமது பிள்ளைகளுக்கு, அவர்கள் எழுத வாசிக்க தெரியாத பருவத்தில் இருந்தே கதைகள், பாடல்கள் போன்றவற்றைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கி விட்டோம்.

வீட்டில் இருந்த கரும்பலகையில் பழந்தமிழ் இலக்கியப் பாடல்களை இவர் எழுதி விடுவார். முதலில் நான் பாடமாக்கி விட்டு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பேன். இலக்கியம், சமயம் சார்ந்த கதைகளும் சொல்லிக் கொடுப்போம்.

மழலைப் பாடல்கள் பலவற்றை இவர் எழுதி ஆசையுடனும் ஆர்வத்துடனும் சொல்லிக் கொடுப்பார். இப் பாடல்களை **"சுட்டிக் குருவிகள்", "சின்னச் சிட்டுக்கள்",** என்ற இரண்டு நூல்களாக பின்பு நாங்கள் வெளியிட்டோம்.

மகன் மனக் கணக்குகளை வெகு விரைவில் சொல்லிவிடுவான். மகள் நன்கு வாசிப்பதுடன் மனப்பாடமும் செய்து விடுவாள்.

ஒருமுறை மகளுக்கு நான் **"பொன்னார் மேனியனே..."** தேவாரம் சொல்லிக் கொடுத்தேன். பாடமாக்கிச் சொல்லி விட்டு "அம்மா! ஆரை நினைக்கேனே என்று பாடும் போது அப்பாவைத்தான் நினைக்க வேணும் போல இருக்கு" என்று கூறினாள்.

ஆச்சரியமாக இருந்தது. வாசிக்கத் தெரியாத வயதில் ஏதோ பொருள் விளங்கியிருக்கிறது. அத்துடன் அப்பாவிடம் உள்ள பாசத்தையும் உணர முடிந்தது.

மகனுக்கு எழுத்து எழுதிப் பழக்கத் தொடங்கிய காலத்தில், ஒரு எழுத்து புத்தகத்தில் பிழையாக எழுதப் பட்டிருந்தது. அதைச் சரியாகச் சொல்லிக் கொடுத்தேன். ஒரு பதிலும் கூறாமல் இருந்து விட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா பாடசாலையில் இருந்து வந்த பின் அந்த எழுத்துப் பற்றிக் கேட்டு, அம்மா சொல்லித் தந்தது சரிதான் என்று அப்பா சொன்ன பின்தான் அதை ஒப்புக் கொண்டான்.ஏன் என்று கேட்டபோது "அப்பாதான் சேர். அவர் சொன்னால்தான் சரி" என்றான்.

நாம் சிறுவர்களாக இருக்கும்போது கணித வாய்ப்பாட்டை ராகம் போட்டு "ஈரொண்டு இரண்டு" என்று பாடமாக்குவதுதானே வழக்கம்.

யாழ்ப்பாணத்தில் இவரது மூத்த சகோதரர் **திரு.நா.தியாகராஜா** அவர்களின் வீட்டுக்கு பிள்ளைகளுடன் சென்றிருந்த சமயம், அந்த வீட்டில் மூன்றாம் வாய்ப்பாடு கரும்பலகையில் எழுதப்பட்டிருந்தது.

மகன் அநபாயனுக்கு அப்போது **வாய்ப்பாடு** பாடமாக்கச் சொல்லிக் கொடுக்காத வயது. இருப்பினும் கரும்பலகைக்குப் பக்கத்தில் போய் பார்த்துக் கொண்டு நின்றான். "சரி வாய்ப்பாடு எழுதப்பட்டிருக்கு பாடமாக்கிப் பார்" என்று கூறினோம்.

சிறிது நேரம் மௌனமாக இருந்தான். கஸ்ரம் என்றால் பாடமாக்க வேண்டாம் என்றோம். உடனே அவன் "ஏன் பாடமாக்குவான், மூன்றாம் வாய்பாடு மூன்று மூன்று ஆகக் கூடிக் கொண்டு போகுது.பேந்தேன் பாடமாக்குவான்" என்று கூறிய பதில் தூக்கி வாரிப் போட்டது.

வாய்ப்பாடு முறையினைக் காரணத்துடன் கண்டு பிடித்ததை இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாகத்தான் உள்ளது.

இவருடன் வெளியில் செல்லும்போது நடந்து கொண்டே சில கணக்குகளுக்கு மனத்தால் கணித்து பதில் சொல்லி விடுவான். ஒரு முறை இவருடன், எமது வீட்டில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள முரளியின் (சு.முரளிதரன்) வீட்டுக்குச் சென்று திரும்பும் போது இவரிடம் "எவளவு தூரம்" என்று கேட்டிருக்கிறான்.

இவர் "இரண்டு மைல்" என்று சொல்லியிருக்கிறார். பின் "ஒரு மைல் எத்தனை யார்" என்று கேட்டிருக்கிறான். 1760 யார் என்று சொல்லியிருக்கிறார்

"ஒரு யாரில் எத்தனை அடி" என. இவர் "மூன்று அடி ஒரு யார்" என்று சொல்லியிருக்கிறார்.

பின் ஒன்றும் கதைக்காமல் நடந்து வந்து கொண்டிருந்தான். இடையில் ஏதும் கதை கேட்டால் "ம்" என்ற பதில்தான் வந்தது. எமது வீடு வந்து சேர்ந்தவுடன் அவன் சொன்னது எம்மை வியப்பில் ஆழ்த்தியது.

எமது வீடு முரளி மாமா வீட்டில் இருந்து 10560 அடி தூரத்தில் தானே இருக்கிறது என்றான். அப்போது அவன் இரண்டாம் ஆண்டில் தான் கல்வி கற்றுக் கொண்டிருந்தான்.

குடும்ப அந்நியோன்யம், ஒற்றுமை, பாசப் பிணைப்பு, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, சகிப்புத் தன்மை, பிரச்சனைகளை பேசித் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைப் பண்பு, நெறி தவறாது ஒரு கட்டுக் கோப்புடன் வளரும் வாய்ப்பு போன்ற பல அம்சங்களுடன் வாழ்வை நெறிப் படுத்தும் அமைப்பாக எமது வெள்ளித் தமிழ்ச் சங்கம் விளங்க வேண்டும் என்பது எமது முக்கிய குறிக்கோள் ஆகும்.

எமது பிள்ளைகளுக்கு நாம் அடிக்கடி கூறும் அறிவுரை, "முதலில் நல்ல பிள்ளைகளாக இருங்கள் பின் வல்ல பிள்ளைகளாக வளருங்கள்" என்பது தான்.

வெள்ளிக்கிழமை கூட்டம் ஆரம்பித்து தொடர்ந்தும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டம் இடம்பெற வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தியதால் அதற்கு வெள்ளித் தமிழ்ச் சங்கம் எனும் பெயரை வைப்போம் என காண்டீபன் கேட்டுக் கொண்டதன் படி வெள்ளித் தமிழ்ச் சங்கம் என்று பெயர் இட்டோம்.

இவ் விதமான ஆரம்பத்துடன்தான் எமது வெள்ளித் தமிழ்ச் சங்கத்திற்கு நிகழ்ச்சிகளைத் தயார்ப் படுத்திக் கொண்டேன். எமது வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்ட பதினாறு நிகழ்வுகள் ஹோல்புறுக் ஆசிரிய விடுதியில் நடந்தேறின. பின்பு இட மாற்றம் காரணமாக 1991ல் வவுனியா வந்து விட்டோம்.

நாட்டு நிலைமை, இடமாற்றம், பலவாறான சோதனைக் காலம் அது. பதினாறாவது கூட்ட நிகழ்வினைத் தொடர்ந்து முன்றரை வருட நீண்ட இடை வேளையின் பின் பதினேழாவது கூட்டம் நடைபெறும் வாய்ப்புக் கிட்டியது.

வவுனியாவில் பல புதிய உறுப்பினர்களுடன் நான்கு கூட்டங்கள் தான் நடந்தேறின. 1995ம் ஆண்டு வரையில் தான் இந்நிகழ்வு இடம் பெற்றது. பின் தொடர முடியாமற் போய் விட்டது.

வவுனியாவிற்கு வந்து வாழத் தொடங்கிய காலப்பகுதியில் அதிக புத்தகங்களை வெளியிடும் வாய்ப்புக் கிட்டியது. புத்தகம் அச்சிடப்பட்டு, வெளியீடு செய்வதன் முன் அனைத்துப் புத்தகங்களையும் பரீட்சித்துப் பார்ப்பது வழக்கம்.

புத்தகங்களின் பக்கங்கள் சரியாக உள்ளனவா?, எல்லாப் பக்கங்களும் உள்ளனவா,? ஒழுங்காகக் கட்டப் பட்டுள்ளனவா? என்று பார்த்து நேர்த்தியாகத்தான் புத்தகங்களை வெளியீடு செய்வார். இந்த வேலைகளில் நானும், பிள்ளைகளும் இவருடன் சேர்ந்து செய்வோம். அச்சுப் பிழை பார்ப்பதிலும் உதவி செய்வோம்.

எமது நிகழ்வில் பாடப் படும் எமது குடும்ப கீதம் கீழே இடம் பெற்றுள்ளது. அத்துடன் எமது கூட்ட அறிக்கைகள் சிலவும் இடம் பெற்றுள்ளன. அவ் அறிக்கைகள் மூலம் பல நினைவலைகளை மீட்டிப் பார்த்து திருப்தி அடைவதில் மகிழ்வடைகி றேன்.

**எமது குடும்ப கீதம்**

(இதை தலைவர் அவர்களே எழுதினார்கள்.)

**அன்பி னாலே குடும்பம் நடத்தும்,**
**அன்றில்ப் பறவைகள்.**
**அம்மா அப்பா அன்றில்ப் பறவைகள்.**
**அந்தக் கூட்டுக் குஞ்சுகள் நாங்கள்**
**தென்றல்ப் பறவைகள். - பொதிகைத்**
**தென்றல்ப் பறவைகள்.** **(அன்பினாலே –)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் உணவை நான்கு பேரும்
பகிர்ந்து உண்ணுவோம்.
உடுக்கும் உடையைக் கூட நாங்கள்
மாற்றி உடுப்போம்.
இன்பம் என்ற போதில் நாங்கள்
மகிழ்ந்து துள்ளுவோம்.
துன்பம் வந்த போதும் ஒன்றாய்ச்
சேர்ந்து கொள்ளுவோம். (அன்பினாலே –)

ஒற்று மையே எங்கள் உயிர்க்கு
உறுதுணை மூச்சு
ஒழுங்கு மானம் உடலில் ஓடும்
உதிரமும் ஆச்சு.
பாரில் இந்தக் குடும்பம் போல
வேறு இல்லையே - என்று.
பலரும் போற்ற வாழ்வோம் வாழ்வோம்
பன்னெடுங் காலம். (அன்பினாலே ....)

## எமது வெள்ளித் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது கூட்ட அறிக்கை:

சுக்கில வருடம், ஆங்கிலப் படி ஜுன் மாதம் 2ந் திகதி 1989ம் ஆண்டு எமது வீட்டு, வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம், மாலை 6.30 மணிக்கு தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் ஹோல்புறுக் ஆசிரிய விடுதியில் செல்வி.த.அநிந்திதை அவர்களின் தேவார பாராயணத்துடன் இனிதே ஆரம்பமாகியது.

தலைவர் தமதுரையின் போது தமது 13 வருடங்களுக்கு முந்திய திட்டமொன்று இன்று நிறை வேறுவதாகக் கூறி மகிழ்ந்தார். எமது திருமணத்திற்கு முன்பே நாம் இத்திட்டத்தை வகுத்திருந்தோம்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் இக் கூட்டம் நடை பெற வேண்டும், கூட்டங்கள் கட்டுப் பாட்டுடன் திறமைகளை வளர்க்கவும், குடும்ப ஒற்றுமையைக் கட்டிக் காக்கவும் பயன்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

செயலாளர் தனதுரையில் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடு இக் கூட்டம் தொடர்ந்து நல்ல முறையில் இயங்கத் தனது முழு ஒத்துழைப்பையும் நல்குவதாகக் கூறினார். அதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

செல்வன்.த.அநபாயன் "நரியும் பூனையும் வாழைப் பழம் உண்ட கதை" யைக் கூறினார். செல்வி.த.அநிந்திதை "அன்னக் கதை" கூறினார்.

அதைத் தொடர்ந்து செல்வன் சே.காண்டீபன் "தமிழகமும் நிலமும்" என்ற தலைப்பில் சேர, சோழ, பாண்டியர் காலத்தில் தமிழகம் சிறப்புற்றிருந்தது எனவும், நால்வகை நிலங்கள் பற்றியும் பின்பு ஐவகை நிலமானது பற்றியும், தமிழகத்தில் உள்ள மலைகளின் பெயர்கள் ஊர்களுக்கு வந்தது பற்றியும் தெளிவாகக் கூறி, ஈழத்திலும் சில சான்றுகளைக் காட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்து செல்வன்.த.அநபாயன் "சின்னக் கோழிக் குஞ்சுகள்", "தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு" ஆகிய பாடல்களைப் பாடினார். செல்வி.த.அநிந்திதை "காக்கையாரே காக்கையாரே" என்ற பாடலைப் பாடினார்.

சிறு இடைவேளை விடப்பட்டது. இடைவேளையின் போது **கிழங்கு ரொட்டி** பரிமாறப் பட்டது.

இடைவேளையைத் தொடர்ந்து செல்வன்.த.அநபாயன் "கொழுக்கட்டைக் கதை" கூறினார். செல்வி.த.அநிந்திதை "பொன்னார் மேனியனே", "தோடுடைய செவியன்" ஆகிய தேவாரங்களைப் பாடினார்.

அதைத் தொடர்ந்து கணிதம் சம்பந்தமான விளையாட்டு, கூட்டத்தின் சிறப்பம்சமாக இருந்தது. அதைத் தொடர்ந்து சபையோர் குறிப்புரையில், செயலாளர் தானும் ஒரு உறுப்பினர் என்ற முறையில் **விறகுத் தட்டுப்பாடு** பற்றி விளக்கினார்.

சாப்பாட்டில் உள்ள குறை நிறை பற்றி செல்வன் காண்டீபன் கூறினார். செல்வன் அநபாயனும், செல்வி அநிந்திதையும் தமக்கு எந்தப் பிரச்சனையும், எந்தக் கஷ்டமும் இல்லை எனக் கூறினர்.

மேலும் செயலாளர் அநபாயன், அநிந்திதை ஆகியோரின் குழப்படி பற்றி எடுத்துக் கூறினார். ஆனால் அவை கூட்டக் குறிப்பில் இடம் பெறக்கூடாது எனத் தலைவர் கூறியதன் பெயரில் அவை தவிர்க்கப் பட்டுள்ளன.

தலைவர் தமது முடிவுரையில், விறகுத் தட்டுப்பாடு, சாப்பாட்டுப் பிரச்சனை என்பன தீர்த்து வைக்கப்படும் என்று உறுதி கூறினார்.

அதைத் தொடர்ந்து செயலாளர் நன்றியுரை கூறினார். செல்வன்.த.அநபாயனின் தேவாரத்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 12.06.1989 செயலாளர்.

**இரண்டாவது கூட்ட அறிக்கை:**

மேற்படி எமது வீட்டு வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் 12.06.1989. திங்கட்கிழமை மாலை 6.35 மணிக்கு ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களது தலைமையில் செல்வி.த.அநிந்திதை அவர்களின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

தலைவர் தமதுரையின் போது, மேற்படி கூட்டம் ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வேண்டியது. சில தவிர்க்க முடியாத காரணங்களினால் உரிய திகதியில் நடைபெற முடியாமற் போனது என்று மனவருத்தம் தெரிவித்து, இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது என்று தெரிவித்தார்.

மேலும், குடும்பக் கீதம், சிவபுராணம் என்பன கூட்ட நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து செயலாளர் கூட்ட அறிக்கையை வாசித்தார். அதை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன்.த.அநபாயன் "கூற்றாயினவாறு" "தலையே நீ வணங்காய்" "பொன்னார் மேனியனே" ஆகிய தேவாரங்களையும், "மூவிரு முகங்கள் போற்றி" என்ற புராணத்தையும் அழகாகப் பாடினார்.

செல்வி.த.அநிந்திதை "மழையே மழையே பெய்யாதே" என்ற பாட்டை அபிநயத்துடன் பாடினார். அத்துடன் "அம்மா இங்கே வா வா" என்ற பாடலையும் பாடி மகிழ்வித்தார்.

அடுத்து செல்வன் சே.காண்டீபன் சைவத்தின் தொன்மை,சிந்து வெளி நாகரீகம், வேத காலம் என்பவைகளைத் தொடர்பு படுத்தி பேச்சு ஒன்றைப் பேசினார்.

பத்து நிமிட இடைவேளை விடப்பட்டு, **கிழங்கு ரொட்டி** பரிமாறப் பட்டது.

அடுத்து அநிந்திதை "நிலா நிலா வா வா", "தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு" ஆகிய பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

அடுத்து அநபாயன் "நல்ல நல்ல வீடு" பாடலைப் பாடியதுடன் யானை குளித்த நகைச்சுவைக் கதையையும் கூறி மகிழ வைத்தார்.

அடுத்து காண்டீபன் "அகர முதல", "இன்னா செய்தாரை" ஆகிய திருக்குறள்களைக் கூறினார்.

அடுத்து தலைவர் அவர்கள் திருக்குறள் பற்றி மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் உரை ஆற்றினார்.

செல்வி.த.அநிந்திதை அவர்கள் நித்திரை செய்து விட்டதால் விளையாட்டு நிகழ்வு இடம் பெறவில்லை. செல்வன்.த.அநபாயனின் தேவாரத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — தலைவர

23.06.1989.

**பூ.தர்மராஜா** — செயலாளர்

**மூன்றாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில் 23.06.1989. வெள்ளிக்கிழமை மாலை 6.50.மணியளவில் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் செல்வி.த.அநிந்திதையின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

தொடர்ந்து செல்வன்.த.அநபாயன் சிவபுராணத்தை பக்தியுடன் ஓதினார். அடுத்து தலைவர் தமது உரையில், கூட்டம் மிகவும் காலந் தாழ்த்தித் தொடங்கியதால் விரைவில் நிகழ்வு நடைபெற வேண்டும் என்றார்.

செயலாளர் கூட்ட அறிக்கையை வாசித்தார்.ஏற்றுக்கொள்ளப் பட்டது.

தொடர்ந்து அநிந்திதை "அம்மா அப்பா வண்டியிலே", "ஆனா சொல்லித் தந்தார்" ஆகிய பாடல்களை இனிமையாகப் பாடினார். அநபாயன் "ஔவைக் கிழவி", "மாமி தந்த பந்து" ஆகிய பாடல்களை பாடி மகிழ்வித்தார்.

தொடர்ந்து அநிந்திதை "கிழங்குக் கதையை" மிகவும் சுவாரஸ்யமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்.அநபாயன் "இரணியன்" எனும் கதையைக் கூறினார்.

அடுத்து காண்டீபன் செல்வம் என்ற தலைப்பில் அருமையான பேச்சைப் பேசினார்.

பின் சிறிது நேரம் இடைவேளை விடப் பட்டு **வடை** பரிமாறப் பட்டது.

அடுத்து அநபாயன் "நத்தார் படை", "வேதம் ஓதி" ஆகிய தேவாரங்களை இசைத்தார். அநிந்திதை "மாசில் வீணையும்" என்ற தேவாரத்தை இசைத்தார்.

அடுத்து காண்டீபன் "தீயவை தீய பயத்தலால்", "எந்நன்றி கொன்றார்க்கும்" ஆகிய குறள்களைக் கூறினார்.

அடுத்து தலைவர் குறள்களுக்கு பொருள் விளக்கம் கூறினார்.செயலாளர் குழந்தைகள் அன்புடனும், பண்புடனும்,பொறுமையுடனும் இருக்க வேண்டுமென கிரிசாம்பாள் கதையைக் கூறி விளக்கினார்.

தொடர்ந்து சபையோர் குறிப்புரை இடம் பெற்றது.

அநபாயன், தன்னை தங்கை அநிந்தி "வாடா" "போடா" என்று கதைக்கிறார் என்று தனது பிரச்சனையை முன் வைத்தார்.

உடனடியாக திடீர் என்று அநிந்திதையும் எனக்கும் ஒரு பிரச்சனை உள்ளது எனத் தொடங்கி, என்னையும் அண்ணா "வாடி போடி" என்று கதைப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்று கூறினார்.

அதற்கு, தலைவர் அவர்கள் இனிமேல் இருவருமே அப்படிக் கதைக்கக் கூடாது என பிரச்சனையைத் தீர்த்து வைத்தார்.

செயலாளர் நன்றியுரை கூறினார். அநபாயனின் தேவார இசையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**

தலைவர் 29.09.1989. செயலாளர்

**நான்காவது கூட்ட அறிக்கை:**

29.09.1989.வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணியளவில் ஹோல்புறுக் ஆசிரிய விடுதியில் தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் தலைமையில் செல்வி. அநிந்திதையின் தேவார இசையுடன் கூட்டம் இனிதே ஆரம்பமாகியது.

தலைவர் தமதுரையின் போது நீண்ட கால இடைவேளைக்குப் பின் (நாட்டு நிலைமை காரணமாக மூன்று மாதங்களுக்குப் பின்) இன்று இக் கூட்டம் தொடர்வது மிக்க மகிழ்ச்சியான விடயம் எனவும், தொடர்ந்தும் பிரச்சனைகள் இன்றி இனிதே நடைபெற வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து செயலாளர் கூட்ட அறிக்கையை வாசித்தார். ஏற்றுக்கொள்ளப் பட்டது.

அநபாயன் சிவபுராணத்தில் ஒரு பகுதியைப் பாடினார். அநிந்திதை "வானைக்காவில் வெண்மதி" தேவாரத்தை இசைத்தார். அநபாயன் "பூவினுக் கருங்கலம்", "வேயுறு தோழி பங்கன்" ஆகிய தேவாரங்களைப் பாடி மகிழ்வித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து காண்டீபன் "சம்பந்தர்" என்ற தலைப்பில் நீண்டதொரு பேச்சைப் பேசினார்.தொடர்ந்து அநபாயன் சகலகாலவல்லி மாலையின் முதற் பாடலான "வெண்டாமரைக் கன்றி நின் பதம்" எனும் பாடலைப் பாடினார்.

பத்து நிமிட இடைவேளை விடப் பட்டு **கிழங்கு ரொட்டி** பரிமாறப் பட்டது.

அநிந்திதை "பாலுந் தெளிதேனும்" எனும் ஔவையார் பாடலைப் பாடினார். தொடர்ந்து அநபாயனும் அநிந்திதையும் இணைந்து "கீரை விதைக்கணும்" எனும் அபிநயப் பாடலைப் பாடி மகிழ்வித்தனர்.

அநபாயன் நாவல் பழக் கதையையும், அநிந்திதை ஆமைக் கதையையும் கூறினார்கள். அடுத்து காண்டீபன் "பிறவிப் பெருங்கடல்", "செயற்கரிய செய்வர்", "தன்நெஞ் சறிவது" ஆகிய குறள்களைக் கூறினார்.

தொடர்ந்து சபையோர் குறிப்பு இடம் பெற்றது. அநபாயனும், காண்டீபனும் தம்மை அநிந்தி ஏசுவதாகக் குற்றம் சாட்டினர். அதற்கு அநிந்திக்குப் புத்திமதி கூறப் பட்டது. அநபாயன் சல்லி முட்டியை உடைத்தது பிழை என்றும் கண்டிக்கப் பட்டது.

பாடசாலையில் குழப்படி செய்தல் கூடாதெனவும் கூறி, இனிமேல் யாராவது இவ்வித தவறு செய்தால் கடும் தண்டனை கிடைக்கும் எனவும் தலைவர் குறிப்பிட்டார்.

செயலாளர் நன்றியுரை கூறினார். அநபாயனின் தேவாரத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**

தலைவர் 20.10.1989. செயலாளர்

**ஐந்தாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில் தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் 20.10.1989. வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு, செல்வன்.த.அநபாயன் அவர்களின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

தலைவர் அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து, "கடந்த இரண்டு கிழமைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டம் நடைபெறவில்லை. சரஸ்வதி பூஜை வீட்டில் விசேடமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. நான் அவசரமாக செல்ல வேண்டி உள்ளது" என்று கூறினார்.

செயலாளரின் கூட்ட அறிக்கை வாசிப்பைத் தொடர்ந்து, செல்வி.த.அநிந்திதை அவர்கள் எமது குடும்ப கீதத்தை இசையோடு பாடினார்.

அடுத்து அநபாயன் "நத்தார் படை", "மாதர்ப் பிறைக்கண்ணி" ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநிந்திதை "பூவினுக் கருங்கலம்", "காதலாகிக் கசிந்து" ஆகிய தேவாரங்களைப் பாடினார்.

தொடர்ந்து அநபாயன் "எண்ணென்ப", "கற்றாருள்", "இன்னா செய்தாரை", "தீயவை தீய", "பிறவிப் பெருங்கடல்" ஆகிய குறள்களைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து காண்டீபன் திருநாவுக்கரசர் பற்றி நீண்டதொரு பேச்சைப் பேசினார்.

அநிந்திதை "அகர முதல", "வெள்ளத் தனையது" ஆகிய குறள்களையும், "வெண்டாமரைக்கன்றி" எனும் சகல கலா வல்லி மாலைப் பாடலையும் பாடினார்.

அவசரமாகக் கூட்டம் பகல் வேளையில் நடைபெற்றதால் இடைவேளை விடப்படவில்லை. சிற்றுண்டியும் பரிமாறப்படவில்லை.

தொடர்ந்து காண்டீபன் சில குறள்களைக் கூறினார். அநபாயன் "வாக்குண்டாம்" "சொல்விற்பனமும்" ஆகிய பாடல்களைப் பாடியதுடன் "யானை" என்ற தலைப்பில் சிறிய பேச்சையும் பேசினார். அநிந்திதை "வீசி ஆடும் ஊஞ்சலாம்" எனும் பாடலைப் பாடி மகிழ்வித்தார்.

அடுத்து நொடிகள் சில கூறப்பட்டன. தொடர்ந்து உறுப்பினர்களால் கூறப் பட்ட குறள்களுக்கு தலைவர் விளக்கம் அளித்தார்.

நேரப் பிரச்சனையால் சபையோர் குறிப்பு இடம்பெறவில்லை. செயலாளரின் நன்றியுரையினைத் தொடர்ந்து அநிந்திதையின் தேவாரத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா**
தலைவர்

03.10.1989.

**பூ.தர்மராஜா**
செயலாளர்

**ஆறாவது கூட்ட அறிக்கை:**

03.10.1989 வெள்ளிக்கிழமை மாலை 6.15மணியளவில் ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில் தலைவர் திருநா.தர்மராஜா அவர்களின் தலைமையில்,அநிந்திதையின் தேவார இசையுடன் எமது வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் ஆரம்பமாகியது.

"தொடர்ந்து இந் நிகழ்வு சிறப்பாக நடைபெற வேண்டும், உறுப்பினர்கள் ஆர்வத்துடன் தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும்,அனைவரும் தமது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்" என தலைவர் தன்னுரையில் குறிப்பிட்டார்.

செயலாளரின் கூட்ட அறிக்கை வாசிப்பைத் தொடர்ந்து அநிந்திதை அவர்கள் எமது குடும்ப கீதத்தை பாடி மகிழ்வித்தார்.

அநபாயன் "இல்லக விளக்கது", "ஆலந் தானுகந்", "வேயுறு தோழி பங்கன்" ஆகிய தேவாரங்களைப் பாடி சபையோரை உற்சாகப் படுத்தினார்.

அநிந்திதை "பிடியதனுருவுமை", "ஆலந்தானுகந் தமுது" ஆகிய தேவாரங்களை இசையோடு பாடினார்.காண்டீபன் சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாறு பற்றி சுருக்கமாகப் பேசினார்.

தொடர்ந்து அநிந்திதை "மாதர்ப் பிறைக் கண்ணி யானை" "நத்தார் படை" ஆகிய தேவாரங்களை ஜானகியின் குரலில் பாடி மகிழ்வித்தார். அநபாயன் "ஔவைக் கிழவி நங்கிழவி", என்ற பாடலையும், "பசு" எனும் தலைப்பில் சிறிய பேச்சையும் தந்தார்.

அடுத்து சிறிய இடைவேளை விடப்பட்டு **பிஸ்கட்** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து காண்டீபன் "எப்பொருள் யார்யார்வாய்க்", "எப்பொருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தன்மைத்", "பிறர்க்கின்னா" ஆகிய குறள்களைக் கூறினார்.தொடர்ந்து அநபாயன் "நன்றி மறப்பது" "ஒழுக்கம் விழுப்பம்" ஆகிய குறள்களைக் கூறினார்.

அடுத்து அநிந்திதை "வில்லண்டம் வரும் கவனம்", "இது எவடம்" ஆகிய நகைச்சுவைக் கதைகளைச் சொல்லி சிரிக்க வைத்தார்.

சிரித்தது போதாது இன்னும் சிரியுங்கள் என்பது போல் "சுடலை மாடன்" "விசிலடித்தது" ஆகிய நகைச்சுவைக் கதைகளையும் சொல்லிச் சிரிக்க வைத்தார்.

அடுத்து தலைவர் அவர்கள் தீபாவளிப் பண்டிகை பற்றிக் கூறினார். மேலும் சொல்லிய குறள்களுக்கு விளக்கவுரையாற்றினார்.

தொடர்ந்து சபையோர் குறிப்பு இடம்பெற்றது. பழ மொழி கூறும் நிகழ்ச்சி இடம்பெற வேண்டும் என அநபாயன் சொன்னார்.

திருக்கேதீஸ்வரப் பதிகத்தை மனனம் செய்ய வேண்டும் எனவும், நிகழ்வை இரவில் வைப்பதால் உறுப்பினர் நித்திரை செய்கின்றனர் அதனால் பகலில் நிகழ்வு இடம்பெற வேண்டும் எனவும் தலைவர் கேட்டுக் கொண்டார்.

அநிந்திதையின் தேவார இசையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — தலைவர்

*10.11.1989.*

**பூ.தர்மராஜா** — செயலாளர்

**ஏழாவது கூட்ட அறிக்கை:**

ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில் தலைவர் திருநா.தர்மராஜா அவர்களின் தலைமையில், 10.11.1989 வெள்ளிக்கிழமை மாலை 6.15.மணியளவில், எமது வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் அநிந்திதையின் தேவாரத்துடன் ஆரம்பமாகியது.

விசேடமாக அவர் பஞ்ச புராணத்தை ஒழுங்காக, அழகாகப் பாடி நிகழ்வை ஆரம்பித்து வைத்தமை மிகவும் பாராட்டுக்குரியது.

அடுத்து தலைவர் அவர்கள் பஞ்ச புராணம் பாடியதைப் பாராட்டியதுடன், அனைத்து உறுப்பினர்களும் தமது திறமைகளை வளர்க்க வேண்டும் எனவும் கூறினார்.

செயலாளர் கடந்த கூட்ட அறிக்கையை வாசித்தார்.சிறு திருத்தத்துடன் அறிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டது. தொடர்ந்து அநிந்திதை குடும்ப கீதத்தைப் பாடினார்.

அடுத்து அநபாயன் "விண்ணுற அடுக்கிய" எனும் தேவாரத்தையும் "பாலுக்குப் பாலகன்" எனும் திருப் பல்லாண்டையும் பாடி மகிழ்வித்தார்.

அநிந்திதை "ஒளிவளர் விளக்கே" எனும் திருவிசைப்பாவையும், "முத்திநெறி அறியாத" எனும் திருவாசகத்தையும் இசைத்தார்.

தொடர்ந்து அநபாயன் "நாய்" எனும் தலைப்பில் சிறு பேச்சைப் பேசி உற்சாகப் படுத்தினார். அநிந்திதை "முன்னை இட்ட தீ" எனும் பட்டினத்தார் பாடலையும், "குஞ்சியழகும்" எனும் நாலடியார் பாடலையும் பாடி நிகழ்வைச் சிறப்பித்தார்.

அடுத்து காண்டீபன் மாணிக்கவாசகர் எனும் தலைப்பில் சிறப்பான பேச்சைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினார். அநபாயன் "வாரணம் பொருத மார்பும்" எனும் கம்ப இராமாயணப் பாடலையும் "பண்ணும் பரதமும்", "அளிக்கும் செழுந்தமிழ்" ஆகிய பாடல்களையும் தெளிவாகப் பாடினார்.

இடைவேளை விடப்பட்டு **கிழங்கு ரொட்டி** பரிமாறப் பட்டது.

தொடர்ந்து அநிந்திதை "ஆறின கஞ்சி பழங்கஞ்சி", "அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்", "இளங்கன்று பயமறியாது" ஆகிய பழ மொழிகளைக் கூறினார்.

காண்டீபன் "அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்", "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு", "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" ஆகிய பழ மொழிகளைக் கூறினார்.

அடுத்து அநபாயன் "பொய் சொல்லக் கூடாது பாப்பா" பாடலைப் பாடினார். காண்டீபன் "வசையொழிய", "தோன்றிற் புகழொடு", "மகன் தந்தைக் காற்றும்" ஆகிய குறள்களைச் சொன்னார்.

அநபாயன் "எறும்பூரக் கற்குழியும்", "பணம் பந்தியிலே குணம் குப்பையிலே", ஆகிய பழ மொழிகளைச் சொன்னார்.

அடுத்து தலைவர் சிறப்புரை வழங்கினார். நிகழ்வுகள் சிறப்புடன் அமைந்தன, என்றும் நெறிப்படுத்திய செயலாளருக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

மேலும் நிகழ்வில் இடம் பெற்ற பாடல்களுக்கு விளக்கக் குறிப்புக்களையும் வழங்கினார்.

சபையோர் குறிப்புரையில் உறுப்பினர்கள் சண்டை போடாது அன்பாக இருக்கவேண்டும். என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.செயலாளர் நன்றியுரை கூறினார்.

அநபாயனும் அநிந்திதையும் நித்திரையாகி விட்டார்கள். காண்டீபனின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா,** **பூ.தர்மராஜா**
தலைவர் *16.02.1990.* செயலாளர்

**எட்டாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம், ஹோல்புறுக் ஆசிரிய விடுதியில், திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் *16.02.1990.* வெள்ளிக்கிழமை மாலை *6.45.* மணியளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

தலைவர், இந்நிகழ்வு நீண்ட இடைவெளியின் பின் நடக்கிறது,செயலாளர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அநிந்திதை குடும்ப கீதத்தைப் பாடினார். கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. அநபாயன் "தலையே நீ வணங்காய்", "கண்காள் காண்மின்களோ", "கைகாள் கூப்பித் தொழீர்" ஆகிய தேவாரங்களைப் பாடினார்.

அநிந்திதை "தேவாரம் பாடிய குழந்தை" எனும் கதையைச் சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநபாயன் "பற்றுக பற்றற்றான்", "பொருளல்லவரை" ஆகிய குறள்களைச் சொன்னார்.

தொடர்ந்து காண்டீபன் "பனித்திளந் திங்கள்", "குனித்த புருவமும்", ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநிந்திதை "விருது குன்றமா", "கைகாள் கூப்பித் தொழீர்" ஆகிய தேவாரங்களை இசைத்தார். அடுத்து காண்டீபன் "கள் பெற்ற பெருவாழ்வு"எனும் பொருளில் பேசினார்.

இடைவேளை விடப்பட்டு **கிழங்கு ரொட்டி** பரிமாறப்பட்டது.

அநிந்திதை "கோலமா மஞ்ஞை" எனும் கந்தபுராணப் பாடலையும், "ஏறுமயில் ஏறி" எனும் திருப்புகழையும் பாடினார். அநபாயன் "விருது குன்றமா" எனும் தேவாரத்தையும், "கோலமா மஞ்ஞை" எனும் கந்தபுராணப் பாடலையும் பாடினார்.

அடுத்து அநிந்திதை வெற்றி வேற்கையில் "எழுத்தறிவித்தவன்," "கல்விக்கழகு" ஆகியவற்றைச் சொன்னார். அநபாயன் "புத்திமான் பலவான்" எனும் கதையையும், வெற்றி வேற்கையில் முதல் ஐந்தினையும் சொன்னார். அநிந்திதை ஆத்திசூடியினை முழுமையாகக் கூறினார்.

நிகழ்வில் சொல்லப்பட்ட பாடல்கள் அனைத்துக்கும் தலைவர் விளக்கம் கூறினார்.தொடர்ந்து செயலாளர் உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்மையும்,நேரம் இன்மையும் கவனக்குறைவும்தான் நிகழ்வின் இடைவெளிக்குக் காரணம் எனக் கூறி, நன்றியுரையையும் கூறினார்.

**நா.தர்மராஜா** — **பூ.தர்மராஜா**

தலைவர் — 02.03.1990. — செயலாளர்

**ஒன்பதாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம், ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில், 02.03.1990. வெள்ளிக்கிழமை மாலை 6.15. மணியளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

செயலாளரின் கூட்ட அறிக்கை வாசிப்பைத் தொடர்ந்து அநபாயன் "வாயே வாழ்த்து கண்டாய்", "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநிந்திதையும் அதே தேவாரங்களைப் பாடினார்.

காண்டீபன் "பேராண்மை என்பதறுகண்", "எப்பொருள்", "ஐயத்தின் நீங்கி"ஆகிய குறள்களைச் சொன்னார். அநிந்திதை "வாக்குண்டாம்" பாடலைப் பாடினார். அநபாயன் கொன்றை வேந்தன் முழுவதையும் கூறினார். காண்டீபன் முதலாம் உலக மகா யுத்தம் பற்றி பேசினார்.

தொடர்ந்து இடைவேளை விடப்பட்டு **பிஸ்கட்** பரிமாறப்பட்டது.

அடுத்து அநபாயன் "நன்றி ஒருவற்கு", "சாதியிரண்டொழிய" ஆகியவற்றைச் சொன்னார்.அநிந்திதை "பித்தாப் பிறை சூடி", "மாசில் வீணையும்" ஆகிய தேவாரங்களை இசைத்தார். அநபாயன் நம்பியாண்டார் நம்பியின் கதையைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அநிந்திதை குடும்ப கீதத்தை இசைத்தார்.தலைவர் நிகழ்வில் இடம்பெற்ற பாடல்களுக்கு விளக்கம் அளித்தார்.நிகழ்வு நேரத்துடன் ஆரம்பித்து முடிவடைந்தது மகிழ்ச்சி எனவும் சொன்னார்.

செயலாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து அநிந்திதையின் தேவார இசையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா**
தலைவர்

09.03.1990.

**பூ.தர்மராஜா**
செயலாளர்

**பத்தாவது கூட்ட அறிக்கை:**

ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில்,தலைவர்.திரு.நா.தர்மராஜா அவர்களது தலைமையில், 09.03.1990. வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் எமது சங்கக் கூட்டம் அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 07.03.1990. அன்று கவியோகி சுத்தானந்த பாரதியாரின் அமரத்துவ நினைவிற்காக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைவர் அவர்கள் கவியோகி பற்றிய முக்கிய செய்திகளைக் கூறினார்.

அடுத்து செயலாளர் கூட்ட அறிக்கை வாசித்தார். தொடர்ந்து அநபாயன் "நன்றுடையானை", "செவிகாள் கேண்மின்களோ" ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநிந்திதை "மாதர்ப் பிறைக்கண்ணி யானை" "ஆலந்தானுகந்து" ஆகிய தேவாரங்களைப் பாடினார்.

தொடர்ந்து காண்டீபன் "பண்டு நால்வருக்கு" எனும் தேவாரத்தையும், "மரமது மரத்தில் ஏறி" எனும் தனிப்பாடலையும் கூறினார். அநபாயன் சில குறள்களைக் கூறினார். காண்டீபன் இரண்டாம் உலகப்போர் பற்றிப் பேசினார்.

அடுத்து அநபாயன் "ஆளையாவுனக் கமைந்தன" எனும் இராமாயணப் பாடலையும், "கரும்பும் இளநீரும்",எனும் பிள்ளையார் கதை காப்புப் பாடலையும், "நற்றவத்தினம்பலத்து" எனும் பிள்ளையார் புராணக் காப்புப் பாடலையும் பாடி மகிழ்வித்தார்.

அடுத்து இடைவேளை விடப்பட்டு **கித்துல் வெல்லம்** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து அநிந்திதை "மஞ்சள் குளித்து முகமினுக்கி" எனும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் பாடலையும், "வட்ட வட்டப் பந்து" எனும் பாடலையும் இசையுடன் பாடி இன்புறச் செய்தார்.

அடுத்து அநபாயன் "நஞ்சுண்ட கண்டர்" கதையைச் சொன்னார். அநிந்திதை இரு தேவாரங்களைப் பாடினார். அநபாயனும் அநிந்திதையும் இணைந்து குடும்ப கீதத்தைப் பாடினார்கள்.

தலைவர் பாடல்களுக்கு விளக்கம் தந்தார்.கூட்ட நிகழ்வுகள் திருப்திகரமாக இல்லை எனவும் நன்றி உரையை ஏனைய உறுப்பினர்களும் மாறி மாறி கூறவேண்டும் எனவும் கூறினார்.

சபையோர் குறிப்புரையில்,செயலாளர் ஒன்று விட்ட கிழமைக்கு ஒரு தடவை நிகழ்வு வைத்தால் நல்லது என்றார். தலைவரும் அநிந்திதையும் அதை ஏற்றகவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநபாயன் ஏற்றுக்கொண்டார். காண்டீபன் உறுப்பினர்களின் ஒத்துழைப் பிலேயே தங்கியுள்ளது என்றார்.

செயலாளரின் நன்றியுரையுடனும் அநபாயனின் தேவார இசையுடனும் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 16.03.1990 செயலாளர்

**பதினோராவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில் தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் 16.03.1990. வெள்ளிக்கிழமை மாலை 5.30. மணியளவில் அநபாயனின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

செயலாளர் கூட்ட அறிக்கையை வாசித்தார். இடையில் தடங்கல் ஏற்பட்டு பின் தொடர்ந்தது. அநிந்திதை "மூக்கே நீ முரலாய்", "நெஞ்சே நீ நினையாய்" ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநபாயன் "மரமது மரத்தில் ஏறி" எனும் பாடலைக் கூறினார்.

தொடர்ந்து அநிந்திதை வெற்றி வேற்கையில் முதல் ஐந்தையும் சொன்னார். காண்டீபன் "கூலி மிகக் கேட்பார்" "அடக்க முடையார்" ஆகிய பாடல்களைச் சொன்னார்.

அநபாயன் "வெள்ளைநிற மல்லிகையோ" எனும் பாடலைப் பாடினார். காண்டீபன் சில குறள்களையும், "தாயினும் நல்ல" எனும் தேவாரத்தையும் பாடி மகிழ்வித்தார்.

அடுத்து இடைவேளை விடப் பட்டு **லவேரியா** பரிமாறப்பட்டது.

அநபாயன் "மூக்கே நீ முரலாய்", "நெஞ்சே நீ நினையாய்" ஆகிய தேவாரங்களைப் பாடினார். தொடர்ந்து காண்டீபன் "கவிஞர்கள்" எனும் தலைப்பில் பேசினார்.

அநிந்திதை "வெள்ளை நிற மல்லிகையோ" எனும் பாடலைப் பாடினார். "காக்கும் கடவுள்" எனும் கதையையும் கூறினார். அநபாயன் வெற்றிவேற்கைப் பாடல்கள் சிலவற்றையும் பாலுக்குப் பாலகன் வேண்டி அழுத கதையையும் கூறினார்.

அடுத்து அநிந்திதை "வானைக்காவில் வெண்மதி", "விண்ணுற அடுக்கிய" ஆகிய தேவாரங்களையும் "ஏறுமயில் ஏறி" எனும் திருப்புகழையும் பாடினார். அநபாயனும் அநிந்திதையும் இணைந்து குடும்ப கீதத்தைப் பாடினார்கள்.

நிகழ்வு ஆரம்பமான பொழுதும் இடைவேளையின் பின்பும் தடங்கல் ஏற்பட்டு குழப்பம் அடைந்ததால் தலைவர் கருத்துரை இடம்பெற நேரம் போதவில்லை.

செயலாளரின் நன்றி உரையுடனும் அநபாயனின் தேவாரத்துடனும் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 08.06.1990. செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்னிரண்டாவது கூட்ட அறிக்கை:**

ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில், 08.06.1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அநிந்திதையின் தேவாரத்துடன் எமது சங்கக் கூட்டம் ஆரம்பமாகியது.

செயலாளர் கூட்ட அறிக்கையை வாசித்தார். தொடர்ந்து உறுப்பினர்கள் ஆரம்பகால நிகழ்வுகளில் பாடிய பாடல்கள், தேவாரங்கள், கதைகள் போன்றன மீண்டும் இந் நிகழ்வில் பாடவேண்டி ஏற்பட்டது.

காரணம் சிறுவர்களாக உறுப்பினர் இருப்பதால் அவைகளை மறந்து போயினர். தலைவரின் அனுமதியும் பெறப்பட்டது என செயலாளர் தெரிவித்தார்.

அடுத்து அநபாயன் "பொன்னார்மேனியனே", "கூற்றாயினவாறு", "வேதம் ஓதி", "பூவினுக்கருங்கலம்", "விண்ணுற அடுக்கிய" ஆகிய ஐந்து தேவாரங்களை இசையுடன் பாடி மகிழ்வித்தார்.

அநிந்திதை "விண்ணுற அடுக்கிய", "கண்காள் காண் மின்களோ", "கைகாள் கூப்பித் தொழீர்", "தலையே நீ வணங்காய்", "தோடுடைய செவியன்", "வானைக்காவில் வெண்மதி" ஆகிய ஆறு தேவாரங்களையும் பண்ணோடு பாடினார்.

அடுத்து காண்டீபன் "சிவாலயங்கள்" என்ற தலைப்பில் நீண்ட பேச்சைத் தந்தார். அநபாயன் "வண்டி வண்டி", "ஓடி விளையாடு பாப்பா" என்பவற்றைப் பாடி மகிழ்வித்தார்.

அநிந்திதை "தைத்திருநாள்", "வீசி ஆடும்" "அம்மா இங்கே வா" ஆகிய பாடல்களைப் பாடி பாராட்டைப் பெற்றார். காண்டீபன் "பனித்திளந் திங்கள்", "பண்டு நால்வருக்கு", "குனித்த புருவமும்", ஆகிய தேவாரங்களைத் தெளிவாகக் கூறினார். அநபாயனும் அநிந்திதையும் கதைகள் சொன்னார்கள்.

சிறு இடைவேளை விடப்பட்டு **மாம்பழம்** பரிமாறப்பட்டது.

மூன்று பேரும் பல குறள்களைக் கூறினர். சில பாடல்களையும் பாடினர். அநபாயனும் அநிந்திதையும் குடும்ப கீதத்தைப் பாடினர்.

அடுத்து தலைவர் அவர்கள் நிகழ்வு ஓரளவு சிறப்பாக அமைந்தது என்று கூறி, பாடல்களுக்கு விளக்கமும் தந்தார்.

செயலாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து அநபாயனின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — **பு.தர்மராஜா**

தலைவர் — 25.06.1990. — செயலாளர்

**பதின் மூன்றாவது கூட்ட அறிக்கை:**

ஹோல் புறுக் ஆசிரிய விடுதியில்,தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் தலைமையில் 25.06.1990 திங்கட்கிழமை மாலை 6.30.மணியளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் எமது சங்கக் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்ட அறிக்கை வாசிப்பினைத் தொடர்ந்து அநபாயன் "வேயுறு தோழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கன்", "இல்லக விளக்கது" ஆகிய தேவாரங்களையும், அநிந்திதை "மந்திரமாவது நீறு", "பிடியதனுருவுமை" ஆகிய தேவாரங்களையும் பாடினர்.

அடுத்து காண்டீபன் ஈழத்து முருகன் கோவில்கள் பற்றி பேசினார். அநபாயன் "வீமா வீமா ஓடி வா", "கடலிற் பொங்கும் திரையைப் பார்" ஆகிய பாடல்களையும், அநிந்திதை "குடை பிடித்து செருப்பும் இட்டு", "சின்னக் கோழிக் குஞ்சுகள்" ஆகிய பாடல்களையும் பாடி மகிழ்வித்தனர்.

காண்டீபன் "அங்கமும் வேதமும்", "நிரைகழலரவம்" ஆகிய தேவாரங்களைப் பாடினார். அநபாயனும் அநிந்திதையும் இரு பந்திகளை அழகாக வாசித்தனர். காண்டீபன் சில குறள்களைக் கூறி விளக்கமும் கூறினார். அநபாயன் நவராத்திரி பற்றிப் பேசினார். திருப்புகழ் சில பாடினார்.

இடைவேளை விடப்பட்டு **கேக்** பரிமாறப்பட்டது.

அநபாயன் கொன்றைவேந்தன் சொன்னார்.காண்டீபன் ஒரு பந்தியை அழகாக வாசித்தார்.அநபாயனும் அநிந்திதையும் குடும்ப கீதத்தைப் பாடினர்.

தலைவர், நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெறவில்லை. 25.06 இன்று அநிந்திதையின் பிறந்த நாள். எனக் கூறி வாழ்த்தும் தெரிவித்தார்.

நிகழ்வு இன்னும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று சொல்லி பாடல்களுக்கு விளக்கமும் தந்தார்.

சபையோர் குறிப்புரையில் படிப்பில் கவனம் போதாது எனப் பாடசாலையில் அறிந்ததாகவும் கவனம் எடுக்க வேண்டும் என அறிவுரை கூறினார்.

செயலாளரின் நன்றியுரையுடனும் அநபாயனின் தேவார இசையுடனும் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — தலைவர

13.07.1990.

**பூ.தர்மராஜா** — செயலாளர்

**பதினான்காவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம்,ஹோல் புறுக் விடுதியில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில், 13.07.1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில், அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

செயலாளர் கூட்ட அறிக்கை வாசித்தார். தொடர்ந்து அநபாயன் பஞ்ச புராணம் பாடித் துதித்தார். அநிந்திதை, "சொற்றுணை வேதியன்", "கால்களாற் பயன் என்" "மாசில் வீணையும்" ஆகிய தேவாரங்களை இனிமையாகப் பாடினார்.

அநபாயன் சகல கலா வல்லி மாலையில் சில பாடல்களைப் பாடி மகிழ்வித்தார். அநிந்திதை தமிழ் மொழி வாழ்த்தை இனிமையாகப் பாடி பாராட்டைப் பெற்றார்.

அநபாயன் "தீராத விளையாட்டுப்பிள்ளை", "வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்" ஆகிய பாடல்களையும் பாடினார். தொடர்ந்து காண்டீபன் "கடையிற் சாமி" எனும் தலைப்பில் பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அநிந்திதை "அப்பா என்னை" என்ற அபிநயப் பாடலைப் பாடி ஆடினார். அநபாயன் "குஞ்சியழகும்", "ஆளையாவுனக்கமைந்தன", "முன்னமிட்ட தீ" ஆகிய பாடல்களைப் பாடினார்.

இடைவேளை விடப்பட்டு **பட்டர் புரூட்** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து அநபாயன் சில குறள்கள் கூறினார். அநிந்திதை "முயலும் வந்தது" பாடலுக்கு அபிநயம் பிடித்தார். "கை வீசம்மா" எனும் பாடலையும் பாடினார். காண்டீபன் "தனந்தரும்", "பச்சை மாமலைபோல்" ஆகிய பாடல்களைக் கூறினார்.

அடுத்து அநபாயன் "காக்கையாரே", "ஔவைக் கிழவி"ஆகிய பாடல்களைப் பாடினார். காண்டீபன் சில குறள்கள் கூறினார். மூன்று பேரும் அழகாக பந்தியை வாசித்துக் காட்டினர்.

அநபாயனும் அநிந்திதையும் தனித்தனி குடும்ப கீதத்தைப் பாடினர்.தலைவர் பாடல்களுக்கு விளக்கம் தந்ததுடன் இரு நிகழ்வுகளுக்கும் கால இடைவெளி அதிகம் என்றும் இனிமேல் தொடர்ந்து நிகழ்வு நடக்க வேண்டும் எனவும் கூறினார்.

16.07.90.காண்டீபனின் பிறந்த தினம் என்பதும் நினைவு படுத்தப் பட்டது. செயலாளர் நன்றியுரை கூறினார். அநிந்திதையின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — **பூ.தர்மராஜா**

தலைவர் — 22.09.1990. — செயலாளர்

**பதினைந்தாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம், தலைவர் திரு.நா.தர்மராஜா தலைமையில் ஹோல் புறுக் விடுதியில் 22.09.1990 சனிக்கிழமை பிற்பகல் 1.45. மணியளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

அடுத்து செயலாளர் கூட்ட அறிக்கை வாசித்தார். தொடர்ந்து அநபாயன் "வளவ நின் புதல்வன்", "வைப்புழிக் கோட்படா" ஆகிய பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

அநிந்திதை "நீடாழி உலகத்து", "சீர்க்குமரேசன் கொண்ட"ஆகியவற்றைப் பாடி மகிழ்வித்தார். தொடர்ந்து அநபாயன் சில குறள்களைக் கூறினார். அநிந்திதையும் காண்டீபனும் "வளவ நின் புதல்வன்," "வைப்புழிக் கோட்படா" ஆகியவற்றைக் கூறினர். இடைவேளை விடப்படவில்லை.

தொடர்ந்து அநிந்திதை சகல கலா வல்லி மாலையில் முதல் ஐந்து பாடல்களையும், அநபாயன் மிகுதி ஐந்து பாடல்களையும் ஒழுங்காகவும் அழகாகவும் பாடினர்.

அடுத்து காண்டீபன் செல்லப்பா சுவாமிகள் பற்றி பேசினார்.தொடர்ந்து அநிந்திதை "மழை பொழியுது", "அப்பா என்னை" ஆகிய பாடல்களைப் பாடி ஆடி மகிழ்வித்தார். அநபாயன் "தீராத விளையாட்டுப்பிள்ளை" என்ற பாடலில் உள்ள ஐந்து பகுதிகளை அழகாகப் பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டீபன் "பரமனை மதித்திடா", "கையுந் தலை மிசை", "பண்ணும் பதமேழும்" ஆகிய பாடல் களைப் பாடினார். அநிந்திதை குடும்ப கீதத்தை இனிமையாகப் பாடினார்.

அடுத்து தலைவர் கருத்துரை இடம் பெற்றது. இரு நிகழ்வுகளுக்கும் நீண்ட இடைவெளி வந்து விட்டது. இருப்பினும் சகல கலா வல்லி மாலை பத்துப் பாடல்களையும் ஒழுங்காக, அழகாக பாடியதும், பாரதம், கந்தபுராணம், நாலடியார் ஆகியவற்றில் உள்ள பாடல்களைப் பாடியதும் சிறப்பானது என்றார். மேலும் சரஸ்வதி பூஜை எமது வீட்டில் நடைபெற இருக்கிறது எனவும் கூறினார்.

சபையோர் குறிப்புரையில் உறுப்பினர்களின் குழப்படி பற்றி பேசப்பட்டது.

செயலாளர் நன்றியுரை கூறினார். அநபாயனின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**

தலைவர் 02.08.1991 செயலாளர்

**பதினாறாவது கூட்ட அறிக்கை:**

ஹோல்புறுக் விடுதியில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம், 02.08.1991வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில், அநிந்திதையின் தேவார இசையுடன் ஆரம்பமாகியது.

செயலாளர் கூட்ட அறிக்கை வாசித்தார். தொடர்ந்து அநபாயன் "காதலாகிக் கசிந்து" "நிரைகழலரவம்", "நத்தார் படை" ஆகிய தேவாரங்களை பிழையின்றி பாடிக் காட்டி நிகழ்வைச் சிறப்பித்தார்.

அடுத்து அநிந்திதை "வானைக் காவில் வெண்மதி", "முத்தி நெறி" ஆகியவற்றைப் பாடி மகிழ்வித்தார். தொடர்ந்து, அநிந்திதை மூதுரைப் பாடல்கள் சிலவற்றைச் சொன்னார்..

இடைவேளை விடப்பட்டு **சீத்தாப் பழம்** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து சபையோர் குறிப்புரை இடம் பெற்றது. அநபாயனும், அநிந்திதையும் உறுப்பினர் காண்டீபன் பரீட்சை முடித்து மாற்றலாகிச் சென்று விட்டார் எனத் தமது கவலையைத் தெரிவித்தனர்.

தொடர்ந்தும் வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் சிறப்பாக நடைபெற வேண்டும் என செயலாளர் வேண்டிக் கொண்டார்.

அடுத்து தலைவர் உரையாற்றினார். பழைய உறுப்பினர் காண்டீபன் க.பொத.சா. தரப் பரீட்சை முடித்து தமது வீட்டிற்கு வவுனியாவுக்கு சென்று விட்டார். பெறுபேறு சிறப்பாக வந்துள்ளது. க.பொ.த. உயர் தரம் படிக்கின்றார். எம்மை விட்டுச் சென்றாலும் படிப்பது மகிழ்ச்சி. அதற்கு கை தட்டிப் பாராட்டுத் தெரிவிக்கும்படி கூறினார்.பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அநபாயன் முதலாம் பிள்ளையாக வந்தமைக்கும், அநிந்திதை கூடிய புள்ளிகளைப் பெற்றமைக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இக் கூட்டமே ஹோல்புறுக் வீட்டில் இறுதிக் கூட்டம். வவுனியாவுக்குச் சென்ற பின்பும் தொடர்ந்து நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

செயலாளர் நன்றியுரை கூறினார். அநபாயனின் தேவார இசையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 09.06.1995. செயலாளர்

இடம் மாற்றம் காரணமாக வவுனியாவுக்கு வந்து விட்டோம். அக் காலச் சூழல், வதிவிடப் பிரச்னை, போன்ற பல காரணங்களினால் மூன்று வருடங்களுக்கு மேல் எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் நடைபெறவில்லை. பின்பு பல புதிய உறுப்பினர்களுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

**புதிய நிர்வாகம்:**

தலைவர் : திரு.நா. தர்மராஜா
செயலாளர் : திருமதி.பூ.தர்மராஜா.
உறுப்பினர்கள் : செல்வன்.த.அநபாயன்.(உப செயலாளர்)
செல்வி.த.அநிந்திதை.
செல்வன்.சு.குமர்நாத்.
(தலைவரின் மூத்த சகோதரி கமலாவதியின் - ராணி (மகன்)
செல்வன்.ச.செந்தூர்ச் செல்வன்.
(தலைவரின் நண்பர்.திரு.செ.சண்முக நாதனின் மகன்.)
செல்வன்.ச.அருள்மொழி வேந்தன்.
(தலைவரின் நண்பர்.திரு.செ.சண்முக நாதனின் மகன்.)
செல்வி.ச.வித்தியாநந்தினி.
(தலைவரின் நண்பர்.திரு.செ.சண்முக நாதனின் மகள் )
கௌரவ உறுப்பினர்கள் :
செல்வி.சி.அகல்யா.
(தலைவரின் இளைய சகோதரி புனிதவதி
(சாந்தம்)யின் மகள்.)
செல்வி.ந.தேவகி.
(தலைவரின் சகோதரர் திரு.நடராசா (பிறை சூடி)வின் மகள்.)

**பதினேழாவது கூட்ட அறிக்கை**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் நீண்ட கால இடைவேளைக்குப் பின் அதாவது மூன்றரை வருடங்களுக்குப் பின், வவுனியாவில் உள்ள **சிந்தாமணி கோவில் வீதி, தோணிக்கல்** எனும் இடத்தில் அமைந்துள்ள எமது வாடகை வீட்டில் **(ஐயம் பிள்ளைக் குஞ்சியின் வீடு)** 09.06.1995 வெள்ளிக்கிழமை பிற்பகல் ஏழு மணி முப்பது நிமிடமளவில், தலைவர் **திரு.நா.தர்மராஜா** அவர்களின் தலைமையில் **அநிந்திதை** அவர்களின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்மடுவைச் சேர்ந்த அருட் கவிஞர் **பொன்.தில்லையம்பலம்** அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தார்.

ஏறத்தாழ மூன்றரை வருடங்களுக்குப்பின் இந் நிகழ்வு இடம்பெற்றதனால், தலைவர் அக்காலச் சம்பவங்களை எல்லாம் தனதுரையில் எடுத்துரைத்தார்.

இந் நீண்ட கால இடைவேளையில் பல நல்ல நிகழ்வுகளும்,சில தீய நிகழ்வுகளும் இடம்பெற்றன. பழைய உறுப்பினர் காண்டீபன் க.பொ.த. உயர்தரம் வர்த்தகப் பிரிவு படித்து சித்தி எய்தி விட்டார்.

அநபாயன் 1992ல் புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தினார். அநிந்திதைக்கு 1993ல் தமிழ்த்தினப் போட்டியில்-குழு நடனம்நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடம் கிடைத்தது. அத்தோடு 1994 ல் தமிழ்த் தின கட்டுரைப்போட்டியில்மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம் கிடைத்தது.

தலைவர் அவர்களுக்கு 1993ல் இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட தமிழ் சாகித்ய விழாவில் **தமிழ்மணிப்** பட்டம் வழங்கப்பட்டது.

1992 ல் வெளியிட்ட **அன்றில் பறவைகள்** நாடக நூலுக்கு தேசிய சாகித்ய மண்டலப் பரிசு 12.01.1995ல் கிடைத்தது. **முப்பதாயிரம் ரூபா** ரொக்கப் பணமும் சான்றிதழும் கிடைத்தது. (ரி.வி) தொலைக்காட்சிப்பெட்டி வாங்கப்பட்டது.

தலைவர் அவர்கள் பல தடவைகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வானொலியில் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார். ரூபவாகினியில் பேட்டி ஒன்றையும் கொடுத்தார்.

1993ல் சித்திரை வருடப்பிறப்பிற்கு இலங்கை ரூபவாகினிக் கூட்டுத் தாபனத்தில் **"வந்தது வசந்தம்"** எனும் நிகழ்ச்சியில் **தலைவரும், செயலாளரும், காண்டீபனின் சகோதரன் தனஞ்சயனும், காண்டீபனின் சகோதரி மிதிலினியும்** தலைவர் செயலாளர் ஆகியோரின் பிள்ளைகளாக நடித்தனர்.

**"அன்றில் பறவைகள்", "இலக்கியச் சிமிழ்", "தென்றலும் தெம்மாங்கும்", "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்", "இலக்கிய நாடகங்கள்", "பன்னிரு திருமுறை அறிமுகம்", "ஆத்திசூடி உரை", "மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்"** (ஆய்வு) ஆகிய எட்டு நூல்கள் தலைவர் அவர்களினால் வெளியிடப் பட்டன.

அநிந்திதை அவர்கள் பரதம் படித்து முதலாம் வகுப்புப் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தி எய்தினார். சங்கீதமும் படித்து வருகிறார். அநபாயன் மிருதங்கம் பயின்று கொண்டிருக்கிறார். அநபாயன் ஆங்கில தின கட்டுரைப் போட்டி, Dialogue போட்டிகளில் பங்கு பற்றி மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றார்.

இத்தகைய பல நற் காரியங்களுக்கிடையில் சில கவலைக்குரிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

செயலாளர் அவர்களுக்கு (07.10.1994)ல் வயிற்றில் பெரிய சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அதேநிமிடத்தில் அநபாயனுக்கும் சிறு விபத்து ஏற்பட்டு சிறு காயமும் ஏற்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய உறுப்பினர் காண்டீபனை அடுத்த நிகழ்வுக்கு வரவழைக்க வேண்டும் எனவும் எம்முடன் இருக்கும் குமர்நாத் பங்கு கொள்ள வேண்டும் எனவும் கேட்கப்பட்டது.

குடும்ப கீதம் நல்ல முறையில் இசையமைக்கப்பட்டு மிருதங்க இசையுடன் இனிமையாகப் பாடப்பட வேண்டும் எனவும் செயலாளரின் ஒத்துழைப்பு வேண்டும் எனவும் கேட்கப்பட்டது.

மேலும், அறிக்கை முழுமையாக எழுதப்பட வேண்டும், ஒரு காலத்தில் தொகுத்து புத்தகமாகக் கூட வெளியிடலாம் எனவும் கூறப்பட்டது.

முன்பு பெரிய எழுத்தில் பாடல்கள் எழுதித் தொங்க விடப் பட்டிருக்கும். உறுப்பினர்கள் பாடமாக்கும் வழக்கம் இருந்தது. நிகழ்வில் இடம் பெறும் பாடல்களுக்கு தலைவர் கருத்துரை வழங்கும் வழக்கமும் இருந்தது. தற்போது இல்லாமற் போய்விட்டது. இவை கவனத்திற் கொள்ள வேண்டும் எனவும் கேட்கப்பட்டது.

இவரது நண்பன் **சண்முகநாதன், துணைவியார்,** பிள்ளைகள் நிகழ்வில் கலந்து கொண்டமை, **அகல்யா** கலந்து கொண்டமை மகிழ்ச்சியான விடயம் என்றார்.

வழமையாக சிறப்புடன் நடக்கும் சரஸ்வதி பூஜை, செயலாளரின் சுகவீனம் காரணமாக 1994ல் நடைபெறவில்லை என வருத்தம் தெரிவித்தார். தலைவரது பேச்சைத் தொடர்ந்து செயலாளர் கூட்ட அறிக்கை வாசித்தார்.

அடுத்து அநபாயன் மிருதங்க இசை தந்து நிகழ்வை மங்களகரமாக்கினார். அநிந்திதை குடும்ப கீதத்தை இசைத்தார்.

இவரது நண்பன் சண்முகநாதன் அவர்களின் மகனும் புதிய உறுப்பினருமாகிய செந்தூர்ச் செல்வன் "களியானைக் கன்றை" எனும்தேவாரத்தையும் "கறுப்புப் பூனை வருகிறார்" எனும் பாடலையும் பாடினர்.

தலைவரின் வேண்டுதலின்படி சபையினர் கரகோசத்தினால் அவரை உற்சாகப் படுத்தினர். தொடர்ந்து சண்முகநாதன் அவர்களின் இரண்டாவது மகன் அருள்மொழி வேந்தன் "பித்தாப் பிறை சூடி" எனும் தேவாரத்தைப் பாடினார். சபையோர் பாராட்டினர்.

கரப்பங் காட்டில் இருந்து வருகை தந்த கௌரவ உறுப்பினர் அகல்யா சிவதாசன் "உழவுத் தொழில்" எனும் தலைப்பில் சிறந்த பேச்சு ஒன்றைத் தந்தார். அவரும் பாராட்டப் பட்டார்.

அடுத்து அநிந்திதை சங்கீத வகுப்பில் கற்கும் சுர வரிசை சில பாடினார். அநபாயன் "கிழவியின் மீது தொடுக்கப்பட்ட பொய்வழக்கு" எனும் கதையைக்கூறி, பொய் சொல்லக்கூடாது என்பதை விளக்கினார்.

செல்வி. வித்தியா நந்தினி சண்முகநாதன் சொற்றுணை வேதியன் எனும் தேவாரத்தைப் பாடினார்.

சண்முகநாதனின் இளைய மகள் நிதிலாநந்தினி இடையிடையே குழப்பம் விளைவித்தார். தலைவர் குறுக்கிட்டு சிறுபிள்ளை என்பதால் அவரை மன்னித்து நிகழ்வு தொடரலாம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அகல்யா ஆங்கிலக் கவிதை ஒன்றினை அழகாகக் கூறினார். "தொப்பி வியாபாரியும் குரங்குகளும்" என்ற கதையை அருள் மொழி வேந்தன் சொன்னார்.

பிரதம விருந்தினர் அருட்கவி பொன்.தில்லையம்பலம் அவர்களைப்பற்றி தலைவர் எடுத்துரைத்தார். கல்மடுவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையில் தான் படித்தார். ஆனால் சுயமாக வாசிப்பு மூலமும் கேள்வி ஞானம் மூலமாகவும் சிறந்த அறிவு பெற்றவர்.

கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். திருப்புகழை உருக்கமாகப் பாடுவார். திருப்புகழ் சந்தத்தில் பல கவிதைகளை எழுதியுள்ளார். சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலுக்கு திரு ஊஞ்சற்பா இயற்றி புத்தகமாக்கப் பட்டது. என்று கூறினார்.

அடுத்து தில்லையம்பலம் அவர்கள் தான் கதிர்காமம் சென்றபோது அங்கு கண்ட காட்சியையும், திருப்புகழ் சந்தத்தில் இயற்றிய பாடலையும், மனமுருகப் பாடினார்.சபை மெய் மறந்து ரசித்தது.

ஐந்து நிமிட இடைவேளை விடப்பட்டு **வாழைப்பழம்** பரிமாறப்பட்டது. தொடர்ந்து அநபாயன், அநிந்திதை, அகல்யா ஆகியோர் சிவபுராணத்தில் ஒரு பகுதியைப் பாடினர்.

அநபாயன் நகைச்சுவைத் துணுக்குகளைச் சொன்னார். அநிந்திதை "நாட்டியக் கலை ஒரு ஜீவன் எனும்" பாடலைப் பாடினார்.

சபையோர் குறிப்பில் செயலாளர், அங்கத்தவர்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும், குறை நிறைகள் பேசித் தீர்க்கப் படவேண்டும் எனவும், உடல் நலக்குறைவினால் குறைகள் ஏற்பட்டிருக்கலாம், இயன்றவரை ஒத்துழைப்பு வழங்குவேன் எனவும் தலைவர் அவர்கள் பெற்ற பரிசுகள், கௌரவங்கள் என்பவை குறித்து வெள்ளித் தமிழ்ச் சங்கம் பாராட்ட வேண்டும் எனவும் கூறினார்.

அடுத்து பிரதம விருந்தினர் உரை இடம்பெற்றது. படிப்பில் கவனம் வேண்டும். தொலைக்காட்சி பார்ப்பதைக் குறைக்க வேண்டும் என தலைவர் எடுத்துரைத்தார்.

நேரம் ஒன்பதைத் தாண்டி விட்டது செயலாளரின் நன்றியுரையினைத் தொடர்ந்து அநிந்திதையின் தேவாரத்துடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — **பு.தர்மராஜா**

தலைவர் — 23.06.1995. — செயலாளர்

**பதினெட்டாவது கூட்ட அறிக்கை:-**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில் **தோணிக்கல்** வீட்டில் 23.06.1995 வெள்ளிக்கிழமை மாலை ஏழு மணியளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

பம்பைமடுவைப் பிறப்பிடமாகவும், சூசைப் பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தலைவரின் மூத்த சகோதரருமான கிராமசேவை அதிகாரி திரு.நா.யோகராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

செயலாளர் மிகவும் நீண்ட கூட்ட அறிக்கையை வாசித்தார். அநிந்திதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப கீதத்தைப் பாடினார். அநபாயனின் மிருதங்க இசை மங்கல இசையாக இடம்பெற்றது.

அடுத்து தலைவர் அவர்கள் தமது உரையுடன் வரவேற்புரையையும் நிகழ்த்தினார்.

எமது நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக, தலைவரின் இன்னொரு மூத்த சகோதரர் திரு,நா.நடராஜா, நண்பன் செ.சண்முகநாதன், பொன்.தில்லையம்பலம், ஆகியோர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

நிகழ்வு தொடர்ந்து நடைபெறவேண்டும், கௌரவ உறுப்பினர்களாக தலைவரின் மூத்த சகோதரர் திரு நா.சேனாதிராசா அவர்களின் பிள்ளைகள் தமிழினி, மிதிலினி, இன்னொரு மூத்த சகோதரர் திரு.நா.நடராசா அவர்களின் மகள், மகன், வானதி, கிருத்திகன், தலைவரின் சகோதரி புனிதவதியின் மகன் ஆதவன், தலைவரின் மூத்த சகோதரர் யோகராசாவின் மகன். நித்தியன் முதலானோர் கலந்து கொள்ள வேண்டும்,

உறுப்பினர்கள் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அடுத்து, செந்தூர்ச்செல்வன் "ஐந்துகரத்தனை" எனும் திருமந்திரத்தைப் பாடினார். அருள்மொழிவேந்தன் "ஊரைக் காத்த சிறுவன்" எனும் கதையினைக் கூறினார். கௌரவ உறுப்பினர் அகல்யா மாரியம்மன் திருவிழா பற்றிய மிக நீண்ட பாடலை அழகாகப் பாடிக் காட்டினார்.

தொடர்ந்து அநபாயன் "திருவே என் செல்வமே" எனும் தேவாரத்தைப் பாடினார். கௌரவ உறுப்பினர் ந.தேவகி அவர்கள் "இராமாயணத்தில் இராமன்" எனும் தலைப்பில் அழகாகப் பேசினார்.

செந்தூர்ச்செல்வன் "நரியும் ஆடும்" எனும் கதையைச் சொன்னார். அநபாயனும் அநிந்திதையும் "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" எனும் உலக நீதிப் பாடல்கள் சிலவற்றைச் சொன்னார்கள்.அருள்மொழி வேந்தன் "மாசில் வீணையும்" தேவாரத்தைப் பாடினார்.

தொடர்ந்து இடைவேளை விடப்பட்டு, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யோகராஜா அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட **பகோடா** பரிமாறப்பட்டது.

இடைவேளையினைத் தொடர்ந்து அகல்யா "சலம்பூவொடு தூப" எனும் தேவாரத்தைப் பாடினார். அநிந்திதை மாலையில் தான் கண்ணுற்ற காட்சிகள் பற்றிய சிறு பேச்சை தெளிவாகப் பேசினார். அநபாயன் ஆங்கிலக்கவிதை ஒன்றை அழகாகக் கூறினார்.

அநிந்திதை, தேவகி இருவரும் "ஆடிக்கொண்டார்" எனும் சங்கீதப் பாடலை இனிமையாகப் பாடினர்.

அடுத்து பொன் தில்லையம்பலம் அவர்கள், இந்நிகழ்வு சிறப்பானது. எல்லோர் வீடுகளிலும் இடம்பெறவேண்டும் எனப் பாராட்டியதுடன் தான் திருப்புகழ் சந்தத்தில் இயற்றிய சில பாடல்களை பக்திச் சுவையுடன் பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யோகராஜா அவர்கள்,இச்சங்கம் மலைநாட்டில் உருவாகியது. பின் தொடர முடியாமல் தடைப்பட்டு மீண்டும் உதயமாகியது மகிழ்ச்சி எனவும், ஒற்றுமை வளர இச்சங்கம் உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நடராஜா அவர்கள் சந்தர்ப்ப வசமாக வந்தாலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டமை மகிழ்ச்சி எனவும்,செயலாளரின் கூட்ட அறிக்கை மூலம் கடந்த கூட்ட நிகழ்வுகளைக் கண் முன்னே காணக்கூடியதாக இருந்தது எனவும் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த சண்முகநாதன் அவர்கள், இச்சங்கம் குடும்பமாக இயங்குதல் வேண்டும், யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ்மன்றத் தலைவராக தர்மராஜா (இச்சங்கத்தின் தலைவர்) அவர்களும் தான் செயலாளராகவும் இருந்த கால நினைவுகளைக் கூறி உறுப்பினர்களை ஊகுவிக்க பரிசில்கள் வழங்க வேண்டும் என ஆலோசனையும் வழங்கினார்.

தொடர்ந்து சபையோர் குறிப்புரை இடம்பெற்றது.குமர்நாத் அவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது.

பாடசாலை, மாவட்ட ரீதியில் பரிசு பெறுபவர்களுக்கு நாமும் பரிசளிப்போம் எனவும், இந்நிகழ்வு சிறப்பானது எனவும், உறுப்பினர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், பாடசாலையில் குழப்படி இல்லாது இருத்தல் வேண்டும், எனவும் சுறி,

பாடசாலைச் சம்பவங்கள் சிலவற்றைக் கூறி, நல்ல ஒழுக்கத்தின் பின்புதான் கல்வி எனவும் அறிவுரை கூறப்பட்டது.

அடுத்து செயலாளர் நன்றியுரை கூறினார். அநிந்திதை, தேவகி ஆகியோரின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** — **பு.தர்மராஜா**

தலைவர் — *07.07.1995.* — செயலாளர்

**பத்தொன்பதாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்ட நிகழ்வு, **தோணிக்கல்** வீட்டில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்களின் தலைமையில், அநிந்திதையின் தேவார இசையுடன், *07.07.1995* வெள்ளிக்கிழமை மாலை எட்டு மணியளவில் ஆரம்பமாகியது.

இந்து மாமன்றத் தலைவர் திரு.சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் தெய்வாதீனமாக வீட்டிற்கு வருகை தந்திருந்தார். உடன் வேண்டுதலுக்கிணங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.

செயலாளர் கூட்ட அறிக்கையினை வாசித்தார். தொடர்ந்து தலைவர் தமது உரையுடன் வரவேற்புரையையும் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினரை வரவேற்றதுடன், கடந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த பொன் தில்லையம்பலம் அவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொள்ள முடியாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை எனவும், சீ.ஏ.இராமஸ்வாமி ஐயா அவர்கள் கலந்து கொள்வது சிறப்பானது எனவும், வீடு மாற வேண்டி இருப்பதால் நிகழ்வு சுருக்கமாக இடம் பெறும் எனவும் கூறினார்.

மேலும் இந் நிகழ்விலாவது **தாயார்** அவர்கள் கலந்து கொள்ளக் கிடைத்தது மகிழ்ச்சி எனவும் கூறினார். அநிந்திதை அழகாக குடும்ப கீதம் இசைத்தார். மங்கல இசையாக அநபாயனின் மிருதங்க இசை அமைந்தது.

செந்தூர்ச் செல்வன் "சலம்பூவொடு தூபமறந்தறியேன்" எனும் தேவாரத்தைப் பாடினார். அருள்மொழி வேந்தன் "பக்தியால் யானுனை" எனும் திருப்புகழைப் பாடினார். அகல்யா "பூச இனியது நீறு" எனும் தேவாரத்தைப் பாடினார்.

வீடு மாற்ற வேலையினால் நிகழ்வு கால தாமதமாக தொடங்கியதால் இடைவேளை விடப்படவில்லை. அநிந்திதை சில சுரவரிசை, சிற்றாடை கட்டியல்லோ எனும் நாட்டார் பாடல் ஆகியவற்றைப் பாடினார்.

கடந்த நிகழ்வில் பாடப்பட்டு பாராட்டைப் பெற்ற அம்மன் பாடலை இந் நிகழ்விலும் அகல்யா அழகாகப் பாடினார். அநபாயன் நான்கு திருக்குறள்களைக் கூறினார்.

குமர்நாத் சிறந்த நகைச்சுவைத் துணுக்குகளைக் கூறினார். முதன் முதல் இந் நிகழ்வில் பங்காளியாகக் கலந்து கொண்டமைக்கு குமர்நாத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அகல்யா ஆங்கிலக் கவிதை ஒன்றினையும் கூறினார். நிகழ்வு நிறைவுறும் தருணத்தில் திரு.நா.நடராஜா. துணைவியார், தேவகி, கிருத்திகன் ஆகியோர் வருகை தந்தனர். ஆறுமுக நாவலரின் சமயப்பணி பற்றி பேச்சு ஒன்றை தேவகி அவர்கள் சிறப்பாக பேசினார்.

இப் பேச்சினை அவர் நான்காவது உலக சைவ மகாநாட்டில் (கொழும்பில்) பேச இருக்கிறார். முதற் பரிசு பெற சங்கம் வாழ்த்தி அனுப்பியது.

பாடல்களில் உள்ள சிறு பிழைகள் திருத்தப்பட வேண்டும்,உறுப்பினர்களுக்கு பரீட்சை நெருங்குகிறது, இவ் வீட்டில் (தோணிக்கல்) இந் நிகழ்வே இறுதியானது, அடுத்த நிகழ்வு நாம் செல்லும் வீட்டில் இடம்பெறும், என தலைவர் அவர்கள் கூறினார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள்,பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆகிவிட்டது, தேவகியையும், தலைவர் அவர்களையும் சந்திக்க விரும்பினேன் அதுவும் நிறைவேறியது.

அத்துடன் இவ்விதமான நிகழ்வில் கலந்தது மகிழ்ச்சி, நிகழ்வுகள் நன்றாக இருந்தன. அம்மன் பாடலும், பேச்சும் பிடித்தன என தனதுரையில் கூறினார்.

அடுத்து சபையோர் குறிப்புரை இடம்பெற்றது. நிகழ்வுகள் சிறப்பாக ஆயத்தம் செய்யப்பட வேண்டும், உறுப்பினர்களும் குறிப்புரை வழங்க வேண்டும் எனக் கூறி, மீண்டும் பிரதம விருந்தினருக்கு தலைவர் நன்றி தெரிவித்தார்.

செயலாளர் நன்றியுரை கூறினார். அநிந்திதை, அகல்யா, தேவகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 04.08.1995 செயலாளர்

**இருபதாவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் உக்குளாங் குளம் வாடகை வீட்டில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் தலைமையில், 04.08.1995 வெள்ளிக்கிழமை மாலை ஏழுமணி. இருபதுநிமிடமளவில் அநிந்திதை, அகல்யா ஆகியோரின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

திருமதி.புனிதவதிசிவதாசன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். செயலாளரினால் கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. அநிந்திதை குடும்ப கீதம் இசைக்க ,அநபாயன் மிருதங்கம் வாசித்தார்.

தலைவர் அவர்கள் தமதுரையில், இந்த வீட்டில் இது முதலாவது நிகழ்வு, வீடு மாறும் வேலைகளினால் நிகழ்வைச் சிறப்பாக்க முடியவில்லை, இவ் வீட்டிற்கு வந்து ஒரு கிழமைக்குள் இந்நிகழ்வை ஒழுங்குசெய்தமை வரவேற்கத்தக்கது,

ஆதவன், புனிதவதி (சாந்தம்) ஆகியோருக்கு இது முதல் நிகழ்வு, தேவகிக்கு நாலாவது உலக சைவ மகா நாட்டில் மத்திய பிரிவுப் பேச்சுப் போட்டியில் முதலாம் பரிசு கிடைத்துள்ளது. அவரை சங்கம் கௌரவிக்க வேண்டும். என பல விடயங்களைக் கூறினார்.

செந்தூர்ச் செல்வன் தேவாரம் பாடினார்.அருள்மொழி வேந்தனும் ஒரு தேவாரம் பாடினார். புதிய உறுப்பினர் ஆதவன் தேவாரம், புராணம், திருப்புகழ் என ஒரே மூச்சில் சங்கிலித்தொடராகப் பாடி முடித்தார். சபையினர் உற்சாகப்படுத்தினர்.

அகல்யா பெற்றோரைப் பேணல் எனும் விடயம் பற்றி பேசினார். அநபாயன் "திமிர வுததி அனைய" எனும் திருப் புகழைப்பாடினார். அநிந்திதை உலகநீதியில், "ஓதாமல் ஒருநாளும்", "நெஞ்சாரப் பொய் தன்னை" ஆகிய பாடல்களைப் பாடினார்

இடையில் ஆதவன் சத்தம் செய்தமையினால்,தலைவர் அவரைக் கட்டுப்படுத்தினார். அகல்யா "நீல மயில்" எனும் பாடலைப் பாடினார். அநபாயன் இரு தேவாரங்களைப் பாடினார்.

ஐந்து நிமிட இடைவேளை விடப்பட்டு வீட்டில் தயாரிக்கப்பட்ட **பகோடா** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து ஆதவன் "ஒன்று என்று சொல்லுவோம்" எனும் பாடலையும். வித்தியாநந்தினி "மாசில் வீணையும்" எனும் தேவாரத்தினையும் பாடினர். அநிந்திதை "சாமகானப் பிரியே" எனும் சங்கீதப் பாடலைப் பாடினார்.

அடுத்து ஆதவன் "புள்ளிப் புள்ளி மானே", "பாட்டி சுட்ட வடை", "பாட்டியம்மா கடையிலே" "ஊர்வசி", 'அரபிக்கடலோரம்" முதலான பல பாடல்களை தனக்குத் தெரிந்த பாணியில் தொடராகப் பாடி முடித்தார். சபையினர் வயிறு குலுங்கச் சிரித்ததுடன் பாராட்டையும் தெரிவித்தனர்.

அநிந்திதை "மாலைப் பொழுதின் மயக்கத்திலே" எனும் சினிமாப் பாடலைப்பாடி பாராட்டைப் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சபையோர் குறிப்புரை இடம் பெற்றது.அநபாயன் முதலாம் பிள்ளையாக வந்துள்ளார். மகா வித்தியாலயத்தில் **எல்லா வகுப்புப் பிள்ளைகளையும் விட** கூடிய சராசரியைப் பெற்றுள்ளார்.

ஆதவனுக்கும் நல்ல புள்ளிகள் கிடைத்துள்ளன. மற்ற உறுப்பினர்களுக்கும் நல்ல புள்ளிகள் கிடைத்துள்ளன. போன்ற விடயங்கள் கதைக்கப்பட்டன.

அத்துடன் வித்தியாநந்தினி அண்ணன்மாரை "டேய்" என்று கூறுவது தவறு என்றும் எடுத்துரைக்கப் பட்டது.

அடுத்து செயலாளர் நன்றியுரை கூறினார். அநிந்திதை, அகல்யா ஆகியோரின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவேறியது.

**நா.தர்மராஜா** **பூ.தர்மராஜா**
தலைவர் 25.08.1995. செயலாளர்

**இருபத்தோராவது கூட்ட அறிக்கை:**

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க நிகழ்வு, **உக்குளாங்குள** வீட்டில், தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் தலைமையில், 25.08.1995 வெள்ளிக்கிழமை மாலை ஏழு மணி பதினைந்து நிமிடமளவில் அநிந்திதையின் தேவார இசையுடன் இனிதே ஆரம்பமாகியது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. நா.சேனாதிராஜா (தலைவரின் மூத்த சகோதரர்.) அவர்கள் சிறிது காலந்தாழ்த்தி வந்தாலும் பிரதம விருந்தினராகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தார்.

வ/சு.இ.இ.சங்கத் துணைச் செயலாளர் திரு.நா.யோகராஜா (தலைவரின் மூத்த சகோதரர்.) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

செயலாளர் கடந்த கூட்ட அறிக்கையினை வாசித்தார். அநிந்திதை குடும்ப கீதத்தை இசைக்க, அநபாயன் மிருதங்கம் வாசித்தார்.

அடுத்து செந்தூர்ச் செல்வன் பட்டினத்தார் பற்றி பேசினார். அருள்மொழி வேந்தன் "நிரைகழலரவம்" எனும் தேவாரத்தையும் உடலில் உறுதி வேண்டும் எனும் பாடலையும் பாடினார்.

அகல்யா நவராத்திரி பற்றிய பேச்சொன்றைத் தந்தார். அநபாயன் இரண்டு தேவாரங்களைப் பாடினார். அநிந்திதை "வாழ்க நிரந்தரம்" எனும் தமிழ்மொழி வாழ்த்தைப் பாடினார்.

எல்லா உறுப்பினர்களது நிகழ்ச்சிகளுக்கும் சபையினர் கைதட்டி பாராட்டை வழங்கினர். ஐந்து நிமிட இடைவேளை விடப்பட்டு **மிக்சர்** பரிமாறப்பட்டது.

தொடர்ந்து வித்தியானந்தினி தேவாரம் பாடுவதாகக் கூறினார்.பின் பாடாமல் இருந்து விட்டார். அடுத்து அகல்யா "திருமுருகா" எனும் பக்திப் பாடலைப் பாடினார்.

அநிந்திதை "மலர்ந்தும் மலராத" எனும் சினிமாப் பாடலைப் பாடினார். அத்துடன் தலைவர் அவர்கள் எழுதிய "இசைத்திட முடியாது" எனும் தமிழ் வாழ்த்துப் பாடலையும் இசையுடன் பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநபாயன் "பாரதி அல்ல பாரத்தீ நீ" எனும் தலைப்பில் கவிதை வாசித்தார். அகல்யா "அம்மா என்றழைக்காத" எனும் சினிமாப் பாடலைப் பாடினார்.

இந் நேரத்தில் தான் பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினரும் வருகை தந்தார்கள்.

அவர்களின் வேண்டுதலுக் கிணங்க பலமுறை பாடிய அம்மன் பாடலை அகல்யா பாடினார். அநபாயன் முதல் வாசித்த கவிதையில் ஒருபகுதியை மீண்டும் வாசித்தார்.

தலைவர் விருந்தினரை வரவேற்று, சிறு குறிப்பையும் கூறினார்.தேவகிக்கு கௌரவம் வழங்கக் காத்திருந்தோம். ஆனால் அவர் வரவில்லை, பழைய உறுப்பினர் காண்டீபன் வெள்ளித் தமிழ்ச்சங்கத்தின் மூலம் படித்து தமிழ், சமயம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் க.பொ.த.சாதாரண தரத்தில் நல்ல சித்தி பெற்றுள்ளார். உறுப்பினர்கள் போதிய ஆயத்தத்துடன் பங்கு கொள்ள வேண்டும் என பல அறிவுரைகள் கூறினார்.

அடுத்து பிரதம விருந்தினர் உரை இடம் பெற்றது. தவிர்க்க முடியாத காரணத்தால் காலதாமதமாக வந்ததாகவும், முழு நிகழ்வையும் கண்டு களிக்க முடியவில்லை எனவும் இது ஒரு பயிற்சி முகாம், தமிழை வளர்க்க நல்ல முயற்சி எனவும் குறிப்பிட்டார்.

நேரம் சென்றுவிட்டதால் சபையோர் குறிப்புரை இடம்பெறவில்லை. அநபாயனும் அநிந்தியும் சண்டை பிடிப்பதாக அறிகிறேன். அது நிறுத்தப்பட வேண்டும், சொற் பிழை எழுத்துப்பிழை இன்றி ஆயத்தத்துடன் உறுப்பினர்கள் நிகழ்வைத் தரவேண்டும் என தலைவர் குறிப்பிட்டார்.

செயலாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து, அநிந்திதை, அகல்யா ஆகியோரின் தேவார இசையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

தலைவர் திகதி செயலாளர்

இக் கூட்ட அறிக்கை வாசித்து, தலைவர், செயலாளர் கையொப்பமிடும் வாய்ப்பு கிடைக்காமலே போய் விட்டது. மனவருத்தமான விடயம் தான்.

பிள்ளைகளின் படிப்பு, ரியூசன், நாம் இருந்த வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான நீண்ட தூரம், உறுப்பினர்களை ஒன்று சேர்க்கும் சிக்கல், நாட்டுச் சூழல். போன்ற பல தவிர்க்க முடியாத காரணங்களினால் எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கக் கூட்டம் மேற் கொண்டு நடைபெறவில்லை.

1995.08.25.ன் பின் எமது நிகழ்வு இடம்பெறவில்லை என்பதால்,அக் காலப் பகுதியின் பின் எமது ஆரம்ப கால உறுப்பினர்கள், இடைக்கால உறுப்பினர்கள், நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்கள் இக் காலப் பகுதியில் எப்படி உள்ளார்கள், இடைக்காலப் பகுதியில் நடந்த நிகழ்வுகள், அனுபவங்கள் எப்படியானவை என்பதை சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் கடந்த நாற்பது ஆண்டு காலமாக கலை, இலக்கிய, சமயத் துறைகளில் ஈடுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதுடன் பல துறை சர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டது டன் பல சஞ்சிகைகள், மலர்களையும் தயாரித்துள்ளார்.

சொற்பொழிவாளராக, கவிஞராக, சிறுகதை எழுத்தாளராக மரபு இலக்கிய கட்டுரையாளராக, நாடக எழுத்தாளராக புராண படன வித்தகராக பல்வேறு பரிமாணங்களில் தனது கலை இலக்கியப் பணிகளை மேற்கொண்டுவரும் இவர் **"கலாநிதி"** பட்டம் உட்பட இருபது பட்டங்களைப் பெற்றுள்ளார்.

தேசிய சாகித்தியமண்டல விருது,கலா பூசணம் விருது உட்பட பலதேசிய விருதுகளையும், சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளார். **தாய்லாந்துக்குச்** சுற்றுப் பயணம் செய்து வந்தார்.

சமய, இலக்கிய சொற்பொழிவுக்காக **சுவிஸ்** நாட்டிற்குச் சென்று வந்தார். சுவிஸ் நாட்டில் இருக்கும் இவரது உடன் பிறவாத் தம்பி **திரு.க.குமார குலசிங்கம்** அவர்களே இந்த ஏற்பாட்டைச் செய்தார். இவரது கலை இலக்கிய படைப்புகளுக்கு மிக ஆதரவாக அவர் விளங்குகிறார்.

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க நிகழ்வில் பங்குகொள்ள வேண்டும் எனும் பேரவா சுவிஸ் தம்பிக்கு இருந்தது. அது நிறைவேறும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. காலம்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

தலைவர் அவர்களும் குடும்பமும் சுவிஸ் தம்பி திரு.க.குமாரகுலசிங்கம் (நாகராஜா) குடும்பமும் இந்தியா சுற்றுலா சென்றோம்.

அத்துடன் எழுத்தாளர் ஓ.கே.குணநாதன், எழுத்தாளர் **வவுனியூர் இரா. உதயணன்** உட்பட, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் பரிசினைப் பெறுவதற்காக **இந்தியா** சென்றோம். மூவருக்கும் பரிசு கிடைத்தது. அப்பொழுது **கேரளா**விற்கும் சென்று வந்தோம்.

தலைவர் அவர்களுக்கு **"கங்கையின் மைந்தன்"** எனும் நாடக நூலுக்கு பரிசு கிடைத்தது. மகன் குடும்பத்துடன் (அநபாயன்) **மலேசியாவு**க்கும் சென்று வந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியத் தொழிலில் இருந்து **30.09.2009**ல் ஓய்வு பெற்ற போதும் தமிழுக்கும் சைவத்துக்கும் சமூகத்துக்கும் ஓய்வின்றி உழைத்துக்கொண்டே இருக்கிறார்.

இவரது மணிவிழா நிகழ்வு இவர் க.பொ.த.உயர் தரக் கல்வி கற்ற யாழ்ப்பாணம் சுன்னாகத்து கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் **21.02.2014** இல் **கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்** அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வை **திரு.மு.கௌரி காந்தன்** அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

ஆரம்ப கால உறுப்பினர் செல்வன் சே.காண்டீபன் அவர்கள் உயர் கல்வி கற்று, சிலகாலத்தின் பின் லண்டன் சென்று, திருமணம் செய்து குழந்தைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வருகிறார்.

செல்வன் த.அநபாயன் அவர்கள் கணிதத் துறையில் கல்வி கற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று, மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் சிவில் பொறியியல் பட்டப் படிப்பில் முதல் தரத்தில் சித்தி எய்தி புலமைப்பரிசில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று அவுஸ்திரேலியா சென்று கலாநிதிப் பட்டப் படிப்பைப் (Phd In Structural Engineering) பூர்த்தி செய்து அங்கு பொறியியலாளராக இருக்கிறார்.

அவர் கணிதத் துறையில் கல்வி கற்றாலும் தமிழில் ஆர்வமும் திறமையும் உடையவர். பாடசாலையில் கற்கும் காலத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குகொண்டு (வினாவிடைப் போட்டி) தேசிய ரீதியில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். இலக்கியத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெறுவது வழக்கம்.

அவர் **டாக்டர் நித்தியாவை** (M.B.B.S) திருமணம் செய்து **(27.11.2009)** அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். தற்போது லண்டனில் தொழில் செய்கிறார். இவர்களுக்கு **ஆதிரா** என்னும் பெண் குழந்தை **15.07.2013** இல் பிறந்துள்ளது.

செல்வி.த.அநிந்திதை அவர்கள், பாடசாலையில் கல்விகற்கும் காலத்தில், பேச்சு, கட்டுரை, நடனம் போன்ற பல நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழ்த்தினப் போட்டி நிகழ்வில் நடனம். கட்டுரை ஆகிய போட்டிகளில் மாகாண ரீதியில் பரிசில்கள் பெற்றுள்ளார். இலக்கிய ஆக்கத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் பரிசில் பெற்றுள்ளார். குழு நடனத்திலும் தேசிய மட்டத்தில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்.

அவர் தமிழ் சிறப்புப் பட்டதாரி. B.A. (Hons-Tamil). தொகுதி முதல் மாணவியாக சித்தி எய்தியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆங்கில டிப்ளோமா படித்து Merit சித்தி அடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது **சட்டத்தரணி (வழக்கறிஞர்), திரு.கேசவராஜன் (L.B.Attorney At Law Commissionr For Oaths)** அவர்களைத் திருமணம் செய்து **(12.09.2010)** திருகோணமலையில் வாழ்ந்து வருகிறார்.

செல்வன் குமர்நாத் உயர் கல்வி கற்று கொழும்பில் Dialog Company யில் கடமை புரிகிறார்.

செல்வி.சி.அகல்யா உயர் கல்வி கற்று இலங்கை வங்கியில் தலைமை லிகிதராக உள்ளார். இவர் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் பேச்சு,கட்டுரை, நடனம் போன்ற துறைகளில் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்களைப் பெற்றுள்ளார். பேச்சுப் போட்டியில் (சமயப் பேச்சுப்போட்டி) தேசிய மட்டத்தில் முதற்பரிசு பெற்றமை குறிப்பிடத் தக்கது. **டாக்டர் சி.நிருஷன்** என்பரைத் திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்கிறார்.

செல்வன்.சி.ஆதவன் பொறியியல் பட்டப் படிப்பை முடித்து தொழில் செய்கிறார்.

செல்வி.ந.தேவகி.தனது உயர் கல்வியை விஞ்ஞானத்துறையில் படித்து தற்போது டாக்டராக (M.B.B.S) பணி புரிகிறார். அவர் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் பேச்சு, கட்டுரை, நடனம் போன்ற பல போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளார். தமிழ்த்தின மத்திய பிரிவு பேச்சுப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதற் பரிசினைப் பெற்றமை குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன்.ச.செந்தூர்ச் செல்வன் உயர் கல்வி கற்று ஆசிரியராகக் கடமை புரிகிறார். செல்வன்.ச.அருள் மொழி வேந்தன் உயர் கல்வி கற்று (B.A.) அரச உத்தியோகம் பார்க்கின்றார். தற்பொழுது திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்கிறார்.

செல்வி. ச.வித்தியானந்தினி பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார். பாடும் திறமை உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி.ச.நிதிலானந்தினி உயர் கல்வி கற்கின்றார். இவரும் பாடும் திறமை உள்ளவர். பாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது நிகழ்வில் கலந்து சிறப்பித்த சீ.ஏ.ராமஸ்வாமி அவர்கள் தற்போது சிறந்த கவிஞராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகிய திருமதி. தர்மராஜா பூரணேஸ்வரி ஆகிய நான் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டத்தினைப் படித்து முடித்தேன். (1976 -1980 காலப் பகுதி) B.A.(Hons)

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க ஆவணங்களை நானே கணணியில் பதிவு செய்யும் பாக்கியத்தைப் பெற்றமை மிகவும் மகிழ்ச்சியான விடயம்.

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க நிகழ்வு நிறுத்தப்பட்ட நீண்ட கால இடைவெளியில் பல நல்ல விடயங்களும், பல சோக நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

நாட்டுச் சூழல் பலதுன்பங்களைத்தந்தன. இடப்பெயர்வு, புலம்பெயர்வு, உயிரழப்புக்கள், சொத்திழப்புக்கள் கல்வி இழப்புக்கள், போன்ற பல தீர்வற்ற இழப்புக்களில் இருந்து எவருமே தப்பவில்லை.

இந் நிலையில் எமது நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த **திரு.நா.யோகராஜா** அவர்கள் மன அழுத்தம் காரணமாக நோய்க்குள்ளாகி எம்மை விட்டுப் பிரிந்து விட்ட நிகழ்வு என்றும் சோகமானது.

நிகழ்வில் கலந்து சிறப்பித்த **கவிஞர் பொன்.தில்லையம்பலம்** அவர்களும் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். எனது **தந்தையார்,** எனது **அம்மம்மா (ஆச்சி),** எனது மாமி (எனது கணவரின் தாயார்) ஆகியோரின் மறைவு வேதனை தருகிறது.

மீண்டும் எப்போதாவது ஒருமுறை எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க நிகழ்வு இடம் பெற இறைவன் அருள் புரிய வேண்டும் என்பது எனது பேரவா.

எமது இல்ல வெள்ளித் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், பங்கு கொண்டு சிறப்பித்தவர்கள் மற்றும் அனைவரும் சீர் பெற்று வாழ இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**திருமதி.பூரணேஸ்வரி தர்மராஜா அகளங்கன்.**
"தமிழ் அதர்"
90, திருநாவற்குளம், வவுனியா.

24.04.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# என்னைக் கொடுத்து அவரை எடுத்து.....

**திருமதி.பூரணேஸ்வரி தர்மராஜா.**

"**செ**ம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சந் தான்கலந்ததுவே"

ஆம்.. யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட மாணவரும், கலைப்பீட மாணவியும் கருத்தொருமித்து (20.11.1976) அன்பினால் கலந்தோம்.

நான்கு வருடங்கள் இதயத்தால் இணைந்து 24.04.1981.ல் பெற்றோர்களின் ஆசீர்வாதத்துடன் இல்லறத்தில் இணைந்து கொண்டோம்.

முப்பத்தி மூன்று வருட இல்லற வாழ்வின் நிறைவில் மணிவிழா. உடல் உயிரை வாழ்த்த முடியுமா! வணங்குகிறேன்.

திருமணமாகி புகுந்த வீடாகிய **பம்பைமடுவில்** சிலகாலம். பிறந்த வீடாகிய **கள்ளிக்குளத்தில்** சில காலம் என எமது வாழ்க்கை ஓடியது. இக்காலப் பகுதியில் தோட்டம், வயல் செய்து சுய சம்பாத்தியத்தில் வாழ்க்கை நடாத்தினோம்.

மிகவும் எளிமையாகத் தொடங்கிய எமது இல்வாழ்க்கை, இவரது தன்மான உணர்வினாலும், விடா முயற்சியினாலும் சிறிது சிறிதாக மேம்படத் தொடங்கியது.

அன்பான, பண்பான, அந்நியோன்யமான, இன்பமான இல்வாழ்வின் நற்பேறாக **அநபாயன், அநிந்திதை** ஆகிய மழலைச் செல்வங்கள் பிறந்தனர்.

மகள் பிறந்து இருமாத காலப் பகுதியில் இவருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்து விட்டது. நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அக்கரப் பத்தன ஹோல்புறுக் தமிழ்வித்தியாலயமே முதல் நியமனப் பாடசாலை.

குடும்பம் ஒன்றாக இருக்க வேண்டும். அன்புடனும்,பண்புடனும், ஒழுக்கத்துடனும், கட்டுக் கோப்புடனும் வாழவேண்டும் எனும் மேலான நோக்கில், ஹோல்புறுக் பாடசாலைக் கருகில் வாடகை வீட்டில் குடும்பமாக வாழத் தொடங்கினோம்.

இயற்கை எழில் மிகுந்த அந்த இடத்தில் ஆடம்பரம் இல்லாத இன்பமான அழகான வாழ்வாக எமது வாழ்வு அமைந்திருந்தது.

**வெள்ளித் தமிழ்ச் சங்கம்** ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் அன்பு,அறிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு,விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு, பிரச்சினைகளைப் பேசித் தீர்த்தல், பிறர்க்கு உதவும் மனப்பான்மை, ஆற்றல்களை வெளிப்படுத்தும் திறன், போன்ற பல அம்சங்களை எமக்கு ஊட்டி நல்ல ஆசானாக,வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

ஆசிரியத் தொழிலை நல்ல சேவையாகச் செய்யத் தவறியதில்லை. கணித ஆசிரியராக இருந்த போதிலும், மாணவர்களுக்கு தமிழ், சமயம் போன்ற பாடங்களையும் கற்பித்ததுடன் கலை,இலக்கியத்துறையிலும் தனது பங்களிப்பைச் செய்தார்.

அதுமட்டுமன்றி, மாணவர்களுக்குக் கல்வியுடன், ஒழுக்கத்தையும், பண் பாட்டையும் சேர்த்து ஊட்டினார்.

கருணையும், இரக்கமும் இவருடன் கூடப் பிறந்தவை. மாணவர்களது பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதுடன், காலையில் சரியான உணவின்றி சோர்வுறும் மாணவர்களுக்கு ஆகாரம் அளித்து சோர்வகற்றி பாடங்களைக் கற்றுக் கொடுப்பார்.

இவ்வளவு சேவைகளின் மத்தியில் எழுத்துத் துறையிலும் தனது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. இவரது சுறுசுறுப்பும் அதீத ஆற்றலுமே இதற்குக் காரணம். வானொலிப் பேச்சுக்களிலும் கலந்து கொண்டார்.

1991 காலப் பகுதியில் வவுனியாவில் வாடகை வீட்டில் எமது வாழ்க்கை தொடர்ந்தது. இக்காலப் பகுதியில் பல இலக்கிய விழாக்கள், பல நூல் வெளியீடுகள்,சொற்பொழிவுகள், ஆலய தொடர் சொற்பொழிவுகள், புராண படனம், எனப் பலவாறான பங்களிப்புகளில் இவரது அபாரமான ஆற்றல் வெளிப்பட்டது.

இந்த வகையில் பல தமிழ் அறிஞர்கள், நண்பர்கள்,உறவினர்கள் எமது இல்லத்திற்கு வந்து செல்வார்கள். அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து மகிழ்வோம்.

பிள்ளைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தும் வகையில் வீட்டில் தவறாது சரஸ்வதி பூசை செய்வோம். எமது பிள்ளைகளுக்கு வீட்டிலேயே அநேகமாக எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுப்போம்.இவர் ஆசிரியராக இருந்தமை வாய்ப்பாக அமைந்தது.

எமது பிள்ளைகளை அன்புடனும், பண்புடனும், ஒழுக்கத்துடனும், கட்டுக் கோப்புடனும் வளர்ப்பதில் இவரது வழிகாட்டல் அதி அற்புதமானது.

அன்பு செலுத்த வேண்டிய இடத்தில் அன்பு காட்டியும், கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், அவர்களது பாடசாலைப் பருவத்தை நெறிப் படுத்திய விதம் வியப்புக் குரியது.

ஆடம்பரமற்று செம்மையாக நாம் வாழ்ந்த வாழ்க்கை என்றும் அற்புதமானது. சிறுத் தொண்ட நாயனாருக்கு சீராள தேவன் மகனாக வாய்த்தது போல் எமக்கும் எமது குழந்தைகள் வாய்த்தார்கள். உணர்ந்து கல்வி கற்றனர்.

அநேகமாக நாங்கள் நாலு பேரும் ஒன்றாகவே தரையில் இருந்து உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணுவோம். இவர் வெளியில் சென்று மதிய உணவிற்கு வீட்டுக்கு வரும் வரை நானும் பிள்ளைகளும் அப்பாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

சமைத்த உணவை அன்புடன் பரிமாறும் பழக்கம் இவருக்கு மிகவும் பிடித்தமானது.

எமது இல்லற வாழ்க்கையில் கணக்கு எழுதி கடனுக்கு பொருட்கள் வாங்கியதே இல்லை.எமக்கு பிடிக்காத பழக்கம் அது. இவரது தந்தையாரின் அறிவுரையின் படியும் இந்த நல்ல பழக்கத்தை கடைப் பிடித்து செம்மையாக வாழ்ந்து வருகிறோம்.

**"ஆகாறு அளவிட்டித்து ஆயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை"**

இத்திருக்குறளை இவர் கூறி, பணம் வரும் வழி சிறிதாக இருந்தாலும் பரவாயில்லை. அது போகும் வழி பெரிதாக இருக்கக் கூடாது என்பார்.

இவர் நீதி, நேர்மைக்கு கட்டுப்பட்டவர். நாணயம் மிக்கவர். உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் தேவை உணர்ந்து தானாகவே முன்வந்து உதவும் கருணை உள்ளம் கொண்டவர். வாக்குத் தவறாத நற்பண்பும் நிறைந்தவர்.ஆளுமைத் திறன் உடையவர்.

இவரது நாணயம் எனக்கு மிகவும் பிடித்தமானது. பொதுக் காரியங்களில் ஈடுபடும் போது வரவு செலவுக் கணக்குகள் எல்லாம் சரியாக முடித்தாலும், அதற்கும் மேலாக தனது சொந்தப் பணத்தில் ஒரு தொகையைச் சேர்த்துத்தான் கணக்கை முடிப்பார்.

எனக்கு மட்டுமல்ல எமது பிள்ளைகளுக்கும் பிடித்தமானது இந்நாணயமே.

"பட்டப் படிப்பு படித்து விட்டு ஏன் வேலை பார்க்கவில்லை" எனப் பலரும் பலவிதமாக என்னிடம் கேட்பார்கள். அதற்கு எனது பதில், அன்பான, பண்பான,அறிவான கணவர்.அதற்கேற்றாற் போல் இரு குழந்தைகள்.அதனுடன் இல்லத்தரசி எனும் கௌரவமும் எனக்கிருக்கும் போது வேறு என்ன வேண்டும் .என்பதுதான். ஆம் நான் பாக்கியசாலி தான்.

இவர் பல பட்டங்கள்,கௌரவங்கள்,பரிசில்கள் பெற்றுள்ளார்.பல நூறு நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்திருக்கிறார்.

அநேகமாக எல்லா நிகழ்வுகளுக்கும் குடும்பமாகவே செல்வோம்.வவுனியா நிகழ்வுகளுக்கு மட்டுமன்றி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், இந்தியா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பரிசளிப்பு விழா நிகழ்வு வரை என்னையும் அழைத்துச் சென்றிருக்கிறார்.

எல்லா நிகழ்வுகளிலும் இவரது பெருமைகளையும் திறமைகளையும் புகழையும் நேரிலேயே பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போன பாக்கியசாலி நான்.

இவ்வகையான நிகழ்வுகளில் அணிவிக்கப் படும் பொன்னாடைகளும், மாலைகளும் வீட்டில் என்னையும் பிள்ளைகளையும் அலங்கரிக்கும்.யாருக்குக் கிடைக்கும் இப் பெரும் பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமக்களுக்கும், பேரக் குழந்தைக்கும் மட்டுமல்லாது, விழாக்களுக்கு சென்று வரும் காலங்களில் எமது வீட்டில் வந்து இருக்கும் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் கூட மாலை அணிவித்து,பொன்னாடை போர்த்தி அவர்களை உற்சாகப் படுத்தி அழகு பார்ப்பார்.யாருக்கு இப் பெருந்தன்மை வரும்.

இவர் காலையில் எழுத்து வேலையில் ஈடுபடும்போது வீடே அமைதியாகி விடும்.தேநீர் கொண்டுபோய் கொடுக்கும் போது மெதுவாக தேநீர் வைத்ததைத் தெரியப் படுத்த வேண்டும்.இல்லையேல் அத் தேநீர் அப்படியே இருக்கும்.

ஒரு விடயத்தை எழுதும் போது மனதிலேயே ஆயத்தப் படுத்தி வைத்து விடுவார். மூளைக்குள் அத்தனையும் பதிந்து இருக்கும். இவரின் ஞாபக சக்திக்கு நிகர் இவரே தான்.

சில ஆவணங்களை உறுதி செய்வதற்காக குறிப்பிட்ட புத்தகங்களை எடுத்துத் தரும்படி கேட்பார்.எல்லாப் புத்தகங்களும் பெயர் இலக்கம் எழுதி அலுமாரியில் வைக்கப் பட்டிருப்பதால் உடனே எடுத்துக் கொடுத்து விடுவேன். எழுத்தோட்டம் தடைப் படாது தொடரும்.

கட்டுரை, சிறுகதை, நாடகம், ஏன் கவிதைகளைக் கூட இவர் தங்கு தடைஇன்றி மிக வேகமாகச் சொல்லிக் கொண்டே போவார். நானும் அந்த வேகம் சிந்தனை ஓட்டம் தடைப் படாத வகையில் எழுதிக் கொள்வேன். இது ஒரு சுகமான அனுபவம்.

பெரும்பாலும் இவரது ஆக்கங்களின் முதல் வாசகியாக நானிருப்பேன். மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

பலர் இவரிடம் பல இலக்கிய ஆலோசனைகளைப் பெற வருவார்கள். சலிப்பின்றி பல மணி நேரம் நல்ல கருத்துக்களை அறிவுரைகளை இலக்கிய நயங்களை எந்த நூல்களையும் கையில் எடுக்காமல் தங்கு தடையின்றி வழங்குவார்.

மதிய உணவு நேரம், பின் சிறிது நித்திரை செய்யும் நேரம் என தொலைபேசி அழைப்பு மணியோசை ஒலித்துக் கொண்டே இருக்கும்.

மாணவ இளந் தலைமுறையினர் தொடக்கம் முதுபெரும் தமிழறிஞர்கள் வரை கலை, இலக்கியம், சமயம் சார்ந்த பல பாடல்களையும், பல சந்தேகங்களையும் இவரிடம் தொலைபேசியில் கேட்பார்கள். இவரும் உடனேயே உரிய பதில்களைக் கூறுவார்.இதைப் பார்த்து வியப்பேன்.

பல இளைய தலை முறையினரை உற்சாகப் படுத்தி அவர்களது திறமை கண்டு பாராட்டி வளப்படுத்தும் பணியினை செம்மையுடன் செய்து வருகிறார்.

இவரால் வெளியிடப்பட்ட நூல்கள்,தயாரிக்கப்பட்ட மலர்கள், பெற்ற பட்டங்கள், சான்றிதழ்கள், விருதுச் சின்னங்கள்,மாலைகள் எல்லாமே அழகாக பத்திரப் படுத்தி காட்சிப் படுத்தப் பட்டிருக்கின்றன.

வீட்டுக்கு வரும் இளம் தலை முறையினருக்கு இவற்றைக் காட்டி அவர்களுக்கு ஊக்கம் அளித்து உற்சாகப் படுத்துவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் **கந்த புராணம், பிள்ளையார் புராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம்** ஆகிய புராணங்களுக்கு புராண படனம் செய்வது வழக்கம்.

குறிப்பாக வவுனியா கந்தசுவாமி கோவிலில் கந்த சஸ்டி விரத காலத்தில் நிகழும் கந்தபுராண படன நிகழ்வில் இவர், முருகப் பெருமானின் அதி அற்புதமான திருப்பெருவடிவினை அப்படியே கண்முன்னே நிறுத்தும் காட்சி என் மனதை விட்டு ஒரு போதும் நீங்காது. அக்காட்சியைக் காண தவறுவதே இல்லை.

இவர் வாக்குத் தவறியது கிடையாது.நேரக் கட்டுப்பாடுடையவர்.எல்லா நிகழ்வுகளுக்கும் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்கும் பண்புடையவர்.பேச்சொன்றும் செயல் வேறாகவும் வாழ்பவரல்ல.

அண்மையில் வவுனியாவில் ஒரு நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுக்கு தலைமை தாங்கி நடத்த ஒப்புக் கொண்ட பின்,அதே நாளில் இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் நடைபெறுவதாக தகவல் கிடைத்தது. ஆனால் இவர் விருது வாங்கச் செல்லாது அரங்கேற்ற நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். வியப்பான விடயம் தானே.

குடும்ப அந்நியோன்யம்,பண்பாடு நல்ல பழக்க வழக்கங்கள் ,இவைகள் எல்லாம் சொல்லிக் கொடுத்து வருவதை விட இயல்பான பழக்கத்தில் இருந்துதான் அதிகம் வரும்.

எமது பிள்ளைகள் நல்ல முறையில் கல்வி கற்று நல்ல குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டு இருக்கிறார்கள். நல்ல மருமகளும்,நல்ல மருமகனும் வாய்த்திருக்கிறார்கள்.

அவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் சில நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிப்பதைப் பார்க்கும் போது, எமது இல்லற வாழ்க்கை எவ்வளவு அர்த்தமுள்ளதாக அமைந்தது என்பதை உணர்ந்து பூரிப்படைகிறேன்.

கவிதை, கட்டுரை, ஆய்வு, நாடகம், நாட்டிய நாடகம், நாவல், சிறுகதை, இசைப்பாடல், சிறுவர் பாடல், குழந்தைப் பாடல்,சமயம், அறநெறி நூல் பொழிப்புரை, சார்ந்த 43 நூல்களை வெளியிட்டுள்ளார்.

பல பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,மலர்களில் நானூறுக்கும் மேற்பட்ட இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

இலக்கிய,சமய சொற்பொழிவுகள், தொடர் சொற்பொழிவுகள், பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் புராண படனம் எனப் பல நிகழ்வுகளில் பங்கு கொண்டும், பல மன்றங்களில் பல பதவிகளை வகித்தும் சமய, சமூக, கலை இலக்கியப் பணிகளைச் செவ்வனே செய்து வருகிறார்.

இத்தனைக்கும் மத்தியில், நல்ல கணவராக, நல்ல தந்தையாக கண்ணியத்துடன் தனது கடமைகளைச் செய்யத் தவறியதில்லை. எமது குடும்ப உறவு எழு பிறப்புக்கும் தொடரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தது என் தனை கொண்டது உன் தனை சங்கரா யார் கொலோ சதுரர்.." எனும் மணிவாசகப் பெருமானின் கூற்றுக்கிணங்க, **என்னைக் கொடுத்து அவரை எடுத்து** நான் பெற்றதோ பேரின்பப் பெருவாழ்வு. அவர்....

பல்துறை விற்பன்னரும், உத்தம சீலருமான எனது கணவரைப் பெற்றுத் தந்த எனது மாமா, மாமிக்கும், இப்படி ஒருவரை நான் பெற, என்னைப் பெற்றெடுத்த எனது பெற்றோருக்கும் எப்படி நன்றி சொல்ல. வார்த்தை தெரியவில்லை.

மூல காரணனாய் அமைந்த இறைவனுக்கு நன்றி.

---

**இலக்கியச்சரம்** நூலின் அணிந்துரையில், **கலாகீர்த்தி.பேராசிரியர். சி.தில்லைநாதன்** (பேராதனைப் பல்கலைக்கழகம் - 08.12.1999)

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தமக்குள்ள புலமைத்துவத்தின் கண்கொண்டு தமிழ் இலக்கியக் கடலுள் மூழ்கி முத்துக்கள் பலவற்றை எடுத்துத் தானும் சுவைத்து வாசகரையும் சுவைக்கத் தூண்டுகிறார். அதற்கும் ஒரு படி மேலே சென்று வாசகருக்குச் சிரமமில்லாத வகையில் பல உதாரணங்களை எடுத்துக்காட்டுகின்றார். பாடசாலை தொடங்கிப் பல்கலைக்கழகம் வரை தமிழ் இலக்கியப் பயில்வுகள் இடம்பெறுவதால் இத்தகைய முயற்சிகள் அச்செயற்பாடுகளுக்கு உசாத்துணைகளாக அமையக்கூடியனவாகும்.

கணிதத்துறை சார்ந்தவரான தமிழ்மணி அகளங்கன் அவர்கள் சுயகற்றல் முறையினால் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்துள் ஆழ்ந்து திளைப்பவர் என்பதை அவர் முன்பு வெளியிட்ட நூல்கள் புலப்படுத்துகின்றன. அந்தவகையில் அவரது தமிழ் ஆளுமையைப் புலப்படுத்தும் இன்னோர் நூலாக இது அமைகிறது. நிதானமான பக்கசாய்வற்ற அறிவியல் பார்வைகளினூடாக அகளங்கன் போன்றோர் தமிழ் இலக்கியங்களைத் தற்காலத்துக்கேற்ற வகையில் வளப்படுத்துவதை தமிழ் கூறு நல்லுலகம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# தாயிற் சிறந்த கோயிலும் இல்லை. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.

**கலாநிதி.தர்மராஜா அநபாயன்**. *Ph.D (Qut-Aust)*

"ஏதோ மனிதன் பிறந்து விட்டான் அவன் ஏனோ மரம் போல் வளர்ந்து விட்டான்" என்றல்லாமல் "மாபெரும் சபைகளில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும், ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று போற்றிப் புகழ வேண்டும்" எனக் கற்றோரும் மற்றோரும் எண்ணும்படி வாழும் எனது அப்பாவுக்கு மனமார்ந்த மணி விழா வாழ்த்துக்கள். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். எனக்கு எண்ணையும் எழுத்தையும் எடுத்தியம்பிய என் தந்தையை என்னவென்று வாழ்த்த? வணங்குகிறேன்.

மாதா, பிதா, குரு, தெய்வம். ஆனால் எனக்கோ **மாதா,பிதா,பிதா,பிதா.** நல்லதொரு தந்தையாய், குருவாய், குடும்பத் தலைவனாய் எங்களை வழி நடத்தும் நீங்கள் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எனது தேவைகள் என்னவென்று அறிந்து, நான் கேட்கும் முன்னே அவற்றைத் தந்து மகிழ வைக்கும் அப்பா எனக்கன்றி வேறு யாருக்கு அமையும்? என்ன தவம் செய்திட்டேன் உங்கள் மகனாகப் பிறக்க.

நீங்கள், அம்மா, அநிந்தி, நான் நால்வரும் தரையில் இருந்து சாப்பிட்ட நாட்களை மறக்க முடியுமா? நீங்கள் எடுத்துரைத்த கதைகள் தான் எங்கள் வாழ்க்கைப் பாடம். உங்களிடம் வாங்கிய அடிகள் என் வாழ்க்கையின் ஏணிப் படிகள். வறுமையிலும் செம்மையாக வாழக்கற்றுக் கொடுத்தீர்கள். இன்பம், துன்பம் இரண்டையும் சமமாக எண்ணும் மனப்பக்குவத்தைக் கற்றுத்தந்தீர்கள்.

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"**

என வள்ளுவன் உங்களை நினைத்துத் தான் எழுதியிருப்பானோ? நான் இலங்கையில் பட்டப்படிப்பு முடித்து அவுஸ்திரேலியாவில் மேற்படிப்பும் பயின்று தற்போது இங்கிலாந்தில் வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்றால் இவற்றுக்கெல்லாம் மூல காரணம் உங்களது அயராத உழைப்பும் அம்மாவின் வற்றாத அன்பும் தான் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு சிறிய வருமானத்தில் இரு பிள்ளைகளையும் ஒரே நேரத்தில் பல்கலைக்கழகத்தில் எந்தவொரு குறையுமின்றிப் படிக்க வைத்த பெருமை உங்களையே சாரும். நான் துன்பப்படும் தருணங்களில் எல்லாம் வாழ்க்கையின் தாற்பரியத்தை எடுத்துரைத்து "இறக்கம் வந்தால் அதைத் தொடர்ந்து ஏற்றம் ஒன்று உண்டு" என்று என்னைச் சாந்தமடையச் செய்வீர்கள்.

வெளி நாட்டில் வாழும் பிள்ளைகளிடம் தொலைபேசியில் அழைத்து, இத்தனை நாட்களுக்குள் இவ்வளவு பணம் அனுப்ப வேண்டும் என்று நெருக்கடி கொடுக்கும் தாய் தந்தையருக்கு மத்தியில் "தம்பி, உனது தேவைகளை நிறைவேற்றி விட்டு மீதி இருந்தால் மட்டும் பணம் அனுப்பு" என்று உளமாரச் சொல்லும் தாய் தந்தையர் எனக்கன்றி வேறு யாருக்கு அமையும்?

அப்பா,! உங்களது இயற்பெயர், புனைபெயர்களான **தர்மராஜா** மற்றும் **அகளங்கன்** என்பவற்றுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் வாழ்கிறீர்கள். உங்களது வழி நடத்தல், அனுபவம், ஆலோசனைகள் அனைத்தும் எங்கள் வாழ் நாள் முழுதும் வேண்டும் என்று வேண்டி நிற்கிறேன். இறைவனிடம் நான் பிரார்த்திப்பது ஒன்றே ஒன்று தான்,

எத்தனை ஜென்மம் எடுத்தாலும் எனது அப்பா, அம்மா, தங்கை மற்றும் மனைவி மகள் அனைவரும் எனக்கு உறவுகளாகப் பிறக்க வேண்டும் என்பது தான். பல்லாண்டு வாழ்க.

**"தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திர மில்லை."**

அன்பு மகன்

**அநபாயன்**

---

**இலக்கியச் சிமிழ்** நூலின் அணிந்துரையில் **கலாநிதி துரை.மனோகரன் M.A.Ph.D** அவர்கள். (தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

அகளங்கன் என்ற புனைபெயர் கொண்ட நா.தர்மராஜா, கவிஞராகவும், வானொலி நாடக ஆசிரியராகவும், கட்டுரையாளராகவும், ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் வளர்ந்து வருபவர். கட்டுரையாளர் அகளங்கனை தனித்து நோக்குகையில், ஒருவகையில் இரசனையாளராகவும் இன்னொருவகையில் ஆய்வாளராகவும் வாசகர் முன் தோற்றம் தருகின்றார்.

இவர்களுள் என்னை மிகவும் கவர்ந்தவர் ஆய்வாளர் அகளங்கனேயாவர். அவரது **வாலி** என்ற நூலும், **இலக்கியத்தேறல்** என்னும் நூலில் இடம்பெற்றுள்ள **"நக்கீரர் ஒரு விதண்டாவாதி" "திரைப்பாடல்களில் மரபிலக்கியச் செழுமை"** முதலான கட்டுரைகளும் அவரைத் தரமான இலக்கிய ஆய்வாளராக இனங்காட்ட வல்லன. *(1992)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# அம்மா அப்பா அன்றில் பறவைகள்

**திருமதி.கேசவராஜன் அநிந்திதை**
*B.A(Hons) Dip in English (Merit)*

**"அன்பினாலே குடும்பம் நடத்தும்**
**அன்றில் பறவைகள்**
**அம்மா - அப்பா அன்றில் பறவைகள்.."**

**ஆ**ம். அன்பும் பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற பெற்றோருக்கு மகளாய்ப் பிறந்ததையிட்டு முதற்கண் இறைவனுக்குப் பெருமிதத்துடன் நன்றிகூறிக் கொள்கின்றேன்.

அப்பாவின் அகவை அறுபது முடிவடைந்துள்ள தருணத்தில் இம் மணிவிழா மலர் வெளியிடப்படுவதை நினைத்து நான் பூரிப்படைந்து நிற்கின்றேன்.

அப்பா ஆசிரியராக, கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் எனப் பல்துறை விற்பன்னராக, சிறந்த சொற் பொழிவாளராக, பக்திமிக்க புராணபடன வித்தகராக, பட்டிமன்றப் பேச்சாளராக மட்டுமன்றி ஒரு நல்ல குடும்பத் தலைவனாகவும். நல்வழியூட்டும் தந்தையாகவும் விளங்குவது மகிழ்ச்சியளிக்கின்றது. ஏனெனில் **பிரபலங்களில் பலர் நல்ல குடும்பத்தலைவர்களாக இருக்கத் தவறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நல்ல துணை** இருந்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம் என்பதற்கு **அப்பா - அம்மா** சிறந்த முன்னுதாரணம்.

நல்ல இல்லாளாக மட்டுமன்றி, அப்பாவின் ஆக்கங்களுக்கும் சிறந்த துணையாக அன்றும் இன்றும் என்றும் இணைந்து நிற்கும் அன்பின் பிறப்பிடமான என்னுடைய அம்மாவைப் பற்றியும் கூறியே ஆகவேண்டும். "ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்" என்பது போல அப்பாவின் இந்த இலக்கியப் பயணத்திலும் அம்மாவின் ஆதரவு நிழல் போல தொடர்ந்த வண்ணம் இருப்பதை நிதர்சனமாகக் கண்டு பூரிப்படைந்துள்ளேன்.

அப்பாவின் திறமை, கற்பனாசக்தி என்பவை எழுத்துக்களாக மலரும் போது அவற்றின் முதல் இரசிகை அம்மாவே. அப்பா தன்னை மறந்து சரளமாகச் சொல்லச் சொல்ல அம்மா அவற்றை வேகமாகவும் மிகவும் உற்சாகமாகவும் எழுதிச் செல்வதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் கண்டவள் நான். சிறிதும் சலிப்பின்றிப் பொறுமையுடனும் ஆத்மார்த்தமாகவும் அர்ப்பணிப்புடனும் ஆக்கங்களைப் பிரதி செய்தும், நூலுருவாக்கத்தின் போது அச்சுப்பிழை பார்த்தும் (புறூவ்) உந்துசக்தியாகச் செயற்படுவார். மேலும் இலக்கிய ஆர்வலர்களை இன்முகம் காட்டி வரவேற்று விருந்துபசாரம் செய்யும் அம்மாவின் உயரிய தமிழ்ப் பண்பாட்டை அருகிருந்து கண்டதோடு மட்டுமல்லாது அதை ஏற்றவர்கள் சொல்லக் கேட்டும் ஆனந்தப்பட்டிருக்கின்றேன். அப்பாவிற்குக் கிட்டும் பாராட்டுக்கள் **நல்ல இல்லாள்** எனும் வகையில் **அம்மா**விற்கும் பகிரப்படும் என்பதை எண்ணி மனம் புளகாங்கிதம் அடைகின்றது.

வெளியிடங்களில் மேடைப் பேச்சுக்கள், ஆன்மீகச் சொற் பொழிவுகள் தவிர வீட்டிலே ஓய்வு நேரங்களில் அண்ணாவும் நானும் மகாபாரத, இராமாயண, நீதிக் கதைகள் சுவையான சம்பவங்கள் எனப் பலவற்றையும் கேட்டு நல்லதொரு குடும்பப் பின்னணியில் வளர்ந்திருக்கின்றோம் என்பது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமே. அப்பாவிடம் நான் கண்டு இரசித்த விடயம் யாதெனில் ஒரே கதையை மீண்டும் கூறும் போதும் அதைக் கேட்பவர்களுக்கு முதன் முதலாகக் கேட்பது போன்றதான உணர்வைத் தூண்டும் அளவிற்கு மிகவும் சுவாரஸ்யமாக கூறும் பாங்கு. எதையும் எளிதில் பிறர்க்குப் புரியும்படி எடுத்துச் சொல்லும் இயல்பை அப்பாவின் ஆக்கங்களிலும் காணலாம்.

கோயில்களில் சொற்பொழிவாற்றுவதை ஒரு தொழிலாகக் கருதாது தனது ஆத்ம திருப்தியாக ஏற்கும் மனப்பக்குவம் கொண்டுள்ளார். ஒரு முறை ஒரு கோயிலில் அப்பாவின் தொடர் சொற்பொழிவு முடிவு நாளில் கோயில் நிர்வாகம் அவருக்குப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்த போது அவ்விடத்திலேயே அதை மீண்டும் கோயிலுக்காக என வழங்கியதை உடனிருந்து பார்த்து மகிழ்ந்தேன்.

பிறர்க்கு உதவி செய்யும் மனப்பாங்கு, இரக்க குணம் என்பன இயல்பாய் அமையப்பெற்ற அப்பா - அம்மா இருவருக்கும் உயர் கல்வியைத் தொடரமுடியாமல் சிரமப்படும் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும் என்பதில் தாளாத ஆர்வமும் ஆசையும் உண்டு. அப்பா தனிநபராகவும் பிற நிறுவனங்களுடன் இணைந்தும் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சியளிக்கின்றது.

அப்பாவின் ஆக்கங்களில் **அன்றில் பறவைகள், இலக்கியச் சரம், பாரதப் போரில் மீறல்கள்** என்பன! எனக்கு மிகவும் பிடித்தவை. அப்பாவின் கணிதத் துறையில் எனது அண்ணன் மேன்மையான இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைத்துறையை நான் தேர்ந்தெடுத்த போதிலும் அதில் பிரகாசிக்கவில்லை என்பதும் மனதை நெருடுகின்றது. அப்பாவின் அறிவு, திறமை கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமே!

நீதி, நியாயம், நேர்மை எனும் நேர்கோட்டினின்றும் சற்றும் வளைந்து கொடுக்காமல் வாழ்ந்துகொண்டிருக்கும் எனது அப்பா - அம்மா இருவரும் பல்லாண்டு காலம் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# வன்னி மண்ணின் சொத்து

**சைவசிரோமணி.க.ஐயம்பிள்ளை**
ஓய்வு நிலைப் பிரதேச செயலாளர்.

**க**லாநிதி, கலாபூஷணம், தமிழ்மணி அகளங்கன் அவர்கள் அறுபது வயதினை நிறைவு செய்து மணிவிழாக் காணுகின்றாரென்பதையறிந்து பெருமகிழ்வடைகின்றேன். வவுனியா, பம்பைமடு நாகலிங்கம் நல்லம்மா தம்பதியினரின் ஏழாவது பிள்ளையாகப் பிறந்த தருமராசா அவர்கள் இலக்கிய உலகில் 'அகளங்கன்' எனத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். பெற்றோரும் நெருங்கிய உறவினரும் அன்போடு **"சோதி"** என்னும் செல்லப் பெயரால் அழைத்தனர். மூன்று பெயர்களும் மிக அற்புதமாகப் பொருந்தியிருக்கின்றன.

தருமத்தை நிலைநாட்ட நீதிவிடாது நின்றுரைக்கும் வீரராகத் **தருமராசாவாகவும்,** கள்ளங்கபடமற்ற சிந்தனை, சொல், செயல் ஆகியன இணைந்து மறுவின்றி களங்கமின்றி இருப்பதனால் **அகளங்கனாகவும்,** "உள்ளத்திலுண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்! உள்ளத்திலும் வாக்கினிலும் ஒளியுண்டானால் அகத்தது காட்டும் பளிங்கான முகத்தினிலும் காணக்கூடிய ஒளிநிறைந்த செல்லப் பெயரான **சோதியாகவும்** இவர் அமைந்திருப்பது நிதர்சனமான உண்மையாகும்.

1960/61களில் கொழும்பில் பணிபுரிந்த நான் விடுமுறையில் ஊருக்கு வரும்போதெல்லாம் ஒரு நாளைப் பம்பைமடுவில் கழிப்பேன். உறவுகளை ஒன்றிணைத்து உறவுப்பாலமாக விளங்குபவர் தருமராசாவின் அண்ணாவான **பாலு** என்றழைக்கப்படும் **வில்வராசா** அவர்கள். இவர் காரணமாகவே பம்பைமடுவுக்குச் சென்று பழகியபோது இவருடன் இவரது மூத்தசகோதரன் **திரு.நா.சேனாதிராசா** அவர்களதும் இளைய சகோதரனாகிய **அகளங்கன்** அவர்களதும் அறிமுகம் கிடைத்தது. இவர்கள் ஆழமாக நெஞ்சில் இடம்பிடித்துக் கொண்டனர். ஏழுவயது நிறைந்த சிறுவனான சோதியின் துடுக்கான கதைகளும் விவேகமான உரையாடல்களும் அபாரமான நினைவாற்றலும் உள்ளத்தைக் கவர்ந்தன.

மேற்கு நோக்கி பெரிய வீடு, வீட்டுக்கு எதிரில் மால் என்றழைக்கப்படும் தலைவாசல், இரண்டுக்கும் நடுவில் அமைந்த பந்தல், மாலைநேரத்தில் இந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலின் கீழ் தேநீர் அருந்திக் கொண்டே தருமராசாவின் தந்தையார் அமரர் நாகலிங்கம் அண்ணர் அவர்கள் பல சுவாரஸ்யமான தகவல்களைக் கூறுவார். தொடர்ந்து பிள்ளைகளும் தங்கள் கருத்துக்களை வெளிக்கொணர்வர். **அரசியல், சோதிடம், ஆன்மீகம், இலக்கியம்** போன்ற பலதுறைகளில் உரையாடல்கள் தொடரும். இளையமகன் சோதியின் வாயிலிருந்து பாரதக்கதைகள், இராமாயணக் கதைகள், ஈழத்துப் புலவர்கள் பற்றிய கதைகள் பாடல்களுடன் வெளிவரும். சிலவேளைகளில் தந்தையார் விடையறி வினாக்களைத் தொடுக்க தனயன் தகப்பன் சாமியாக மாறுகின்ற சந்தர்ப்பங்களும் சுவையாக இருக்கும். **"நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்"** என்பதற்கு இக்குடும்பமே சான்று என எண்ணிப் பலமுறை உள்ளம் மகிழ்ந்திருக்கின்றேன்.

இதிகாச புராணங்களிலுள்ள இலக்கியச்சுவையை இரைமீட்பதும் புதுப்புதுக் கருத்துக்களை எடுத்தாள்வதும் சோதியின் தந்தையாரின் கருத்தாடலில் முக்கிய அம்சம். அவ்வேளைகளில் அவற்றை மிக உன்னிப்பாகக் கவனித்து அவற்றை உள்வாங்குவதிலும் பாடல்களை விரைவாகப் பாடமாக்குவதிலும் முன்னணி வகித்தவர் சோதியவர்கள். "முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி முந்தித் தாவடி....." எனவரும் முத்துக்குமாரக் கவிராயரின் பாடலைப் பாடிப் பொருள் விரிப்பார். அவரது இனிய மழலை மொழியும் பாடல் சொல்லும் பாணியும் கேட்கக் கேட்கச் சுவைக்கும்.

கிராமத்தில் சோதியாக இருந்தவர் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் தருமராசாவாக வளர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரவேசத்தோடு **அகளங்கனாக** மலர்கிறார். கவியரங்கு, கருத்தரங்கு, கட்டுரை, கவிதை, சிறுகதையெனப் பன்முக இலக்கிய முயற்சிகளில் 'அகளங்கன்' என்னும் பெயர் பரிணமிக்கின்றது. பல்கலைக்கழகக் கல்வியின் பின்னர் ஆசிரியப்பணி தொடங்கிய காலத்தில் அவரது நூல்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன. புதிய போக்கு, எளிய, இனிய நடை, தெளிந்த சிந்தனை, இலக்குமாறாத இலக்கியச் செல்நெறி இவரது படைப்புக்களை இனங்காட்டிக் கொண்டிருக்கின்றன.

இவரது கருத்தாழம் மிக்க பேச்சு, மரபுக்கவிதையை ஒழுங்காகப் பயின்று பெற்ற சிறப்பறிவோடு புதுக்கவிதையை ரசிக்கவும் படைக்கவும் வல்ல ஆற்றல், பலரோடு சேர்ந்து தேர் வடம் பிடிப்பவரைப் போலல்லாது தனக்கெனத் தனியான தடம் பதித்தமை போன்றவற்றால் பலரும் இவரைப் பாராட்டவும் பட்டங்களைச் சூட்டி மகிழவும் காரணமாயமைந்தன. ஆலயங்கள், இலக்கிய அமைப்புக்கள், தமிழ்நாட்டு இலக்கிய மன்றங்கள், ஆதீனங்கள் போன்ற நிறுவனங்கள் காவியமாமணி தொடக்கம் தமிழியல் வித்தகர் வரை பல்வேறு பட்டங்களைத் தாமாகவே முன்வந்து வழங்கி மகிழ்ந்தன. இவர் 43 நூல்களை எழுதி வெளியிட்டதோடு, மேலும் தமிழன்னைக்கு அழகூட்டும் நூல்களைத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கின்றார்.

இவரது அர்ப்பணிப்பான பணிகளும் நூல்களில் செறிந்து காணப்படும் புலமையும் இலங்கை அரசின் இந்து கலாச்சாரத் திணைக்களத்தால் நன்குணரப்பட்டு 1993ல் **"தமிழ்மணி"** என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கக் காரணமாயமைந்தனவெனலாம். இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போன்று 2012ல் இவருக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்த **நடை**, நேர்கொண்ட **பார்வை**, புன்சிரிப்புத் தவழும் **முகம்**, அன்புக்கும், பண்புக்கும், அறிவுக்கும் ஆண்டவனுக்குந் தவிர வேறெவர்க்கும் வணங்கா - குனியாத் **தலை**, ஏற்றதொருகருத்துண்டேல் எடுத்துரைக்கத் தயங்காத **வாய்**, பொருளுக்காக, சொந்தப் புகழுக்காக இறைபுகழ் பேசாத **நா**, மடிப்புக்கலையாத மாறுகரைச் சால்வை யணிந்த - உள்ளத்தால் மட்டுமல்ல, உடலாலும் உயர்ந்த **தோற்றம்,** இவையனைத்தும் பொருந்திய ஓர் உருவமே அகளங்கன் எனலாம்.

கலாநிதி அகளங்கன் தமிழிலக்கிய உலகின் சிறந்ததொரு **முத்து**, வன்னி மண்ணுக்கோர் **சொத்து**, இலக்கிய சமய ஆர்வலர்க்கோர் **கலங்கரை விளக்கம்**, இலக்கியத்தாகங் கொண்டோர்க்குப் பொங்கிவரும் **பூம்புனல்**. இவர் பல்லாண்டு நலமுடனும் வளமுடனும் வாழ்ந்து மேலும் பல நல்ல நூல்களை வெளியிட்டுத் தமிழன்னைக்கு நூலாரஞ் சூட்டி அழகு பார்க்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அவரை உளமார வாழ்த்தி மகிழ்கிறேன்.

வணக்கம்

தெல்லிப்பழை இலக்கிய வட்டத்தின், 1987, 88 களில் ஈழத்தில் வெளிவந்த நூல்கள் ஆய்வில், வாலி பற்றி **வித்துவான் சி.குமாரசாமி B.A**

"நவில்தொறும் நூல்நயம் போலும்" என்பது வள்ளுவன் கண்ட சுவை. அத்தகையதொரு சுவையை அகளங்கனின் வாலி எமக்கு ஊட்டுகிறது.

இதுவரை நிகழ்ந்த வாதங்களில் சுக்கிரீவன் குற்றமற்றவனா? என யாரும் ஆராய முனையவில்லை. நிரபராதியாகவே கொண்டனர். அவனைக் குற்றவாளியாகக் காட்டும் திறன் வியக்கத்தக்கதே.

இராமன் சமாதான முயற்சியில் இறங்கவில்லை என்று இராமன் மீது குற்றம் சுமத்துவதும் புதிய கோணத்தில் ஆராய வைக்கிறது. "மன் அற வேலியைப் படுத்தாய்" என்ற வாலியின் கூற்றே இராமனுக்கு அறம் போதித்தது. "இராவணனிடம் தூது அனுப்பவும்" இராவணனை "இன்று போய் போர்க்கு நாளை வா" எனக் கூறி அனுப்பவும் வைத்தது என்று கூடக் கூறலாம் போலிருக்கிறது." எனக் கூறுமிடங்கள் இலக்கிய இரசிகர்களின் சிந்தனைக்கு விருந்தாகும்.

"வான்மீகி சாதாரண பாத்திரமாகக் காட்டிய வாலியைக் கம்பன் மகாபுருஷனாகக் காட்டிவிட்டான்" எனக் கூறி அதை நிறுவும் முயற்சியில்அகளங்கன் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளார் என்பதற்கையமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# இலக்கியக் கற்பகப் பெரு விருட்சம்

**திரு.செ.சண்முகநாதன்** B.A (சிறப்பு)

## நண்பனும் நானும்

"**சி**லருக்கு நன்றாகச் சிந்திக்கத் தெரியும். ஆனால் சொல்லத் தெரியாது. எழுதத் தெரியாது. கதைக்கவும் கூட தெரியாது. மொத்தமாக, தனது சிந்தனைகளை கருத்துக்களை வெளிப்படுத்தவே தெரியாது." என்ற வசனங்களை ஒரு கட்டுரைத் தொகுப்பில் வாசித்த ஞாபகம். அந்த வகையைச் சேர்ந்த ஒருவன் தான் நானும். தயவு கூர்ந்து இதனை வாசிப்பவர்கள் பொறுமை காத்து மேற்செல்லலாம். எனது கருத்தை மூன்று தலைப்பில் சொல்ல விழைகின்றேன்.

## பல்கலைக் கழகத்தில் எம் நட்பும் பணியும்

இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகத்தில் தர்மராஜா அவர்களுக்கும் எனக்கும் இடையில் வளாகத் தமிழ் மன்றமே பாலமாக அமைந்தது. எமது இரண்டாம் கல்வியாண்டின் **தமிழ் மன்றத் தலைவராக தர்மராஜா** அவர்களும் **செயலாளராக நானும்** மாணவ சகோதரர்களால் ஏகமனதான தேர்வு செய்து எமக்கு நிர்வாக குழுவுடன் கடமைகள் ஒப்படைக்கப்பட்டன **விஞ்ஞான பீடத்தைச்** சேர்ந்த தர்மராஜா அவர்களும், **மனிதப்பண்பியல் பீடத்தைச்** சேர்ந்த நானும் ஒன்றிணைந்து செயற்பட்டோம்.

கடமைகள், கடமைகள் பலவற்றை ஏற்று செயற்படுத்த வேண்டிய சூழலில் அதிஷ்ட வசமாக நல்லூர் திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் திரு. வேலுப்பிள்ளை ஐயாவின் அமைதியான வீட்டின் வாடகை அறை எமக்கு ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தங்கும் அறையாக அமைந்தது. கல்வி, கடமை, பொறுப்பு என்பதை ஏற்பதில் மகிழ்ச்சியான செயல் வேகம். இடைஇடையே கருங்காலிகள். தாக்குப்பிடித்தோம். தாண்டினோம். வேதனைப்பட்டோம். வெறுமனே பட்டத்திற்கும் பதவிக்கும் மட்டுப்படுத்தப்பட்டது பல்கலைக்கழகக் கல்வி என்று இல்லாது, எம் சமூகத்திற்கும், நாட்டிற்கும் அக்கல்வி உயிர் ஊட்ட வேண்டும் என்பதில் உலக பல்கலைக்கழக முன்னோர்கள் பலர் வழிகாட்டிச் சென்றனர். இதனைச் செயற்படுத்த முனைந்த எமக்கு வெற்றியோ தோல்வியோ எம் மன சாட்சிக்குத் தோல்வி இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பல்கலைக்கழக வளாகக் கல்விக் காலத்தில் பல்வேறு சவால்களுக்கும் மனித அவலங்களுக்கும் நாடு முகம் கொடுத்தது. அரசியல் நடத்துவோருக்கு அது பொழுது போக்காக அமைந்தது. மக்களுக்கு உயிர் உடைமை உணர்வாக அமைந்தது. **1977 இன வன்முறை. சிவனு இலட்சுமணன் மலையகத்தில் படுகொலை. கிழக்கின் பாரிய சூறாவளி,** இவை எம் சகோதர மாணவர்கள் மத்தியில் துயரங்கள் ஆகின. யாழ். வவுனியா. திருமலை நகரங்கள் தீக்கு இரையாக்கப்பட்டன. நல்வழியில் தமிழ் மன்றச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பேராசிரியர்கள் நன் மாணவ நண்பர்கள் பேருதவியும் ஆலோசனைகளும் வழங்கினார்கள்.

அரசியலில் இருந்து தூர நின்று அவலங்களையும் அயோக்கியத் தனங்களையும் துணிந்து விமர்சிப்பதில் இருவரும் கைகோர்த்துச் செயற்பட்டதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது மன்ற உறுப்பினராகவும் நண்பனாகவும் வவுனியா கிராமத்தில் பல இன்னல்களை சந்தித்து பல்கலைக்கழக பொருளியலில் சிறப்புப்பட்டம் பெற்று கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளராக இருந்த போது படுகொலை செய்யப்பட்ட ஆசிகுளம் திருவாளர் **தம்பையா** அவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட்டவர்களுள் ஒருவர். அமரர் அமலதாஸ் மிகமுக்கியமானவர். இப்படிப் பலர் வேகமும் விவேகமும் நிறைந்தவர்கள். எமது செயலுக்கு உறுதுணையாக இருந்தனர். நண்பர்களின் பெயர்களைக் குறிப்பிடா விட்டாலும் அவர்கள் எமக்கு உந்து சக்தியாக இருந்தனர்.

**இலக்கியத்தில் நாம் –**

ஒரு "அறை" வாசிகளாக இருந்து கல்வி கற்ற காலத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இலக்கிய சர்ச்சைகள் எம் இடையே எழும். அவற்றில் ஒன்றை நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கைப் பல்கலைக் கழகக் காலத்தில் கௌரவ பட்டங்கள் வழங்கப்பட்டன **பண்டிதமணி ஐயா** அவர்களுக்கும் **கலாநிதிப்** பட்டம் வழங்கப்பட்டது. இதனை அகளங்கன் கடுமையாக விமர்சித்தார். எமக்கிடையில் நீண்ட நேரம் வாக்குவாதம். பண்டிதமணி ஐயாவின் தகுதியை ஒரு கலாநிதிப் பட்டத்தில் அடக்கிவிட முடியுமா? என்பது அகளங்கனின் வாதமாக இருந்தது. ஈற்றில் ஒரு முடிவுக்கு வந்தோம். இந்தப் பட்டத்தால் பண்டிதமணி ஐயாவுக்கு பெருமை சேர்க்கவில்லை. பல்கலைக் கழகம் தான் பெருமைப் பட்டுக்கொள்ள வேண்டும் என்பதே.

பல்வேறு சர்ச்சைகளில் நண்பர்களாகிய நாம் ஒன்றாய் இருந்து விவாதித்து மகிழ்வோம். ஒரு முறை பம்பைமடுவுக்குச் சென்று திரும்பிய நண்பர் பெரிதான கடித உறையை மேசைமீது வைத்தார். பின்னர் இருவரும் அவர் அவர் வேலை. இரவு படுக்கைக்குச் செல்லும் போது அந்தக் கடித உறையை என்னிடம் தந்து "வாசித்துப்பார்" என்றார். அவர் நித்திரை. நான் வாசித்துக் கொண்டிருக்கின்றேன். பின் இரவு 3மணி இருக்கும். ஒரு முறைக்கு இருமுறை வாசித்துப்படித்தும் முடித்து விட்டேன். முதலில் வாசித்தேன். இரண்டாம் தடவை படித்தேன்.

நித்திரை சும்மா விடாது. விடிந்து காலை 9 மணிக்கு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டேன். "அடே! க.பொ.த உயர்தரத்தில், கைகேயி நிறையும் தசரதன் குறையும் என சட்டவாளர் சோமசுந்தரப்பாரதியார் அவர்கள் வாதத்தைப் படித்து மகிழ்ந்த எனக்கு இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது." எனப் பாராட்டி மகிழ்ந்தேன். "நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித மாணவன் தானே. நிறுவல் உன்பங்கு. இப்போது என் பங்கு என்ன? இதை **ஈழ நாட்டில்** போடுவோமா?" என்பது எனது கேள்வி. "போடலாம் என்றால் போடு." அவரது பதில். இதை இலவசமாக எல்லோரும் வாசிக்க வேண்டும் என்பது அவர் கருத்து. சரி பார்க்கலாம்.

எனது உறவினரும் நண்பருமான பத்திரிகையாளர் பண்டத்தரிப்பு நா.மா. கந்தசாமி அவர்கள் ஒருமுறை ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் உயர் திரு கே.பி.எச்.ஹரன் ஐயா அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து கரன் அவர்களாலேயே அறிமுகம் செய்யப்பட்ட உதவி ஆசிரியர் திருவாளர் துரைராஜா ஐயா அவர்களிடம் இக்கட்டுரையை ஒப்படைத்தேன். மாதங்கள் பல கடந்தன. மாதங்கள் எத்தனை. இன்னும் குழந்தை பிறக்கவில்லையே என ஏக்கம். அகளங்கன் என்னிடம் விசாரிக்க "வரும் ஆனால் வரும்" இது என் பதில். வந்தது. உதவி ஆசிரியர் அவர்களால் அக்கட்டுரை படிக்கப்பட்டு அதன் இலக்கிய நயம் குன்றா வண்ணம் தொடர் பந்தி பிரிக்கப்பட்டு அழகாக **"வாலி கொலைச் சரமும் கேள்விச்சரமும்"** என்ற தலைப்பிட்டு ஈழநாட்டில் எட்டுக் கிழமைகள் தொடராக வந்தது.

இன்று மணிவிழாக் காணும் இந்தப் **பெரும் இலக்கியக் கற்பக விருட்சம்** அன்று தந்து நான் இரசித்துச் சுவைத்த அச்சிறுகனி இந்த வாலி. அதன் பெருமை உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே.

வவுனியா அரச அதிபராக இருந்த திருவாளர் K.C.லோகேஸ்வரன் அவர்கள், பண்டார வன்னியன் விழா மலர் அச்சிடுவதற்கான பொறுப்பை மலர்க்குழு உறுப்பினர் தர்மராஜா அவர்களிடம் (அகளங்கன்) வழங்கியிருந்தார். அப்போது நாம் இருவரும் சோகங்களையும் மனச்சுமைகளையும் ஒன்று சேர்ந்து முகம் கொடுத்த காலப்பகுதி. எனினும் அதனைத் தாங்கி மலரை ஒழுங்கமைத்து அச்சிட்டு வெளியிட உதவ அகளங்கன் அவர்களால் முடிந்தது.

இக்காலப் பகுதியில் நண்பனும் நானும் மாதகலில் ஒரு அறிஞர் **மாதகல் கந்தசாமி** அல்லது **பீகிங்கந்தசாமி** அவர்களை ஒரு நூல் நிலையத்தில் சந்தித்த சந்தர்ப்பத்தில் உரையாடலின் நடுவில் "இவரா வாலி எழுதிய அகளங்கன்? இவ்வாறு ஒரு இளைஞரை நான் காண்பது பெருமகிழ்ச்சி. இன்னும் நிறைய எழுத உங்களால் முடியும்." என வாழ்த்தினார். இச்சந்தர்ப்பத்தில் திருவள்ளுவர் பெருமான் தந்த இரு குறள்கள் ஞாபகம் வருகின்றது இவரது தந்தையின் இலக்கிய வாரிசு இவரே தான்.

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**
**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்.**

தந்தை செல்வா அவர்கள் இயற்கை எய்திய போது யாழ் வளாகத் தமிழ் மன்றம் சார்பாக தர்மராஜா அவர்கள் **செல் வா என்று ஆணையிடாய்** என்ற அழியாத ஆவணத்தைக் காணிக்கையாக்கியது இன்னும் பசுமையானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்களாக நாம்

யாழ்ப்பாண வளாகத்தில் நண்பன் தர்மராஜா அவர்களுக்கும் எனக்கும் இடையில் ஏதோ ஒரு இலக்கிய பாசம் அல்லது இலட்சிய பாசம் இருந்திருக்க வேண்டும். இல்லை எனில் அவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் விரும்பிய ஆசை இன்றுவரை (19ஆண்டு வரை) வவுனியாவில் அவர் கண்முன்னே எமக்கு மகிழ்ச்சியாக வாழக்கிடைத்தது. தமிழ்மன்ற நண்பர்களாகத் தொடங்கி உயிர் நண்பர்களாக வாழ்ந்து வருகின்ற மகிழ்ச்சி **நல்லம்மாக்கள்** தந்தவை. எனது தாயாரின் பெயரும் **நல்லம்மா** இவரது தாயாரின் பெயரும் **நல்லம்மாவே மாதா, பிதா, குரு, நண்பர், தெய்வம்** என்பதே நான் உணர்ந்த முது மொழி.

என் நண்பன் ஆருயிர் நண்பா! என விழித்தே கடிதம் எழுதுவான். நானும் அது போலவே. தனது மண வாழ்க்கையில் தன் உயிர்க் காதலியைத் திருமணம் செய்யும் நிகழ்வில் என்னை பதிவின் சாட்சியாக முன்னிலைப்படுத்தி மகிழ்ந்து கொண்டான். அன்றில் இருந்து ஆருயிர் நண்பா! என விழித்து கடிதம் எழுதுவதை நிறுத்திக்கொண்டேன். அவனுக்கு ஆருயிரே ஓர் உயிராகி விட்டதே.

ஆசான் நாகலிங்கம் உமிழ்ந்த நாக இரத்தினம் ஊற்றாகி, ஆறாகி, பெரு நதியாகி தன் இரு மருங்கிலும் இலக்கியப் படைப்புக்களான மணிகளையும், வைரங்களையும், வைடூரியங்களையும் தமிழ் கூறு இலக்கிய நெஞ்சங்களுக்குத் தந்து, தமிழ்க் கடலில் மூழ்கி முத்தெடுக்கும் **முத்தமிழ்ப் பேராசான்** தன் நிகரில்லா ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளி கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் மணி விழா நாளில் தமிழ் இலக்கிய நெஞ்சங்களுடன் இணைந்து வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

---

**"மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்"** நூலின் அணிந்துரையில், **கலாநிதி க.அருணாசலம்** அவர்கள் (முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

பேச்சாளராகவும், கவிஞனாகவும், எழுத்தாளனாகவும், ஆய்வாளனாகவும், பன்னூல் ஆசிரியனாகவும், இளைஞனாகவும் விளங்கும் திரு.அகளங்கன் அவர்களும் பாரதியியல் பற்றிய ஆய்வுமுயற்சியில் தமது பங்களிப்பாக இந்நூலை எழுதியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

பாரதியைப் பற்றித் தரமான ஆய்வு நூல்கள், பல ஆய்வு நூ ல்கள் வெளிவந்துள்ளனவேனும், சாதாரண மக்களும், பாடசாலை, கல்லூரி மாணவர்களும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய நூல்கள் எண்ணிக்கையிற் குறைவே. இந்நூல் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகவும் இலகுநடையிலும் அமைந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.(1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# பல் பரிமாண ஆளுமையின் விருட்சம்

**பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா**

*பசுமை நினைவுகள்*
*நினைக்க நினைக்க இனிக்கிறது...*
*மாணவப் பருவம் மகத்தானது என்பர்.*
*பல்கலைக்கழக மாணவனாக நான் இருந்த நாட்களை நினைக்கிறேன். இனிக்கிறது.*
*அந்த இனிமையான நினைவுகள் இந்த வயதிலும் இளமையைத் தருகின்றன.*
*1976 ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் நாள்...*
*எனது பாதங்கள் முதன்முதலாக யாழ்ப்பாண வளாகத்துள் பதிகிறது.*
*அன்று பதிந்த பாதங்கள் 2012 ஆம் ஆண்டு மார்கழி வரை அந்தப் பூமியிலே உலாவந்தது.*
*பரமேஸ்வராக்கல்லூரி என்ற சைவத்தமிழ் உலகின் கலைக்கோயில் இன்று யாழ்ப்பாண வளாகமாக உயர்ந்து நிற்கிறது.*
*முன்னொருபோதும் நான் பரமேஸ்வராவைப் பார்த்ததில்லை. கரவெட்டியிலே - ஒரு சிறு கிராமத்திலே பிறந்தவன்.*
*கிராமத்துத் தமிழ்ப்பள்ளிக்கூடத்திலே படித்தவன்.*
*நவீனத்துவம் எட்டிக்கூடப்பாராத கிராமம் எங்கள் கிராமம்.*
*வளாகத்தின் உயர்ந்த கட்டிடங்கள், ஓங்கி வளர்ந்த மலைவேம்புகள்.*
*தமிழ், சிங்கள, இஸ்லாமிய மாணவர்கள்.*
*அவை அச்சம் கலந்ததோர் ஆனந்தத்தைத் தந்தன.*
*இங்கேதான் படிக்கப்போகிறோம் என்ற பெருமிதத்தை, எப்படிப் படிக்கப்போகிறோம் என்ற எண்ணத்திரை மூடிக்கொண்டது.*
*நினைவுகள் நீளுகின்றன....*
*பேராசிரியர்களான கைலாசபதி, இந்திரபாலா, ரொனி இராஜரத்தினம், வித்தியானந்தன் முதலான ஜாம்பவான்கள்.*
*ஆங்கிலம் தவழும் அவர்களது உரையாடல் அச்சத்தை அதிகரிக்கச் செய்தது.*
*நாள்கள் சில கழிகின்றன. அச்சூழலுடன் ஒத்துப்போகப் பழகிக்கொண்டேன்.*
*நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் பேராசிரியர் சண்முகதாஸ் வாய்த்தார்.*
*அந்த நாள்களிலேதான் தருமராசா (அகளங்கன்) எனக்கு நண்பனாகின்றார்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமராசா விஞ்ஞான பீடத்திலே கணிதத்துறையைச் சிறப்பாகப் பயின்று கொண்டிருந்தார்.

விஞ்ஞானபீடம், கலைப்பீடம், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எல்லோரும் புரிந்துணர்வுடன் அன்பாகப் பழகிய காலம் அந்தக்காலம்.

தருமராசாவைக் கலைப்பீடத்திலே அடிக்கடி காணலாம்.

தருமராசாவின் காதலி பூரணேஸ்வரி எமது சகமாணவி. அவர் பொருளியலைச் சிறப்புப் பாடமாகப் பயின்றார்.

கலைப்பீட மாணவிகள் அழகாகச் சேலை உடுத்துத்தான் வருவார்கள்.

விஞ்ஞானபீட மாணவர்கள் பலர் கலைப்பீட மாணவிகளைக் காதலித்தனர்.

பொது நிகழ்வுகள், கவியரங்குகள், பட்டிமன்றம், நாடகம் யாவும் ஒன்றாகவே நிகழும்.

இந்த நிகழ்வுகளிலெல்லாம் **"தலைச்சானாக"**த் தருமராசாவே இருப்பார்.

**தலைவர், கலைஞர், பேச்சாளர், நடிகர்** என அவரது பல்பரிமாண ஆளுமை மாணவப் பருவத்திலேயே வெளிப்படத் தொடங்கிவிட்டது.

கரவறியா நெஞ்சோடு கலகலப்பாகப் பேசுவார், பழகுவார்.

அவர் சிரிக்கும்போது அவரது உள்ளத்தின் ஒலியே தெரியும். நெஞ்சைத் திறந்து வாயாற் சிரிப்பார்.

இதனால் தருமராசாவின் நட்புறவு எனக்குப் பலமான அத்திவாரமாக அமைந்தது.

அன்று தொட்டு இன்று வரை அந்த இனிய நட்புத் தொடருகிறது.

எழுதவேண்டும், பேசவேண்டும், இலக்கியச் சாதனை புரியவேண்டும் என்ற வேட்கை அவரிடம் அப்போதே காணப்பட்டது.

மாணவப் பருவத்திலேயே கவிதைத் தொகுதியொன்றை வெளியிட்டார்.

அதிலே "காதல்" பற்றிய எனது கவிதையொன்றும் இடம்பெற்றது.

மரபுவழி இலக்கிய ஆளுமையும் நவீன இலக்கியப் பரிச்சயமும் உடைய தருமராசா மரபுவழி இலக்கியங்களுக்கே முதன்மை கொடுத்தார்.

மரபுவழித் தமிழிலக்கிய ஈடுபாடுடைய நானும் அவரும் இணைவது இயல்பாய் அமைந்துவிட்டது.

தருமராசாவும் நானும் பல்கலைக்கழகத்தை, நூலகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டோம்.

ஒருநாள் தருமராசாவும் நானும் பேசிக்கொண்டிருக்கும் போது சிரித்திரன் சிவஞானசுந்தரத்தின் கதை வந்தது.

பழங்கவிதை முதல் புதுக்கவிதை வரைதான் பெரும்பாலும் எமது உரையாடல் அமையும்.

நகைச்சுவையுடன் பேசவும் நகைச்சுவையை இரசிக்கவும் தெரிந்த தருமராசாவைச் சிரித்திரன் ஆசிரியருக்கு அறிமுகம் செய்ய விரும்பினேன்.

சிரித்திரன் எனது இனிய நண்பர்.

எனது ஊரவர்.

இலங்கைத் தமிழருக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்க்கு நகைச்சுவையூடு பல செய்திகளைச் சொன்னவர்.

யாழ்ப்பாணத்து மொழியை, பண்பாட்டை இலக்கியமாக்கியவர்.

தருமராசாவை அழைத்துச்சென்று சிரித்திரன் சிவஞானசுந்தரத்திற்கு அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வைத்தேன்.

தருமராசாவை அவருக்குப் பிடித்துக்கொண்டது.

அவரைத் தருமராசாவுக்கும் பிடித்துக்கொண்டது.

"இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர்"

சிரித்திரனின் பிரதான எழுத்தாளராகத் தருமராசா விளங்கினார்.

கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல் என்ற பலதுறைகளிலும் நாம் இருவரும் இணைந்து செயற்பட்டோம்.

நாமிருவரும் கலந்துகொள்ளாத நிகழ்ச்சி அந்தக்காலத்திலே வளாகத்தில் இல்லையெனலாம்.

தமிழரசுத் தந்தை செல்வநாயகம் இறந்தபோது அகளங்கன் நீண்டதொரு இரங்கற் கவிதையை எழுதினார்.

"செல் - வா என்று ஆணையிடாய்" என்பது அதன் தலைப்பு.

செல்வாவின் மரண ஊர்வலம் காங்கேசன்துறையிலிருந்து யாழ்நகர் வரை நடைபெற்றது.

மரண ஊர்வலத்தில் நானே அந்தக் கவிதையை வாசித்துக்கொண்டு வந்தேன்.

ரி.எம். சௌந்தரராஜனின் பாடலும் சிவாஜிகணேசனின் நடிப்பும் பொருந்தியது போல அந்த நிகழ்வு அமைந்தது.

வீதி இருமருங்கும் கூடியிருந்தவர்கள் கண்ணீர் சிந்தினர்.

தருமராசா "அகளங்கன்" ஆக ஈழத்து இலக்கிய வரலாறு புதியதொரு ஆளுமையைப் பிரசவித்தது.

கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஆய்வு, பிரசங்கம் என விரியும் **பல்பரிமாண ஆளுமையின் விருட்சமாக** அவர் நம்மிடையே இன்று விளங்குகின்றார்.

இலக்கிய உலகில் அவரது சுவடுகள் ஆழமாகப் பதிந்தன - பதிகின்றன.

அகளங்கனுக்கு நல்லதொரு புலமைப்பின்னணி உண்டு. சோதிடம், வைத்தியம், இலக்கிய இலக்கணம் அவருக்குப் பிதிராஜ்ஜித சொத்து.

அவரது தந்தையார் பம்பைமடு நாகலிங்கத்தை அறியாதவர்கள் வவுனியாவில் இருக்கமுடியாது.

**நாகலிங்கத்தார் இருமும் போதும் தும்மும் போதும் இலக்கிய இலக்கணங்களே சிந்தும்.**

ஒருமுறை அவரைக் கண்டிருக்கிறேன்.

**"முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும்"** அகளங்கன் ஒரு பாலம்.

அந்தப் பாலத்தை வடிவமைத்தவர் நாகலிங்கம்தான்.

அவரது மனைவி பூரணேஸ்வரி, தான் ஒரு பொருளியற் சிறப்புப் பட்டதாரி என்பதை மறந்தே பலநாள் ஆகியிருக்கும்.

"காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து" வாழ்கின்ற பூரணேஸ்வரியும் தருமராசாவும் மாதொருபாகன் போல.

என்றும் குன்றா இளமையுடனும் குறையா ஊக்கத்துடனும் அவர்கள் வாழ எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# 'களங்கமற்ற நெஞ்சினர் – எனது நெஞ்சுக்கு நெருக்கமானவர்'

**கலாநிதி.நா.சுப்பிரமணிய ஐயர் (கனடா)**

மணிவிழாக் காணும் நண்பர் அகளங்கன் அவர்களுக்கும் அவருடைய துணைவியார், பிள்ளைகள் மற்றும் விழாவை முன்னெடுக்கும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் அன்பு வாழ்த்துகள். இம்மங்கல நிகழ்வு சிறப்புற அமைய இறையருளை வேண்டிநிற்கிறேன், அதே வேளையிலே அகளங்கன் அவர்களுடன் எனக்குள்ள தொடர்பு சார்ந்த பசுமையான நினைவுகளிற் சிலவற்றை இவ்விடத்தில் பதிவுசெய்ய எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பை எண்ணி மகிழ்கிறேன்.

அகளங்கன் அவர்களுக்கும் எனக்குமுள்ள உறவின் வயது 39 ஆண்டுகள் என்பது எனது கணிப்பு. அவர் எனக்கு அறிமுகமான அந்நாள் ஓரளவு நினைவுக்கு வருகின்றது. குறிப்பாக, 1975-76 காலப்பகுதியில் ஒருநாள், அது. அப்பொழுது இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் (இவ்வளாகமே பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆயிற்று.) நான் இளந்துணை நூலகர் என்ற (Junior Asst.Librarian) பணியில் இருந்தேன். அந்நாளிலே அப்பொழுது வரலாற்றுத் துறையில் பயின்று கொண்டிருந்த எனது நண்பர் மு.திருநாவுக்கரசு அவர்கள் ஒரு இளைஞரை என்னிடம் அழைத்துவந்து,

"சேர்! இவர் உங்கள் பிரதேசத்தவர். பெயர் தர்மராஜா, புனைபெயர் அகளங்கன், ஊர் பம்பைமடு. உங்களைப் போல இவரும் தமிழ் நன்றாய்ப் படிச்சவர். பேராதனையிலை உங்களோடை படிச்ச பம்பைமடுத் தியாகராஜாவுடைய தம்பி. இங்க சயன்ஸ் படிக்கிறார். உங்களோடை கதைக்க வேணுமெண்டவர்"

எனக்கூறி அறிமுகம் செய்துவைத்தார். புன்முறுவலுடன் என் கையைப் பற்றினார் அகளங்கன். எனது பிரதேசம் என திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டது வன்னிப் பிரதேசத்தையேயாகும். நான் முல்லைத்தீவைச் சார்ந்துள்ளதான முள்ளியவளைக் கிராமத்தவன். அவர் வவுனியா சார்ந்ததான பம்பைமடு கிராமத்தவர். இரண்டுமே "வன்னி" பொது அடையாளத்துக்குள் அமைந்தனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய முதல் அறிமுகத்திலேயே எனக்கு அகளங்கனைப் பிடித்துப்போயிற்று. அதற்கான காரணங்கள் பல. அவற்றுள் ஒன்று, பிரதேசப்பற்று என்று சொல்லலாம். இன்னொன்று, அவர் பேராதனையில் நான் பயின்ற காலகட்டத்தில்(1966-69) பயின்ற நண்பரின் தம்பி என்பதான உறவுநிலை எனலாம்.

இவற்றுக்கு மேலாக அன்று அவரிடம் எனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்திய ஒன்று அவரது தமிழிலக்கியப் பயிற்சி மற்றும் அவற்றின் பின்புலமான பண்பாட்டு உணர்வுநிலை என்பனவாகும். முதற்சந்திப்பின்பொழுதே அவர், **சங்கப்பாடல்கள், சிலப்பதிகாரம் கம்பராமாயணம் ,வில்லி பாரதம், கந்தபுராணம் கலிங்கத்துப்பரணி** முதலியவற்றின் சுவைமிக்க பாடல்களை நிவில் மீட்டு எனது நெஞ்சத்தை நிறைவித்தார். **"கலைப்பீட மாணவராகித் தமிழ்த்துறையில் சிறப்புப் பட்டத்துக்குப் பயின்றிருக்க வேண்டிய ஒருவர் அறிவியல் பீடத்துக்கு ஏன் போனார்?"** என்ற வினாவே அன்று என்னுள்ளத்தில் எழுந்தது.

அடுத்து, அவரிடம் எனக்கு மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்திய முக்கிய அம்சம், "அகளங்கன்" என்ற அவருடைய புனைபெயர் ஆகும். இந்தியப் பாரம்பரியத்திலும் பண்டைத்தமிழ் பண்பாட்டிலும் உறுதியான காலூன்றிநிற்பவர் அவர் என்பதை இப்புனைபெயர் தெளிவாகவே அடையாளப்படுத்திநின்றது. **"களங்கம் அற்றவன்** - அதாவது எவ்வகைக் குறைபாடுகளும் இல்லாதவன்" - என்பதான பொருள்தந்துநிற்கும் இப்புனை பெயரானது புத்தபிரானின் திருநாமங்களிலொன்றாகவும் திகழ்வது.(திவாகர நிகண்டு:12:21) தமிழகத்தின் பெரு மன்னர்களிலொருவனாகத் திகழ்ந்த முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070-1122) விருதுப் பெயர்களிலொன்றாகவும் இது திகழ்ந்துளது.(கலிங்கத்துப்பரணி:219). இவ்வாறான பண்பாட்டுப் பெருமைமிக்க பெயரை நா.தர்மராஜா அவர்கள் தனது புனைபெயராகக் கொண்டுள்ளார் என்பதை அறிந்தவுடனே இயல்பாகவே எனக்கு அவர்மீது ஒரு மரியாதை ஏற்பட்டது. அவருடன் பழகியபோது அப்புனைபெயருக்குப் பொருத்தமானவரே,அவர் என்பதையும் நான் தெளிந்துகொண்டேன்.

மேற்படி முதற் சந்திப்பை அடுத்து அவர் அடிக்கடி என்னைத் தேடி நூலகம் வந்தார். இலக்கிய நிலையிலான எமது உரையாடல்கள் தொடர்ந்தன. இதன் அடுத்த கட்டமாக யாழ்.மண்ணின் இலக்கிய மேடைகளில் நாம் இணைந்து இயங்கத் தொடங்கினோம். உரையரங்கம், பட்டிமன்றம் முதலான வற்றில் பங்குகொண்டோம். அகளங்கனுடன் எனக்கு ஏற்பட்ட தோழமையுறவின் முதல் அத்தியாயம் இதுதான்.

இவ்வாறு அகளங்கன் அவர்களுடன் நான் கொண்டிருந்த உறவானது அடுத்த சில மாதங்களில் மேலும் நெருக்கமானதாகி நிலைபெற்றது. இவ்வாறான நிலைபேற்றுக்குக் காரணமாக அமைந்தனவாகிய அவரது ஆளுமையம்சங்களில் இரண்டை மட்டும் இங்கு நினைவில் மீட்க விழைகின்றேன்.

மேற்படி ஆளுமையம்சங்களில் ஒன்று, அவர் மாணவர் மத்தியில், "தமிழ்உணர்வை முன்னெடுக்கும் ஒருவராகத் தன்னை வெளிப்படையாக இனங்காட்டிக்கொண்டமை" யாகும்.குறிப்பாக, தமிழரின் இனவுணர்வு சார்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக் குரலை அவர் அன்று பல்கலைக்கழக மாணவர் மத்தியில் ஓங்கியொலித்தார். அதன் தொடர்ச்சியாக மாணவர் இயக்கங்களில் பங்கேற்று, அவற்றை வழிநடத்தும் தலைமைப் பொறுப்புகளையும் கூட அவர் வகித்துள்ளார். இது அவர் மீது எனக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியது. காரணம் அன்றைய-1977இன் முற்பகுதி வரையான- யாழ். வளாகச் சூழலில் தமிழ் இன உணர்வை வெளிப்படுத்துவது ஒரு பிற்போக்குத்தனம் என்பதான பொதுவான கருத்தோட்டம் நிலவியமையேயாகும். சிங்கள மாணவர்களும் யாழ். வளாகத்தில் பயின்றுவந்த அன்றைய சூழலில் தமிழ் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களில் ஒரு சாராரும் வளாகத்தின் தலைமைப்பொறுப்புகளிலிருந்தோரும் தமிழ்இனவுணர்வானது தேசிய ஒருமைப்பாட்டுணர்வுக்குத் தடையானது என்ற மனநிலை கொண்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும். அவ்வகையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் உண்மையான சொருபத்தைஇனங்காண அவர்கள் மறுத்தார்கள என்பதே அன்றைய வரலாற்றுண்மையாகும்.

மேற்படி பேரினவாதசொருபத்தை இனங்கண்டவர்களுள் ஒருசார் மாணவர்களும் ஆசிரியர்களுங்கூட, "சிங்கள இனவாதம் பற்றி வெளிப்படையாகப் பேசினால் தம்மையும் பிற்போக்குவாதி என முத்திரை பதித்துவிடுவார்களோ" என்ற அச்சத்துடன் மௌனமாக அடங்கிநின்றனர். ஆனால் மாணவர்களுட் பெரும்பாலானோர் மத்தியில் தமிழின உணர்வானது கொழுந்துவிட்டுக்கொண்டிருந்தது என்பதே அன்றைய சூழலின் யதார்த்தம்.

இவ்வாறான அன்றைய சூழலின் மனவோட்டங்கள் பற்றி அன்று வளாகத்தினுள்ளேயும் புறத்தேயும் நேரடியாகவும் மேடைகளிலும் வெளிப்படையாகவே விமர்சித்து வந்தவன் யான். தேசியம் என்பதான மாயமானைத் தொடர்வதை விடுத்து, சூழலின் யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டும் என அன்று நான் பல தளங்களில் பேசிவந்துள்ளேன். அவ்வகையில், அகளங்கன் அவர்கள் அன்றைய சூழலின் யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்டவராக எனக்குத் தெரிந்தார். அதனால் அவரது தமிழ் உணர்வை முன்னெடுப்பதான உணர்வுநிலை மற்றும் மாணவர் இயக்கநிலைச் செயற்பாடுகள் என்பன எனக்கு மிக்க மனநிறைவைத் தருவனவாக அமைந்தன. எனது சமூக-அரசியல் நோக்குகளை விவாதிக்கவும் வளர்த்தெடுக்கவும் ஏற்ற நல்லதொரு தோழமை கிட்டியதென்ற மனநிறைவை நான் எய்தினேன்.

இவ்வாறாக, அகளங்கன் அவர்களுடனான எனது நட்பானது நெருக்கமானதற்கான முதலாவது முக்கிய காரணியாக அவருடைய இந்த சமூக-அரசியல் ஆளுமையம்சம் அமைந்தது.

இத்தொடர்பில் மேலும் ஒரு குறிப்பு : அன்றைய யாழ்வளாக மாணவர் மத்தியிலே, அகளங்கன் அவர்களைப்போல வேறுசில மாணவ நண்பர்களும் தமிழ்இன உணர்வுசார்ந்து வெளிப்படையாக இயங்கிநின்றனர். அடிக்கடி நாம் ஒன்றுசேர்ந்து விவாதங்கள் நிகழ்த்திய நாள்கள் நினைவில் மீள்கின்றன. அவர்களுள் ஒருசாரார் ஆயுதப் போராட்ட இயக்கங்களுள் தம்மை ஐக்கியப்படுத் திக்கொண்டவர்களுமாவர். அத்தகையவர்களின் இங்கு குறிப்படுவது இன்றைய அரசியற் சூழலில் நன்மை பயப்பதாக அமையாது என்பதால் அம்முயற்சியை இங்கு தவிர்த்துக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன் அவர்களுடனான எனது நட்பானது மேலும் நெருக்கமடையக் காரணமாக அமைந்த அவருடைய ஆளுமையம்சம் அவருடைய தோழமை பேணும் தூய உளப்பாங்கு ஆகும். நாம் பலருடன் நட்புறவு கொள்கிறோம். அவருள் சிலருடன்தான் தோழமையுறவு கொள்கிறோம். அவர்களிலும் குறிப்பாக மிகச் சிலரிடம்தான் எம்மால் "முகமூடி தரிக்காமல்" மனந்திறந்து பேசமுடிகிறது. எனக்கு அன்றைய காலகட்டத்தில் (1975-1980 காலப்பகுதியில்) அவ்வாறு மனந்திறந்து பேசக்கிடைத்த தோழர்களிலொருவராகத் திகழ்ந்திருந்தவர், அகளங்கன் அவர்கள். அன்றைய சூழலில் என்னைப் பீடித்திருந்த மனத்துயரொன்றுக்கு மருந்து தடவிய மிகச் சிலருள் ஒருவர், அவர். அது பற்றிய ஒரு குறிப்பு வருமாறு:

யாழ்.வளாகத்திலே தமிழ்த்துறை அல்லது இந்து நாகரிகத்துறை ஆகியவற்றுள் ஒன்றில் ஆசிரியனாக, விரிவுரையாளனாக விளங்கவேண்டும் என்பது எனது நீண்டநாளைய வேணவா. அப் பணிகளை ஆற்றுவதற்கான கல்வித்தகைமை மற்றும் அநுபவநிலைசார் தகைமை என்பன என்னிடம் அன்று நிறைவாகவே இருந்தன. ஆனால், அன்றைய காலகட்டத்தில் யாழ். வளாகத்திலே அவ்வத் துறைகளின் தலைமைப் பொறுப்புகளிலிருந்தோருக்கு நான் உவப்பானவனாக இருக்கவில்லை. எனவேதான் அவர்கள் என்னைத் திட்டமிட்டே புறக்கணித்திருந்தனர். (எனது கல்வித் தகைமைகளைப் புறந்தள்ளமுடியாத நிலையிலே, ஒரு மாற்றுத் திட்டமாகவே எனக்கு அன்று யாழ். வளாகத்தால் நூலகப்பணி வழங்கப்பட்டிருந்தது.)

நூலகப் பணி எனக்கு உவப்பானதாக அமைந்திருக்கவில்லை. எனது நீண்டநாள் ஆசையான விரிவுரைப் பணியைப் பெற நான் பலமுறை தொடர்ந்து விண்ணப்பித்துவந்தேன். ஒவ்வொரு முறையும் நேர்முகத் தேர்வுகளில் எனக்குத் தோல்வியே கிடைத்தது. இவ்வாறான தோல்விகளால் நான் மனமொடிந்த சந்தர்ப் பங்களில் கலங்கிநின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் "நெஞ்சுக்கு நெருக்கமானவர்" என்ற உரிமையுடன் அகளங்கனுடன் உரையாடுவேன். அச்சந்தர்ப் பங்களில் அவர் தனது இனிய வார்த்தைகளால் ஆறுதலளிப்பதோடு,

"ஐயா! நீங்கள் நிச்சயம் விரிவுரையாளராக ஆவீர்கள், பேராசிரியராகவும் ஆவீர்கள்"

எனக்கூறி உற்சாகமும் நம்பிக்கையும் ஊட்டுவார். வார்த்தைகளில் ஆறுதல் கூறுவதோடமையாமல் எனது ஜாதகத்தையும் அடிக்கடி நினைவூட்டுவார். அகளங்கனவர்கள் **சோதிடக் கலையிலும் புலமை பெற்றவர்** என்பது இங்கு பதிவுபெற வேண்டிய முக்கிய செய்தியாகும். எனக்கும் அத்துறையில் ஈடுபாடுள்ளமையால் அவரது வார்த்தைகள் எனக்கு நம்பிக்கையளிப்பனவாகவே அமைந்தன. தோல்விகள் கண்டு துவளாது தொடர்ந்து அத்துறைகளுக்குள் அடிபதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தேன்.

அவரது மேற்படி வாக்கு பின்னாளில் பலித்தது. வளாகத்தின் அதிகார பீடங்களில் மாறுதல்கள் நிகழ்ந்தன. நான் தமிழ்த்துறையின் ஆசிரியப்பணியிற் சேர்ந்தேன். துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர் ஆகிய நிலைகள் வரை வளர்ந்தேன்.இவை பலரும் அறிந்த செய்திகள். அவைபற்றி விளக்கங்கள் இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் எனநான் கருதவில்லை. இங்கே நான் சொல்லவந்த விடயம், மனந்திறந்து உரையாடுவதற்குரிய நம்பகமான ஒரு தோழராகவும் எனது வாழ்க்கையின் முக்கிய திசைமாற்றத்தைத் தெளிவாக அறிவுறுத்தி ஊக்கமுடன் இயங்கவைத்த ஒருவராகவும் அகளங்கன் அவர்கள் திகழ்ந்துள்ளார் என்பதேயாகும்.

இவ்வாறான அகளங்கன் அவர்களுடனான எனது தொடர்பானது அவர் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவுசெய்ததன் பின்னரும் பல ஆண்டுகள் தொடர்ந்தது. அவருடைய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்த **இலக்கியத் தேறல்** (1988)என்ற நூலாக்கத்துக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இத்தொடர்பிலே அகளங்கன் அவர்களின் "இலக்கியப் பார்வை" யில் என்னைக் கவர்ந்த ஒரு அம்சத்தை மட்டும் சுருக்கமாகச் சுட்ட விழைகின்றேன்.

பண்டைய இலக்கியப்பரப்பிலே, சிந்தனைத் தெளிவிற்குரியனவும் விவாதநிலை சார்ந்தனவுமான கட்டங்களை நுனித்து நோக்கி அவற்றை மீள்பார்வைக்கு உட்படுத்துவதான அணுகுமுறையை மேற்கொண்டிருந்தவர், அவர். இவ்வகையில் அவர் பலப்படுத்திய பார்வைகளில் குறிப்பாக நக்கீரர் என்ற தமிழ்ப்பெரும்புலவர் தொடர்பாக அவர் முன்வைத்த சிந்தனை என்னை மிகவும் கவர்ந்த ஒன்று.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலே "தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்திலே" இறையனாராகிய சிவபிரானுக்கும் பாண்டிய மன்னரின் அவைப்புலவரான நக்கீரருக்கம் ஒரு விவாதம் நிகழும். "பெண்களது கூந்தலுக்கு இயற்கை வாசமுளது" என்பது சிவனாரின் வாதம்.

"பெண்களது கூந்தலுக்கு இயற்கையான வாசம் இல்லை. மலர்களைச் சூடுவதாலாயே அது வாசமுடையதாகிறது. எனவே இல்லாதஒன்றை இருப்பதாக இப்பாடல் கூறியுள்ளமை பொருட்குற்றமாகும். என்பதே நக்கீருடைய வாதமாகும்.

சிவனார் கருத்தை நிலைநாட்ட முற்பட்ட நிலையிலே ஒருகட்டத்தில், தான் இறைவனே என உணர்த்துவதற்காக தனது நெற்றிக்கண்ணைக் காட்டினார். வந்திருப்பவர் சிவபிரானே என்பதைத் தெரிந்துகொண்டபின்னரும்கூட நக்கீரர் கொள்கைப் பிடிப்புடன் நின்று,

"நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" எனக்கூறி எதிர்வாதம் நிகழ்த்துகிறார்.

சிவாஜிகணேசன், நாகேஷ் முதலியோரின் நடிப்பிலே ஏ.பி. நாகராஜன் இயக்கியதிருவிளையாடல் என்ற திரைப்படத்தில் இவ்விவாதக் காட்சியைப் பலரும் பார்த்து ரசித்திருப்பர்.

நக்கீரரின் மேற்படி நிலைப்பாடானது தமிழ்த் திறனாய்வு வரலாற்றிலே தனிக்கவனத்தைப் பெற்றதொன்றாகும். குறிப்பாக, தமிழ் விமர்சன மரபின் அஞ்சாமைக்குச் சான்றாக "அதாவது" "இறைவனே நேரில்வந்து நெற்றிக்கண்ணைக்காட்டி அச்சுறுத்தினாலும் உண்மையை ஓங்கியொலிப்பதான துணிவு" க்குச் சான்றாக இது பலராலும் எடுத்துப் பேசப்பட்டுவருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையிலே, "நக்கீரர் அஞ்சாமையுடன் வாதிட்டார்" என்பது மட்டும்தான் திறனாய்வு நோக்கில் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய அம்சமாகும். அதற்குமேல் நக்கீரர் நிகழ்த்திய விவாதத்தின் பொருண்மை பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போமானால் அது **ஒரு விதண்டாவாதம்** என்ற முடிவுக்கே நாம் வரநேரும். நக்கீரர் நிகழ்த்தியது ஒரு விதண்டாவாதமே என்பதை அகளங்கன் அவர்கள் மேற்படி இலக்கியத் தேறல் நூலில் இடம்பெற்றதான, **"நக்கீரர் ஒரு விதண்டா வாதி"** என்ற கட்டுரையில் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். **தமிழ்த் திறனாய்வு** வரலாறு தொடர்பான எனது எழுத்துகளிலும் உரைகளிலும் **அகளங்கன் அவர்களது மேற்படி கருத்தை அவ்வப்போது எடுத்துக்காட்டிவந்துள்ளேன்.** அகளங்கனின் இலக்கிய நோக்கின் கூர்மைக்கான ஒரு சான்றாகவே இதனை நான் இங்கு பதிவுசெய்துள்ளேன்.

1991இன் பின்னர் போர்ச் சூழல்சார் காரணிகளால் நான் குடும்பத்துடன் தமிழகம் சென்றேன். அதன்பின் அகளங்கன் அவர்களுடனான எனது தொடர்பு குறைந்தது. 1995இல் ஒருநாள் இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தின் இடையில் வவுனியாவில் தங்கநேர்ந்தபோது நானும் மல்லிகை ஆசிரியரான **நண்பர் டொமினிக் ஜீவாவும்** அகளங்கன் அவர்களது இல்லம் சென்று நேரில் சந்தித்து உரையாடி மகிழ்ந்தது நினைவில் உளது. அதன்பின் அகளங்கனை அவரது எழுத்துகளில் (ஞானம் இதழில்) அவ்வப்போது தரிசித்துவருகிறேன்.

இரு ஆண்டுகளின் முன்னர் J.P. Lewis என்பாரின் A Manual of The Vanni Districts என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமான **இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு** என்ற நூலை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் தமிழாக்கக் குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவராக **கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** அவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை அறிந்து மிக மகிழ்ந்தேன்.இணைச் செயலாளர்களில் மற்றொருவர் **திருமதி.புவனாநாயகி ஐயம்பிள்ளையவர்கள்.** இவர் எனது ஊரான முள்ளியவளையைச் சேர்ந்தவர். எமது குடும்ப நண்பருங்கூட. இவ்விருவரும் இணைந்து மிகப் பொருத்தமான பாரியதொரு பண்பாட்டுப் பணியை ஆற்றியமை எனக்கு மிகுந்த மனநிறைவைத் தந்தது.

(மேற்படி ஆக்கம் தொடர்பாக, "வன்னி மண்ணின் வரலாறும் ஜே.பி.லூயிஸ் அவர்களின் இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு என்ற நூலின்முக்கியத்துவமும் - சில மனப்பதிவுகள்" என்ற தலைப்பிலே கடந்த ஆண்டிலே நான் ஒரு மதிப்பீட்டுக்குறிப்பை எழுதியுள்ளேன் என்பதையும் அது கனடாவில் வெளிவரும் கொம்பறை-2013 இதழில் பதிவாகியுள்ளது என்பதையும் இங்கு ஒரு தகவலாகச் சுட்ட விழைகின்றேன்)

**நிறைவாக**

அகளங்கன் அவர்களுடன் மீண்டும் நெருங்கியுறவாடுவதற்கான வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறேன். இந்த மணிவிழாச் சூழல் அதற்கான தொடக்கமாக அமையும் என்ற எனது நம்பிக்கையைத் தெரிவித்து இந்த உரையை நிறைவுசெய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# பழைமையையும் புதுமையையும் இணைத்து இயங்குபவர்.

**பேராசிரியை.அம்மன்கிளி முருகதாஸ்**
கிழக்குப் பல்கலைக் கழகம்

**அ**களங்கனுக்கு மணிவிழா. காலநதி எவ்வளவு விரைவாகப் பாய்கிறது! இன்று போலிருக்கிறது. 1976 ஆம் ஆண்டு பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் நாங்கள் இருந்ததும் அகளங்கனும் நண்பர்களும் எம்மோடு உரையாடியதும். ஏறத்தாழ 38 வருடங்கள் உருண்டோடி விட்டன. எல்லோரும் வெவ்வேறு திசையில்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட நேரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டக்கற்கைக்காக விண்ணப்பித்திருந்த மாணவர்கள் முதல் தொகுதியில் கலைப்பீட மாணவர்களாக இணைந்தனர். நாங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட தொகுதியில் இரண்டாம் தொகுதி மாணவர்கள். அகளங்கன் முதல்தொகுதி விஞ்ஞான பீட மாணவர்களில் ஒருவர். அப்போது தர்மராஜா என்றுதான் அவரை அழைப்போம். அது அவரது இயற்பெயர். அவரது இயற்பெயரைவிட **அகளங்கன்** என்ற புனைபெயரே அவருக்கு இப்போது நிலைத்துவிட்டது.

மாணவர்களுக்கே இருக்கக் கூடிய துடிதுடிப்பும் ஆர்வமும் கொண்ட மாணவர்கள் பலர் அக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் இருந்தனர். பீடங்களுக்குரிய மாணவர் மன்றங்கள், தமிழ்மன்றம், தமிழ் இலக்கியமன்றம் போன்றன வேகமாகச் செயல்பட்ட காலம். அன்றைய நிலையில் புதிய எண்ணங்களுடனான **தமிழ்மன்றத்தின் கீதத்தை** தமிழ்மன்றத்தின் தலைவராக இருந்த **அகளங்கனே** இயற்றியிருந்தார். தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மறைந்த போது அவரால் எழுதப்பட்ட **செல்வா என்று ஆணையிடாய்** என்ற இரங்கல் நூல் அவரது முதல் நூலாகவும் செல்வநாயகத்தின் மீதிருந்த அவரது அபிமானத்தைக் காட்டியதாகவும் அமைந்தது.

அகளங்கனின் மனைவி பூரணேஸ்வரி. அப்போது அவரின் காதலி. எங்கள் நெருங்கிய நண்பி. அவர்களுக்கு அநபாயன், அநிந்திதை ஆகிய இரண்டு பிள்ளைகள். அநபாயன் பொறியியலாளராக அவுஸ்திரேலியாவில் கடமையாற்றுகிறார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநிந்திதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்சிறப்புக்கற்கையில் தேர்ச்சி பெற்றவர். கணவருடன் திருகோணமலையில் வசிக்கிறார்.

அகளங்கன் தனக்கெனச் சில கொள்கைகளை உடையவர்.அவரது மனைவி பூரணேஸ் அவரின் கொள்கைளை முழுதாக ஏற்றுக்கொண்டார். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள். **பூரணேசைத்தவிர அதற்கு யாரும் உதாரணமாக முடியாது.**

அகளங்கன் நாடறிந்த எழுத்தாளர், இலக்கிய ரசிகர்., கவியரங்கக் கவிஞர், பிரசங்கி, பட்டி மன்றப் பேச்சாளர்,தமிழ் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். ஆசிரியம் அவரது தொழில்.அவர் தமிழ் இலக்கியம் தொடர்பாக நிறையநூல்களை எழுதியிருக்கிறார்.

கவிதைகள், வானொலி நாடகங்கள், நாட்டிய நாடகம், சிறுவர்பாடல்கள், மெல்லிசைப்பாடல்கள், சிறுகதைகள், நாவல்கள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களையும் கையாண்டுள்ளார். அத்துடன் ஆய்வு நூல்கள், கட்டுரைகள். ஆகியவற்றையும் நல்வழி, வெற்றிவேற்கை, கொன்றை வேந்தன் போன்ற நூல்களுக்கும் சமய நூல்கள் சிலவற்றுக்கும் உரைகளும் எழுதியுள்ளார். இன்றைய நிலையில் இந்நூல்களை வாசிப்போர் மிகக்குறைவு. ஆயின் அவற்றின் முக்கியத்துவம் கருதி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விளங்கத்தக்கதாக இவ்வுரைகளை அமைத்திருப்பது அவரது பணிகளில் குறிப்பிடற்குரியதாகும். மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களில் இருந்த ஈடுபாடு காரணமாக **வாலி, கம்பனில் நான், பாரதப் போரில் மீறல்கள்** போன்ற அவை தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார் அவரதுநூல்கள் **பல்கலைக்கழக மாணவரால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.**

சொல்லப்போனால் **பழைமையையும் புதுமையையும் இணைத்து எப்பொழுதும் இயங்கும் இலக்கியச் செயற்பாட்டாளர்** அகளங்கன் வவுனியாவின் இலக்கிய வளர்ச்சியை அகளங்கனை நீக்கி விட்டுப் பார்க்க முடியாது.

தமிழ் அவருக்கு நல்லன எல்லாம்தரும்.
மனம் நிறைய மணிவிழா நிறைவுற,
எனதும் எனது குடும்பத்தினரதும் வாழ்த்துகள்.

வையகம் வாழ்த்த
வாழ்க நீடூழி

**பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ்**
கிழக்குப்பல்கலைக்கழகம்
26-05-2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# கலாநிதி அகளங்கன் ஒரு தமிழ் இலக்கியக் கடல்

கவிஞர் கேணிப் பித்தன். **கலாநிதி.ச.அருளானந்தம்**

**நாகலிங்கம் தர்மராஜா** என்ற இயற் பெயரைக் கொண்ட **கலாநிதி அகளங்கன்** ஓர் அற்புதமான மனிதர். மனிதன் என்ற சொல்லுக்கு இலக்கணமானவர். மனு + ஈசன் = மனுஷன் எனும் பொருளைக் குறிப்பதாகக் கூறுவர். இதன் பொருள் ஒவ்வொரு மனிதனுள்ளும் இறைவன் உறைகிறான் என்பதாகும். அகளங்கன் அதற்கான சான்றாகத் திகழ்பவர்.

அவரது பார்வையில் ஒரு கனிவு இருக்கும். எதனையும் ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூறுபவர். அவர் பன்முகப் பார்வையுடையவர். பழந்தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் ஊறியவர். பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்ச் சிந்திப்பவர். அகளங்கனுடன் நெடுங்காலத் தொடர்பினைக் கொண்டிருக்கிறேன். அவரது குடும்பத்தவர்கள் என்னைப் பாசத்துடன் நேசிப்பவர்கள். தர்மராஜா என்பது அவரது இயற்பெயர் ஆனால் அவரது ஆளுமையைப் பறைசாற்றி நிற்பது **அகளங்கன்** என்ற அவரது இலக்கியப் புனைபெயர்தான். தமிழ்கூறும் நல்லுலகில் அகளங்கனுக்குச் சிறப்பான இடமுண்டு.

அகளங்கன் ஆழ்ந்த புலமையுடையவர். சாதாரண மனிதனின் பார்வைக்கும், ஒரு எழுத்தாளனின் பார்வைக்கும் இடையில் நிறையவே வேற்றுமைகள் உண்டு. கண்ணால் காணும் காட்சிகளை எழுத்தாளனுடைய கண்களோடு மனமும் படம்பிடித்துப் பதிவு செய்து விடும். வேண்டும்போது அப்படம் மெருகூட்டி பல்வேறு பரிமாணங்களாக விரிந்து பிரமிக்க வைக்கும். அந்த அற்புதமான கலைத்துவத்தைத் தம்பி அகளங்கன் கொண்டுள்ளார்.

அகளங்கன் எனக்கு அறிமுகமானது வவுனியாக் கல்வித் திணைக்களத்தில்தான். பிரபல ஊடகவியலாளர் அன்புக்கும் மதிப்புக்குமுரிய **தம்பி.பி.மாணிக்கவாசகம்** அடிக்கடி அகளங்கனைப் பற்றிச் சொல்வார். அப்போது நாங்கள் வவுனியாவில் முத்தமிழ்க் கலா மன்றத்தை நடத்திக் கொண்டிருந்தோம். மாணிக்கவாசகம் செயலாளராகச் செயற்பட்டார். நான் அதன் தலைவர். முத்தமிழ்க் கலாமன்றம் இலக்கியச் சிந்தனையாளர்களை இனங்கண்டு அவர்களது திறமைகளை வளர்த்தெடுக்கப் பாடுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாட்டத்தில் கூட்டுறவு ஆணையாளராகப் பிரபல எழுத்தாளர் கலைஞர் **உடுவை. தில்லை நடராசா** சேவையாற்றிக் கொண்டிருந்தார். எத்தனை நாடகங்கள், கவிதை அரங்குகள், பட்டி மன்றங்கள் என்று சொல்லுமளவிற்கு அப்பால் நடந்தேறிய காலம். உடுவை தில்லை நடராசா பட்டிமன்றத்துக்குத் தலைவராக இருந்து அற்புதமாகப் பணியாற்றினார். அப்போது அகளங்கன் மலையகத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஒருநாள் அகளங்கன் எங்கள் அலுவலகம் வந்து என்னைச் சந்தித்து உரையாடினார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் ஜனசக்தித் திட்டத்தில் ஆசிரியர்களை நியமிக்குமாறு கல்விப் பணிப்பாளர்களைப் பணித்திருந்தார். அதற்கான தகைமையாக க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தால் போதும். வவுனியா மாவட்டம் ஆசிரியர் பற்றாக் குறையில் தவித்தது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திப் பல இளைஞர்களையும், யுவதிகளையும் ஆசிரியர்களாக நியமித்தோம். கிராமத்து இளைஞர்களும், யுவதிகளும் ஆசிரியர்களாகப் பதவியேற்றனர். இத்திட்டத்தால் பலகுடும்பங்கள் நிம்மதியடைந்தன.

இவ்வாசிரியர்களது கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து க.பொ.த உயர்தர வகுப்புக்களை வைத்து பயிற்றுவித்தோம். அத்தனை ஆசிரியர்களும் பரீட்சையில் சித்தியடைந்து பெருமையைத் தேடித்தந்தனர். அவர்களுக்கு உயர்கல்வி வசதியை அளிப்பதற்காக முதற்கலைத் தேர்வுக்கான பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தினோம். பல்கலைக் கழகப் பேராசிரியர்களை அழைத்து அடிக்கடி துரித மீட்டற் பயிற்சிகளை நடத்தினோம். அவர்கள் வவுனியா மாவட்டக் கல்வி நிலையை உணர்ந்தவர்கள். இலவசமாக வந்து பாடங்களை நடத்திச் சென்றார்கள். இதில் பெரும்பங்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியற்துறைப் பேராசிரியர் நந்தகுமார் அவர்களையே சாரும். பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியர் நாகேஸ்வரன் போன்றோரை இன்றும் நினைவில் கொள்கிறேன்.

கலைமாணிப் பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தும்போது பாடங்களுக்கான தகுதியான ஆசிரியர்களைத் தேடினேன். அகளங்கன் இடமாற்றம் பெற்று வவுனியாவுக்கு வந்ததும் அவர் எங்களுடன் இணைந்து கொண்டு அளப்பெரும் சேவையாற்றியதை மறக்க முடியாது. எங்கள் தொடர்பு இறுகியது.. பல பட்டதாரிகள் உருவாக அகளங்கன் பெரும்பங்காற்றினார். அகளங்கன் நிறையவே இலக்கியச் சேவை செய்து கொண்டிருந்தார். தானும் எழுதிப் பிறரையும் எழுதத்தூண்டும் ஏணியவர்.

வவுனியாவில் இறைக்க இறைக்க ஊறும் மணற்கேணியாக **ஈசன் முதலாளி வள்ளல் இராமசாமிப் பெரியார்** விளங்குகிறார். அவர் தமிழில் ஊறியவர். சமயம் அவரது உயிர் மூச்சு. அந்நபரின் உதவியினால் வவுனியாவில் தமிழும், சமயமும் தழைத்தோங்குகிறது. இந்து மாமன்றத்தின் மூலம் சேவைசெய்து வருபவர். அதேபோல் தேவாரம் பாடுதற்கென்றே இனிமையான குரல்கொண்ட சைவத் தொண்டன் **கண்ணகி தேவராசா** போற்றுதற்குரியவர். இவர்கள் அனைவரும் அகளங்கனது பேச்சாற்றலால் கவரப்பட்டவர்கள். அவரது ஆற்றலைப் புரிந்து கொண்டவர்கள். அழகு தமிழில் மக்களை ஈர்த்து ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றல் கொண்ட அகளங்கன் தற்பெருமையில்லாத நிறைவான மனிதர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் மேடைகளில் பேசுவார்கள். ஆனால் வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்ற மாட்டார்கள். ஆனால் அகளங்கன் இதற்கு விதிவிலக்கானவர். அவர் எதனைப் பேசுகிறாரோ அதனையே வாழ்நாளில் கடைப்பிடிப்பவர். **அவரது இல்லாள் மனைத்தக்க மாண்புடையவர்.** தமிழ்ப் பண்பாட்டை அகளங்கன் வீட்டிலும், வாழ்க்கையிலும் காணலாம். அவரது மனையாள் பொருளியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர். **பெண்ணிற் பெருந்தக்க யாவுள** என்பதற்கு இலக்கணமாக வாழ்பவர். இவர்கள் இருவரது வாரிசுகளும் பெற்றோர் வழியிலேயே ஒழுகுபவர்கள்.

இயற்கையின் செழுமையில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அகளங்கன் இயற்கையை வைத்தே அற்புதமான சிறுகதைகளையும், நாவல்களையும் பின்னிவிடுவார். பம்பைமடுக் குளம். கும்மாளமடித்துக் குலாவும் கொக்குக் குஞ்சு. இவ்வாறு அனைத்தும் அவரது கருப்பொருட்களாகும்.

பலரது கூட்டுறவு முயற்சியினால் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் உருவாகியது. அதன் தலைவராக நாகலிங்கம் சேனாதிராசாவே இருக்கிறார். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆற்றும் சேவை அளப்பரியது. அகளங்கன் அதன் துணைத் தலைவராகப் பணியாற்றுகிறார்.

அகளங்கன் எழுத்தாளர்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்குபவர். அவருக்கு நிறையவே இலக்கிய நண்பர்கள் இலங்கையிலும். தமிழ் நாட்டிலும் உள்ளனர். அகளங்கன் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீனின் அபிமானி. அவரது நூல்களை ஆய்ந்து நூலொன்றை எழுதியவர்.

ஒருமுறை கொழும்பில் தமிழ் இலக்கிய மகாநாடு நடந்தது. சிறுவர் இலக்கியம் பற்றிய கருத்தாடலின்போது யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதை இஸ்லாமிய நண்பர் ஒருவர் கூறினார். "இஸ்லாமிய நண்பர்கள் மன்னிக்கவேண்டும் முதலாவதாக எரியூட்டப்பட்ட நூலகம் ஸத்தான்புள் நூலகமாகும். இஸ்லாமியர்களால்தான் அது எரியூட்டப் பட்டது. அங்கே வந்த இஸ்லாமிய படைத்தலைவன் இந்த நூலகத்தில் உள்ள நூல்கள் இஸ்லாமுக்கு எதிரானவையா? சார்பானவையா? என்று கேட்டாராம். அதற்கு அங்குள்ளோர் "அப்படிப்பட்ட நூல்கள் இங்கில்லை. எந்தச் சார்பும் அற்ற நல்ல நூல்கள்" என்று பதிலளித்தார்களாம். "குறானைத் தவிர வேறெந்த நூல்களும் தேவையில்லை. எரியுங்கள்: என்று எரியூட்டினார்களாம். அதுவே உலகத்தில் முதலாவதாக எரியூட்டப்பட்ட நூலகம்" என்று துணிவுடன் கூறினார். வாயடைத்து நண்பர்கள் மௌனியானார்கள். எனக்குள்ளும் ஒரு பிரமிப்பு. அகளங்கனிடம் துணிவுடன் கூறுவதற்கான சான்றுகள் இருக்கும். சான்றுகள் இல்லாது அவர் கூறத்துணியமாட்டார்.

அவரது **கம்பனில் நான்** என்ற நூலைப் படித்தபோது இவரிடம் இந்த ஆராய்ச்சிக்கான நுணுக்கம் எவ்வாறு துளிர்விடுகிறது? **கம்பன் கவனிக்கத் தவறியவை** எனப்புட்டு வைக்கும் நுண்ணறிவைப் பாராட்டாது இருக்க முடியாது. அவரது கட்டுரைகள் படிப்போரை இழுத்துப் படிக்க வைக்கும் பான்மையன.

அகளங்கன் தனது சொந்த மாவட்டமான வவுனியாவுக்கு வந்த காலம் மிகவும் இறுக்கமான காலம். இயக்கங்களும். இராணுவமும், இந்திய அமைதிப்படையும் எனச் சல்லடை போட்டு வேட்டை நடத்திய காலம். அக்காலத்திலும் சந்தர்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டியபோது கோயில்களிலே புராணங்களைப் படித்துப் பயன் சொல்லுதல். சமயச் சொற்பொழிவுகள் செய்தல் எனத் தன்னைத் தமிழுக்காகவே அர்ப்பணித்திருந்தார். இவருக்கு எப்படி இந்தத் தமிழறிவு தொற்றிக் கொண்டது?

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமாமே. சந்தன மரங்களில் பட்டுத் தெறித்து வரும் காற்று மற்ற மரங்களில் தடவுவதால் அம் மரங்களும் சந்தனமரங்களாக மணம் வீசுமாமே. **நாகலிங்கத் தமிழ்க்கடலின்** சிறுதுளியல்லவா அகளங்கன். அந்த நீர்த்துளி பட்டாலே ஒரு சிலிர்ப்பு ஏற்படும். அகளங்கனது உடலெங்கும் தமிழுணர்வு மின்னலென ஓடும். அவரது எழுத்துக்களை வாசிப்பதிலும் அவரது பேச்சைக் பேட்பதிலும் தமிழுணர்வும். ஆற்றொழுக்காகப் பெருக்கெடுக்கும். கற்பனா வளமும் கேட்போரைக் கிறங்கடிக்கும். அவரது பேச்சில் என்னைப் பலமுறை பறிகொடுத்திருக்கிறேன். நான் தனிவழி செல்லும்போதெல்லாம் அகளங்கனது பேச்சையிட்டுச் சிந்தித்த வண்ணமே செல்வேன். அவர் பேசும்போது எவ்வாறு எடுத்துக்காட்டுக்களும், அவற்றுக்குப் பொருத்தமான பழம் பாடல்களும் தங்கு தடையின்றி வந்து பாய்கின்றன?

அவர் **ஒரு தமிழ் இலக்கியக் கடல்.** ஒரு மனிதனின் ஆளுமையைத் தீர்மானிப்பது மரபணுக்களும், அவன் வாழும் சமூகமும். சூழலும்தான். அகளங்கன் அவர்களுக்கு இந்த மூன்றும் கச்சிதமாகப் பொருந்தியுள்ளது. அவரது பெற்றோர். உடன்பிறப்புக்கள் அனைவரும் நற் பண்பினையே இயல்பாகக் கொண்டவர்கள். தமிழறிவும், இயற்கையை நேசித்து, இயற்கையோடு ஒன்றித்த வாழ்வில் இன்புற்றிருப்பவர்கள். வன்னி வளநாடு வனப்புடைத்து. மூலிகைகள் மலிந்த வன்னிக் காடுகளை அளைந்து வரும் காற்று அங்குள்ள குளங்களில் விளையாடிக் குளிர்தடவி உடலை வருடி விடுவதால் உடலாலும். உள்ளத்தாலும் உரம்பெற்றவர்கள். பார்க்கும் இடமெல்லாம் கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டி, மனதை இனிக்கச் செய்யும். ஒவ்வொரு கிராமமும் இயற்கையால் அழகுபடுத்தப் பட்டுக் கிடக்கும்.

அகளங்கனை நான் அறியுமுன் அவரது அண்ணன் **திரு.சேனாதிராசாவை** அறிந்திருந்தேன். 1983ல் செட்டிகுளத்தில் ஒரு சந்திப்பில் கண்டுகொண்டேன். அன்றுமுதல் இன்றுவரை எனது நண்பராக. உடன்பிறப்பாக உள்வாங்கி உறவாடி வருகிறேன். திரு.சேனாதிராசா ஒரு தமிழ்ப்பற்றாளர். சமூகசேவையைத் தலையாய சேவையாகக் கொண்டவர். பம்பைமடு அவர்களது சொர்க்கபுரி. சேனாதிராசாவினது வீடு பம்பைமடுச் சந்தியில் இருந்தது. நான் அந்த வழியால் சென்றால் தவறாது அவரையும் சந்தித்து உறவாடி வருவேன். அவர் மூலம் அவரது தந்தையாரைப் பற்றி அறிந்திருந்தேன்.

நான் அப்போது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்ததன்பின் வவுனியா கல்வித் திணைக்களத்தில் செட்டிகுளம் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையேற்றிருந்தேன். **வந்தாரை வாழவைக்கும் வன்னி** என்று சொல்வார்கள். எனது வட்டாரத்தில் சுமார் 42 பாடசாலைகள் உள்ளடக்கப் பட்டிருந்தன. பாடசாலை அதிபர்கள் உதவியாக இருந்தனர். 42 பாடசாலைகளுக்கும் நானொரு முடிசூடாமன்னனாக விளங்கினேன். இளமையும், எதையும் துருவி ஆராயும் இயல்பும்கொண்ட எனக்கு வவுனியா உற்சாகந்தரும் சொர்க்கபுரியாக இருந்தது. பாடசாலைகளுக்கு மேற்பார்வைக்காக சைக்கிளில் உலாவருவேன். வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் குக்கிராமங்களுக்கு ஊடாகச் செல்வது ஒரு சுகமான அனுபவமாக இருந்தது. வன்னிக் காடுகளை அளைந்துவரும் காற்று உடலுக்கு உந்துசக்தியைக் கொடுக்கும். கூடவே கற்பனைத் தேரும் என்னுடன் சவாரி செய்தது.

பச்சைப்பசேலெனக் காட்சிதரும் தாவரப்போர்வையை வகிடெடுத்து விட்டாற்போல் கீறிக்கொண்டு கிடக்கும் வவுனியா - மன்னார் கரிய தார் வீதி. இருபுறமும் வீரை மரங்களும், பாலை மரங்களுமாக அணிவகுத்து நிற்கும். பாலைமரங்கள் மஞ்சள் கம்பளத்தால் போர்த்திருக்கும். வீரைமரங்கள் செங்கம்பளங்கொண்டு முக்காடிட்டிருக்கும். எங்கும் எப்போதும் எதாவது மரங்கள் பூச்சூடியவண்ணமே காட்சி தரும். பனிப்புகாரை இழுத்துப் போர்த்தியிருந்த செறிதாவரங்கள் போர்வையை வீசிவிட்டு எனக்காகக் காத்திருப்பது போல் தெரியும். பனிப்புகார் சூரியக் கதிர் பட்டு விலகியோடும்.

வவுனியாவில் இருந்து பூவரசங்குளம் நோக்கி எனது சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. இயற்கையின் எழில் விரித்திருந்தது. பம்பைமடு, செக்கடிப்பிலவு சந்தியில் வலப்புறமாகத் திரும்பிச் சென்றால் **பம்பைமடு**தான். கிறேவல் பாதையில் சைக்கிள் ரயர் தேய்த்துச் செல்வதால் ஒரு இசைக்கோலம். கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒருசிறிய வளைவு. அதற்கப்பால் இருபுறமும் வெளியரும்புப் பாறைத்தொடர். பாறைத்தொடரில் தேவதச்சனால் செதுக்கியது போன்ற அமைப்புடன் சிறிய தடாகம். அதனுள் அல்லிமலர்களின் ஆட்டம். இலைகளின்மேல் ஓடி நடைபயிலும் கானாங்கோழிகள். துள்ளியோடும் முயற்கூட்டம். வெருண்டு ஒளியும் மான்கள். அப்படியே எவ்வளவு நேரமும் நின்று இரசிக்கலாம்.

கவிதை பீறிட்டுப் பாயும். தினக்குறிப்பேட்டில் குறித்துக் கொள்வது என்னில் தொற்றிக்கொண்ட பழக்கம். முதல்நாள் நான் அப்படி நின்றபோது என்னை யாரென்று தெரியாத ஆசிரியர் குழாம் என்னைத் தாண்டிச்சென்றது. அவர்களுக்கு என்னைத் தெரியாது. அவர்கள் சென்றபின் பாடசாலைக்குள் சென்று ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தேன். அதிபருக்கும் நான் அறிமுகமில்லாத புதுமனிதராகத் தெரிந்தது. அதிபர் என்னை வினவினார். அதிபரிடம் பம்பைமடுப் பெரியார் **திரு.நாகலிங்கம்** அவர்களது வீட்டைக் காட்டும்படி கேட்டுக் கொண்டேன். அவர் வழியைக் காட்டினார்.

அவரது வீட்டையடைந்து உள்ளே சென்றேன். நான் அவரது மூத்த மகன் திரு.சேனாதிராசா அவர்களுடனான நெருக்கத்தைக் கூறி அறிமுகமானேன். அவரைச் சந்தித்தபோது மிகநெருங்கிப் பழக்கமுடையவரோடு உரையாடுவதைப் போல் அன்போடு அளவளாவினார். பேசிக்கொண்டிருக்கும் போது காய்ச்சிய பசும்பால் ஒரு வெள்ளிக்குவளையில் பரிமாறப்பட்டது. என்ன மனிதர் இவர். ஒரு இலக்கியக்கடலில் மூழ்கி முத்தெடுப்பதான உணர்வு எனக்கு. அவர் ஐந்தாம் வகுப்புவரைதான் கற்றுள்ளாராம். அவருக்குத் தெரியாத பழம்பாடல்களே இல்லையெனலாம். பெரிய புராணம், கந்தபுராணம். இராமாயணம், மகாபாரதம் என எத்தனை அற்புதமான தேடல்களுக்குள் அந்த ஒருமணிநேரத்துள் என்னை அழைத்துச் சென்று விட்டார்? ஒரு அற்புத மனிதரைச் சந்தித்த மகிழ்ச்சி உள்ளத்தில் குடிகொண்டது. மீண்டும் சந்திக்க வருவதாய்க் கூறி மனநிறைவோடு விடைபெற்றேன்.

பாடசாலைக்குள் மீண்டும் சென்று அதிபருக்கு நன்றி கூறினேன். பம்பைமடுப் பெரியாரைப் பற்றிக் கேட்டேன். "அந்தப்பெரியவர், இதிகாச புராணங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் இலக்கியங்களையும் நன்கறிந்தவர். பெரியபுராணம், கந்தபுராணம், இராமாயணம். மகாபாரதம் போன்றவற்றில் பரிச்சமுடையவர். கோயில்களில் புராணங்களைப் படித்துப் பயன்சொல்பவர். வவுனியா பெற்றெடுத்த தவப்புதல்வர். அவரது பெயர் தமிழறிஞர் **சேனாதிராசா நாகலிங்கம்"** என்றார். "அவரது பெயர் சொல்லவே எங்களுக்கு அருகதை இல்லை. அப்பேர்ப்பட்ட பேரறிஞர்." என்று அந்த அதிபர் விளக்கினார். எனது உள்ளம் உவகையால் துள்ளியது. அதன்பின்னர்தான் நான் யார் என்பதைக் கூறினேன். அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு படபடப்பு. அவர்களது பதற்றத்தைப் போக்கி நகைச்சுவையோடு உரையாடி கடமையை உணர்த்தினேன். எனக்கு அதுவொரு புது அனுபவம்.

இதனை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. நான் யாரைப்பற்றி உங்களோடு முதலில் கூறி உறவாடினேனோ. அவரைப்பற்றியதாக அமைவதால் தந்தை மகற்காற்றும் உதவியும் "மகன் தந்தைக்காற்றும் நன்றி" என்பதற்கும் சான்றாக அமையும் குறளுக்கேற்ப தரப்படுகிறது.

நமது இலங்கை வரலாறு கூறுவதென்ன? அந்நியர் ஆட்சிக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள் தேசப்பற்றாளர்களாகச் சித்தரிக்கப்பட்டு வரலாற்றுப் பாடத்தில் கற்பிக்கப்படுகிறார்கள். புரண்அப்பு. கடகப்பொலதேரர் போன்ற பலரினது வரலாறுகள் பதிவாகியுள்ளன. ஆனால் அனுராதபுரத்துக்கப்பால் நடந்த, நடக்கும் அந்நியருக்கு எதிரான உயிர்த்தியாகங்களைப் பற்றி ஏன் நமது இலங்கை மக்கள் கவனிக்கத் தவறினார்கள்.

பிரித்தானியருக்கெதிராகப் போராடி உயிர்துறந்த பண்டார வன்னியன் இலங்கையன் இல்லையா? இந்த நாட்டில் அந்நியராட்சி நிலைக்கக் கூடாது என்று போராடிய அண்மைக் காலத்துப் போராளிகள் இலங்கைக்கு எதிரானவர்களா? இலங்கையை அந்நியரிடம் கைவசப்படுத்த உதவியது பெரும்பான்மை மக்களினமே. இதனை யார் உணரப் போகிறார்கள்.?

வவுனியாக் கச்சேரி வளாகத்துள் வன்னி மக்கள் **பண்டார வன்னியனுக்கு** விழாவெடுத்து சிலையெடுத்துள்ளனர். பண்டார வன்னியனின் பெயரில் வவுனியா மாவட்ட எல்லையில் ஒரு பாடசாலையைத் திறந்து அதற்குப் பண்டாரவன்னியன் வித்தியாலயம் என்று பெயரைச் சூட்டினேன்.

அகளங்கன் ஒருநாள் என்னிடம் ஒரு வினாவைத் தொடுத்தார். "நாட்டிலுள்ள அத்தனை சிலைகளிலும் காகம் அமர்ந்து எச்சில் போட்டிருக்கும். ஆனால் பண்டார வன்னியனின் சிலையின் மேல் காகம் இருக்காது. அது ஏனென்றார்? எனக்கு வியப்பாக இருந்தது. அவர் தனக்கே உரித்தான சிரிப்போடு "பண்டார வன்னியனின் கையில் வாள் இருக்கிறது. சிலையும் விழிப்பாக இருக்கிறது. அதனால் காகம் அமர்வதும் இல்லை. எச்சில் இடுவதுமில்லை. அந்த வீரன் மறைந்தாலும் வன்னிமண் அவனது வீரத்தையும். தியாகத்தையும் மறவாது." என்றார். அவரது பதில் வேடிக்கையானதுதான். ஆனால் அதிலுள்ள விவேகத்தையும், அந்த வீரவேங்கையின் மனவுறுதியையும் எண்ணி வியந்தேன்.

அதனாற்போலும் பண்டார வன்னியனுக்கு விழாவெடுத்து விழாமலரும் வெளியிடப்பட்டது. அதன் **மலராசிரியராக அகளங்கன்** செயற்பட்டுத் தரமான கட்டுரைகளைச் சேர்த்திருந்தார். அது அற்புதமானதொரு **அரும்பொக்கிஷமாகும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்வித்திணைக்களத்துக்கு மாற்றலாகி வந்ததே பெரிய கதை. நான் திருகோணமலையில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றதும் ஒரு கடிதக் கோவை எனது மேசைக்கு வந்தது. அக்கடிதத்தைப் பார்த்ததும் வேதனையடைந்தேன். அந்நியரை எதிர்த்துப் போராடி தன்னுயிரைத் துச்சமாக மதித்து உயிர்விட்ட பண்டார வன்னியனது பெயரால் நான் திறந்த பாடசாலையின் பெயரை மாற்றித் தரும்படி அந்த வேண்டுகோள் வந்தது. அதனைத் திருப்பி விளக்கங்கேட்டு அனுப்பி வைத்தேன். என்னே நமது மக்களின் நாட்டுப் பற்று?

நான் சுவாமி விபுலானந்தரினால் அமைக்கப்பட்ட சிவானந்த வித்தியாலயத்தில் படித்தேன். அவரது வாழ்க்கையை நன்கு படித்து அவரைப்போல் ஏதாவது நமது சமூகத்துக்குச் செய்ய வேண்டும் என்ற ஆவலோடு செயற்பட்டவன். "தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்" என்பதற்கேற்ப செயற்பட வேண்டும் என்ற வேட்கையோடு செயற்பட்டேன். அப்போதுதான் வன்னியில் **காந்தியம்** பல கிராமங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றியிருந்தது. அங்கெல்லாம் பாடசாலைகள் இல்லை. அக்கிராமப் பிள்ளைகள் அயலில் உள்ள கிராமத்துப் பாடசாலைகளில் படித்து வந்தார்கள். பலமைல் கால்நடையாக. யானைகள் பவனிவரும் வீதிகளுக்கு ஊடாகப் பயந்து பயந்து பயணித்தார்கள். அவர்களின் துயர் களையும் படலத்தைத் தொடங்கினேன். அரச அதிபர் தொடக்கம் அத்தனை இயக்கங்களும் எனக்கு ஒத்தாசை தந்தன. அதன் பயன் வவுனியா மாவட்டத்தில் 65 புதிய பாடசாலைகளைத் திறக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டயது. நான் ஒரு கருவியே தவிர. செய்வித்தவன் தம்பி அகளங்கன் சொல்வதுபோல் இறைவன்தான்.

அகளங்கன் இதுவரை 40 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறார். அவரது எராளமான நூல்கள் இலங்கைச் சாஹித்ய மண்டலப் பரிசுகளையும். மாகாண சாஹித்ய மண்டலப் பரிசுகளையும் பெற்று சர்வதேசரீதியில் புகழ் பெற்றனவாகவும் திகழ்கின்றன. அவர் தொடாத துறைகளே இல்லை எனலாம். சிறுகதைகளா, கவிதைகளா. சிறுவர் இலக்கியங்களா, ஆய்வு இலக்கியங்களா, நாடகங்களா? என அடுக்கிக் கொண்டே போகலாம். பன்முக ஆளுமை கொண்ட தமிழ் அறிஞர் அகளங்கனுக்கு அனைத்தும் கைவந்த கலையாகும். அந்த வகையில் அகளங்கன் அகளங்கனாகவே திகழ்கிறார். அகளங்கன் களங்கமற்றவன் என்பதை அவரது வாழ்வியல் சான்று பகர்கின்றது.

அவரது வீட்டுக்குச் சென்றால் ஒரு நூலகத்தினுள் செல்லும் உணர்வு முன்வந்து நிற்கும். அவரது நூல்கள் செப்பமாக பேணப்பட்டடிருப்பது மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும். இப்போதும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினை நடத்திக் கொண்டு பலருக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். இவர்களுடன் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களும் இணைந்து செயலாற்றுவதும் பல இளைஞர்கள் பங்கு கொண்டு உழைப்பதும் பெருமைக்குரியது.

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# பல்வேறு துறைகளில் தனது முத்திரையை ஆழமாகப்பதித்தவர்.

கலாபூஷணம் தமிழ்மணி

**கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம்**

"நல்ல இலக்கியங்களை வேறு பயன்கருதாது அவற்றால் விளையும் இன்பத்தின் பொருட்டே அன்பு பூண்டு கற்பதுவே இலக்கியக் கல்வியாளன் மேற்கொள்ள வேண்டுவது" என்பது பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் கூற்று. இரசிகமணி டி.கே.சி.என அழைக்கப்படும் சிதம்பரநாத முதலியார், இலக்கியங்களை இரசித்து இரசித்து அவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். நாவலரின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் சீவக சிந்தாமணியையும் கம்பராமாயணத்தையும் நயம்பட விரித்துரைப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

இன்று, இலக்கியத்தைக் கற்போர் தொகை அருகி வருகிறது. மாணவர்கள் இலக்கியத்தைக் கற்பதை விட இலக்கியத்தைப் பற்றிக் கற்றுப் பரீட்சை எழுதி கூடிய மதிப்பெண்களைப் பெற்றுவிடுகின்றனர். பல்கலைக் கழகப் புலமைத்தளம் இலக்கிய இரசனையைவிடத் திறனாய்வுக்கு அழுத்தம் கொடுக்கின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் நூல் நிலையங்களை அழகு செய்யும் அலங்காரப் பண்டங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளில் இலக்கியத்தை இரசித்துக் கற்போர் ஒரு சிலரேனும் இருக்கின்றார்கள் என்றால் வியப்பான சங்கதி தான். பழந்தமிழ் இலக்கியங்களையும், இடைக்காலக் காவியங்களையும் ஆழ்ந்து கற்று அவற்றை இரசித்து இரசித்து சொல்லக்கூடிய ஒருவர் தான் **கவிஞர் தமிழ்மணி அகளங்கன்** அவர்கள்.

இலக்கிய இரசனை இவரது பாராம்பரியச் சொத்து. புராண இதிகாசங்களுக்கு பயன் விரித்துரைக்கும் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர் இவர். இலக்கிய நிகழ்ச்சிகளைச் சமகால நிகழ்வுகளுடன் பொருத்திக்காட்டும் விதத்தில் இவரது இலக்கியக் கட்டுரைகள் திகழ்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை, நாடகம், இசைப்பாடல், இலக்கியத்திறனாய்வு, புனை கதை** முதலான பல்வேறு துறைகளில் தனது முத்திரையை ஆழமாகப்பதித்து வரும் இவர் தொழிலால் கணித ஆசிரியர்.

இலக்கியத்தை இரசனை முறையில் மட்டுமன்றி தர்க்கரீதியாகவும் திறனாய்வு ரீதியிலும் பார்க்கும் ஆற்றலுக்கு இவரது **வாலி** என்னும் ஆய்வு நூலும் **நக்கீரர் ஒரு விதண்டாவாதி** என்ற கட்டுரையும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். இவரது மணிவிழா சிறக்கவும் இவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்யவும் மனமார வாழ்த்துகின்றேன்.

---

**"பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்"** நூலின் அணிந்துரையில் பிரபல மூத்த பெண் ஊடகவியலாளர் **திருமதி.அன்னலட்சுமி இராஜதுரை** அவர்கள்.

கவிஞர் தமிழ்மணி அகளங்கன் (நா.தர்மராஜா) அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். பண்டைத்தமிழ் இலக்கியக்கடலில் மூழ்கி, அரிய முத்துக்களை எடுத்துத் தக்கவாறு கையாண்டு தமிழ்நூல்களாக ஆக்கித்தரும் அரிய பணியில் அவர் கடந்த பல வருடங்களாகவே சிறப்பாக மேற்கொண்டு வருவதை நாம் அறிவோம்.

தமிழ்மணி அகளங்கனின் இலக்கியக்கட்டுரைகள் வயது வித்தியாசமின்றி அனைத்து வயதினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைவது குறிப்பிடத்தக்கது.

மிக எளிமையான முறையில், அதே சமயம் கதை போன்று சுவை குன்றாது பண்டைய இலக்கிய அம்சங்களை விபரித்துச் செல்லும் பாங்கு, நயக்கத்தக்கது. இவை அவரது ஆக்கங்களுக்கு வரவேற்பைப் பெற்றுத் தருகின்றன என்று கூறலாம். அத்துடன் அவரது தற்கால வாழ்வியல் அம்சங்களுடனான ஒப்பீட்டு நோக்கு மேலும் ரசிக்கவும் சிந்திக்கவும் தக்கது. (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# வவுனியா மாவட்டத்தின் மூன்றாவது கண் "தமிழ் மலை" அகளங்கன்

**திரு.மு.கௌரிகாந்தன்** *B.A.Dip in Edu M.A.M.Ed.*
*விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்.*

**கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்**
**செய்ய கரிய திருமாலே - வையம்**
**அளந்தாய் அகளங்கா! ஆலிலைமேற் பள்ளி**
**வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்**[1]

இந்தப் பாடல் புறத்திணையில் வரும் "பாடாண்டிணை" வகையைச் சேர்ந்தது. பாடாண்டிணை என்பது பாடப்படும் ஆண் மகனுடைய ஒழுகலாறு எனப் பொருள்படும். முன்மாதிரியாகக் கூறப்படக் கூடியவர்களின் குணம் செயல் என்பனவற்றை இவ்வகைச் செய்யுள்கள் எடுத்துக் கூறும். இத்தகையதான சிறப்பம்சங்களைக் கொண்ட மேற்படி பாடலிலே தான் முதன் முதலாக **"அகளங்கன்"** என்ற பெயரை நான் கண்டேன். அகளங்கன் என்பதன் அர்த்தம் **"களங்கம் அற்றவன்"** என்பதாகும். வவுனியா மாவட்டத்திலே களங்கம் இன்றி தமிழையும் சைவத்தையும் வளர்த்து வரும் முதல்வராக இவரை நான் காண்கிறேன்.

**அருணாசலம், நாவலர், இராசரத்தினம்,** என்ற இந்த மூவரையும் **யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக்கண்கள்**[2] என்று பண்டிதமணி எழுதியிருந்தார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது வாழ்க்கைச் சுருக்கத்தினையும், வண்டமிழ்த் தொண்டினையும் கனக செந்திநாதன் அவர்கள் **மூன்றாவது கண்**[3] எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். ஏனைய இருவரும் **சோமசுந்தரப்புலவர், மகாவித்துவான் கணேசையர்** என்போராவர். எனவே **"மூன்றாவது கண்"** எனும் தொடர் மிகவும் உயர்வு பெற்றதொன்றாகும். அதனை இங்கே **தமிழ்மணி அகளங்கன்** அவர்களுக்குச் சார்த்திப்பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஏற்கனவே வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் பண்டித வ.சு இராஜஜயனார் (1899 - 1954), பேராசிரியர் கலாநிதி பொன்.பூலோகசிங்கம் ஆகிய இரு கண்களைப் பற்றியும் முறையே வித்தியா தீபம் 2006, 2007 (தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா) ஆண்டிதழ்களிலே எழுதியுள்ளேன். இவ்விரு கண்களாலும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிலும் பார்க்க பிற இடங்களைச் சேர்ந்தோர் அடைந்த பயன்களே அதிகமெனலாம். என்னைப் பொறுத்தவரையிலும் இந்த மூன்றாவது கண்ணை வவுனியா மாவட்டத்தின் கண்ணுள்ள **தமிழ் மலை**யென்று கூறினாலும் பொருந்தும். மலையாய் நின்று அவர் வாடும் தமிழையும் சைவத்தையும் நோக்கினார். நாம் தூர நின்றும் அம்மலையைத் தரிசித்தோம்.

## நானும் மூன்றாவது கண்ணும்

உண்மையில் அகளங்கன் அவர்களை மூன்றாவது கண் என்று எனக்குக் கூறியவர் எனது தமிழாசான் **பண்டிதர்.க.வீரகத்தி** (1922 - 1996) அவர்களே. 1982ம் ஆண்டு வெளிவந்த அவருடைய **கிருதயுகம்** சஞ்சிகையிலே (1982/7) **"ஊடலால் எரிந்தது கூடல் மாநகர்"** என்ற தலைப்பிலே **அகளங்கன்** அவர்கள் ஒரு கட்டுரையினை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரையினைப் படித்து விட்டு யாழ். பிரவுண் வீதியில் இருந்த பண்டிதர் வீரகத்தி அவர்களிடம் மூன்று கண்களைப்பற்றியும் எழுத்தாளர் அகளங்கன் அவர்களைப் பற்றியும் கேட்ட போது "நான், நீ, அகளங்கன், தன்மை, முன்னிலை, படர்க்கை. இவர்கள் தான் அந்த முக்கண்கள். இப்போதைக்கு அந்த நெற்றிக் கண்ணை நீ நேரிலே பார்க்காமலிருப்பது தான் நல்லது" என்று அறிவுரை கூறி அனுப்பி விட்டார். **"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே"** என்று சிவபிரானுடன் எதிர்வாதம் புரிந்த **நக்கீரனை "விதண்டாவாதி"** என்று உரத்துக் கூறிய அகளங்கன் **மூன்றாவது கண்ணே** தான்.

அகளங்கன் உயர்தரம் கற்ற சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக்கல்லூரியிலே தான் நானும் உயர்தரம் கற்றேன். நான் ஸ்கந்தாவிலே உயர்தரம் கற்கும் காலத்திலே அகளங்கன் **யாழ் பல்கலைக் கழகத்திலே தமிழ்மன்றத் தலைவராக இருந்தார்.** தமிழ் மன்றத்தினால் முதன் முதலாக வெளியிடப்பட்ட **"செந்தழல்"** என்ற மலரிலே அவர் **இலக்கியத்தேறல்'** என்ற கட்டுரையினை எழுதியிருந்தார். காளமேகப்புலவர், சயங்கொண்டார், கம்பர் ஆகியோரின் சிலேடைக் கவிதைகளில் காணப்படும் நயங்களை எடுத்துக்காட்டி எழுதியிருந்தார். அந்த நேரத்திலே அக்கட்டுரை எங்களுக்கு நலனாய்தலுக்கு வழிகாட்டியாக இருந்தது. **"இலக்கியத்தேறல்"** (1988) என்ற இவருடைய புகழ்பூத்த நூலின் அடுத்த பதிப்பிலே இக்கட்டுரை சேர்க்கப்பட வேண்டும்.

க.பொ.த. உயர்தரம் கற்கும் காலத்திலே "ஆய்வறிவு" எம்மிடம் வளர்ந்து வந்த காலம். எங்களின் விவாதத் திறனை வெளிப்படுத்துவதற்குரிய பிரதானமான களமாக ஈழநாடு பத்திரிகை விளங்கியது. இதன் வாரமலரிலே இடம் பெறும் மாணவர் எண்ணம் என்ற பகுதி எங்களுக்காக ஒதுக்கப்பட்டது.அதில் நானும் எழுதியிருக்கின்றேன்.[5] இக்கால கட்டத்திலே தான் திரு.நா.தர்மராஜா அவர்கள் **"வாலி" கொலைச்சரமும் கேள்விச்சரமும்** எனும் தலைப்பினிலே **"அகளங்கன்"** எழுதுவது என்று எழுதிக்கொண்டிருந்தார். **26-08-1979 தொடக்கம் 14-10-1979 வரை எட்டு வாரங்கள்** எழுதியிருந்தார் "ஒரு தீப்பொறி" என்ற பத்திரிகையிலே வெளிவந்திருக்க வேண்டிய கட்டுரைகள் என்று அக்காலத்திலே பெருமைப்பட்டோம். இந்தக்காலத்திலே அகளங்கன் யார் என்பது எமக்குத் தெரியாது. ம.க.அந்தனிசில் அவர்களைப் போல இருப்பாராக்கும் என்றே எண்ணிக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாங் கண்ணைக் கண்டனன்:**

எனக்கும் திரு.அகளங்கனுக்கும் 27-10-2004 அன்று மிக முக்கியமான நாளாகும். எனது நண்பரும் விரிவுரையாளருமாகிய **ந.பார்த்திபன்** அவர்கள் ஏற்படுத்தித் தந்த நல்லதொரு சந்தர்ப்பத்தினால் அன்று காலை சரியாக 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்திலே அகளங்கன் அவர்களை முதன் முதலாகப் பார்க்கிறேன். சிவத்தமிழ்ப் பொலிவுடன் நின்ற அவர் தமிழ் மரபுப்படி கரம் கூப்பி வரவேற்கிறார். அவர் தலைமையில் அன்று முல்லைமணியின் "மழைக்கோலம்" நாவலுக்கு நயவுரையினை நிகழ்த்தினேன். அன்று ஏற்பட்ட நட்பு வவுனியா மாவட்டத்திலே எங்கள் கல்வியியற் கல்லூரிக்கு வெளியே நான் என்னாலியன்ற தமிழ்ப்பணியினை ஆற்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

**கல்வியியற் கல்லூரியுடன் அகளங்கன் :**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் அகளங்கன் அவர்களுக்கும் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே (1993) தொடர்பு இருந்திருக்கிறது. திரு.செ.அழகரெத்தினம் அவர்கள் முதல் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட காலத்திலே அவரை, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினர் தமது பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக அழைத்ததிலிருந்து இந்தத் தொடர்பு ஏற்படுகின்றது.

இதனை விட எமது கல்லூரியில் உபபீடாதிபதியாக இருந்த திரு.ந.இரவீந்திரன் அவர்கள் 1992ம் ஆண்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலே ஆசிரியராக இருந்த பொழுது அகளங்கன் அவர்களும் ஆசிரியராகப் பணியாற்றினார். எமது கல்லூரி தொடங்கப்பட்ட பொழுது திரு.ந.இரவீந்திரன் அவர்கள் இந்து சமயப் பாடத்துறைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இதனால் கல்லூரியின் பலநிகழ்வுகளில் திரு அகளங்கன் அவர்களை அழைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. இத்தகையதான தொடர்புகள் அகளங்கன் அவர்கள் எமது கல்லூரி மீது **இனிய கீதத்தைப்** பாடுவதற்கும் காரணமாக அமைந்தன.

முன்னை நாட் பீடாதிபதி செ.அழகரெத்தினம் அவர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க 2000ம் ஆண்டு ஹம்சத்வனி இராகம் சதுஸ்ரஏகம் தாளம் என்பவற்றோடு கூடியதான **"வாழிய வாழியவே"** என்று தொடங்கும் **கல்லூரிக் கீதத்தினை** திரு. அகளங்கன் அவர்கள் இயற்றி வழங்கியிருந்தார். இந்தக் கீதம் எமக்கெல்லாம் "ஆனந்தக்களிப்பைத் தந்து எம்மையெல்லாம் ஆடாமல் ஆடவைக்கின்றது" எனலாம். இது **சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு 2000-2001** ஆம் ஆண்டு **வித்தியா தீபத்தில்** முதன்முதலாக வெளியாகியது.

எமது கல்லூரியின் தமிழ்மன்றம் இந்துமாமன்றம் என்பவற்றிற்கும் அகளங்கன் அவர்களுக்குமிடையிலான தொடர்பு குறிப்பிடத் தக்கதொன்று. தமிழ் மன்றத்தினால் இவருடைய **"மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்"** நூல் வெளியிட்டு வைக்கப்பட்டமையும் **"நறுந்தமிழ்"** எனும் நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை. திருக்குறள் மன்றத்திலே திருக்குறள் தொடர்பாக ஆற்றப்பட்ட உரை அற்புதமானது. 28-09-2007 அன்று எமது கல்லூ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியில் நடைபெற்ற **இந்துமாநாட்டிலே** - இராஜ ஐயனார் அரங்கினிலே இவரால் நிகழ்த்தப்பட்ட **"வன்னிப் பிரதேசத்தில் கிராமிய வழிபாட்டின் செல்வாக்கு"** எனும் உரை எமது இந்து சமய மாணவ ஆசிரியர்களுக்கும் ஏனையோர்க்கும் பயன்மிக்கது.

எமது கல்லூரிக்கான இவருடைய இன்னுமொரு குறிப்பிடத்தக்க பணியுண்டு. 2003ம் ஆண்டு தற்போதைய பீடாதிபதியான திரு.க.பேர்ணாட் அவர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்கி வவுனியா குருமன்காடு ஸ்ரீகாளி அம்மன் தேவஸ்தான சபையின் தலைவர் திரு.இ.கிருபாமூர்த்தி அவர்களின் உதவியுடன் இவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட **கலைமகள் சிலை** அமைத்தலானது இவரையும் என்றும் நன்றி கூர வைப்பதாகும்.

## எழுத்து இலக்கியப்பணிகள்

அகளங்கன் அவர்களின் எழுத்து இலக்கியப்பணிகள் எனும் போது அவை நூல்வடிவிலும் கட்டுரை வடிவிலும் ஆவணங்களாக உள்ளன. இதுவரை நாற்பதுக்கும் அதிகமான நூல்களையும், நானூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அச்சிலே வெளிவந்திருக்கும் இந்த இலக்கியங்களை **கவிதை, கட்டுரை, ஆய்வு, நாடகம், உரை, வரலாறு, சமயம், கதை, நாவல், சிறுகதை, நாட்டிய நாடகம்** எனப் பலவகையாகப் பகுத்துக் கூறமுடியும்.

## கவிதை இலக்கியம்

இவ்வகையில் **"செல்" "வா" என்று ஆணையிடாய்** (1977), **சேரர் வழியில் வீரர் காவியம்** (1982) **சமவெளி மலைகள்** (அகளங்கன், சு.முரளிதரன்) **தென்றலும் தெம்மாங்கும்** (1993) **அகளங்கன் கவிதைகள்** (1996 - வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப்பரிசு) **இசைப் பாமாலை** (1998) **சுட்டிக்குருவிகள்** (2003) **சின்னச்சிட்டுக்கள்** (2005) **சின்னஞ்சிறிய சிறகுகள்** (2012 தேசிய சாகித்திய மண்டல விருது, வட மாகாண சாகித்திய மண்டல விருது, தமிழியல் விருது) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அகளங்கன் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான இலக்கிய வடிவம் கவிதை என்பது அவர்படைத்த கவிதை இலக்கியங்களைப் படிக்கும் போது நன்கு தெரிகிறது. நான் முதன் முதலில் படித்துச் சுவைத்த இவருடைய கவிதை **கல்லெனத் திரண்ட தோளும் கடலென விரிந்த மார்பும்'** என்று தொடங்கும் பண்டாரவன்னியன் பற்றிய பாடலாகும். முதன்முதலாக **பண்டார வன்னியன் விழா மலரில்** (1982) வெளிவந்த இந்தப்பாடல் "வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்" என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எமக்கு ஞாபகப் படுத்துகின்றது.

அகளங்கனின் கவிதைகளைப் படித்துச் சுவைத்து விட்டு அவருக்கு இத்தகைய கவிதையாற்றல் எப்படி எங்கிருந்து வந்தது என்று கேட்கிறேன். அதற்கு அவர் கேட்கிறார். **கிராமத்துப் புழுதியில் ஓடித்திரிந்து, தடாகத்து நீரில் ஆடிக்களித்து, தென்றலிலே தலைதுவட்டித் தேன் மலரின் மணம் பூசி, மயிலையும் குயிலையும் மனத்தில் லயித்து, வயலையும் முயலையும் வனப்பையும் ரசித்து, கிராமத்தில் வளர்ந்தவன் நான். எனக்கு வராமற்தான் போகுமா கவிதை**[7] என்று. அடுத்து **எனது தந்தையாருக்கு கவிதைகளிலே மிகுந்த ஈடுபாடு உண்டு. சில கவிதைகளும் எழுதியிருக்கிறார். எனவே எனக்குக் கவிதை எழுதும் ஆற்றல் தந்தை வழிச்சொத்து.**[8]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய முதற்கவிதை நூலாகிய **"செல்" "வா" என்று ஆணையிடாய்** என்பது பெரியார் S.J.V.செல்வநாயகம் அவர்களின் மரண ஊர்வலத்தின் போது பாடுவதற்காய் பாடிக்கொடுத்தது. **"சேரர் வழியில் வீரர் காவியம்"** 32 பக்கங்களைக் கொண்ட ஒரு குறுங்காவியம். சிலப்பதிகாரத்தில் வரும் வஞ்சிக் காண்டத்தின் மீது நெஞ்சைப் பறிகொடுத்து இவர்பாடிய காவியம் தான் இது. **சுட்டிக்குருவிகள்** - மழலைப் பாடல்களாகும். **சின்னச் சிட்டுக்கள்** சிறுவர்களுக்கானது. **சின்னஞ்சிறிய சிறகுகள்** நூலும் சிறுவர்களுக்கானது.

**"சுனாமிப் பேரலையே"** (26-12-2004) என்ற தலைப்பிலான நூல் சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்களையும், துன்ப துயரங்களையும், சுனாமியின் கோரத் தாண்டவத்தைக் கண்டிக்கும் கருத்துக்களையும் கொண்ட கவியரங்கக் கவிதைகளைக் கொண்டது. **கவிஞர் தமிழ்மணி அகளங்கன்** தலைமையில் கவிஞர்களான க.கோகுலதாஸ். குரும்பையூர் த.ஜங்கரன், கே.ஆர்.றஜீவன், சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி ஆகியோர் பங்கு கொண்டது. இதிலே சுனாமி அடித்த அடியை விட அகளங்கன் சுனாமிக்கு அடித்த அடிதான் அடி.

இதனை விட வவுனியா நகரசபைக் கீதம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கீதம், சுத்தானந்த பாலர் பாடசாலைக் கீதம், வவுனியா இந்து மாமன்றக்கீதம், மற்றும் பல பாடசாலைகளின் கீதங்கள் என்பனவும் இவரால் இயற்றப்பட்டனவாகும். இவருடைய **நிகரிலா அழகு[9], வித்தியா விநாயகர் துதி[10]** முதலான பாடல்கள் தொகுத்து வெளியிடப்பட வேண்டியவையாகும்.

பல நாட்டிய நாடகங்களையும், கும்மி,கரகாட்டம்,. கோலாட்டம், போன்ற கலை வடிவங்களுக்கான பாடல்களையும், புதுவருடம், பொங்கல், தொழில்,கிராமியம், திருத்தலப் பாடல்கள் எனப் பல பாடல்களையும் எழுதியுள்ளார்.

## கட்டுரைத் தொகுப்பு நூல்கள் :

**இலக்கியத் தேறல்** (1988) **இலக்கியச்சிமிழ்** (1992, 1993) **செந்தமிழும் நாப்பழக்கம்** (1997) **இலக்கியச்சரம்** (2000) **பாரதப்போரில் மீறல்கள்** (2003) **நறுந்தமிழ்** (2006) **வேரும் விழுதும்** (2008) **கம்பனில் நான்** (2013) என்பன இவ்வகையில் அடங்குவனவாகும். ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும், மலர்களிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்த அகளங்கனுடைய கட்டுரைகளிற்சில மேற்படி நூல்களிலே தொகுக்கப்பட்டுள்ளன.

இலக்கியத்தேறலில் குறிப்பிடத்தக்க கட்டுரையாக விளங்குவது **"நக்கீரர் ஒரு விதண்டாவாதி"** என்பதாகும். இக்கட்டுரையின் தரம் கோ.சுந்தரமூர்த்தி அவர்களது **வழுஉச்சொல்லென்பதறிகிலன்[1]** எனும் கட்டுரையுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது நன்கு தெரிய வரும். "நலத்த சொல் வழு உச்சொல் என்பதறிகிலன்" என்று முடிவான பொருளை உணர்த்தும் அடியிருக்க ,. குறையாக உள்ள தொடரை அவர் ஏன் பயன்படுத்தினார் என்பதும் ஆய்வுக்குரியது. அதனை மூன்றாவது கண்ணின் பார்வைக்கு விட்டுவிடுகின்றேன்.

**"பிணை மானும் துணைமானும்", "கட்டிலும் வட்டிலும்",** அப்புலி மாமாவான விதம் பற்றிய **"அம்புலி மாமா"** முதலான பண்பாட்டு விழுமியக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளின் தொகுப்பான **"இலக்கியச் சிமிழ்"** நூல் இரண்டு பதிப்புக்கள் கண்டது. பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"செந்தமிழும் நாப்பழக்கம்"** என்ற நூல் எமது மாணவர்களின் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்ப்பதற்காக எழுதப்பட்டது.

ஈழத்திலே இரசனை முறைத் திறனாய்வினை வளர்த்தெடுத்து வந்தவர்களில் ந.ச பொன்னம்பலபிள்ளை, பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, இரசிகமணி கனக. செந்திநாதன் ஆகியோருக்கு முக்கியமான இடமிருக்கிறது. இன்று இவர்களுடைய வழியில் நின்று இலக்கிய இரசனையை ஊட்டுபவராக தமிழ்மணி அகளங்கன் திகழ்கின்றார். இதற்குத் தக்க சான்று இவருடைய **இலக்கியச்சரம்.** இது கொலைச்சரமும் கேள்விச்சரமும் போன்றதன்று.

**"பாரதப்போரில் மீறல்கள்"** யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்கக்கூடிய நூலாகும். தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி (Classical Language) என்பது பலருக்குத் தெரியாது. அதனை இன்றும் பலர் ஓர் உள்நாட்டு மொழியாகவே (Vernacular Language) தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவ்வாறு பெருமை அறியப்படாது சீரழிந்து போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாத அகளங்கனால் எழுதப்பட்ட **"செந்தமிழும் செம்மொழியும்"** எனும் கட்டுரையைக் கொண்ட புகழ்பூத்த நூல் **"நறுந்தமிழ்" "ஏகலைவனின் கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்ட துரோணாச் சாரியார் துரோகியா?"** என்ற சிறந்த கட்டுரையைக் கொண்ட நூல் **வேரும் விழுதும்.** கம்பராமாயணம் பற்றிய சர்ச்சைக்குரிய கட்டுரைகள் பலவற்றைக் கொண்ட சிறந்த நூல் **"கம்பனில் நான்."**

## கட்டுரைகள்

நூல் அமைப்பிற்குள் தொகுக்கப்படாது பல கட்டுரைகள் உள்ளன. இவ்வகையில் இவருடைய **குறளும் சிலம்பும்[12], வன்னிப் பிரதேச வயற்பண்பாடு[13], வன்னியின் வரலாறும் வாழ்வும்[14], இந்துசமயமும் சக்தி வழிபாடும்[15], வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள்[16], கல்வியும் இலக்கியமும்[17], திருக்குறளில் பிறன் இல் விளையாமை, காப்புப் பாடல்களில் கணபதிப் பெருமான்** முதலானவை குறிப்பிடத்தக்கவை.

## ஆய்வு நூல்கள் :

**வாலி,** *(1987, 1989, 2006),* **மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்** *(1994)* **கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு** *(1999),* **பாரதியாரும் பாஞ்சாலி சபதமும்** *(2007)* என்பன இவ்வகையுள் அடங்கும். அகளங்கன் அவர்களை மூன்றாவது கண்ணாக அடையாளங் காட்டிய நூல்களில் தலையாயது **"வாலி"**. பேராசிரியர் சி.தில்லைநாதன் பல்கலைக் கழக மாணவனாக இருந்த காலத்தில் எழுதிய **கம்பன் காட்டும்வாலி[18]** பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் விரிவுரையாளராக இருந்த போது எழுதிய **காரணம் சமாதானம் சாட்டு[19]** பேராசிரியர் வி.செல்வநாயகம் விரிவுரையாளராக இருந்த போது எழுதிய **கண்ணுற்றான் வாலி[20]** என்னும் கட்டுரைகள் அகளங்கனின் வாலியைச் சரியாக விளங்கிக் கொள்ள உதவின.

## நாடக நூல்கள் :

அகளங்கன் அவர்களின் நாடக நூல்கள் என்ற வகையில் **"அன்றில் பறவைகள்"** *(1992 - தேசிய சாகித்திய மண்டலப்பரிசு)* **இலக்கிய நாடகங்கள்** *(1994- வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப்பரிசு,* கொழும்புத் தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப்பரிசு) **கூவாதகுயில்கள்** (2001) **கங்கையின் மைந்தன்** (2009 - தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது, வடமாகாண சாகித்திய மண்டல விருது, தமிழியல் விருது, இலங்கை இலக்கியப் பேரவை விருது, தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ்) என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றோடு அண்மையில் **நம்பி ஆரூரர்**[21] எனும் பா நாடகத்தையும் எழுதியிருக்கிறார். இவற்றிலுள்ள பெரும்பாலான நாடகங்கள் **இலங்கை வானொலியில்** ஒலிபரப்பப்பட்டவை. இவை குடும்பம், சமூகம், இலக்கியம், வரலாறு, சார்ந்தவை. நாடகம் என்பதினை நாடு அகம் எனப்பிரித்து நாட்டிலுள்ளவர்களைத் தன்பால் ஈர்த்து அவர்கள் வாழ்வை மேம்படுத்துவது என்று பொருள் கொள்வர். அகளங்கனுடைய நாடகங்களுக்கு இந்த ஆற்றலுண்டு.

## உரை நூல்கள்

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் முன்மாதிரியான ஆசிரியர். சிறந்த பேச்சாளர். சமயச் சொற்பொழிவாளர். புராணபடன உரைஞர். இவற்றின் பயிற்சியினால் பல நூல்களுக்கு உரையினையும் எழுதியுள்ளார். **ஆத்திசூடி** உரை(1995) **கொன்றை வேந்தன்** உரை (1996) **வாக்குண்டாம்** தெளிவுரை (1997) **சிவபுராணம்** பொருளுரை (1997) **நல்வழி** பொழிப்புரை (1998) **வெற்றிவேற்கை** உரை (2000) **திருவெம்பாவை** உரை (2002) **சகலகலாவல்லி மாலை** உரை (2011) என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிட **"முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்"** (1992), **நாமறிந்த நாவலர்** (1997, 2008) **தமிழ்த்தூது வண.பிதா தனி நாயகம் அடிகளார்** (2014)

## சிறுகதை – நாவல் முயற்சிகள்:

நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் என்பவற்றின் மீதும் இவர் கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. இவருடைய **"மீண்டும் ஒரு குருஷேத்திரம்"** 1985) எனும் சிறுகதை ஈழ முரசு பத்திரிகையில் வெளிவந்தது. **"வெய்யில் மட்டுமா சுடும்" "தீக்குளிப்பு" "வேலிகளும் போலிகளும்" "உறவு தரும் உயிர்ப்பு" "இருள் விலகுகிறது" "நாளைக்கும் பூ மலரும்" "விழா ஒன்று நடைபெறுகிறது" "துருவநட்சத்திரம்" "குண்டுமணிச்சாமியார்" "வழக்குத்தவணை" "கொண்டல் பிசின்" "பேயாய் கணங்களாய்" "மண்ணின் மைந்தர்கள்" "யாழ்தேவி" "மனிததெய்வங்கள்" "மீண்டும் கோழையாய், முற்றத்துக் கரடி, ஒரு கால், வத்துக்குளம், பாம்பின் குட்டி பாம்பு, கொக்குக்குஞ்சுகள், வேலை தேடி, நாட்டு நடப்பு, இந்தப் பிள்ளைக்கு.** முதலான சிறுகதைகளும் **"மலர்ந்தும் மலராத"** எனும் நாவலும் நூலுருப்பெறாமல் இருக்கின்றன.

தாம் நூல்கள் கட்டுரைகள் எழுதுவதுடன் நூல்களை எழுதுவோர்க்கும் தரமான **அணிந்துரை, மதிப்பீட்டுரை** என்பன வழங்கி ஊக்குவித்து வருகிறார். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா இந்துமாமன்றம், வவுனியா பிரதேச கலாசாரப் பேரவை முதலானவற்றில் முக்கியமான பதவிகள் வகித்து தமிழ் சைவப் பணியினை ஆற்றி வருகின்றார். தமது குடும்பம் தொழில் என்பனவற்றுடன் இவ்வாறான பாரிய பணியினை இவர் மேற்கொள்வதற்கு மிகவும் உற்றதுணையாக விளங்குபவர். இவரின் துணைவியார் **திருமதி பூரணேஸ்வரி அகளங்கன்** அவர்களாவர்.

## வெள்ளித் தமிழ்ச் சங்கம்:

"வீடுகள் தோறும் கலையின் ஒளி திகழ வேண்டும்" என்றவர் மகாகவி பாரதியார். வெள்ளிக் கிழமைகள் தோறும் தமது இல்லத்திலே **"வெள்ளித் தமிழ்ச்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கம்"** ஒன்றை நடாத்தினார். இதனால் தமிழ்த் தொண்டும் சமயப் பற்றும் வளர்ப்பதற்கான ஒரு பயிற்சி முகாமாக அது திகழ்ந்தது. நுவரெலியா மாவட்டத்திலே உள்ள கோல்புறூக் மகா வித்தியாலயத்திலே அகளங்கன் ஆசிரியராக இருந்த காலத்திலே அதாவது 1989ம் ஆண்டிலிருந்து அவருடைய விடுதியிலே இந்த வெள்ளித் தமிழ்ச் சங்கம் நடந்து வந்தது.

மாலை 6.30 மணிக்கு இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 21 கூட்டம் வரையில் நடைபெற்றிருக்கிறது. **தலைவர் அகளங்கன். செயலாளர் அவரது துணைவியார்.** அவர்களது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள். சங்கத்தின் ஏனைய உத்தியோகத்தர்களாவர் இம்மன்றத்திலே செயலாளர்,. அறிக்கையும் வாசிக்கப்பட்டது. "அன்பி னாலே குடும்பம் நடத்தும் அன்றில்ப் பறவைகள்....." எனும் குடும்ப கீதமும் ஆரம்பத்தில் இசைத்துக் கூட்டம் ஆரம்பமாகும் கூட்டத்திற்குப் பிரதம விருந்தினரும் அழைக்கப்படுவதுண்டு. தமிழ், சமயம். பொது விசயங்கள் பேசப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இது ஒரு நல்ல முன்மாதிரி முயற்சி. எங்கள் ஒவ்வொருவரதும் வீடுகளில் வாரந்தோறும் நடைபெற வேண்டிய நிகழ்வு. இதனால் தமிழும் சமயமும் வாழும் வளரும். அதனால் நாமும் வாழ்வோம். வளர்வோம்.

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் பேச்சொன்றும் செயல் வேறொன்றுமாக நடந்து கொள்பவரல்லர். கவிஞர் செ.குணரத்தினம் அவர்கள் கூறுவது போல "மரமொடிந்து போனாலும் மனமொடிந்து போகும்" இயல்பினராக அவர் இருந்தாலும் "சிறுமை கண்டு பொங்குகின்ற" தன்மை வாய்ந்தவராகவும், எதனையும் நேருக்கு நேர் நின்று கூறும் இயல்புடையவராகவும் வாழ்ந்து, தமிழ் சைவத் தொண்டை ஆற்றி வருகின்றார். அவரைப்பற்றியும் அவரது பணிகளைப்பற்றியும் இக்கட்டுரை முழுமையாகக் கூறியுள்ளது. என்பதினை என்னால் ஏற்கமுடியாது அவருடைய வாழ்வினையும் பணிகளையும் பற்றி மேலும் தேடச் செய்வதற்கான ஒரு சிறிய முயற்சியே இக்கட்டுரை.

**குறிப்பு** : இக்கட்டுரை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு, இற்றைப் படுத்தப்பட்டுள்ளது. அதனால் 2009 இன் பின்னான விபரங்கள் விரிவஞ்சி மிகமிக சுருக்கமாகவே தரப்பட்டுள்ளன. அவையும் எழுதப்பட வேண்டும்.

## அடிக் குறிப்புக்கள்


1. சங்குப் புலவர் பண்டித வித்துவான், தி.(விளக்கஉரை),. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழனுலா சென்னை, 1971 - ப122
2. கணபதிப்பிள்ளை, இலக்கியகலாநிதி, பண்டிதமணி, சி."யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக்கண்கள்" தினகரன் வாரமஞ்சரி. 14.11.1982
3. செந்திநாதன் கனக மூன்றாவது கண், வரதர் வெளியீடு யாழ்ப்பாணம். 1959
4. தர்மராசா, நா "இலக்கியத்தேறல்" செந்தழல். தமிழ்மன்ற யாழ்ப்பாண வளாகம் 21.1.1977
5. கௌரிகாந்தன்,மு "பல்கலைக்கழகமட்டத்தில் ராக்கிங் அவசியம்" ஈழநாடு வாரமலர்- மாணவர் எண்ணம் - மாணவர் விவாத அரங்கு 06.07.978




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அகளங்கன், கவிஞர் அகளங்கன் கவிதைகள் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் 1996.ப.10
7. அகளங்கன் கவிஞர் தென்றலும் தெம்மாங்கும் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் 1993
8. மு.கு நூல் முன்னுரையில்
9. சுத்தானந்தம் 50, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் 2002 ப-143
10. அருள் மிகு வித்தியா விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் பக் 4-5 இந்துமன்றம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் 2008
11. இளங்கதிர் பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடு 1965 - 66, பக் 35-40
12. கலைமருதம் வவுனியா பிரதேச இலக்கிய விழாமலர் 1995
13. மருதநிலா வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாமலர் 1996 பக் - 19-29
14. கலையருவி வன்னிப்பிதேச சிறப்புமலர் கொழும்புத்தமிழ்ச்சங்க வெளியீடு 1998
15. காளி தரிசனம் வவுனியா குருமன்காடு ஸ்ரீகாளி அம்மன் இராச கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் 2006. பக் 62 - 66
16. மருத தீபம், வவுனியா மாவட்ட கலாசார விழா மலர் 2006, பக் 21-32
17. மாருதம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 2007. பக் 3-6
18. இளங்கதிர் தமிழ்ச் சங்கம் இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை 1958-1959, பக் 9-12
19. மேலது பக் 44-47
20. மேலது பக் 148-154
21. சிவதத்துவ மலர் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் கோவில்க்குளம் வவுனியா 2008 பக் 86-94.

நன்றி

அன்றில் பறவைகள் நூலின் அணிந்துரையில் **கலாநிதி சி.மௌனகுரு M.A. PhD** அவர்கள் (கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர்)

அகளங்கன் பணிவும் ஆற்றலும் சுறுசுறுப்பும் சமூக அர்ப்பணிப்புப் பண்பும், பல்துறைகளில் ஆர்வமும் கொண்டவராக யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவப்பருவத்தினராக அறிமுகமான காலந்தொட்டு இன்று வரை அவர் எழுத்துக்களையும், வளர்ச்சியையும் அவதானித்துள்ளேன். அவர் வளர்ச்சி மகிழ்ச்சி தருகிறது. அகளங்களின் சிறப்பம்சம், தான் வாழும் சமூகத்தை, கூர்ந்து நோக்கி அதிற் காணப்படும் முரண்பாடுகளையும், போலித்தனங்களையும் காட்டி சமூகத்தை ஆற்றுப்படுத்த முனையும் போக்காகும். (1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

உ.

சிவமயம்

எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவடிகளே துணை

## "பன்முக மேதைமைப் பண்புகளின் உறைவிடம்"

மகா வித்துவான், **கலாநிதி.கனகசபாபதி நாகேஸ்வரன்** எம்.ஏ.பி.எச்.டி.
சமா நீதி (அ.இ) முதுநிலை விரிவுரையாளர் மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

**சா**ல்பு, புலமை, கவித்துவம், வித்துவம், பேச்சாற்றல், காவியமியற்றல், தலைமைத்துவ ஆளுமை, விவேகம், மனிதாபிமானம், தமிழபிமானம், தமிழ்ப் பண்பாட்டபிமானம், நுண்ணறிவு, பொதுமக்கள் தொண்டு, தெய்வநம்பிக்கை, ஆசிரியத்துவம் என்ற அத்தனை பன்முக மேதைமைப் பண்புகளின் உறைவிடம் கலாநிதி அகளங்கன் அவர்கள். தமிழிலக்கியம், புராண இதிகாச வியாக்யானம், நூல்களை எழுதுதல் எனுந் துறைகளிலும் துறைபோன வித்தகர்.

யாழ். பல்கலைக் கழகத்திலே இவர் விஞ்ஞானப்பிரிவிலே (கணிதம்) கல்வியைத் தொடர யான் தமிழ் சிறப்புப் பட்டதாரி வகுப்பிலே பயின்றேன். இளமையிலும், பல்கலைக் கழகத்திலும் - பயிலுங்காலத்திலேயே உணர்ச்சியும் உத்வேகமும் மிக்க நல்ல கவிதைகளை எழுதியவர். இன்றும் சலியாது எழுதிவருபவர். இனிமையும், இங்கிதமும் மிக்கவர். இப்பண்புகள் அவரது குடும்பச் சொத்தென்பதை முன்னரே யானறியேன். வன்னிப் பிரதேசத்து வளவாளர் இவர்.

ஒருசாலை பல்கலைக் கழக மாணவர்களாயினும் இவரது குடும்பப் பின்னணியைப் பிற்காலத்திலே தான் யானறிந்தேன். அடிக்கடி வவுனியாத் திருக் கோவில்களிலும், இலக்கிய நூல் வெளியீடுகளிலும் **அகளங்கனின்** பெயர் பத்திரிகைகளிலே அடிபடும். பேச்சின் சாராம்சம் வெளிவரும். இவற்றையெல்லாம் படித்து இவரது தமிழ், சைவப் பணிகளை அறிந்து கொள்வேன். இவரது தமிழிலக்கிய, சமய ஈடுபாடுகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஈர்த்தன. காவியரசனை ஈடுபாடு மிகவும் அலாதியானது. மகாபாரதம். கம்பராமாயணம், பெரியபுராண ஈடுபாடு உச்சம்.

போக்குவரத்து இல்லாத நிலைமை; பயங்கரமான நாட்களிலே யாழ்ப் பாணத்துப் பிரயாணம் - வவுனியாவிலே நிற்கவேண்டி "தங்கிச் செல்ல வேண்டிய வேளைகளிலே பெரிதும் துணை புரிந்த நிறுவனம் வவுனியா சுத்தானந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து இளைஞர் சங்கம். நீண்டகாலம் இச்சங்கத்தின் தலைமைப் பதவியை அலங்கரித்துத் தொண்டு செய்பவர் கலாநிதி அகளங்கனின் மூத்த தமையனார் **சமூகஜோதி சேனாதிராசா ஐயா** அவர்கள். உயிருக்குப் பயந்து தெய்வத்தையே நம்பி இம்மண்டபத்திலேயும், அறைகளிலேயும் தங்கிய யான், அகளங்கனின் குடும்பத்தினரது சேவை மனப்பான்மையை நீள நினைந்து வியந்தேன்.

எல்லோர்க்கும் இனிமையான கலாநிதி அகளங்கன் எம்மையும் அழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வாய்ப்புத் தந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக் கவியரங்கு நிகழ்விலே தலைமையேற்று வானொலிக் கவியரங்கை நடத்தியவர். நல்ல தரமான மெல்லிசைப் பாடல்களை எழுதியவர் இன்றும் வானொலியிலே அவை தெவிட்டாது ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன.

கவிதை மட்டுமல்ல, சிறுகதை, நாவல், காவியம், குறுங்கதை, என்றெல்லாம் எழுதவல்ல ஆளுமைமிக்க இலக்கியப்படைப்பாளி. எமது சப்ரகமுவ பல்கலைக் கழகத்திலே தமிழ் சிறப்பு ஆய்வேடு எழுதும் வகையிலே **"கலாநிதி அகளங்கனது இலக்கியப் பங்களிப்புகள்"** எழுதப்பட்டு, எமது மேற்பார்வையிலே அவ்வேடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவரது **நாடக ஆங்கங்களும்** ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன. இவரது நூல்கள் எமது பல்கலைக்கழக நூலகத்திலே இருக்கின்றன. நடுநிலையான ஆய்வுப்பார்வை கொண்ட இவரது தமிழ் வசன நடை மிகவும் சரளமானது. எளிமையானது. தருக்கரீதியானது. சிந்தனைக்கு விருந்தாவது.

கலாநிதி அகளங்கனோடு இறுக்கமான தொடர்பு 1995 ஆம் ஆண்டுகளிலே எனக்குக் கிட்டியது. யாழிலிருந்து இடம் பெயர்ந்து குடும்பத்துடன் வவுனியாவிற்கு கையறு நிலையினனாக (உயிரைப் பாதுகாக்க) வந்த பொழுது, என்னை உபசரித்து வவுனியா இந்துமாமன்றப் பெரியவர் **சி.ஏ.இராமஸ்வாமி** ஐயா மற்றும் பலரை அறிமுகஞ் செய்து, வவுனை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலின் தலைவரும், நீம் அரிசி ஆலையின் உரிமையாளருமான **சிவமணி மு.சபாநாதன்** ஐயா அவர்களது இல்லத்தில் தற்காலிகமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தந்தவர் நண்பர் அகளங்கன் அவர்களே. இச்சம்பவம் என் உயிருள்ளவரை நிலைக்கும். அவர் செய்த உதவிக்கு யாது கைமாறு செய்வேன்! என்று கவல்கின்றேன்.

கலாநிதி அகளங்கனுக்கு மலர்கள் அச்சிடுவது கைவந்த கலை. கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் மகாகும்பாபிஷேக மலர் அச்சிட வேண்டும் என்று கூறினார் ஆலய அறங்காவலர் சபையின் செயலாளர் ஆ. நவரத்தினராசா. இப்பணியிலே அடியேனுக்குப் பெரிதும் உதவியவர்கள் அகளங்கன் அவர்களும், வித்துவான் வ. செல்லையா அவர்களுமாவர். **சிவதத்துவமலர்** 1996 இல் வெளிவந்தது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்திலே எனது மணி விழாவையும், நூல் வெளியீட்டையும் கலைஞர் கௌரவத்தையும் தலைமையேற்று நடத்தியவர் கலாநிதி அகளங்கன் குடும்பத்தினர். திருமதி பூரணேஸ்வரி, மகன் அநுபாயன், மகள் அநிந்திதை குடும்பத்தினரின் பண்பும் பணிவும் என்னை அவரது வீட்டு விருந்தாளியாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான்" கலாநிதி அகளங்கன். கண்ணியமும், உண்மையும் அகளங்கனது சிறப்புச் செல்வங்கள். நல்ல புலமையும் வித்துவமுங் கொண்ட சிறந்த நண்பர். மனிதாபிமானமிக்க பண்பாட்டாளர். அவரது இல்லமும் அவ்வாறே.

அகளங்கன் அவர்கள் குடும்ப சுகத்துடனும், நீடிய ஆயுளுடனும் சகல வளங்களும் பெற்றுச், சீரோடும் சிறப்போடும் வாழ, எம் குலதெய்வம் அகிலலோக நாயகி ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன். வாழி வாழி

சுபம்

அன்பு நண்பன்,

**க. நாகேஸ்வரன்**

13.04.2014

---

**அன்றில் பறவைகள்** பற்றி **அன்புமணி இரா.நாகலிங்கம்** அவர்களின் கடிதம் (28.04.1992)

திரு.மௌனகுரு அவர்கள் அணிந்துரையின் இறுதியில் ஒரு நாடகம் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்று புத்திமதிகள் கூறினாரோ, அந்தப் புத்திமதிகள் எல்லாவற்றையும் நிறைவேற்றும் வகையில் உங்கள் நாடகங்கள் அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு நாடகத்திலும் இடம்பெறும் தொனிப்பொருள், வாழ்க்கைப் பிரச்சினை, படிப்போர் மனதில் ஆழமாகப் பதியும் வண்ணம் மிகவும் சிறப்பாக, இறுக்கமாக, சுவையாக ஒவ்வொரு நாடகமும் அமைந்துள்ளது.

இந்த நாடகங்கள் எல்லாவற்றையும் வானொலியில் கேட்டிருக்கிறேன். எழுத்தில் படிக்கும் போது இன்னும் சுவாரஸ்யமாக உள்ளது. உயிருள்ள பாத்திரங்கள். அன்றாடம் நடைபெறும் சம்பவங்கள். படிக்கும் போதே வாசகர் அகக்கண்களைத் திறக்கும் வகையில் அமைந்துள்ள treatment எல்லாமே சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# அகளங்கன் ஒரு பழந்தமிழ்ப் பல்கலைக் கழகம்

**திரு.சு.முரளிதரன்** பணிப்பாளர், தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்தி.
இணைப்பாளர், ஜனாதிபதி நிகழ்ச்சித்திட்டங்கள். கல்வி அமைச்சு.

**1983** இனக்கலவரம் மலையகத்தில் பணியாற்றிய யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தமையால் பெரும்பாலானவர்கள் சொந்த இடங்களுக்கே இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட முனைப்புற்றார்கள். இதன் காரணமாக மலையகத்தில் கற்ற இளைஞர்கள் தொண்டராசிரியர்களாகப் பணியாற்றத் தலைப்பட்டமையால் ஓரளவு பாடசாலைகள் நிலைகுலையாமல் தக்க வைக்கப்பட்டன.

நானும் **பசுமலை** என தமிழிலும் **ஹோல்புறுக்** என ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் தேயிலைத் தோட்டங்கள் சூழ்ந்த சிறுநகரத்திலே அமைந்துள்ள பாடசாலையில் க.பொ.த சாதரண தரம் வரை கற்று, கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் உயர்தர விஞ்ஞான கல்வி கற்று முதலாம் தடவை பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்ல போதுமான புள்ளிகளை பெற்றுக்கொள்ளாமல் 1983ம் ஆண்டு இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்து காத்திருந்த வேளையில், நான் கற்ற அந்த ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலத்திலேயே தொண்டர் ஆசிரியராக பணியாற்றவும் பின் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியராகவும் கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்தது.

எனது ஊர் பசுமலையை அடுத்துள்ள **மன்ராசி** எனும் சிறுநகரம். பொதுவாக மலையகத்தின் ஊர்கள் தோட்டங்கள் என்பற்றுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் வெவ்வேறு பெயர்கள் இருக்கும். பொதுவாக ஆங்கிலப் பெயர்கள் ஐக்கிய இராச்சியத்திலுள்ள ஊர்ப் பெயர்களாக இருக்கும். தேயிலைத் தோட்டங்களுக்கு உரிமையாளர்களாக இருந்த வெள்ளைக்காரர்கள் தங்களின் சொந்த ஊர்ப் பெயர்களை தம் தேயிலைத் தோட்டங்களுக்கு வைத்தார்கள். மன்ராசிக்கு Glenlyon என்ற ஆங்கில பெயருண்டு. இப்பெயரில் ஸ்கொட்லாந்தில் ஓர் ஊருண்டு. தமிழக கிராமங்களில் இருந்து தருவிக்கப்பட்டு தோட்டங்களில் குடியேறியவர்கள் தமிழ்ப் பெயர்களை அத்தோட்டங்களுக்குச் சூட்டி அழைத்தார்கள். இவ்வாறு சூட்டப்பட்ட பெயர்களில் தமிழக கிராமப்பெயர்கள் அதிகமாக இருப்பதில்லை. பெயர்களெல்லாம் புது பெயர்களே. ஆனால் பசுமலை **மதுரையை**யொட்டி இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நகரத்தின் பெயராகவும் இருப்பது அவதானிக்கத்தக்கது. என் வாழ்க்கைக்கு ஒரு வரலாறு எழுதப்படுமாயின் இந்ந பசுமலையை விட்டு எழுத முடியாதது போலவே, **அகளங்கனின்** வாழ்க்கையும் அமைந்திருக்கும் என்று நம்பலாம்.

மன்ராசி நகரத்தில் ப.மு.சுப்ரமணியம்பிள்ளை எனும் நீண்ட கால கடை வணிகராக விளங்கியவரே என் தந்தை. கடையோடு ஒட்டிய வீடு. சகோதரர்கள் யாவரும் வர்த்தக உலகோடு பிணைந்தவர்கள். நாளேடுகள், தமிழகத்து சஞ்சிகைள், வீரகேசரி பிரசுரங்கள் முதலியவற்றை சிறுவயது முதல் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தவன் மாத்திரமல்லாது வாசித்தது போல ஏதாவது எழுதவேண்டும் என்ற ஆவல் கொண்டவன். சகோதரர்களோடு பால்ய பருவம் முதல் பசுமலை சரசவி திரையரங்கில் எல்லாத் தமிழ்த் திரைப்படங்களையும் பார்த்து ரசித்தவன். அந்த உந்தலில் நாடக முயற்சிகள் மேற்கொண்டதும் உண்டு. இதற்கெல்லாம் உரமிடுவதாக அமைந்தது **திரு.செ.யோகராசா** அவர்கள் (தற்போது கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்) தமிழ் ஆசிரியராக எனக்கு அமைந்தது. க.பொ.த சாதாரண தேர்வு பரீட்சை முடிந்தவுடன் அவரது பிரத்தியேக நூலகத்திலிருந்த மிகத்தரம் வாய்ந்த நூல்களும் சஞ்சிகைகளும் என்னை புடம் போட்டன. அப்போதிருந்தே **மல்லிகை, சிரித்திரன், சுடர்** போன்ற சஞ்சிகைகளுக்கும் **தினகரன் மற்றும் வீரகேசரி** போன்ற நாளேடுகளுக்கும் **இலங்கை வானொலிக்கும்** படைப்புகளை வழங்கத் தொடங்கினேன்.

தொண்டராசிரியராகப் பணியாற்றிய நான் பத்தொன்பதாவது வயது முடியும் தருணத்தில் 1984ம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்று வார கால சேவை முன்பயிற்சியை கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியில் பூர்த்தி செய்துவிட்டு நிரந்தர விஞ்ஞான ஆசிரியராக இணைந்தது முதல் ஆசிரிய வாழ்க்கைக்கென என்னை தயார் செய்ய தொடங்கிக்கொண்டேன். அப்போது பாடசாலையில் ஆசிரியர்களாக இருந்தவர்களில் பெரும்பாலானோர் எனக்கும் ஆசிரியர்களாக இருந்தவர்கள் என்பதால் பயபக்தியோடே பணியாற்ற வேண்டியிருந்தது. பாடசாலை அதிபராக இருந்தவரும் அப்படியே. பொதுவாக பெரிய பாடசாலைகளில் அதிபர்க்கு சவாலான ஒரு ஆசிரியக்குழுமம் இருக்கும். அதற்கு ஹோல்புறூக் பாடசாலையும் விதிவிலக்கு அல்ல. அக்குழும ஆசிரியர்களும் என்து ஆசிரியர்களே. மாணவ மனோபாவத்தில் இருந்து முற்றிலும் விடுபடாத நிலையிலே அதிபருக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் இருதலைக்கொள்ளியாக இருக்கவேண்டிய ஒரு நிலையில் ஒரு வெறுமையும் இணைந்தவனாக காணப்பட்டேன். அது திரு. யோகராசா ஆசிரியர் இல்லாததன் காரணமாகவும் இருக்கலாம். அவர் ஜுலை கலவரத்தின் பின் யாழ்ப்பாணம் சென்றபின் ஹோல்புறுக் பாடசாலையோடு கற்பித்தல் தொடர்புகளை துண்டித்துக்கொண்டார். அவர் இருந்திருப்பாராயின் என்னுடைய தமிழறிவை மேலும் வளர்த்திருக்கலாம் என நினைப்பதுண்டு. ஆனால் ஒரு நட்புத் தன்மை பேணியிருக்க முடியாது என்பது உண்மை.

ஆனால் எனக்கு எப்படி ஒருவர் நண்பராக வந்தால் நன்றாக இருக்குமோ என கற்பனை செய்திருப்பேனோ அதனை பெருமளவு பூர்த்தி செய்வதற்காகவே அனுப்பி வைக்கப்பட்டது போல 1984ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் நா.தர்மராஜா, பத்தலகெதர ஆசிரியர் கல்லூரியில் (தற்போது சியனே தேசிய கல்வியியற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி)சேவை முன் ஆசிரிய பயிற்சியை பூர்த்தி செய்து ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு கணித ஆசிரியராக வந்துசேருகின்றார். முதலறிமுக கலந்துரையாடலில் ஓர் ஓரமாக **அகளங்கன்** என்ற புனைபெயரும் உள்ளதென குறிப்பிட்ட போது, **சுடர்** சஞ்சிகை நினைவுக்கு வந்தது. நானும் அவரும் சமகாலத்தில் அதற்கு எழுதியுள்ளதாக நான் கூறிய போது அவர் முகத்தில் தோன்றிய புன்னகையில் எம்மிருவரிடையே **நட்பு** அரும்பியது என்பதை விட **காதல்** அரும்பியதெனலாம். என்னை விட பத்து வயது அதிகமானவர் மற்றும் திருமணமாகி இருபிள்ளைகளுக்குத் தந்தையானவர் என மேலும் அறிந்தபோது அதற்கான மரியாதையையும் மனதில் நிலைப்படுத்த வேண்டியிருந்தது.

ஒருவாறாக அவருக்கும் அவரோடு புதிதாக இணைந்த **கனகசபாபதி** எனும் ஆசிரியருக்கும் அதிபராக இருந்த **திரு.கணபதிப்பிள்ளை** அவரின் சம்மதத்தின் கீழ் பாடசாலையில் இருந்த ஓரறையில் தற்காலிகமாக, தற்காலிக வதிவிடம் ஏற்பாடு செய்து கொடுத்தபின் எனக்கும் அது வதிவிடம் போலாகியது. தினசரி பாடசாலை முடிந்த பின் அவர்கள் சமைத்த உணவை உண்டபடி ஆரம்பமாகும் அர்த்தபுஷ்டியான அரட்டை முடிந்து விடக்கூடாது என்ற வேட்கையோடு தொடரும். இருள் கவ்வும் வேளையில் எனது சைக்கிளை உருட்டியபடி பிரிய மனமின்றி வீடு திரும்புவேன். பின் அவர் மனைவி பிள்ளைகள் சகிதம் ஒரு வாடகை வீட்டில் குடியேறிய பின்பு அரட்டை ஸ்தானம் அங்கு இடம்மாறியது.

இந்த இடத்தில் ஒன்று சொல்லியாக வேண்டும். நான் பாடசாலைக் காலத்திலேயே திரு.யோகராசா அவர்களின் புத்தக பெட்டகத்தின் வாசிப்பின் ஊடாக **இடதுசாரி** சிந்தனைகளை அறுவடையாக்கிக் கொண்டவன். மேலும் அருகிலுள்ள அக்கரப்பத்தனை நகரில் **சமசமாஜ கட்சி** சார்ந்த தொழிற்சங்க பிரதிநிதியான **தோழர் எஸ் யூ எஸ் ஹமீது** அவர்களோடு தொடர்பு கொண்டிருந்தவன். மேலும் கண்டியில் க.பொ.த உயர்தர வகுப்பு கற்கும் போது **கலைஞர் அந்தனி ஜீவா**வுடன் மலையக கலை இலக்கியப் பேரவை செயற்பாடுகளில் இணைந்து கொண்டவன். இந்த அனுபவங்களோடு **தீவிர சைவத்தமிழ் நெறிமுறைகள் போற்றும் அகளங்கனின்** கருத்துக்களைக் கேட்பதும் அதற்கு எதிர்வினையாற்றுவதும் அன்றாட கலந்துரையாடலில் ஓரம்சமாக இருந்துவிடும். இவர் தனது **மனைவி பொருளியல் துறை பட்டதாரியாக** இருந்து ஆசிரிய நியமனம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் **இல்லத்தரசியாக** இல்லத்திலேயே முழுநேர வாசம் செய்யவேண்டும் என்ற கொள்கையை **பொருளாதார முடைகள்** இருக்கையிலேயே இறுக்கமாக கடைப்பிடிப்பது குறித்து அடிக்கடி என்னால் பிற்போக்கானதாக சுட்டப்படும் அல்லது பெண்ணடிமை பேணுபவராக இடித்துரைக்கப்படும். அதற்கு முன் வைத்து வாதிடும் தர்க்கங்களில் எனக்கு மறுபேச்சு இருக்காது. இப்படி சிற்சில அம்சங்களில் அவரது பார்வையும் எனது பார்வையும் முரணாக இருந்தாலும் நட்பில் ஒரு மகரந்த இழை அளவிலாவது விரிசல் விழாமல் அதுவே என் அறிவு பெருக்கத்துக்கு வழிசமைத்திருப்பதை இன்று உணர்கின்றேன்.

**இராமாயண வானர வாலி** முதல் **வாலிபக் கவி வாலி வரை** எல்லைகள் விரிந்த கருத்தாடல்கள் வீட்டிலும் தெருவிலும் வேலைத் தளத்திலும் தொடர்வதாக இருக்கும். இன்னும் விரித்துச் சொல்வதானால் ஒய்வு கிடைக்கும் வேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விடுமுறை நாட்களில் பேசிக்கொண்டே **பசுமலையிலிருந்து 9 மைல் தூரமுள்ள தலவாக்கொல்லைக்கு** நடந்து செல்வோம் அல்லது **மன்ராசியிலிருந்து** சோட்கட் பாதையாக **10 மைல்** (வாகன வழியாக 23 மைல்)தூரம் மலை முகடுகள் ஏறி இறங்கி **ஹட்டனுக்கு** சென்று படம் பார்த்துவிட்டு வருவோம். இன்னும் சில நாட்களில் பசுமலையிலிருந்து நடந்து மன்ராசிக்கு வந்தும் பேச்சின் வீச்சுகுறையாமை காரணமாக திரும்ப மன்ராசியிலிருந்து பசுமலைக்கு பாதி வழி தூரம் நடந்து போனதுமுண்டு. கடையோடு ஒட்டிய எங்கள் வீட்டுக்கு என்னைக்காண வரும் சிலகாலத்தின் பின் என் தாயினதும் சகோதரர்களினதும் வாஞ்சைக்குள்ளாகி குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் போலாகிவிட்டார்.

நம் இருவரின் நட்புக்கு அடையாளமாகவும் இலக்கியத் துறைக்கு புதுப்பங்களிப்பு செய்வதாகவும் ஏதாவது செய்தாக வேண்டுமென்ற அவாவில் கூட்டாக பாடசாலை மாணவர்களை வைத்து நாடக முயற்சிகள் மற்றும் எழுத்துப் பாசறைகள் போன்றவற்றை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் நிரந்தர பதிவாக அமையும் வண்ணம் **இருவர் சேர்ந்த கவிதைகள் தொகுப்பினை** வெளியிட முடிவு செய்தோம்.

அச்சு கோர்த்து பிரசுரித்து வெளியிடும் வழக்கமும் ரோணியோ எனும் கல்லச்சு வழக்கமும் இருந்த அக்காலத்தே செலவுச் சுருக்கமும் விரைவும் கருதி பாடசாலையிலிருந்த உருட்டும் கல்லச்சு இயந்திரத்தை பயன்படுத்தி கையால் கவிதைகளை எழுதிய ஸ்ரென்சில் தாள்களை பயன்படுத்தி ஒரே வாரத்தில் தயாரித்து முடித்தோம். அட்டையை மாத்திரம் அச்சு வாகனத்திலேற்றி கொண்டு வந்தோம். கவிதை தொகுதிக்கு தலைப்பு என்ன வைப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சைக்கு வைரமுத்துவின் பாடலொன்றின் வரிகளில் வரும் **"சமவெளி மலைகள்"** கைகொடுத்தது. இது நம்மிருவரின் சொந்த பிரதேசங்களின் புவியியல் தளத்தை சுட்டுவதாக இருப்பது பொருத்தமாக அமைந்தது. கவிதை நூலுக்கு **அணிந்துரை** பெற அப்போது தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபராகவும் இலங்கையின் முக்கிய கவிஞராகவும், ஆய்வாளராகவும் இருந்த **காரை. செ.சுந்தரம்பிள்ளையை** அணுகி பெற்றுக்கொண்டோம். வாழ்த்துக்கவியை ஹட்டனிலிருந்த **கவிஞர்.க.ப.லிங்கதாசனிடமிருந்து** பெற்றுக் கொண்டோம். இன்று அவர்கள் இருவரும் அமரராகிவிட்டார்கள். 1985ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வெளியீட்டு விழா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் திரு. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார். பிரதம அதிதியாக கலந்து கொண்டவர் அப்போது தலவாக்கொல்லையில் சமூகப்பணிகளில் முன்னின்று செயற்பட்ட **திரு.ப.சந்திரசேகரன்.** இவரே பின்னாளில் மலையக அரசியலில் தனித்துவமாக ஜொலித்து அமைச்சரவையில் இடம் பிடித்திருந்த அமரர் ப.சந்திரசேகரன். நாமறிந்த வரையில் **இதுவே அப்பாடசாலையில் நடந்த முதல் நூல் வெளியீடாகும்.**

அதன் பின்னர் எனது இரண்டாம் முறை பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் பேராதனை பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்துக்கு தெரிவாகி மூன்று கற்கை விடுப்பில் சென்றுவிட்டாலும் பல்கலைக் கழக விடுமுறை நாட்களில் அவரோடு பிணைந்து கொள்ளுதல் தடைப்படாதிருந்தது. விஞ்ஞான பீட மாணவனாக இருந்தாலும் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை விரிவுரையாளர்களான **கலாநிதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருணாசலம்** மற்றும் **கலாநிதி துரை மனோகரன்** போன்றோர்களோடு நெருக்கமான உறவிருந்தது. 1983ம் ஆண்டிலிருந்து முடங்கிப்போயிருந்த பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தை 1986ல் உயிர்பெறச் செய்பவர் குழுவில் ஒருவராகி அதன் **பொருளாளராக** செயற்பட்டேன். இக்காலத்தில் மலையக கலை இலக்கிய பேரவையின் செயற்பாடு உச்சமாக தொடர **அந்தனி ஜீவாவுடன்** இணைந்து பணியாற்றியும் வந்தேன். 1986ம் ஆண்டு டிசெம்பரில் மலையக கலை இலக்கிய பேரவையின் 5 வருட பூர்த்தி மகாநாட்டில் என்னுடைய **தியாக யந்திரங்கள்** கவிதைத் தொகுதி வெளிவருவதில் பெரிதும் துணை நின்றவராக அகளங்கன் இருந்தார்.கொழும்பில் **வலம்புரி கவிதா வட்டம்** இந்நூலுக்கு ஓர் அறிமுகக் கூட்டம் வைத்தபோது என்னோடு வந்து கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டது பசுமையான நினைவுகளில் இருக்கின்றது.

1987 -89 வருட காலப்பகுதியில் பல்கலைக் கழகங்கள் அடிக்கடி மூடி திறக்கப்படுவதாக இருந்தமையால் மூடப்பட்ட நாட்களில் அவரே **ஒரு பழந்தமிழ்ப் பல்கலைக் கழகமாக** எனக்கமைந்திருந்த நினைவுகளோடு தோய்ந்து பதிவு செய்தலை பலபக்கங்களாக நீடிக்கலாம். ஆனால் சில நேரம் நான் சுயவரலாறு எழுதுவது போலாகி விடும் என்பதால் குறிப்புகளாக சில விடயங்களைக் கூறி முடிக்க விரும்புகின்றேன்.

பலாலி ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி பெற்று மீண்டும் வந்து மலையகத்தில் அவர் பணியாற்றிய போது (1989) பண்டாரவளையில் அப்போதைய மாகாண சபை உறுப்பினரும் பிற்காலத்தில் பிரதி கல்வி அமைச்சராகவும் செயற்பட்ட **திரு.மு.சச்சிதானந்தனின்** அனுசரணையோடு நண்பர் **தியாகநாதன்** ஒரு பெரும் தமிழ் விழாவை ஒழுங்கமைத்திருந்தார். **சில்லையூர் செல்வராஜன், அருளர், கலாநிதி க.அருணாசலம், கலாநிதி துரை மனோகரன், குறிஞ்சித்தென்னவன், கண்டி திருத்துவ கல்லூரி இரா.சிவலிங்கம், திரு.க.கமலநாதன்** என பலர் கலந்து கொண்டிருந்தனர். நான் கவியரங்கில் கவிதை வாசித்தேன். அகளங்கன் **"குற்றவாளிக் கூண்டில் கண்ணதாசன்"** என்பதான வழக்காடு மன்றத்தில் பங்கெடுத்தார். இதனூடாக மலையகத்தில் பரவலாக அறிமுகமாகி ஆங்காங்கே இலக்கிய கூட்டங்களில் உரையாற்ற அழைக்கப்படுபவராக விளங்கினார்.

பல்கலைக் கழக இறுதிப் பரீட்சை எழுதிவிட்டு ஹோல்புறூக் பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று ஹட்டன் ஹைலேண்ட்ஸ் பாடசாலையில் இணைந்து பணிபுரியும் போது நான் பல்கலைக் கழகத்தில் **விலங்கியற் துறையில்** ஒரு வருடகாலம் வரை **தற்காலிக உதவி விரிவுரையாளனாக** பணியாற்ற அழைக்கப்பட்டேன். பதவிக்காலம்முடிந்த பின் விட்டு பின் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் ஆசிரியனாக இணைந்து சில காலம் ஆசிரியனாக பணியாற்றிய போது ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டு 1991 ஆண்டு பெப்ரவரி மாதமளவில் அங்கு சென்றுவிட்டேன். நாடறிந்த கல்வியியலாளர் மற்றும் கல்வி நிர்வாகி **கலாநிதி செல்வி சிரோன்மணி ராஜரட்ணம்** கல்லூரி பீடாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்க தயாராகும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது அகளங்கனும் அடிக்கடி வந்து போகும் போது செல்வி சிரோன்மணி ராஜரட்ணத்தின் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் என்னோடு தொடர்பிலுள்ள **சாரல்நாடன், அந்தனி ஜீவா, மொழிவரதன்** போன்ற அனைத்து மலையக எழுத்தாளர்களுடனும் பரிச்சியமானவராக திகழ்ந்தார். குறிப்பாக 1989ம் ஆண்டு அக்கரப்பத்தனை பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய மொழிவரதனின் **"மேகமலைகளின் ராகங்கள்"** சிறுகதை நூல் வெளிவருவதில் நாமிருவரும் பங்களிப்புச் செய்திருந்தோம். அகளங்கன் பின் வவுனியாவுக்கு இடமாற்றம் பெற்று சென்றபின் எனது இலக்கிய செயற்பாடுகளும் அவரின் செயற்பாடுகளும் வேறு வேறு பாதையில் நடைபோடத் தொடங்கின. அகளங்கன் ஆசிரிய பணியிலேயே இருந்து அசுர வேகத்தில் படைப்பிலக்கிய பணி ஆற்றிய போது விரும்பியோ விரும்பாமலோ நான் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து 50 வயதுக்குள் பல பதவிகளை சந்தித்து விட்டேன். **விரிவுரையாளனாக, ஆசிரிய கலாசாலை அதிபராக, கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாக, கல்விப் பணிப்பாளனாக** ஆகி இலக்கியத்துக்கு அப்பால் செயற்படவேண்டியிருந்தது. என்னறாலும் அரச இலக்கிய குழுவில் தொடர்ச்சியாக உறுப்பினனாக இருந்து வருவதால் அவரின் படைப்புகள் அவரோடு என்னை தொடர்ச்சியாக இணைத்து வைத்துள்ளன.

அகளங்கனும் நானும் ஆசிரியராக பணியாற்றிய போது அவரிடம் பாரபட்சமின்றி மாணவர்களுக்கு கல்வி வழங்க வேண்டுமென்ற உந்துணர்வு இருப்பதை எப்போதும் கவனித்துள்ளேன். **கணித பாடத்தையும் தமிழ் பாடத்தையும் போதிக்கும் தகுதி பெற்றவர் அவரொருவராகத் தானிருக்க முடியும்.** மெல்லக்கற்பவர்களுக்கு அவரின் பரிகார கற்பித்தல் வேலைத்திட்டங்கள் அயல் பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் கவனத்தை ஈர்த்தவொன்றாகும். அவரிடம் கற்ற தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் பலர் இன்று ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் பிற நல்ல தொழில்களிலும் இருந்து அவராலே நல்வழிப்படுத்தப்பட்டோமேன தயக்கமின்றி கூறுபவர்களாக இருக்கின்றார்கள். அது போலவே பாடசாலைகளில் கலை இலக்கிய பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக அவரின் முன்மாதிரிகளும் அப்பிரதேசத்தை வளப்படுத்தின.

**"மாற்றங்கள் மாற்றவில்லை"** என்று அவர் மலையக பிரச்சினைகளை உள்வாங்கி மேடையேற்றிய நாடகம் முதலிடம் பெற்று அவருக்கு பெரும் கௌரவத்தை பெற்றுக்கொடுத்தது. அவரின் மகன் ஹோல்புறுக் பாடசாலையிலே ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்தவர் இன்று **பொறியியல்** துறையில் **கலாநிதியாக** மிளிர்கின்றார். இதுவும் அவரின் தன்னலமில்லா சேவைக்கு கிடைத்த பரிசெனவும் அர்த்தப்படுத்திக்கொள்ளலாம்.

1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற அகளங்கனின் **மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் ஆய்வு** நூல் வெளியீட்டில் கலந்து கொண்டேன். மலையக எழுத்தாளர்களை நான் அகளங்கனுக்கு அறிமுகப் படுத்தியது போல் திரு.ஓ.கே.குணநாதன் (மட்டக்களப்பு),வவுனியூர் இரா.உதயணன் (வவுனியா) முதலானோரை அகளங்கன் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இன்று மணிவிழா காணும் அகளங்கனுக்கு உண்மையில் வாழ்க்கையில் பாதிபருவம் தான் கடந்திருக்கின்றது. (நம் மரபின் படி மனித ஆயுட்காலம் 120 வருடங்கள்) மீதிக்காலங்களில் தொடரும் சேவைகள் தமிழ்த் தாயை ஜௌவனப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# மாறுபடும் கருத்துகளின் சுமுகமான உரையாடல்

**கலாநிதி.ந.இரவீந்திரன்**
விரிவுரையாளர், மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

**அ**களங்கனின் கலை இலக்கிய சமூகப் பங்களிப்பை மதிப்பீடு செய்யும் நோக்கிலான தொகுப்பொன்றில் எனது பதிவும் அவசியமானது என நண்பர்கள் கருதியமை குறித்து நன்றி. மிகுந்த வேலை நெருக்கடிகளுக்குள்ளும் இந்தப் பதிவை எழுதியாக வேண்டும் என நானும் கருதுகிறேன். தலைப்பில் குறித்தவாறு மாறுபட்ட கருத்துகளைப் பொதுத் தளத்தில் எவ்வகையில் உரையாடலாம் என்பதற்கான உதாரணமாக அவர் அமைந்திருக்கிறார். அதுசார்ந்து அவருடனான எனது தொடர்பாடலை இங்கு நினைவு மீட்டலாம் எனக் கருதுகிறேன்.

எண்பதுகளில் நான் பூண்டுலோயாவில் ஆசிரியராக இருந்தபோது அகளங்கன் அக்கரைப்பத்தனையில் ஆசிரியராக பணியாற்றினார். மலையகத்தில் பேரவை தீவிரமாக இயங்கிய நிலையில் **"தாயகம்"** சஞ்சிகையின் மதிப்பீட்டு அரங்கொன்றைத் **தலவாக்கொல்ல** நகரில் ஏற்பாடு செய்திருந்தோம். அதற்கு அகளங்கனை உரையாளராக அழைக்கலாம் என நண்பர்கள் கூறியபோது முதலில் அவரை அறிமுகமானேன். **யாழ் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத் தலைவராக** இருந்தவர், மாணவர்களுடன் இயல்பாகப் பழகுபவர், சமூக-இலக்கிய ஆர்வம் மிக்கவர் என்ற அறிமுகத்துடன் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மேலாகத் தாயகம் இதழ் மீதான தனது உடன்பாட்டை வெளிப்படுத்தி மதிப்பீட்டை முன்வைத்தார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் பெரும் ஈடுபாட்டை வெளிப்படுத்துகிற ஒருவர் சமூக மாற்ற இலக்குடைய சமகால சஞ்சிகையை வரவேற்றுப் பேசியமை எங்களுக்கு உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருந்தது. நான் யாழ்ப்பாணத்துக்கும் அவர் வவுனியாவுக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் தொடர்பின்றி இருந்தோம். யுத்த அனர்த்த உச்சத்தில் ஊரில் இருக்க இயலாது இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்தபோது அவரது பாடசாலையான தமிழ் மகாவித்தியாலயத்தில் இடைக்காலப் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது. எட்டுமாதங்கள் சக ஆசிரியர்களாக பலவிடயங்களை அளவளாவிய போதிலும் அங்கு கால்பதிக்க முடிந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீபாத கல்விக் கல்லூரி விரிவுரையாளராக 1992 இல் சென்று, மூன்று ஆண்டுகளின் பின்னர் மீண்டும் வவுனியா வந்த நிலையிலேயே முழு ஈடுபாட்டுடன் காலூன்றினேன். மூன்று வருடங்கள் பேரவை அரங்குகளில் நட்புமிக்க உரையாளராக அவர் உடன் பயணித்துள்ளார். மாதாந்தம் உரையாடல் களம் ஒன்றைப் பேரவை ஏற்பாடு செய்யக்கருதியபோது அதிலும் பங்கேற்பதில் அவருக்கு ஆட்சேபனை இருந்ததில்லை. அப்போது அவரது கருத்தியலுக்கான இலக்கிய அமைப்பொன்றின் தலைமைப் பொறுப்பிலும் அவர் இருந்தபோதிலும் இந்த உடன்பட்ட உரையாடலை எங்களோடு நடத்திவந்தார்.

ஆயினும் அத்தகைய மாதாந்த அமர்வை உங்கள் பேரவை நடாத்துவதைவிட பலரும் கலந்துகொள்ள வசதியாக பொது அமைப்பில் சாத்தியமாக்குவது பரந்த களமாக்க ஏதுவாகும் என்ற ஆலோசனையை நண்பர் ஸ்ரீகணேசன் முன்வைத்தார். அந்தவகையில் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகளின் நண்பர்கள் ஒன்றுகூடும் பொதுத் தளமாக **வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்** இயங்கத் தொடங்கியது. ஒரு அமைப்பற்ற பொதுத் தளம் என்பதாக அங்கு பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கும் உரியவர்கள் சந்திக்கும் அதேவேளை எமக்கான கலை இலக்கிய அமைப்புகளும் இயங்க இயலுமாயிருந்தது. காலப்போக்கில் நண்பர்கள் வட்டம் காத்திரமான அமைப்பாகியபோது எனக்குப் பிரச்சனையாக அமைந்தது.

பேரவையின் செயலாளராக இருக்கும் நான் அதைக் கைவிட்டு நண்பர்கள் வட்டத்தை அமைப்பாக ஆவதற்கு அனுமதிக்க இயலாது. எனினும் அதன் செயற்பாடுகள் தவிர்க்க இயலாது அதனை அமைப்பாக்கியிருந்தது. என் மறுப்பை வெளியிடாமலும் இருக்க இயலாது. அப்படி வெளியிட்ட தருணத்தில் வேறும் காரணங்களால் வவுனியாவை விட்டு நான் புலம்பெயர நேர்ந்தது. ஆயினும் நண்பர்கள் வட்டம் என்னுடன் தொடர்ந்தும் சுமுகமான உறவாடலைத் தொடர்ந்தது. குறிப்பாக அகளங்கன் எந்தக் கருத்துபேதங்களுக்கும் அப்பால் சுமுகமான உரையாடலை மேற்கொள்ள ஏற்ற வெளியை எப்போதும் அமைத்துத் தருகிறவராக இருந்தார்.

இந்தப் பண்பே நண்பர்கள் வட்டம் அத்தனை காத்திரமாக ஒவ்வொருமாதமும் சந்திப்பை நிகழ்த்தக் களம் அமைத்துத் தந்தது. என்வரையில் பேரவை அமர்வாக அதனைத் தொடர்ந்திருக்க வேண்டும், அது இயலுமானதாயும் இருந்தது. அவ்வாறு செய்திருப்பினும் கண்டிப்பாக அகளங்கன் பங்கேற்றிருப்பார். ஆயினும் நண்பர்கள் வட்டம் பரந்த களமாக்கியிருந்தது என்பது பிரதான அம்சம். எமது களத்தில் வந்து அவர் பங்கேற்கும்போது எம்மோடு இயங்குவது எவ்வாறு என்பதைவிட, இப்பொதுத் தளத்தில் இன்னொரு வடிவில் கருத்து வெளிப்பாட்டை அவர் செய்ய இயலும். அதனை எவ்வளவு உயர்பண்புடன் அவர் மேற்கொண்டார் என்பது முக்கியத்துவம் மிக்கதாகும். மாற்றுக் கருத்துகளுடன் பொதுத்தளத்தில் நாகரீகம்மிக்க உரையாடலைச் சாத்தியமாக்கிய அவரிடமிருந்து நான் கற்ற அம்சங்கள் பல. அதைவிடவும் அவரது இலக்கியப் பங்களிப்புக் குறித்தும் ஆய்வு செய்ய அவசியமுள்ளது. காலம் அனுமதித்தால் பார்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# "இசைத்திட முடியாது உந்தன் பெருமை"

**பேராசிரியர் செ.யோகராசா**
(கிழக்குப் பல்கலைக்கழகம்)

**அ**களங்கனுக்கும் எனக்குமிடையிலான இனிமையான நட்புறவு இன்று நேற்று ஏற்பட்டதன்று. அதற்கு ஏறத்தாழ முப்பது வயதாகின்றது. இப்போது நூல்களூடாகவும், பத்திரிகை ஆக்கங்களூடாகவும் 'அகளங்கன்' என்பவரது அகத்தினை ஓரளவு நான் அறிந்திருப்பினும் முகத்தினை முதன்முதலாக கண்டுகொண்டது, மலையக மண்ணில் எண்பது களளவில் என்று நினைக்கின்றேன்.... பின்னர் அவர் எனக்கு அனுப்புகின்ற அவரெழுதுகின்ற நூல்களூடாகவும், வட-கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் நடத்திவந்துள்ள கலைவிழா, கருத்தரங்கு வேளைகளின் இரவுப்பொழுதுகளிலும் நண்பர்களதும் மாணவர்களதும் தனிப்பட்ட உரையாடல்களூடாகவும் **ஓ.கே.குணநாதன்** மட்டுநகரில் நடத்திவரும் **தமிழியல் விருது** வழங்கும் விழாக்களின் போதும் அவர் பற்றி, அவர் ஆற்றல்கள் பற்றி, தேடல்கள் பற்றி, புலமைத்திறன் பற்றி பலவற்றை அறியமுடிந்துள்ளது. அவற்றுள் சிலவற்றை மீட்டுப்பார்க்க இவ்வாய்ப்பைப் பயன்படுத்த முயல்கின்றேன்.

நீண்டகாலம் நு/ஹோல்புறூக் தமிழ் வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றி விட்டு நான் விலகுகின்ற காலப்பகுதியில் அகளங்கன் அங்கு **கணித** ஆசிரியராக வருகின்றார். அவ்வேளையிலேதான் அவரை நான் சந்தித்துக்கொண்டேன். அங்கு நான் கடமையாற்றிய காலப்பகுதியில் அங்கு கல்விகற்ற மாணவர்களுக்குப் பல்வேறு விதங்களில் ஓரளவு ஒளியூட்ட முயன்றிருக்கிறேன். எனக்குப் பின்னரும் அங்கே அவ்வாறான நிலை தொடருமா என்ற ஏக்கத்துடன் நான் யாழ்ப்பாணத்திலிருந்த சூழலில் அகளங்கன் அங்கிருந்த மாணவர்களுக்கு கணிதஅறிவை மட்டுமன்றி **இலக்கிய ஆர்வத்தையும் பேச்சாற்றலையும்,** வாசிப்பாற்றலையும் ஊட்டுவதற்காக தன்னை அர்ப்பணித்திருப்பதனை அறிந்து அவரை மனதுள் பாராட்டியிருக்கின்றேன், பலதடவைகள்! என்னை விட இன்னொருபடி மேலாக, தன்னோடு கற்பித்த ஆசிரியர்கள் மத்தியிலும் இலக்கிய ஆர்வமும் வாசிப்பார்வமும் பேச்சாற்றலும், மொழிப்பற்றும் உருவாகும்பொருட்டு பாடசாலையில் இலக்கிய வட்டம் ஒன்றையும் சிலகாலம் நடத்தியிருக்கிறார்! பாடசாலையில் மட்டுமன்றி, தமது வீட்டிலும் கூட 'இலக்கிய அரங்கு'களை சிலகாலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை நடத்தி வந்திருப்பதாகவும் அறிந்துகொண்டேன். இவைகாரணமாக, இன்றுகூட, ஹோல்புறூக்கில் கற்ற - கற்பித்த மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் நன்றியுணர்ச்சியுடன் நினைவுகூரப்படும் நல்லாசான்கள் மிகச் சிலருள் ஒருவராகத் திகழ்கின்றார் அகளங்கன் என்பது நிச்சயமாகப் பொய்யுரையன்று!

ஹோல்புறூக்கைவிட்டு வவுனியா சென்ற பின்னர் வவுனியாவில் தாம் கற்பித்த பாடசாலைகளில் மட்டுமன்றி வெளியிலேயேயும் முன்னைய பணிகளை பன்மடங்கு தொடர்ந்து முன்னெடுத்து வந்திருக்கின்றார் என்பதற்கு, **சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும், வவுனியா இந்துமாமன்றமும், 'வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும்', மாருதம்** சஞ்சிகையும் நூல் வெளியீடுகளும் 'நற்சான்றிதழ்'களை அவ்வப்போது வழங்கிவருவதிலிருந்து நன்கு அறிய முடிகின்றது. இம் **மணிவிழா மலரின்** வரவு அவற்றிற்கான உன்னதமான உயர்ந்த சான்றாதாரமாகின்றது!

**அகளங்கன் இன்றுள்ள கவனத்திற்குரிய மரபுவழிக் கவிஞர்கள் மிகச் சிலருளொருவர்!** அவர் கவிதைகள் ஆயிரம் புனைந்திருந்தாலும் எனக்கு இக்கணம் வரை நன்கு பிடித்தது,'**தென்றலும் தெம்மாங்கும்',** 'கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது' என்பதற்கு உதாரணம், அது. **வன்னிநகர்** சிதைந்திருந்தாலும் 'தென்றலும் தெம்மாங்கிலும்' அது அழியாதுள்ளது என்பேன். மாதிரிக்கு ஒரு சித்திரம், பின்வருவது:

"வெட்டிப் பிரித்து
வெளியாக்கிச் சமனிட்ட,
புற்றுக்கள் மேலே
போட்டுவைத்த குடிலினிலே,

தீவறையில் குளிர்காய்ந்து
சிறாம்பியிலே கிடந்து
பாவகைகள் பாடிப்
பன்றிகளைத் துரத்திக்

காவலுக்கு வந்த
காளையர்கள் இரவினிலே
கூவிக் குரலெழுப்பும்
குரலோசை வானதிர்க்கும்

மரக்கிளையில் பறணமைத்து
மதிபார்த்துக் கிடந்து கொண்டு,
வரப்பினிலே எரியவிட்ட
மரக்கட்டை இருளகற்ற,

உரப்பி எழுப்புகின்ற
ஓசையிலே வெருண்டோடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையை அடிமரத்தில்
கண்டு சுகங் கேட்கும்
காளைகள் நிறைந்ததின்று
கவிபாடும் வன்னிநகர்"

அகளங்கன் இசைப்பாடல்கள் பல இயற்றியிருப்பினும் அவரியற்றிய தமிழ்மொழி வாழ்த்து ப்பாடல் இப்போதும் எப்போதும் எனது செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது, இருக்கும்.

"இசைத்திட முடியாது எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை"

அகளங்கன் எழுதிய கட்டுரைகளுள் பெரும்பகுதிக் கட்டுரைகள், இலக்கிய ரசனைக் கட்டுரைகள்! இலக்கிய ரசனைக் கட்டுரைகளை ஏறெடுத்துப் பார்க்காதவர்கள் பலருளர். எனினும் அவை அதாவது இரசனைக் கட்டுரைகள் என்பனவும், திறனாய்வுக்கட்டுரைகளின் ஒரு பிரிவினவே என்பதனை அவரறியார். 'ஈழத்தைப் பொறுத்தவரையிலே வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையூடாக பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடம் சென்று செழித்த அந்த இரசனை மரபு, நவீன பல்கலைக்கழகம் சார் கல்வி முறை வந்தபின்னர் தளர்ச்சியடைய ஆரம்பித்தது. அத்தகைய சூழலிலே அத்தகைய இரசனைமரபினை நவீன இலக்கியத்திசைநோக்கி நகர்த்தியவர் இரசிகமணி கனக செந்திநாதன்! அவரது மறைவுடன், **மறைய இருந்த அந்த மரபிற்கு உயிர்கொடுத்து வருகின்ற மிகச்சிலருள் ஒருவராக விளங்குபவர், அகளங்கனே.** இலக்கியச்சரம் இவ்விதத்தில் திட்டமிட்டு எழுதப்பட்ட முக்கியமானதொரு நூலே!

அகளங்கனின் உள்ளே குறிப்பிடத்தக்கதொரு ஆய்வாளன் இருக்கிறான்! இதற்குச் சிறந்த சான்று, 'வாலி'. **கம்பன் இயலுக்கு ஈழம் அளித்துள்ளவற்றுள் வாலி'க்கும் முக்கியமானதொரு இடமுள்ளது என்பது எனது அபிப்பிராயம்!**

அகளங்கனின் 'பழந்தமிழ் இலக்கியம்' சார்ந்த கட்டுரைகளுள் சில கூட அவரை கவனத்திற்குரியதொரு ஆய்வாளன் ஆக்குகின்றன என்பதனை **'நறுந்தமிழ்'** நூலினை மறுபடி வாசிக்கின்றபோதுதான் உணரமுடிகின்றது. உ-ம் **'சுவாமி விவேகானந்தரும் தமிழிலக்கியமும்', 'நாடகமே உலகம்'.** இவ்வாறான நுண்ணாய்வுக் கட்டுரைகள் பலவற்றை அகளங்கன் எழுதவேண்டுமென்பது என்போன்றோரது பேரவா!

யாழிலே இருந்த காலத்திலே மட்டக்களப்பு என்றதும் **'அன்புமணி'**யே எனக்கு நினைவிற்கு வருபவர். அதுபோன்று, வவுனியா என்றதும் **அகளங்கனே** எனது நினைவிற்கு வருபவர், வருகின்றவர். அதன் அர்த்தம் அகளங்கன் ஆக்கபூர்வமான விதங்களில் ஊருக்காக, உலகிற்காக, பலவற்றைச் செய்து வந்தவர், செய்து வருகின்றவர் என்பதன்றி வேறென்னவாம்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

# மணிவிழா நாயகன் "தமிழ்மணி அகளங்கன்" பற்றி சில பதிவுகள்.

**-ஊடக மாமணி.அருணா செல்லத்துரை**

தற்காலத்தில் தமிழ் இலக்கியவாதி ஒருவர் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, மணிவிழாக் காலம்வரை தனது இலக்கியப் பங்களிப்புகளை வழங்கி விழாக் கொண்டாடுகிறார் என்றால், அதுவே ஒரு பெரிய சாதனையாகும். இந்த நல்ல நாளிலே அவரைப்பற்றிய நல்ல விடயங்கள் பலவற்றை எழுதியும் வாழ்த்துச் செய்திகளையும் பலர் வழங்கியிருப்பர்.

எனது மனக்கண்ணில் "மணிவிழா நாயகன் அகளங்கன்" எப்படிப் பதிவாகியுள்ளார் என்பதே எனது குறிப்பாகும். அகளங்கன் அவர்களை சுமார் 44 வருடங்களுக்கு மேலாக எனக்குத் தெரியும். நல்ல இலக்கிய ஆர்வமுள்ளவர். உறவினர்.

ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், தனது இலக்கிய அறிவையும், சமய அறிவையும் சிறந்த முறையில் வளர்த்துக் கொண்டுள்ளார். தான் நினைத்தவற்றை பார்வைாளர்களிடையே நன்கு பதியும் வகையில் பேசும் ஆற்றல் கொண்டவர். இதனால் சமயச் சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தி பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். கவிஞர், கட்டுரையாளர், பேச்சாளர், சமயச் சொற்பொழிவாளர், விமர்சகர், வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடக எழுத்தாளர் என்ற பன்முகத் திறமை கொண்டவராக அகளங்கன் தன்னை வளர்த்துக் கொண்டிருப்பது இவர் தனக்கென சேர்த்துக் கொண்ட மூலதனமாகும்.

1970 களின் பின்னர் நான் வானொலியில் கடமையாற்றிய காலத்தில் அகளங்கன் அவர்கள் கவியரங்கம், மெல்லிசை, வானொலி நாடகம், போன்றவற்றை எழுதியும் பங்குபற்றியும் வந்த காரணத்தினால் எனக்கு நல்ல நெருக்கம் கிடைத்தது.

1978ம் ஆண்டு அகளங்கன் அவர்கள் **"சேற்று வயல் காட்டினிலே"** என்ற மெல்லிசைப் பாடலை எழுதி என்னிடம் தந்திருந்தார். அதனை இசைப்பிரிவில் சேர்த்திருந்தேன். தென்னிந்திய இசையமைப்பாளர் ராமமூர்த்தி அவர்கள் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிக்கு வந்திருந்தபோது மூன்று மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைக்க இணங்கினார். இசையமைக்கப்போகும் மெல்லிசைப் பாடல்களை அவரே தெரிவு செய்தார். அதில் ஒன்று அகளங்கனால் எழுதப்பட்ட "சேற்று வயல் காட்டினிலே" என்ற பாடலும் ஒன்று என அறிந்த போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். திரு. ராமமூர்த்தி அவர்களால் இசையமைக்கப்பட்டு, திரு. பத்மலிங்கம், ஜெகதேவி விக்னேஸ்வரன் ஆகியோர் சேர்ந்து பாடிய அந்த மெல்லிசைப் பாடலை நானே ஒலிப்பதிவு செய்திருந்தேன். வானொலி மெல்லிசை வரலாற்றில் இந்தப் பாடல் அகளங்கனுடைய ஒரு அடையாளமாக இன்று வரை திகழ்கிறது.

அகளங்கன் எழுதிய **"ஆனை கட்டிய அரியாத்தை"** என்ற நாடகமும் இந்தப் பிரதேச மக்களின் பெருமைக்கு வானொலி மூலமாக வெளிவந்திருக்கும் முக்கிய படைப்பாக அமைந்துள்ளது. இந்த நாடகத்தில் நானும் நடித்திருந்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

1994ம் ஆண்டு என்று நினைக்கிறேன். வவுனியா பிரதேச இலக்கிய விழாவில் நான் "அடங்காப்பற்று - வன்னியில் கண்ணகி வழிபாடு" என்ற கட்டுரையைச் சமர்ப்பித்தேன். அதில் அடிக்கடி வன்னிப் பிரதேசம் என்று குறிப்பிட்டிருந்தேன். விழா முடிந்து மதியச் சாப்பாடு. சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அகளங்கன் என்னோடு பேச்சுக் கொடுத்தார். "அண்ணை நீங்கள் அடிக்கடி வன்னி என்ற சொல்லைப் பிரயோகித்துப் பேசுவதினால், உங்களுக்கு **"இலக்கியவாதி"** என்ற அந்தஸ்தை கொடுத்து மதிக்கமாட்டார்கள். முடிந்தளவு வன்னிப் பிரதேசத்தின் பெருமையையோ வளர்ச்சியையோ வரலாற்றையோ பேசுவதைக் குறைத்து தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுங்கள்" என்று கூறினார். இக்காலகட்டத்தில் தமிழ் இலக்கியம் சம்பந்தமான அநேக நூல்களை அகளங்கன் அவர்கள் வெளியிட்டு வடபுலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கியவாதியாக இருந்தார்.

"அப்படியானால் இனிமேல் வன்னியைப்பற்றி மட்டும்தான் எழுதப் போகிறேன், பேசவும் போகிறேன்" என்று நான் அவரிடம் கூறியிருந்தேன். அதற்கு பிறகு வன்னிப் பிரதேசம் சம்பந்தமான வரலாறுகளையும், கூத்துக்களையும், வழிபாட்டியல்களையும் ஆய்வு செய்யத் தொடங்கி பல நூல்களை வெளியிட எனக்கு உந்துகோலாக இருந்தவர் தம்பி அகளங்கன் ஆகும்.

இவருடைய படைப்புக்களில் தமிழ் இலக்கியம் கூடுதலாக முன்னிலை பெற்றிருக்கிறது. தான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு நல்ல இலக்கியவாதியாக தனது பங்களிப்பை முழுமையாக வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கது. இவரது பங்களிப்புகள் இலக்கியத் தரம் வாய்ந்தவை. ஆனால் வரலாறு இல்லாமல் வாழ்ந்து மனத்தளவில் புழுங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு செய்ய வேண்டியவற்றை அவர் இன்னும் அதிகம் செய்திருக்கலாம். ஆனால் இப்பொழுது என்னைப் போல, அவருக்கும் இந்தப் பிரதேசத்தைப் பற்றியும் எழுத வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது. இந்த உணர்வு அவர் "பட்டுப் பழுத்ததினால் வந்தது" என்று கூடக் கூறலாம்.

கவிஞர் என்பதினால் பல பிழைகளைக் கண்டு கொதித்தெழுகிறார். இலக்கியவாதி என்பதினால் எதிர்க் கருத்துக்களை அள்ளி வீசுகிறார், செய்நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறப்பவர்களைக் கண்டு கோபத்தினால் உணர்ச்சி வசப்படுகிறார். இவர் தலைமை வகித்த அநேக கூட்டங்களைப் பார்த்திருக்கிறேன். அங்கு அவர் மற்றைய பேச்சாளர்களை விட அதிக நேரம் பேசுவது வழக்கம். அங்கெல்லாம் தமிழ் மொழிக்கு இடம் பெறும் இழிவுகளையும், சமூகத்தில் இடம்பெறும் குறைகளையும், பிழைகளையும், நேரடியாகச் சாடுவதைக் கண்டு பிரமித்திருக்கின்றேன்.

தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கிய கூட்டங்களை பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம். சமூகம் அவரை எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்துள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. கடலலை என புரண்டு வரும் அவருடைய சிந்தனைப் போக்கு, உணர்ச்சி வசப்படுவதின் காரணமாகவும், தலைமை தாங்கல் என்ற விரிவு காரணமாகவும் கட்டுக்குள் நில்லாது காட்டாறு போல் பரந்து செல்வதை அவதானித்திருக்கின்றேன்.

ஆனால் கொடுக்கப்பட்ட இலக்கிய தலைப்புக்குள் நின்று அகளங்கன் பேசிய பேச்சுக்கள் மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிவாகியிருக்கும் என்பது எனது நம்பிக்கை. அவற்றை நூலுருவாக்கினால் அது அவர் இலக்கிய உலகிற்கு வழங்கிய மற்றுமொரு பெரும் பங்களிப்பாக இருந்திருக்கும். தரமான நூல்கள் வெளிவந்திருந்தாலும் அது போதாது என்பது எனது பதிவாகும்.

எனக்கும் அவருக்குமிடையில் பல கருத்து வேறுபாடுகள் இப்போதும் உள்ளன. அவர் கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கற்பனைக் கவிஞர், இலக்கியவாதி, நாடக எழுத்தாளர். இலக்கியவாதிகளுக்காக போராடும் ஒரு போராட்டக்காரன். நான் உண்மை வரலாறுகளைத் தேடி அலையும் ஒருவர். எங்காவது வரலாற்றுத் தவறுகள் வந்தால் அதனைச் சுட்டிக் காட்டுவேன். "அது கற்பனை கலந்த எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் இருக்கும் ஒரு உரிமை" என்று அகளங்கன் கூறுவார். கற்பனைகள் வரலாற்றோடு பின்னப்பட்டு, நாடகங்களோ, கவிதைகளோ படைக்கப்பட்டால், அவை ஒரு பிரதேச மக்களை இழிவுபடுத்துவதாக அமையுமானால் அதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

ஆனால் தம்பி அகளங்கன் "அருணா செல்லத்துரை அண்ணர் அவர்கள் வரலாற்றிற்கும் கற்பனை கலந்த நாடகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ள முடியாதவராக இருக்கிறார்" என்று கூறுவார். அதுபோன்ற படைப்புகள் மூலம் வன்னிப் பிரதேசமும், மக்களும் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்ற நிதர்சனத்தை கற்பனைப் படைப்பாளியாக அல்லது கவிஞராக இருந்து பார்க்காமல், இந்த மண்ணின் உரிமையாளராக இருந்து பார்க்கும் காலம் அகளங்கனுக்கு வெகு தூரத்திலில்லை. அவருடைய முதிர்ச்சி, அனுபவம் காரணமாக அவர் இந்தப் பிரதேசத்தின் பங்காளியாக வந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிகிறது.

"எப்பொழுது ஒரு இலக்கியவாதி முழுமை பெறுவார். அவர் தான் வாழ்ந்த பிரதேசத்தை அடையாளப்படுத்தும்போதுதான் முழுமை பெறுகிறார்" என்று உலக இலக்கிய ஆய்வாளர்கள் கூறுவர். தம்பி அகளங்கன் அவர்கள் வன்னிப் பிரதேசம் பற்றி எழுதிய கவிதைகளை நான் ரசித்து வாசித்திருக்கின்றேன். வன்னிப் பிரதேசத்தின் வயல்களையும், காட்டு மரங்களையும், குருவிகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் இனங்களைப் பற்றியும் அவர் எழுதிய கவிதைகள் என்னை மகிழ்ச்சிப் படுத்தியிருக்கின்றன. ஆனால் இந்தக் கவிதைகளில் அநேகமானவை சஞ்சிகைகளுக்காக எழுதப்பட்டவையாகவே இருக்கின்றன. இவை அனைத்தும் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்தால், எதிர்காலச் சமூகத்தினருக்கு கையளிக்க கூடிய வன்னிப் பிரதேசத்தின் சிறப்பைக் கூறும் கவி அடையாளமாகவும், ஆவணமாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.

"இலங்கையில் உயர்ந்த தமிழ் இலக்கியவாதியாகத் திகழவேண்டும்" என்ற அவரது நோக்கில் தம்பி அகளங்கன் வெற்றி பெற்றிருக்கின்றார். தமிழ்மணி அகளங்கன் நீடூழி வாழ்ந்து, தான் சார்ந்த சமூகத்திற்கு மேலும் நல்ல பல படைப்புக்களை வழங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். தம்பி அகளங்கன் பற்றிய இந்த எண்ணக் கருத்துக்களை உரிமையுடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்புத் தந்தவர்களுக்கு நன்றி உடையேன். மணிவிழாக் காணும் அகளங்கள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் மீண்டும் தெரிவிக்கிறேன்.

உரிமையுடன்

**அருணா செல்லத்துரை.**

---

**நறுந்தமிழ்** நூல்பற்றி கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் வீரகேசரி - *07.06.2008*

அகளங்கன் என்ற பெயரில் எழுதிவரும் வன்னிப் பிராந்திய தமிழறிஞரின் இயற்பெயர் நா.தர்மராஜா. இவரின் நறுந்தமிழ் என்ற இந்நூல் பள்ளிக்கூடப் பாடப்புத்தகமாக எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு விதந்துரைக்கப்படவேண்டும் என்றும், உரிய மேலிடத்தாரைக்கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பயனுள்ள நூலின் கட்டுரைகளின் தலைப்புகளைத் தருவதன் மூலம் இந்நூலில் அடங்கிய விடயங்கள் எவை என்பதை அறிந்து கொள்ள முடியும்.

செந்தமிழும் செம்மொழிச் சீரழிவும். தமிழை வளர்ப்போம் தமிழராய்த் தலை நிமிர்வோம். தமிழ் மொழியின் அடை மொழிகள். தமிழ் மொழியின் திட்பமும், நுட்பமும் ஒட்பமும். தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள். தும்மலும் வாழ்த்தும், பண்டைத்தமிழரின் வாழ்க்கைச் சிறப்பு, சுவாமி விவேகானந்தரும் தமிழிலக்கியமும், நாடகமே உலகம், காயம் இல்லாத ஆகாயம், போரும் பொது மக்களும். புற நானூற்றில் அறக் கருத்துக்கள். கண்காணா உயிர் நட்பு. ஐவகை உணவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# எனக்குள் ஒருவனான என் உடன் பிறவாத் தம்பி

**காப்பியக்கோ, புலவர்மணி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

**அ**ன்றுதான் அவனைக் கண்டேன். கள்ளமில்லாத புன்னகையோடு என்னை ஏறிட்டு வணக்கம் என்றான். நானும் அவன் புன்னகையின் புனிதம் கண்டு இருகை கோர்த்து வணக்கம் என்றேன்.

தனது பெயரைச் சொன்னான். புரிந்தது எனக்கு. ஏற்கனவே பெயரளவில் மட்டும் அறிந்திருந்த நான். எனது பெயரையும் அவனுக்கு அறிமுகம் செய்து கொண்டேன்.

வானொலி நிலையத்தின் ஒலிப்பதிவுக் கூடத்திற்கு எம்மை அழைத்துச் சென்றனர். முதல் மூன்று பரிசு பெற்ற எங்கள் மூவரினதும் கவிதைகள் எமது குரலிலேயே பதிவாகின. கவிதைகளின் ஒலிப்பதிவு முடிந்ததும், நாங்கள் வந்ததுபோல் தனித்தனி திசை மாறிக்கொண்டோம். இது நடைபெற்றது 1996ம் ஆண்டிலாகும்.

பேரறிஞர் நாவற்குழியூர் நடராசன் அவர்களின் நினைவாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் கவிதைப் போட்டியொன்றை நடத்தியது. அதில் நானும் பரிசு பெற்றிருந்தேன்.

மாலையில் பரிசளிப்பு விழா. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில். பரிசு பெற்றவர்கள் சார்பாகப் பேச, அக்காலப் போழ்திலும் பேச்சில் வல்லவனாக அறியப்பெற்ற அவனைத்தான் அழைத்தார்கள். அவன் பேசினான்.

அவன் பேச்சில் அவை பூரித்துப்போனது. நானும் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை குளிர்ந்து போனேன். அதற்குக் காரணமுண்டு. தனக்குக் கிடைக்காத ஒன்று பிறிதொருவருக்குக் கிடைத்தால், அதன்காரணமாகக் காழ்ப்புணர்வால் வெற்று விளக்கம் பேசுபவர்கள் மத்தியில், அவன் பேச்சு வேறுவிதமாக இருந்தது.

"கூட்டுத்தாபனம் மிகச் சரியான முடிவொன்றைத்தான் செய்துள்ளது. நான் போட்டியில் இரண்டாம் பரிசில் பெற்றேன். முதற் பரிசினை ஜின்னாஹ் ஷரிபுத்தீன் பெற்றுள்ளார். அந்தப் பரிசிலுக்குரியவர் அவர்தான். அவர் கவிதை அத்தகைய தகுதி கொண்டது" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலத்தில் எனது கவிதைகளைப் படித்த ஒருசில கவிஞர் அவை என்னுடையவையல்ல எனது தந்தையார் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் கவிதைகள் என்றெல்லாம் பேசித்திரிந்தபோது, இப்படியும் ஒரு ஆளுமைமிக்க கவிஞன் மனம்விட்டுப் பாராட்டுவதென்றால் யாருக்குத்தான் உள்ளங் குளிராது. அன்றிலிருந்து அந்த நல்ல மனங்கொண்ட கவிஞனை நான் **எனது உடன்பிறவாத் தம்பியாக்கிக் கொண்டேன்.** அது இன்னும் தொடர்கின்றது. அவன்தான் அகளங்கன்.

கலாநிதி அகளங்கன் அவர்களை இதுகால் மட்டும் ஒருமையில் விளித்தேன். இதனைப் படிப்பவர்களுக்கு நான் முறையற்று ஒரு தமிழறிஞனை விளிப்பதுபோல் தோன்றலாம். அதனைத்தான் நான் விரும்புகின்றேன். அவரும் விரும்புவார். ஒரு இசுலாமியனுக்கும், ஒரு சைவசமயத்தானுக்கும் இடையில் இன்று இருக்கும் நெருக்கம் மயிரூடாட மாட்டாதது.

கலாநிதி அகளங்கன் அவர்களின் ஆற்றலில் நான் அதிகம் நம்பிக்கை கொண்டவன். பல்துறைசார் ஆளுமை கொண்டவர் அவர் என்பது அறியப்பட்டதே. சுமார் பத்தாயிரம் பாடல்கள் கொண்டு படைக்கப் பெற்ற எனது பத்துக் காவியங்களில் ஒரு பாடலேனும் அவரது பார்வை படாது வெளிவரவில்லை. அவற்றில் எல்லாளன் காவியம் என்னுங் காவியத்தை **அவருக்கும்** எனது இலக்கிய வாழ்வில் மற்றுமொரு துணையாகவும், தம்பியாகவும் இருக்கின்ற கலாநிதி **ஓ.கே. குணநாதன்** அவர்களுக்கும் எனது நன்றியுணர்வின் அடயாளமாகச் சமர்ப்பணம் செய்துள்ளேன்.

எனது முதலிரு காவியங்களான "மஹ்ஜபீன்" "புனித பூமியிலே" இரண்டினையும் சங்க இலக்கியங்களோடு ஒப்பாய்வு செய்து "கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு" என்னுந் தலைப்பில் **காவியமாமணி அகளங்கன்** அவர்கள் ஒரு ஆய்வுநூல் வெளியிட்டுள்ளார். அதனை ஆய்வு நூ ல்களின் **"மாஸ்டர் பீஸ்"** என எனது ஞானத் தந்தை பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். அத்தனை சிறப்புமிக்க ஆய்வு நூலது. இதனைப் படித்த இலங்கையின் பிரபல எழுத்தாளர் ஒருவர் அவரிடம் தனது படைப்புக்களை ஆய்வு செய்து அது போன்ற ஒரு ஆய்வுநூல் செய்துதர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டாராம்.

இக்காவியங்களை ஆய்வுசெய்து இந்தியத் தமிழகத்தில் ஒரு பேராசிரியர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இலங்கையிலும் மூவர் சிறப்புக் கலைமாணிப் பட்டங்கள் பெற்றிருப்பினும், அவை அனைத்திலும் இலக்கிய ஆய்வுப் புலத்தில் **இவரது ஆய்வே முதன்மை பெறும்** என நான் உறுதியாக நம்புகின்றேன். அவருக்கு நான் என்றும் நன்றியுடையவன்.

பல்துறை சார்ந்து நூல்களை யாத்து வெளியிட்டுள்ள அகளங்கன் அவர்களின் **"கம்பனில் நான்"** என்னும் ஆய்வு நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பினை நான் பெற்றேன் என்பது எனக்காக அவரளித்த ஒரு இலக்கிய அங்கீகாரம் என நான் எண்ணுகின்றேன்.

ஆழமான அறிவுத் தேடலும், அதன் பயனாய் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு உருவாகும் அவரது புதுப்புதிதான படைப்பிலக்கியங்களும் சமூகத்திற்கு நற்பயனளிப்பன. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் ஊட்டமளிப்பன. தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற கல்வியைப் பிறருக்கும் ஈந்தளிக்கும் அவரது உயர்பண்புக்கு இவை அடையாளங்களாகும்.

கணித விஞ்ஞானத் துறை சார்ந்தவராக இருந்தும், அதீத தாய்மொழிப் பற்றின் காரணமாக தமிழிலக்கியப் பணிசெய்யும் நல்லாசிரியரான திரு.தர்மராஜா அவர்கள், பெரும்பாலும் இஸ்லாமியப் பாடசாலைகளில் கற்பித்ததன் காரணமாக இஸ்லாமிய இலக்கியங்களிலும் இவருக்கு ஈடுபாடு அதிகம் எனலாம். அந்த நம்பிக்கையொன்றின் பொருட்டே எனது மதம்சார்ந்த படைப்புக்களையும் அவர் பார்வைக்கு நம்பிக்கையோடு நான் தரலானேன். எனது எதிர்பார்ப்பு என்றும் வீண்போனதில்லை எனத் துணிந்தும் கூறுவேன்.

இன, மத பேதமற்று எல்லோருடனும் சமமாகப் பழகும் உயர்பண்பு கொண்ட கலாநிதி அகளங்கனுக்கும் எனக்கும் ஒரு முறை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் சமய நல்லிணக்க கௌரவ விருதளிக்கப்பட்டமை மறக்கவொண்ணா நிகழ்வாகும்.

பலமுறை தனது படைப்புக்களுக்காக இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் உட்பட, பல்வேறு பரிசில்களைப் பெற்றவர் அகளங்கன் அவர்கள். ஒருமுறை நானும் அவரும் ஒரே மேடையில் என் தந்தையார் ஆளுநர் விருது பெற்றபோது, எங்கள் நூல்களுக்காக நாங்கள் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருது பெற்றோம். இது **ஒரு தந்தையும் அவர்தம் இரண்டு மக்களும்** ஒன்றாக ஒரே மேடையில் விருது பெற்ற உணர்வை எமக்களித்தது.

கலாநிதி அகளங்கன் அவர்கள் புராண இதிகாசங்களேடு, சங்க இலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமை கொண்டவராக இருப்பதனால், சமயஞ்சார்ந்த சொற்பொழிவுகளோடு, தனது தமிழிலக்கியச் செயற்பாடுகளிலும் அவற்றின் பயன்கொண்டு பெயர் கொண்டவர், எனதுபல காவிய வெளீயீட்டு விழாக்களிலும் அவர் ஆய்வுரைகள் நிகழ்த்தியமை என் படைப்பிலக்கிய முயற்சிக்கு அவர் தரும் பக்கபலமாகும்.

புதுக்கவிதையின் ஆதிக்கம் இளையதலைமுறையை ஆட்கொள்ள விளைந்தபின்னர், மரபுவழியில் கவிதை இயற்றும் ஆளுமை குன்றிப்போயுள்ள இற்றைய காலகட்டதில், எண்ணிய கருவை யாப்புக்குள் நின்று, ஓசை குன்றாது கவிதை படைக்கும் ஒரு சிறந்த கவிஞராக அடையாளங் காணப்படுபவர் காவியமாமணி அகளங்கன் அவர்கள். அதனை அவர் பெற்றுவரும் பரிசுகள் நிரூபணம்செய்வன.

ஒரு படைப்பிலக்கியவாதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக மனை அமைவது இன்றியமையாதது. அகளங்கனின் வளர்ச்சியில் பணிவும், அடக்கமுங் கொண்ட பட்டதாரியான அவர் மனையாளின் பங்களிப்பை நானறிவேன். **அவர் அவருக்கு இறைவன் தந்த கொடையாகும்.** என் வாழ்வில் நான் கொண்ட வரமும் அ.ஃதே.

அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் கவிஞர் அவர்களை பல்துறை சார்ந்த அறிஞர்களும் பாராட்டி விழாவெடுக்கும் இக்காலை, அவரை இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்ய, ஒரு உடன்பிறவாச் சகோதரன் என்ற வகையில் வாழ்த்தி மகிழ்வதில் நான் நெஞ்ச நிறைவடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

# எழுத்துலகின் இமயம்

**மௌலவி அல்ஹாஜ்.S.அப்துல்சமட்** *B.A. Dip.in Edu. M.Ed*
*சட்டத்துறை மாணவர்.*

**எ**ழுத்துலகிற்கே தன்னை அர்ப்பணித்த **இமயமொன்றுடன்** நீண்ட காலங்கள் பழகக் கிடைத்ததற்கும் அதனூடாக படைப்பிலக்கியங்களுடன் தொடர் பேற்பட்டமையையும் பெரும்பேறாகத் தந்த இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக. அகளங்கன் எனும் பெயரை அறியாத இலக்கிய ஆர்வலர்களே கிடையாது எனுமளவுக்கு ஈழத்திலும் கடல்கடந்த நாடுகளிலும் உச்சரிக்கப்படுபவர். புதுக்கவிதை, மரபுக்கவிதை, சிறுகதை, நாவல், பேச்சு, நாடகம், பட்டிமண்டபம், வழக்காடு மன்றம் என சகலதுறைகளிலும் கால் பதித்தவர். வன்னியில் விஷேடமாக என்ன உள்ளது எனக் கேட்டால் **"அகளங்கன் இருக்கிறார்"** எனக் கூறக்கூடிய அளவுக்கு வன்னிக்குப் பெருமை சேர்த்தவர்.

இனத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால் ஒன்றாகியுள்ள நிலையில் உடன்பிறந்த சகோதரனைப் பற்றி எழுதும் உணர்வுடன் இது எழுதப்படுகிறது. **பட்டாணிச்சூர்** எனும் முஸ்லிம் கிராமத்திற்கும் **பம்பைமடு** எனும் தமிழ் கிராமத்திற்கும் இடையேயுள்ள தூரம் ஆக நான்கு மைல்கள் தான். இதன் காரணமாக இக்கிராமத்தவர்களிடையே நெருங்கிய தொடர்புகள் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது.

பம்பைமடுதான் அகளங்கன் பிறந்த இடம். பிரதான பாதையில் இருந்து இரண்டு மைல் உள்ளே செல்ல வேண்டிய தூரம். பஸ் போக்குவரத்து அற்ற அந்த சின்னக் கிராமத்தில் வளர்ந்து இன்று **உலக எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்பவர்தான் அகளங்கன்** அவர்கள். நகரச்சூழல், படித்த சமூகம், நூலகவசதி, இலக்கியவாதிகளின் தொடர்பு என்பவைகள் ஒரு இலக்கியவாதிக்கு ஒரு எழுத்தாளனுக்கு அவசியமல்ல, மாறாக விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் தொடர்ந்து எழுதும் ஆற்றலுமே எழுத்தாளனை உருவாக்குகின்றன. என்பதற்கு அகளங்கன் ஓர் சிறந்த உதாரணமாகும். வசதிவாய்ப்பும் நிரந்தர வாழ்க்கைச் சூழலும் கொண்ட எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். ஆனால் மிகவும் பின்தங்கிய கிராமிய சூழல் பத்திரிகை வாங்கக்கூட பல மைல்கள் செல்ல வேண்டிய நிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகன வசதிகள் அற்ற கிராமம், யுத்த சூழல், உயிரைக் கையிற்பிடித்தபடி இடம்பெயர்வுகள் இவைகளுக்குள் இருந்து கொண்டு தன்னை வளர்த்துக் கொண்டவர்தான் அகளங்கன் ஆவார்.

ஒரு எழுத்தாளனின் படைப்பிலக்கியங்கள் உயிரோட்டமானவையாகவும். ரசனைமிக்கதாகவும் அமைவதற்கு அவனது பேனாமுனை அசையும் போது மன அமைதியும் சூழல் அமைதியும் சாதகமாக அமைய வேண்டும். ஆனால் அகளங்கனின் அதிகமான எழுத்துக்கள் துப்பாக்கி வேட்டுக்கள் மலிந்த காலமும். அடுத்த நகர்வு எங்கு எனப்புரியாத சூழலிலும் அமைந்தவைகளாகும்.

அகளங்கனின் கிராம சூழலை முஸ்லிம்களும் இலகுவாக தெரியக்கூடிய அளவிற்கு முஸ்லிம், தமிழ் கிராமங்கள் அருகருகே அமைந்துள்ளன. இரு இனங்களுக்கிடையேயும் பிரிக்கமுடியாத பாரம்பரிய உறவு இருந்து வந்துள்ளது. 99ம் ஆண்டு இடம்பெயர்ந்தபோது நாங்களும் அகளங்கனும் போய் தங்கியிருந்தது **புளிதறித்த புளியங்குளம் எனும் முஸ்லிம் கிராமத்திலாகும்.** தங்கள் சொந்த உறவு போல முஸ்லிம் மக்களும் நேசிக்கக்கூடியவகையில் சமூகங்களுடன் தன்னை இணைத்துக்கொண்டவர் தான் அகளங்கன்.

**வவுனியன் சுரேஷ்** என்பவரை இதழாசிரியராகவும் **அகளங்கனை** கௌரவ ஆசிரியராகவும் கொண்டு 1998 தைமாதம் வெளியாகிய **"கவிச்சரம்"** எனும் சஞ்சிகையில் வெளிவந்த எனது கவிதை தமிழ் முஸ்லிம் உறவை இவ்வாறு விபரிக்கிறது.

**"செயின் காக்கா** வீட்டினுடைய செம்மண்ணிறக் குந்தினிலே
**நாகலிங்கத்தார்** வந்து நலம் கேட்டுக் கதைக்கையிலே
கவலைகளே தெரியாமற் கலகலப்பாய்ச் சிரிப்பார்கள்.
கடுகளவும் உள்ளத்திலே கபடங்களும் இருக்காது

**பட்டாணிச்சூர்** விதைநெல்லு **பம்பைமடுவிற்** பயிராகி
பட்டணத்துச் சந்தைகளில் பச்சரிசியாய் விலைபோகும்.
விதை நெல்லுக் காசு கேட்டு விவாதங்களே காணாத
வரலாற்றுப் புனிதர்களேயெம் பழங்கிராம மனிதர்கள்.

நிகழ்காலக் கிராமங்களில் நிம்மதியும் தொலைந்து போச்சு
நிறம்மாறும் மனிதர்களால் வருமதியும் குறைஞ்சு போச்சு
விவசாயக் கிராமங்களில் விடிய விடிய வீடியோக்கள்
விவசாய இல்லங்களில் வெளிநாட்டு மோகங்கள்.

அன்பொலிஸ் ஏரியாக்களில் அடிக்கடி பொலிஸ் வருகுது
அருமையான கிராமங்களில் அடிதடிகள் பெருகி வருகிறது
அநியாயமும் அட்டூழியங்களும் அனுதினமும் அரங்கேறுது
அடுத்த வீட்டுக்காரனுக்கும் குழிபறிப்புகள் தினம் நடக்குது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையான காலங்களோ எமைவிட்டும் போயாச்சுது
அந்தநாள் ஞாபகங்களோ எமைவாட்டும் நோயாச்சுது.
மனிதர்களைத் தேடுகிறேன் மௌனமாக தியானத்திலே
புனிதர்களோ வாழ்கின்றனர் மௌனமாக மயானத்திலே.

முஸ்லிம் மக்களோடு ஒரு தாய்ப் பிள்ளையாகப் பழகும் அகளங்கன் முஸ்லிம்களின் விஷேட விழாக்களில் **அதிதியாக** அழைக்கப்படுவார். குறிப்பாக முகம்மது நபி அவர்களின் பிறந்ததின விழாவான **மீலாதுன் நபி விழாவில்** அவர் பேசும் போது **குர்ஆனின் வசனங்களை, அறபுச் சொற்களை** அதே மாதிரி உச்சரித்துப் பேசுவது முஸ்லிம்கள் அனைவருக்குமே பிடித்தமானதாகும். முஸ்லிம்களைப் போலவே. உம்மா, வாப்பா, காக்கா, ராத்தா என அகளங்கன் உச்சரித்து அழைப்பார்.

அகளங்கனின் சேவை **முஸ்லிம் மாணவ சமூகத்திற்குக் கிடைத்தமை மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.** 1993-1998 காலப்பகுதியில் **முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு** சேவைக்காக இடமாற்றம் பெற்றுவந்தார். அக்காலப்பகுதியானது முஸ்லிம் மாணவர்க்கு **கணிதப்பாடம்** என்பது கடினப் பாடமாக அமைந்த காலம். குறுகிய நாட்களுக்கிடையில் கணிதப்பாடத்தில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி மிக விருப்பமான பாடமாக ஆக்கியவர் அகளங்கன். அக்காலத்தில் சிறந்த சித்தி பெற்ற பல முஸ்லிம் மாணவர்கள் இன்று சிறந்த நிலையில் உள்ளனர்.

அவருடன் ஒன்றாகக் கற்பித்த அந்தக் காலப்பகுதி மறக்கமுடியாத காலப்பகுதியாகும். எங்களையெல்லாம் **எழுதத்தூண்டி எழுத்துலகிற் பிரவேசிக்க வைத்தவர். அவரது பாசறையில்** வளர்ந்தவர்கள் எனக்கூறிக்கொள்வதில் எவ்வளவு பெருமை. தன்னைச் சூழவுள்ளவர்களையும் எழுதத்தூண்டி வழிப்படுத்துவதில் அகளங்கன் மிகவும் வல்லவர்.

இலக்கியப் போட்டிகள் எங்கு நடந்தாலும் அதில் பங்குபற்ற ஆர்வமூட்டுவார். இதன் காரணமாக போட்டிகளில் வென்று **"கவியெழில்"** எனும் பட்டம் பெறும் போது அகளங்கனோ **நோர்வே தமிழ்ச்சங்கம் நடாத்திய சர்வதேசப் போட்டியில்** இரண்டாம் இடம் பெற்றிருந்தார். இவ்வாறு ஏனையோரை எழுத்தாளர்களாக்குவதால் உலக வெற்றிகளை சம்பாதிக்கும் திறமைகளை இறைவன் அவருக்கு வழங்குகிறான். **அவரது வீட்டிற்குள் நுழைந்தால் கலையம்சங்கள் பொருந்திய ஒரு புனித நிலையத்திற்குள்** நுழையும் பிரமை ஏற்படும்.

எந்நேரமும் சிரித்த முகமும் எளிமையான சுபாவமும் கொண்ட அகளங்கன் எமது வன்னியின் சின்னக் கிராமங்களுக்குக் கிடைத்த **மாபெரும் பொக்கிஷம்** என்றால் மிகையாகாது. இதனால் முஸ்லிம் கிராமத்தவர்களாகிய நாங்களும் பெருமையடைகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

# பெண்களையும் புராணபடனத்தில் இணைத்துக் கொண்ட பெருந்தகை

**திருமதி.புவனநாயகி ஜயம்பிள்ளை**
ஓய்வுநிலை ஆங்கிலப் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர்.
மணிவாசகர் சபைச் செயலாளர்.

**செ**ழிப்பான நிலத்தின் தன்மையை, அந்நிலத்தில் விளைந்த பயிர்கள் காட்டி நிற்பது போலவும், பூந்தோட்டத்தின் வனப்பை, பன்நிறப் பூக்கள் மலர்ந்து, மெருகூட்டுவது போலவும், நீண்டு, அடர்ந்த காடுகளில் ஓங்கி வளர்ந்து நிலைத்திருக்கும் மரங்களில், தேடுவாரற்றுக் கிடக்கும் பூக்களில் தேடித் தேடிச் சேர்த்து, தமது கூடுகளில் வைத்து தேனாக்கி, அதை மருந்தாகவும், விருந்தாகவும் மக்களுக்குக் கொடுக்கும் தேனீக்களின் சிறப்பான தொழிற்பாடு போலவும், **கலாநிதி அகளங்கனின்** பரோபகார மனப்பான்மையை காண்கிறேன், வியக்கிறேன், ஆச்சரியமடைகிறேன், ஆனந்தமுறுகிறேன். சுருக்கமாகக் கூறப் போனால், அவரின் தமிழறிவின் பன்முகத் தோற்றப்பாடுகள், வெளிப்பாடுகள், **சிறியவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், அறிஞர்கள், கலாரசிகர்கள்** போன்ற பலரும் அறிந்து பயன்பெறக்கூடியனவாக அமைந்துள்ளமை காட்டி நிற்கின்றன.

எண்ணற்ற **கவிதைகள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான பாப்பாப் பாடல்கள், சிறுகதைகள், நாவல்கள், வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள்** முதலிய தனித்துவப் படைப்புகள் மூலம் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டவர். தனது சொந்தப் பிரதேசத்தில் மட்டுமல்லாமல் தலைநகரில் நடைபெறும் பல தமிழ் விழாக்களில் பங்கு கொண்டு தன் கருத்துக்களை இன்றுவரை பகிர்ந்துகொள்பவர்.

இவற்றோடு மட்டுமல்லாது, வவுனியாவில், **கந்தபுராண படன விருத்திக்கு** அகளங்கன் ஆற்றிய சேவை போற்றப்பட வேண்டியதொன்றாகும். வவுனியாவில் ஆண்டுதோறும் காலத்துக்குக் காலம் சுமார் மூன்று மாதம் வரை ஏதாவதொரு கோயிலில் கந்தபுராணப் பாடல்களை வாசிக்கவும் பொருள் விரித்து விளக்கம் சொல்லவும் ஒரு தொகுதியினர் வளர்ந்து கொண்டேயிருக்கின்றனர் என்றால் **இத்திருச் செயலுக்கு மூலகர்த்தாவாக அகளங்கன்** அமைவது அவரின் அதி சிறந்த சமய சேவை எனலாம். பெண்கள் புராணங்களைத் தொடவும் கூடாது, அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணப் பாடல்களை வாசிக்கவும் கூடாது என்று நாஸ்திகம் பேசும் சமூகத்தில் பெண்களையும் இணைத்து கந்தபுராணப்பாடல்களை பெண்கள் வாசிக்கலாம், வாசியுங்கள் எனக்கூறி தடம்பதித்தவர் அகளங்கன். இத்திருத்தொண்டில் என்னையும் ஈடுபடச் செய்தமை, என்னை அத்துறையில் மீண்டும் மீண்டும் ஈடுபடச் செய்தது. செய்து கொண்டிருக்கிறேன்.

இதைவிட, ஆண்டுதோறும் இடம்பெறும் **"பிள்ளையார் கதை"** விரதகாலத்தில் படிக்கப்படும் **"பிள்ளையார் புராணம்"** எனும் நூலை வாசிக்கவும், பொருள் விரித்துரைக்கவும் பயிலும்படி என்னை வழிப்படுத்தியும், வளப்படுத்தியும் அமைத்து ஆன்மீக நிறைவு கொள்ளச் செய்தமை, எனக்கு விநாயகர் தந்த கொடை அகளங்கன் என எண்ணுகிறேன்.

சமய சம்பந்தமாக நான் பேசுவதற்கும் களம் அமைத்துதவியவர் அகளங்கன் அவர்களே. வவுனியா நகரத்தில் இடம்பெறும் கோயில் மகோற்சவ காலங்களில் தேர்த்திருவிழாவின் போது **நேர்முக அஞ்சல்** செய்யும் குழுவினருடன் எனக்கும், அந்த நிகழ்வில் அஞ்சல் செய்யும் வாய்ப்பையும் அமைத்துத் தந்தமை, இறை புகழ் பாட, இறைவன் தந்த திருக்கொடை என்றே புளகாங்கிதம் கொள்கிறேன்.

இவற்றோடு மட்டுமன்றி, சமயம் சம்பந்தமான பதிப்புகளையும் செய்து என்னை ஆற்றுப்படுத்தியுள்ளார். எனது விருப்பத்தின் பேரில், அபிராமிப்பட்டரின் **அபிராமி அந்தாதி** நூலை மீள்பதிப்புச் செய்ய உதவியதோடல்லாமல், அப்பதிப்பில் அபிராமிப்பட்டர் பற்றிய அறிமுக உரையையும் தந்து அப்பதிப்பைச் சிறப்பாக அமைப்பதற்கு உதவியாக இருந்தார். மேலும் எனது சகோதரன் **முல்லைவெளி நடராசனால்** எழுதப்பட்ட **"முள்ளியவளைக் காட்டு விநாயகர் அலங்காரம்"** எனும் கையெழுத்துப் பிரதியை செவ்வை பார்த்து, அந்நூலை அச்சுவாகனமேற்றி, தரமான கவிதை நூலாக வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்தார்.

மேலும், அண்மையில், வெளியீட்டு விழாவாகவும், அறிமுக விழாக்களாகவும் களங்கள் கண்ட **"இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு** - (The manual of Vanni Districts (Vavuniya and Mullaitivu) Northern Province - By J.P.Lewis - C.C.S எனும் ஆங்கில நூலை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்த தமிழாக்கக் குழுவின் இணைச் செயலாளராக, மொழியாக்கத்தை முழுமையாக செவ்வை பார்த்து, வெளியிட்டமைக்கு, **வன்னிக் குடியினரின் அளப்பரிய நன்றிக்கடன் என்றும் அவருக்குரியதாகும்.** இத்தமிழாக்க நூல் 2012ம் ஆண்டு வெளியிடப்பட்டு, அடுத்த ஆண்டிலேயே **"தமிழியல்"** விருதையும் பெற்றுக் கொண்டமை, அந்நூலுக்குக் கிடைத்த பெருமை எனக் கூறலாம்.

கலாநிதி அகளங்கனின் அறிவுச் செறிவின் வழிவந்த படைப்புக்கள் யாவும் ரசனையை மட்டுமல்ல, மக்கள் தொகுதியினரின் எல்லாப் பருவத்தினருக்கும் அறிவூட்டுவனவாகவும், சிந்தனைக்கு உரமூட்டுவனவாகவும், வாழ்வியற் கோலங்களின் பன்முகத் தோற்றப்பாடுகளுக்கும் தீர்வுகள் எட்டக்கூடியனவாகவும் அமைந்துள்ளமை பொருத்தமுடைத்ததாகும்.

அன்னார் மேலும் பல படைப்புக்களைத் தந்து பல பட்டங்களைப் பெற்று சமூகத்தின் ஒளியாகத் திகழ்ந்து, பல ஒளிக்கதிர்களை சமூகத்தில் உருவாக்கித் திகழ எல்லாம் வல்ல ஆடற் பெருமானைப் பணிந்து வணங்கி மகிழ்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

# திரு.அகளங்கன் – ஒரு ஆச்சரியக்குறி!

**அருட்தந்தை.தமிழ்நேசன் அடிகளார்**

**பல்துறை வித்தகர்**

***"தண்ணீர் தன் நாதனைக் கண்டது***
***நாணிச் சிவந்தது"***

இயேசு தண்ணீரை இரசமாக்கிய புதுமை பற்றி மேலைத்தேய கவிஞர் ஒருவர் எழுதிய கவிதை வரியொன்றின் தமிழ் மொழிபெயர்ப்பை திரு.அகளங்கன் எடுத்து விளக்கினார்.

2003 ஆம் ஆண்டு முருங்கன் புனித இயாகப்பர் ஆலய வளாகத்தில் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒரு விழாவின் போதுதான் திரு.அகளங்கன் மேற்படி கவிதை வரிகளை மேற்கோள்காட்டி உரையாற்றிக் கொண்டிருந்தார். அன்றுதான் நான் முதன் முதலாக அவரைச் சந்தித்தேன். கலைஞர் குழந்தை அவர்களின் அழைப்பை ஏற்று அந்த இரவு நேர விழாவில் அவர் கலந்து சிறப்புரையாற்றினார்.

"தண்ணீர் தன் நாதனைக் கண்டது நாணிச் சிவந்தது" என்ற வரிகளில் விளங்கிய கவித்துவத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

அன்றைய விழாவில் நான் கூறிய ஒரு தகவல் தனக்குப் புதிய செய்தியாக இருந்தது என்று எனக்குப்பின் பேசிய அவர் தெரிவித்திருந்தார். கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களுக்கான கதையை முன்னைய புலவர்கள் எங்கிருந்து பெற்றனர்? என்ற கேள்வியை எழுப்பி, போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் வடபுலத்தில் பணியாற்றிய வண.கென்றிக் கென்றிக்கஸ் என்ற குருவானவரால் தமிழில் எழுதப்பட்ட "வுளஸ் சங்ரோறும்" (Flos Sanctorum) என்ற நூலில் இருந்துதான் பெற்றுக்கொண்டனர் என்று அவ்விழாவில் நான் குறிப்பிட்டேன். இந்தச் செய்திதான் தனக்குப் புதிய தகவலாக இருந்ததென அவர் குறிப்பிட்டார்.

இப்படியாக எமது முதல் சந்திப்பிலேயே அவரிடமிருந்து நானும், என்னிடமிருந்து அவரும் புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்கின்ற அனுபவம் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இலக்கியவாதி, கலைஞர் என்பதற்கு அப்பால் திரு.அகளங்கன் அவர்களிடம் இருக்கின்ற அநீதிகளைக் கண்டு குமுறும் உள்ளம், மனித நேய உள்ளம் என்னை மிகவும் கவர்ந்தது.

2009ஆம் ஆண்டு! வடபுலத்தில் போர் கடுமையாக நடைபெற்று முடிந்திருந்த ஒரு காலப்பகுதி. இந்த ஆண்டு வடமாகாண இலக்கிய விழா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. மன்னார்ப் பேராளர்கள் வவுனியாவுக்குச் சென்று வவுனியாப் பேராளர்களுடன் இணைந்து தனியான பேரூந்தில் யாழ்ப்பாணம் சென்றோம். அந்தப் பேரூந்தில் பயணம் செய்தவர்களில் பலர் கலைஞர்கள். மாணவர்கள். வடமாகாண இலக்கிய விழாவில் நடனம், நாடகம் என பல கலை நிகழ்வுகளை மேடையேற்றச் சென்று கொண்டிருந்தனர். அவர்களுடைய கலை நிகழ்வுக்குத் தேவையான, மேடைக் காட்சிகளுக்குத் தேவையான பல பொருட்கள் அடங்கிய பொதிகளுடன் அவர்கள் சென்றனர்.

வீதிகளில் சோதனைகள் - கெடுபிடிகள் உச்சக்கட்டத்தில் இருந்த காலம். ஓமந்தைச் சோதனைச் சாவடியில் உச்சி வெயிலில் எமது பேரூந்து நிறுத்தப்பட்டது. எமது பயணப்பொதி உட்பட பேரூந்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் கீழே இறக்கும்படி கேட்கப்பட்டோம்.

**திரு.அகளங்கன்** மற்றும் **கலாநிதி கந்தையா சிறிகணேசன்** உட்பட எனக்கும் இதில் உடன்பாடு இருக்கவில்லை. எமது எதிர்ப்பை உரிய முறையில் பரிசோதனைக்காக வந்திருந்த இராணுவத்திடம் தெரியப்படுத்தும்படி திரு.அகளங்கன் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

"நாங்கள் எல்லோரும் இலக்கியவாதிகள். மற்றும் கலைஞர்கள். மாணவர்கள், வடமாகாண ஆளுனரின் அழைப்பின் பேரில்தான் யாழ்ப்பாணம் போகிறோம். இந்த உச்சி வெயிலில் இவ்வளவு பெரிய பொதிகளை கீழே இறக்கி ஏற்றுவது கஸ்ரம். உள்ளே வந்து பாருங்கள். பொதிகளைத் திறந்து காட்டுகிறோம்"

என நான் ஆங்கிலத்தில் அந்த இராணுவத்தினருக்குக் கூறினேன். இப்படியாகத் துணிவோடு நான் கதைப்பதற்கு எனக்குப் பக்கபலமாக இருந்து என்னை உற்சாகப்படுத்தியவர் திரு.அகளங்கன்தான்.

எமது எதிர்ப்பு இராணுவத்திற்குப் பெரிய குழப்பாக இருந்தது. எமது செய்தி இராணுவ மேலிடத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி தனது படைபட்டாளங்களோடு அங்கு வருகை தந்தார். மெய்க்காவலர்கள் புடைசூழ வந்த அவர் என்னைத் தனியாக அழைத்து உச்சி வெயிலில் அவருடைய காவலர்கள் என்னைச் சூழ்ந்து நிற்க என்னை விசாரித்தார்.

பாதுகாப்பின் நிமித்தம் சோதனையிடுவது அவசியம் என்றும், அதற்கு ஒத்துழைக்குமாறும் என்னிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

திரு.அகளங்கன் இராணுவத்திற்கு முன்னால் காட்டிய எதிர்ப்பு அநீதிகளைக் கண்டு குமுறும் ஓர் நல்ல மனிதராக அவரை எனக்கு இனம் காட்டியது.

.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைக் கெடுபிடிகள் முடிந்த நிலையில் எல்லோருக்கும் நல்ல களைப்பு. மதிய உணவு நேரம். ஒரு சிறிய தேத்தண்ணிக் கடைக்கு முன்னால் உட்கார்ந்தோம். சரியான பசி. கடையிலோ மதிய உணவு என்று சொல்லும் அளவுக்கு எதுவும் இல்லை.

திரு. அகளங்கன் தனது மனைவி, மகள், சகோதரர் என குடும்ப சகிதமாய் அந்த விழாவுக்கு வந்தவர். வீட்டில் இருந்து நிறையச் சாப்பாடு கட்டிக்கொண்டு வந்திருந்தார்.

பெரிய சோற்றுப் பார்சலை திறந்து வைத்து, "உங்களுக்குப் பிரச்சினையில்லை யென்றால் எங்களோடு வந்து சாப்பிடுங்கள் பாதர்" என்று தங்களோடு உணவருந்த என்னை அன்போடு அழைத்தார். "ஒரு பிரச்சினையும் இல்லை. பசிதான் இப்ப பிரச்சினை" என்று சொல்லிக்கொண்டு அவர்களுடைய பார்சலில் நானும் சாப்பிட்டேன். இஸ்லாமிய சகோதரர்கள் உணவருந்துவது போல ஒரு பார்சலில் இருந்து ஒரே நேரத்தில் பலரும் சாப்பிட்டோம். அது எனக்கு புதுமையான அனுபவமாக இருந்தது.

இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று மனிதத்தை நேசிக்கும் ஒருவராக அவரை அன்று நான் பார்த்தேன். அனைவரையும் தன் சகோதரர்களாக நேசிக்கும் ஒரு மனிதாபிமானமுள்ளவராக அவரை நான் அங்கு கண்டேன்.

.....

2011ஆம் ஆண்டு கொழும்பில் சர்வதேச எழுத்தாளர் மாநாடு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் முருகபூபதி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இம்மாநாட்டில் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான டாக்டர் ஞானசேகரன் அவர்களும் முக்கிய ஏற்பாட்டாளர்களில் ஒருவராகச் செயற்பட்டார். இம்மாநாடு நடைபெற்ற நாட்களில் டாக்டர் ஞானசேகரனின் ஏற்பாட்டில் நானும் திரு.அகளங்கனும், மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.தவராசா அவர்களும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மேல்மாடி அறையொன்றில் தங்கியிருந்தோம்.

இரவு முழுவதும் இவர்கள் இருவரும் பல விடயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் சுவாரஸ்யமான உரையாடலில் கலந்துகொள்ள எனக்கு விருப்பம் இருந்தாலும் களைப்பு மிகுதியால் நான் உறங்கிவிட்டேன்.

உறங்கினாலும் அவர்களுடைய உரையாடலிலும் எனது புலனைச் செலுத்த நான் தவறவில்லை "பாதரைக் குழப்புகிறோமோ தெரியவில்லை" என்று சொல்லிச் சொல்லியே இரவு முழுவதும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நாட்களில் திரு.அகளங்கன் எந்த அளவுக்கு கலை இலக்கியத் துறையில் அறிவு படைத்தவராக இருக்கின்றார் என்பதைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

.....

இவ்வாண்டு (2014) ஜனவரி மாதம் வவுனியாக் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் தனிநாயகம் அடிகளார் பற்றிய சிறப்புரையை ஆற்றுமாறு திரு.அகளங்கன் என்னை அழைத்திருந்தார்.

அந்த விழா ஆரம்பமாவதற்கு முன்னர் வவுனியா நகரில் உள்ள தனிநாயகம் அடிகளார் சிலைக்கு மாலை அணிவிக்கும்படி என்னை அவர் கேட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா முடிந்து நான் மன்னார் திரும்பியபின்னர் அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனக்கு நன்றி தெரிவித்தார். அந்த வேளையில் "விழாவுக்கு வந்தவர்கள் உங்கள் பேச்சு நன்றாக இருந்ததாகப் பாராட்டினார்கள். பாதர்மார் ஞாயிற்றுக்கிழமைகளில் பூசையில் பிரசங்கம் சொய்வதால் அவர்களுக்கு உரையாற்றுவது பழக்கமான ஒன்று எனவும் சிலர் கூறினார்கள்" என்றார்.

அந்த விழாவில் மட்டக்களப்பிலிருந்து பேராசிரியர் மௌனகுருவும் கலந்து கொண்டிருந்தார். அந்த விழாவில் சிலர் கௌரவிக்கப்பட்டனர். அந்த விழாவின் முக்கிய ஏற்பாட்டாளராக திரு.அகளங்கனே விளங்கினார். அந்த விழாவில் அவருடைய ஒழுங்கமைப்புத் திறமையைக் கண்டு நான் வியந்தேன்.

.....

அகளங்கனோடு அளவளாவுவது உண்மையில் ஓர் சுகானுபவம்தான். இவரோடு உரையாடும்போது கலை இலக்கியம் சார்ந்த பல தகவல்களைப் பெறமுடியும். சிலவேளைகளில் நகைச்சுவையும் வேடிக்கையும் வெளிப்படும்.

ஒருமுறை இவர் தன்னைப்பற்றிச் சொன்ன ஒரு வேடிக்கையான தகவல் இன்னும் என் மனதில் உள்ளது.

தான் எழுத்துலகில் பிரவேசித்த ஆரம்ப காலங்களில் "இவருக்கு என்ன தெரியும்? இவருடைய மனிசி எழுதிறதை இவர் எடுத்து தன்ர பெயரைப்போட்டு பிரசுரிக்கிறார்" என்று தன்னைப் பற்றி சிலர் கூறித்திரிந்ததாகச் சொன்னார்.

.....

திரு.அகளங்கனோடு எனக்குள்ள அனுபவங்கள், அவர் பற்றிய எனது மனப்பதிவுகள் இன்னும் பல உள்ளன. கட்டுரையின் விரிவஞ்சி எனது பகிர்வை சுருக்கிக்கொள்கிறேன்.

திரு.அகளங்கன் பல விடயங்களில் எனக்கு இன்றும் ஆச்சரியக் குறியாகத்தான் இருக்கிறார்!. ஒரு கணித ஆசிரியரால் எப்படி ஒரு முழுநேர இலக்கியவாதியாகவும் விளங்க முடிகிறது?

குடும்பப் பொறுப்பு, பாடசாலைக் கற்பித்தல் பணி, பாடசாலைக்குப் புறம்பான கற்பித்தல் பணி, எழுத்துப் பணி, விழாக்கள், கூட்டங்கள், சமூக சேவைகள். என்று இவை எல்லாவற்றிற்கும் இவரால் எப்படி நேரம் கண்டுபிடிக்க முடிகிறது?

எப்படி இவரால் பழந்தமிழ் மற்றும் நவீன இலக்கியங்களில் ஒரே நேரத்தில் பரிச்சயமுடையவராக இருக்க முடிகிறது? ஒரு குறிப்பிட்ட துறைக்குள் மட்டும் இவர் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் எப்படி இவரால் **"பல்துறை வித்தகராக"** திகழ முடிகிறது?

கலை இலக்கியத் துறையில் **அகலக் கால் பதித்தவர்.** அவருடைய இந்தப் பல்துறை ஆற்றலைக் கண்டு நான் பல தடவைகள் வியந்திருக்கிறேன். அதைவிட மேலாக அவருடைய கொடுமை கண்டு பொங்கும் போர்க்குணம், மனிதாபிமானம், சகோதரத்துவம், நகைச்சுவை, விழா ஒழுங்கமைப்பு என்று எல்லாவற்றிலும் முத்திரை பதிக்கும் திரு.அகளங்கன் எனக்கு எப்போதுமே ஒரு ஆச்சரியக்குறிதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# தொட்ட துறைகள் எல்லாம் துலங்கின

அருட்கலைவாரிதி, சிற்ப சிரோமணி, சிற்பக்கலைச்செல்வர்

கலாபூஷணம் **சு.சண்முகவடிவேல் ஸ்தபதி**

**வ**ன்னித்திருநாடு வீரத்தின் விளை நிலமாகவும் கல்வி கலைகளின் இருப்பிடமாகவும் திகழ்கிறது. இம்மண்ணிலே தோன்றி தமிழையும், கலைகளையும் வளர்த்தவர்கள் மண்ணை நேசித்தவர்கள் மிகப்பலராவர்.

சமீபகால வன்னிவரலாற்றில் பன்முக ஆளுமை கொண்ட தமிழறிஞராகத் திகழ்பவர், இலங்கைத் திரு நாட்டில் இன்றிருக்கும் தமிழறிஞர்களில் மிக முக்கியமான இடத்தை வகிப்பவரும், உலகம் முழுவதும் அறியப்பட்டவருமான நா.தர்மராஜா என்னும் அகளங்கனாவார்.

அகளங்கன் கணிதமும் விஞ்ஞானமும் பயின்றவர். தமிழ் மொழியிலும் சைவத்திலும் கொண்ட பற்று காரணமாக பண்டைத்தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் வேதம் ஆகமம் பன்னிரு திருமுறைகளையும் ஐயம் திரிபறக் கற்றுத் தேர்ந்தார்.

தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற தமிழாசிரியராகி ஓயாது உழைத்தார். எண்ணற்ற மாணாக்கரை உருவாக்கி அவர்களின் மேம்பாட்டிற்காக உரமாய் உழைத்தார். உழைக்கிறார்.

சைவத்திலும் தமிழிலும் பெரும் புலமை கொண்ட அகளங்கன் ஆறுமுகநாவலர் வழியிலே செயல்பட்டார். ஆலயங்களில் **புராணபடனங்கள் விரிவுரைகள்** நிகழ்த்தினார். **மகாபாரத, இராமாயண, கந்தபுராண** விரிவுரைகளை தொடர்ந்து நிகழ்த்துகிறார்.

இலக்கியத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் **வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்** என்னும் அமைப்பை ஏற்படுத்தி ஆண்டுதோறும் கலை இலக்கியப் பெருவிழாவை நடாத்தி, கலைஞர்களையும் இலக்கியவாதிகளையும் அறிஞர்களையும் கௌரவித்து வருகிறார். அத்தோடு **"மாருதம்"** என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு அறிவொளி ஊட்டுகிறார்.

சொற்பெருக்காற்றுவது அகளங்கனுக்குக் கைவந்த கலை. இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட அவர்பேச, சபையோர் தேனுண்ட வண்டைப்போல மயங்கியிருப்பர். எவ்விதக் குறிப்புகளும் இன்றி மணிக்கணக்கில் பேசும் வல்லமை பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்துறையிலும் முத்திரை பதித்தவர் அகளங்கன். இவர் எழுதிய **வாலி ஆய்வுநூல்** மூன்று பதிப்புக்களைக் கண்டது. பல்கலைக் கழகத்தில் துணைப் பாட நூலாகவும் இருக்கிறது. இவரது **இலக்கியச்சிமிழ், இலக்கியத்தேறல்** நூல்கள் இலக்கியச்சுவை மிக்கவை. வாசிக்கத் தூண்டுபவை. அறிஞர்களால் சிறந்த நூல்களாக விதந்துரைக்கப் பட்டவை.

இவர் தொடாத துறைகள் இல்லை. **தொட்ட துறைகள் எல்லாம் துலங்கின.** பாரதியைப் போல அகளங்கனும் **பாப்பாவுக்கும்** எழுதினார். **பாமரனுக்கும்** எழுதினார். **பெரியவர்க்கும்** எழுதினார் **மாணவர்க்கும்** எழுதினார்.

சிறந்த **கவிஞராகவும்** திகழும் அகளங்கன் பல்வேறு வகையான கவிதைகளையும் தந்தவர். இவரது **"இசைத்திட முடியாது...." மிகச் சிறந்த தமிழ் வாழ்த்துப் பாடலாகும்.** வானொலி நாடகங்களை எழுதுவதிலும் வல்லவர். மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல இவரது நாடகங்களைக் கேட்டு ரசித்தவர்கள் பாராட்டியோர் பல்லாயிரம் பேர்.

தமிழ்மணி அகளங்கன் நாற்பத்து மூன்று நூல்களின் ஆசிரியர். **இலக்கியம், சமயம், நாடகம், ஆய்வு, வரலாறு, கவிதை, மெல்லிசை, விளக்கவுரை, இசைப்பாடல், உரைகள், மழலைப்பாடல், சிறுகதை, நாவல், நாட்டிய நாடகம்** என எல்லாத் துறைகளிலும் தடம்பதித்துள்ளார்.

கலாநிதி அகளங்கன் அவர்கள் தேசிய சாகித்திய மண்டலம், வடமாகாணம், வடகிழக்கு மாகாணம், இலங்கை இலக்கியப்பேரவை, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் மற்றும் உலக நாடுகளின் பரிசையும் பாராட்டையும் பெற்றுள்ளார். **கலாநிதி, தமிழறிஞர், தமிழ்மணி, கலாபூஷணம்** இன்னும் ஏராளமான பட்டங்களையும் விருதுகளையும் வென்றவர்.

அகளங்கனின் உயர்வு, அவரது **கல்வி, ஒழுக்கம், சிறந்த மனையாள்** மூலம் மிளிர்கிறது. என்றுமுள்ள தென்தமிழ் இயம்பி இசைபட வாழ்கிறார்.

தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் சைவத்தமிழ் நூல்களிலும் ஆழ்ந்த புலமை கொண்ட அகளங்கனின் **சமயச் சொற் பொழிவுகள் இலக்கியச் சொற் பொழிவுகள்** மக்களை காந்தம் போல் கவர்பவை.

**பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், கவியரங்கு**களில் இவரது வாதத்திறனையும் கவித்துவத்தையும் காணலாம். இவர் பற்றி, இவரது ஆக்கம் பற்றி பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு செய்து பட்டம் பெற்றிருப்பதே இவரது ஆக்கங்களின் தரத்திற்குச் சான்றாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அகளங்கன் அவர்கள் பண்பானவர். பழகுவதற்கு இனிமையானவர். கல்வியைப் போற்றுபவர். கலைஞர்களை, இலக்கிய வாதிகளை ஊக்குவிப்பவர். தமிழையும் சைவத்தையும் தன் உயிராகக் கொண்டவர். இவரது சேவைகள் தொடர தமிழ்த்தாய் என்றும் துணையிருப்பாள். நாமும் துணையிருப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

# வவுனியூர் இரா.உதயணனின் இதயத்திலிருந்து....

**ம**ணிவிழாக் காணும் **கலாநிதி தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கனுக்கு** எனது இதயபூர்வமான மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இலட்சியமற்ற வாழ்க்கை அர்த்தமற்றது என்று சொல்வார்கள். அந்தவகையில் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் ஒரே ஒரு இலட்சியத்தை முழுமனதாகக் கொண்டு அந்த இலட்சியத்தைப் பேணிக்காத்து அடைவதில் அயராது உழைத்தவர். இன்னும் உழைத்துக் கொண்டிருப்பவர்.

அந்த இலட்சியம் தமிழ் தமிழ் தமிழ். தமிழுக்காகவே தம்மை அர்ப்பணித்த ஒரு சிலருள் தமிழ்மணி அவர்களும் அடங்குவார். என்று சொன்னால் மிகையாகாது.

எனக்கு அகளங்கன் அவர்களை நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தெரிந்திருந்தும் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கடந்த எட்டு வருடங்களாகத்தான் கிடைத்தது. ஒருவகையில் அவர் எனது உறவினராக இருந்தாலும் கூட ஒரு இனிய நண்பராகத்தான் என்னுடன் பழகினார்.

நான் 1980ம் ஆண்டு வேலை நிமித்தமாக ஓமான் நாட்டிற்குச் சென்று அதன் பின்பு மேற்படிப்பிற்காக இங்கிலாந்திற்குச் சென்று அங்கு வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் எனது பெற்றோருடன் மிக நெருக்கமாக நெருங்கிப் பழகியவர்களுள் **தமிழ்மணி அகளங்கன்** அவர்களும், வவுனியாவில் அந்த நாட்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தராகப் பணிபுரிந்த **ஓ.கே.குணநாதன்** அவர்களும் முக்கியமானவர்கள்.

எனது பெற்றோர்களும் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்ததால் இலக்கியம் சம்பந்தமான அறிவுரைகளைக் கேட்கவோ கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவோ, அடிக்கடி எனது வீட்டிற்குச் சென்று பெற்றோர்களைச் சந்திப்பது இவர்கள் இருவருக்கும் ஒரு வழக்கமாக இருந்தது.

நான் அந்த நாட்களில் பெற்றோருடன் ஒவ்வொரு ஞாயிறும் தொலைபேசியில் கதைக்கும் போது அகளங்கனும், குணநாதனும் வந்துவிட்டுப் போனார்கள் என்று எனது தாயார் அடிக்கடி சொல்லுவார். அகளங்கனை எனக்குத் தெரிந்திருந்தாலும் குணநாதனை அந்த நாட்களில் பெயரளவில் மாத்திரம்தான் தெரிந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அடிக்கடி எனது மண்ணிற்குச் சென்று வந்து கொண்டிருந்தாலும் 2008ம் ஆண்டு மார்ச் மாதம் எனது முதலாவது நாவலை **வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஐயாத்துரை அரங்கில்** வெளியிட்ட பின்புதான், அகளங்கனுடன் ஒரு நெருங்கிய நட்பும் நேசமும் உண்டாகத் தொடங்கியது.

அந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு **தலைமை தாங்கியவர் தமிழ்மணி அகளங்கன்** அவர்களே. அன்று வவுனியாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவை முடித்துக்கொண்டு நான் இங்கிலாந்து திரும்பிய பின்பு அகளங்கன் அவர்களுடன் அடிக்கடி தொலைபேசியில் பேசுவதுண்டு. கருத்துப் பரிமாற்றங்கள் தொலைபேசியினூடாகவே இடம்பெற்றன.

2010ம் ஆண்டு **தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் உலகளாவிய ரீதியில் சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்து அந்த ஆண்டிற்கான** முடிவுகளை அறிவித்திருந்தது. **இலங்கையைச் சேர்ந்த மூவருக்கு சிறந்த நாவல், நாடகத் தொகுப்பு, சிறுவர் இலக்கியப் படைப்புக்கள்** சிறந்த படைப்புக்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தன.

சிறந்த **நாவலுக்கான பரிசு எனக்கும்,** சிறந்த **நாடகத்தொகுப்பிற்கான** பரிசு **அகளங்கன்** அவர்களுக்கும், சிறந்த சிறுவர் இலக்கியத்துக்கான பரிசு **ஓ.கே. குணநாதன்** அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் மூவரும் ஒன்றாக இந்தியா செல்வதற்கு பயன்படுத்தினோம். நான் இங்கிலாந்திலிருந்து திருவனந்தபுரம் செல்ல, அகளங்கன், அவரது பாரியார், குணநாதன் மூவரும் கொழும்பிலிருந்து ஏயார்லங்கா விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தடைந்தார்கள். இரண்டு நாட்கள் திருவனந்தபுரத்தில் தங்கிவிட்டு, கோவையிலிருந்து வந்திருந்த எனது நண்பனின் வாகனத்தில் திருநெல்வேலிக்குச் சென்றோம்.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நடாத்திய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டோம்.

அந்த விழாவில் வெளிநாட்டிலிருந்து பரிசு பெற்றவர்கள் சார்பாக அகளங்கன் ஆற்றிய உரை அந்த மண்டபத்தில் குழுமியிருந்த பலரையும் கவர்ந்திருந்தது. விழா முடிவடைந்ததும் எழுத்தாளர்கள் பேராசிரியர்கள் எனப் பலர் அகளங்கனை நெருங்கி இனிய தமிழில் அழகாகப் பேசுகிறீர்கள். மனோன்மணியம் சுந்தரனார் பற்றி இங்கிருந்த பலருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். உங்களுக்கு நிறையவே தெரிந்திருக்கிறது வாழ்த்துக்கள். என்று வாழ்த்திச் சென்றனர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கும் மனம் பூரிப்படைந்தது.

விழா முடிந்ததும் அடுத்தநாள் நாங்கள் எனது நண்பருடன் புறப்பட்டு மதுரைக்குச் சென்றோம். மதுரையில் எங்களுடன் தங்கிவிட்டு, எனது கோவை நண்பர் சண்முகம் கோவைக்குத் திரும்ப, நாங்கள் இரண்டு நாட்கள் மதுரையில் தங்கி மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் அங்கேயிருந்த ஆலயங்களை தரிசித்துவிட்டு நான் சசிபாரதி சபாரட்ணம் ஐயா அவர்களை பார்ப்பதற்காக திருச்சி செல்ல அகளங்கன், அவரது பாரியார், குணநாதன் ஆகியோர் இராமேஸ்வரம் நோக்கிச் சென்றார்கள். இந்தப் பயணம் எமக்குள் ஓர் புரிந்துணர்வையும் மிகவும் நெருக்கமான நட்பையும் ஏற்படுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டு ஓ.கே.குணநாதன் அவர்களுக்கு சிறுவர் இலக்கியத்துக்காக சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது அறிவிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் ஒக்டோபர் மாதம் எனது **நூல் அறுந்த பட்டங்கள், பனிநிலவு, இந்தி** மற்றும் **மலையாள** மொழிபெயர்ப்புகளுக்கான கருத்தரங்குகள் **டெல்லி ஜவர்கல்லால் நேரு பல்கலைக் கழகத்திலும் கேரளா காலடி சங்கராச்சாரியார் பல்கலைக் கழகத்திலும்** நடைபெறவிருந்தன. **டென்மார்க்கைச்** சேர்ந்த **கலாநிதி, ஜீவகுமாரன், பரிசைச்** (Paris) சேர்ந்த **V.T.இளங்கோவன்** மற்றும் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளர் **உபாலி லீலாரட்ன** அவர்களுடைய நூல்களும் அந்தக் கருத்தரங்குகளில் விவாதிக்கப்படவிருந்தன.

இந்தச் சந்தர்ப்பம் மீண்டும் எங்கள் மூவரையும் இந்தியாவில் சந்திக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

நான் டெல்லி ஜவர்கல்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கருத்தரங்குகளை முடித்துக் கொண்டு **நாமக்கல்லை** வந்தடைய அகளங்கனும் ஓ.கே.குணநாதனும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அக்டோபர் 2ம் திகதி சின்னப்ப பாரதி அறக்கட்டளை நடத்திய விழாவில் கலந்து கொண்டு ஓ.கே.குணநாதன் சிறுவர் இலக்கியத்திற்காக பரிசு பெறுவதையும் பார்த்துவிட்டு கேரளாவிலுள்ள காலடி சங்கராச்சாரியார் பல்கலைக் கழகம் செல்ல தயாரானோம். எங்களுடன் **அன்ரனி ஜீவாவும், உபாலி லீலாரத்னாவும்** இணைந்து கொண்டார்கள்.

அடுத்த நாட்காலை வாடகைக்கு ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு கேரளா செல்ல ஆயத்தமான போது கேரளாவில் வேலை நிறுத்தம் எனவும், வண்டிகள் போவதைத் தடுப்பதாகவும் செய்தி வந்திருந்தது. இருந்தும் போய்ப்பார்க்கலாம் என்ற நோக்கத்துடன் கேரளா நோக்கி புறப்பட்டோம். ஏறக்குறைய ஆறு மணித்தியாலம் வண்டிப் பயணம். வேலைநிறுத்தம் இருந்தாலும் போகும் வழியில் எங்களுக்கு எந்தவொரு நெருக்கடியும் ஏற்படவில்லை.

காலடியை அடைந்ததும் சிவ சங்கராச்சாரியார் கோவிலுக்கு அருகிலுள்ள ஒரு விடுதியில் தங்கினோம்.

ஒக்டோபர் 4ம் திகதி நூல்வெளியீட்டு விழாவும், நூல் விமர்சனங்களும் இனிதே நடைபெற்றன. சங்கராச்சாரியார் பல்கலைக் கழக மாணவர்களும், கேரளாவைச் சேர்ந்த பல எழுத்தாளர்களும் சினிமாத் திரையுலக கதாசிரியரான **மதுபாலா** போன்றோரும் கலந்து சிறப்பித்தனர். புலம்பெயர் இலக்கியம் மற்றும் கேரள இலக்கியம் பற்றிய ஆய்வுகளும் நடைபெற்றன. **தமிழ்மணி அகளங்கன் அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டு தமிழ்மொழியின் தொன்மை பற்றி பேசினார்.**

அடுத்தநாட்காலை எமக்காக ஒரு நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்கள். அந்த நிகழ்வு என்னவென்றால் **அலப்பி** என்ற இடத்திற்குச் சென்று அங்கிருந்து படகு வீட்டில் (Boat House) ஏறி மற்றும் நதியில் பயணிப்பது. மிகவும் ஆவலோடு நாங்கள் அலப்பியை ஒரு மணிநேர வாகன ஓட்டத்தின் பின் அடைந்தோம். எமக்காக தரித்து நின்ற படகு வீட்டில் **நான் அகளங்கன் குணநாதன்** மற்றும் **அன்ரனி ஜீவா, உபாலி லிலாரத்தினா** ஆகியோர் ஏறிக் கொண்டோம்.

படகு வீட்டில் மதியபோசனம் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் படகு புறப்பட்டது. அழகான காட்சிகள். மென்மையான காற்று எங்கள் எல்லோர் முகங்களையும் தழுவிச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் ஒன்றாகக்கூடியிருந்த அமைதியான ரௌமியமான சூழ்நிலையில் பலரது படைப்புக்களைப் பற்றி விவாதித்தோம். ஒரு ஏரிக்கரையில் படகை நிறுத்தி வைத்து எமக்கு மதியபோசனத்தை பரிமாறி உபசரித்தார்கள் படகோட்டிகள்.

நன்றாக உணவருந்திவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போட்டோம். பின்பு எழும்பி தொலைக்காட்சியில் பல நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து போய்க் கொண்டிருந்தன. நாலுமணிவரை நதியிலும், ஏரியிலும் தென்பட்ட அழகான காட்சிகளையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்த்து ரசித்தோம்.

சரியாக நாலு மணிக்கு ஏரிக்கரையொன்றில் படகுவீட்டைத் தரித்து வைத்தார்கள். படகோட்டிகள் அருகில் ஒரு மீன்கடை இருப்பதாகவும் அங்கே சென்று இறால், மீன்கள் வாங்கி வந்தால் உடனேயே எங்கள் விருப்பத்திற்கேற்ப சமைத்துத் தருவதாகவும் சொன்னார்கள்.

படகை விட்டிறங்கி மீன்கள் விற்குமிடத்திற்கு சென்று கொஞ்ச நேரத்துக்கு முன்பு பிடித்துக் கொண்டு வரப்பட்ட மீன்களில் ஒரு சிலவற்றையும் இறால்களையும் வாங்கி வந்து படகோட்டிகளிடம் கொடுக்க அவர்கள் வாய்க்கு ரூசியாக சமைத்துப் பரிமாறினார்கள்.

அந்த நாள் இனிமையான பல விடயங்களையும் விவாதிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த ஒரு நாளாக அமைந்தது.

அன்றிரவு இராப்போசனத்தை படகு வீட்டிலேயே உண்டுவிட்டு அங்கேயே இரவு நித்திரை கொண்டு காலை ஆறு மணிக்கு எழும்பி குளித்து ஆடைகளை மாற்றிவிட்டு நான், அன்ரனி ஜீவா, உபாலி லீலாரட்ன ஆகியோர் வண்டியில் **கொச்சின்** விமான நிலையம் நோக்கிப் புறப்பட அகளங்கனும் குணநாதனும் வேறு வண்டியில் **சேலம்** செல்வதற்காக புகையிரதநிலையம் நோக்கி புறப்பட்டார்கள்.

இப்படியாக அகளங்கனுடனும் மற்றைய நண்பர்களுடனும் எமது நாட்டை விட்டு இன்னொரு நாட்டில் சந்தித்து ஒன்றாகவிருந்து சிரித்து உணவுண்டு அளவளாவிய நாட்களை நினைத்துப் பார்க்கும் போது இப்படியானவொரு சந்தர்ப்பத்தை இன்னுமொருமுறை கிடைக்காதா என மனம் ஏங்குகிறது.

வாழ்க்கையில் உறவினர்களை விட நண்பர்களுடன் இலகுவாகப் பழகலாம். எதையும் மனம்விட்டு சொல்லலாம். உறவுகளுடன் பகிர்ந்துகொள்ள முடியாத சிலவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து ஆலோசனை கேட்கலாம். அந்தவகையில் அகளங்கன் ஒரு உறவினராக இருந்தாலும் நான் என்னுடன் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக நேசிக்கிறேன். அவ்வப்போது, விளக்கங்களையும், அறிவுரைகளையும் கேட்டுக்கொள்கிறேன். இப்படியாக மனம் விட்டுப் பழகக்கூடிய ஒரு இனிய நண்பன் எனக்குக் கிடைத்தது நான் செய்த பாக்கியமே.

அகளங்கன் என்ற தமிழ்ப் பொக்கிஷம் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும். தமிழுக்கு இன்னும் நிறையப் பணியாற்ற வேண்டும் என்று கடவுளை வேண்டி, மீண்டும் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

*2 Blue Cesars, Warren Road,*
*Banstead Surrey Smtint - U.K.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

# என் பார்வையில் அகளங்கன் ஆசிரியர்

**அருட்தந்தை.செ.அன்புராசா, அ.ம.தி.**

அதிபர், புனித வளனார் அ.ம.தி. குருமடம் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**க**லைஞர்களை, எழுத்தாளர்களை, இலக்கியவாதிகளை, சமய சமூகப் பெரியவர்களை, நாடக ஆசிரியர்களை தேடிச் சென்று தொடர்புகளை ஏற்படுத்தி உறவைப் பேணுபவர் - வளர்ப்பவர் என் தந்தையார் **குழந்தை செபமாலை** அவர்கள். அவ்வாறாகத்தான் அகளங்கன் ஆசிரியருக்கும் என் தந்தையாருக்கும் இடையிலான நட்பு உருவானது என எண்ணுகிறேன்.

2000ஆம் ஆண்டுகளில் தான் இவர்கள் இருவருக்கும் இடையிலான தொடர்பும் நட்பும் ஏற்பட்டிருக்க வேண்டும் என எண்ணுகிறேன். அன்றிலிருந்து அவர்கள் இருவரும் வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம் சந்தித்து, தொலைபேசியில் உரையாடி உறவை - நட்பை வளர்த்துக் கொள்வதை அறிந்திருக்கிறேன்.

என் தந்தையாரும் நானும் சந்திக்கின்ற நேரங்களில் இலக்கியம், நாடகம், விழாக்கள் போன்றவை பற்றி உரையாடுகின்ற போது அகளங்கன் ஆசிரியரைப் பற்றிய குறிப்பை என் தந்தையார் எப்படியாவது ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவார்.

"தமிழ்விழா - நாடகவிழா வைத்து அகளங்கனை கூப்பிடவேணும்" என்றும், "அகளங்கன் நல்ல மனிசன்" என என் தந்தையார் கூறுவதைப் பல தடவைகளில் அவதானித்திருக்கிறேன். இவ்வாறான ஒரு பின்புலத்தில்தான் அகளங்கன் ஆசிரியர் என் தந்தை **குழந்தை செபமாலை** மூலம் எனக்கு அறிமுகமானார்.

தொடர்ந்து, அகளங்கன் ஆசிரியருடன் சில நூல் வெளியீடுகள் தொடர்பாக சந்திக்கவும், சில மேடைகளில் அவருடன் கூட அமரவும், தொலைபேசியில் அவ்வப்போது கதைக்கவும் என அவருடன் பழகும் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றேன்.

எந்த நேரத்திலும் அவருடன் தொடர்பு கொள்ள முடியும், எதனைப் பற்றியும் அவரிடம் உரையாட முடியும் என்ற ஓர் உணர்வு அவருடன் பழகிய நாட்களில் எனக்குள் ஏற்பட்டதை உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அகளங்கன் அவர்களில் நான் கண்ட சில பண்புகளை இச்சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்வது பொருத்தமாகும் என கருதுகிறேன்.

### ஆழ்ந்த தமிழ் அறிவும் தமிழ் உணர்வும் கொண்டவர்

ஆசிரியர் அகளங்கன் தமிழின் மீது மிகுந்த காதல் கொண்டவர் என்று தான் எனக்குப்படுகிறது. தமிழ் இலக்கணத்திலும், தமிழ் இலக்கியங்களிலும், தமிழ் இதிகாசங்களிலும் ஆழ்ந்த புலமை கொண்டவர் என்பதை அவருடன் பேசுகின்றவர்களும், அவருடைய உரைகளைக் கேட்பவர்களும் இலகுவில் புரிந்துகொள்வார்கள். அவ்வளவிற்கு, குறிப்பாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் பாண்டித்தியம் பெற்றவர். அத்துடன் தான் சொல்ல வருகின்ற கருத்தினைத் தெளிவாகவும் உறுதியுடனும் தெரிவிக்கக்கூடிய ஓர் ஆற்றல் படைத்த பேச்சாளராக அகளங்கன் ஆசிரியரைப் பார்த்திருக்கிறேன்.

### தமிழ் மரபைப் பேணுபவர்

பொதுவாக, அகளங்கன் ஆசிரியர் தமிழ்ப் பாரம்பரிய ஆடையுடன் தோற்றம் அளிப்பதனைப் பார்த்திருக்கிறேன். அவருடைய உடையிலும் நடையிலும் பேச்சிலும் தமிழ் மணம் கமழும். அத்தகைய தமிழர் வாழ்க்கை முறையை இயல்பாக - இயற்கையாக தன் வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வருபவர் அகளங்கன் ஆசிரியர். தமிழர் தம் பாரம்பரிய வாழ்க்கை முறைகள் இன்று நலிவடைந்து வரும் நம் சமூகத்தில் அகளங்கன் ஆசிரியரின் தமிழ் மரபு பேணும் வாழ்க்கை முறை என்பது இன்று பலருக்கு ஒரு முன்னுதாரணமாகவும் ஏன் சவாலாகவும் கூட இருக்கிறது என்றே சொல்லவேண்டி இருக்கிறது!

### தொடர்ந்தியங்கும் ஆக்க இலக்கியவாதி

அகளங்கன் ஆசிரியர் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஆக்க இலக்கியவாதி ஆவார். அவருடைய எழுத்தாற்றலினாலும் பேச்சாற்றலினாலும் இலக்கியம், சமயம், நாடகம் போன்ற துறைகளில் தொடர்ந்து தமது பங்களிப்பைச் செய்து வருபவர். பல சஞ்சிகைகளிலும், மலர்களிலும் தொடர்ந்து எழுதி வருபவர். இதுவரையில் நாற்பத்தி மூன்று நூல்களை எழுதி வெளியிட்டதன் ஊடாக இவரின் இடைவிடாத இலக்கியப் பணியின் தன்மையினையும் சிறப்பினையும் புரிந்து கொள்ளலாம்.

### அடுத்தவர் படைப்புக்களைப் பாராட்டுகின்றவர்

நம் பிரதேசங்களில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாக்களாக இருந்தாலென்ன, தமிழ் விழா, கலை விழா, இலக்கிய விழா போன்ற இன்னோரன்ன விழாக்களில் அகளங்கன் ஆசிரியரின் இலக்கியப் பங்களிப்பும் அவரின் பிரசன்னமும் இருப்பதைக் காணலாம். பொதுவாக அடுத்தவரின் படைப்புக்களைப் பாராட்ட நினைக்காத அல்லது முன்வராத பழக்கத்தைக் கொண்ட ஒரு தமிழ்ச் சமூகத்தில் அகளங்கன் ஆசிரியர் மற்றவர்களின் படைப்புக்களைப் பாராட்டுவதோடு தன்னாலான இலக்கியப் பங்களிப்பை வெளிக்காட்டி அடுத்தவரின் ஆக்க இலக்கியங்கள் வெளிவர ஊக்கமளிப்பவராக அவரைக் கண்டிருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பண்பாளன்

யாரைக் கண்டாலும் வணக்கம் சொல்லி வாழ்த்தும் பழக்கம், வெள்ளை வெள்ளேரென்ற வெண்ணிற உடை, முகத்தில் பரவிக்கிடக்கும் புன்னகை, எல்லாரையும் மதிக்கின்ற பண்பு, சக மனிதர்களிடம் உறவு பாராட்டுகின்ற - அவ்வுறவைக் கொண்டாடுகின்ற மனிதநேயம், தமிழ் இலக்கியங்களை எடுத்துக்கூறும் அறிவுச் செறிவு இவை எல்லாம் அகளங்கன் என்ற தமிழ்ப் பண்பாளனின் ஆளுமையைச் சிறப்பிக்கும் சில சிறப்பம்சங்களாகும்.

மணிவிழாவைக் கொண்டாடும் ஆசிரியர் அகளங்கன் அவர்களை, தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளை இன்றைய சூழலில் அடையாளம் கண்டுகொள்ள உதவும் ஒரு நடமாடும் தமிழ்ப் புலமையாளனாகப் பார்க்கவைக்கிறது. ஆசிரியர் அகளங்கன் அவர்களின் நற்பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவன் இவருக்குத் தேவையான நலன்களைப் பொழியவேண்டும் என ஆசித்து நிற்கிறேன்.

**கவிஞர் அ.கௌரிதாசன்** அவர்கள் (திருகோணமலை)

தங்களின் **கவி பாடவைக்கும்** என்ற தலைப்பிலமைந்த சுடர் ஒளியில் வெளிவந்த கவிதை 24 கரட். (உயர்வு நவிற்சியன்று)

என்னை ஈர்த்த வரிகள்.

1) பசுங்கிளிகள் புளகமுறப் பருவ இரைதேடும்.
2) சாமரத்தின் ஒப்பாகச் சிறகடித்துக் கூடிச் சதிராடும் மயில்கள்
3) தென்றலிலே அசைந்தாடும் செந்நெல் வயற் கதிர்கள்
4) தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
5) முத்துதிர நகை செய்யும் சொத்தாகும் மழலை
6) தற்பெருமை கொள்ளாது தலை தாழும் அறிஞன்
7) இனித்தாலும் கசத்தாலும் இன்முகத்தைக் காட்டும் இல்லாளின் இயற்கை எழில்
8) ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை
9) முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம் பூக்கள்
10) சிலிர்த்துடலின் நீரகற்றும் சிறுபறவை
11) செவ்வாம்பல் மலருடுத்த சிற்றமுதக் குளமும் (03.10.2013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

# அயற்கிராமத்து அகளங்கன்

**ஜனாப்.S.சஹாப்தீன் விரிவுரையாளர்**
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## புனித உறவுகள்

**அ**னைத்து இலக்கிய வாதிகளாலும் விரும்பப்படுகின்ற **அகளங்கன்** எனும் புகழ்பெற்ற எழுத்தாளனைப் பற்றி எழுதக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அவரது பிறந்த கிராமத்தின் அயற்கிராமத்தைச் சேர்ந்தவன் என்பதாலும் சிறுவயதில் இருந்தே இறுக்கமான தமிழ் முஸ்லிம் உறவில் வளர்ந்தவர்கள் என்பதாலும் அவர் பற்றிய முஸ்லிம் சமூக தொடர்புகளை விபரிப்பது சிறப்புக்குரியதாகும்.

வவுனியா மாவட்டத்தில் அதிகமான கிராமங்கள் குளங்களையும் அதனைச் சார்ந்த வயல் நிலங்களையும் கொண்ட விவசாயக் கிராமங்களாகும். இங்கு முஸ்லிம் தமிழ்க் கிராமங்கள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. **பட்டாணிச்சூர்** என்பது ஒரு முஸ்லிம் கிராமம். **நெளுக்குளம்** என்பது ஒரு தமிழ்க் கிராமம். **ராசேந்திரங்குளம்** என்பது ஒரு தமிழ்க்கிராம். **சூடுவெந்தபுலவு** என்பது ஒரு முஸ்லிம் கிராமம். **பம்பைமடு** ஒரு தமிழ்க் கிராமம். **புளிதறித்த புளியங்குளம்** என்பது ஒரு முஸ்லிம் கிராமமாகும். இவ்வாறு **பூவரசன்குளம் - சாளம்பைக்குளம், மாங்குளம்- நேரியகுளம், சின்னச்சிப்பிக்குளம் - இலுப்பைக்குளம், செட்டிகுளம் -ஆண்டியா புளியங்குளம், காக்கையன்குளம், இரணை இலுப்பைக்குளம், பாசக்குளம் - இயங்கராவூர், மதீனாநகர் - பூந்தோட்டம்,** இவ்வாறு அதிகமான தமிழ் முஸ்லிம் கிராமங்கள் அருகருகே அமைந்து நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளன.

இவ்வாறாக நீண்டகால புனிதத் தொடர்பை எம்முடன் வைத்திருந்தவர்தான் அகளங்கன் அவர்கள். முஸ்லிம் கிராமங்களூடாக நகருக்கு அகளங்கன் வருவதால் சகல முஸ்லிம்களுடனும் சிரித்தமுகத்துடன் கதைத்து தேநீர் அருந்திச் செல்வார். இவரது சகோதரர்களான **சேனாதி அண்ணா, வில்வராசா அண்ணா, நடராசா அண்ணா, யோகராஜா G.S** போன்றோர் முஸ்லிம்களின் உடன்பிறப்புகளாக பழகியவர்கள். இன்றும் அந்த நெருக்கமான உறவுள்ளது.

மாலை நேரங்களில் அகளங்கன் எங்கள் முஸ்லிம் பகுதிக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடன் சேர்ந்து கரப்பந்தாட்டம், கிளித்தட்டு என்பவைகளில் ஈடுபடுவார். "விடாத அடி" என்று உரிமையோடு பேசி விளையாடி ஒரே பாத்திரத்தில் தண்ணீர் அருந்திப் பழகிய புனிதமான உறவுகளையும் நாட்களையும் மறக்கவே முடியாது. முஸ்லிம்களின் சகலவிடயங்களிலும், குறிப்பாக திருமணம், இறப்பு என்பவைகளில் அகளங்கனும் அவரது சகோதரர்களும் கலந்துகொள்ளும் போது **சஹான்** சாப்பாட்டில் அவர்களும் இருந்து முஸ்லிம்களைப் போல தயக்கமின்றி சாப்பிடுவார்கள். இறப்பு வீடுகளில் பயன்படுத்தப்படும் **மையத், கபுறு** போன்ற வார்த்தைகளை இவர்களும் அதேபோல் உச்சரிப்பார்கள்.

வீட்டு முற்றத்தில் மாட்டுப்பட்டி, வீட்டைச் சுற்றிச் சாணம். சாணம் பூசி மெழுகியுள்ள மண்சுவர்கள். வைக்கோல் கூரை, மாடுகளுக்காக மாரிகாலத்திற்கென வைக்கப்பட்டுள்ள வைக்கோல் கும்பிகள், மாட்டுவண்டில், கலப்பை, தூண்டில் கம்புகள், கரப்புகள், சுரைக்குடுவைகள், வேலகாரன் தடிகள், சூடுதட்டும் பலகைகள், வண்டிக்கிராதிகள், மசக்குழாய்கள், குறிசுடும் கோல்கள், கயிற்றுக் கட்டில்கள், குரக்கன் கதிர்கள், தாக்கத்திகள், குல்லங்கள், படங்குகள், மூக்கணாங்கயிறுகள், போன்ற கருவிகளை பிரதான அடிப்படைக் கருவிகளாகக் கொண்டவைகள்தான் எமது தமிழ் முஸ்லிம் கிராமங்கள்.

இக்கருவிகளோடு கருவியாக **பேனா வைத் தன்** மிக முக்கிய கருவியாக ஆக்கி தன்னை வளர்த்துக் கொண்ட அகளங்கனை நினைக்கையில் எங்களோடு சேர்ந்து இக்கருவிகளும் கூட பெருமிதமடைகின்றன. புகழ்பெற்ற எழுத்தாளனாகி பல பரிசுகளைத் தட்டி புகழ் பூத்த எழுத்தாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினாலும் தனது பழைய விவசாயக் கருவிகளுடனான தொடர்புகளைத் துண்டிக்காது அந்தக் கலாசாரங்களை இன்னும் கட்டிக் காக்கின்ற புதுமையான எழுத்தாளனே அகளங்கன் அவர்கள். எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாக எழுதி பல பொக்கிஷங்களை தமிழுலகிற்கு ஈந்தவர்தான் அகளங்கன் அவர்கள். இவரை நினைத்து முஸ்லிம்களாகிய நாங்களும் பெருமையடைவதோடு மென்மேலும் இவரது சேவை வளர வேண்டுமென வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

---

**"சேரர் வழியில் வீரர் காவியம்"** பற்றி கவிஞர் **கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை M.A. Ph.D** அவர்களின் கடிதம் (04.12.1985)

மரபுக்கவிதைகள் எழுதுவோர் அருகிவரும் இந்நாளில் உங்களைப் போன்ற இளைஞர்கள் மரபுக்கவிதைகளை நல்லமுறையில் எழுதுவது மகிழ்ச்சிக்குரியதாகும். காவியம் நன்றாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

# பல்துறை கலை இலக்கிய வித்தகர் கலாநிதி 'தமிழ் மணி' அகளங்கன்

**டாக்டர்.தி.ஞானசேகரன்** (ஞானம் சஞ்சிகை ஆசிரியர்)

**க**லாநிதி "தமிழ்மணி" அகளங்கன் அவர்கள் ஞானம் சஞ்சிகையில் பத்து வருடங்களுக்கு மேலாக எழுதி வந்தபோதும் அவருடைய பல்துறைத் திறமைகளையும் அறியும் வாய்ப்பு எனக்கு 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே கிட்டியது. 2011 ஜனவரியில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டிற்கான முன்னோடிக் கருத்தரங்கு ஒன்றினை அகளங்கன் தலைமையில் நடத்துவதற்காக வவுனியா சென்றவேளை அவரது இல்லத்திற்குச் செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

அவரது வீட்டின் வரவேற்பறை ஒரு **கலைக்கூடமாகக் காட்சியளித்தது.** ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி அலுமாரியில் ஏராளமான **விருதுகள், பரிசுச் சான்றிதழ்கள், கேடயங்கள், பரிசுப்பொருட்கள்** ஒழுங்காக அடுக்கிவைக்கப்பட்டு அழகாகக் காட்சிதந்தன. எழுந்து அருகில் சென்று அவற்றைக் கவனித்தபோது அத்தனையும் அகளங்கன் அவர்களின் பல்துறை கலை இலக்கியச் செயற்பாடுகளுக்காகக் கிடைத்த விருதுகள் என்பதை அறிந்து கொண்டேன். அத்தனை ஏராளமான விருதுகளும் அவரது பல்துறைத் திறமைகளைப் பறை சாற்றிக்கொண்டிருந்தன.

அகளங்கன் ஒரு சிறந்த கவிஞர், பாடலாசிரியர், கட்டுரை ஆசிரியர், பத்தி எழுத்தாளர், ஆய்வாளர், நாடகாசிரியர், நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி. சிறந்த இலக்கியப்பேச்சாளர், சிறந்த சமயப் பேச்சாளர், சிறந்த இலக்கியச் செயற்பாட்டாளர், இன்னும்... இன்னும்....

அவர் இயங்கிய துறைகள் அத்தனையிலும் அவர் வெற்றி கண்டிருக்கிறார். அவற்றிற்காகப்பெற்ற **பரிசுக் குவியல்களைத்தான்** நான் அங்கு கண்டேன்.

அகளங்கனது தமிழ் அறிவு தந்தைவழிச் சொத்து. அவரது தந்தையார் நாகலிங்கம் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் உள்ளவராக இருந்தார். கம்பராமாயணம், வில்லி பாரதம், நளவெண்பா, நைடதம், மற்றும் தனிப்பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம அவருக்கு மனப்பாடமாக இருந்தன. கோவில்களில் இடம்பெறும் புராண படனங்களின்போது பயன் சொல்வதிலும் அவர் ஆற்றல் மிக்கவராக இருந்தார். வீட்டுச் சூழல் அகளங்கனுக்கு சிறுவயதிலேயே பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபாட்டினை ஏற்படுத்தியிருந்தது.

வவுனியா மகாவித்தியாலயத்தில் அகளங்கன் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த வேளையில் விவேகானந்த சபை நடத்திய சைவசமயப் பரீட்சையில் முதலாம்பிரிவில் சித்தியெய்தி பெற்றுக்கொண்ட பரிசு "கலிங்கத்துப்பரணி" என்ற நூலாகும். அந்நூலைத் திரும்பத் திரும்ப வாசித்து அதன் கவிச்சுவையில் தன்னை மறந்த அகளங்கன் கவிதைகள் எழுதவும் மாணவ மன்றங்களில் பேசவும் வில்லுப்பாட்டு எழுதிப்பாடவும் பாடசாலைக்காலங்களிலேயே ஆரம்பித்துவிட்டார்.

பின்னர் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக்கல்லூரியில் சேர்ந்து க.பொ. த.விஞ்ஞானப்பிரிவில் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்ற காலத்திலும் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத் தலைவராகப் பணியாற்றி கவி அரங்குகள் பட்டிமன்றங்களில் பங்கு பற்றி தன்னை வளர்த்துக்கொண்டார். பல்கலைக்கழகக் காலத்தில் **"செல், வா, என்று ஆணையிடாய்"** என்ற தந்தை செல்வாவின் மரணத்தின்போது எழுதிய அஞ்சலிக்கவிதை, நூல் உருவில் வெளியானது. இக்காலத்திலிருந்தே அகளங்கன் என்ற புனை பெயர் அவருக்கு உரித்தானது.

சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரத்தைத் தனது வழிகாட்டியாகக் கொள்ளும் அகளங்கன் ஆரம்பகாலத்தில் **"இலக்கியச் சிமிழ்", "இலக்கியத்தில் நகைச்சுவை"** முதலிய தலைப்புகளில் தொடர்கட்டுரைகளை சிரித்திரனில் எழுதி இலக்கிய உலகில் பிரபல்யம் பெற்றார்.

கால ஓட்டத்தில் அகளங்கன் சிறந்த ஓர் ஆய்வாளராகவும் மிளிரத்தொடங்கினார். 1979இல் ஈழநாடு பத்திரிகையில் **"வாலி - கொலைச்சரமும் கேள்விச்சரமும்"** என்னும் கட்டுரையை எட்டு வாரங்கள் தொடராக எழுதி தனது இலக்கியப் புலமையை வெளிப்படுத்தினார். இக்கட்டுரைத் தொடர் பின்னர் "வாலி" என்னும் மகுடத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் முன்னுரையுடன் வெளியானது. இந்நூல் யாழ். இலக்கிய வட்டத்தின் சிறந்த நூலுக்கான பரிசினைப்பெற்றது. அத்தோடு இந்நூல் மூன்று பதிப்புக்களைக் கண்டது.

1982ல் இவர் எழுதிய **"சேரர் வழியில் வீரர் காவியம்"** என்ற குறுங்காவியம் வெளியாகியது. இவர்பல இலக்கியக்கட்டுரைகளை சமகால அரசியலுடன் தொடர்பு படுத்தி எழுதி வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றார். அவ்வகையில் **"மகா பாரதப்போரில் யுத்த முறை அத்து மீறல்களும் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களும்"** என்ற நீண்ட கட்டுரை முக்கியமானது. இக் கட்டுரை **பாரதப் போரில் மீறல்கள்.** என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

அகளங்கன அவர்கள் **ஞானம்** சஞ்சிகையிலேயே அதிகமான சிறுகதைகளை எழுதியுள்ளார். ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டிகள் பலவற்றில் இவரது கதைகள் பரிசுகள் பெற்றுள்ளன. **முற்றத்துக் கரடி** என்ற இவரது முதற்பரிசு பெற்ற சிறுகதை கிராமிய மணம் கமழும் சிறந்த சிறுகதை எனப் பலராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுப்பெற்ற கதையாகும். அகளங்கள் அவர்கள் இதுவரை 43 நூல்கள் வரை எழுதியுள்ளார்

இவரது இலக்கியப் பங்களிப்பினைக் கௌரவிக்கும் வகையில் இந்துக்கலாசார இராஜாங்க அமைச்சு **தமிழ் மணி** என்ற விருதினை 1993இல் வழங்கியது. வடக்குக் கிழக்கு மாகாண **ஆளுநர் விருது** 2000ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. கலாசார அமைச்சு **கலாபூஷணம்** விருதை 2013 இல் வழங்கியது.

மணிவிழா நாயகர் அகளங்கன் மென்மேலும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து தமிழ்ப்பணி ஆற்ற வேண்டுமென வாழ்த்தி மகிழ்கிறேன்

---

**"முற்றத்துக்கரடி"** நூலின் அணிந்துரையில் மலையகத்தின் பிரபல எழுத்தாளர் **தெளிவத்தை யோசப்** (2013)

கவிதை, கட்டுரை, நாடகம், காவியம், ஆய்வு, வரலாறு என்று நிறையவே நூல்கள் வெளியிட்டு, அரச சாகித்திய விருது, வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய விருது, வடமாகாண சாகித்திய விருது, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது, தமிழியல் விருது, என்று நிறையவே விருதுகளும், இலக்கிய கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ள ஒரு தமிழறிஞர் திரு.அகளங்கன்.

இவ்வளவு பிரபல்யமும், தடமும் பதித்துள்ள தமிழ்மணி அகளங்கனின் இந்தச் சிறுகதை நூலுக்கான தேவைதான் என்ன? அவசியம் தான் என்ன என்னும் கேள்விகள் நியாயமானவை தான்.

இந்தச் சிறுகதை நூலுக்கான தேவை என்ன என்பது அதன் வாசிப்பின் மூலமாகவே ஊடாடி வருகின்றது. பசுமரத்தாணி போல் மனதுக்குள் இறங்கிப் பதிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30

# இணையில்லா நாட்டிய நாடகக் கவிஞர்

நிருத்தியவாணி, பரதசிரோமணி
**திருமதி.சூரிய யாழினி வீரசிங்கம்** M.FA.

**க**லையும் தமிழும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தது. அத்தகைய கலையின் மூலம் சமயத்தை, தமிழை, சமூகத்தை வளர்க்கும் பேறுபெற்றவர் **கவிமாமணி, கவிப்புலவர், முத்தமிழ் வித்தகர், தமிழ்மணி அகளங்கன் ஐயா** அவர்கள். இலங்கைத் திருநாட்டிலே முத்தமிழ் வித்தகரென அழைக்கப்படும் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயருக்கு இணையான நாட்டியப் பாடல்களையும், இசைப் பாடல்களையும் நாட்டிய நாடகங்களையும் தித்திக்கும் தேன்தமிழிலே நவரஸமுடன் பக்தி ரஸமும் ததும்ப இலக்கணச் சுவை குன்றாது எழுதிய பெருமை அகளங்கன் ஐயா அவர்களையே சாரும்.

**"இசைத்திட முடியாது எங்கள் பெருமை தமிழ்"** என்று தமிழின் பெருமையை தமிழ்மொழி வாழ்த்தாக உலகிற்கு எடுத்தியம்பியவர் இவர். இன்று கூடுதலான நிகழ்வுகளில் இப் பாடலே தமிழ்மொழி வாழ்த்தாக இசைக்கப்படுகின்றது. இசை உலகிலே இவரது பாடல்கள் செல்வன் கந்தப்பு ஜெயந்தன், திருமதி.அருந்ததி. ரவீந்திரன், திருமதி.தேவிமனோகரி.நாகேஸ்பரன், திருமதி.வதனி.ஸ்ரீதரன் மற்றும் சோமரட்ணம். ஜெயசந்திரா திருமதி.விமலலோஜினி கனகேஸ்வரன் போன்றோரால் இசையமைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட கீர்த்தனை அமைப்பில் ஐயா அவர்களின் பாடல்களை இசையமைத்துப் பாடியவர்களில் மூத்த இசையாசிரியர் திருமதி.தேவிமனோகரி.நாகேஸ்பரன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். இவர் நாட்டியப் பாடல்களை நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்துள்ளார்.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஐயா இயற்றிய நாட்டியப்பாடல்களை **"குழந்தைகள் அபிநயப்பாடல், கீர்த்தனைகள், பதம், வரவேற்புப் பாடல்கள், நாட்டிய நாடகங்கள், கிராமியப் பாடல்கள், பக்திப் பாடல்கள்"** என தனித்துவமாக குறிப்பிட்டுக் கூறலாம். ஐயா அவர்கள் எண்ணற்ற கவிதைகள், நாடகங்கள், பாடல்கள், வாழ்த்துப் பாக்கள், ஆய்வுக் கட்டுரைகைள் என பல்வேறுபட்ட வடிவமைப்பில் பல நூல்களை வெளியிட்டுள்ளார். ஆனாலும் அவற்றை விட நாட்டியத்துறைக்கு கலையுலகிலே அவர் எழுதிய சாகித்தியங்கள் சொல்லிலே வடிவமைக்க முடியாத அளவிற்கு பல்வேறுபட்ட சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சிறப்பியல்புகளிலும் தனித்துவமானது **"காலத்தின் தேவைகருதி பாடல்களை எழுத்துருவாக்கி எம்மிடம் ஒப்படைப்பது"** சமூகநலன் கருதி சமூகத்திற்கு எதைக் கூறவேண்டுமோ அதனை தமது சாகித்தியங்களிலே கூறுவார். அப்பாடல்கள் நாட்டிய அமைப்பு செய்யப்பட்டு நாட்டிய நாடகமாகவோ அல்லது ஒரு அபிநய நடனமாகவோ மக்களைச் சென்றடையும்.

ஐயா அவர்கள் எழுதிய வரவேற்பு நடனப் பாடல்கள் **"வாருங்கள் வாருங்கள்"**, **"வருக வருக.."** என்ற பாடல்கள் இன்று வவுனியாவில் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் வரவேற்பு நடனப் பாடல்களாக நாட்டியமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. இவை திருமதி.வதனி ஸ்ரீதரன், திருமதி.அருந்ததி ரவீந்திரன், ஆகியோரின் குரலிசையில் ஒலிக்கப்பட்டு வருகின்றது.

சிறுவர் அபிநயப்பாடல்களில் **"சிறுவர்கள் நாங்கள் முல்லைகள்.."** **"ஒற்றுமையாய் கூடுவோம்.."** என்ற இருபாடல்களும் எமது நாட்டிய அரங்கேற்றத்தில் மேடையேற்றப்பட்டன. எமது ஒவ்வொரு நாட்டிய அரங்கேற்றத்திலும் புதுமைப் படைப்பாக அகளங்கன் ஐயாவின் நாட்டியப் பாடல்கள் அமைந்திருக்கும். **"குளக்கரை ஓரத்திலே குறி சொல்லப் போற பெண்ணே.."** என்ற குறத்தி நடனப் பாடல், சுனாமி அலை வந்து இலங்கையில் நிறைய மக்களை காவு கொண்டதை நினைத்து **"கரையில் நாங்கள் ஆடினோம். அலைகள் வந்து முத்தமிட ஓடினோம். கோபமுற்ற அலை வந்து"** என்ற சுனாமியின் தாக்கத்தை பாடல்களாகத் தந்து அதை நான் நாட்டியமைப்பு செய்து அரங்கேற்றிய போது எல்லோருடைய உள்ளத்தையும் நெகிழ வைத்த காட்சி மறக்க முடியாதது. தற்போது இத்தாலியிலிருக்கும் ஜெயச்சந்திரா அவர்களது இசையமைப்பில் திருமதி.வதனி.ஸ்ரீதரனின் பிள்ளைகளான கீர்த்தனா, உசேனி ஆகியோர் இணைந்து இப் பாடலைப் பாடியிருந்தார்கள்.

ஆடற்செல்வன் சுஜேந்திரா அவர்களது நாட்டிய அரங்கேற்றத்தில் **"தாண்டவம் தாண்டவம் சிவதாண்டவம் ஆடினார்"** என்ற, இறைவனது தாண்டவங்களை பாடல்களாக எழுதினார். இதிலே கூறப்பட்ட வரிகள் கேட்பதற்கு மிக மிக உத்வேகத்தையும் வீர ரஸத்தையும், அற்புத ரஸத்தையும் பிரதிபலிப்பதாக இருந்தன.

**"எட்டுத் திக்கும் குலுங்கி நடுங்கிட**
**அக்கினி நாயகன் ஆடிடும் ஊழித் தாண்டவம்**
**சர்வ சங்கார உருத்திர மூர்த்தியாய்**
**சர்வ பிரபஞ்ச உயிர்களி னோடும்**
**கங்கை சடைமுடி திங்களும் ஆட**
**கணங்களும் ஆட சபை தனிலே.."**

மேலே கூறப்பட்டவை ஒரு சில பந்திகளிலிருந்து எடுக்கப்பட்ட பாடல் வரிகளே. திருமதி.தேவிமனோகரி நாகேஸ்பரனின் இசையமைப்பில் ஸ்வரசாகித்தியமாக மிடுக்கோடு சிறப்பாக அரங்கம் கண்டது. சிவனது தாண்டவத்தை நேராகப் பார்ப்பது போன்ற பிரம்மை பார்வையாளர்களுக்கு ஏற்பட்டது. இவ்வாறான சாகித்தியத்தை நாட்டிய உலகிற்குப் படைத்த பெருமை உலகிலேயே அகளங்கன் ஐயா அவர்களையே சாரும். இதுவரையில் இப்படியொரு தாண்டவ சாகித்தியத்தை யாரும் எழுதியமை பற்றி நாம் வரலாற்றில் படிக்கவில்லை. இது உண்மையிலேயே ஒரு அற்புதமான சாகித்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக நாயகி பாவமாக ஐயா அவர்கள் எழுதிய பதம் மறக்கமுடியாதது. விரகதாப உணர்வோடு **விரகோத்கண்டிதா** நாயகியின் குண இயல்புகளோடு பதம் எனும் உருப்படியினை எமது இறுதியாக நடைபெற்ற அரங்கேற்ற உருப்படியில் ஐயா அவர்கள் சமர்ப்பித்தார்.

**"அன்றொரு நாளிலே தோழி என் அனுபவப் புதுமையைச் சொல்லுவேன் கேள் நீ"** என்ற பல்லவியை அடிப்படையாக் கொண்ட பதத்தினை நவரஸங்களும் வரக்கூடிய விதத்தில் நாயக நாயகி பாவமாக எழுத, அதற்கு **தேஷ்** ராகத்தில் இசை வழங்கி மிகவும் உள்ளுணர்வுகளோடு **திருமதி.வதனி ஸ்ரீதரன்** அவர்கள் இசையமைத்துப் பாடினார். இப்பதம் பல்வேறுபட்ட நடை மாற்றங்களோடு பாடப்பட்டு நாட்டியமைப்பு செய்யப்பட்டது.

அகளங்கன் ஐயா எழுதிய சிறுவர் பாடலில் **"ஒற்றுமையாய் கூடுவோம் ஒன்றாக ஆடுவோம். உலகம் எங்கள் கையிலென்று உரிமை கொண்டு பாடுவோம்.."** என்ற பாடலுக்கு இசை இளவரசன் கந்தப்பு. ஜெயந்தன் இசையமைக்க திருமதி அருந்ததி.ரவீந்திரனும், கந்தப்பு. ஜெயந்தனும் இணைந்து பாடியுள்ளனர். இப்பாட்டு சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு பல்வேறுபட்ட மேடைகளில் அரங்கேற்றப்பட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் ஒற்றுமையை புலப்படுத்தி செய்யப்பட்ட இந்நடனம் எல்லோருடைய வரவேற்பையும் பெற்றமை வியப்பில்லை.

மேலே கூறப்பட்டவை தமிழ்மணி அகளங்கன் ஐயா எழுதிய நூற்றுக் கணக்கான பாடல்களில் ஒரு சில நாட்டியப் பாடல்களே உதாரணத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளன. என்னைப் போல எத்தனையோ நடன ஆசிரியர்களுக்கு பாடல்களை ஆக்கம் செய்து கொடுத்துள்ளார். **"கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?"** என்ற தலைப்பில் ஒரு விவாத அரங்கை செய்வதற்கேற்ற மாதிரி நாட்டியப்பாடல் இயற்றித் தந்துள்ளமையையும் குறிப்பிட வேண்டும்.

அடுத்து ஆடல் கதை வடிவமான **நாட்டிய நாடகங்களை** எடுத்து நோக்குவோமாயின், நாட்டிய நாடக கதையம்சங்களை கருப்பொருள் விலகாமல் மிகமிகத் துல்லியமாக எடுத்துரைக்கும் பாங்கு ஐயா அவர்களையே சாரும். அவருக்கு நிகர் அவரே ஆவார். இவர் எழுதிய பல நாட்டிய நாடகங்கள் தேசிய ரீதியில் முதலாம் இடங்களைப் பெற்று வெற்றியீட்டியிருந்தது.

### அகளங்கன் ஐயா எழுதிய நாட்டிய நாடகங்களாவன:

- **அகதிகளாகிப் படும் அவலம்**
- **பாஞ்சாலி சபதம்**
- **சமாதானம்**
- **பத்தினித் தெய்வம்**
- **கற்பின் கனலி**
- **பக்த பிரகலாதன்**
- **சூர சங்காரம்**
- **பிரிவாற்றாமை**
- **நம்பியாரூரர்**
- **மாங்கனி**
- **கங்குலும் பகல் பட வந்தான்**
- **நளன் தமயந்தி 2ம் சுயம்வரம்**
- **மானம் காத்த மன்னன்**
- **தாருகா வனத்து முனிவர்**

மேலே கூறப்பட்ட நாட்டிய நாடகங்களில் **பத்தினித் தெய்வம், கங்குலும் பகல் பட வந்தான், பக்தப் பிரகலாதன், நளன் தமயந்தி 2ம் சுயம்வரம், தாருகா வனத்து முனிவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தேசிய ரீதியில் பரிசு பெற்ற நாட்டிய நாடகங்கள். பக்தப் பிரகலாதன் இரு தடவைகள் தேசிய மட்டத்தில் பரிசு பெற்ற நாட்டிய நாடகமாகும்.

இந்த நாட்டிய நாடகங்களில் பல சிறப்புகள் காணப்படுகின்றன. கதையம்சம் தெரியாதவர்கள் கூட ஐயா அவர்களின் சாகித்தியத்தைப் பார்த்தவுடன் கதையம்சத்தை விளங்கிக் கொள்வர். தமக்கே உரித்தான பாணியில் பக்தி ரஸம், பாவ ரஸம் ததும்ப மிகவும் நெகிழ்ச்சியாக சாகித்திய பாவம் ராக பாவம் மனோபாவம் மேலோங்கத் தக்க வகையில் கதையுருவாக்கம் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். இசையமைப்பதற்கு இலகுவாக கவிதை நடை அமைந்திருக்கும் மேலே கூறப்பட்ட நாட்டிய நாடகங்களில் அதிகமானவை **திருமதி.தேவிமனோகரி. நாகேஸ்பரனால்** இசையமைக்கப்பட்டவை. புதிய புதிய ராகங்களை காட்சிக்குப் பொருத்தமான ரஸங்களைக் கவனித்து மிகவும் சிறப்பாக இசையமைக்கக் கூடியவர் இவர். திருமதி.வதனி.ஸ்ரீதரன், திருமதி அருந்ததி.ரவீந்திரன் ஆகியோரும் இசையமைத்துப் பாடியுள்ளனர்.

நாட்டிய நாடகங்கள், பாடல்கள் எழுதித் தந்து விட்டால் மட்டும் தன் வேலை முடிந்தது என்று இருக்க மாட்டார். நாட்டிய அமைப்பை உற்றுக் கவனிப்பார். ஒவ்வொரு பாத்திரங்களையும் அதன் பொருத்தப்பாடு பற்றியும் தெளிவுபடுத்துவார். தனது கற்பனையில் எவ்வாறு தோற்றம் கொடுத்தாரோ, அதனை அந்த நாட்டிய நாடகத்தில் நாட்டியமைப்பில் காண வேண்டுமென்று துடியாய் துடித்து பாடுபடுவார். அதில் வரும் பிழைகளை அவதானித்து திருத்தங்களைக் கூறுவார். பாடல் வரிகளைத் தெளிவாகப் படிக்கும் வரை ஓயமாட்டார். **உச்சரிப்பு, தொனி, இசை** யாவும் ஒன்று சேரும் வரை ஒத்திகை பார்ப்பார். பின்னணி இசையோடு ஒத்திகை பார்க்கும் போது கூட, கூடவேயிருந்து தெளிவுபடுத்துவார். எவ்வாறெல்லாம் காட்சியமைப்பு வரவேண்டுமென நினைப்பாரோ அவற்றையெல்லாம் விளக்குவார். பாத்திரங்களோடு (நர்த்தகி, நர்த்தகன்) கலந்துரையாடி தெளிவு படுத்துவார். தன்னோடு நெருக்கமான தமிழறிவு கொண்ட அறிஞர்களை அழைத்து வந்து காட்டுவார். ஒலியமைப்போடு ஒத்திகை பார்க்க வருவார்.

இவ்வாறாக எமக்கு தோளோடு தோள் நின்று எம்மை வழிநடத்தியமையாலேயே நாம் தொடர்ச்சியாக நாட்டிய நாடகத்தில் ஒரு தனி முத்திரையை இன்று பதித்துள்ளோம். நாட்டியத் துறையும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இலங்கையில் மட்டுமன்றி அகில உலக ரீதியில் வவுனியா மண்ணின் நாட்டிய வளர்ச்சி பற்றி இன்று பேசப்படுகின்றது. அதற்கெல்லாம் எம்மை வழிநடத்தி பெருமை சேர்த்தவர் அகளங்கன் ஐயா அவர்களும் அவரது பாடல் வரிகளுமே என்று கூறுவதில் மிகமிக பெருமையடைகிறேன். ஐயா அவர்களின் ஒவ்வொரு நாட்டிய நாடகமும் தனித்தனி ஆய்வு செய்யப்பட வேண்டியவை. ஒவ்வொன்றிலும் வெவ்வேறு சிறப்புத்தன்மைகள் காணப்படுவது சிறப்பம்சமாகும். நிச்சயமாக இவை ஒரு காலம் ஆய்வு செய்யப்படும்.

சென்ற ஆண்டு இறுதியாக நடைபெற்ற அரங்கேற்றத்திற்கு ஐயா அவர்களே தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அரங்கேற்றம் நடைபெற்ற அன்றைய தினம் அவருக்கு **கலாபூஷண விருது** வழங்கும் நிகழ்வு கொழும்பிலே நடைபெற்றது. ஆனால் அவர் கலாபூஷண விருதைப் பெற கொழும்பு செல்லவில்லை. ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்ற நிகழ்வை முழுமன விருப்போடு தலைமையேற்று நடாத்தி முடித்தார். இன்றைய உலகிலே இவ்வாறான உயர்ந்த சேவையைச் செய்யும் மனித நேயம் மிக்கவர்களைக் காண்பதே அரிது. எங்கே பட்டம் பதவி கொடுப்பார்கள் என்று அலையும் மாந்தர்களுக்கு மத்தியில் இவ்வாறானதொரு மாண்பு மக்க மனிதரைக் காண்பது வியக்கத்தக்க செயலாகும்.

இவ்வாறாக இவர் வன்னி மண்ணிலே பிறந்து எத்தனையோ இலக்கியங்கள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், இசைப்பாடல்கள், நாட்டிய நாடகங்களென பல்வேறுபட்ட துறை சார்ந்த நூல்களை இயற்றி வன்னி மண்ணுக்கே பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதிலே நாட்டிய உலகிற்கு அவர் படைத்த படைப்புக்கள் மிகவும் சிறப்பானவையாகும்.

கலாபூஷணம் **புலோலியூர் க.சதாசிவம் (எழுத்தாளர்)** அவர்களின் கடிதத்திலிருந்து

தங்களது ஆழ்ந்த இலக்கிய அறிவு, ஆய்வு, ஆற்றல் என்னை மிக வியக்க வைத்தன. தங்களது இலக்கிய முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். அது வீறுடனும் வீரியத்துடனும் தொடர்ந்து வன்னி மண்ணுக்கும், ஈழத்து இலக்கியத்திற்கும் வளம் சேர்க்க வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன். தங்களிடமிருந்து இலக்கிய உலகம் நிறைய எதிர்பார்க்கின்றது. (07.02.2004)

**பண்டிதர் க.உமா மகேஸ்வரன்** அவர்களின் கடிதத்திலிருந்து

ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தேன். மகன் வானொலியை உச்ச ஸ்தாயியில் முடுக்கிவிட்டதும் எரிச்சல், மகா எரிச்சல். மறு கணம் ஒரே புளகாங்கிதம் போங்கள்! ஏன் என்கிறீர்களா? ஒலித்த பாடல் அப்படி!

சேற்றுவயற் காட்டினிலே
நாற்றுநட வந்த பெண்ணே
நாற்றுமுடி தன்னையெந்தன்
நெஞ்சினிலே நட்டதேனோ

கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன். யார் பாடல்? அருமையானதொரு பழைய நாட்டுப்பாடல் தானே? திடீரென அறிவிப்பு. பாடலை புனைந்தவர் அகளங்கன். பாடல், இசை எல்லாமே மணி. வாழ்க பல்லாண்டு, வளனெல்லாம் பெறுக. (10.9.1999)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

# வவுனியா வளாகத்தின் உறவுப் பாலம்

**திரு.த.விஜயசேகர் (கனடா)**

*செந்தாமரைக் குளங்கள்*
*செந்நெல் விளை நிலங்கள்..*
*எந்நாளும் நிறைந்திருக்கும் வன்னி நிலமிது...*
*கல்வி மான்களால் நிறையும் வன்னிநிலம் ...*
*வந்தாரை வாழ வைக்கும் வன்னி நிலமிது...*

*இவ்வாறு பல பெருமைகளைக் கொண்டு அவர் எங்களுக்காக - யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக பட்டமளிப்பு விழாவுக்காக எழுதிய பாடலில் இருந்து சில வரிகள்.*

*அகளங்கன், அகளங்கன் என பெயர் அடிபடும். யார் எவர் என்பது அப்பொழுது எங்களுக்கு தெரியாது. ஒரு சில நிகழ்வுகளுக்குச் சென்ற பின்னர் தான் அவர் உருவம் எங்களுக்குத் தெரிந்தது. காணும் பொழுதெல்லாம் அவர் நெற்றியில் வீபூதிப் பூச்சு எப்பொழுதும் இருக்கும். அதற்குக் கீழேயும் ஒரு வெள்ளைப் பூச்சிருக்கும். அது தான் அவரது சிரிப்பு. எந்த நேரமும் சிரித்தபடியே இருப்பார்.*

*அகளங்கன் அவர்களைப் பொறுத்த மட்டில் வவுனியா வளாகத்துக்கும் வன்னிச் சமூகத்திற்கும் ஒரு உறவுப் பாலமாக அமைந்தவர்.*

*நாங்கள் முதல் முதல் அவரைப் போய் அணுகியது "இலக்கியக் கருத்தாடல்" ஒன்றிற்காக. மரபிலக்கியம் எனும் தலைப்பில் அவரது நீண்ட சுவாரசியமான விரிவுரை அமைந்திருந்தது. அன்றிலிருந்து எங்கள் சகோதரிகள் அவரைக் காதலிக்க (இலக்கிய காதல்) தொடங்கி விட்டனர். அதன் பின்னர் என்ன நிகழ்வு என்றாலும் அவரது சொற்பொழிவு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வர்.*

*சொற்பொழிவு மட்டுமன்றி கவியரங்கம், பட்டி மன்றம், கவிதா நிகழ்வு, நாடகம் என அவருக்கும் வளாகத்துக்குமான உறவு நீடித்து வந்து கொண்டே இருந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை பட்டி மன்றம் ஒன்றுக்குப் பேசச் செல்ல வேண்டும். அவரது குழுவில் நானும் எனது வேறு இரு நண்பர்களும் இணைந்திருந்தோம். எங்களது நிகழ்ச்சி தொடங்குவதற்கு எப்படியும் இரவு பத்து பதினொரு மணியாகலாம்,

"நீங்கள் எல்லாரும் வீட்டை வாருங்கோ. அங்க இருந்து கொஞ்ச நேரம் கதைச்சுப் போட்டு பிறகு நிகழ்ச்சிக்குப் போகலாம்" என அழைத்திருந்தார். கதைக்கத் தானே கூப்பிட்டவர் என்று அங்கு சென்றால் சமைத்து சாப்பாட்டு குழையல் செய்து முன் போட்டிக்கோ என்று சொல்லப்படுகின்ற அந்த திண்ணையில் வட்டமாக இருந்து கையில் அந்த குழையலை வாங்கிச் சாப்பிட்டது எப்பொழுதும் நினைவில் நிற்கின்றது.

அவரது வீட்டிற்கு செல்லும் பொழுது விருந்தோம்பல் என்பது எப்பொழுதும் இருக்கும்.

அவர் பல வானொலி நாடகங்களை எழுதியிருக்கிறார். அந்த நாடகங்களை மிகவும் புகழ் பெற்ற வானொலிக் கலைஞர்கள் குரல் கொடுத்து வானொலி மூலமாக உயிர் கொடுத்தவர்கள். ஆனால் அந்த ஒலிப்பதிவுகள் இவரிடம் இருந்து தவறி விட்டன. அதனை மீள் ஒலிப்பதிவு செய்யும் முயற்சியில் ஈடு பட்டிருந்தார். அவற்றில் குரல் கொடுப்பதற்கும் எங்கள் வளாக சகோதர சகோதரிகளுக்கு வாய்ப்பளித்திருந்தார்.

இப்படி வளாகத்துக்கும் அவருக்குமான தொடர்பு என்பது மிக நெருக்கமானதாக இருந்து வந்தது.

குறிப்பாக நாங்கள் வளாத்தில் இருந்த காலத்தில் அவருக்கும் எங்களுக்குமான தொடர்பு என்பது ஒரு அன்பு கலந்த, மரியாதை கலந்த ஒரு பாசப் பிணைப்பாக இருந்து வந்தது. அதை காலம் கடந்தும் அவருடன் உரையாடும் பொழுது நினைவு படுத்துவார். நீங்கள் இருந்த காலம் போல இப்பொழுது இல்லை. முன்னரைப் போல கலை நிகழ்ச்சிகள் இப்பொழுது நடப்பதில்லை. என தனது வருத்தத்தையும் பகிர்ந்து கொள்வார்.

நாங்கள் நாட்டை விட்டு பெயர்ந்திருந்தாலும் அவ்வப் பொழுதுகளில் அவருடன் தொடர்பில் இருப்பதுண்டு. கதைக்கும் பொழுதெல்லாம் "இப்பொழுதும் கலை முயற்சிகளில் ஈடுபடுகின்றீர்களா" என்று அன்புடன் கேட்டுக் கொள்வார். அந்த அன்பும் விசாரிப்பும் எப்பொழுதும் எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். அவரது விசாரிப்பில் நயினை ஆனந்தன், பேராதரன், சுப்ரம் சுரேஷ் சுதன் மாணிக்கவாசகர், சுதாகரன் போன்றர்களின் பெயர்களும் அடங்கியிருக்கும்.

ஒரு கணித பாட ஆசிரியராக இருந்து கொண்டு தமிழ் இலக்கியப் பரப்பில் ஆழ வேரூன்றி இருக்கும் ஒரு மனிதரோடு மிகக் குறுகியகாலம் பழகக் கிடைத்ததே நாங்கள் கொடுத்து வைத்த பாக்கியம் என்றுதான் கூற வேண்டும். தனது கருத்துக்களைப் போலவே தனது வாழ்விலும் மிகவும் நேர்மையாகவும் வாழ்ந்து வரும் இவரது மணிவிழாவை எண்ணி அகம் பூரிப்படைகின்றது.

இன்று நாங்களும் அங்கு இருந்திருந்தால் அந்த மணி விழாக் கொண்டாட்டத்தில் எம்மையும் இணைத்திருப்போம். இன்னும் பல கவளம் குழையல் சாப்பாடு சாப்பிட்டும் இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32

## சத்துள்ள ஒரு தாய்

**திரு.குமாரசாமி சோமசுந்தரம்**
பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம் மகரகம

அன்புள்ள அகளங்கன் அவர்கட்கு,

**வ**ணக்கம் உங்கள் அன்புக்கடிதமும் இரண்டு நூல்களும் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

முன்னர் நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. ஆனால் அறிந்து வைத்துள்ளோம். உள்ளங்கள், உடல்களை விட அபாரசக்தி வாய்ந்தவை. உங்கள் இலக்கியப் பணிகள் பற்றிப் பலர் என்னிடம் சொல்லக் கேட்டுள்ளேன். இன்று மனித விழுமியங்களுக்கும், இலக்கிய ஈடுபாடுகளுக்கும் பெருந்தட்டுப்பாடு, அதை ஓரளவிற்காவது நீக்க முயற்சி செய்பவர்கள் பெருஞ் செல்வர்கள். பணத்தினால் செல்வநிலை நிர்ணயிக்கப்படுகிறது. அதனை நான் கருதவில்லை.

எல்லோராலும் இலக்கியம் படைத்துவிட முடியாது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் அத்துணை கஷ்டமில்லை. மானுடம் தழுவிய இலக்கியம் மனுக்குலத்தை வாழ வைக்கும். அதற்கு அழிக்கத் தெரியாது. உங்கள் இலக்கியம் மானுடம் தழுவியதாக அமையவேணடும். அதுவே என்றென்றும் வாழும். எல்லோரையும் வாழ்விக்கும். உங்களால் அது முடியும் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது. வளர்ந்து வரும் படைப்பாளி நீங்கள். பிரமனும் படைப்பாளிதான். ஆனால் அவனின் படைப்புக்களில் குறைகள் உண்டு, ஏற்றத்தாழ்வுகள் உண்டு. அந்தப் பிரமனைப் பின்பற்றாமல், உங்கள் படைப்புக்கள் மூலம் எல்லோரையும் நிறை மனிதர்கள் ஆக்குங்கள். குறை மனிதர்களை உருவாக்குவதாக, இலக்கியப் படைப்புக்கள் விளங்கக்கூடாது. இன்றைய அநேகமான படைப்புக்கள் குறைப்பிரசவங்கள். காரணம் பிரசவிக்கும் தாய்மார்களுக்குச் "சத்து"க்குறைவு. வாசிப்பதில்லை; சமூகத்தை உற்று நோக்குவதில்லை; நடுவுநிற்பதில்லை. எதற்கும் முன் ஆயத்தம் தேவை. குறைப்பிரசவம் தப்பினாலும் "நோஞ்சான்" தான். எல்லோருக்கும் இடைஞ்சல்தான்.

இன்று, படைப்புக்கள் பெரிதும் மனிதர்களுக்கு இடைஞ்சல்களை விளைவிக்கின்றன. மனிதர்களைத் தாழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோஞ்சான்களைப் படைத்து சமுதாயத்தில் உலாவவிட்டு வெட்கிப்பதிலும் பார்க்க படைக்காமல் "பிரமச்சரியம்" பூண்டு கொள்வது மேல். வெட்கம் இல்லாத ஒரு காலம்!

இவ்வாறு ஏன் எழுதுகின்றேன் என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். நீங்கள் "சத்துக்கள் உள்ள ஒரு தாய் போலத் தோன்றுகிறது. ஆகவே, படைப்புக்கள் மேலும் நிறைவு பெறவும், மனுக்குலத்தை வாழ்விக்கவும் வேண்டும் என்ற எண்ணத்தினால் எனது கருத்துக்களை உங்கள் முன்வைக்கிறேன்.

மேலும் வளர, வாழ, வாழ்விக்க எனது வாழ்த்துக்கள்.

நன்றி

15.11.1994

இங்ஙனம்
அன்புள்ள
**கு.சோமசுந்தரம்.**

மட்டக்களப்பிலிருந்து உதயம் பிரசுர அதிபர் **அ.சிவதாசன் அவர்களின்** கடிதத்திலிருந்து

உதயம் வாசகர் வட்ட உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் **"இலக்கியச் சிமிழ்"** பற்றி பாராட்டினார்கள். உதயத்தின் வெளியீடுகளில் "இலக்கியச் சிமிழ்" தரமானதாக இருக்கிறதாம். இதனால் உதயத்தின் தரமும் உயர்கிறது. இதற்கு உதயத்தின் சார்பில் உங்களுக்கு நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

## பல்கலைக் கழகத்திற்குப் பயன்பட்டிருக்க வேண்டியவர்

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

பேரன்புமிக்க தர்மராஜா அவர்கட்கு,

வணக்கம்.

நலம் நலத்திற்காய் பிரார்த்திக்கிறேன்.

முத்தமிழ் விழாவில் தங்கள் பேச்சு பற்றி,

நண்பர் நடன சிகாமணி (வீரகேசரி)

நேற்றுச் சந்தித்த போது மிகவும் புழ்ந்தார்.

விபரங்களும் சொன்னார்.

நல்லதொரு பேச்சை கேட்க முடியாமல் போயிற்றே என பெரிதும் கவலைப் பட்டேன்.

வீரகேசரி கட்டுரையும் பிரமாதம்.

வேறு துறையில் இருந்து கொண்டு தமிழை இத்துணை ஆழமாக தாங்கள் கற்றிருப்பது கண்டு ஆச்சரியப்படுகிறேன்.

அனைத்தும் இறைவன் கொடை.

பல்கலைக் கழகத்திற்கு பயன்பட்டிருக்க வேண்டியவர்.

இந்த நாட்டில் எதுதான் சரியாய் வளர்ந்தது.

தங்கள் தமிழ்க் காதல் தொடர இறைவன் அருளட்டும்.

என்றும் அன்பு தொடர பிரார்த்திக்கிறேன்.

வேறென்ன?

"இன்பமே என்னாளும் துன்மில்லை"

என்றும் அன்புடன்

**இ.ஜெயராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

## எழுந்த சூரியன்!

**கவிஞர் சோ.பத்மநாதன்**

மணி விழாக் காணும் அகளங்கன் வாழ்நாள்
முழுவதும் ஆற்றிய தூய
பணியினை வையம் கணிப்பதும், உவந்து
பாராட்டு கின்றதும் கண்டோம்.
தணிகிலாக் காதல் தமிழின்பால் உடையான்
இன்சொலும் பணிவுமே தனக்கு
அணியெனக் கொண்ட அகளங்கன் வாழி
அகிலமே பயனுற என்பேன்!

ஆலயந் தோறும் சமயப்பே ருரைகள்,
அரங்குகள் தொறுந்தமிழ்க் கவிதை
நூலகம் போலத் தேடிவைத் திருக்கும்
நுண்பொருள், வாழும் காலத்தின்
மேலும்வந் தெய்தும் தலைமுறைக்காக
விரிப்பது நின்தனிச் சிறப்பு
சாலவும் உயர்ந்த தொண்டனே நீயோர்
**சரித்திர நாயகன்** என்பேன்!

**வாலி**பாத் திரத்தை நுணுகிஆ ராய்ந்து
மறுக்கொணா வாதங்கள் உன்னைப்
போலெவர் வைக்கக் கூடும் நீஆய்வுப்
புலத்தினில் சாதனை புரிந்தாய்!
**பாரதப் போரின் மீறல்கள்** என்ற
பட்டியல் வேறொரா ராய்ச்சி!
ஆரமுதாகும் **'தேறலும்' 'சிமிழும்'**
அற்புத இலக்கிச் சுரங்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகட் கான பாடலும் **'சுட்டிக்**
**குருவிகள்'** எனுமொரு தொகுப்பும்
பழந்தமிழ் மரபில் **கம்பனில்** நம்மைப்
பார்க்குமோர் பனுவலும் நாங்கள்
இழந்ததும் நம்பால் இருப்பதும் காட்டும்
எண்ணிலா நூல்கள் நீ தந்தாய்!
**எழுந்த சூரியனாய்** இலக்கிய வானில்
இலங்குவை இறையரு ளாலே!

அன்பு அகளங்கன்

நாடகங்கள் அனைத்தையும் ஒரே மூச்சில் படித்து முடித்தேன். ஆறு நாடகங்களும் அற்புதம். அபாரமான கற்பனை. உரையாடல்களில் இடம்பெறும் இலக்கியச் செய்திகள், சிலேடைகள், எதுகைமோனைகள், ஒவ்வொரு செயலுக்கும் பின்னணியில் உள்ள காரணிகள் அனைத்தும், வாசகனைப் புல்லரிக்கச் செய்யும் உத்திகளாக அமைந்துள்ளன.

இப்படித்தான் பேசியிருப்பார்கள், இப்படித்தான் நடந்திருக்கும் என்று எண்ணும் வகையில் ஒவ்வொரு காட்சியும் அமைந்துள்ளன. குறிப்பாக "சிலம்பு பிறந்தது" நாடகத்தில், சிலப்பதிகாரப் பாடல்கள் இடம்பெறும் இடங்கள், வஞ்சிக்காண்டம் பாட வேண்டி ஏற்பட்ட சூழல் முதலியன அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர்களும், கலாநிதிகளும், அவர்களுடைய வாரிசுகளும் நவீன நாடகம் என்ற கோமாளித்தனத்தைக் கட்டிக் கொண்டு அழட்டும். நாம் இந்தப்பாணியிலேயே நாடகங்களை அமைப்போம். அவைதான்,

1) மக்களைச் சென்றடையும்
2) மக்களைப் பரவசப்படுத்தும்
3) நிரந்தரமாக நிலைத்து நிற்கும்.

நான் எனது முந்திய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போல,

1) நடிப்புக்குறிப்புகள், மேடைக்குறிப்புகள் முதலியவற்றை நாடகப் பிரதியில் குறிப்பது நாடகாசிரியனின் வேலை அல்ல.
2) அவை நாடகத்தின் இலக்கியத்தரத்தையும், அழகியலையும் மனம் ஒன்றும் சுவாரஸ்யத்தையும் பாதிப்பவை.
3) அவை டைரக்டர், மேடை அமைப்பாளர், ஒளி அமைப்பாளர் முதலியோருடைய வேலைகள். நாயின் வேலையை கழுதை பார்த்தல் என்பது பழமொழி.

**அன்புமணி இரா.நாகலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

## சிறப்புறுநற் புலவர் திரு.அகளங்கன்

**மூத்த தமிழறிஞர்.சிற்பி (சிவசரவணபவன்)**
ஓய்வுநிலை அதிபர், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி.

**அ**றம்அன்பு நல்லொழுக்கம் ஆன்மீகம் மனிதாபி மானம் கொண்ட **சிறுகதை நா வல்கவிதை சிந்தனைக்கட் டுரைபேச்சு நாட கத்தால்** உறுதியுடன் உலகத்தார் உளங்களினை உயர்த்திடு நற் பணிசெய் கின்ற சிறப்புறு நற் **புலவர்திரு அகளங்க ணாம்தரும ராசா வாழ்க.**

உன்னினிய உள்ளத்தில் உதிக்கின்ற உணர்வுகளால் உருவாகின்ற நன்னயஞ்செய் இலக்கியங்கள் நாடெங்கும் பரந்துநறு மணம் வீசட்டும் வன்னியரின் திறமைகளை வையகத்தார் வாழ்த்திவணக் கஞ்செய்யட்டும் அன்னை தமிழ்க் கணிகலனாய் அகளங்கா ஆண்டாண்டு காலம் வாழ்க.

## நற்பணி சிறக்க என்றன் வாழ்த்து !

**கவிஞர் சோ.பத்மநாதன்**

**க**ம்பன் காவியம் கற்பது நல்லது
கம்பனோ டுடாடுதல் நல்லது
கம்பனுக்குள் நுழைவது நல்லது
கம்பனையா ராய்வது நல்லது
தம்பிநீ யவை யாவையும் புரிகிறாய்
தமிழிலக்கியப் பயணம் தொடர்கிறாய்
நம்பரும் ஒரு சாதனை **கம்பனில்**
**நானெனும்** நின் முயற்சி சிறக்கவே

சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# எதனை இவன் இலக்கியத்தில் இன்றுவிட்டு வைத்தான்

இலக்கியமணி தமிழ்மணி கலாபூஷணம்
**கவிஞர் செ.குணரத்தினம் (அமிர்தகழியான்)**

வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்துவோம்

நாடறிந்த பேச்சாளன் நல்லதமிழ்க் கவிஞன்
நட்புக்கோர் இலக்கணமாய் வாழ்கின்ற மனிதன்
ஏடறிந்த எழுத்தாளன் இலக்கியத்தில் விண்ணன்
இவன்புகழைப் பாடவல்லோர் இங்கெவரும் இல்லை.

(வாழ்க....)

வன்னிமண்ணின் மணம்கமழக் கலையுலகில் நாளும்
வலுவுடனே தன்னெழுத்தை வார்த்தெடுத்து ஆளும்
மன்னனிவன் மட்டுநகர் வவுனியூரின் பாலம்
மறப்பதற்கு முடியாத **தமிழ்மணி**யெம் தோழன்

(வாழ்க....)

எதனையிவன் இலக்கியத்தில் இன்றுவிட்டு வைத்தான்.
இயலிசைநல் நாடகங்கள் எல்லாமு மானான்.
அதனையிங்கே நிரைப்படுத்த போதாது காலம்
அவன்பெற்ற பரிசுகளோ ஏராளம் தேறும்.

(வாழ்க....)

தருமத்தின் மறுபிறப்பு **தர்மராஜா** தேனாய்
தமிழினிலே எழுதுவதில் தனிச்சிறப்பு ஆனான்
கருமத்தில் கண்ணாகிக் கலைவளர்க்கும் கலைஞன்
கன்னித்தமிழ் மொழியினிலே கவிதைதரும் புலவன்

(வாழ்க....)

வாழ்த்துகின்றேன் **அகளங்கன்** வாழ்கநீடு என்று
வளமோடு பலசிறப்பும் வாழ்க்கையிலே கண்டு
வாழவேண்டும் இதுவேயென் உள்ளத்தின் துடிப்பு.
வாழ்க! வாழ்க! பல்லாண்டு வளர்கதமிழ்த் தொண்டு.

(வாழ்க..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# கவனியா திருந்துபல் கலைஞர்களின் கலங்கரை விளக்கம்

சமூகசஞ்சீவி, சிவநெறிப்புரவலர்.சி.ஏ.இராமஸ்வாமி

1. இலக்கது ஒன்றை அடைவதற்கு
உழைத்தவர் வயது அறுபதின்று.
கலக்கம் என்பது ஒன்றறியாக்
கவிஞரும் கலைஞரும் கதைஞருமாம்.
தலைக்கனம் இல்லா ஒரு பெரியார்
தலைமைகள் பலவும் கண்டவராம்
விலைக்கெனப் பேச்சைப் புரியாத
வித்தகன் தானென்று வியந்திடலாம்.

2. வியந்திடத் தக்கது பலவுண்டு
வேண்டிய கேள்விக்கு விடையளிப்பார்.
நயந்தனை நவிலும் போததனில்
நம்மையும் நாமே மறக்கவைப்பார்.
பயந்தனைச் சற்றும் அறியாத
பாண்டித்யம் தனையும் பெற்றவராம்.
சயந்தனைச் சிறையிட்ட சூரன்வதை
சரளமு மாகவே உரைக்க வல்லார்.

3. உரைக்க வல்லார்இவர் பாரதத்தை
இராமா யணமொடு சிலம்பதனை
கரைக்கவும் முடியா மனந்தனையும்
கரைக்கவல் லாரிவர் தன்னுரையால்.
திரைக்கதை பாடல் எனக்கொண்டால்
திகைத்திடும் படியே சொல்லவல்லார்
வரைக்குள் அடங்காது இவர் அறிவு
வளமென்று என்றும் அயர்ந்தவன்நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அயர்ந்தவன் நானவர்க் கன்பனுமால்
இனிதொரு குருவாய் ஏற்றவன் நான்.
உயர்ந்தவர் என்பதால் ஐயமின்றி
உயர்வினை உரைப்பதில் மகிழ்பவன்நான்.
வயதினில் இளையவர் என்றாலும்
விசயத்தை நிறையவே உடையவராம்.
தயவொடு இறைவனை வேண்டிடுவேன்
**தமிழ்மணி அகளங்கன்** வாழ்கவென்றே.

5. வவுனியா விலேதமிழ் வளர்வதற்கு
வழிகாட்டி யாமிவர் வாழ்கவென்போம்.
**கவனியா திருந்தபல் கலைஞர்களின்**
**கலங்கரை விளக்கம்.** வாழ்கவென்போம்.
தவமுனி யாமவர் என்றுரைக்கும்
தகைமையும் உள்ளவர் வாழ்கவென்போம்.
எவருக்கும் இனியவ ரானஇவர்
என்றென்றும் வாழ்க வாழ்க வென்போம்

சிவநெறிப்புரவலர் சமூக சஞ்சீவி
**சி.ஏ.இராமஸ்வாமி**
(04.12.2013 இல் 60 வயதைப்பூர்த்தி செய்யும் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்குரிய வாழ்த்து)

---

**"அம்மா நான் வெளிநாடு போறேன்"** வானொலி நாடகம் பற்றி **அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை B.A.** Dip.in.Edu அவர்களின் கடிதம் (27.01.1990)

நீங்கள் எழுதிய "அம்மா நான் வெளிநாடு போறேன்" 30 நிமிட நாடகத்தை 20.01.1990 அன்று வானொலியில் கேட்டேன். மிகவும் நன்றாக இருந்தது. கதையமைப்பு பாத்திரவார்ப்பு எல்லாம் யதார்த்தமாக இருந்தன. எனது பாராட்டுக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் செய்த ஆன்மிகத் தொடர் சொற்பொழிவைப்பாராட்டி வைரவபுளியங்குளம் ஸ்ரீஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினர் வாழ்த்தி வழங்கிய

## வாழ்த்துப்பா

**வ**ளமார்ந்த வன்னிமண்ணில் வந்த செம்மல்
வசமாகச் சொற்களையே ஆளும் அண்ணல்.
களங்கள்சொற் களங்கள்தாம் கண்ட வள்ளல்
கவினுறவே தொடர்பேச் சுக்கள் நல்கி
அளவில்சீர் கருத்துக்கள் சமயம் சார்ந்த
அளப்பரிய உண்மைகள் வாரித்தந்த
உளம்நிறைந்த உத்தமராம் அகளங் காநீர்
உன்னதமாய் என்றென்றும் வாழ்க! வாழ்க!

எண்ணற்ற கவிதைகள் நூல்கள் யாத்தும்
ஏரார்ந்த **அகளங்கன்** தமிழ்மணி ஆயும்.
பண்பாட்டில் வழுவாது நின்று நல்ல
பாங்காகத் திருத்தொண்டர்புராணம் சொல்லும்
உண்மைகள் உளங்கொளவே என்றும் நீவிர்
உயர்வாகத் தருகின்றீர் பல்லாண்டு களாய்.
வண்மைசால் கருத்துக்கள் தந்த நீங்கள்
வளமுடன் என்றென்றும் வாழ்க! வாழ்க!

தன்னலமே கருதாத சேவை தன்னை
தரணியிலே போற்றுகின்றோம் என்றும் நாமே.
மன்னியஉம் பணியிதனை யாண்டும் செய்க!
மக்கள்சே வைமகேசன் சேவை அன்றோ.
பன்னலங்கள் பெற்றேநீர் என்றும் வாழ்க!
பண்ணவன்தன் அருளாலே நன்றே வாழ்க!
மன்னியஉம் குடும்பமுமே நன்றாய் வாழ்க!
மகிழ்வுடனே பல்லாண்டு வாழ்க! வாழ்க!

கவிதை ஆக்கம்
பண்டிதை **யோகா சோமசுந்தரம்** *B.A.Dip In Edu.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

## வெள்ளிநிலவை வாழ்த்தும் மின்மினி

**திரு.க.குமாரகுலசிங்கம் - சுவிஸ்**

**வெ**ள்ளி நிலவை
நட்சத்திரம் வாழ்த்தவில்லை.
மின்மினிப் பூச்சி நான்
வாழ்த்துகின்றேன்

பழைய நாட்களை
**சுவிசில்** வாழ்ந்தாலும்
மறக்க முடியவில்லை
பகிர்ந்துகொள்கிறேன்

வயல் வரப்பில் நடந்ததை
குளத்தில் குளித்ததை
அறிவுக்கதை சொன்னதை
கலரியில் இருந்து
படம் பார்த்ததை
தண்ணீர் பாய்ச்சியதை
சொல்லி மகிழவா

உங்களிடம்
சாத்திரம் படித்ததை
பேச்சு வாங்கியும்
பேசித்திரிந்ததை
அறிவு தந்ததை
ஆன்மிகம் சொன்னதை
இந்த வேளையில்
எண்ணிப்பார்க்கிறேன்

மிளகாய்த் தோட்டத்தில்
அழகாய்க் கூறிய
புத்திமதிகள்
பெறுமதி மிக்கவை
வெங்காயம் பயிரிட்ட - அந்த
மூன்று மாதங்கள்.
மனதை விட்டு
இன்னும் அகலவேயில்லை

கரைக்கையால் ஆடிய
கரப்பந்தாட்டம்
சொல்லி அடித்த
பந்துகள் எத்தனை
சொல்லி முடியுமோ
சொற்களில்
எனக்கு அறிவைத் தந்த
அண்ணாவே வாழி!

சொல்ல பல இருந்தும்
சொல்லும் முறை
தெரியவில்லை

பட்டங்கள் பலதும்
பெற்று விட்டீர்கள் இனி
பெறுவதற்கு பட்டங்கள்
எதுவும் இல்லை.
மணிவிழா காணும்
இந்நேரத்தில்
என்அடி மனதில் இருந்து
உங்களை வாழ்த்துகின்றேன்!!!

**அன்புடன் தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# முத்தமிழிற் கோலோச்சும் வித்தகன்

கவிஞர்.V.S.தனபாலசிங்கம் J.P.I.W

*"சமைமதிக்குமாற்றல் யார்க்குண்டோ ஆன்றோர்*
*அவைமதிப்பு மாங்கே வரும்"*

நாகபூஷணி யருளோ நாகலிங்கம் தம்பதியர்
நாட்கள் தவமிருந்து மாநிலத்துக் கொப்புவித்த
நாதர்மராசா நாவேந்தன் புகழ் விளங்கி
நானிலத்தில் நாமும் மணிவிழா காண்கின்றோம்.

கலைகள் மிகவூற்றெடுக்கும் வவுனிநகர் வந்துதித்த
இலக்கிய னாம் கலாநிதி தமிழ்மணியாம் அகளங்கன்
நண்பர்கள் புடைசூழ நாற்புறமுந் தமிழ் பரப்பும்
வட்டம் எனும் மன்றமதை முத்தமிழாற் பிறப்பித்தார்

திருமுறையி னாய்வும் உரைநடையும் சொற்பெருக்கும்
திருநாயன் மார்தம் வரலாறோ டிலக்கணமும்
திரையிசையில் - கலைஞர்களில் மேலான பற்றுதலும்
திருச்சோதிடத் தாய்வு மும்பணிக ளுட்சிலவாம்

பட்டிமன்றம் பேசும் பல்லறிஞர் மன்றமதில்
பட்டிமன்றத் தின்நடுவ ராய்த்தோன்றி நுட்பமுடன்
பட்டிமன்றத் தலைப்புகளி லாழ்கவனம் தானூன்றி
பட்டிமன்றம் வியந்திடவே தீர்வும் வழங்கிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

கலைகளை வளர்க்கும் வித்தை கலைஞரென் றும்மைக்காட்டும்.
கலைதனைப் பெருக்கும் கூடம் எங்குமுன் நாமம்போற்றும்.
கலைகளின் படைப்பு முந்தன் கவிநய மரங்கங்கண்டால்
கலைவரோ கலைவல்லாரும் கற்பனைக் கதையிதாமோ

வேறு

ஐம்பெருங் காப்பியங்கள் ஐயமறக் கற்றுணர்ந்தார்
ஐந்தாம்வேதம் அதற்கும் பொருளுரைப்பார் - ஐம்புலனும்
ஐந்தவியின் ஆளுமையில் ஐக்கியமும் சேர்ந்தமைய
ஐசுவரியப் பேறமைந்தார் காண்.

பல்லாண்டுக் குருத்துவத்திற் பல்லாயிர மாணவர்உம்
சொல்லாண்ட விதப்புரையிற் சீர்பெற்றார் - பல்கலையில்
பல்கிப் பயன்பெற்றுப் பல்துறையிற் பட்டமுறச்
சொல்லுகிறா ரும்புகழை யென்றும்

எத்தமிழை யெடுத்தாலும் அத்தமிழிற் தானென்று
முத்தமிழிற் கோலோச்சும் வித்தகனே - சொற்தமிழால்
எச்சவுரை கூட்டி அவையடக்கத் தாற்சிறந்து
சொச்சமறத் தீர்ப்பா யுவந்து

நன்நூல் களைத்தந்து நற்றமிழ்ச் சமூகமதை
நல்லாக்கி வைக்க நயத்தனையோ - நல்லாசான்
நன்செய் நிலந்தன்னில் நாற்றுப்போல் நட்டவை
நல்விளைவைப் போன்றே பயன்

மணிவிழா நாயகனே மாண்புறவே வேண்டும்
மணிமா னொளியதுவாய் மாநிலத்தில் - மணாட்டியுடன்
மங்கலமும் பொங்க மகிழ்வோடு பல்லாண்டு
மங்களமாய் வாழ்ந்திட எம் வாழ்த்து

வாழ்த்தி வழங்குபவர்
**V.S.தனபாலசிங்கம்** J.P.I.W
இல.37, பார்க்குழி லேன்,
தோணிக்கல், வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

## துருவ தாரகை

**கவிஞர் திருமதி.த.நிறைமதி**

இலக்கிய உலகின்
துருவ தாரகை!
வன்னி மண்ணின்
வற்றாத நீரூற்று!
பழகிய தமிழை
பழக்கிய நட்டுவனார்!
'இலக்கிய நண்பர்கள்'
ஆழி சுழற்றும்
ஆக்ஞா சுட்டுவிரல்!

கவிதையின் ஊற்றும்
கதைகளின் அலைகளும்
கட்டுரைச் சுழிகளும்
ஆய்வெனும் ஆறுகளும்
சங்கமங் கொண்ட
சாகரம் - சமுத்திரம்!

தமிழ் மணக்கும்
தரமான சொற்பொழிவும்
தமிழால் வளர்த்த
புராண படனங்களும்
சமயமும் வளர்த்த
சரித்திரம் புகலும்!

தமிழன்னை பெற்ற
தவப்புதல்வன் தன்னை
தந்ததனால் பம்பைமடுவும்
வரலா றொன்றை வரைந்து கொண்டது!
தீட்சண்ய பார்வையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்
ஆட்கொள்ளும் - எவரும்
ஆளாகி நிற்பர் இவரால்!

'தமிழ்ப்பெண்' துணையை
கையகப்படுத்திய காரணத்தால்
எச்சங்கள் தம்மால்
எழுதப்படும் 'தக்கார்'சான்று
தகைவுறவே அமைந்ததனால்
களங்க மறு தகுதியுறு வாழ்வு
பறையறையப்பட்டது!
அகளங்கம் ஆனது!

மலைகளை வாழ்த்த
மடுக்களுக்கு கூடுமோ!
ஆயினும் வாழ்த்துவன்!
வாழ்க!
அசலமாய் உயர்ந்து
ஆழியாய் ஆழ்ந்து
அறுகதாய் பரந்து
ஆலதாய் நிலைத்து
காலத்தின் பொன்னேட்டில்
காற்றடம் பதித்து
வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# தமிழ்த் தாய்க்கு ஏன் இந்த ஓரவஞ்சனை

**கவிக்கதிர் குரும்பையூர் த.ஜங்கரன்.**

**வி**ழாக்களுக்கு சிலபேரால் விளைகிறது சிறப்பு - தமிழ்
விழுதாக ஆனதுவே தமிழ்மணியின் பிறப்பு
வழாநிலையில் வாழ்கின்ற நல்லவொரு மனிதர் - வன்னி
வரமாக பெற்றுவிட்ட அறவழியின் புனிதர்
விழாதிவர் புகழ்என்றும் விண்ணேகி உயரும் - ஒரு
விடிவெள்ளி போலென்றும் தமிழ்வானில் ஒளிரும்

பலநேரம் நான்பார்த்து வியக்கின்ற ஒருவர் - துறை
பலவற்றில் காலூன்றி சிறக்கின்ற கலைஞர்
சொல்போல செயல்கொண்டு வாழ்கின்ற ஐயா - எதைச்
சொன்னாலும் நேர்பேசும் திடமான மெய்யே!
விலகாது **அகளங்கன்** எனும்நாமம் தமிழை - அவர்
விதைக்கின்ற எல்லாமே வளமான கலைகள்

ஆன்மீக நெறிநின்று அருள்கின்ற மொழிகள் - பல
அரங்கங்கள் தனிலேறி மொழிந்திட்ட உரைகள்
தேன்போல சுவையோடு படைத்திட்ட நூல்கள் - அவர்
தெளிவாக்கி தந்தாரே எத்தனையோ ஆய்வுரைகள்
**ஏன்இந்த தமிழ்த்தாய்க்கு ஓர வஞ்சனையோ! - அள்ளி**
**எல்லாமே அவருக்கு அளித்திட்டாள் முறையோ!**

இன்றைக்கும் தமிழ்போல இளநெஞ்சம் கொண்டார் - ஒரு
இலக்கிய வட்டத்தை உருவாக்கி வென்றார்
என்றைக்கும் இவர்பின்னே இளைஞர்கள் உள்ளார் - வரும்
எல்லோர்க்கும் இலக்கிய இனிமைகள் சொல்வார்
மன்றுக்கு இவர்வந்தால் தமிழ்மணம் வீசும் - ஐயா
மனம்போல ஆடைகளும் கலாச்சாரம் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுப்போல் சுரக்கின்ற தமிழ்கண்டு வியந்தோம் - அவர்
ஊழியமாய் செய்கின்ற பலசேவை நயந்தோம்
ஏற்கின்றோம் அவர்வன்னி மண்ணுக்கும் முதுசொம் - தனை
ஏணியாய் ஆக்கிஎமை உயர்த்தினார் உயரம்
போற்றிட வார்த்தைகள் எனக்குப் போதாது - இலக்கிய
போக்கினை அறிந்திட்ட அவருக்கு நிகரேது

நடையுடை அனைத்திலுமே நாணயத்தை கொண்டு - புகழ்
நாடளவில் பரவிடவே விருதுகளை வென்றார்
மடைதிறந்த வெள்ளமென பாய்கின்ற தமிழை - பெரியோர்
மதித்தவர்க்கு கலாநிதி வழங்கியது தகுமே
எடைஅறிந்து சொல்லும் எண்ணம் எனக்கில்லை - பலதை
எனக்குணர்த்தி நின்றஐயா பல்லாண்டு வாழ்க!

மணிவிழா காண்கின்ற தமிழ்மணியே வாழ்க! - உங்கள்
மனம்போல தமிழோடு நலமாக வாழ்க!
துணிவாக நியாயத்தை உரைக்கின்ற குருவே! - என்றும்
துணைசெய்ய இறையுண்டு அருளோடு வளர்க!
இணையாக இல்லத்தார் அன்போடு சேர்ந்து - ஒரு
இலக்கணமாய் வாழ்கின்ற வரம்பெற்று வாழ்க!

இவ்வண்ணம்
வணக்கங்களுடன்,

**கவிஞர்.குரும்பையூர், த.ஜங்கரன்**

வன்னி மண்ணின் வழிகாட்டியாய், வளத் தமிழை வழங்கும் மொழியூட்டியாய், இளம் தலைமுறைக்கு உரமூட்டியாய் இருந்து எமை உயர்த்துகின்ற கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்கள் மணிவிழா காண்கின்ற நிகழ்வையொட்டி வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப்பா!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## மணிவிழாக் காண்பதுவே மாண்பு

**கலாபூஷணம் சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்**

1. ஆற்றல் மிகுநண்பன் அகளங்கன் தமிழ்த்தாய்க்கு
ஆற்றியபல் லாக்கத்தை யறிந்ததனால் - ஏற்றமுடன்
எண்ணத்திற் தோன்றி யெழுகின்ற வார்த்தைகளை
வெண்பாவால் சொன்னேன் விழைந்து

2. செந்தமிழைத் தாலாட்டித் தீந்தமிழி லிலக்கியங்கள்
சந்ததமும் ஆற்றிவரும் சற்குணத்தோன் - விந்தைமிகு
அணிபூட்டித் தமிழ்த்தாயை அலங்கரிக்கு மகளங்கன்
மணிவிழாக் காண்பதுவே மாண்பு

3. பார்சிறக்கப் பாவெடுத்துப் பாய்ந்துவரும் நீரோட்டச்
சீர்சிறக்கப் பாடும் சிந்தனையான் - யார்மறுக்கப்
போமோ வவன்புலமை பொங்கிவரும் தேனாறு
தாமோ வெனத்தோன்றுந் தான்.

4. உன்னாக்கங் கண்டு உவக்கின்ற வாசகர்கள்
தன்மனத்தைத் தானறிந்து, சாற்றுகிறாய் - பன்னாற்றல்
பெற்றதனா லன்றோ பெருமைமிகு நூல்கள் பல
உற்றதனா லிந்த உயர்வு.

5. சுவையறிந்து சொல்தெரிந்து சொல்லுபொருள் தானறிந்து
சுவைப்போர்முன் னாற்றிடுமுன் "சுவைப்போரை" - அவையினிலே
கண்டவர்கள் போற்றிடுவர் கைதட்டி யேற்றிடுவர்
உண்டிதுதான் வெற்றி யுணர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "வெல்லத்" தமிழ்மீது வெறிகொண்ட பற்றுதலால்
வெல்லக் கவிபடைத்து வேர்விட்டாய் - சொல்லரிய
காப்பியமுந் தந்து கனித்தமிழைக் கட்டிவரும்
கோப்பியத்துக் கில்லைக் குறை

7. அறுப தகவையினை யடைந்திடினு மவன்விரல்கள்
ஆறுதலை யடையாது வாற்பரிக்கும் - மாறுதலை
எழுத்துலகுக் கீந்து இன்னுமுயர் நூல்கள்பல
அளித்திடுவா னென்றே யறி.

8. நோக்கங் கள்கொண்டு நுண்ணியனற் கருத்துகளை
ஆக்கமுறச் செய்து அயர்வின்றி - ஊக்கமுடன்
பலாச்சுளை போலாராய்ச்சி பைந்தமிழி லாற்றியதால்
கலாநிதியு மானான் கனிந்து.

9. கவியரங்கு மேடையிலே கவிநெறியாய்ச் செந்தமிழில்
செவிகுளிர வகளங்கன் செப்புவதில் - அவையடக்கம்
வந்திருக்கும் சிந்திருக்கும் வழுவாச்சந் தமுமிருக்கும்
தந்திருக்கு மின்பமது தான்.

10. நண்பர்களை யாய்ந்து நல்லிலக் கியவட்டம்
வண்ணமுற வாக்கி வகைசெய்தான் - எண்ணரிய
இளங்கலைஞர் பல்லோரை இங்கழைத்து மேம்படுத்தி
களமிறங்க விட்டான் கனிந்து.

11. எண்ணிய வெண்ணியாங் கெய்துபவ னாய்த்திகழும்
கண்ணியனாம் கலாநிதி அகளங்கன் - தண்குணத்தோன்
என்னினிய நண்பன் இளமையுடன் பல்லாண்டு
நன்றினிது வாழும் நலம்.

வன்னியூர் அகளங்கா வாழ்த்துகிறேன் உங்களது
கன்னிமொழிக் கவிதை கண்ணுற்றேன் - மென்மேலும்
பாடய்யா உங்களது பாட்டாலே வளவன்னி
நாடு நனிய நனி

**கா.இரத்திரனசிங்கம் நொச்சிமோட்டை (K.R.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI

# வற்றாத கலைஞானம் வரமாகப் பெற்றவர்

"மொழியரசி", "தமிழ்ச்சுரபி"

**கலாகுமரப்பா,** புதுக்குளம்

**ந**ல்லாளன், **நாகலிங்கம்,** நயமாகத் தந்தவனே!
இல்லாளாம், இனியாள், **நல்லம்மா,** இதமோடு பெற்றவனே!
பல்லோரும் போற்ற பாரில் உதித்தவனே
சொல்லாலே கவி தந்தேன் தூய மனத்தோடு.

வன்னி மண்ணின் மகத்தான புத்திரனே!
அன்னியனல்ல வன்னி மைந்தன் நீர்
உன்னி எடுக்கின்ற ஒவ்வோர் சொற்களையும்
பின்னி எடுத்திடுவீர் பெருமைத் தமிழாலே

கலையுண்டு, கற்பனை வளமுண்டு கவின் கொள் கவிதானுமுண்டு
அலையாகப் புரண்டுவரும், அரங்கப் பேச்சுண்டு, அரும்பட்டிமன்றமுண்டு
குலையாத பாட்டோடு, பயனுண்டு, பக்திப்பிரவாக முண்டு.
நிலையாக, உம் பெயரும், நிமிர்ந்து நிற்கிறது

வற்றாத கலை ஞானம் வரமாகப் பெற்றவனே!
கற்றாரும் மற்றாரும் காதலிக்கும் காரணனே!
பெற்றார்க்கும் பெருமை சேர்த்த பேருத்தமனே!
உற்றாரும் உறவு சொல்லும் உயர்வுத்தமனே!

காலம் தந்த காரணனே! கவிசாற்றும் பூரணனே!
கோலமாய் அரங்குக்கு அணிசேர்க்கும், பாவலனே!
சாலவும், புகழ்கிறது இத்தரணி உம் செயலதனை
ஆல விருட்சமாய், அகல நிற்கிறது உம் புகழ் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்காய்ப் பேசும் அழகுப் பேச்சதுவும்
அகழ்ந்து பேசுவதால் அளங்கன் பேராச்சோ?
அலை எறியும் உம் பேச்சு அகிலமெங்கும் கேட்கிறதே
அயர்ந்தவனை அடித்தெழுப்பும் அலங்காரப் பேச்சல்லோ!

பாரதத்தில் பேச்செல்லாம் பவுத்திரமாய் எடுத்துரைப்பார் - கந்த
புராணத்தில் கருத்தூன்றிப் பயனுரைப்பார் - பெரிய
புராணத்தில் பேச்சென்றால் பெருமையாய் பேசிநிற்பார் - சீறாப்
புராணமும் சேர்த்தே சுவைத்திடுவார்.

**அன்றில் பறவை** அகத்தெடுத்து ஆய்ந்தெழுதி
ஒன்றிவிட்ட காதலை உண்மையாய்த்தந்து
நின்று நிதானித்து நிஜமோ வென்று நிலைகுலைய
நன்றியோடு நாடகமாய் நயந்து தந்தவனே.

எத்தனை சிறப்புண்டு, எத்தனை செவிச் செல்வமுண்டு
அத்தனைக்கும் நிகரான அகளங்கனே - அருஞ் செல்வமே!
நித்தமும் உம் பெருமை நிலவுலகில் நிலைக்கட்டுமென்று
அத்திமுகனை அனுதினமும் வேண்டுகிறேன்.

---

**இலக்கியத்தேறல்** நூலின் பின் அட்டையில் சிரித்திரன் ஆசிரியர் **திரு.சி.சிவஞானசுந்தரம்** அவர்கள்.

உயர்ந்த கலைகளாகிய காவியங்களை, காப்பியங்களை, உபாசனை செய்பவர் அகளங்கன்.சிரித்திரன் வாசகர்களின் இலக்கியத் தாகத்தை இலக்கியச் சிமிழ்களால் சாந்தி செய்து கொண்டிருக்கும் இவர் நல்ல இலக்கியச் செழுமை மிக்கவர். *(1988)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# வன்னியின் வசந்த மலர்

**ஜனாப்.முஹம்மட் சரீப் - றம்ஸீன்**
வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய
(தேசிய பாடசாலை) அதிபர்

***(தர்ம)*** ..... ***தனி ராஜா***

*அறிமுகமே வேண்டாத தமிழ்மணி.*
*என்(ம்) இருதய வாசலின்*
*அழைப்பு மணி - இந்த*
*தமிழ்மணி - அகளங்கன்*

*தமிழ்மணி .....*
*எங்கள் இலக்கிய முத்துக்களை*
*வெளிச்சத்தில் காட்டிய சுடரொளி.*
*எங்கள் கவிதையின் மணிமொழி.*
*கால அருவியின் தமிழ்மணி.*

*துள்ளாத மனமும் துள்ளும் - இவரது*
*கலைப் படைப்புக்களில்.*
*கலங்காத மனமும் கலங்கும்*
*அகளங்கனின் இலக்கியப் படைப்பில் .....*

*இவரை நா(ன்)ங்கள் நேசிக்கிறன்றோம்.*
*ஒரு மலர் அதனுடைய*
*மகரந்தப் பொடிகளை*
*நேசிக்கின்ற மாதிரி .....*

*வன்னியின் வசந்தமலர் - இது.*
*வன்னி மண்ணில் உழுத - எழுதுகோல் - இது.*
*தன் இலக்கிய மரங்களை*
*தண்ணீர் பாய்ச்சி ..... விருட்சமாக்கும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மணி - அகளங்கன்
இவர் ஒரு கலைப்படைப்பு - வீரன்.
விருது பெறுவதில் - சூரன்.
சாகித்திய மண்டலம் வரை சாதித்து
ஜனாதிபதி விருது வரை விருட்சமாகியது.

கடலலை தூது சென்று
காவியப் படைப்புகள் பரிணாமித்(த)து!
வெள்ளி விழா படைப்புகள்
வெளியாகியது. வெற்றிவிழா பெறுகின்றது!
வெளிநாடுகளில் கொண்டாடிய
வெற்றிவீரன் ..... தமிழ்மணி அகளங்கன்.

தர்ம (ராஜா), தங்க (ராஜா), தரமான (ராஜா).
தரணியில் இலக்கியப் படைப்பில்
தனி (ராஜா)

வாழ்க தமிழ்மணி !
வளர்க தமிழ்மணி !!

**எஸ்.முத்துக்குமாரன் (எழுத்தாளர்) கல்லடி மட்டக்களப்பு (15.03.2014)**

தங்களின் **கம்பனில் நான்** என்ற நூலை வாசித்து இரசித்து மகிழ்ந்தேன். இலக்கிய ஆய்வாளராகவோ இலக்கிய விமர்சகராகவோ கம்ப ராமாயணத்தை முழுமையாக கற்றறிந்தவராகவோ அடியேன் இல்லாவிடினும் இன்னூலை நன்கு இரசித்தேன். தங்களின் பேரறிவை நன்கு வெளிப்படுத்துகின்றது. அது மட்டுமல்ல தமிழ் கற்ற எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாக இலகு தமிழ் நடையை பாவித்துள்ளமையும் பாராட்டுக்குரியதாகும் **வாலி** மற்றும் **கம்பனில் நான்** எனும் நூல்கள் எனது சிற்றறிவை வளம்படுத்த நான் கற்ற நூல்களாக பேணி தாங்கள் எமக்கு அளித்த பெறுமதிமிக்க பரிசாகவும் போற்றுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# தொன்மையும் நவீனமும் ஒருங்கே தொடுப்போன்.

**கவிஞர்.த.தனசீலன்**

**பம்பைமடு** என்னும் மருதப்பதியில்
பண்பாடுடை குடும்பப் புதல்வர்.
செம்மை மிகுவோர் கற்றல் பணியில்
சேர்ந்தங்கர்ப் பணி துலங்கி
வெம்மை தரும் என்றும் கூறிய சொற்கள்
வினையுறு அநீதிகளில் மோதச் செய்து
இம்மை மறுமை இரண்டிற்கும் சேர்த்தே
இந்தப் புவிதனில் இலக்கியம் படைத்தார்.

**அகளங்கன்** எனும் புனைபெயர் தரித்து
ஆய்வுகள் பல செய்துரையாக்கி
தகநின்ற சான்றோனாய் விளங்கி
தனித்துவப் பண்புகள் பெற்று
சகலதும் கற்கும் சமுத்திர ஆவல்கொள்
சிரத்தையுடை மாணவனாய் இன்றும்
அகவை அறுபது ஆகினன் ஆயினும்
அவர் சிந்தைக்கு இருபது என்றும்.

தொன்மையும் நவீனமும் ஒருங்கே
தொடுக்கும் இலக்கிய மனதறிந்தேன்.
வன்முறைக் கொடுமைகள் மீது
வையும் மானிட மனதறிந்தேன்.
இன்புறப் பண்பாட்டிற் கியைபுற
இலங்கி உவகையுறும் மனதறிந்தேன்
அன்புறும் உளம் மக்கள்மேல்
ஆங்கதனைக் காண்கையில் அறிந்தேன் திணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய வாழியவே பெருமை இவ்
வாழிடம் கொள அறிஞரே!
வாழிய வாழியவே உம்மருமை அறிந்து
வாழ்த்து வோரிற்கு பெரியவரே.
மேழி நிலத்தினற் செம்மல் என்றும்
மேன்மைகள் பெற்று வாழியவே.
ஆழி அகன்றிடா உலகப் பொழுதெலாம்
வாழியவே நல்வாழ்வு வாழியவே

என்றும் அன்புடன்

**த.தனசீலன்** *BSc (Hons)*

---

**மகேந்திரராஜா கிருஷ்ணர் (சுவிஸ்)**

முற்றத்துக்கரடி சிறுகதை பற்றி ஒரே வரியில் சொல்வதென்றால் அருமை. நான் பிறந்த இடம் வன்னி இல்லை. இருந்தாலும் காசிப்பிள்ளைக்கு வந்த அதே கோபம் இதை வாசிக்கும் ஒவ்வொரு தமிழ்பேசும் தமிழனுக்கும் வரும். வரவேண்டும்.

உணர்ச்சிக்கு மட்டும் கொடுத்த முக்கியத்துவத்தை கொஞ்சம் உணர்வுக்கும் கொடுத்திருந்தால் நமது இனம் இருந்திருக்க வேண்டிய இடமே வேறு. அருமை. தமிழ் உணர்வாளர் அகளங்கனுக்கு எனது பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# அணிப்பாவிலோர் அகளங்கன்

**ஜனாப்.பதியத்தளாவ பாறூக்**

01. **எ**ழுத்தாளர் மா நாட்டில்
இணைந்த அறிமு கங்கள்
பழுதாகிப் போக வில்லை
பாங்கனே நமக்கு ள்ளே
விழுதினை விட்டு அவை
விருட்சமாய் நிற்ப தால்தான்
எழு கதிராய் எந்தனது
இவ்வஞ்சல் விழிக் கிறது.

02. **முற்றத்துக் கரடி** யது
முதற்பரிசுச் சிறுகதையாய்
பெற்றதன் பேறு கண்டு
பெருமையாய் கொண்டேன் நெஞ்சில்.
அற்புதமாய் படைத்து வென்ற
**அகளங்கன்** கதைத் துவத்தை
பொற்புடை கொண்ட வாழ்த்தால்
புகழ்வதில் எனக் (கு) இன்பம்!

03. ஜின்னாவின் காப்பி யத்தை
ஜீரணித்த நும் புலமை
கண்டடியேன் நின்ற போது
கண் விழித்து எந்தனுள்ளம்
எண்ணியே இன்று வேளை
இருப்பதனை காணும் போது
உன்னிய உன் தமிழோ
ஒலித்ததிலே உச்சி கண்டேன்!

4. அன்னையெனுந் தமிழ்த் தாய்க்கு
அணிசெய்த நும் பாக்கள்
தென்னை தரும் பாளையது
திருத்தலத்தில் சிரிப்பது போல்
மண்ணில் அவை நின்று
மன்னிறைவைப் பெறு தற்கு
உன்னால் விழிக்கும் கண்கள்
உலகைப் பார்த்து நிற்கும்!

5. சாதிக்கு அப்பால் நின்று
சந்திக்கும் எம் பணிகள்
மோதிக் கொள் அறியாமை
முகமூடி கிழித் தெறிய
வாதிக்கும் வக்கீல் களாய்
வழக்குகளை வென்று வைத்து
ஓதிக் கண் விழிக்கும்
உறவுக்குள் நாமிருப் போம் !

வாழ்த்தி வழங்கும்
**பதியத்தளாவ பாறூக்**
10.01.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## முழுநேரத் தமிழனிவர்

**திருமதி.பூரணேஸ்வரி அகளங்கன்**

**குழலும் யாழும் குறுகி நிற்கும்**

1. எத்திசையும் புகழ் மணக்க
முத்தமிழும் ஏவல்செய்யும்.
ஒத்திசையும் ஒண் தமிழும்
உவகையுடன் தலையசைக்கும்.
புத்திசையும் மென் தமிழும்
தகமையுடன் ஒத்திசைக்கும்.
முத்திசையும் முத் தமிழும்
முகமனுடன் சேவிக்கும்.

2. தந்தை வழிக் கலைகள்
தங்கும் இவருள்ளம்.
தந்த தமிழ்க் கவிகள்
பொங்கும் புதுவெள்ளம்.
விந்தை பல புரிந்து
சிந்தைதனை நிறைக்கும்.
முந்தை வினை அகற்றி
முத்திதனை அளிக்கும்.

3. குழந்தை உளங் கொண்ட
முதுபெருங் கவிஞரிவர்.
உளத்தை நெகிழ வைக்கும்
உயர்வான கவிதருவார்.
மழலைக் கவிதை அவை
மனதை நிறைத்திருக்கும்.
**குழலொடு யாழி சையும்**
**கூனிக் குறுகிநிற்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பழந் தமிழ் இலக்கியத்தை
பாங்குடனே கற்றமகர்
உளந் தன்னில் உயர்வான
உத்தம மானமகர்
வளந் தந்த தமிழ்த்தாய்க்கு
வாஞ்சை யானமகர்
களங்க மற்ற வாழ்க்கையின்
முழுநேரத் தமிழனிவர்.

**திருமதி.அகளங்கன்.**

# சோக்கான கவி தருவாய்!.

அட்சய பாத்திரத்தில்
முதல் அன்னமிட்ட **ஆதிரை**யே!
நிச்சயமாய்த் தமிழமுதை
நீ உண்டு மகிழ்வாயே!
கச்சிதமாய்க் கலையதனை
கற்று நீ உயர்வாயே!

அப்பப்பா தமிழ்க் கடல்
எப்பம்மா நீ அங்கு
தப்பில்லா முத் தெடுத்து
ஒப்பில்லாக் கவி தருவாய்!

எங்கள் குலம் விளங்க
வந்த குலவிளக்கே!
திங்கள் முகத் தவளே
செந்தமிழின் பேத்தியே!
உங்கள் வரவு கண்டு
உள்ளம் மலர்ந்ததம்மா!
சொந்தத் தமிழி னிலே
சோக்கான கவிதருவாய்!

(மகன் வழிப் பேத்தி **ஆதிரா** பிறந்த மகிழ்ச்சியில் பாட்டி
**திருமதி.பூரணேஸ்வரி அகளங்கள்**)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## இன்னுமொரு பாரதியாய்

**கலைச்சுடர்.தர்மலிங்கம் பிரதாபன்**

**இ**ன்னுமொரு பாரதியாய்
ஈழத்திலே வந்துதித்தீர்!
அநீதிகளைச் சுட்டெரிக்க
**அகளங்கனாய்** அவதரித்தீர்!

தமிழ் அன்னை பெற்றெடுத்த,
தமிழ்க் கவி நீரென்போம்!
தரணி எங்கும் புகழ் பரப்பும்
**தமிழ்மணி** நீரென்போம்!

வன்னியின் புகழதனை
வானுயர வைத்தவரே!
எண்ணி நாம் வியக்கின்றோம்
மண்ணின் கலை மகனே!

கள்ளம் கபடம் இலா,
வெள்ளை உள்ளம் கொண்டவரே!
**பம்பைமடு** பதிதனிலே
பண்பாக வளர்ந்தவரே!

முத்தமிழ் அன்னைக்கு
முடிசூட்டிய மன்னவனே!
எத்துயர் வந்தாலும்
எதிர்த்தேதான் வென்றவரே!

இலக்கியத்தில் நீரேதான்,
**இயாம்பவான்** என்பார்கள்!
இதிகாசத்திலும் ஈழத்தில்,
இணையில்லை என்பார்கள்!

**வன்னியின் வளமெல்லாம்,**
**அணிதிரண்டு வந்தாலும்!**
**தங்களின் தமிழுக்கு,**
**தலைவணங்கி நின்றிடுமே!**

அழகழகாய் தமிழ் செய்தே,
அளவில்லா கவி செய்வீர்!
வன்னியின் வனப்பெல்லாம்,
இம்மியும் வழுவாதே!

நூறாண்டு கடந்தாலும்,
நீறாதே உம் நாமம்.
என்றென்றும் வாழியவே!
நீடூழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# எங்கள் துரோணாச்சாரியார் இனிய தமிழ் அகளங்கன்

**கலைஇலக்கியச்சுடர் மாணிக்கம் ஜெகன்**

**வ**ன்னி தந்த தமிழே!
எங்களுக்கு நல்ல **தமிழ் அதரே**!
சொல்லுக்கும் செயலுக்கும் பொருந்தும்
சுகமான கலை இலக்கியத் தென்றலே!

பம்பைமடு செய்த தவத்தால்
பாரிலே இவர் செய்த தமிழால்
உலகில் இவர் போல் இல்லை
என்ற சொல்லே வன்னிக்கு பெருமை

**நல்லை நாவலர் தொடக்கம்**
**வைதிஸ் கொலை வெறி வரைக்கும்**
இவர் சொன்னால் மேலும் தெரியும்.
இவர் பேச்சை ஒருமுறை கேட்டு பாரும்.

யாரையும் நோகவிட மாட்டார்.
தூற்றுபவரை நேசிக்க செய்வார்.
தமிழ்ப் பிழையை சகிக்க மாட்டார் - அதை
திருத்தும் வரை திருப்தி கொள்ளார்.

**டிசம்பர் நான்கு நினைத்திருக்காது**
**தமிழ் நாவில் வசம்பு தடவ....**
**வந்துள்ளார் அகளங்கன் என்று**
பத்தோடு ஒன்று பதினொன்று இல்லாமல்
முத்தாக பிறந்தவர். தமிழ்ப் பித்தனாய் இருப்பவர்
தமிழ்ச் சொத்தை காப்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கங்களை தொட்டு - தமிழ்
இலக்கியம் படைத்த சுடர்,
முழக்கங்கள் ஏதுமின்றி
விளங்கிடும் ஈழத்தின் தமிழ்க் குரல்

தான்தோன்றி இறைவனைப்போல
இவர் தானாக இலக்கியம் சுவைத்து
தேன் ஊற்றி சுவைபடத் தருவார்
இன்பத் தமிழால் எங்களை வளர்ப்பார்.

யார் செய்த தவமோ பயனோ
இவரோடு நாமிருக்கின்றோம்
தமிழனாய் இருக்க நினைத்தால்
இவரோடு இருந்தால் போதும்

கந்தபுராணப் படிப்பு தொடக்கம்
கம்பராமாயணம் வரைக்கும்
எந்த விடயமும் கேட்கலாம்
இவர் வீட்டுக்கு போனால் கதைக்கலாம்.

ஓய்வுக்கு முன்பே ஓய்வு.
சூட்டோடு நல்ல தமிழ் ஆய்வு.
பாருக்கு நல்ல தமிழை
பருக தருவார் இனி நாளை.

ஐயாவுடன் அடியேனுக்குள்ள நெருக்கம்
என் உயிர் அடங்கும் வரை இருக்கும்.
தமிழ் ஆற்றை கடக்கும் வரை - இவர்
அன்பு எம்மை வழி நடத்தும்.

வன்னி சிரந்தாழ்த்தி வணங்கும்
தமிழ்மணிக்கு சிகரம் சூட்டுவோம்
மணி விழா காணும் நல்ல மனிதனை
வாழ்த்த வவுனியாவில் கூடுவோம்

என்றுமே நான் உங்கள் ஏகலைவன்
நீங்கள் கட்டை விரல் கேட்காத
துரோணாச்சாரியார்
இந்த உறவு நிலைக்க வேண்டும்
இதை இறைவன் தரவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் அறிவிற்கும்
தமிழா உன் தமிழுக்கும்
மெய்யாலுமே நாம் அடிமை.
இது மிகைப்படாத தமிழ் வார்த்தை.

வாழிய ஐயா வாழி!
வையகம் போற்ற வாழி!
ஆழியில் விளைந்த முத்தே
அகிலம் அனைத்திலும் வாழி!

சூடிய தமிழே வாழி!
சுந்தரத் தமிழே வாழி!
பாடிய புலவர்கள் சார்பில்
வாழ்த்துகின்றேன் வாழி வாழி!

பட்டாணிச்சூர் இளைஞர் கழகம் - *1993.9.5*

இலக்கியக் கட்டுரை, சிறுகதை, கவிதை, நாடகம், காவியம், நூல் விமர்சனம், ஆய்வு நூல் என்று இலக்கியத்துறையிலே பல சாதனைகள் நிலைநாட்டி சொந்த மண்ணின் பெருமையை தமிழ் உலகிற்கு பறைசாற்றி அரச மட்டத்தில் **தமிழ்மணி** பட்டம் பெற்று முத்தமிழுக்கும் பிறந்த மண்ணின் தமிழ் பேசும் மக்களுக்கும் பெருமை கொண்டு வந்து சேர்த்த தங்களை எமது **பட்டாணிச்சூர்** இளைஞர்கள் கழகம் முஸ்லீம் அமைப்புக்கள் வவுனியா வாழ் முஸ்லீம்கள் சார்பில் பாராட்டுக்களையும் தங்களின் தமிழ்த் தொண்டு வளர நல்வாழ்த்துக்களையும் அள்ளி வழங்குவதில் பெருமை கொள்கின்றோம்

**தலைவர் M.S.றம்சீன்**
**செயலாளர் வவுனியூர் றஜப்தீன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

## தமிழ்த் தாயை அலங்கரிக்கும் தமிழ்மணி ஐயா

- செல்வி.நந்தா -

மணிவிழா நாயகரே!
நனிசிறந்த பாவலரே!
கலைமகள் ஏவலரே! - பல்
கலை ஆர்வலரே!
வானின் பரிதியாய்
வன்னித்தாய் கரு உதித்த
கற்பக விருட்சமே!
மறுவிலா வானம் போல - தமிழ்
மண்ணைக் குளிர்விக்கும்
இலக்கியச் செம்மலே!

தமிழன்னை மகிழும் வகை
பாட்டெழுதி
காற்றுக்கும் நிலவிற்கும் - தூதுவிட்டீர்.
தமிழ் நெஞ்சிற்குள்
தேனை ஊற்றிவிட்டீர்.
சிம்மக்குரல் கேட்டு
சிகரங்கள்
சிரம் தாழ்த்த
சிந்தைக்கு - விருந்து
வகை வகையாய் படைக்கின்றீர்.

நித்தியத்தின்
சத்தியமாய்
நேர்கொண்ட பார்வையராய்
நெறிபிறழா வாழ்வு கொண்டீர்.
காந்தியைப்போல் எளிமை கொண்டீர்.
முப்பொழுதும் தமிழ்க்கடலில்
மூழ்கி முத்தெடுத்து
பவித்திரமாய்
தமிழ்த்தாயை
அலங்கரித்து
அகமகிழும் - ஐயனே!
காற்றைப்போல்
கடலைப்போல்
தம்பேச்சு தம்மூச்சு.
நீடுழி நீடுழி
நீடுழி வாழ்கவே!

மண்ணில் மகுடமாய்
அன்பின் இலக்கணமாய்
பண்பின் விளைநிலமாய் - வாழும்
ஐயனும் அன்னையும்
நீடுழி நீடுழி
நீடுழி வாழ்கவே!

நிலமகள் பூச்சொரிய
தம்கரங்கொண்டு
கீழ்வானம் கவியெழுத
கலைமகள் மலிந்திங்கு - எங்கள்
கவலை தீர்த்திடவே
இலக்கியக்காதலுடன்
என்றென்றும் வாழியவே!

வவுனியா கலை இலக்கிய
நண்பர்கள் வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## பம்பைமடு தந்த பசும் பொன்

**கவிஞர்.வை.கஜேந்திரன்**

### படைப்புலகின் கடல்

**நா**கலிங்கம் நல்லம்மாவின்
நவரசமே!
நல்மனையாள் பூரணேஸ்வரியின்
நாயகனே!
நறுமண தமிழ் நாவலனே!
நா.தர்மராஜா எனும்
அகளங்கனே....

**பம்பைமடு தந்த**
**பசும்பொன்னே!**
பார்போற்றும் தமிழ்க்கண்ணே
பாவலனாம் அகளங்கனே.....

பத்தாறு வயதினிலும்
பயின்றாறு தமிழ் வயலில்
பக்குவமாய் களை பிடுங்கி
பண்டைத்தமிழ் உருவம்; பெற
பசளையாக தன்னை

பார்த்து பார்த்து
பகிர்ந்து பகிர்ந்து - தமிழ்
பரவசத்தில் வியந்துவியந்து
படைத்த தமிழமுது
நாற்பதற்கு மேலே

பத்திரிகை வானொலி
பலமேடை தொலைக்காட்சி
பட்டங்கள் பல பெற்று
பவனிவரும் பாவலனே!
பருவத் தமிழ்க்காவலனே!

படைப்புலகின் - கடல்
பைந்தமிழ் செந்தமிழில்
பல பரிமாணங்கள் கண்ட
பாவேந்தன் அகளங்கனே.....

ஆய்ந்து ஆய்ந்து
அகவை அறுபதிலும்
தமிழில் தோய்ந்து, - தமிழ்த்
தேன் சமுத்திரத்தில்
பாய்ந்து

மெய் துலங்க ஆய்வை
வாய் மலர்ந்து சொற்பொழிவை
வருமானம் மறந்து, பலநூல்களை
வாரிவழங்கும் வள்ளலே .....

தமிழ்த்தாயின் தவப்புதல்வன்
தமிழ்மணி அகளங்கனே!

மணிவிழா மன்னவனை வாழ்த்திடும்
**சின்னவன் கவிஞன் வை.கஜேந்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## அறுபது காணும் அறிவொளி தமிழ்மணி அகளங்கனுக்கு அறுபத்தேழு கண்ட அன்ரன் எனும் பரந்தாமனின் அன்பு வாழ்த்து

**தமிழினியன் ப.எ.அன்ரன்**

### தமிழே பொன்னாடையானதே

**நா**ன் அறிந்த
நா. என்ற முன்னெழுத்தால்
நாமகளின் மகனாகி
அவன் நாவினில் நற்றமிழ் பிறந்த தோ.
நா.தர்மராசா என
பெற்றோர் அழைக்க
இவ்வன்னி மண்ணின்
மைந்தன் அவன் ....
பிறந்த மண்ணை அவன் யாசித்தவன்.
அல்ல,
பூசித்தவன் - நான்
இம் மண்ணை நேசித்த போது
எழுபத்தொன்பதுகளில்
தமிழ் தழைக்க, வவுனியா
கலை இலக்கிய வட்டம்
எனும் கலை விருட்சம் நட்டவன்.
இவன் கலை நிழலில் நாம் கவியானோம்.
அவன் கவிதைகளாய்
கதைகளாய், காவியமாய்,
காலம் போற்றும் ஆய்வுகளாய்,
ஆன்மீகமாய் ஆகி
இங்கும் எங்கும் பொங்கும் தமிழால்
புகழ் சேர்த்தான் - நம்
இன்பத் தமிழுக்கு
கலை விருட்சத்தின்
தமிழ் மணியும் இவன்
தமிழ்க் கனியும் இவன்.

இக் கலைஞனுக்கு
நான் பொன்னாடை
போர்த்த மாட்டேன்.
இவனுக்கு தமிழே
பொன்னாடையானதே.

தமிழ் கூறும் நல்லுலகம் உன்னை
ஆராதிக்கும் !
நான் தமிழ் மலர்களால்
இச்சிறு கவி செய்து
உம் அகவை அறுபதில்
இனிதே வாழ்த்த வரமீந்த
இறைவனுக்கும் இனியதமிழுக்கும்
இன்னு மொரு பிறந்த நாளில்
வல்லோன் வரமீந்தால்
இனிதே வாழ்த்துவேன்
இனிய தமிழால் என்றும்
இறவாத் தமிழால்.

– தமிழினியன்

**ப.எ.அன்ரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## சொர்ண வயல் நாற்று

**திரு.சமரபாகு சீனா உதயகுமார்.**

நீங்கள் வியந்ததில்லை.
எதற்கும் பயந்ததில்லை.
நீங்கள் துவண்டதில்லை
எதற்கும் அதிர்ந்ததில்லை
நீங்கள்
முத்துத்தமிழ் கத்தும் கடல்
சொட்டும் தமிழ்கூடம்.
புத்தம் புது சித்தம்.
புகும் மொத்த தமிழ்சாதி - தமிழ்
யுத்தம் என நிற்பவர் முன்
சாந்தம் தரு நீதி - தமிழ்
கட்டளைகள் இட்டவர் முன்
கட்டறுத்த காற்று - தமிழ்
பித்தளைகள் போன்றவர் முன்
**சொர்ண வயல் நாற்று**

சாமரங்கள் வீசி வந்த - தமிழ்
பூமரத்தின் வாசம்
பாமரங்கள் சிந்தும் கனிமலர்கள்
தொட்டு வந்த தமிழ் சுவாசமா.
முந்திரிகள் மென்று வளர்
தந்திரிகள் முன்னே
மூச்சுமொழி மூச்சுதமிழ்
இவைதான் இரு கண்ணே.

சிந்துநதி சந்தஜதி
சிற்ப வளை வெப்ப மழை
நுட்பதமிழ் மின்னு நுதல்
ஒற்றை ஒளி கற்றை மொழி
சொட்டு சுவை துள்ளும் மலர்
கன்னல் மொழி காந்த சுதி.

வெட்ட வெளி நட்ட நிழல்
பச்சைத்தமிழ் பட்டு ரதம்
தமிழ் நெய்த கதை
தமிழ் பெய்த விதை

ஏற்பவரக்கு தோழமுகம்
ஏய்பவர்க்கு வேலமுகம்
பார்ப்பவர்க்கு வெற்றிநடை
தமிழ்
கற்பவர்க்கு வெற்றிக்கனி
தமிழ்
சிறப்புக்களுக்கெல்லாம்
சிறப்பாய் தமிழ்
பெருமைகளுக்கெல்லாம்
பெருமையாய் தமிழ்
கௌரவத்திற்கெல்லாம்
கௌரவமாய் தமிழே
பழந்தமிழ் சுவை
அணங்கே தமிழ் அணங்கே
தமிழ் அகிலமே போற்றும்
அகளங்கமே
வாழ்க நீங்கள்
வாழ்க உங்கள் புலமை
வளர்க தமிழ் வையகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# அகளங்கனின் அன்றில் பறவைகள்

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
(யாழ்.பல்கலைக்கழக
சிரேஷ்ட, ஆங்கிலமொழிக் கற்பித்தல் விரிவுரையாளரும்,
மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும்)
செயலாளர் – வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்.

**ப**ல்வேறு கலை இலக்கிய ஊடகங்களூடாக சமூகப்பணி ஆற்றிவரும் **கலாநிதி அகளங்கன்** தனது எழுத்துக்களூடாக சமகால பிரச்சினைகளை பதிவு செய்வது பாராட்டுக்குரியது. இலக்கிய மேடைப் பேச்சுகள், சமயச் சொற்பொழிவுகள், நூல் வெளியீட்டு தலைமையுரைகள், வெளியீட்டுரைகள், விமர்சன நயப்புரைகள், அதிதி உரைகள் என உரைகள் ஊடாகவும், சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், நாவல் என இலக்கிய உலகின் பல்வேறு வடிவங்கள் ஊடாகவும் பிரமிக்கத்தக்கமுறையில் தனித்துவமான கலை இலக்கியப்பணி ஆற்றிவரும் கலாநிதி அகளங்கன் வன்னி மண்ணின் அடையாளமாகவும், அரும்பெரும் இலக்கிய சொத்து ஆகவும் மிளிர்கின்றார் என்றால் மிகையாகாது.

வன்னியூர்க் கவிராயர், கௌரவ இலக்கிய கலாநிதி முல்லைமணி ஆகியோரின் வரிசையில் வன்னி மண்ணின் முதல்தரக் கலைஞன் ஆக, எழுத்தாளனாக, மண்ணின் பிரச்சினைகளை மக்களின் பாடுகளை எடுத்தியம்பும் இலக்கிய கர்த்தாவாக விமர்சகர்களால் கருதப்படும் கலாநிதி அகளங்கன் ஒரு நாடளாவிய எழுத்தாளனாக, தமிழ் மக்களின் **சர்வதேச இலக்கியப் படைப்பாளியாக** பெரிதும் போற்றப்படுகிறார்.

பல்வேறு படைப்புகளை வெளியிட்டுவரும் நமது எழுத்தாளரின் இலக்கியக் கட்டுரைத் தொகுப்புகளான வாலி, இலக்கியச் சிமிழ், இலக்கியத்தேறல், இலக்கியச்சரம், கம்பனில் நான் போன்றவை பல விமர்சகர்களாலும் விதந்துரைக்கப்படுபவை. அத்தோடு ஒரு கவிஞராக சிறப்புப் பெறும் 'அகளங்கன் கவிதைகள்' நூல் இன்னுமொரு பதிவு என்றால் ஒரு நாவல் ஆசிரியனாக அவரை அடையாளப்படுத்துவது 'அலைக்குமிழ்' நூலாகும். சிறுகதை ஆசிரியராக பல்வேறு சிறுகதைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. ஒரு தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாகவும் வெளிவரவுள்ளது. இவற்றைவிட சிறுவர் இலக்கியப் படைப்புக்களாக வெளிவந்தவை பல பரிசுகள் பெற்றுள்ளன. பழந்தமிழ் இலக்கியப் படைப்பு என (ஆத்தி சூடி, கொன்றைவேந்தன்,) நவீன தமிழ் நடையுடன் கூடிய விளக்கங்களுடன் பதிப்புச் செய்து வெளியிட்டமை அவரது இன்னுமொரு பங்களிப்பாகும்.

இவை எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைவது அவரது நாடக எழுத்துப் படைப்புகளாகும். **"இலக்கிய நாடகங்கள்" "அன்றில் பறவைகள்" "கங்கையின் மைந்தன்"** எனும் தொகுப்புகளுடன் **'பத்தினித் தெய்வம்'** எனும் நாட்டிய நாடகங்கள் தொகுப்பும் பல பரிசுகளை வென்றுள்ளமை கணிப்புக்குரியது. இக்கட்டுரையில் பேசப்படும் நூலாகிய அகளங்கனின் **'அன்றில் பறவைகள்'** தொகுப்பு வானொலி நாடக வகையைச் சேர்ந்தது. "வானொலியில் ஒலிபரப்பாகிய எனது ஐந்து நாடக நறுமலர்களால் தொடுக்கப்பட்ட கதம்பமாலை இது" என கூறும் எழுத்தாளர் நாடகங்கள் எழுதப்பட்ட காலங்களை 1989 முதல் 1991 வரை என வரையறுக்கின்றார்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் இலங்கை சுதந்திரமடைந்த 1948க்கு பிற்பாடு அவர்களது அரசியல் சமூக பண்பாட்டு வாழ்வு பல்வேறு சிக்கல்களுக்குள் ஆட்பட்டிருந்தது. அதுவும் குறிப்பாக தனிச்சிங்களசட்டம் உருவாக்கப்பட்ட 1957 ற்கு பிற்பாடு தமிழர் அரசியல் போராட்டம் வேகம் கொள்ளவும் தமிழர் சமூக வாழ்வும் பண்பாட்டுப் போக்கும் மாற்றங்களைக் கண்டு கொண்டு வந்திருக்கின்றன. இவற்றின் உச்சக்கட்டம் 1983 இற்குப் பின்னான காலகட்டமாகும். எழுத்தாளர்களுக்கு படைப்புந்தலைக் கொடுக்கக்கூடிய சமூக ஓட்டங்கள் மாற்றங்களைக் கண்ட காலம்.

1977 இல் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக அரபு நாடுகளுக்கு தொழில் தேடிப் புறப்பட்ட நமது தமிழ்ச் சமூகம் 1983இல் ஏற்பட்ட தமிழர் மீதான இன ஒடுக்குமுறைக் கலவரம் காரணமாக அகதி அந்தஸ்து தேடி பல்வேறு ஐரோப்பிய அமெரிக்க, அவுஸ்ரேலியாக் கண்ட நாடுகளை நோக்கி புறப்படத் தொடங்கியது. இதன் வேகம் 1984ல் தொடங்கிய ஈழப் போராட்டம் காரணமாக அதிகரித்தது. இதனால் ஒருபகுதி சமூகம் நிதி நெருக்கடிகளிலிருந்து மீள வழிவகுத்தபோதும் சமூக உளச் சிக்கல்கள், உறவு நெருக்கடிகள், பண்பாட்டு மாற்றங்கள் என்பன தவிர்க்கமுடியாத பிரச்சினைகள் ஆகின. அகளங்கனின் எழுத்துக்கள் இப்பிரச்சினைகளை அரசியல் சாராது சமூகப்பார்வையூடாக பண்பாட்டு களத்தில் இருந்து பதிவு செய்கின்றன.

இந்நூலில் காணப்படும் ஐந்து நாடகங்களிலும் மூன்று நாடகங்கள் வெளிநாட்டுக்கு செல்லும் எம்மவர் வாழ்வுடன் சம்பந்தப்படுகிறது. முதலாவது நாடகமான "அம்மா நான் வெளிநாடு போறேன்" தலைப்பு நாடகமாகவே போட்டிருக்கக்கூடியது. வெளிப்படையாகவே வெளிநாட்டுக்கு இளைஞர்கள் சென்று உழைத்து தம் உறவுகளுக்கு பணம் அனுப்புவதால் சகோதரிகளுக்கான சீதனம் வழங்கி மண உறவுகளை ஏற்படுத்த வசதிப்படுகிறது. அதேவேளை ஆண்சகோதரர்கள் தமது காதல் வாழ்வு, கல்வி தொடர்தல் போன்ற அபிலாஷைகளைக் கைவிட்டு வெளிநாட்டில் உழைக்கச் செல்வதும் எழுத்தாளரினால் கலைத்துவமாகவே பதிவு பெறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அன்றில் பறவைகள்'** நாடகம் ஒரு படி மேலே சென்று எம்மவர்களின் வெளிநாட்டு மோகத்தையே பதிவு செய்கிறது. பிள்ளைகள் எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக வெளிநாடு சென்றுவிட உதவி ஒத்தாசை இன்றிப் பெற்றோரும் ஆளுக்கொரு நாடாக செல்ல வேண்டி வருவதும் பாடுபட்டு கட்டிய வீட்டை கைவிட்டு செல்ல வேண்டி வருவதும், இப்பிரிவுகளினால் ஏற்படக்கூடிய சோகம், கருத்தொருமித்து வாழ்ந்த அன்றில் பறவைகளாக இறுதிவரை வாழ விரும்பிய பெற்றோர் வெளிநாடு செல்லத் தயாராகிய நிலையில் இயற்கை மரணம் எய்தி சொந்த வீட்டிலேயே சொந்த நாட்டிலேயே இறுதி நிகழ்வுகளைச் சந்திப்பதும் நாடகத்தின் உச்சக்கட்ட பதிவு எனலாம். (சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் குழந்தை சண்முகலிங்கம் எழுதிய 'எந்தையும் தாயும்' நாடகம் பதினொரு பிள்ளைகளைப் பெற்று படிப்பித்து ஆளாக்கிப் பல தேசங்களுக்கும் அனுப்பிவிட்டுத் தவித்து தனியே இறந்துபோன ஓய்வுபெற்ற ஒருவரின் கதையைக் கூறி நின்றமை ஒப்பீட்டுக்கு உதவக்கூடியது).

மூன்றாவது நாடகம் 'அவர்கள் படித்தவர்கள்' காதல் மணம் புரிய முற்படும் படித்த உத்தியோகம் பார்க்கும் காதல் ஜோடி சீதனம் என்ற பிரச்சினையில் தத்தளிக்கிறது. மூன்றாவது பெண்ணின் காதல் வெற்றிக்கு தேவைப்படும் 25,000/- ரூபாவைப் புரட்ட விதவைத் தாயினால் முடியவில்லை. மூத்த பெண் வசதியாக வாழ்ந்த போதும் உதவ மனமில்லை; தனது சிறிய இரு பெண்களுக்கும் பின்பு கலியாணத்துக்கு தேவை என்று தனது சீதனப் பணத்தை வங்கியிலே இட்டு வைத்தபடி தாய்க்கு கைவிரிக்கிறாள். காதலனின் பக்கமோ எதற்கும் அசைந்து கொடுப்பதாக இல்லை. இக்கட்டத்தில் இரண்டாவது பெண் காதலித்து கரம் பிடித்த தோட்டம் செய்யும் மைத்துனர் உதவ முன்வருகிறார். சீதனம் ஏதும் பெறாத இம் மைத்துனர் செய்த உதவியை மதிக்காது செல்கிறார் மணப்பெண். தனது காதல் கணவனை மணம் செய்த மூன்றாவது பெண் இந்நாடகத்தின் நாயகி மைத்துனன் வழங்கிய காசில் தாம் புதிதாக வாங்கிய மோட்டார் சயிக்கிளில் தனக்கு சீதனப்பணம் தந்துதவிய மைத்துனரை ஏற்றி செல்வதில் காட்டும் தயக்கம் **'அவர்கள் படித்தவர்கள்'** எனும் மனோபாவத்தை வெளிப்படுத்துகிறது. நுணுக்கமாக குடும்ப உறவுகளின் மனோபாவத்தை தோலுரிக்கும் எழுத்தாளர் தாக்கமான பிரதி ஒன்றை ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு வழங்கியுள்ளார்.

நான்காவது நாடகம் **"இயந்திர இல்லறம்"** ஒரு ஆசிரியத் தம்பதிகளின் அன்பும் அறமும் அற்ற இல்வாழ்வு, ஒரு சாதாரண கடை நடத்தும் இன்னுமொரு இனிமை இல்லறம் கொண்டாடும் குடும்பத்துடன் ஒப்பீடு செய்யப்படுகிறது. படித்த ஆசிரிய மனைவி பெண் - ஆண் சமத்துவம் பேணி கணவனை உதாசீனம் செய்வதும் படித்த பட்டதாரியான ஆசிரியர் பொறுப்பற்று குடித்துவிட்டு வீட்டுப் பொறுப்புகளை தட்டிக் கழிப்பதும், இந்தக் குடும்பத்தின் அவலச்சூழல் மற்றைய குடும்பத்தினுள்ளும் ஊடுருவும் என்று ஆசிரியர் எச்சரிக்கை பண்ணுவதுமாக நாடகம் நகர்கிறது.

தொகுப்பில் இடம்பெறும் கடைசி நாடகம் **'உருகி எரியும் கர்ப்பூரங்கள்'** தலைப்பில் உள்ள கருத்து ஆசிரிய உலகின் தியாக உணர்வை சுட்டி நிற்கிறது. இரண்டு கதைச்சூழ்வுகள் நாடகத்தை நகர்த்திச் செல்கிறது. காதலித்து மணம்புரிய முயலும் இரு ஆசிரியர்கள்; ஆசிரியத் தொழிலை விட்டு வெளிநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக விரும்பும் காதலன், தேவைப்படும் பணத்தை சீதனமாகப் பெறமுயல்கிறார். ஆசிரியத் தொழிலில் வெறுப்புற்று வெளிநாடு செல்லத் துடிக்கிறார். அவர் கேட்கும் சீதனத்தை கொடுக்க வழியறியாது தவிக்கும் காதலியான ஆசிரியையும், சிறப்பான பணி செய்து பல ஆளுமைகளை உருவாக்கிய ஓய்வுபெற்ற ஆசிரியரான தந்தையும் தாக்கமாக சித்திரிக்கப்படுகிறார்கள். இக்கட்டத்தில் ஊருக்கு புதிதாக வரும் பழைய மாணவனான உதவி அரச அதிபர் தனது சகபாடிகளான பழைய மாணவர்களான மருத்துவ அதிகாரி, வங்கி அதிகாரி ஆகியோர்களுடன் கூடி தம் ஆசிரியருக்கு மணிவிழா எடுக்க விழைகிறார். ஓய்வு பெற்ற தம் அதிபர் பெறத்தயங்கும் பணப்பரிசை பொற்கிழியாக வழங்க முனைகின்றனர். அதன் மூலம் ஆசிரியரின் மகளின் சீதனப் பிரச்சினையை தீர்க்க மறைமுகமாக முயல்கின்றனர். விழாவன்று ஊரின் பிரமுகர்கள் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கி பாராட்டி பேசும் காட்சிகளைக் காணும் மருமகனாக வரவிரும்பும், ஆசிரிய காதலன் தனது வெளிநாட்டு மோகத்தை கைவிட்டு தம் காதலியை மணந்து தம் ஊருக்கு ஆசிரியப் பணிபுரிவதே இலட்சியம் என்று உறுதி பூணுகிறார்.

இவ்வாறு எழுத்தாளர் அகளங்கனால் பேச்சுமொழியில் எழுதப்பட்ட (பெரும்பாலும் யாழ்ப்பாண, வன்னித் தமிழ் சார்ந்த தராதரத் தமிழ் நடையில்) வானொலி நாடகங்கள் ஐந்தினூடாகவும் தான் வாழ்ந்த சமகால மனித வாழ்வு மாற்றங்களை பதிவு செய்கின்றார். அரசியல் சூழல் நாடகங்களில் காட்டப்படாமை ஒரு முழுமையற்ற தன்மையை வழங்குகிறது. எனினும் அரச வானொலி ஊடகத்தில் ஒலிபரப்பாகிய நாடகங்களில் அதனை எதிர்பார்க்கவும் முடியாது என்பது கசப்பான உண்மையே. எனினும் **வெளிநாட்டு மோகம், அதற்கான சமூகச்சூழல், காதல் வாழ்வு, கஷ்டப்பட்டு கட்டிய வீட்டை விட்டுச் செல்லும் அவலம், உறவுகள் உதவ விரும்பும் மனோநிலை, உதவாது தப்ப விரும்பும் சூழ்நிலை, கல்வி தராத பண்பாட்டு வாழ்வு** எனப் பல கருப்பொருட்களுடன் நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஒரு சிறந்த சமூக நாடக எழுத்தாளர் ஆக பரிணமிக்கும் கலாநிதி அகளங்கனை மணிவிழாக் காலத்தில் நாமும் பாராட்டுவோமாக. தொடர்ந்தும் பல படைப்புகளை சமூக அரசியல் யதார்த்த பிரதிபலிப்புகளுடன் சமூகத்துக்கு வழங்க வேண்டும் என வாழ்த்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கலாநிதி அகளங்கனின் பங்களிப்பு

**கலாநிதி.திருமதி.ரூபி வலன்ரினா பிரான்சிஸ்**
தலைவர் மொழித்துறை. கிழக்குப் பல்கலைக் கழகம்

**க**டந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கலை இலக்கியப் பணிபுரிந்துவரும் கலாநிதி அகளங்கன் அவர்கள் **கட்டுரை, கவிதை, நாடகம், ஆய்வு, சிறுவர் இலக்கியம்** எனப் பல்வேறு துறைகளிலும் தடம் பதித்தவர். இரசனை முறையில் அமைந்ததும் எளிமையானவடிவம் கொண்டவையுமான இவரது ஆக்கங்கள் பலராலும் விரும்பிப் படிக்கப்படுபவை. அதன் மூலம் ஜனரஞ்சகசெல்வாக்கு இவற்றிற்குண்டு.

இவரது ஆக்கங்களுள் ஒன்றாக அமையும் சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் பற்றிநோக்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும். அதன் மூலம் அவரது ஆளுமையின் ஒரு பகுதியினை வெளிப்படுத்த முடியும்.

சிறுவர் இலக்கியம் என்னும் பகுப்பில் அமைவனவாக இவரது மூன்றுநூல்களைக் குறிப்பிடலாம்.

1. **சுட்டிக் குருவிகள் (2003)**
2. **சின்னச் சிட்டுக்கள் (2005)**
3. **சின்னஞ் சிறியசிறகுகள் (2012)**

**சுட்டிக் குருவிகள்** என்னும் சிறுவர் பாடல் தொகுப்பு மழலைப் பருவத்தினருக்காக குறிப்பாக மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்காக அவர்கள் பாடவும், அபிநயம் பிடித்து ஆடவுமாக எழுதப்பட்டது என முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பருவத்தினர்க்கு எழுத வாசிக்கத் தெரியாதாகையால் இப் பாடல்களை அவர்கள் பாடுவதற்கு பெற்றோர் அல்லது பெரியோர்கள் உறுதுணைபுரிய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

கடவுள், அம்மா, அப்பா, பாட்டி, படிப்பு, படித்துவை, நாய்க்குட்டி, கோழிக்குஞ்சு, ஆட்டுக் குட்டி, பூனைக்குட்டி, பசுக்கன்று, கிளிக்குஞ்சு, மான், அணில், நிலா, ஓடுவோம், ரோஜா, மல்லிகை ஆகிய தலைப்புக்களில் நான்குவரிப் பாடல்களாக எளிமையானதும் இலகுவானதுமான நடையில் விடயங்கள் அமைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுமுறை, பறவைகள், மிருகங்கள் மற்றும் இயற்கைப் பொருட்கள் பற்றியனவாக இவை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொகுப்பின் முதலாவது பாடலாக அமையும் கடவுள் பற்றியபாடல், ஒருகுழந்தை தன் வாழ்வில் முதலில் உணரும் பெற்றோர் பற்றிய உணர்வுகளோடு அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளது.

**அம்மா அப்பா போலவே**
**அன்பு காட்டும் தெய்வமே**
**எம்மை இந்த உலகிலே**
**இனிது வாழச் செய்யுமே**
என அப் பாடல் அமைந்துள்ளது.

ஒவ்வொரு தலைப்புடனும் ஒட்டியதாக பொருத்தமானவகையில் படங்களும் இணைக்கப் பட்டிருக்கின்றமை சிறப்பம்சமாகும்.

இதன் சற்று விரிவான பகுதியாக **"சின்னச் சிட்டுக்கள்"** என்னும் தொகுப்பு அமைந்துள்ளது. இத் தொகுப்பும் சிறுவர்களால் விரும்பப்படும் பறவைகள், மிருகங்கள் மற்றும் இயற்கைப் பொருட்கள் பற்றியனவாக அமைந்துள்ளன. நான்குவயது தொடக்கம் பத்து வயது வரையிலான பிள்ளைகளுக்காக எழுதப்பட்டதாகக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவை சிறுவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாகவும், அவர்களுக்கு நல்வழி காட்டுவனவாகவும் அமைந்திருக்கின்றன. முன்னைய தொகுப்பைப் போலன்றி அவர்களைச் சிந்திக்கத் தூண்டுவனவாகவும், நன்மைதீமைகளைத் தரம் பிரித்து அறியக் கூடியனவாகவும், அறிவுவளர்ச்சிக்கு உதவுவனவாகவும் காணப்படுகின்றன.

சிலவற்றை இங்குஉதாரணத்திற்காகக் குறிப்பிடலாம்.

அன்னம் பற்றிய பாடலில்

**பாலும் நீரும்**
**கலந்து வைத்தால்**
**பாலைப் பிரிக்குமே - அது**
**பாலை மட்டும் பருகிவிட்டு**
**நீரை விலக்குமே**
**அன்னம் போல**
**நீயும் உலகில்**
**வாழுவாய் தம்பி - நல்ல**
**அறிவு தரும்**
**நூலை மட்டும்**
**பயிலுவாய் தம்பி**
எனவும்

மனனம் செய்ய இலகுவான நடையிலும், முறையிலும் பாடல்கள் பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. இவரது **சின்னஞ்சிறிய சிறகுகள்** என்னும் தொகுப்பு மிக அழகாக சிறுவர்களுக்கு மிக பிடித்தமான வகையில் அச்சிடப்பட்ட நூல். அந் நூலில் உயிர் எழுத்துக்களை வரிசைப்படுத்தி **அம்புலிமாமா** பற்றியபாடல் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்புலி மாமாவா! வா! வா!**
**ஆசை முத்தம் தா! தா! தா!**
**இங்கே ஓடி வா! வா! வா!** என அது தொடர்ந்து செல்கின்றது.

அது போலவே கண்ணன் என்னும் தலைப்பிலமைந்த பாடல் ககர வரிசைப்படி அமைந்துள்ளது.

**கண்ணன் எங்கள் கண்ணனாம்**
**கார்முகில் போல் வண்ணனாம்**
**கிருஷ்ணன் என்னும் பெயரிலே**
**கீதை சொன்ன கண்ணனாம்**

எண்களை இலகுவாக மனனம் செய்வதற்கு ஏற்றதாக எண்கள் பற்றிய பாடல் அமைந்துள்ளது.

**ஒன்று இரண்டு மூன்று**
**ஓடிக் காலை ஊன்று**

**நான்கு ஐந்து ஆறு**
**நல்ல பழச் சாறு**

**ஏழு எட்டு ஒன்பது**
**என்ன இனிச் சொல்வது**

**பத்து விரல் பொத்து**
**பவள மல்லிக் கொத்து**
என அப் பாடல் அமைந்துள்ளமையைக் காணலாம்.

இவற்றைவிட **கன்றுக் குட்டி, பாட்டி, பசு, குயில், சொந்தம், சிட்டுக் குருவிகள், பழகிப் பார், ஒட்டகச் சிவிங்கி, கோழி, முழு நிலா, வரிக் குதிரை, ஊஞ்சல், தூக்கணாங் குருவி, ஆமை - தவளை, எறும்பு** ஆகியன பற்றிய பாடல்களும் இத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

இத்தகைய சிறுவர் பாடல்கள் சிறுவர்க்கு அறிவுரை கூறும் வகையில் அமைந்ததுடன் சிறு வயதிலேயே நற்பழக்கங்களைக் கைக் கொள்ள வழி காட்டுவனவாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக சொந்தம் என்னும் தலைப்பில் அமைந்த பின்வரும் பாடலைக் கூறலாம்.

**நாய்க் குட்டிக்குச்**
**சோறு வைத்தேன்**
**வாலை ஆட்டுது**
**நண்பன் ஆக அருகில் வந்து**
**நக்கிக் கொஞ்சுது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிட்டுக் குருவிக்கு**
**அரிசி போட்டேன்**
**கிட்ட வந்தது**
**தொட்டுத் தூக்கி அணைத்துக் கொண்டேன்**
**நண்பன் ஆனது**

**பூனைக் குட்டிக்குப்**
**பால் கொடுத்தேன்**
**மியாவ் என்றது**
**புதிய ஒரு நண்பன் ஆகச்**
**சேர்ந்து கொண்டது**

**அன்பு காட்டி**
**அணைத்துக் கொண்டால்**
**யாரும் நண்பரே**
**அம்மா அப்பா மட்டும் அல்ல**
**அனைத்தும் சொந்தமே**

இப் பாடல் மூலம் உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப் படுவதுடன் தம் பெற்றோரை மட்டுமே உலகம் என்று நம்பியிருக்கும் குழந்தைகளுக்கு அதற்கும் அப்பாலான பரந்த உலகு எடுத்துக் காட்டப்படுவதையும் காணலாம்.

எனவே மேற்கூறப்பட்டுள்ள மூன்று சிறுவர் பாடல் தொகுப்புக்களின் மூலம் சிறுவர் இலக்கிய வரலாற்றிலும் அதன் வளர்ச்சியிலும் கலாநிதி அகளங்கன் அவர்கள் தம் காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளமையை அவதானிக்க முடியும்.

சிறுவர்களால் விரும்பப்படும் **விலங்குகள்**, மற்றும் **நிலா** முதலான இயற்கைப் பொருள்கள் பற்றியும் நெருங்கிய உறவுகளாக சிறு பருவத்தில் அவர்கள் அடையாளம் காணும் **அம்மா, அப்பா, பாட்டி** முதலானோர் பற்றியும் எளிமையானதும் இலகுவானதுமான நடையில் கூறுவதோடு பொருத்தம் நோக்கி அறிவுரைகளையும், நற் பழக்க வழக்கங்களையும் கூட ஆங்காங்கே வலியுறுத்திச் செல்வதையும் இவரது பாடல்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

# தமிழ் கூறு நல் உலகின் அழியாச் சொத்து

செம்மொழிச் செல்வி, அறநெறிச் செல்வி, தமிழ்த் திலகம், சிவநெறிப்பிரசாரகர்,
பண்டிதை செல்வி **யோகலட்சுமி சோமசுந்தரம்** B.A.Dip in Edu

***கலாநிதி தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் வன்னி மண்ணினது மட்டுமன்றி தமிழ் கூறு நல்லுலகினதும் அழியாச் சொத்து.*** *பல்துறை விற்பன்னர்.*

*கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுங்காவியம், வானொலி நாடகம், மேடை நாடகம், நாட்டிய நாடகம், இசைப் பாடல்கள். மழலைப் பாடல்கள், சிறுவர் ஆக்கங்கள், ஆய்வு நூல்கள், விளக்கவுரைகள் எனப்பல் துறைகளிலும் முத்திரை பதித்தவர்.*

*தேசிய சாகித்திய மண்டலப் பரிசு, தமிழியல் விருது, வடக்குகிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, இலங்கை இலக்கிய பேரவைப்பரிசு, கொழும்பு தமிழ்ச்சங்க பரிசு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு எனப்பல விருதுகளையும் தனதாக்கிக் கொண்டவர்.*

*வரலாற்றுத் தேடலும், இலக்கிய ஆர்வமும், எழுத்தாற்றலும், பேச்சாற்றலும், புராணபடனம் செய்யும் திறமையும் கை வந்தவர், கருவிலே திருவுடையவர்.*

*பாரம்பரியத்தின் முன்னோடி, செம்மொழியாம் நம் தமிழ்மொழியும் சைவமும் வளம்பெற இடைவிடாது உழைத்துக் கொண்டே இருப்பவர். பழமையில் இருந்து புதுமை வரை கால் பதித்தவர்.*

*கால மாற்றத்திற்கேற்ப மொழி நடையிலும் எளிமைத் தன்மையைக் கையாள்பவர். இவரது ஆக்கங்கள் எவரும் வாசித்துப் பொருள் புரியும் வகையில் அமைந்துள்ளமை இவரது எழுத்தாற்றலுக்குக் கிடைத்த பெரு வெற்றி எனலாம்.*

*தாவரங்கள், விலங்குகள். பறவைகள் முதலியவற்றை ஆராய்ந்து அவற்றிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை பற்றியும் தமது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தியமை இயற்கையை நுனித்து நோக்கும் இவரது ஆற்றலுக்கு தக்கதோர் எடுத்துகாட்டு.*

*இன்று வரை நாற்பத்து மூன்று நூல்கள் வரை எழுதி நிறைவு செய்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாள் சாதனையாளர் என்ற விருது பெறுவதற்கு தகுதி வாய்ந்தவராக உள்ளமை நமக்கெல்லாம் பெருமை தருவது. பிறந்தோம் வாழ்ந்தோம் என்று மடியாமல் என்ன சாதித்தோம் என்று கூறும் வகையில் செய்து முடித்த ஒரு சாதனையாளருக்கு மணிவிழா செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் செய்த ஆக்கங்களில் இன்று ஆய்வுக்கு உட்படுத்தப்படுவது.

1. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்
2. நாமறிந்த நாவலர்
3. பன்னிரு திருமுறை - அறிமுகம் என்பன

**முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் :**

நமது வரலாறு நம்மோடு அழிந்து விடாமல் வருங்காலத்தின் மூலம் எதிர்காலத்திற்கும் கடத்தப்பட வேண்டும் என்பது தமிழறிஞர் கருத்து. அந்த வகையில் பாரம்பரியத்தின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் வரலாறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே வவுனியா சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க 19.09.1992 இல் தமிழ் மணி அகளங்கன் அவர்கள் மாணவர்களும் படித்து பயன்பெறும் வகையில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பற்றிய தகவல்களை ஒழுங்குமுறைப்படுத்தி தகுந்த ஆதாரங்களுடன் ஒரு சிறிய நூலாக வெளிப்படுத்தி உள்ளார்.

கிழக்கிலங்கை தந்த நன்முத்தே சுவாமி விபுலானந்தர். நமது நாட்டில் பிறந்து கல்விக்கும், மொழிக்கும், சமயத்திற்கும்,இசைக்கும் தொண்டாற்றிய பெரியார். துறவு வாழ்க்கை மேற்கொண்ட உத்தம சீலர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மூலம் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும், சமுதாயத்தொண்டும் செய்தவர். கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆசிரமங்களை அமைத்துப் பணி புரிந்தவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதற்தமிழ்ப் பேராசிரியராக இருந்து பணியாற்றியவர். பண்டிதராகவும், விஞ்ஞான மாணியாகவும் பட்டம் பெற்றவர். ஆசிரியராகவும், பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணி ஆற்றியவர்.

யாழ் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளின் நிறுவுனர்.

யாழ் நூல் தந்த வித்தகர், மதங்க சூளாமணி என்ற நாடக இலக்கண அமைதி கூறும் நூலையும் எழுதியவர்.

கலைக்களஞ்சியம் - 1963 தமிழ் வளர்ச்சிக்கழகம் - சென்னை புலவர்மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் முகப்பு அட்டை சுவாமி விபுலானந்தரின் உருவப் படத்தை தாங்கி வெளி வந்துள்ளது. முதற்பக்கம் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை உறுப்பினர்களது பட்டியல், அடுத்து தலைவர் சி. நவரத்தினராசா அவர்கள் (வ/தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்) வழங்கிய செய்தி, "எங்கள் விருப்பம்" என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

அதில் கல்விக்கும், மொழிக்கும், சமயத்திற்கும், இசைக்கும் அன்னார் ஆற்றிய தொண்டினை அவர் பிறந்த நூற்றாண்டில் நினைவு கூருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அன்னாரது வரலாற்றினைத் தந்துதவிய ஆசிரியர் அகளங்கன் அவர்களுக்கு நன்றி கூறியுள்ளார்.

செயலாளர் திரு.ச.அருளானந்தம் அவர்கள் (கோட்டக் கல்விப் பணிப்பாளர்) "உங்களோடு மனந்திறந்து" என அன்னார் பற்றிய செய்திகளை சுருக்கமாகத் தந்துள்ளார்.

அடுத்து "சுவாமி விபுலானந்தர்" அவர்களது முழு உருவப்படம் பக்கம் 7-12 வரை "சுவாமி விபுலானந்தர்" அவர்கள் பற்றிய குறிப்புக்களை "தமிழ்மணி அகளங்கன்" அவர்கள் சுருக்கமாக வழங்கியுள்ளார்.

சுவாமி விபுலானந்தரது பெற்றோர் பெயர். கற்ற கல்வி, பெற்ற பட்டங்கள், வகித்தபதவிகள், எழுதிய ஆக்கங்கள், நிறுவிய பாடசாலைகள், ஆசிரமங்கள், அவற்றின் மூலம் செய்த தொண்டுகள் துறவு பூண்டு செய்த சமுகம் சார்ந்த பணிகள், அழியாப் புகழைப் பெற்றுக் கொடுத்த ஆக்கங்கள், கவிதைகள், உரைநடைகள் பற்றிய செய்திகளை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றின் மீது ஆசிரியர் கொண்டுள்ள அதீத அக்கறையும் ஆர்வமுமே இந்நூல். இந்நூலில் "சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்களிற் சில" அட்டவணை வடிவில் தரப்பட்டுள்ளது. இறுதிப் பக்கத்தில் மொழிப்பெயர்ப்புக் கவிதை ஒன்றும், ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்றும் இடம்பெற்றுள்ளன.

14 பக்கங்களைக் கொண்ட சிறிய நூல் ஆனால் வரலாற்றுத்தகவல்களை ஒழுங்குபடுத்தித் தரும் நூல் என்ற வகையில் சிறப்புக்குரியது. எல்லோரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள ஓர் அரியபொக்கிஷம்.

## நாமறிந்த நாவலர்

தமிழ்மணி அகளங்கன் அவர்களது ஆக்கங்களில், "நாமறிந்த நாவலர்" என்ற நூலும் சிறப்புக்கு உரியது. சமயத்தொண்டு, தமிழ்த்தொண்டு, சமூகத்தொண்டு மூலம் ஈழத்திலும் வெளியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வடக்கின் விடிவெள்ளியாக விளங்கியவரே நாவலர்.

வவுனியா இந்து மாமன்றத் தலைவர், சிவநெறிப் புரவலர்.சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க தமிழ்மணி அகளங்கன் அவர்களால் நாலரது குருபூசைத் தினமான 22.11.1997 இல் "நாமறிந்த நாவலர்" என்ற நூல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் தேவையறிந்து வவுனியா இந்து மாமன்றத் தலைவர் இறைபணிச் செம்மல் வை.சே.தேவராசா அவர்களினால் 15.01.2008 இல் இரண்டாவது பதிப்பும் செய்யப்பட்டு வெளிவந்தமை வரலாற்றுப் பதிவுகளை வெளிக்கொணர்வதில் ஆசிரியருக்குள்ள ஆளுமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. எமது பாரம்பரியங்களை, எமது வரலாற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

"மேன்மை கொள் சைநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மகுட வாசகத்துடன் நாவலரது உருவப்படத்தையும் தாங்கியதாக இந்நூலின் முன் மட்டை அமைந்துள்ளது.

பின்பக்க மட்டையில் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் எழுதிய "நாவலர் இசைப்பா" இடம் பெற்றுள்ளது. நாவலர் மீது அன்னார் கொண்ட பற்றே இதற்கு காரணம்.

இரண்டாம் பதிப்பில் இந்துமாமன்றச் செயலாளரும், சிவநெறிப் புரவலரும் ஆகிய சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் பதிப்புரையில் தமிழ் பேச்சு நடை- உரைநடை எளிமைத் தன்மை பெற்று விளங்குவதற்கு மூலகாரணம் நாவலரே என "வசன நடை கை வந்த வல்லாளர்" எனப்போற்றப்படும் நாவலரின் செயற்றிறனைத் தொட்டுக்காட்டியுள்ளார்.

1. இந்துசமய. இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம் - 1990ல் வெளியிட்ட இந்து கலைக் களஞ்சியம் - பகுதி 1
2. ஈழம் தந்த நாவலர் - சென்னை காந்தளகம்
3. இலக்கியவழி - பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் அவர்கள் "நாமறிந்த நாவலர்" என்ற நூலை எழுதியுள்ளார்.

வரலாறு மிகச் சுருக்கமாகவும் பார்த்த அளவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மிகத்தெளிவாகவும் அமைதல் வேண்டும்.

அந்த வகையில் பட்டியலிட்டும். பகுத்தும். வகுத்தும், தொகுத்தும் இந்நூலை அமைத்துள்ளமை பெரும் சிறப்புக்கு உரியது. அவர்பற்றிய பிறப்பு, கல்வி கற்ற பாடசாலை, வகித்த பதவிகளை ஒழுங்குபடுத்தி தந்ததுடன், அவரது சமய உணர்வையும். அதற்குக் காரணமான அக்காலச் சூழ்நிலை பற்றியும் மிக விளக்கமாக கூறியுள்ளார்.

"தமிழ், சைவப் பண்பாட்டோடு சிறிதளவும் சம்பந்தமில்லாத, ஒத்துப் போகாத, ஒத்துப்போக விரும்பாத, அந்நிய ஏகாதிபத்திய வாதிகளான ஐரோப்பிய ஆங்கிலக் கிறிஸ்தவர்கள் ஆட்சி செய்த காலம் அது"

என்ற வரிகள் சைவப்பண்பாடு பற்றிய விழிப்புணர்வு, ஒத்துப் போக மாட்டார்கள் என்ற ஆணித்தரமான கருத்து, ஆங்கில மொழி அரசியல் அரங்கில் கோலோச்சும் நிலை, கிறிஸ்தவ சமயத்தின் அழுத்தமான பிடிக்குள் நம்மவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்ற உண்மை, நாட்டுச் சூழ்நிலை ஆகியவற்றை மிகத்தெளிவாக வரையறை செய்து வெளிப்படுத்தியமை ஆசிரியர் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று உண்மைகளை வரன் முறைப்படுத்தி வெளிப்படுத்துவதில் பரிச்சயம் மிக்கவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நாவலரின் சமயப்பணியில் திண்ணைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டமை ஒரு மைல்கல் ஆகும். தொடர்ந்து 1848ம் ஆண்டு வண்ணார் பண்ணையில், சைவப்பிரகாச வித்தியாசாலை, சிதம்பரத்தில் யாழ்பாணத்தில் நிதிதிரட்டி சைவவித்தியாசாலை, யாழ்ப்பாணம் கோப்பாய், புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலைகள், 1872-76 காலப்பகுதியில் சைவ - ஆங்கில வித்தியாசாலை எனப்பல பாடசாலைகளை நிறுவி சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழலில் ஆங்கிலம் உட்பட வேண்டிய கல்வியைப் பெறுவதற்கான சூழலை உருவாக்கியமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சைவப்பிரசங்கங்கள் செய்தமை, கிறிஸ்தவ மதக் கண்டனத் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டமை. சைவசமயச் சிறப்புக்களை உண்மைகளை துண்டுப்பிரசுரங்களாக வெளியிட்டமை. உரைநடை வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி "வசன நடை கைவந்த வல்லாளர்" எனப் போற்றப்பட்டமை, புராணங்கள் பலவற்றிற்கு உரைநடை எழுதியமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் அவர்கள் எழுதிய சைவநூல்கள், உரை எழுதிய சைவநூல்கள், கண்டன நூல்கள், பதிப்பித்த சைவநூல்கள், அவரது தமிழ்ப்பணி. அச்சியந்திர சாலை நிறுவியமை, புராணபடனம் செய்தமை மட்டுமன்றி சமூகஞ் சார்ந்த பணியாக பிடி அரிசித் திட்டத்தை அறிமுகம் செய்து அதன் மூலம் கல்விப் பணியும் கஞ்சித் தொட்டித் தருமமும் செய்த மகத்தான பணிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சமயப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி மட்டுமன்றி அரசியல் அரங்கிலும் கால் பதித்தவராக நாவலர் அவர்கள் விளங்கினார். சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இலங்கைச் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு நாவலரே காரணகர்த்தா என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவரது மொழி பெயர்ப்புப் பணி, திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமை, அவரது கவிதையாக்கம் பற்றியும், ஆலயங்களைப் புனரமைக்கும் பணியில் நம்மவர்களை நெறிப்படுத்தியும் தனி ஒரு மனிதனாக இருந்து கொண்டு சகல துறைகளுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புக்களை வரலாற்று ஆதாரங்களுடன் தந்துள்ளார்.

"ஐந்தாம் குரவர்" எனப்போற்றப்படும் நாவலருக்கு யாழ்ப்பாணம்நல்லூர் வவுனியா ஆகிய இடங்களில் சிலைகளை நிறுவியும் நாவலர் முத்திரையை வெளியிட்டும் அரசும் மக்களும் அவருக்கு வழங்கிய கௌரவங்கள் பற்றியும் ஆசிரியர் பல்வேறு பட்ட தகவல்களை இந்நூலின் கண்ணே அமைத்துத்தந்தமை பெருமைக்கும் போற்றுதற்கும் உரியது.

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் எழுதிய "வாழ்க நாவலர் நாமம்" என்ற கவிதையுடன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் ஆகியோர் எழுதிய போற்று கவிகளும், உலக சைவப்பேரவையின் இலங்கைக்கிளையினால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் மத்திய பிரிவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவி முதலாம் இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கு காரணமான இவரின் ஆக்கமும் ஆசிரியரின் நூல்கள் பற்றிய பட்டியலும் இறுதியில் "நாவலர்" இசைப்பாவும் இடம்பெற்றுள்ளன.

இருபது பக்கங்களில் ஒரு தனிமனிதன் ஆற்றிய மகத்தான பணிகள் பற்றியும், அவரது ஆளுமை, நிர்வாகத் திறமை, எடுத்த கருமத்தை சாதித்து முடிக்கும் ஆற்றல். தளராத நம்பிக்கை, தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றுறுதி ஆகியவற்றை மிகத் தெளிவான முறையில் விளக்கும் "நாமறிந்த நாவலர்" சைவத் தமிழ் மக்களுக்கு ஏற்ற ஒரு கைந்நூல் என்றால் மிகையாகாது.

**நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்**
**சொல்லுதமிழ் எங்கே சுருதியெங்கே - எல்லவரும்**
**ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே**
**ஆத்தனறி யெங்கே அதை - (சி.வை.தா) -**

## பன்னிரு திருமுறை அறிமுகம்

வவுனியா இந்து மாமன்றமும், வவுனியா ஸ்ரீ கந்தசாமிகோவில் தர்மகர்த்தா சபையும் இணைந்து நடாத்திய திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவின் போது ஞாபகார்த்த வெளியீடாக 01-01-1994 இல் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க தமிழ்மணி அகளங்கன் அவர்களால் வெளியிடப்பெற்ற ஒரு சிறு நூல். இருபது பக்கங்களைக் கொண்டது.

திருமுறைகள் பற்றி அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் தேவையான தகவல்களை சுருக்கமாக முழுமையாகத் தருவது இந்நூல். ஒவ்வொரு திருமுறையும் பாடியவர் பெயர். பாடிய பதிகங்கள், பாடப்பட்ட தலங்கள், பாடல்களின் எண்ணிக்கை. இன்று எஞ்சியிருப்பவை, பண்கள் என பன்னிரு திருமுறைகள் பற்றிய விளக்கங்கள்.

திருமுறை பற்றிய அறிமுகத்தில் திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் வரலாறு. இராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்ட திருமுறைகள் ஏழு என்பதும், பின் இராஜேந்திர சோழனின் காலத்தில் 8,9.10,11ம் திருமுறைகள் தொகுக்கப்பட்டன என்பதும் இவற்றைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி "திருத்தொண்டர் திருவந்தாதி" பாடினார் என்பதும் இதனைச் சேக்கிழார் "திருத்தொண்டர்புராணம்" என்ற பெயரில் பாட அதைப் 12ம் திருமுறையாக வகுத்தனர் என திருமுறைகளின் தொகுப்பு முறை அழகாக முதற்கண் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

"திருச்சிற்றம்பலம்" திருமுறைப்பாடல் ஒன்றைப்பாடும் போது முதலிலும் முடிவிலும் கூறும் பழக்கத்திற்கான காரணம் திருச்சிற்றம்பலம் என்பதன் தத்துவம் - தத்துவங்கடந்த தடையிலா அருளறிவுப் பெருவெளி - என்ற உண்மை. திருமுறைகள் "தோடுடைய எனத் தொடங்கி..." "உலகெலாம்" என முடிவுறுவது "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தினுள் திருமுறைகள் அடங்குவது தெய்வ அருட்செயல் என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது. திருமுறைகள் வேதம் - ஆகமம் ஆகியவற்றின் சாரம்.

11ம் திருமுறையில் சிவபெருமான் நேரடியாகப் பாடிய பாசுரம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றமை, 8ஆந் திருமுறை மாணிக்கவாசக சுவாமிகள் பாடியதை இறைவனே படி எடுத்தமை ஆகிய திருமுறைகளின் சிறப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

திருமுறைகளின் பயன், பஞ்சாட்சர மந்திரத்தின் மகிமை பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் செய்வதும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ உதவுவதும் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்துவது.

பஞ்ச புராணங்கள் ஓதும் முறைமை, சிவபெருமானின் எளிவந்த கருணைத்திறன் பற்றிக் கூறுவதுடன் இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே தரவல்ல திருமுறைகளை ஓதுவது சைவர்களின் இன்றியமையாத கடமை என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

"தேவாரம்" என்பதன் பொருள்- முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள் எனப்படும் என்ற உண்மை. தேவாரம் பாடியவர்களே "தேவாரமுதலிகள்" என்ற வரலாற்று உண்மையுடன் தேவாரமுதலிகளுடன் மணிவாசகப்பெருமானையும் சேர்த்தே "சமயகுரவர்" என்றழைத்தல் சைவத்தமிழர் மரபு என்பதும் விளக்கப் பட்டுள்ளது.

இறைவன் பாலை, சூலை. ஓலை, காலைக் கொடுத்து முறையே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோரை ஆட்கொண்ட திறம் 9ஆம் திருமுறையின் சிறப்பு. 10ஆம் திருமுறை தமிழ் ஆகமம் என்ற உண்மை, 40 பிரபந்தங்கள் அடங்கிய 11ஆந் திருமுறை, சேக்கிழார் பாடிய பெரியபுராணம் ஆகியன தமிழ் சைவ உலகில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

"திருநெறிய தமிழ்" என்றும் "திருக்கடைக்காப்பு" என்றும் அழைக்கப்படும் சம்பந்தர் பாடிய 1-3 திருமுறைகள், அவற்றின் சிறப்பு, பாடிய பதிகங்கள், பாடல்கள், தலங்கள் இன்று எஞ்சியிருப்பவை, என்பன பற்றியும், சம்பந்தர் பாடல்களில் உள்ள ஓர் ஒழுங்கு முறைமை, பர சமயம் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் அதைக் கண்டிக்கும் வகையில் 8 ஆம் பாடலில் இறைவனின் பெருமை பற்றிய புராணக் கதையும், 9ஆம் பாடலில் இறைவன் காண்டற்கரிய பெரும்பொருள் என்ற உண்மையும், 10ஆம் பாடலில் புறச்சமயக் கண்டனமும் 11ஆம் பாடலில் திருப்பதிகம் ஓதுவோர் பெறும் பயன் பற்றியும் கூறப்பட்டுள்ள செய்திகள் கனதியானவை.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய தேவாரங்கள் "இலக்கிய நயம்" மிகுந்தவை. ஐந்தாம்திருமுறை "திருக்குறுந்தொகை" என்றும் ஆறாந் திருமுறை "திருத்தாண்டகம்" என்றும் போற்றப்படுகின்றன. இதனால் அவர் "தாண்டக வேந்தர்" என்று சிறப்பாக போற்றப்பட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய "திருமாமறைகள்" என்று போற்றப்படும் 7ஆந் திருமுறை பொருள் நயம் நிறைந்தவை.

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" எனப் போற்றப்படும் திருவாசகத்துடன் "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" எனச் சிவபெருமானே கேட்டுப் பாடச் செய்து தானே எழுதிய திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையில் இடம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இடம் பெறும் 9 ஆந் திருமுறையுடன் "தமிழ் ஆகமம்" எனப் போற்றப்படும் 10ஆந் திருமுறையாக திருமந்திரத்துடன், 40 பிரபந்தங்கள் அடங்கிய 11ஆந் திருமுறையும், மாக்கதை. பெரியபுராணம் எனச் சிறப்பாகப் போற்றப்பெறும் 12ஆந் திருமுறையும் அடங்கப்பெற்றது திருமுறைகள்

இவற்றை வரன் முறையாக சைவத் தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில், மாணவர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம் இந்நூலை தமிழ்மணி அகளங்கன் அவர்கள் அழகுறத் தொகுத்துள்ளார்.

இறுதியில் "பஞ்சபுராணம்" இடம்பெற்றுள்ளது மிகவும் பொருத்தமானது. பஞ்ச புராணம் பற்றிய தெளிவான உணர்வை மாணவர்களுக்கு வழங்குவதாக உள்ளது. எந்தச் செயலைச் செய்தாலும் அதனை வாழ்த்துவது தமிழர் மரபு. அம்மரபை ஒட்டி இறுதியில் "வாழ்க அந்தணர்" என்ற வாழ்த்தும் இடம் பெற்றுள்ளமை பெருமை சேர்ப்பது.

சைவநெறி உலகமெல்லாம் பரவவேண்டும் என்பதுவே சைவத் தமிழறிஞர் விருப்பம் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் மகுட வாசகத்துடன் பிள்ளையார் சுழி, சிவமயம் இட்டு நூலைத் தொடங்கியிருப்பது. சைவசமய நூல்கள் எழுதத் தொடங்கும் போது கையாளப்படும் முறைகள் பற்றிய ஆசிரியரது அறிவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

எனவே தரமான. கனதியான சைவ உலகிற்குப் பெரும்பயன் நல்கக் கூடிய பன்னிரு திருமுறை அறிமுகம் மாணவர்களுக்கு மட்டுமன்றி சைவர்களாகிய ஒவ்வொருவருக்கும் பயன்தரக்கூடிய நூல் என்பது யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மையாகும்.

அகவை அறுபது காணும் ஆசிரியர் மேன்மேலும் இத்தகைய ஆக்கங்களை வழங்கி சைவத்தமிழ் உலகிற்கு பெருந்தொண்டாற்ற வேண்டும் என்பது சைத்தமிழ் நல்லறிஞர்களது வேணவா ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# வன்னி மண் ஈழத்து இலக்கியத்திற்கு வழங்கிய அரும்கொடை

வித்தியாரத்தினா, **ந.பார்த்திபன்** M.A.Mate
மூத்த விரிவுரையாளர், வ.தே.க.கல்லூரி

## சிறுகதை

**பொ**துவாக கலைப் படைப்பு என்பது மனிதன் தன்னைத் தான் நன்கு புரிந்து கொள்வதற்கு வேண்டிய, புறநிலைப் பொருளாக அமைந்துள்ள படைப்பு ஆகும். இது மனிதனூடாக வந்து மனித நிலையைக் காட்டுவது.

ஒருவர் எழுதுவது மாத்திரம் முக்கியமாவதில்லை. எழுதப்பட்டது என்பது எவ்வாறு அமைந்துள்ளது என்பது முக்கியமாகும். ஒரு படைப்பில் சமூக நிகழ்வின் சித்திரிப்பு எவ்வாறு அமைகின்றது என்பதைப் பார்க்க வேண்டும்

இந்நிலையில் படைப்பாளியின் ஆக்க ஆளுமை தெரிய வரும். திறமையான படைப்பாளியின் ஆக்கங்கள் அவனது ஆக்க ஆளுமையை அறிந்து கொள்ளத் தூண்டும். **அகளங்கனின்** சிறுகதைகளை எடுத்து நோக்குமிடத்து அவரது ஆக்க ஆளுமை நன்கு புலப்படுகின்றது.

சிறுகதை, ஒரு குறிப்பிட்ட மனோ நிலையை அல்லது உணர்வு நிலையைக் காட்டுவதாக அமைதல் வேண்டும். இம் மனோ நிலை அல்லது உணர்வு நிலை வார்த்தைகளால் சுட்டிக்காட்டாது கதையினை வாசிக்கும் வாசகனின் மனதில் அவனை அறியாது அவ்வுணர்வு நிலை தோன்றும் படி செய்ய முடியுமானால் அவ்வாறான சிறுகதை சிறந்த சிறுகதை எனக் கூறலாம்

சிறுகதை என்பது சிறிய அளவிலான கதையன்று. அது சிறுகச் சொல்லி உயர்பட்சத் தாக்கத்தை ஏற்படுத்துவதான ஓர் உரைப் படைப்பு. எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய உயர் பட்சத் தாக்கத்தை ஏற்படுத்துவதான ஓர் உரைப்படைப்பு. எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய உயர் பட்சத் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான முறையில் அது அமைக்கப்படல் வேண்டும். சிறுகதையின் வரைவிலக்கணச் சிக்கற்பாடுகளை ஆராய்ந்தவர்கள் எல்லோரும் வற்புறுத்துவது அதன் சொற்செட்டு வன்மையைத் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுகதை என்பது தனித்துவமான அல்லது ஒரு தனிப்பட்ட தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கான செறிவினையும் கூர் நோக்கத்தையும் உடையதாக விருக்கும் தர்க்க முழுமையே இவ்விலக்கிய வகையின் பிரதான நோக்கமாகும்." என ஜே.ஏ.கடொன் (J.A.Cuddon) என்பவர் எடுத்துக் கூறுவார்.

சிறுகதையில் உரைநடை, கவிதைக்குரிய கம்பீரத்துடன், நுண்ணுணர்வுடன் தொழிற்படுதல் வேண்டும். அதன் ஒவ்வொரு அம்சமும், தலைப்பு முதல் இறுதி வரை ஒவ்வொன்றும் எழுத்தாளரின் படைப்புத் திறனின் ஆழ்வுக் குவிவிலிருந்து வெளிக்கிளம்ப வேண்டும். அப்பொழுது தான் அது உண்மையான கலைப்படைப்பாக மிளிரும்.

மேற்கூறிய சிறுகதைக்குரிய பண்புகள், விடயங்களின் அடிப்படையில் அகளங்கனின் சிறுகதைகளை நோக்கும் பொழுது, அனுபவம் மிக்க ஆக்க இலக்கிய கர்த்தாவின் ஆக்க ஆளுமையைத் தெரிந்து கொள்ளலாம்.

**கவிஞராக, நாடக எழுத்துருவாக்கராக, மொழிப் புலமை மிக்கவராக, பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடுடையவராக, பழைமையைப் புரிந்து கொண்டு புதுமை படைப்பவராக .....** எனப் பல்வேறு ஆற்றல்களை, ஆளுமைகளை - குறிப்பாக ஆர்வத்தினைக் கொண்டவராக அகளங்கன் இருப்பதால் அவருடைய சிறுகதைகள் மேற்கூறிய சிறுகதையின் அம்சங்களையும், சித்திரிக்கும் மொழியாற்றலையும் கொண்டவையாகவும், வாசகரை ஈர்த்துச் செல்லும் தன்மையினவாயும் அமைந்திருக்கின்றன.

அகளங்கனுடைய பல்வேறு ஆக்கங்களிலும் காணப்படுகின்ற மிகப் பெரிய அம்சம், அவை வாசகர்களை ஈர்ப்பனவாகக் காணப்படுதல் எனலாம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் **கல்லூரிக் கீதம்** ஆகட்டும், **தமிழ் வாழ்த்து** ஆகட்டும், **"வாலி"** ஆய்வு நூலாகட்டும், இறுதியாக வெளிவந்த **"கம்பனில் நான்"** கட்டுரைத் தொகுப்பாகட்டும் வாசகர்களை ஈர்க்கின்ற சிறப்பினை உணர்கிறோம். இந்நிலையில் **"முற்றத்துக் கரடி"** சிறுகதைத் தொகுப்பும் வாசகர்களை ஈர்த்துச் செல்லும் ஆக்க இலக்கியம் என்பதில் சந்தேகமில்லை.

மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் குறிப்பிட்டது போல், வன்னி மண்ணின் வளத்தையும், மக்களையும் தன் படைப்புக்களில் சீராகக் கொண்டு வந்ததன் மூலம், தான் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்துள்ளார்." என்பது அகளங்கனின் சிறுகதைகளுக்குத் தான் அதிகம் பொருந்தும் எனக் கூறுமளவிற்கு சிறுகதைகள் **பம்பைமடுக்** கிராமத்தையும் அங்கு வாழும் மக்களின் இயல்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

மேலும், அவரது தொழிலுடன் இணைந்ததாக வந்துள்ள கதைகள், ஆசிரியத்துவம் தொடர்பான வாண்மையை எடுத்துக் காட்டுவனவாகவும், பாட நூலில் சேர்க்கத் தக்க படிப்பினை ஊட்டுவனவாகவும் காணப்படுகின்றன.

இதுவரை 41 நூல்கள் எழுதிய அகளங்கன், கவிதை, **குறுங்காவியம், ஆய்வு நூல், கட்டுரைகள், நாடகங்கள், நாவல், விளக்கவுரைகள், பொருளுரைகள், மெல்லிசைப் பாடல்கள், சிறுவர் பாடல்கள்....** எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் பிரசுரித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும், சிறுகதை நூல் இதுவரை வெளிவரவில்லை என்ற குறையையும் போக்கி நிறைவு செய்ய **"முற்றத்துக் கரடி"** என்னும் இச் சிறுகதைத் தொகுப்பு உதவுகின்றது.

உதிரிகளாகப் பல சிறுகதைகளை போட்டிகளுக்கும், பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எழுதிய போதும் ஒரு தொகுதி வெளிவருவது இச்சிறுகதைத் தொகுப்புத்தான்

இவரது 42 ஆவது நூலான 21 சிறுகதைகள் கொண்ட **"முற்றத்துக் கரடி"** என்னும் சிறுகதைத் தொகுப்பு, சிறுகதைத் துறையிலும் அகளங்கனின் ஆளுமையை எடுத்தியம்பும் எனத் துணிந்து கூறலாம்.

**வன்னியின் சொத்து, வன்னி மண் ஈழத்து இலக்கியத்திற்கு வழங்கிய அரிய கொடை அகளங்கன்** என்றால் மிகையாகாது போன்ற கூற்றுக்களுக்குப் பொருத்தமானவர் என்பதை நிரூபிக்கும் அகளங்கன் தொடர்ந்து பல நூல்களை எழுதி தமிழ் இலக்கிய உலகிற்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்தும் செங்கை ஆழியான் போல, தொடர்ந்து பல சிறுகதைத் தொகுப்புக்களை எழுதிப் பிரசுரிக்க வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

## 1. முற்றத்துக் கரடி

**த**ன் ஊரவர்களின் பெருமதிப்புப் பெற்ற, ஊர்க்கோவில் பூசாரியான, பிரதேச சபையின் தலைவராக இருந்த காசியப்பு என்னும் காசிப்பிள்ளை, எழுத வாசிக்கத் தெரியாத, தன் பேரப்பிள்ளை வயதையொத்த இராணுவச்சிப்பாயிடம் அவமானப்படுவதும் அவன் காசிப்பிள்ளை என்பதை வேலுப்பிள்ளை என்று வாசிப்பதும் "அருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்" என்பது போல்..... . காட்டுக்கரடி யை அடக்கிப் புறமுதுகிட்டு ஓடச்செய்து தன் இனத்தை, ஊர் மக்களைக் காப்பாற்றியவருக்கு இந்த முற்றத்துக் கரடிக்கு அடங்கிப் போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நெஞ்சில் உறைக்கும் வண்ணம் எடுத்துரைத்த கதை இது.

வன்னிப் பிரதேச, பழவகைகள், தொழில் முறைகள் பற்றிய விபரிப்பும், கதை மாந்தர்களும், அண்மைக்கால நாட்டு நடப்பும் பெண்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இயல்பாகக்கூறி இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மக்களை இரக்கம் தோன்றும் வகையில் சித்திரித்த சிறுகதை முற்றத்துக்கரடி. "நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்க மென்ன" என்பது போல், அரசாங்கத்தின் கோழி முட்டை எங்கள் வீட்டு அம்மிக்கல்லை உடைத்தது போல் காசியப்புவின் நெஞ்சுரமும் இன்று கூட அவரது உடலுறுதியும் இருந்தபோதும் அடங்கிப்போக வேண்டிய நிலைமைகளை நிறைவாக எடுத்துரைத்துள்ளார் இக்கதையின் ஊடே. நூலின் தலைப்பாகவும் முதற்கதையாகவும் அமைந்த நிலையில் எழுத்தாளரின் மனதுக்குப் பிடித்த கதை, எல்லோரையும் பற்றிப்பிடிக்கும் என துணிந்து கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. வத்துக்குளம்**

கந்தப்பர், சித்தசுவாதீனம் உற்று தன் மன அவலங்களைக் கொட்டித் தீர்க்கும் கதை. இயல்பான, இயற்கையோடு ஒன்றித்த மக்களின் பிரதிநிதியான இவர் தன் இளமைக்கால நினைவுகளில் திளைத்திருப்பதும், தன் சந்தோசங்கள் எல்லாம் தொலைத்து வத்துக்குளத்தின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். குளத்தை குத்தகைக்கு விட்டதால் வந்த விளைவுகள். சாப்பாட்டிற்கு மீன் பிடிக்க வந்தவர்கள் வியாபாரத்திற்கு மீன் பிடித்து, பெரிய மீன்கள் மட்டுமன்றி குஞ்சு மீன்களையும் பிடித்து மீன் வளத்தையே சூறையாடியதும், அதனால் ஏற்பட்ட கலவரமும் அவருக்கு மிகவும் பிடித்தமான பெரிய தகப்பனாரையே கவலை கொண்டு சாகுமளவிற்குத் தள்ளிய நிலையில் "நாசமாப் போவாங்கள்" என்று திட்டியபடி.... வத்துக்குளம் குறியீட்டுப்பாங்கான நல்லதொரு சிறுகதை.

**3. கொக்குக் குஞ்சுகள்**

பம்பைமடுக் கிராமம் பற்றியும், அங்கே வாழும் மக்களின் உணவு வகைகள் பற்றியும், விருந்தோம்பல் பற்றியும் கூறும் கதையில் கொக்குகள் நடாத்துகின்ற அற்புதமான குடும்ப வாழ்க்கையில் ஆபத்து ஏற்படுத்தும் அபத்தமான செயற்பாட்டைச் செய்ய நினைக்கும் ஒருவரால் ஏற்படுகின்ற பாவச்செயலைச் சொல்லியிருக்கிறார் எழுத்தாளர். கொக்குக் குஞ்சுகளைப் பிடிக்க எடுத்த முயற்சிகள், தெய்வாதீனமாக தடுக்க முடியாத போதும், அவற்றைப் பிடித்தவர்களின் ஆசை நிராசையாக தெய்வக் குற்றம் தடுப்பதான கதை. இயல்பான பேச்சு வழக்கினூடு கதை சொல்லப்படுகிறது. பாவகாரியங்கள் செய்வதால் பயனில்லை என்பதை உணர்த்தும் படிப்பினை.

**4. இந்தப் பிள்ளைக்கு**

தான் பிறந்து வளர்ந்த முல்லைத்தீவு மண்ணை விட்டுப் பிரிய மனமில்லாமல் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்த சுப்பையர், இறுதி யுத்தத்தின் போது வேறிடத்துக்குப் போகக் கூடிய துர்ப்பாக்கிய நிலை. பிள்ளைகள் வவுனியாவிலும், இலண்டனிலும் இருந்த போதும் யுத்தத்தில் மனைவியையும் இழந்து காயம் பட்ட நிலையில் இடம்பெயர வேண்டிய இக்கட்டில் அவரது மன வேதனைகள் உள்ளத்தைத் தொடும் வண்ணம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இடைத்தங்கல் முகாமும், நோய் வாய்ப்பட்டதால் மருத்துவ நிலையமுமாக அலைந்து, வவுனியாவில் தொழில் புரியும் பிள்ளைகளிடத்தில் போய் ஆறுதல் தேடவும் முடியாத நிலையில் தன் அருகே மருத்துவமனையில் படுத்திருந்த, ஒரு காலை இழந்திருந்த பிள்ளையைப் பார்த்து ஆறுதலடையும் கதை.

அவரின் அறுபது வயது பூர்த்தியின்மையால் இடைத்தங்கல் முகாமில் ஆறுமாதம் இருக்க ஆத்திரப்பட்டவர் அந்த இரண்டு வயதுக் குழந்தையை நினைத்துப் பார்க்கிறார். "இன்னும் எவ்வளவு காலத்துக்கு அந்தப் பிள்ளை" என்று நினைத்து..... ஆத்திரத்தை அடக்கி, அந்தப் பிள்ளை தொடர்பான ஆதங்கத்தோடு கதை முடிகிறது. எமது நாட்டின் யுத்தமும் கெடுபிடிகளும் எடுத்துரைக்கப்பட்ட கதை.

**5. ஒரு கால்**

நோயாளிகளாக ஆக்கப்பட்டவர்களின் நிலையை இக்கதையினூடாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கிறார். ஓடியோடி உழைத்து உரமேறிய அவரது கால்களில் ஒன்று ஷெல் பட்டதால் அகற்றப்படப் போகிறது. கட்டிலில் கிடந்த படி தன் பார்வையைத் தனது வலது காலில் பதிக்கிறார். அந்தக் காலங்களில் அக்கால் அவருக்கு எப்படியெல்லாம் உழைத்தது; உதவியது. இன்று அந்தக் கால் வெட்டி எறியப்படப் போகிறது.

அவரது இளமைக் கால நினைவுகளுடன் ஒன்றிப் போவதாக கதை அமைகிறது. இறுதியில் "அந்தக் காலை வெட்ட வேண்டாம்" என்றும் "அதற்குப் பதிலாக என் உயிரை எடுங்கோ" என்றும் கெஞ்சும் போது "அப்படி ஆர் சொன்னது, செல்த் துண்டைத் தான் எடுப்போம்" எனும் போது வைத்தியரின் காலில் விழுந்து கும்பிடுகிறார் "ஐயா! நீங்கள் கடவுள்" என்று கூறுவதாக கதை முடிகிறது. அவருடைய காலின் முக்கியத்துவம் அவருடைய வீர தீரச்செயல்களின் மூலம் உருவகிக்கப்பட்டுள்ளது.

### 6. நாட்டு நடப்பு

சுற்றி வளைப்பு, விமானக் குண்டு வீச்சு, வகை தொகையின்றிக் கைது..... இருப்பினும் 18 வயதுப் பிள்ளைகளின் இயல்பான நடத்தை, நினைப்பு இவற்றினை நாட்டு நடப்பு இதுதான் எனச் சொல்லியுள்ள கதை. கணித பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு உலகம் தெரியாது, நாட்டு நடப்பு தெரியாது என உசுப்பிவிட அவர்கள் நாட்டு நடப்பு தமக்கு பாதகமாக இருந்த போதும் அந்த வயதுக்கேயுரிய ஏற்பாடுகளில் செயற்படுவதும், அதனால் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய சிக்கல்கள் துன்பங்கள் என்பவற்றை பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

தன் உணர்வுகளுக்கு வடிகாலாக கவிதை எழுதும் ஒரு இளைஞன் தனது கவிதையே தன் உயிருக்கு உலை வைத்துவிடும் என ஒரு கணம் யோசிக்க வைக்கும் நாட்டு நடப்பு எங்களுடைய நாட்டு நடப்பு என்பதைக் காட்டும் கதையிது

### 7. யாழ் தேவி

கொழும்பிலிருந்து தாண்டிக்குளம் வரையில் சென்று திரும்பும் நிலையில் தாண்டிக்குளத்திற்கும் போராளிகளின் இடத்திற்கும் இடைப்பட்ட நாநூறு மீற்றர் தூரம் வரைக்கும் பயணிகளின் பொதிகளைத் தூக்கிச் சென்று கூலி பெறும் தொழிலாளர்களின் குடும்ப சீவியம் தொடர்பான கதை இது. இந்தத் தொழிலில் குழந்தைத் தொழிலாளியாக இருக்கும் அவனது சுமைகள் நிரந்தர நோயாளியான தாயும், தங்கையும். பாடசாலை செல்லும் அவன், பாடசாலை தொடங்கு முன்னும் பாடசாலை விட்ட பின்பும் இத்தொழிலைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறான்.

நான்கு ஆண்டுகளாக இருந்த இந்த நடைமுறையில் மாற்றமாக யாழ்தேவி யாழ்ப்பாணம் வரையில் செல்லப்போவதை அறிந்து பலரும் சந்தோசப்பட அந்த சிறுவன் மட்டும் கவலைப்படுவதாகவும் தாய் அவனை திருத்துவதாகவும் யாழ்தேவி கதை காணப்படுகிறது.

### 8. நாளைக்கும் பூமலரும்

"நாளைக்கும் பூமலரும் நாமிருக்க மாட்டோம்" என்பது பிரபலமான சினிமாப்பாடல். எமது நாட்டு நிலைமையில் ஒவ்வொரு தமிழனும் நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்குகின்ற தன்மையை கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகும் குடும்பத்திலுள்ள நெருக்குவாரத்தில் குண்டு வெடிப்புகளும் நேரடி மோதல்களும் நிகழ்ந்து வெளியே போனவர் உயிருடன் வீடு திரும்புவாரோ என ஏங்க வைக்கும் கதை இது.

இந்த அவசர யுகத்தில் மனிதர்கள் இயந்திரமாகத் திரியும் போது விலங்குகள்?, ஒரு நாய்க்குட்டி விபத்தில் சிக்கி இறந்தது போல் அடிபாட்டின் இடையில் சிக்கி ஒருவர் இறந்ததை ஒரு கணம் நினைத்துப் பார்த்துக் கவலைப்படும் ஒருவரின் கதை உருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

### 9. பேயாய்க் கணங்களாய்

யுத்தத்தின் கோரப்பற்கள் தமிழ் மக்களை எப்படியெல்லாம் கடித்து குதறின என்பதற்கு இக்கதையும் ஓர் எடுத்துக்காட்டு. பொருளாதாரத் தடை விதித்து வவுனியாவிலிருந்து குறிப்பிட்டளவு பொருட்கள் குறிப்பிட்ட பொருட்கள் மட்டும் கொண்டு போக முடியும் என்பதும் அதுவும் வெளிக்குளப்பக்கத்திலிருந்து நொச்சி மோட்டை வழியாக சாந்தசோலை என குறுக்கு வழிகளைக் கையாளும் நிலையில் தமிழர்கள் வாழ்ந்த நிலையை எள்ளலுடன் எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

பல்வேறு பட்ட குடும்பப் பிரச்சினைகளுக்கும் வறுமைக்கும் எப்படியாவது உழைக்க வேண்டும் என்பதற்காக ஆண்களும் பெண்களும் படும் பாடும், குடும்ப விரிசல்களும் யுத்தத்தின் அவலங்களும் கதை முழுவதும் பிணைந்துள்ளன.

### 10. மீண்டும் ஒரு குருஷேத்திரம்

தான் காதலித்த பெண் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு ஊருக்குத் தெரிந்த நிலையில், அவளைத் திருமணம் செய்யச் சம்மதிக்காத பெற்றோரும், அவர்களது மகளும் இக்கதையில் உலாவுகிறார்கள். தன் காதலியின் இந்த நிலைக்குக் காரணமான இராணுவத்தினரைப் பழிவாங்கத் துடித்து தன்னையும் போராளியாக்கிய நாயகனின் தியாகத்தை நாயகி அறிந்த போது பாஞ்சாலி சபதத்தில் வீமனது சபதம் அவளுக்கு ஞாபகத்துக்கு வருவதுடன் கதை நிறைவு பெறுகிறது. இதிகாச சம்பவத்துடன் இணைத்து, பெயரும் மீண்டும் ஒரு குருஷேத்திரம் என உணர்த்துகிறது.

### 11. மண்ணின் மைந்தர்கள்

பாடசாலைக்குச் சென்ற பிள்ளை, அதுவும் குமர்ப்பிள்ளை துப்பாக்கிச் சூட்டின் சத்தம் கேட்கும் திசையில் நிற்கின்ற போது பெற்றோரின் இதயத் துடிப்பு, குறிப்பாக தந்தையின் பாசத்துடிப்பு.... ஆனால் அந்தத் தந்தை நொண்டியாக ஊனமுற்ற நிலையில் பிள்ளையின் உதாசீனம் கதையை விறுவிறுப்பாக நகர்த்திச் செல்கின்றது.

பாடசாலையில் இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் நடந்த சண்டையில், இராணுவத்தைப் பின்வாங்க வைத்த போராளிகளின், குறிப்பாக அதன் முன்னின்று போராடிக்காத்த தலைவனின் வீரமும் தியாகமும் அந்தப் பெண் பிள்ளைகளின் மனத்தில் பூஜிக்கப்பட வேண்டிய தெய்வங்கள் என்ற எண்ணத்தைத் தந்த போது, தன் காலை இழந்த தந்தையின் தியாகத்தைப் புரிந்து கொள்ளும் மகளாகித் தந்தையைத் தாங்கிச் செல்லும் மகளாகி நிற்பதைக் கதை ஆழத்துடன் காட்டி நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12. வெய்யில் மட்டுமா சுடும்.

பிள்ளைகள் படித்தும் வேலையில்லை. தந்தைக்கு ஒத்தாசையாக தோட்ட வேலை செய்யும் மகனும் இராணுவத்தின் தாக்குதலால் நடக்க முடியாத ஊனமாக, பென்சன் பணத்தை நம்பி வாழ்க்கையை ஓட்டிவிடும் நடுத்தரக் குடும்பங்களின் நிலை சொல்லும் தரமன்று. அந்த நடுத்தரக்குடும்பத்தில் வயோதிபர் மூவர் பென்சன் எடுக்கப்போன போது சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற செய்தி.... அவரது பென்சனை நம்பி வாழும் குடும்பத்திற்குப் பேரிடியாக மாறுகிறது.

ஒரு வழியிலும் வாழ முடியாத தமிழ் மக்களின் துன்பநிலை குடும்பமென்ற வண்டியை எவ்வளவு கஷ்ரப்பட்டு நகர்த்துகிறார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார் எழுத்தாளர். வெய்யில் சுடுகின்றது. வாழ்க்கையும் வெய்யிலாகச் சுடுகின்றது. இவர்களது வாழ்க்கையில் எப்போதும் வெய்யில் காலம் தான். இவர்களுக்கு விடிவு காலம் வருமா? என ஏங்க வைக்கும் கதை இது.

### 13. பாம்பின் குட்டி பாம்பு

விவசாயத்தில் ஈடுபட்டோர் தமது அறுவடைகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை என ஆதங்கப்படுவர். தங்களில் ஒருவன் கொள்வனவு செய்தால் மட்டுமே, தாங்கள் விவசாயம் செய்வதும் அவற்றை விற்பனை செய்வதும் அதிக பலன் தரும் என எண்ணுவது இயல்பு. அப்படி பழகிய இரு நண்பர்களில் ஒருவன் வியாபாரியாக மாறிய போது தனது நண்பன் தானே, முன்பு விவசாயியாக இருந்தவன் தானே என நம்பிப்போன போது, அவன் இப்போது விவசாயி இல்லை. வியாபாரி என்பதை நிருபிக்கும் கதை.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்பது போல் தொழில், அதன் குணத்தை எப்படி மாற்றுகின்றது என்பதை நறுக்காகச் சொல்லியுள்ளார் எழுத்தாளர். வியாபாரிகளின் தந்திரமும் விவசாயிகளின் தந்திரமும் என கதை பல விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது.

### 14. வேலை தேடி

படித்து விட்டு குடும்பப் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றித் திரியும் இளைஞர்களுக்குப் படிப்பினையூட்டும் கதை. வேலை எடுப்பதற்காக சிங்களப் பிள்ளைகளைச் சினேகிதம் பிடித்தால் நல்லது என நினைத்து, சிங்களப் பாடசாலையில் படிக்கும் பிள்ளையுடன் சிநேகிதம் பிடிக்கும் ஒருவனுக்கு அவள் தமிழ்ப் பிள்ளை தான் என்று தெரிந்ததும் வெட்கித் தலைகுனிய வைக்கும் கதை.

உத்தியோகம் கிடைத்தால் தான் செல்வாக்கை வீட்டிலும், ஊரிலும் பெறலாம் என்கிற உத்தியோக மாயை கொண்டு அலையும் இளைஞர்களுக்கு, குறுக்கு வழியில் தொழில் தேடும் மனநிலைக்கு நல்ல படிப்பினை ஊட்டியுள்ளார் எழுத்தாளர்.

### 15. வேலிகளும் போலிகளும்

பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தவரும் வன்னியரும் தொடர்பான கதை இது. நல்ல உறவைப்பேணி ஆளுக்காள் உதவியாயிருந்து விட்டு, பிரச்சினை என்று வரும் போது குறிப்பாக இனக்கலவரமொன்றின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திற்கு ஓடிச் சென்று, மீண்டும் நிலைமை சுமுகமாக வந்து அயலவருடன் உறவு கொண்டாடும் போலிகளைப் பற்றிய கதை இது.

"தொடர்ந்து கலவரம் வவுனியாவில் இருப்பது சரிவராது" என நினைக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் தனது வீட்டை ரணசிங்க என்ற சிங்களவருக்கு விற்று விட்டுப் போவதாகவும், அதை ஒரு தமிழனுக்கு விற்காமல் அதிக விலைக்கு விற்கும் யாழ்ப்பாண மனப்பாங்கை சுட்டும் சிறுகதை இது. அயல், பாசம், எல்லோரும் தமிழர் என்பதெல்லாம் போலியான போது அதனை வேலியாக நினைக்கக்கூடாது. அது அறியாமை என்பதை உணர்த்தும் கதை. பிரதேச வாதமென்று எடுக்காமல் இக்கதை தனிமனிதக் குறைபாடாகக் கருதக்கூடிய விதமாக ஆசிரியர் கூறியுள்ளார்.

### 16. வழக்குத் தவணை

நீதி மன்றத்துக்கு நேரத்துக்குச் செல்ல வேண்டும் இல்லையேல் அதற்கும் தண்டம் அடித்து விடுவார்கள் என்ற பயத்துடன் சென்று கொண்டிருப்பவர்கள் இடையில் பயிர்களை மாடுகள் அழிப்பதைப் பார்த்து அதனைத் தவிர்ப்பதற்காக ஆவன செய்து நீதி மன்றம் சென்ற போது நீதிபதி விசாரித்து அவர்களது நல்ல மனதுக்கு, அவர்களின் செயற்பாட்டிற்காக கருணை காட்டும் கதை இது.

"எங்கட கோவக்காறற்ற வயலுக்க மாடு நிண்டாலும் நாங்கள் கலைச்சுப் போட்டுத்தான் போவம்" என்ற விவசாயிகளின் செயற்பாடு. பயிரும் அதன் முக்கியத்துவமும் விவசாயிக்குத்தான் புரியும் என்பதை எடுத்துக்காட்டும் கதை இது.

### 17. கொண்டல் பிசின்

நாட்டு வைத்தியர், அதுவும் விஷக்கடிக்குப் பிரபலமானவர், மருந்து கொடுத்து உயிர் வாழச் செய்பவர், கொடுத்த கொண்டல் பிசின் எப்படி வேலை செய்துள்ளது என்பதைக் கொஞ்சம் நகைச்சுவை கலந்து கூறியுள்ளார் எழுத்தாளர்.

தான் சாகக் கிடந்த நேரத்தில் தன் கணவன் துடித்த துடிப்பும், தனக்குச் செய்த பணிவிடைகளும், மருந்து வாங்கிக் கொடுத்து சுகப்படுத்திய பாங்கும்.... கணவன் மீது அன்போ அக்கறையோ இல்லாத மனைவிக்கு கணவன் மீது ஏற்படும் பிணைப்பை ஊர்ப்பரியாரியார் கொண்டல் பிசின் மூலம் ஒட்ட வைத்துள்ள உளவியல் ரீதியான கதை.

"பிசின் போல ஒட்டியிட்டாள்" என்ற சொல்லும். ஒட்டுவதற்கு பிசினைப் பயன்படுத்துவதையும் குறியீடாகக் காட்டி கிராமத்து மக்களின் வாழ்க்கைத் தந்திரங்களை எடுத்துக் காட்டியுள்ள கதை இது.

### 18. குண்டுமணிச்சாமியார்

கேரளத்திலிருந்து வந்து வவுனியாவின் பல கிராமங்களிலும் தங்கியிருந்தார் இந்தச் சாமியார். யோகம், யோகம், யோகம் என்றும், பாவம், பாவம், பாவம் என்றும் கூறியபடி குண்டு மணிகளை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் தட்டித் தட்டி ஒரு விளையாட்டாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பதால் குண்டுமணிச் சாமியார்.

ஊரிலுள்ள பலருக்கு அப்பப்போ செய்த சில செயல்களால் தீர்வுகளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொடுத்து எல்லோராலும் பயபக்தியுடன் நேசிக்கப்பட்டவர் இந்தச் சாமியார். இந்தச் சாமியாரின் சில அற்புதங்கள் எடுத்துக்கூறப்படுகின்றன.

அவருடைய கருத்துக்கள் பெரிய தத்துவங்களாக மனிதர்களைப் புடம் போடுகிறது என்பதை சில சம்பவங்களினூடு விபரிப்பதாகக் கதை செல்கிறது.

### 19. தீக்குளிப்பு

பல்கலைக்கழகத்தில் ராக்கிங் என்ற பெயரில் நடைபெறும் சம்பவங்களைக் கூறி அதனை விரும்பாத ஒரு பெண் தன்னுடைய பாடக் குறிப்புக்களைத் தீக்கிரையாக்கி, கடந்த ஒரு மாத காலத்தில் தான் அடைந்த வேதனைகள் நெருப்பில் எரிந்து அவளது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றது. ஆம் உள்ளம் தீக்குளித்து பல்கலைக்கழக ஆசையிலிருந்து புனிதமடைகின்றது என்பதாகக் கதை கூறப்பட்டுள்ளது.

கதை. பல விடயங்களைக் குறிப்பிடுகிறது. ஆண்களின் போக்கு, அதற்குப் பலியாகும் பெண்களின் போக்கு, சீர்கெட்டுப்போன சமுக மனப்பாங்கு. குறிப்பிட்ட பெண்ணால் இச் சமுகத்தோடு ஒத்துப் போக முடியாத நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

சமூகச்சீர்கேட்டைச் சாடும் சிறுகதையாக இக்கதையை அமைத்துள்ளார் எழுத்தாளர். உயர்தரம் படிக்கும் போது மாணவர்களின் அடாவடித்தனமான பேச்சுக்கள் நடத்தைகளால் மனம் பாதிக்கப்பட்டு விடுதியில் தங்கியிருந்து படித்து பல்கலைக்கழகம் பற்றிய கற்பனையில் நினைத்திருந்த பெண் அங்கும் அதைவிட மோசமான, ஆண்களின் நடத்தைகளால் தன் பல்கலைக்கழகப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பதே தீக்குளிப்பு.

### 20. துருவ நட்சத்திரம்

கடமையே கண்ணாகக் கருதும் ஆசிரியை; கிராமத்துப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியரின் மனவளத்துக்கு நகர்ப்புறப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் மனவளம் ஈடில்லை என்ற நினைப்போடு இருக்கும் ஆசிரியருக்கு தான் முன்பு படிப்பித்த பழைய கிராமப்புறப் பாடசாலை மாணவியிடமிருந்து வரும் கடிதம் வாசகரையும் கண்கள் பனிக்கச் செய்கிறது.

நகர்ப்புற ஆசிரியை, விருப்பமில்லாமல் கிராமப்புறப் பாடசாலைக்குச் சென்று அங்கு அந்தக் கிராமத்து ஏழைப்பிள்ளைகளுக்குச் செய்த தொண்டின் விளைச்சலாக பல்கலைக்கழகம் சென்று விரிவுரையாளரான மாணவியிடமிருந்து கிடைத்த கடிதத்தின் விபரங்களைப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் வடிக்கிறாள். நல்லாசிரியராகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பிடித்தமான படிப்பினையூட்டும் கதை இது.

### 21. மனித தெய்வங்கள்

ஆசிரியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட ஏழைச் சிறுவன் இன்று அமைச்சர். பாடசாலையின் கட்டிடத்திறப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வந்த அமைச்சருக்கு மாலை போடும் ஆசிரியர். ஆசிரியரை இனங்கண்ட அமைச்சர், தான் ஆசிரியரால் தான் இந்த நிலைக்கு வந்தேன் என்றும் இந்த மனித தெய்வத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனதில் இருத்திக் கொண்ட போது, வாசகர்கள் மனதிலும் இந்தக் கதை இருப்புக் கொள்ளும் என்ற நம்பிக்கை ஊட்டும் விதத்தில் எழுத்தாளர், அவரும் ஓர் ஆசிரியர் என்பதால் மிக அருமையாகப்படைத்துள்ள கதை இது.

கதையை எதிர்பார்ப்போடு வாசிக்கும் பொறிமுறையைப் பயன்படுத்தி, சந்தர்ப் பங்களையும் சூழ்நிலைகளையும் அழகாக அருமையாக உருவாக்கிப் படைத்துள்ளார் எழுத்தாளர்.

நல்லாசிரியராய்த் திகழும் ஆசிரியர்களுக்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட மாணவர்ளுக்கும் ஆத்ம திருப்தி தரும் கதையாக மனித தெய்வங்கள் என்ற கதை எழுதப்பட்டுள்ளது. ஏழேழு பிறப்பும் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும் என்று அந்த ஆசிரியர் நினைப்பது போல் கதை முடிந்துள்ளது. சிறப்பாகும்.

**மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவை**

**நன்றி நவிலல்**

அழைப்பினை ஏற்று வந்த
அகளங்கன் ஐயா அவர்களுக்கு
இதயத்தால் நன்றி சொன்னோம்
என்றென்றும் நீடுவாழ்க!

உங்களின் உதவியாலும்
உயர்திரு வருகையாலும்
எங்களை உயர்த்தி விட்டீர்
என்றென்றும் மறக்க மாட்டோம்

முறையாக உபசரிக்க
முழுமையாய் அன்பு கொள்ள
இயலாமல் போனமைக்கு
இன்றைக்கும் வருந்துகின்றோம்

தங்களைப் போன்ற ஆன்றோர்
தகுதியை யறியாராக
எங்களில் அதிகமானோர்
இன்னமும் வாழுகின்றார்

அறிவினில் பெரியீர் நாமோ
அருந்தமிழ் பணிக்காயொன்றி
இனிவரும் காலமெல்லாம்
இதயத்தால் இணைந்து வாழ்வோம்

**சாந்தி முஹியித்தீன் (பிரதி தலைவர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# மொழியப்படாத பேராசிரியர்

**திரு.பொ.சத்தியநாதன்**

சிரேஷ்ட விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## நூலாசிரியர் அவர்கள்

**வ**ன்னி மாவட்டத் தமிழ்மொழியும் எழுச்சியும் பற்றிக் கூறப்புகும் எவரும் **தமிழ்மணி அகளங்கன்** என்ற நாமத்தை உச்சரிக்காது அது பற்றி எதையும் கூற முடியாது; கூற விரும்பவும் மாட்டார்கள். வட மாகாணத்தில் தமிழரும் தமிழ் மொழியும் தொடர்பான பொதுவான பல இயல்புகளும் பண்பாடுகளும் கலாசாரமும் பழக்க வழக்கங்களும் இருந்த போதும் வன்னி மண்ணுக்கென்று சில சிறப்பான இயல்புகள், பண்புகள், பழக்க வழக்கங்கள் உள்ளன. இவை தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழர் வாழ்வியலையும் இருப்பையும் வலுப்படுத்துவதில் நீண்ட வரலாறும் வலிமையும் கொண்டவை. இத்தகையதொரு தனித்துவமான பின்னணியில் இருந்து முகிழ்த்தவர்தான் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள்.

ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பேசப்படக்கூடிய பேரறிஞர்கள் பலர் ஈழத்தில் தோன்றி, தமிழ்மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஆற்றிய பணிகளால் இன்னும் மங்காப் புகழோடு நம்மிடையே வாழ்கின்றார்கள். அவர்கள் வழி தோன்றி, எம்மோடு நின்று அவர்களின் பணியைப் புரிகின்ற ஈழத்தவர்களில் இன்று முதல் நிலையில் நிற்பவர் அகளங்கன் என்றால் மிகையாகாது. இவர் பழந்தமிழ் இலக்கியம் என்றும் நவீன இலக்கியம் என்றும் தனது தளராத எழுத்து வன்மையாலும் பேச்சு வன்மையாலும் தமிலுலகுக்கு பல நூல்களைப் படையல் செய்திருக்கிறார். பல மேடைகளிலும் அவைகளிலும் காத்திரமான சொற்பொழிவை நிகழ்த்தியிருக்கிறார். இவை ஆய்வாக, விமர்சனமாக, ஒப்பியலாக, புதிய படைப்பாக உரைநடை வடிவிலும் செய்யுள் (கவிதை) வடிவிலும் எமக்குக் கிடைக்கின்றன. இவரின் தமிழ்த்துறை சார் வெளிப்படுத்தல்களும் ஆற்றல்களும் இவரை **மொழியப்படாத பேராசிரியராக** ஏற்றுக்கொள்ளும் நிலைக்குக் கொண்டு சென்றிருக்கின்றது.

தமிழ்மணி அவர்களின் பணிகளில் சிறப்பான ஒரு விடயம், பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியை ஒரு பாடமாகவோ சிறப்புப் பாடமாகவோ கற்கும் மாணவர்களுக்கு ஆய்வுக்காகத் தரவுகளையும் தகவல்களையும் காட்டி வழிப்படுத்தி நிற்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தமிழ்த்துறை ஆற்றலும் அர்ப்பணிப்பும் நோக்கும் சிறிய அளவில் எழுதி விட முடியாத ஒன்று. இங்கு கூறப்பட்ட செய்தி அகளங்கன் என்ற சமுத்திரத்தில் தெறித்த ஒரு துளி பற்றியதே. இவ்வகையில் அவரின் படைப்புக்களில் இருந்து இரண்டு சிறிய நூல்களை எடுத்து அவரின் படைப்பாற்றல், மொழியாற்றல், சிந்தனைத்திறன் என்பவற்றை நோக்குவோம்.

**நளவெண்பா (கதை):** (ஆவணி 1989, உமா பிறிண்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்.)

"நளவெண்பா" தமிழ் இலக்கியத்தை அணிசெய்யும் ஓர் இனிமையான காப்பியம். புகழேந்திப் புலவரால் 424 வெண்பாக்களால் பாடப்பட்ட இக்கதை, படிப்போர் மனதில் மகிழ்வை ஊட்டக்கூடிய ஒரு இலக்கிய வடிவம். சொல்நயம், பொருள்நயம், அழகு, கற்பனை என்றவாறு இப்பாடல் ஒவ்வொன்றும் வாசகரின் எண்ணத்தில் சொல்லோவியம் தீட்டும் இயல்புடையன. இச் செய்யுள்வழக்கு இலக்கியத்தை ஆசிரியர் சிறப்பான உரைநடை வடிவில் பதினைந்து பிரிவுகளில் தந்துள்ளார்.

புகழேந்திப் புலவர் செய்யுள் வடிவில் சொல்ல நினைத்ததை அதன் அழகும் பொருளும் நோக்கும் குன்றாது கவித்துவத்தோடு கதையின் இடம் மாறாது உரைநடையில் எழுதியிருப்பது ஆசிரியரின் மொழியாற்றலும் இலக்கியப் பரிச்சயமும் பொறுப்பும் ஆகும் என்றால் மிகையாகாது. இன்று பாடசாலை மாணவர்கள் பலரும், கற்பிக்கும் ஆசிரியர் சிலரும் கூட இவ்வாறான கதைகளை முழுமையாகத் தெரியாமலும் சந்தர்ப்பம் விளங்காமலும் இடர்படுவதைக் காண்கின்றோம். இவர்களுக்கு எல்லாம் இக்கதையை வாசிப்பதன் மூலம் நளவெண்பா காவியம் இலகுவானதாகிவிடும்.

இந்நூலின் சிறப்பு யாதெனில் இவர் கதையை நகர்த்திச் செல்லும் எல்லாப் பிரிவுகளிலும் அவசியமான பாடல்களைச் சேர்த்திருப்பதாகும். இவை தவிர தேர்ந்த சில பாடல்களை நூலின் இறுதியில் தந்துள்ளார்.

எளிய மொழிநடை, சிறிய வாக்கியம், சாதாரண அனுபவங்களின் இணைப்பு என்பன இந்நூலை அணிசெய்கின்றன. இது காலத்திற்கு ஏற்ற வரவு.

**செந்தமிழும் நாப்பழக்கம் (சிறுவர் இலக்கியம்):** (ஆனி 1997, சுதன் அச்சகம், வவுனியா.)

"செந்தமிழும் நாப்பழக்கம்", சொற்பொழிவு ஆற்றவிழைவோருக்கு நல்ல கையேடு. சிறப்பாக, மாணவர்கள் தமது மேடைப்பேச்சு ஆற்றலை விருத்தி செய்ய சுயமாகக் கற்று, நெட்டுருப்பண்ணிக் கொள்ள கைகொடுக்கக்கூடியது இந்நூல். மொத்தம் 13 சொற்பொழிவுகளைக் கொண்ட இந்த நூல் மொழி, சொல்லும் பாணி, வசனநடை என்பவற்றால் இலக்கியவளம் நிரம்பிக்கிடக்கிறது. எளிய சொல், நீண்டு செல்லாத வாக்கியம், படிமம் என்பவற்றால் கருத்தாழம் நிறைந்து, கேட்போர் மனதை ஈர்க்கும் சொற்பொழிவுகளாக உள்ளன.

அகளங்கள் அவர்கள் பேசும்போது அவையில் இருப்போர் அளவுக்கதிகமான தகவல்களையும் அனுபவங்களையும் அதிகளவில் உள்வாங்கிக் கொள்ளலாம். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவோனின் பேசுதல் சார்ந்த திறன்களிலும் உத்திகளிலும் தங்கியது. இதே பேச்சு உத்திகள் திறன்கள் என்பவற்றை மாணவர்கள் இயல்பாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் இவ்வாக்கங்கள் அமைந்துள்ளன. அதாவது ஒவ்வொரு பேச்சும் வித்தியாசமான விளிப்பு, எடுப்பு, தொடுப்பு, நிறைவு என்பவற்றையும் வேறுபட்ட மொழிநடையையும் கொண்டு உணர்ச்சிப் பிரவாகத்தோடு அமைந்துள்ளது. தடையின்றிப் பாயும் நதி போலக் கருத்துச்செறிவைத் தாங்கி இவர் மொழி பாய்ந்து செல்கின்றது.

"செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது மாணவரிடையே மொழி ஆர்வலர்கள் எதிர்பார்க்கும் ஒன்று. அதற்கு நல்ல மொழிப்பயிற்சி, எழுத்தொலிகளின் சரியான உச்சரிப்பு, ஏற்ற வேகம், பொருத்தமான சொல் இடைவெளி, வாக்கிய இடைவெளி, நிறுத்தற்குறிகளின் அனுசரிப்பு, இலக்கண வழுவின்மை என்பன தேவை. இவை யாவற்றையும் இவ்வாக்கங்களை எடுத்து பேச்சுப்பயிற்சி செய்யும் ஒவ்வொரு மாணவனும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் உதாரணங்கள், மேற்கோள்கள் என்பவற்றை எவ்வாறு எங்கே பயன்படுத்தலாம் என்ற அனுபவத்தையும் மாணவர்களுக்கு இவ்வாக்கங்கள் வழங்குகின்றன.

செந்தமிழும் நாப்பழக்கம் மாணவர்களுக்கு நல்ல பேச்சுப்பயிற்சிக்கான வழிகாட்டி. மாணவர்களைப் பேச்சுப்போட்டிகள், நிகழ்வுகளுக்குத் தயார் செய்யும் ஆசிரியர்களுக்கு சிறந்த கையேடு வழிகாட்டி.

**சி.செல்வராசா அவுஸ்திரேலியா (11.06.1993)**

**அன்றில் பறவைகள்** நாடகத் தொகுதி கிடைக்கப்பெற்றேன். நாடகங்கள் மிகவும் நன்றாக இருக்கின்றன. பேச்சு வழக்குத் தமிழை பேசப்படுகின்ற அதே பாணியில் மிகச் சிறப்பாக எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல எழுத்தாளர்கள் பேச்சு வழக்குத் தமிழை எழுதுவதில் வெற்றி காண்பதில்லை. காரணம் அவர்கள் சாதாரண மக்களுடன் வாழாது சாதாரண மக்களின் மொழிநடையை கையாள முற்படும்போது தவறு ஏற்படுகின்றது என நினைக்கிறேன். அதில் நீர் வெற்றி பெற்றுள்ளீர் வாழ்த்துக்கள் பணி தொடரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# ஈழத்தின் தலைசிறந்த தமிழறிஞன்

**திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள்** *SLPS - III*
*B.A, M.A(Da/Th), M.Ed, Dip in Ed, Dip in Cou, SP.Tr.Com,*
*Teaacher's Grade (Dr/Th)*

## *0.1. அறிமுகம்*

"**க**ங்கையின் மைந்தன்" என்ற தலைப்பில் இலக்கிய நாடகங்களின் தொகுப்பினை **அகளங்கன்** என்ற புனைபெயரைக் கொண்ட **திரு.நா.தர்மராஜா** அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். **இவர் ஈழத்தின் தலைசிறந்த தமிழறிஞன்.** இவர் தனது இளம்பராயம் தொடங்கி இலக்கிய நாடகங்கள் பலவற்றை எழுதி மேடை நாடகங்களாகவும் வானொலி நாடகங்களாகவும் அரங்கேற்றியுள்ளார். அவை நூல் உருவிலும் வெளிவந்துள்ளன. இந்நூல் தொகுப்புக்கள் மாகாண, தேசிய, சர்வதேச விருதுகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந் நாடகங்களை எழுதிய நூலாசிரியர் இலக்கிய நாடகங்களை மட்டுமல்லாது சமூக நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள் என பல வகையிலான நாடக எழுத்துருக்களை எழுதி தமிழ் மொழிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறார்.

**அசோகவனம், கங்கையின் மைந்தன், வாலி, திருவாதவூரர், அனார்க்கலி. கவரிவீசிய காவலன்** என்ற ஆறு நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந் நூல், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் (பிரியா பிரசுரம் - 55) 2009 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூல் **வடமாகாண சாகித்திய விருது, தமிழ்நாட்டு கலை இலக்கியப் பெருமன்ற விருது** எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளமை இந்நூ லாசிரியரது நாடகவாக்கத்திறனுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இவ் ஆறு நாடகங்களில் **"அசோகவனம்"** நாடகம் 2009 ஆம் ஆண்டில் அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிக்காக இக் கட்டுரை ஆசிரியரால் நெறியாள்கை செய்து அரங்கேற்றி **தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்** பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை இந்நூலில் இடம்பெறாத **"சிலம்பின் கனல்"** என்ற இலக்கிய நாடகம் 2010 ஆம் ஆண்டில், அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிக்காக இக்கட்டுரை ஆசிரியரால் நெறியாள்கை செய்யப்பட்டு **தேசிய மட்டத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம் இடத்தைப்** பெற்றமை இந்நூலாசிரியருடைய எழுத்து வன்மைக்குக் கிடைத்த இன்னொரு வெற்றியாகும்.

### 0.2. அசோகவனம்

மூன்று காட்சிகளைக் கொண்ட அசோகவனம் நாடகம் இராமாயணம் எனும் பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பெற்றது. சீதையைக் கவர்ந்து வந்த இராவணன் இலங்காபுரியில் அசோகவனத்தில் அரக்கியரது கடும் காவலில் சிறை வைத்து, தன்னைத் திருமணம் செய்ய சம்மதிக்குமாறு வற்புறுத்தும் ஒரு சிறு காட்சியே நாடகத்தின் பிரதான கதையாக பின்னப்பட்டுள்ளது. இருப்பினும் அசோகவனத்திலே சீதைபடும் துயரத்தினை நல்லதொரு **அவல நாடகமாக** அகளங்கன் அவர்கள் படைத்துள்ளார். இராவணன், சீதை, திரிசடை,. அனுமான், அரக்கிகள், அழகிகள் எனும் பாத்திரங்களை, பாத்திரங்களின் குணாம்சங்களுக்கேற்ற வகையில் முக்கியத்துவம் கொடுத்து படைத்துள்ளார்.

காட்சிகள் யாவும் "அசோகவனம்" என்ற களத்திலேயே இடம்பெறுகின்றன. அனைத்துக் காட்சியும் இரவுக் காட்சிகளாகவே அமைக்கப்பட்டுள்ளன. **துயரச்சுவை** நிரம்பிய காட்சிகள் இரவுக்காலத்தில் இடம்பெறுவது நாடகத்தின் உணர்வுக் கையளிப்புக்கு மிகவும் வலுச்சேர்ப்பதாகவே அமைகின்றது. நாடகத்தின் ஆரம்பமே இரவு நேரத்தில் அரக்கிகள் சீதையை அச்சுறுத்தும் காட்சியாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்காட்சியில் சீதை, திரிசடை, அரக்கிகள் என 10பேர் அடங்கியிருந்தனர். சீதையை உறுக்கும் பாவனையில் அரக்கியரது உரையாடல்கள் அமைந்துள்ளன. "உன்னைக் கொன்றுவிடுவேன், தின்றுவிடுவேன், சித்திரவதை செய்வேன், கால்கைகளைப் பிய்த்து எறிந்து விடுவேன்" என்ற கொடும் வார்த்தைகளால் சீதையை அச்சுறுத்துவதுடன் இராவணனது பெருமையையும் கூறிவைக்கத் தவறவில்லை. **"எங்கள் இராவணனின் பெயரைக் கேட்டால் ஏழேழு உலகமும் நடுங்கும். அவரின் மனதைக் கவர்ந்த மதன கோமளமே அவரோடு வாழ்ந்து பிறவிப் பெரும்பயனை அடையப்பார்"** என்ற வரிகளால் இதனை உணர முடிகின்றது.

இவ்வாறான சொல்லாடல்கள் மூலம் சீதை, இராவணன்,. அரக்கியர் என வரும் பாத்திரங்களின் குணாதிசயங்களை வாசகனது மனமேடையில் உலவ விடுகின்றார்.

முதலாது காட்சியில் சீதை எவ்வாறான சூழமைவுக்குள் இருக்கிறாள் என்பதையும், இராவணன் எத்தகைய தோற்றம் கொண்டவன், எவ்வாறான குணவியல்பு கொண்டவன் என்பதையும் மிகவும் நுட்பமாக நாடகாசிரியர் வெளிப்படுத்துவதை காணலாம். அது என்ன நுட்பம் என்று பார்ப்போமானால் சீதை என்ற பாத்திரமோ இராவணன் என்ற பாத்திரமோ அரங்கில் எந்த வார்த்தையையும் வெளிப்படுத்தவில்லை. அதிலும் இராவணன் என்ற சார்பு நிலைப் பாத்திரம் (protagonist) அரங்கில் தோன்றவுமில்லை. இந் நிலையில் எதிர் நிலைப் பாத்திரங்களாக (Antaganist) தோன்றும் அரக்கிகள் வாயிலாக வெளிப்படுத்தலாகும். முதலாம் காட்சியின் ஊடாக களம், காட்சி, உணர்வு, பிரதான பாத்திரத்தின் அறிமுகம் என்பவற்றை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. இவை நாடகத்தின் தொடர் நிலையை சுவாரசியமானதாகவும் அடுத்து என்ன நடக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்றது என்ற தவிப்பு நிலையை (வாசகரோ, பார்ப்போரோ, கேட்போரோ) தோற்றுவிப்பது நாடகாசிரியரது சிறப்புத் தன்மைக்கு ஒரு அடையாளமாகும்.

இரண்டாம் காட்சி அசோகவனத்திலேயே இடம்பெறுகின்றது. அதுவும் இரவு வேளையிலேயே இடம் பெறுகின்றது. இக்காட்சியில் சீதை, திரிசடை, அனுமான் எனும் மூன்று பாத்திரங்களது அசைவியக்கங்களுக் கூடாக நாடகம் நகர்த்தப்படுவதைக் காணலாம்.

சீதையின் வாய்மொழி இரண்டாவது காட்சியினூடாகவே வெளிப்படத் தொடங்குகின்றது. முதல் வார்த்தையிலேயே திரிசடை எனும் பாத்திரத்தை தன் தோழியாக்கி விடுகிறாள் சீதை. சீதை தான் கண்ட நன் நிமித்தங்களைத் தன் தோழியாகிய திரிசடைக்குத் தெரிவிக்கின்றாள். பெண்களுக்கு வலது கண் துடித்தால் துன்பத்தையும் இடது கண் துடித்தால் இன்பத்தையும் தரும் என்பதையும், அதேவேளை பொன்வண்டு வந்து இனிய கீதத்தை இசைத்து சென்றது பற்றியும் அடிக்கடி தான் கண்ட கனவு பற்றியும் திரிசடை கூறுவதும் இடம்பெறுகின்றது.

இரண்டாவது காட்சியின் சாராம்சம் என்னவென நோக்கும் போது, சீதை இரவில் கூட தூக்கமின்றி இருப்பதும், திரிசடை தூங்கும் போது துர்க்கனவு கண்டதை கூறுவதனூடாக இனி என்ன நடக்கப்போகின்றது என்பது பார்ப்போர்க்குப் புலப்படுத்தப்படுகின்றது. பிரதானமாக சீதையினதும் திரிசடையினதும் உரையாடலூ டாக இராவணனுக்கு அழிவுவரப்போகிறது என்பதும், சீதை இராமபிரானால் சிறை மீட்கப்படப் போகின்றாள் என்ற எதிர்ப்பார்ப்புக்கும் இட்டுச்செல்கின்றன.

மூன்றாவது காட்சியும் அசோக வனத்திலேயே இடம்பெறுகின்றது. அதுவும் இரவு வேளையிலே இடம்பெறுகின்றது. இக்காட்சியில் இராவணன், சீதை, திரிசடை, அனுமான், அழகிகள் ஐவர் ஆகிய பாத்திரங்கள் தோன்றுகின்றனர். நாடகம் உச்ச நிலைக்குச் செல்வதை இக்காட்சியினூடாக கதை முடிகின்றது. இராவணனது கொலுவரவுக் காட்சியினூடாக இலங்காபுரியின் அரசன் என்பதை அது புலப்படுத்துகிறது.

இராவணன் சீதையிடம் கெஞ்சுவதும், விழுந்து கும்பிடுவதும், கோபிப்பதும், சாந்தமாக தன் விருப்பத்தை கேட்பதும், கர்வத்துடன் பேசுவதும் என இக்காட்சி நகர்த்தப்படுகின்றது. இங்கு தமிழ் மணியின் மணியான வார்த்தைகள் இராவணன், சீதை ஆகிய பாத்திரங்களுடாக மோதுவதைக் காணலாம். நாடகமானது மோதுகையினூடாகவே வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். மோதுகை இல்லாது நாடகமில்லை. குறிப்பாக இலக்கிய வகை நாடகங்களில் மொழியாட்சி மிகவும் முக்கியமானது. நீதிமன்றத்தில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையிலான உரையாடலினூடாக சூடுபிறப்பது போன்று, இக்காட்சியில் இராவணனுக்கும் சீதைக்குமான உரையாடலை அமைத்து வாசகர்க்கும் பார்ப்போர்க்கும் எழுச்சியை ஊட்டுகின்றார். இங்கு உரையாடல்கள் நீட்சியுடையதாகவும், நாடகத்தில் நேரடியாகத் தோன்றாத பாத்திரமான இராமபிரானது சிறப்புக்கள் பற்றியும் விளக்கப்படுகின்றது.

இராமனால் அனுப்பிவைக்கப்பட்ட தூதனாகிய அனுமான், இரண்டாவது காட்சியில் தோன்றினாலும் எதுவும் பேசவிடாது காட்சியில் சீதையின் நிலையைக் காண்பதும் மனம் நெகிழ்வதுமாக காட்டப்பட்டமை பார்ப்போர் மனதில் சீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஒரு பரிவையும், அரக்கியர் மீது கோபமும் கொள்ள வைத்த நாடகாசிரியர் மூன்றாவது காட்சியில் இராவணன் வருவது, சீதையுடன் வாதாடுவதும் இறுதியில் அச்சுறுத்திவிட்டு, அரக்கியரை அழைத்து இவளைச் சித்திரவதை செய்து என்னை ஏற்கச் செய்யுங்கள், எனக் கூறுவது வரையான காட்சிகளை பார்வையாளர் பார்த்து நெஞ்சு நெகிழ்வதுமான காட்சிகளை அனுமானையும் காணவைக்கின்ற (செயல்வழியில்) வகையில் அரங்கினுள் நுழையச் செய்கின்றார்.

தொடர்ந்து அனுமான், சீதை முன் தோன்றி தன்னை அறிமுகப்படுத்தி இராமபிரானிடம் அழைத்துச் செல்கின்றேன் என கூறுகின்றான். இந்தக் காட்சியிலே பண் பாட்டுக்குரிய சிறப்பினை அதன் விழுமியத்தை சீதையின் உரையாடலினூடாக எடுத்துக்கூறுகிறார் நாடகாசிரியர் **"தாயே! என் தோள்களிலே அமர்ந்து கொள்ளுங்கள். இந்த இலங்கையைத் தாண்டி இராமபிரானிடம் உங்களைச் சேர்க்கின்றேன்."** என அனுமான் கூறுவதும், அதற்குச் சீதை **"உன்னால் முடியும் என்பதை நான் உணர்கின்றேன். ஆனால் அது உனக்கு அழகல்ல, எனக்கும் அழகல்ல, உன்னை அனுப்பிவைத்த என் நாயகனின் பெருமைக்கு ஏற்றதல்ல"** எனும் வார்த்தைகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இறுதியாக சீதை தனது சூழாமணியினைக் கழற்றி தன் கண்களில் ஒற்றிக்கொண்டு இதனை என் நாயகனிடம் கொடுத்து என்னைச் சந்தித்ததற்கு அடையாளமாகக் காட்டு எனக்கூறுவதுடன் அனுமான் அதனைப் பெற்றுக் கொள்வதும் ஆனந்தக் கூத்தாடுவதுடனும் நாடகம் நிறைவடைகின்றது.

முதலாம் காட்சியில் பிரதான பாத்திரங்களது அறிமுகமும் இரண்டாவது காட்சியில் நல்ல தீய நிமித்தங்கள் பற்றிக்கூறுவதன் மூலம் நாடகச் சூழமைவினை மெருகூட்டுவதும், மூன்றாவது காட்சியில் நாடகத்தின் உணர்வு நிலையை உச்சத்துக்குக் கொண்டுவருகிறார். அனுமானது தொடர்பினால் இராமன் வருவான் வந்து தன்னை மீட்பான் என்று சீதை நம்பிக்கை கொள்வதும் என்ற முடிவையும் வைத்து நாடகத்தை நிறைவுக்குக் கொண்டு வருகின்றார் நாடகாசிரியர்.

உண்மையில் பழம்தமிழ் இலக்கியங்களில் இளைய தலைமுறையினர், மாணவர்கள் அதிக அக்கறை காட்டாது செல்லும் இக்காலத்தில் அவர்களிடம் நாடகம் மூலம் பழந்தமிழ் இலக்கியத்தின் சுவையை அறியவைக்கும் திறம் நாடகாசிரியரது இனிமையான உரையாடலுக்கு உண்டு. மாணவர்கள் இலக்கியமாகவே வாசித்து மகிழ உதவும் நாடகமாகவும் அமைவது இதன் சிறப்பாகும்.

### கங்கையின் மைந்தன்

கங்கையின் மைந்தன் என்ற நாடகத்தொகுப்பில் உள்ளடங்கிய இரண்டாவது நாடகமாக **கங்கையின் மைந்தன்** நாடகம் இடம்பெற்றுள்ளது. இந்நாடகம் மகாபாரத இலக்கியத்தில் வரும் ஒரு கிளைக்கதையை அடிப்படையாகக் கொண்டது. இந்நாடகம் ஆறு காட்சிகளைக் கொண்டுள்ளது. இந்நாடகத்தில் அஸ்தினாபுரத்து அரியணையில் அரசாட்சி செய்யும் சந்திர குலத்துச் சக்கரவர்த்தி, பீஸ்மர், தேரோட்டி, பகீரதி, சத்தியவதி, தாசராஜன், தலைமை அமைச்சர், தளபதி முதலான எட்டுப் பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

**சந்தனு** மகாராஜாவும் தேரோட்டியும் காலை வேளையில் கங்கை ஆற்றங்கரையில் கங்கையின் அழகை இரசித்தவாறு நிற்கையில் கங்கை எனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை அழகு நிரம்பியவளாய்க் காட்சி கொடுக்கின்றாள். இந்த கங்கையை யாரென அறியாது நின்ற சந்தனுவும் தேரோட்டியும் அவளது அழகை வியந்து நின்றதுடன் இந்த அழகி யாராக இருக்கும் என்பதை அறியும் ஆவலில் தேரோட்டியாம் தன் நண்பனை அவ்விடம் நிற்குமாறு கூறி விட்டு அவ் அழகியை அணுகி "நீ யார்" என வினவுகின்றார். இந்த வேளையில் கங்கையாகிய பகீரதி தன் பெயர் **பகீரதி** என்பதை தெரியப்படுத்துகின்றாள். இந்த வேளையில் சந்தனு மகாராஜா தன்னை மறந்தார். தன் உடல் பொருள் ஆவியை பகீரதியிடம் பறிகொடுத்ததை உணர்ந்து தனது காதலை பகீரதியிடம் எடுத்துரைக்கின்றார்.

பகீரதி "நான் ஒரு சாதாரண பெண்" எனக் கூறி சந்தனுவின் கோரிக்கைக்கு எதிர்க்குரல் கொடுக்கின்றாள். சந்தனு தன் குலத்தின் பரம்பரையினைக் கூறி **"என் அரியாசனத்தில் உன்னை அமர்த்த விரும்புகின்றேன்"** எனக் கூறுகின்றார். ஈற்றில் பகீரதியும் சந்தனுவின் விருப்பத்துக்கு உடன்பட்டு ஒரு நிபந்தனையை முன்வைக்கின்றாள். சந்தனு **"அது என்ன நிபந்தனை கூறு"** எனக் கேட்டதும் **"நான் என்ன காரியம் செய்தாலும் அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் நீங்கள் என்னை ஏன் என்று கேட்கவும் கூடாது. தடுக்கவும் கூடாது. நான் செய்யும் காரியத்தை ஏன் என்று கேட்டுத் தடுக்க முயன்றால் அந்தக் கணத்தோடு நான் பிரிந்து விடுவேன்."** என்று கூறுகின்றாள். இதனைக் கேட்ட சந்தனு **"இவ்வளவு தானா? நான் ஏன் என்று கேட்கவும் மாட்டேன், தடுக்கவும் மாட்டேன்"** என்று சத்தியம் செய்கிறார். இதற்கு பகீரதி **"சத்தியம் தவற மாட்டீர்களே"** என்று கேட்டுக் கொண்டாள். இதற்கு **"சத்தியம் தவறிவிட்டால் அது சந்திர குலத்துக்கு இழுக்காகிவிடுமே."** என்று கூறிவிடுகின்றார். இச்சந்தர்ப்பத்தில் **"வா பகீரதி! அஸ்தினாபுரம் சென்று எல்லோர் முன்னிலையிலும் மணம் செய்து கொள்வோம்."** என்கிறார் சந்தனு. இத்துடன் முதலாவது காட்சி நிறைவடைகின்றது. இரண்டாவது காட்சி கங்கைக் கரையில் இரவு வேளையில் இடம் பெறுகின்றது. இக்காட்சியில் சந்தனு, பகீரதி, தளபதி, தலைமை அமைச்சர் ஆகிய நான்கு பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. இக் காட்சியில் சந்தனு, பகீரதி ஆகிய இருவரும் திருமணம் முடித்து எட்டாவது ஆண் பிள்ளையைப் பெற்று விட்ட நாளாகும். இந்த இரவு தான் சந்தனுவும் பகீரதியும் பிரியப் போகும் இரவு என்பதை சந்தனு அறியாதிருந்த நாள். தளபதியும் தலைமை அமைச்சரும் எதிர்பாராத சந்திப்பு. இருவரும் சந்தனு மகாராஜாவின் போக்கையும், பகீரதியின் கொடுமையான செயற்பாட்டையும் விமர்சித்தவாறு இருக்கும் வேளையில் எட்டாவது ஆண் பிள்ளையைக் கொண்டு பகீரதி கங்கைக் கரையை நோக்கி வருகிறாள். அவளைத் தொடர்ந்து சந்தனு வருகிறார். இவ் இருவரையும் அவதானித்தவாறு தளபதியும் தலைமை அமைச்சரும் மறைந்திருந்து நடப்பவற்றை அவதானித்துக் கொள்கின்றார்கள்.

சந்தனு பகீரதியைத் தடுத்து **"இதுவரை எனது ஏழு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்து, இந்தக் கங்கையாற்றிலே போட்டு! கொன்றொழித்தாய். யார் இப் பாவச் செயலைச் செய்யத் தூண்டினார்கள். சொல் பகீரதி"** எனக் கேட்கின்றார். சந்தனு இதற்கு பகீரதி மன்னருக்கு **"மீண்டும் உங்கள் சத்திய வார்த்தையை நினைவூட்ட விரும்புகின்றேன் என்கிறாள்."** சந்தனு பகீரதியிடம் மண்டியிட்டுக் கேட்கின்றான். **"இந்தக் குழந்தையை நான் கொல்லப் போவதில்லை. இந்தக் குழந்தையினை உங்களிடம் ஒப்படைக்கின்றேன். அமைதியடையுங்கள்"** என்று பகீரதி கூறுகின்றாள். "எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் உங்களுக்குமான திருமண பந்தம் அறுந்து விட்டது." எனக் கூறியதுடன் **"எல்லாம் விதிப்படி நடந்திருக்கின்றது. நான் சாதாரன பெண்ணல்ல. நான் கங்கா நதி. பிரம்ம தேவரின் சாபத்தினால் பெண்ணுருவாகி வந்து இப்படி நடந்து கொண்டேன். என்னால் கொல்லப்பட்ட ஏழு குழந்தைகளும் சாதாரண பிறவிகளல்ல அட்டவசுக்களில் எழுவர். இக் குழந்தை எட்டாவது வசுவாகிய பிரபாசன்** எனக் கூறுகின்றாள்.

வசிட்டமுனிவரது சாபத்தினால் அட்டவசுக்கள் பூமியில் பிறக்க வேண்டி வந்தது. இக்குழந்தையை நல்லறிவும் நல்லொழுக்கமும் நல் வீரமும் கொண்ட ஒருவனாக வளர்த்து உங்களிடம் ஒப்படைப்பேன். என்று கூறி விடை பெற்றுச் செல்கிறாள் பகீரதி. இத்துடன் இரண்டாவது காட்சி நிறைவடைகின்றது.

காட்சி மூன்று கங்கைக் கரையில் இடம் பெறுகின்றது. இக்காட்சியில் தேரோட்டி, சந்தனு, பகீரதி, பீஸ்மர் ஆகிய பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. சந்தனு பகீரதியைப் பிரிந்து 16 ஆண்டுகள் கழிந்த நிலையிலேயே தேரோட்டி சந்தனுவிடம் **"மகாராஜா, இத்தனை ஆண்டுகளாக பகீரதிக்காக அழுது கண்ணீர் வடிக்கிறீர்களே ஏன் மறுமணம் செய்யக் கூடாது"** என்று வினவுகின்றான். இதற்கு சந்தனு பகீரதியுடன் தான் வாழ்ந்த வாழ்வு தெய்வ வாழ்வு எனக்கூறுவதுடன் **"நான் எனது மனைவிக்காக மட்டுமல்ல எனது மகனுக்காகவும் காத்திருக்கின்றேன். என்பதை நீ அறியமாட்டாயா"** எனக்கூறி **"சற்று நேரம் என்னைத் தனிமையில் இருக்க விடு"** எனக் கேட்கின்றார். இந்நிலையில் தேரோட்டி அவ்விடம் விட்டுச் செல்கிறான். பீஸ்மர் அவ்விடம் வருகிறார். பீஸ்மர் தனது வில்வித்தையின் சக்தியை சந்தனுவின் மேல் பிரயோக்கிறார். சந்தனு மயங்கி விடுகின்றார்.

பகீரதி அவ்விடம் வருகிறாள். **"மகனே என்ன காரியம் செய்தாய்"** மகன் பீஸ்மருக்கு **"இவர்தான் உன் அப்பா."** என அறிமுகம் செய்வதும் சிறிது நேரத்தில் சந்தனு மயக்கம் தெளிந்து எழுவதும் பகீரதி மகனை அறிமுகம் செய்வதும் மகனை தந்தையிடம் ஒப்படைப்பதும் விதிப்படி பகீரதி பிரிந்து செல்வதும் இக்காட்சியில் இடம்பெறுகின்றது.

நான்காம் காட்சி யமுனை ஆற்றங்கரையில் இடம்பெறுகின்றது. இக்காட்சியில் சந்தனு, தேரோட்டி, சத்தியவதி, தாசராஜா ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. சந்தனு மிகவும் மகிழ்ச்சியான சூழலில் இருப்பதும் தன்மகன் பீஸ்மரது ஆட்சி புதுப்பொலிவு பெற்றிருப்பதும் பற்றிய உரையாடல் மூலம் வெளிப்படுத்தப்படும் வேளையில் யமுனை ஆற்றங்கரையில் இருந்து வரும் பரிமள வாசனையில் மயங்கியவராக சந்தனு காணப்படுகின்றார். இவ்வேளையில் தோன்றும் பெண்ணைத்தன் மனைவி பகீரதியோ என நினைத்து அப்பெண்ணருகே சென்று **"பகீரதி"** என அழைத்து நிற்பதும் அப்பெண் **"நான் பகீரதியல்ல நான் பரதவ குல தலைவனாகிய தாசராஜன் மகள் சத்தியவதி"** எனக்கூறி தன்னை அறிமுகம் செய்கின்றாள். எனது தொழில் **"இக்கரையிலுள்ளோரை அக்கரைக்குக் கொண்டு செல்வதும். அக்கரையில் உள்ளோரை இக்கரைக்குக் கொண்டு வருவதும் தான்"** எனக்கூறுகின்றாள். சந்தனு சத்தியவதியிடம் தன் மனதைப் பறிகொடுத்தவராக **"உன் வாழ்க்கையில் என்னை ஏற்றுக்கொள்வாயா?"** எனக்கூறிய போது **"இது எனது தந்தையிடம் கேட்க வேண்டிய கேள்வி."** எனக்கூறி தந்தையிடம் அழைத்துச் செல்லும் சத்தியவதி தந்தையிடம் சந்தனுவை அறிமுகம் செய்து வைக்கின்றாள். சந்தனு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் விருப்பத்தினை தனது தேரோட்டி மூலம் எடுத்துரைக்கின்றார். தாசராஜன் தனது மகளை பட்டத்தரசியாக்க சம்மதம் தெரிவித்த போதிலும் **"என் மகள் சத்தியவதிக்கு பிறக்கப் போகும் பிள்ளை அஸ்தினாபுரத்தின் அரசனாக ஆக்கப்படுவார் எனும் உறுதி மொழியை நீங்கள் தந்தால் என்மகளை இப்பொழுதே அழைத்துச் செல்லுங்கள்."** என தாசராஜன் கூறிய போது சந்தனு தேரோட்டியையும் அழைத்துக் கொண்டு செல்கின்றான். இத்துடன் நான்காவது காட்சி நிறைவடைகின்றது.

ஐந்தாவது காட்சி தனியிடம் ஒன்றில் நிகழ்கின்றது. இக்காட்சியில் பீஸ்மர், தேரோட்டி ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. தேரோட்டியை அழைத்துக் கொண்டு வந்த பீஸ்மர் தந்தையின் அந்தரங்க விடயம் பற்றி அறிய ஆவலாயுள்ளார். என்பது அவரது வார்த்தைகள் ஊடாக தெரிகின்றது. தந்தை கவலையாய் இருப்பதன் காரணத்தை அறிய பீஸ்மர் விரும்புகிறார். என்பதால் தந்தையின் கவலைக்குக் காரணம் **பரிமளகந்தி** எனும் சத்தியவதி மேல் கொண்ட காதல்தான் என்பதை தேரோட்டி கூறிவிடுகின்றான். **"என் தந்தையின் விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன். என்ன தடையிருக்கின்றது."** எனக் கேட்கின்றார். தேரோட்டி **"எனக்கும் சில தர்மங்கள் இருக்கின்றன."** எனக் கூறிவிடவே **"என்னை பரதவ குலத் தலைவனான தாசாராஜனிடம் அழைத்துச் செல்லுங்கள்"** எனக்கூறுவதுடன் ஐந்தாம் காட்சி நிறைவடைகின்றது.

ஆறாம் காட்சி தாசராஜனின் குடிசையில் இடம்பெறுகின்றது. இக்காட்சியில் தாசராஜா, பீஸ்மர் ஆகியோர் இடம்பெறுகின்றனர். தன் தந்தைக்காக தாசராஜனிடம் பெண் கேட்டுச் செல்கின்றார் பீஸ்மர். தாசராஜன் பீஸ்மரை அன்போடு வரவேற்கின்றார். தான் வந்த விடயத்தை தெரிவிக்கிறார் பீஸ்மர். **"சத்தியவதியை உங்கள் தந்தை சந்தனு மகாராஜா மணப்பதாக இருந்தால் எனது மகளுக்கு பிறக்கப்போகும் பிள்ளைக்கே அஸ்தினாபுரத்து அரசுரிமை என்று எனக்கு வாக்குத் தரப்பட வேண்டும்"** என்று கூறுகின்றார் தாசராஜன்.

இந்த வேளையில் பீஸ்மர் **"உங்கள் மகளுக்குப் பிறக்கும் மைந்தனே அஸ்தினாபுரத்து அரசனாவான் எக்காரணம் கொண்டும் நான் அரசுரிமையில் பங்கெடுத்துக் கொள்ள மாட்டேன்."** என சத்தியம் செய்வதும் **"எனது பரம்பரையில் வரும் எவரும் அஸ்தினாபுரத்து அரசுரிமையை நாடமாட்டார்கள்."** எனவும் கூறுவதுடன் **"இன்று முதல் நான் நித்திய பிரமச்சாரியாகவே என் வாழ்க்கையை முடிப்பேன்."** என பீஸ்மர் சபதத்தை எடுப்பதுடன். இவ் இறுதிக்காட்சி நிறைவடைகின்றது.

உண்மையில் **"கங்கையின் மைந்தன்"** என்ற இந்த நாடகம் மிகவும் தத்துவபூர்வமாக நாடகமாக்கப்பட்டுள்ளது. நாடகத்தின் காட்சி என்னத்தை கூற விளைகின்றதோ, அந்தச் சூழலை முன்கூட்டியே எமது அகக்கண்ணில் பார்வைக்குக் கொண்டுவந்து விடுகின்றார் நாடகாசிரியர். தேரோட்டியோடு மன்னன் உரையாடுவதனூடாக அந்தக் காட்சியில் வருகின்ற வர்ணனைகள் பின்னுக்கு வரப்போகின்ற விடயத்தை முன்னறிவிப்பனவாக உள்ளன. கங்காநதியின் அழகை வர்ணிப்பதன் மூலம் கதாநாயகியின் பண்புகளை முன்வைப்பதாக காட்டுகின்றார் அகளங்கன். எடுத்துக்காட்டாக சந்தனு தேரோட்டியின் உரையாடலை இங்கு கவனிப்போம்.

சந்தனு **"அதோ பார், கங்காநதி தன் அன்புக்கரங்களால் அழகிய முத்துக்களை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அள்ளிவந்து கரையில் குவிக்கின்றதே."** எனக் கூற அதற்கு, **"ஆம் அரசே! தாங்கள் அஸ்தினாபுரத்து அரியணையில் வீற்றிருந்து அரசாட்சி செய்யும் அரசரல்லவா; சந்திர குலத்து சக்கரவர்த்தியல்லவா; தங்கள் சிற்றரசர்கள் தங்கள் காலடியில் பொன்னையும், மணியையும் கொண்டுவந்து குவிப்பது போல் இருக்கிறது இந்தக் கங்காநதியின் செய்கை."** என தேரோட்டி கூறுவதும் என தொடரும் உரையாடல்கள் மூலம் நல்ல உவமானங்கள் இந்த நாடகத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பதும், எளிமையான உரையாடல்களாக ஆக்கப்பட்டிருப்பதும் இலக்கியக் கருத்துக்களை இளையோரது உள்ளங்களில் பதியவைக்க உதவுகின்றது எனக் கூறுவது சாலப்பொருத்தம்.

நாடக நிகழ்வொழுங்குக் காலங்களைக் காட்டும் தந்திரோபாயங்களும் அகளங்கன் அவர்களது காட்சித் தொடக்கத்திலே புரிந்துவிடும். நாடக நிகழ்வுகள் எந்தக்காலத்தில்., எந்த வேளையில், எந்தச் சந்தர்ப்பத்தில், என்ன உணர்வு நிலையில் கொள்ள வேண்டுமோ அந்தந்த நிலைமைகளை மிகவும் அச்சொட்டாகக் காட்டிவிடுகின்றார் அகளங்கன்.

நாடகத்துக்கேயுரிய, உரையாடல்களை அமைக்கும் போது அங்கங்கு வரக்கூடியதான குறியீடுகளை நேர்த்தியாக இட்டு நாடகமொழி எந்த உணர்வைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதைக் காட்டியிருக்கின்றார்.

இலக்கிய நாடகங்கள் வானொலிக்காக எழுதப்பட்டதாலோ என்னவோ மேடைக்குறிப்புக்கள் பெரியளவில் இடம்பெறவில்லை. இந்நாடகம் மேடைக்காக ஆற்றுகை செய்யப்படுவதாக இருந்தால் நெறியாளர் அதற்குப் பொருத்தமான மேடைக் குறிப்புக்களை இட்டு நிரப்புவதன் மூலம் சிறந்த மேடை நாடகமாக அரங்கேற்றி நாடக முழுமையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 0.4. வாலி

கங்கையின் மைந்தன் என்ற நாடகத்தொகுப்பில் மூன்றாவதாக வரும் நாடகம் **"வாலி"** என்பதாகும். இந்நாடகம் ஆறு காட்சிகளைக் கொண்டது. கம்பராமாயணத்தில் வரும் ஒரு பாத்திரம் வாலி. கம்பராமாயணத்தில் ஒரு திருப்பத்தைக் கொண்டுவந்த பாத்திரம் வாலி. அந்தப்பாத்திரத்தை முதன்மையாகக் கொண்ட நாடகம் இதுவாகும்.

இந்நாடகத்தில் இராமன், இலக்குவன், வாலி, சுக்கிரீவன், அனுமான், அங்கதன், தாரை ஆகிய ஏழு பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. காட்சி ஒன்று கிஷ்கிந்தை மலையடிவாரத்தில் இடம்பெறுகின்றது. காலை வேளையில் இக்காட்சி இடம்பெறுகின்றது. இக்காட்சியில் இராமன், இலக்குவன், சுக்கிரீவன் ஆகிய பாத்திரங்கள் இடம் பெறுகின்றன.

முதலாம் காட்சி நேரடியாகவே எடுத்துரைக்கப்படுகின்றது. இராம, இலக்குவன், சகிதம் வந்து நிற்கும் சுக்கீரிவனிடத்து இராமன் கூறுகிறான், "வாலியைப் போருக்கழைத்து போர் செய், அச்சமயத்தில் நான் உன்னைக் காப்பதுடன், உனது மனைவியையும் மீட்டுத் தருகிறேன்." தயங்கி நிற்கின்றான் சுக்கிரீவன். "நீ தயங்காதே சுக்கிரீவா," நான் சொல்வது சத்தியம். உனது மனைவியை மீட்டுத்தருவதும் கிஷ்கிந்தை ராட்சியத்தை மீட்டுத் தருவதும் எனது பொறுப்பு. வாலியை போருக்கு அழை. நான் மறைந்திருந்து அம்பை எய்து கொல்கிறேன்." என்றதும் சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைக்கின்றான். இத்துடன் முதலாவது காட்சி நிறைவடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது காட்சி வாலியின் அரண்மனையில் நடைபெறுகின்றது. இக்காட்சி காலை வேளையில் இடம்பெறுகின்றது. இக்காட்சியில் வாலி, தாரை ஆகிய பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. சுக்கிரீவனது போருக்கழைக்கும் குரல் கேட்டு கடும் கோபங் கொண்டு, "இதோ வந்து விட்டேன். நீ தப்பவே மாட்டாய்." எனக் கூறிப் புறப்படுதலும் இதனை கண்ணுற்ற தாரை வழிமறிப்பதும் சுக்கீரவனின் செயல் கண்டு கொதிப்பதும் மீண்டும் தாரை தடுப்பதுமாக இக்காட்சி அமைக்கப்பட்டதன் பின்னணியினூடாக பார்க்கும் போது பின்னுக்கு நடக்க இருக்கும் பேரவலத்தை சுட்டிக்காட்டுவதாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

"சுக்கிரீவனுக்குத் துணையாகி உயிர்நட்புப் பொருந்தி இராமன் என்பவன் உங்கள் உயிரைக் கவர்வதற்காக வந்துள்ளதாக என்மேல் மிகவும் அன்புடையவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என தாரை கூறியதும் "என்ன இராமனா? அவன் கடவுளடி. கடவுள், அவனா இந்தக் கீழ்த்தரமான வேலையைச் செய்வான்" என்று இராமன் மேல் அபாரநம்பிக்கையும் விசுவாசமும் கொண்ட வாலி "இராமன் அறத்தோடு பொருந்தாத செயலைச் செய்ய வந்ததாகச் சொன்னாயே படுபாவி. நீ பெண் என்பதால் பிழைத்தாய் இல்லையேல் செத்தாய்." என கூறுகின்றான். மீண்டும் தாரை தடுக்கின்றாள். "இராமன் அருட்கடல் போன்றவர், நானும் தம்பியும் போர்செய்யும் போது இராமன் அம்பு தொடுக்கவே மாட்டான். கவலையை விடு. கணப் பொழுதுக்குள்ளே அக்கயவனின் உயிர் குடித்து மீண்டு வருவேன்." எனக்கூறி செல்கின்றான் வாலி. இத்துடன் இரண்டாவது காட்சி நிறைவடைகின்றது.

மூன்றாவது காட்சி மலையடிவாரத்தில் இடம்பெறுகின்றது. காலைவேளையில் இக்காட்சி இடம்பெறுகின்றது. இராமன் இலக்குவன் ஆகிய பாத்திரங்கள் இக்காட்சியில் இடம்பெறுகின்றன. வாலியின் தோற்றப் பொலிவு, அவனது கோபாவேசம் பற்றி இராமனும் இலக்குவனும் பேசிக்கொள்கிறார்கள். இவ்வாறு வாலியின் பெருமையும் இலக்குவன் வாயிலாக சுக்கிரீவனது ஒழுக்கமற்ற செயலும் விவாதிக்கப்படுகின்றது. தத்துவ விசாரணை செய்வது போல தன் தம்பி இலக்குவனுக்கு நியாயம் கற்பிக்கின்றான் இராமன். என்பது போல் இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. நாடகத்தின் சூழமைவுக்கு இது இன்றியமையாத ஒரு காட்சியாக அமைத்துள்ளார் நாடகாசிரியர்.

நான்காவது காட்சி மலைச்சாரலில் நடைபெறுகின்றது. வாலி, சுக்கிரீவன் ஆகிய பாத்திரங்கள் இக்காட்சியில் இடம் பெறுகின்றன. காலை வேளையில் இக்காட்சி இடம்பெறுகின்றது. இது வாலியும் சுக்கிரீவனும் போர் செய்யும் காட்சி. வாலியின் உரையாடலில் நல்ல உரையாடல் பயன்படுத்தப் படுகின்றது. எடுத்துக் காட்டாக "சிங்கத்தை அடித்துக் கொல்லுமாம் சிறுமுயல், யானையைக் கடித்துத் தின்னுமாம் பூனை. நன்றாக இருக்கிறது உன்பேச்சு, மூடனே!" எனத் தொடர்கிறது அவ் உரையாடல். உணர்ச்சி ததும்பிய உரையாடல்களை அமைத்திருக்கிறார் நாடகாசிரியர்.

வாலியிடம் நன்றாக அடிவாங்கிய சுக்கிரீவன் எழுந்து ஓட்டமெடுக்கிறான். வாலி "இனி இந்த கிஷ்கிந்தைக்குள் காலடி எடுத்து வைத்தால் உன்னைக் கொல்லாது விடேன்" என்று கூறுவதுடன் இக்காட்சி நிறைவடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது காட்சி மலைச்சாரலில் இடம்பெறுகிறது. சுக்கிரீவன், இராமன், இலக்குவன், ஆகிய பாத்திரங்கள் இக்காட்சியில் இடம்பெறுகின்றன. மதிய காலத்தில் இக்காட்சி இடம்பெறுகின்றது. இராம, இலக்குவர் மறைந்திருக்கும் இடம் நோக்கி சுக்கிரீவன் இளைத்தபடி ஓடி வருகிறான். இராமனைப்பார்த்து "என்னைக் கைவிட்டு விட்டீர்களே! என்னை வாலியைக் கொண்டு கொல்விக்கப் பார்த்திர்களே, இது உங்களுக்கு தருமமா?" எனக் கேட்கின்றான் சுக்கிரீவன். இராமன் "நீ கலங்காதே. மனோவல்லமை இழக்காதே. உங்கள் இருவருக்குமிடையில் வேற்றுமை தெரியவில்லை. அதனால் தான் அம்பு எய்யவில்லை. தவறுதலாக உன்மேல் எனது அம்பு பட்டுவிட்டால், உன் கதி என்னவாகிப்போகும்." என்று இராமன் கூறுவதும் சுக்கிரீவன் தயங்குவதும் காட்டப்படுகின்றது. "கொடிப் பூவை அடையாளமாகச் சூடிச்செல். அதனை அடையாளமாக வைத்து நான் வாலிக்கு அம்பு தொடுக்கிறேன். சுக்கிரீவன் கொடியோடு பூவைச்சூடியவாறு வாலியைப்போருக்கு அழைத்துச் செல்கிறான். இத்தோடு ஐந்தாம் காட்சி நிறைவடைகின்றது.

இறுதிக் காட்சியாகிய ஆறாவது காட்சி அதே மலையடி வாரத்தில் இடம்பெறுகின்றது. வாலி, சுக்கிரீவன், இராமன், இலக்குவன், அனுமான், அங்கதன் ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இது மதியக்காட்சியாக இடம்பெறுகின்றது. வாலியை நோக்கி வந்து வாலியுடன் மோதிப் போர் தொடுக்கின்றான் சுக்கிரீவன், வாலியும் சுக்கரீவனுடன் போர் தொடுக்கின்றான். வாலி சுக்கிரீவனைத் தலைமேல் தூக்கி நிலத்தில் மோதி கொல்ல நினைக்கின்றான். அத்தருணத்தில் இராமபாணம் வாலியின் மார்பைத் துழைக்கின்றது. வாலி சுக்கிரீவனை விடுத்து உடல்சரிந்து வீழ்கின்றான், வீழ்ந்து தன் உடலைத் தைத்த பாணத்தை உருவி எடுக்க முயல்கின்றான், முடியாது பல முயற்சிகள் செய்கின்றான். இந்த பாணம் யாருடையதாக இருக்க முடியும். என பல ஊகங்களை செய்கின்றான். பாணத்தை ஒருவாறு உருவி எடுத்துப் பார்க்கின்றான். இராமபாணம் "இராமா! நீ என்ன காரியம் செய்து விட்டாய்? உன் தகுதிக்கு ஏற்ற காரியமா? என நினைத்துக் கத்துகிறான். இராமனிடம் நீதி கேட்கின்றான். உனது சூரியகுலத்து ஒழுக்கத்துக்கு நீ மாசு கற்பித்துக் கொண்டாய்." எனப்பல்வேறு விதமாக இராமனைத் திட்டித்தீர்த்தான் வாலி. "இராமா நீ வாலியைக் கொன்றுவிட்டதாக நினைக்காதே. நீ கொன்றது மனுதர்மவேலியை. என்பதை மறக்காதே" இக்கூற்றுக்கள் நாடக நிலையில் உச்சமான உணர்வுக் கொந்தளிப்பு மிகுந்தவை.

தொடர்ந்து இராமன் வாலிக்கு நீதி பரிபாலனம் செய்யும் காட்சி இடம்பெறுகின்றது. தமையனின் மனைவி தாய்க்கு சமம். தம்பியின் மனைவி மகளுக்குச் சமம். என இராமன் கூறும் உபதேசம் யாவும் உணர்வுக் கொந்தளிப்புக்கு தக்க உதாரணமாகும். இறுதியில் அனுமானை அங்கதனை அழைத்து வருமாறு வாலி கூறுகிறான். அனுமான் அங்கதனை அழைத்து வருகின்றான். "சுக்கிரீவனையும் அனுமானையும் துணைக்கொண்டு உனது மனைவியைத் தேடிப்பெற்றுக்கொள்" எனக்கூறுகிறான் வாலி.

அங்கதனை அடைக்கலமாக ஏற்றுக்கொண்ட இராமன் தன் உடைவாளைக் கொடுத்து "நீ இனி என் நம்பிக்கைக்குரியவன். அன்புக்குரியவன். கலங்காதே" எனக் கூறுகின்றார். இவ் வேளை இக்காட்சியைக்கண்டு மகிழ்ந்து கொண்டே வாலி இறக்கின்றான். இக்காட்சியுடன் வாலி நாடகம் நிறைவடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலி நாடகத்தைப் பொறுத்தவரையில் ஆற்றொழுக்கான உரைநடை, உணர்ச்சி ததும்பிய உரைநடை, இனிமையும் செழுமையும் கொண்ட உரைநடை, எவரும் சலிப்படையாது வாசித்தின்புறும் இலக்கியநயம் கொண்ட தொரு நாடக எழுத்துருவமாக இதனைக் கண்டு கொள்ளலாம்.

## 0.5. திருவாதவூரர்

கங்கையின் மைந்தன் நாடகத்தின் நான்காவது நாடகமாக திருவாதவூரர் எனும் நாடகம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நாடகம் இருபது காட்சிகளைக் கொண்டது. இந்நாடகம் **திருவாதவூரடிகள் புராணத்தில்** வரும் மாணிக்கவாசகரது கதையை அடிப்படையாகக் கொண்டது. இந்நாடகத்தில் அரசன், வாதவூரர், அமைச்சர், குரு, சீடர்கள், கூலியாள், செம்மனச்செல்வி, சேவகர்கள், புலவர், ஒற்றன், குதிரை வீரர்கள் ஆகிய பதினொரு பாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

முதலாவது காட்சி, அரிமர்த்தன பாண்டிய மன்னனது அரண்மனையில் இடம்பெறுகின்றது. இக்காட்சியில் அரசன், வாதவூரர் (முதலமைச்சர்), புலவர், காவலன், ஒற்றன் முதலான ஐந்து பாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

நரிகளைப் பரிகளாக்கிய கதையினை நுட்பமாக முதலாவது காட்சியிலேயே வடித்திருக்கிறார் நாடகாசிரியர். முதலாவது காட்சியில் ஏனைய நாடகங்களுக்கல்லாத சிறப்பு தென்படுவதைக் காணலாம், அதாவது இலக்கிய நாடகம் என்ற வகையைத் தாண்டி **பா நாடகம்** என்ற வகையிலும் இந்நாடக இலக்கியம் அமைவதைக் காணலாம்.

> **"தேனேர் தமிழெடுத்துச்**
> **செவிகுளிரக் கவிபாடும்**
> **நானேர் தமிழ்ப் புலவன்..."**
> **நாடி வந்தேன் - உனைப்**
> **பாடி வந்தேன்."**

எனத்தொடங்கும் கவிவரிகள் இந்நாடகத்தை பா நாடக வகைக்குரியதாக்கி நிற்பதை தொடரும் காட்சிகளும் எமக்குச் சுட்டுகின்றன. போரூக்கம் பெற்ற பாண்டிய மன்னனிடம் அன்பு எனும் நீரை ஊற்றுவதன் மூலம் நல்லறம் கொண்டு ஆட்சிசெய்யும் மனத்திடம் கொண்ட ஒருவனாக மாற்றிடும். வாதவூரர் தம் கதையை அழகாக வடித்துத்தருகின்றார் அகளங்கன் அவர்கள்.

> **"நட்புக் கரத்தை நீட்டுவோம்**
> **சமாதானப் பயிர் வளர**
> **அன்பு நீரை ஊற்றுவோம்."**

என முதலமைச்சர் வாதவூரர் கூற்றாகத் தருகிறார். ஆரியக் குதிரைகள் வந்திருக்கின்றன. அவற்றை வாங்குவதன் மூலம் எமது படைபலத்தை தக்க வைத்துக் கொள்வதுடன் எதிரி படைபலம் இல்லாது செய்வதற்குரிய மூல உபாயமாகும். என்பதை அரசர்க்கு எடுத்துணர்த்தி குதிரைகளை வாங்கி விடுவதற்கான பொறுப்பு தலைமை அமைச்சராகிய வாதவூரர் கையில் விடப்படுவது வரை, முதலாவது காட்சியில் இடம்பெறுகின்றது. வாதவூரரும் அதனை ஏற்று நாளை காலை செல்வதாக உறுதி கூறுவதுடன் முதலாவது காட்சி நிறைவடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் காட்சி குருந்தமரநிழலில் நடைபெறுகின்றது. குரு, வாதவூரர், அடியவர் ஒருவர், சேவகர் இருவர் ஆகிய ஐந்து பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இரண்டாவது காட்சியில் மேடைக்காட்சிக் குறிப்புக்கள் இடம் பெறுகின்றமையானது மேடை நாடகமாக அரங்கேற்றுவதற்குரிய அடையாளமாகக் காண்கின்றேன். சிவபெருமான் குருந்த மரநிழலில் எழுந்தருளி இருக்கின்றார். அவரைச்சுற்றி அடியார்கள் பலர் அமர்ந்துள்ளனர். கையில் ஏடுகள் அடங்கிய கட்டு என இருக்கும் காட்சியைக் கண்ட திருவாதவூரர் அவரருகே சென்று வழிபட்டு தங்கள் கையில் உள்ள புத்தகம் யாதென கூறுமாறு கேட்கிறார். சிவபெருமான் "சிவஞான போதம்" என கூறுகின்றார். சிவனிடம் சிவஞான போதத்துக்கான விளக்கத்தை திருவாதவூரர் கேட்கிறார். அதற்கு குருவாகிய சிவபெருமான் விளக்கமளிக்கின்றார். என்னை தங்கள் அடியவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார். குரு வாதவூரரை தன் அடியவராக ஏற்றுக் கொண்டு, சகல தீட்சைகளையும் வழங்கினார். வாதவூரர் தான் குதிரை வாங்க கொண்டு வந்த செல்வங்களை எல்லாம் குருவின் பாதாரவிந்தங்களில் வைத்து இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என இறைஞ்சினார். இந்நிலையில் சேவகர்கள் தங்கள் செயல் அரசர்க்கு கோபத்தை கொண்டு வரும்" என எச்சரித்தனர். சேவகர்களை தன்னை விட்டு அகலுமாறு கூறிவிடுகின்றார். இச்செய்தியோடு இரண்டாவது காட்சி நிறைவுபடுகின்றது.

மூன்றாவது காட்சி அரண்மனையில் இடம்பெறுகின்றது. அரசன், சேவகர்கள், அமைச்சர், ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் வாதவூரர் குருந்த மரநிழலில் குருவிடம் குதிரை வாங்க கொடுத்தனுப்பிய செல்வங்களை காணிக்கையாக்கி அடிமையாகிவிட்டார். என்ற செய்தி அரசனுக்கு தெரிவிக்கப் படுகின்றது. அரசன் ஆத்திரமடைந்து "அரச சொத்துக்களை இவ்வாறு செலவு செய்த வாதவூரருக்கு ஓலை அனுப்பி அழைப்போம்." என்ற சம்பவத்தோடு மூன்றாவது காட்சி நிறைவுபடுகின்றது.

நான்காவது காட்சி குருந்த மரநிழலில் இடம்பெறுகின்றது. குரு, வாதவூரர், சீடர்கள், சேவகன் முதலான பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் மன்னனது செய்தியுடன் வந்த சேவகர் திருமுகத்தை வாதவூரரிடம் கொடுக்கிறார். வாதவூரர் அதனை வாங்க மறுக்கிறார். "நீரே வாசியும்" என்று கூறுகிறார். திருமுகம் சேவகராலே வாசிக்கப்படுகிறது. மன்னனது திருமுகத்திலே குதிரை வாங்க கொண்டு வந்த பொன் பொருளுடன் அரண்மனைக்கு வருமாறு பணிக்கப்படுகின்றார். குரு வாதவூரரைப்பார்த்து, "நீ மன்னனிடம் செல். குதிரைகள் ஆவணி மூல நட்சத்திரத்தன்று வரும், என்று சொல் என்று கூறுவதுடன் நான்காவது காட்சி நிறைவடைகின்றது.

ஐந்தாவது காட்சி அரண்மனையில் இடம்பெறுகின்றது. அரசன், வாதவூரர், அமைச்சர் ஆகியோர் இக்காட்சியில் இடம்பெறுகின்றனர். வாதவூரர் அரண்மனைக்கு வருகிறார். அரசன் கேலியாக வரவேற்று, "குதிரை எங்கே? பொன் பொருள் எங்கே?" என வினவுவதும் "மூல நட்சத்திரத்தன்று குதிரைகள் வரும்." என்று கூறியதும் அரசன் "ஓய்வெடுத்துக் கொள்ளும்" என்று கூறிவிட்டு அமைச்சரிடம் "பணம் கொடுத்து வாங்காத குதிரைகள் எப்படி வரும். பொறுத்திருந்து பார்ப்போம்." என்ற செய்தியுடன் ஐந்தாவது காட்சி நிறைவடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாவது காட்சி அரண்மனையில் இடம்பெறுகின்றது. அரசன், அமைச்சர், சேவகர்கள் இக்காட்சியில் இடம்பெறுகின்றனர். இக்காட்சியில் ஆவணி மூலத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னம் நடைபெறுகின்றது. திருப்பெருந் துறையிலோ அன்றி வேறு பிரதேசத்திலோ குதிரைகள் எதுவும் இல்லை. என்ற செய்தியுடன் சேவகன் வருகிறான். "வாதவூரரை சிறையிலடைத்து பொன் பொருளை அறவிடுங்கள்." என்று சேவகர்கட்கு கட்டளை இடுவதுடன் ஆறாவது காட்சி நிறைவடைகிறது.

ஏழாவது காட்சி சுடுமணலில் இடம்பெறுகின்றது. இங்கு வாதவூரர் சுடுமணலில் நின்று கொண்டு இறைவனை இறைஞ்சும் காட்சி இடம்பெறுகின்றது.

எட்டாவது காட்சி அரண்மனையில் இடம்பெறுகின்றது. அரசன் வாதவூரர் சேவகன் ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் குதிரைகள் வந்து விட்டன. என்ற செய்தி அரசனுக்கு சொல்லப்படுகின்றது. அரசன் வாதவூரரை அழைத்து "குதிரைகளைப் பார்ப்போம் வாரும்." என்ற செய்தியுடன் நிறைவடைகின்றது.

ஒன்பதாவது காட்சி கோபுரவாசலில் இடம்பெறுகின்றது. அரசன், வாதவூரர், அமைச்சர், குதிரைவீரன், குதிரைகளும் வீரர்களும் முதலான பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் குதிரைகள் வந்துவிட்டன. குதிரையை செலுத்திவந்த குதிரைவீரர்களது சாகசங்களும் சிறப்பாக இருந்தன. குதிரைத் தலைமைவீரன் பட்டுக்கொடுத்து கௌரவிக்கப்படுதல். அவன் அலட்சியமாக பட்டைப்பெற்றுக் கொண்ட முறை அரசனுக்குக் கோபமூட்டவும் வாதவூரர் "அது அவர்களது நாட்டு வழக்கம்" என ஆறுதல் கூறுவதும் குதிரைகளைப் பரிசோதித்து தரமான பஞ்சகல்யாணிக் குதிரைகள்தான் என்பதை தெரியப்படுத்துவதும் இக்காட்சியில் இடம்பெறகின்றன.

பத்தாவது காட்சி அரண்மனையில் இடம் பெறுகின்றது. அரசன், சேவகர்கள் முதலான பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் பரிகள் நரிகளாக மாறி அட்டகாசம் செய்கின்றன. என்ற செய்தியுடன் வாதவூரரை சுடுமணலில் நிறுத்தி குதிரைவாங்கக் கொடுத்த பொன் பொருட்களை அறவிடும்படி அரசன் கட்டளை இடுவது வரை இடம்பெறுகின்றது.

பதினோராவது காட்சி மணல்வெளியில் வாதவூரர் நின்று இறைவனை நோக்கி வேண்டுவது இடம்பெறுகின்றது.

பன்னிரண்டாவது காட்சி அரண்மனையில் இடம்பெறுகின்றது. அரசன், அமைச்சர், சேவகன் ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் வைகையாறு பெருக்கெடுப்பது பற்றிய செய்தியுடன் சேவகன் வருகின்றான். வைகையாறு என்றுமில்லாதவாறு பெருக்கெடுப்பதற்கு காரணம் யாது? என்று விழிக்கின்றனர். வாதவூரரை துன்புறுத்தியதனாலே வைகை பெருக்கெடுத்தது என உணர்ந்து உடனடியாக வாதவூரரை தண்டனையின்றி விடுவிக்குமாறு அரசகட்டளையுடன் இக்காட்சி நிறைவடைகின்றது.

பதின்மூன்றாவது காட்சி வைகையாற்றங் கரையில் இடம்பெறுகின்றது. அரசன், அமைச்சர், வாதவூரர், சேவகன் முதலான பாத்திரங்கள் இக்காட்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்றனர். வாதவூரரிடம் அரசன் மன்னிப்புக் கேட்பதுடன் வைகையாற்றின் அணையை கட்டும் பொறுப்பும் விடப்படுகின்றது. என்ற செய்தியுடன் இக்காட்சி நிறைவடைகின்றது.

பதின்நான்காவது காட்சியில் தண்டோராப் போடுபவனால் வைகையாற்றின் அணைக்கட்டு கட்டப்படுவது தொடர்பான செய்தி சொல்லப்படுகின்றது.

பதினைந்தாவது காட்சி கோவிலில் இடம்பெறுகின்றது. செம்மனச்செல்வி கோயிலில் சென்று "வைகைக்கரையில் அணை கட்டுவது எப்படி? இறைவா! என் துன்பத்தைப் போக்கமாட்டாயா!" என வேண்டுவது காட்டப்படுகின்றது.

பதினாறாவது காட்சி செம்மனச் செல்வியின் குடிசையில் இடம்பெறுகின்றது. கூலியாள், செம்மனச் செல்வி ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காட்சியில் சிவனாகிய கூலியாள் வருவதும் செம்மனச்செல்வி வைகையாற்றின் அணைக்கட்டின் தன் பங்கைக் கட்டித்தருமாறும் கேட்கிறார். கூலியாள் முற்கூலி கேட்பதும் செம்மனச்செல்வி "பிட்டு தருகிறேன்." என்று கூறுவதும் "மாலையில் பிட்டு விற்று வரும் பணத்தை கூலியாகத்தருகிறேன்." என்று கூறுவதுடன் கூலியாள் பிட்டை உண்டபின் உதிர்ந்த பிட்டுக்களை கட்டிக்கொண்டு "வைகையாற்றங்கரைக்குச் செல்வோம் வாருங்கள்." என்ற செய்தியுடன் இக்காட்சி நிறைவடைகின்றது.

பதினேழாவது காட்சி வைகைக் கரையில் இடம்பெறுகின்றது. இக்காட்சியில் செம்மனச் செல்வியும் கூலியாளும் இடம்பெறுகின்றனர். இக்காட்சியில் செம்மனச் செல்வி வைகைக்கரையின் அணையைக் கட்டும் தன் பங்கை கூலியாளுக்குக் காட்டுகின்றார். கூலியாள் மண்ணை வெட்டி கூடையில் போட்டு தூக்குவதும் பின் பிட்டை உண்பதுமாக இருக்கின்றார். செம்மனச் செல்வி எப்படி எனது பங்கை அடைக்கப் போகின்றான். என இறைவனிடம் வேண்டுவதும் இடம் பெறுகின்றது. கூலியாள், "பாட்டி நீ போய் பிட்டவித்துக் கூலியை வைத்துக் கொள். நான் அணையைக் கட்டி முடித்து விடுவேன்." என்ற செய்தியுடன் நிறைவடைகின்றது.

பதினெட்டாவது காட்சி வைகைக் கரையில் இடம் பெறுகின்றது. அரசன் வாதவூரர், அமைச்சர், சேவகன், கூலியாள் முதலான பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. "வைகைக் கரையில் அணைக்கட்டு முறையாக கட்டப்படுகின்றதா?" என அரசர் வினவுவதும், தலைமை அமைச்சர் அதற்கு பதிலளிப்பதும் இடம் பெறுகின்றது. கூலியாளாக வந்த சிவபெருமானது விந்தைகளை சேவகன் கூறுவதும் அரசன் கோபம் கொள்வதும் "கூலியாளை அழைத்து வா" என கட்டளை இடுவதுடன் இக்காட்சி நிறைவடைகின்றது.

பத்தொன்பதாவது காட்சி மரநிழலில் இடம் பெறுகின்றது. இக்காட்சியில் கூலியாள், சேவகன் ஆகிய பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. கொன்றை மரநிழலில் படுத்திருக்கும் கூலியாளை நித்திரையிலிருந்து எழுப்பி அரச கட்டளையைக் கூறி "அரசனிடம் செல்ல வேண்டும் வா" எனக் கூறுவது வரை இடம் பெறுகின்றது.

இருபதாவது காட்சி வைகைக் கரையில் இடம் பெறுகின்றது. இக் காட்சியில் அரசன், வாதவூரர், அமைச்சன், சேவகன், கூலியாள் முதலான பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. இக் காட்சியில் கூலியாளாக வந்த சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிக்கப்படுகின்றார். இந்த வேளையில் எல்லோர் முதுகிலும் அடி விழுகிறது. கூலியாளாக வந்த சிவனை காணவில்லை. இதனை உணர்ந்த அரசன் வாதவூரரிடம் பணிந்து "உங்கள் மகிமையை உணராமல் நடந்து விட்டேன். இந்த நாட்டை நீங்கள் தான் ஆள வேண்டும்." எனக் கேட்கிறான். அதற்கு வாதவூரர் "தலைமை அமைச்சர் பதவியிலிருந்து என்னை விடுவித்தருள வேண்டும். நான் குருந்த மரநிழலில் இருக்கும் அந்த குருவிடம் செல்ல வேண்டும்" எனக் கூறுகின்றார். மன்னரும் அதற்கு இணங்கி வாதவூரரை விடுவித்து சைவத்தை பரவி பணிய அனுமதித்து விடுவது வரை இடம் பெறுகின்றது. வாதவூரர் "தென்னாடுடைய சிவனே போற்றி" எனக் கூறிக் கொண்டு செல்கின்றார்.

வாதவூரரது இறை நம்பிக்கை, இறைவனது அருட் செயல்கள், திரு விளையாடல்கள் என்பவற்றை மிகச் சிறந்த நாடக எழுத்துருவாக வடித்திருக்கிறார். தமிழ்மணி அகளங்கன் அவர்கள் இந்நாடகத்தில் தெய்வீக உணர்வை சிறப்பான உரையாடல்களூடாக தந்திருக்கின்றார். இன்று சமய உணர்வினை, பக்தி உணர்ச்சியினை இளையோரது மனதில் பதிய வைப்பதற்கு, திருவாதவூரர் என்ற நாடகம் சிறந்த படைப்பு எனக் கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

### 0.6. அனார்க்கலி

இந்நாடகம் இஸ்லாமிய காதல் கதையின் அடிப்படையில் நாடகமாக தந்திருக்கிறார் நாடகாசிரியர். அனார்க்கலி நாடகத்தில் மட்டும் தனது கற்பனை கலக்கப் பட்டுள்ளதாக கூறும் அகளங்கன் அவர்கள் பல இஸ்லாமிய அறிஞர்களது ஆலோசனை பெறப்பட்டதாகவும் கூறுகின்றார். இவ்விடத்தே இக்கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக இந்நாடகத் தொகுப்பில் அடங்கிய அனைத்து நாடகங்களிலும் கற்பனை பொருத்தமான இடத்தில் பொருத்தமாக இடம் பிடித்திருக்கின்றது என்றே கருதுகின்றேன்.

ஆறு காட்சிகளைக் கொண்ட அனார்க்கலி நாடகத்தில் அனார்க்கலி, சலீம், அக்பர், ராஜாமான்சிங், அனார்க்கலியின் தாய், ஆகிய ஐந்து பாத்திரங்கள் வருகின்றன. சலீம், அனார்க்கலி ஆகியோரது காதல் பற்றிய கதையை விளக்கியிருக்கின்றது. சலீம் டில்லி சாம்ராஜ்யத்தின் இளவரசன். அனார்க்கலி ஒரு நடனப்பெண். பேரழகி. அனார்க்கலியின் மீது அன்பு கொண்டு காதல் செய்கின்றார் இளவரசர் சலீம். காதல் என்பது குலம் கோத்திரம், சாதி, நிறம், அந்தஸ்து பார்த்து வருவதில்லை. சலீம், அனார்க்கலி இருவரது காதலையும் சலீமின் தந்தையும் டில்லிசாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியுமான அக்பர் பாதுஷாவுக்கு பிடிக்கவில்லை. "நாட்டியக்காரி பட்டத்து இளவரசியா?" தன் அமைச்சராகிய ராஜாமான்சிங் அவர்களை அனார்க்கலியிடம் அனுப்பி சலீமை மறந்து விடுவதுடன் இரவோடு இரவாக நாட்டை விட்டு ஓடிவிடுமாறும் கட்டளை இடுகின்றான். இதனை ஏற்றுக்கொள்ளாத அனார்க்கலி, "அக்பர் என்ன, கடவுளே வந்தாலும் சலீமுக்கும் எனக்குமான காதலை விடமாட்டேன்" எனக்கூறுகின்றாள். அக்பர் தன் மகனாகிய சலீமை அழைத்து அனார்க்கலி மீது கொண்ட காதலை விட்டுவிடுமாறு பணிக்கிறார். சலீம் தந்தையை எதிர்த்து "அனார்க்கலியை மறப்பதை விடுத்து என் உயிரை விடுவதையே நான் விரும்புகிறேன்" எனக் கூறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சலீமை கல்லறையில் அடைத்து வைக்கின்றார் அக்பர். சலீமுக்கு வழங்கிய தண்டனை தவறானது. தங்கள் மண்டலத்துக்கு முடி சூடவேண்டியவன் தங்கள் மகன் சலீம். அரசபரம்பரை அழியக்கூடாது என்பதை அமைச்சர் ராஜாமன்சிங் அக்பருக்கு எடுத்துரைத்து அக்பரது மனதை மாற்றி இளவரசன் சலீமை விடுதலை செய்து விடுமாறு கேட்கின்றார். அதற்கு அக்பரும் உடன்பட்டு விடுகின்றார்.

இந்த வேளையில் அனார்க்கலியை கைது செய்து கொலை செய்து விடுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அனார்க்கலியின் தாயார் அரசர் அக்பரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டதற் கிணங்க கல்லறையின் ஊடாக சுரங்கமமைத்து நாட்டின் எல்லைக்கப்பால் சென்றுவிடுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கேற்ப அனார்க்கலியும் தாயும் அயல் நாட்டுக்குத் தப்பிச் செல்ல ஏற்பாடாகியது.

நீண்ட நாட்களின் பின்னால் சலீம் அரசாட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதுடன் மணம் புரிந்தும் கொண்டான், என்பது தெரியவருகின்றது. சலீம் நாட்டைக் கடந்து சென்றபோது அனார்க்கலியைச் சந்திக்கின்றான். அனார்க்கலி திருமணம் புரிந்து கொண்டதும் பிள்ளை பெற்றுக் கொண்டதும் தெரியவருகின்றது. சலீம், அனார்க்கலியிடம் மன்னிப்புக் கேட்கின்றான். "நாம் திருமணம் புரிந்து கொள்வோம் வா" எனக்கேட்கின்றான். இதற்கு அனார்க்கலி, "அது முடியாது" என மறுத்துரைப்பதுடன் சலீமின் நடத்தை தொடர்பாகவும் தனது மன உணர்வைக் கொட்டிவிடுகின்றாள். "அது முடிந்த கதை. பட்டுப்போய் நிற்கும் என் உணர்வுகளுக்கு நீர்வார்க்க நினைப்பதில் பயனில்லை" எனக் கூறி விடுகின்றாள்.

அத்தோடு நில்லாது உங்கள் மனைவி, குழந்தை, அரசு, இவைகளோடு சுகங்காணுங்கள் அதுதான் முறை." என்று கூறிச்செல்கிறாள். நாடகம் நல்ல சூழமைவுடன் நிறைவடைகின்றது. இது காதலின் அவலம். அருமையானதொரு காதல் கதையை வாசித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

இந் நாடகத்தைப் பொறுத்தவரையில் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் மிக்க உரையாடல்கள் கொண்டு படைத்திருப்பது நாடகக் கதையோட்டத்தை வளர்த்தெடுக்க உதவியதெனலாம். உயரிடத்துக் காதலில் வரும் அவலம், ஒரு நாட்டியக்காரிக்கு மட்டுமல்ல இன்றைய இளைஞர்களுக்கும் இது ஒரு பாடமாக அமையும் என்று நம்புகின்றேன்.

### 0.7. கவரிவீசிய காவலன்

இந்நாடகம் புறநானூற்றுச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்நாடகம் மூன்று காட்சிகளைக் கொண்டது. பெருஞ்சேரல் இரும்பொறை, அமைச்சர், மோசிகீரனார், புலவர், வீரன் ஆகிய பாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன.

பெருஞ்சேரல் இரும்பொறை எனும் சேரநாட்டு அரசன் தகடூரை வெற்றி கொண்டமைக்காக முரசுக்கு ஒரு விழா எடுக்கும் நன்நாளில் புலவர் மோசிகீரனார் மன்னன் புகழ்பாட மன்னனது இருப்பிடம் நோக்கி வருகின்றார். இந்த வேளையில் வீரன் ஒருவன் சந்திக்கின்றான். முரசுக்கு விழா நடக்கிறது. விழாவில் கலந்து கொள்ள மன்னர் சென்றுவிட்டார். என்று கூறிச்சென்று விடுகின்றான் வீரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத்துப் போன புலவர் மோசிகீரனார் முரசு கட்டிலில் படுத்துறங்கி விடுகின்றார். வீரமுரசுக்கான ஊர்வலம் நிறைவுக்கு வந்து விட்டது. வீரமுரசு வைக்கும் கட்டில் தயாராகி விட்டது. மகிழ்ச்சிக் களிப்பில் மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை காணப்படும் வேளை "வீரமுரசு வைக்கப்படும் கட்டிலில் யார் உறங்குவது." கோபம் கொண்ட மன்னன் தன் வாளை உருவிய படி "எந்த மூடன் வீரமுரசு வைக்கப்படும் கட்டிலில் உறங்குவது. அந்த மூடனுக்கு சிரச் சேதம் தான்." என்று வீரமுரசின் கட்டிலுக்கருகே செல்கின்றான். "களைத்து வாடிய நிலையில் உறங்கும் இந்த வயோதிபர் யாராக இருக்கும். இவர் புலவராகத்தான் இருக்கும். நான் தோற்று விட்டேன். இந்தப் புலவரையா நான் கொலை செய்ய நினைத்தேன்." வாளை எறிந்து விட்டு "பரணிபாடும் புலவரை கொலை செய்யவா வாளெடுத்தேன். இந்த வாள் எனக்கு வேண்டாம்." என்று எறிந்து விட்டு சாமரை எடுத்து வீசுகிறான் மன்னன்.

புலவர் நித்திரையால் எழும்புகின்றார். தான் காண்பது கனவா? என விழிக்கின்றார். "மன்னன் கவரி வீசுவதா? வீரமுரசின் கட்டிலில் நித்திரை செய்த என்னைக் கொலை செய்யுங்கள்" என மன்னனிடம் வாளெடுத்துக் கொடுக்கிறார் புலவர். "புலவரே! வாளைப் போடுங்கள். என்னை மன்னித்து விடுங்கள். தங்களது நித்திரையை குழப்பி விட்டேன். தமிழ் பாடும் புலவருக்கு கவரி வீசும் பாக்கியம் எந்த மன்னருக்கு கிடைத்திருக்கும்." என உள்ளம் நெகிழ உரைக்கின்றான் மன்னன்.

"புலவரை உன்போல் ஆதரிக்கும் தமிழ் மன்னன் இவ்வையகத்தில் யாருளர். நீ அடைந்த வெற்றிப் புகழை விட, புலவருக்கு கவரி வீசியமை என்றும் உயர்வாய் நிலைத்து நிற்கும்." எனக் கூறுவதுடன் இந்நாடகம் நிறைவடைகின்றது.

தமிழுக்கும் தமிழ் மொழிக்கும் தொன்மையைக் காட்டி நிற்கும் பழந்தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய பதினெண் மேற் கணக்கு நூல்களில் புறநானூறும் ஒன்று. தமிழர் வீரம் அல்லது போர் பற்றிப்பாடும் நானூறு பாக்களைக் கொண்ட புறநானூற்றுப் பாடலொன்றை அடியொற்றி இந்நாடகம் வெகு சிறப்பான மொழி நடையில் எழுதப்பட்டிருப்பது இந்நாடகத்தின் சிறப்பு. "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது", என்பதற்கு ஒப்ப இந்நாடம் அளவிலே சிறிதாக இருப்பினும் மிகப் பெரிய உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைய மன்னர்கள் அல்லது நாடாள்வோர் இம் மன்னனது செயலைக் கற்க வேண்டும். என்ற சிந்தனை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார் நாடகாசிரியர்.

### 0.8. முடிவுரை

தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் "கங்கையின் மைந்தன்" எனும் இலக்கிய நாடகங்களின் தொகுப்பானது "தமிழ் இலக்கியங்களின் தேறல்" என்றே கூற வைக்கின்றது. கம்பராமாயணம், மகாபாரதம், திருவாதவூரடிகள் புராணம், முஸ்லீம் இலக்கியம், சங்க இலக்கியம் முதலான இலக்கியங்களிலிருந்து சுண்டி எடுத்தது போன்று ஒவ்வொரு இலக்கியத்திலிருந்தும் மிக முக்கியமான கட்டங்களைத் தெரிவு செய்து அதனை தனக்கே உரித்தான பாணியில் நற்றமிழ் மொழியால் படைத்து தந்திருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆறு நாடகங்களும் தமிழைக் கற்கும் மாணவர்கள் கற்பதற்கு வழி சமைத்துக் கொடுக்க வேண்டும். இந்த நாடகங்களை தரம் **ஆறுமுதல் க.பொ.த உயர்தரம் ஏன் பல்கலைக்கழக மாணவர்கள் வரை கற்பதற்கு, "இலக்கிய பாடமாக"** இலங்கையின் தமிழ்க் கல்விப் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தால் மாணவர்க்கு இலக்கியத்தை இலகுவாக கற்பிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என நினைக்கின்றேன். தமிழ்த் துறையைச் சேர்ந்தோர்க்கு எனது எண்ணத்தை முன்வைக்கின்றேன்.

அதே வேளை இன்று தரம் 6 முதல் பல்கலைக்கழக கல்வி வரை நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. எனினும் இலக்கிய நாடக வகைக்கு எடுத்துக் காட்டாக எந்த வொரு "நாடக பாடம்" தன்னும் எடுத்துக் கொள்ளப் படவில்லை. **கங்கையின் மைந்தன்** போன்ற தரமான இலக்கிய நாடகங்களில் இருந்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் போது மாணவர்கள் தமிழ் அறிவையும் கூடவே நாடக இலக்கிய அறிவையும் ஒருங்கே பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். துறை சார் அறிஞர்கள் இந் நாடகங்களை வாசிப்பதுடன் பாடத்திட்டத்தில் இணைப்பதற்கு பரிந்துரை செய்து உதவுவார்கள் என நம்புகின்றேன். வாழ்க தமிழ்! வளர்க நும்பணி! என வாழ்த்தி இக் கட்டுரையினை நிறைவு செய்கின்றேன்.

---

**தம்பையா தர்மராசா**

போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து இக்கடிதம் வரைகின்றேன். தாங்கள் படைத்த **அன்றில் பறவைகள்** நாடக ஆக்கப் பிரதி பற்றியதே. நீண்ட காலத்திற்கு முன் வெளியான பிரதியை சில தினங்களுக்கு முன்பே கண்டேன். வாசித்தேன். இல்லை இல்லை தேன் பருகினேன். சத்தியமாக உண்மை அந்தப் பிரதியும் இரவல்தான் அருமை. நல்ல கதையம்சம். அதை விமர்சிக்க வார்த்தைகள் இல்லை. அந்த தகுதியும் எனக்கில்லை.

நாடக பிரதியை வாசிக்க இப்படியென்றால் வானொலி நாடகமாக கேட்க எப்படி இருக்கும் என ஒரு கணம் நினைத்தேன். வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# கலாநிதி அகளங்கன் களங்கமற்ற படைப்பாளி

**திரு.சதாசிவம் பவானந்தன்**

விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

இலங்கையின் வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்தின் பம்பைமடு கிராமத்தில் பிறந்த **நாகலிங்கம் தர்மராஜா** அவர்கள், தமிழ் இலக்கியத்துறையிலும் சைவ சமயத்துறையிலும் **அகளங்கன்** எனும் புனைபெயருடன் தேசிய, சர்வதேச மட்டத்தில் போற்றப்படுபவர்களின் வரிசையில் தன்னையும் ஒருவராக அடையாளப்படுத்தி நிற்பவராவார்.

இவர் ஆரம்பக்கல்வியில் இருந்து உயர்கல்வி வரை விஞ்ஞான கணிதத் துறையில் தன்னை வளப்படுத்தி கணித ஆசிரியராக கல்விப்பணியினைச் சிறப்பாக ஆற்றியவராவார். தமிழ் மொழியிலும், சைவசமயத்திலும் இருந்த பற்றுறுதியின் காரணமாக இளமைக் காலத்தில் இருந்தே தமிழிலக்கிய மேடைகளிலும் ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகளிலும், தன்னை ஈடுபடுத்திக் கல்வித்தாயின் கருணையினால் தமிழ் கூறும் நல்லுலகில் தனக்கென ஓர் இடத்தினைப் பதித்தவராவார்.

காலப் போக்கில் அன்னாருக்கிருந்த புலமையும் அனுபவ முதிர்ச்சியும் விடயங்களைத் தேடும் ஆற்றலும் அவரைப் பல நூல்களுக்குச் சொந்தக்காரனாகவும் ஆக்கியது. அது மட்டுமல்லாமல் கவிஞனாகவும், இலக்கியவாதியாகவும், சிறந்த பேச்சாளராகவும், ஆன்மீக வாதியாகவும், சமூகத்தின் பார்வையில் பார்க்கப்படுபவரும் போற்றப்படுபவருமாவார். இவரின் கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், பாடல்கள், கட்டுரைகள் என்பன யாவும் சிறந்த மொழிவளம்,இலக்கியச்சுவை, சொல்நயம், கருத்தாழம் மிக்கதாகக் காணப்பட்டதோடு களங்கமற்ற படைப்புக்களாகவும் காணப்பட்டன. இவையாவும் **தமிழ்மணி அகளங்கன்** எனும் பெயருக்கு அணி சேர்த்து அலங்கரித்து நிற்கின்றன என்பது எனது கருத்தாகும். தமிழ்மணியின் எழுத்தாக்கத்திறனையும், பலநூல்களைக் கற்றுச் சபையோருக்கு முன்வைக்கும் ஆற்றலையும் அனுபவ முதிர்ச்சியினையும் அறிந்து கொண்ட தேசிய விருதுப் பட்டம் வழங்கும் தலைமை நிறுவனம் அவருக்கு **கலாநிதிப்**பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தமை தமிழுக்கும் தமிழ் பேசும் சமூகத்திற்கும் கிடைத்த பேறாகும். தமிழுக்கும் சைவத்திற்கும் சொத்தாக விளங்கும் **தமிழ்மணி கலாநிதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகளங்கனின்** இலக்கியப்பணி தொடரவும் மேலும் பல நலங்கள் பெற்று பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் பாரினிலே வாழவும் இறையாசி வேண்டி வாழ்த்தித் தொடர்கின்றேன்.

சிவபுராணம், திருவெம்பாவை, சகலகலாவல்லிமாலை போன்ற சைவநூல் களுக்கும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஆகிய ஔவையார் அருளிய நீதி நூல்களுக்கும், வெற்றிவேற்கை எனும் நீதி நூலுக்கும் உரை விளக்கம் எழுதி, சிவனடியார்கள் பொருளுணர்ந்து பாடி வழிபாடு செய்வதற்குக் காரண கருத்தாவாக அமைந்தவராவார். பன்னிரு திருமுறை அறிமுகம், நாமறிந்த நாவலர் ஆகிய உரைநடை நூல்களையும் மாணவர்களுக்காக எழுதியவர்.

அன்னார் உரைவிளக்கம் எழுதிய நூல்களுள் சகலகலாவல்லிமாலை, சிவபுராணம், திருவெம்பாவை ஆகிய நூல்களின் சிறப்புக்கள் பற்றி எனது பார்வைக்குப் பட்ட சில கருத்துக்களை முன்வைக்கின்றேன். வவுனியா இந்துமாமன்ற நிர்வாகிகளான சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி ஐயா அவர்களினதும், இறைபணிச் செம்மல் வை.செ.தேவராஜா அவர்களினதும் அயராத அவாவினையும், வேண்டு கோளினையும், ஏற்றுக் கொண்ட தமிழ்மணி அகளங்கன் அவர்கள் சீ.ஏ இராமஸ்வாமி, அறக்கட்டளை நிதியத்தினூடாகவும், இந்துமாமன்றத்தினூடாகவும் இந்நூல்களின் உரை விளக்கத்தினை வெளியிட்டு வைத்துள்ளார்.

**சிவபுராணம் :-**

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த சிவபுராணத்தினை அடியார்கள் பொருளுணர்ந்து பாடுவதற்கும், வழிபாட்டினைச் சிறப்பிப்பதற்கும், இப்புராணத்தின் உன்னதத் தன்மையினை அறிந்து இறைவனோடு இரண்டறக்கலப்பதற்கும் பக்தி நெறியின் பால் வாழ்க்கையினை வாழ்வதற்கும் வழிகாட்டுவதாக இந்நூ லுக்கு எழுதப்பட்ட பொருள் விளக்க உரை காணப்படுகின்றது. மேலும், பாட்டின் பொருளுணர்ந்து சொல்வதற்கு ஏற்ற வகையில் வரிக்கு வரி உரை எழுதி இலகு படுத்தப் பட்டிருப்பதால் இலகுவாக வாசித்து, புலமையற்ற வரும் அதனைப் புரிந்து கொண்டு பாடுவதற்கும், மனனம் செய்வதற்கும் ஏற்ற வகையில் ஆக்கப்பட்டுள்ளது. இலகுவான மொழிநடைப்படுத்தப் பட்டிருப்பதோடு எழுத்துக்கள் பெரிதாகவும், தெளிவாகவும் இருப்பது முதியவர்களும் பார்த்து படித்தறிவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பது இந்நூல் பற்றிய உரை விளக்கத்தின் சிறப்புக்களாகும்..

**சகலகலாவல்லிமாலை :-**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த இச் சைவநூலுக்கு உரைவிளக்கம் எழுதி சிவநெறிப்புரவலர் சீ.ஏ இராமஸ்வாமி அறக்கட்டளை நிதியத்தால் 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வெளியீடானது சைவமக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்குக் கிடைத்த பேறாகும். பாடசாலையின் பாடத்திட்டத்திற்கு அமைவாக உரை விளக்கம் அமைந்திருப்பதால் பரீட்சைக்குப் பாடமாக்குவதற்கும், பண்ணிசைப் போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்கள் பொருள் உணர்ந்து ஓதுவதற்கும் இந்நூல் பெரிதும் பயன்பெறும் வகையில் உள்ளது.

குறிப்பாக மாணவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை இம் மாலையினைப் படித்து பொருளுணர்ந்து பண்ணோடு பாடி பேரருள் பெறுவதற்கு ஏற்ற வகையில் இந்நூலின் உரைவிளக்கம் ஆக்கப்பட்டுள்ளது. இன்று எம்மவர்மத்தியில் மனனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பாடுவதற்கு ஏற்ற பயிற்சியின்றி அதிகமானவர்கள் காணப்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்றாற்போல் **பதவுரை, பொழிப்புரை, உரைச்சுருக்கம், சிறப்பு** என்ற வகையில் வைப்புச்செய்யப்பட்டு இரத்தினச்சுருக்கமாக இவ்வுரை விளக்கம் ஆக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும். பாட்டிற்குப் பொருள் புரியாதவிடத்து அது இலகுவிலே மனதில் பதியாது. இதை உணர்த்த அகளங்கன் அவர்கள் சகலகலாவல்லி மாலையின் பொருளைப் பாடுவோர் யாவரும் இலகுவில் விளங்கும் வகையில் உரை எழுதி, அதனை மனனம் செய்யும் வகையில் வெளியிட்டிருக்கின்றார்.

**திருவெம்பாவை :-**

மணிவாசகப்பெருமான் அருளிய திருவெம்பாவைப் பிரபந்தமானது மிகவும் பழமை வாய்ந்தது. இது பாவைப்பாட்டு எனவும் அழைக்கப்படுகின்றது. மார்கழி மாதத்தில் திருவெம்பாவை நோன்பின் போது ஆலயங்களிலும், அதிகாலைப் பொழுதில் வீதி வீதியாகச் சென்று துயிலெழுப்பும், நிகழ்வுகளிலும் இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல்கள் மிகுந்த சொற்சுவையும், பொருட்சுவையும், பக்திசுவையும் கொண்டமைந்த பக்திப் பாசுரமாகையால் இதனை எம்மக்கள் படித்தும் பாடிப்பரவசமடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்நூலுக்கான உரை விளக்கம் எழுதப்பட்டுள்ளது.

இது **பாடல், உரை, குறிப்பு,** என்ற வகையில் வைப்பு ஒழுங்கு செய்யப்பட்டு பொருளுணர்ந்து விளங்கிப் பாடல்களைப் பாடுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பது சிவனடியார்களுக்குக் கிடைத்த பேறாகும்.

எமது நாட்டிலுள்ள நகரங்கள், கிராமங்கள் தோறும் திருவெம்பாவை விரதம் மார்கழி மாதத்திலே அதிகமான இந்துக்களால் அனுட்டிக்கப்படுவதுண்டு. இவர்களின் கரங்களில் இவ்வுரைவிளக்க நூலானது கிடைக்கப்பெறின் பெரிதும் பயன்பெறக்கூடியது. பாவை வழிபாட்டினை சிறப்பாக ஆற்றுவதற்கு உதவக்கூடியவை என்பது எனது கருத்தாகும்.

சைவம், தமிழ் ஆகிய இருதுறைகளிலும் புலமைகொண்ட தமிழ்மணி, கலாநிதி அகளங்கன் அவர்கள் பழம்பெரும் சைவநூல்களுக்கு உரைவிளக்கம் எழுதி வெளியிட்டிருப்பதனையிட்டு சைவ அடியார்களும், சமயநிறுவனங்களும், இந்துமக்களும், பெரிதும் வரவேற்று நிற்கின்றனர் என்பது திண்ணம்.

அகளங்கனின் சைவத் தமிழ்ப்பணி வாழ்க வளர்க. இன்னும் பல நூல்களுக்கு உரைதந்து எமைப் பயன்பெறச் செய்க.

**திரு.சதாசிவம் பவானந்தன்**
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# நயமுரைக்க வல்ல நற்றமிழ்ச் சொல்லோவியன்

**திரு.மிக்கேல் சூசைதாசன்.** M.A (தத்துவமும் சமயமும்)
மூத்த விரிவுரையாளர், வவு.தேசிய கல் கல்லூரி)

**த**மிழ்த் தாயின் மனங்கனிய மாநிலத்தில் உதித்தவனோ? கன்னி மகள் களிப்படைய அல் களங்கன் ஆனவனோ? சங்கத் தமிழ் எடுத்து சங்கம் வளர்த்தவனோ? இற்றைத் தமிழ் வாழ இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் நாயகனோ? யார் இவன்? மாசு - மறுவற்றவன், களங்கமில்லாதவன். அவனே தான் **அகளங்கன்.**

1987களில் **வாலி** என்ற ஆய்வு நூல் வெளியீட்டில் முதன் முதலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் முகம் கண்டேன். 1997களில் வவுனியாவில் இவன் அகம் கண்டேன். கணிதத் துறையில் காலடி பதித்தவன் தமிழ்த்துறையில் தனக்கென முத்திரை பதித்தவன்.

தத்தித் தவழும் தமிழுக்கு முத்தங் கொடுத்து வாரியணைத்து வாலைக் குமரியாக்கி வன்னி மண்ணில் உலாவர விடுத்தவன். கவிச்சுவை நனி சொட்டச் சொட்ட நயமொழுகும், நாவல்லோன். மட்டுவில் தந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையவர்களுக்குப் பின் **நயமுரைக்க வல்ல நற்றமிழ்ச் சொல்லோவியன்** என்றால் அவன் அகளங்கனாகத்தான் இருக்க முடியும்.

தமிழுக்கென இலக்கிய மரபுகளுண்டு, இலக்கண வரம்புகளுண்டு. இரண்டையும் இகவாமல் நயமுரைக்கும் வன்மை கண்டு வாழ்த்துரைக்க நான் முயன்றேன். சங்கத் தமிழுக்குச் சரியான நயவுரையும், இதிகாச புராணங்களுக்கு இதமான படனங்களும், நாட்டிய நாடகத்தில் நயமான இசையும் உரையும் அசைவும் தனித்தன்மை பெற ஆக்கி அளித்தவன். கதை புனைவோன், கவிதை விளைப்போன். தர்க்கரீதியாக திறனாய்வுச் சிந்தனையைச் சீராக எடுத்துரைப்போன். நாடகமெனில் சொல்லில் வடித்து மனத்திரையில் காட்சிகளை விரித்து உள்ளத்து உணர்வுகளைத் துண்ணெனத் தோற்றுவிக்கும் சொல்லோவியன். இத்தகைய தமிழ் மகன் தான் தமிழ்மணி அகளங்கன்

தமிழ் வாழ தாழா துழைக்கும் ஊக்கம் மிக்கோன். எழுத்தறிந்து சொல்லியற்றி, பொருளுணர்ந்து உரையியற்றி, இசையறிந்து பாட்டியற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாற்றற் பனுவலனிவனது தமிழ்ப் பணிகள் தொடரப் பணிவான வாழ்த்துக் கூறித் தொடர்கிறேன்.

## இலக்கிய நாடகங்கள்

இலக்கிய நாடகங்கள் என்ற தொகுப்பில் பப்புருவாகனன் முதல் ஆனைகட்டிய அரியாத்தை வரையிலான ஆறு நாடகங்களைத் தொகுத்து வழங்கியிருக்கிறார் தமிழ்மணி அகளங்கன் அவர்கள்.

நாடகம் என்பது நடிப்பும் பாட்டும் என இருந்த கூத்து மரபு மாறி நடிப்பும் உரை நடையும் என்று ஆகிவிட்ட இன்றைய யுகத்தில் நலிந்து செல்லும் நாடக மரபை வலிகொண்டு வாழச் செய்ய வரிந்து கட்டிக்கொண்டு, வண்ணத்தமிழில் தன் எண்ணச் சிறகடித்து இலக்கியக் கதைகளை நாடகங்களாக்கி அளித்துள்ளமை அரிய பெரிய பணியாகும்.

திரைப்பட மோகத்துள் மூழ்கி முக்குளித்திருக்கும் தற்கால சமூகத்தவருக்கு நாடகத்தின் தனித் தன்மையையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் சொற்சித்திரமாக வரைந்தளித்துள்ளார் நாடக ஆசிரியர் அவர்கள்.

## பப்புருவாகனன்

தமிழிலக்கியங்களில் பலவற்றின் மூலக் கதைகளையன்றி கிளைக் கதைகளைப் பலர் அறியார். மூலக்கதைகளின் நீட்சிக்குத் துணைக்கதைகளே விழுதுகளாகின்றன. இத்தகையதொரு கிளைக்கதையே **பப்புருவாகனன்** நாடகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

நாடகத்தை நடிப்பவர் தனது பாத்திரத்திற்குரிய வசனங்களை உச்சரித்துப் பேசவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும். மொழியை நுட்பமாகக் கையாள வேண்டியது அவசியமாகும். களம், காட்சி அனைத்தையும் நேர்க்காட்சியாகக் காண்பது போல் விரித்துரைக்கும் ஆற்றல் யாவர்க்கும் எளிதில் கை கூடுவதில்லை. ஆனால் பப்புருவாகனன் கதையில் உயிர்துடிக்கும் காட்சியொன்றை இங்கே சுட்டிக்காட்டலாம்.

**பப்புருவாகனன்:** அப்பா! இந்தப் பழிக்கு நான் காரணமல்ல. மகாபாரத யுத்தத்தில் கலந்துகொள்ள நான் துடித்த துடிப்பை நீங்கள் அறிய மாட்டீர்கள். தங்கள் சத்தியத்தைக் காக்கவே நான் யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் இருந்தேன். என்னை மன்னியுங்கள்.

**அருச்சுனன்:** நீ! என் மகனாக இருந்தாலல்லவா உன்னை மன்னிப்பது. நீ! இந்தப் பாண்டிய நாட்டு மன்னன். நான் அஸ்தினாபுரத்து இளவரசன். நான் அஸ்வமேதக் குதிரையோடு வந்திருக்கிறேன். நீ மானமுள்ள மன்னனாக இருந்தால் குதிரையைப் பிடித்துக்கட்டு. இல்லையேல் மண்டியிட்டு வணங்கித் திறையைக் கட்டு. பந்த பாசங்களைப் பற்றி இப்போது பேசாதே...

இவ்விடத்தில் பப்புருவாகனனது தந்தைப்பாசம், தாய் மேலும், தாய் மண்ணின் மேலும் கொண்டிருக்கும் நேசம், இவற்றுக்கும் மேலாகப் பெரியோரை மதிக்கும் பண்பு அனைத்தும் வெளிப்படுகின்றன. ஆனால் விதியின் அதிக விசையானது அருச்சுனனை அருட்டி விட, பெற்ற மகனையே பிள்ளையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்று மறுக்கிறான். மறுத்தது மட்டுமல்ல, எவ்வளவுக்கு அவமானப் படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவமானப் படுத்துகின்றான். இருந்த போதும் பொறுமையிழக்காது நிதானமாகச் செயற்படும் பப்புருவாகனனது சமநிலை ஆளுமைப்பண்பு, சுய கட்டுப்பாடு, தர்மங்கடவா அற வழிவாழ்வு என்பவற்றைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டி இன்றைய இளையோர் சமூகத்திற்கான முக்கிய பாடமொன்று கற்றுத் தரப்படுகின்றது.

உணர்ச்சிவசப்படுவதை விடுத்து, விவேகத்தைக் கடைப் பிடிக்க வழிகாட்டுகிறார், நாடக ஆசிரியர். நாடகங்கள் வெறும் காட்சியாகி கண்ணுக்கு விருந்தளிப்பவையல்ல. கருத்துக்கும் விருந்தளித்து வாழ்வளிக்கும் வளமாக்கிகள் என்பது இனிதே உணர்த்தப்படுகின்றது.

## பாரி வள்ளல்

**பாரிவள்ளல்** நாடகத்தில் கற்றோருக்கும் மற்றோருக்குமுள்ள பாரிய மாறு பாட்டை உணர்த்தி நிற்கின்றார். வேந்தனுக்கு தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்விமானொருவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவதன் மூலம் கல்வித் தேவை, கல்வியின் மகத்துவம், இன்றைய சந்ததியினருக்கும் விரித்துரைக்கப்படுகின்றது.

அத்துடன் நல்லவன் ஒருவன் இசைபெறுவதும், இசை பெறும் நல்லோனின் புகழ் கண்டு பொறுமையிழந்து பொறாமைகொண்டு புகழுக்குரியோனின் உயிர்பறிக்குமளவுக்கு தீயோரின் புத்தி இழிசிந்தனையுள் மூழ்கும் என்பதையும் கூடத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாரியின் கொடைக் குணத்தை ஔவையார் புகழ்ந்து பாடுவதும், அதேவாயால் பாரியை முன்னிறுத்தி "சிறப்பற்ற ஆட்சியா உன் ஆட்சி." என்று கோபாவேசத்துடன் கேட்பதும் ஒருபுறம் மிகுதியான வேதனை தருவதாகத் தோன்றுகின்றது. மறுபுறம் அது வேடிக்கையாகவும் இருக்கிறது. அரசனே கள்வனாகி பொருள் கவர்ந்து ஔவையாரைத் தன்னோடு இன்னும் சில நாட்கள் தங்க வைக்க வேண்டும் என்பதற்காகக் கையாண்ட தந்திரத்தை யாருமறியாது. கச்சிதமாகச் செய்து முடிக்கின்றார்.

அன்புடையாரைத் தன்மாட்டு உண்டு, உறைந்து, உறவாடி மகிழ்வதனால் அடையும் மீ இன்பத்தை பாரி அனுபவிப்பதை உணர்த்துகின்றார். இப்படியாக நாடகம் வெறும் பாத்திரங்கள் பேசுவது மட்டுமல்ல, சமூகத்துக்கு நற்குண நல்லொழுக்க நற்செய்திகளை வழங்க வேண்டும். மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்ற தத்துவார்த்தத்தை மிகச் சிறப்பாக நகர்த்திக்காட்டியுள்ளார் அகளங்கன் அவர்கள்

## புத்திர சோகம்

இராமாயணத்தில் வரும் **புத்திரசோகக்** காட்சியை உயிர்த்துடிப்போடு, உணர்ச்சிக் கொந்தளிப்போடு மிகவும் உயிரோட்டமாக நாடகமாக வடித்திருக்கின்றார். கைகேயியிடம் கெஞ்சிக் கெஞ்சித் தன் பிஞ்சு மகன் இராமனுக்காய் இரந்தும் பயனற்றுப்போக, பிரிவு ஆற்றாமையால் உயிர் துறத்தல் ஒரு தந்தையின் பாசத்தின் உச்சநிலையைக் காட்டிநிற்கின்றது. அது மட்டுமல்ல. தன்னால் சூரிய குல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு பிறழ்ந்ததே என்ற துயரமும் தசரதனை வாட்டியமை உள்ளார்ந்த வகையில் இழையோடி நிற்கின்றது.

முதுகுரவர்களது கோபத்திற்கும் சாபத்திற்கும் தவறுதலாகக் கூட ஆளாகக்கூடாது. அவர்களது வாக்கு வலிமை மிக்கது. அவர்களது ஆசீர்வாதம் எம்மை வாழவைக்கும். அவர்களது சாபம் எம்மைச் சாகடித்துவிடும். என்பதை நிரூபிக்கும் வண்ணம் புத்திர சோகம் நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தலைமுறையினருக்கு செய்திகள் சில. பல தார மணப் பழக்கம், தகாத சகவாசம், உணர்ச்சி வசப்பட்ட நிலையில் வாக்குறுதிகளை வழங்குதல் என்பன வாழ்வில் பல இடர்ப்பாடுகளையும் துன்புறுத்தல்களையும் தோற்றுவிக்கும் என்பது தெள்ளத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளமையும் அகளங்கன் அவர்களின் நாடக ஆக்கத்தின் இன்னொரு பரிமளிப்பாக நோக்கத்தக்கது.

## செஞ் சோற்றுக் கடன்

**செஞ் சோற்றுக் கடன்** நாடக ஆக்கத்தில் கர்ணனின் பரிதாப நிலையும், குந்தி தேவியின் கையாலாகாத் தனமும் ஒன்றையொன்று முந்திக் கொண்டு உள்ளத்தை உருக்கி உணர்வை பெருக்கெடுத்து ஓடவைத்துள்ளன. நண்பனுக்காக உயிர்கொடுக்கவும், தாயே நேர் வந்தபோதிலும் தன் பட்ட கடன் தீராது தர்மங்கடவாது தலைநிமிர்ந்து நிற்கின்றான் கர்ணன். நன்றிப் பெருக்கோடு போர்க்களத்தில் செந்நீர் சொரிந்து துரியோதனனின் உயிர் காத்து தன் இலட்சியத்தை நிறைவேற்றுகின்றான்.

தான் பட்ட நன்றிக்கடன் தீர்க்கவென, காலமெல்லாம் தான் சுமந்த பழிதுடைக்கும் தருணம் வந்துற்றபோதும் தாயிடத்தில் வரம் கேட்டுத் தன் பிறப்பினுண்மை மறைத்து வீர சுவர்க்க மடைகின்றான். இன்றைய மாந்தருக்கு நன்றி என்றால் என்ன.? தாய்மையின் பெறுமதி என்ன? பெரியோர் வார்த்தைமேல் சந்தேகங் கொள்வதால் ஏற்படும் கெடுதல்கள் எவை? தீயோரிடத்துக் கொள்ளும் நட்பு நல்லோரையும் இல்லாதொழித்துவிடும் என்பனபோன்ற வாழ்வின் உண்மைகளைக் கோடிட்டுக்காட்டி நிற்கின்றது. அகளங்கன் அவர்களின் செஞ் சோற்றுக்கடன் நாடகம்

## சிலம்பு பிறந்தது

கள்ளங் கபடமற்ற கோவலனைக் கள்வனெனக் கொன்று விட்டு, "கள்வனைத் தானே கொன்றே" னென முறையுரைத்த வேந்தனுக்கு, "முறைதவறி, செங்கோல் நெறி தவறிய நீயா நீதியுரைக்கிறாய்" என்று தன் சிலம்புடைத்து நீதி புகட்டிய உரைசால் பத்தினியாம் கண்ணகியின் உள்ளத்து உறுதியும், தன் கணவனுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் தகர்த்தெறிந்து தூயவன் என் தலைவன் எனக் காண்பித்து நிற்கும் கற்புத்திறன் வியந்து போற்றப்படும் படி நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளங்கோ வடித்த வடிப்பில் சிறிதும் மறுவின்றி, பத்தரை மாற்றுப் பசும் பொன் போல் **சிலம்பு பிறந்த** கதையை சிறப்புறு நாடகமாக நவின்றுள்ளார். நாடக ஆசிரியர் அகளங்கன் அவர்கள். சொற்றிறன், சொல்லின் பொருட்திறன், பொருளின் உணர்வுத்திறன், நயத்திறன் என்று அனைத்தையும் அணிசெய்து ஆக்கப் பட்டது சிலம்பு பிறந்தது நாடகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆனை கட்டிய அரியாத்தை**

வன்னி மகன். அவர் வன்னிக்குள் ஓர் மகன். வன்னிச்சியாம் அரியாத்தை ஆனை கட்டினாள். வாயிருப்பது வாழ்த்துதற்கே. ஆனால் அவம் பேசித்திரிந்த ஆடவரின் மிடுக்கடக்கித் தன் நாயகனின் திறங்காத்தவள் அரியாத்தை. மனைவி என்பவள் தன்னை மணந்தவனின் மானங்காப்பவள். "அடுக்களையில் சமையல் செய்வதோடு முடிவதல்ல. பெண்வாழ்வு. தேவையேற்படில் ஆனையையும் நம் ஆணைக்குள் அடக்கிடுவோம்" என்று கொட்டி முழக்கியவள் அரியாத்தை.

முன்னமைந்த ஐந்து நாடகங்களும் தென்தமிழ் மண்ணிற் பிறந்த கதைகளவை. நம் தமிழ் நாட்டோடும் உறவு பூண்டவை. ஆனால் எம் தமிழ் நாட்டுக்கே சிறப்பாயுரிய கதையை நாடகமாக்கி நம் மக்களது கலை கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை அத்தனையையும் தெள்ளிதில் தெரிந்து கொள்ள ஆக்கி அளித்த அரங்கதுவே **ஆனை கட்டிய அரியாத்தை** யாகும்.

மண் பற்றும் பொறுமையும் ஒன்று கலந்து பிறந்துவந்த அரியாத்தை கதை அருமையிலும் அருமை. காட்சி விபரிப்பு, உணர்வு வெளிப்பாடு, வார்த்தை விளையாட்டு என அனைத்திலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். அண்ணன் அகளங்கன் அவர்கள். அவர்பணி தொடர்க என்றும் நலம் பெறுக.

தமிழ்த்தாசன்

**சூசைதாசன்**

---

**இரா சிவலிங்கம் கண்டி (05.08.1993)**

**தென்றலும் தெம்மாங்கும்** கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. இந் நூல் தரமானது மட்டுமல்ல சத்தியமானதும் கூட. வன்னியின் வாழ்வியலை ஆராய முயலும் மானிடவியல் ஆய்வாளருக்கு வரலாற்று பெட்டகமாகவே அமையும் என எண்ணுகிறேன். தங்களது துணிச்சலான முயற்சியை எப்படி பாராட்டுவதென்றே புரிய வில்லை. வன்னிப் பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்களை மிகவும் எளிமையான சொற்களில் இனிமையாகவும் உணர்வோடும் உங்களால் வெளிப்படுத்த முடிந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# ஈழத்துத் தமிழிலக்கிய ஆளுமை

**திரு.துரைராசா இளங்குமரன்**

விரிவுரையாளர். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

## முன்னுரை

**வா**னொலி நாடகம் என்பது ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஒரு கலை எனலாம். 2ம் உலகப்போர்க் காலத்தில் வீட்டினுள் அடைந்து கிடந்த பொது மக்களுக்காக பி.பி.சி நிறுவனம் நாடகங்களை ஒலிபரப்பத் தொடங்கியது. இந்தியாவில் 60 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வானொலியில் நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. நாடக ஒலிபரப்பில் சென்னை வானொலி நிலையம் முன்னோடியாக இருந்தது.

வானொலியில் முதலில் சிறுகதைகளை நாடகமாக்கி நடிகர்களைக் கொண்டு பேசச் செய்து ஒலிபரப்பினார்கள். பின் நாவல்களை நாடகமாக்கினார்கள். புகழ் பெற்ற எழுத்தாளர்களைக் கொண்டு புதிய நாடகங்களை எழுதச் செய்து ஒலிபரப்பினார்கள். இவ்வாறு வானொலியில் படிப்படியாக நாடகம் வளர்க்கப்பட்டது. நாடகப் போட்டிகளும் நாடக விழாக்களும் நடத்தப்பட்டன. இதனால் வானொலி நாடகம் மேலும் வளர்ச்சி பெற்றது.

## வானொலியும் நாடகமும்

நாடக தயாரிப்பாளர், நடிகர், ஒலிப்பதிவாளர் முதலானவர்களின் ஒத்துழைப்பால் வானொலி நாடகம் உருவாக்கப்படுகின்றது. வானொலி தனது நாடக நிகழ்ச்சிகளுக்கு குரலையே பெரிதும் நம்பியிருக்கிறது. அந்தவகையில் இது ஒரு கேள்விப்புலன் சாதனமாக இருக்கிறது.

வானொலி நாடகம், கேட்கும் ஒவ்வொருவரிடமும் தனித்த உணர்வுகளையும் கற்பனைகளையும் தூண்டுகிறது எனலாம். குரல் மூலமும் உச்சரிப்பின் மூலமும் பேசப்படும் செய்திகளின் மூலமும் கற்பனைக் காட்சி உருவாக்கப்படுகிறது. நாடகம் கேட்பவர் நிகழ்ச்சிகளை மனக் கண்ணில் கண்டு அனுபவிப்பர்.பாத்திரங்களின் முகபாவ மாற்றங்கள், அங்க அசைவுகள், செயல்கள் முதலான எல்லாவற்றையுமே ஒலியின் மூலம்தான் உணர்த்துகிறார். இங்கு குரலின் ஆற்றல் முக்கியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு, இடம், நேரம், வேகம், பண்பு போன்றவற்றை மேடைநாடகத்திலோ, தொலைக் காட்சியிலோ முழு அளவில் உண்மைத்தன்மையுடன் படைத்துக் காட்ட முடியாது. பறக்கும் விமானத்துக்குள்ளே நடக்கும் நிகழ்ச்சிகளை மேடையில் காட்டுவது கடினம். ஆனால் வானொலியில் இதை எளிதாகவும் செய்து விடலாம். விமான ஒலியைப் பின்னணியில் ஒலிபரப்பினால் போதும்.

எல்லா நாடக வகைகளுக்கும் இருப்பது போல வானொலி நாடகத்திலும் சிக்கல், போராட்டம், உச்சக்கட்டம், முடிவு; ஆகியன இருக்க வேண்டும். காட்சியின் துணையின்றி ஒலியின் துணையால் மட்டும் வானொலி நாடகம் அமைவதால் அதில் உணர்ச்சிச் சுவை மிக்க பகுதிகள் மட்டுமே இருக்க வேண்டும்.

நாடகப் படைப்பாளர் எழுதத் தொடங்கும் முன் சிலவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். நாடகம் யாருக்காக எழுதப்படுகின்றது. நாடகத்தில் சொல்லப்போகும் கருத்து என்ன? நாடகத்தின் கால அளவு என்ன என்பன பற்றி அவர் தெரிந்திருக்க வேண்டும்.

நல்ல கட்டமைப்பு உடையதாக படைப்பு திகழ வேண்டுமானால் கீழ்க்காணும் நெறிகளில் அது அமைக்கப்பட்டிருக்க வேண்டும். நாடகம் எப்படி வளரப் போகின்றது என்று நேயரை எதிர்பார்க்க வைப்பதாகவும், நாடகக் கதையின் உச்சக் கட்டத்தை நோக்கி ஒவ்வொரு காட்சி வளரவும், நாடகத்தின் மையச் சிக்கல் தெளிவாக்கப்பட்டிருக்கவும், ஒவ்வொரு பாத்திரமும் பேசுகிற வசனம் தெளிவாகவும், நாடகத்தின் ஒவ்வொரு காட்சியிலும் யார் யார் பேசுகிறார்கள் என்பது தெளிவாக உணர்த்தப்பட்டிருத்தலும், ஏதாவது ஒரு காட்சியில் நிறையப் பாத்திரங்கள் இடம்பெற்றால் குரலால் அடையாளம் காணும் வகையில் தெளிவாக அமைக்கப்பட்டிருத்தலும், எந்த இடத்தில் ஒரு காட்சியின் கதை நிகழ்கிறது என்பது தெளிவாகவும், நாடகத்தில் வர்ணனைகள் மிகவும் குறைவாகவும், சிக்கலுக்கு தீர்வு சொல்லப்பட்டிருத்தலும், காட்சிகள் விறுவிறுப்புடன் செல்வதும், காட்சியின் சூழ்நிலை உணர்த்தப்பட்டிருத்தலும், நாடகத்தின் வேகம் ஒரே சீராகச் செல்வதாகவும் இவை அனைத்தும் இருக்க வேண்டும்.

அவ்வாறே இலங்கை வானொலி உருவாக்கப்பட்டதன் பின்னர் இலங்கை வானொலியில் வானொலி நாடகங்கள் உருவாகத் தொடங்கின. இலங்கை வானொலி நாடகங்களைப் பார்த்தே திருச்சி வானொலி நாடகங்களைத் தயாரித்தது என கூறும் அளவுக்கு இலங்கை வானொலி முன்னுதாரணமான பல வானொலி நாடகங்களை தயாரிக்கத் தொடங்கியது. கலைத்துவம் மிக்க வானொலி நாடகங்களை முதலில் தயாரித்தவர் "சனா" என அழைக்கப்படும் சண்முகநாதன் ஆவார். அவரைத் தொடர்ந்து பலரும் வானொலி நாடகங்களைத் தயாரித்து வந்தனர். இந்த வானொலி நாடக வரலாற்று நீரோட்டத்தில் நாடக ஆசிரியர்களுக்கும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும் முக்கிய பங்களிப்பு உண்டு.

அந்தவகையில் ஈழத்தில் புகழ்பூத்த எழுத்தாளர் ஆகிய **கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** அவர்களும் பல வானொலி நாடகங்களை எழுதி உள்ளார். இவரின் ஐந்து நாடகங்களின் தொகுதியாகிய **"அன்றில் பறவைகள்",** நான்கு நாடகங்களின் தொகுதியாகிய **"கூவாத குயில்கள்"** ஆகிய சமூக நாடக எழுத்துக்கள் நூல் வடிவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. **"கூவாத குயில்கள்"** பற்றிய ஒரு பார்வையை இக்கட்டுரை தர முயல்கிறது.

வானொலி நாடகம் என்பது வானொலி என்ற செவிப்புல கேட்டல் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின் உருவாகிய ஒரு வடிவமாகும். பார்த்தலுக்குரிய விடயங்கள் அனைத்தையும் கேட்டலால் நுகரக் கூடிய தன்மையில் எழுதி இரசிகர்களின் மன வெளியில் கற்பனைப் படிவமாக உணர்த்தப்படும் தன்மையில் அமைந்துள்ளமையே இவ் வடிவத்தின் சிறப்பு எனலாம். சாதாரண நாடகங்களில் இருந்து வானொலி நாடகம் பல்வேறு வகையில் வேறுபட்டிருக்கும்.

## அகளங்கனும் நாடக ஆக்கத்திறனும்

ஈழத்து தமிழ் இலக்கியத் துறையில் ஆளுமைகளில் சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டிய ஒருவர் **கலாநிதி தமிழ்மணி அகளங்கன் - நா.தர்மராஜா** அவர்கள். இவர் இலக்கியவாதியாக, கணித ஆசிரியராக, சோதிட அனுபவமிக்கவராக, நல்ல சொற்பொழிவாளராக, நாடக எழுத்தாளராக, வானொலிக் கலைஞராக, தமிழ் சைவ காவலராக, தமிழ் தேசிய வாதியாக தன்னை நிலைநிறுத்தி அடையாளப்படுத்திய ஆளுமை ஆவார்.

இவர் மாணவர்களை பல்துறை ஆளுமை மிக்கவர்களாக வளர்த் தெடுப்பதிலும் அவர்களிடையே தமிழ் சைவ உணர்வை ஊட்டுவதிலும் பல இளம் தலைமுறையினரை ஊக்கப்படுத்தி அரிய பணி செய்து அவர்களது படைப்பாக்கங்களை வெளிக்கொணரச் செய்வதற்கு உந்துசக்தியாக திகழ்பவர்.

இவரது அழகிய கம்பீரமான தோற்றத்தைப் போலவே தேசிய உடை அணிந்து தமிழ் உணர்வைப் போல் எல்லோரையும் நேசிப்பவர். இவர் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், நாட்டியம், கட்டுரை, விமர்சனம் என பன்முகப் பார்வையில் தனது எழுத்தாற்றலால் அனைவரையும் கட்டிப் போட்டவர். இவரது எழுத்துக்கள் வெளிவராத தமிழ் ஏடுகள் இல்லை என்று கூறுமளவுக்கு சனரஞ்சக எழுத்தாளராக காணப்படும் அகளங்கன் இதுவரை 43 நூல்களை எழுதியுள்ளார்.

## தமிழ்மணி அகளங்கன் அவர்களுடைய நாடகங்கள்

### 1. அன்றில் பறவைகள்

இது வானொலி நாடக நூலாகும். முதன் முதலில் தேசிய சாகித்திய விருது பெற்ற நூலாகவும், ஐந்து நாடகங்களைக் கொண்ட தொகுதியாகவும் இந்த நூல் காணப்படுகிறது.

### 2. கூவாத குயில்கள்

இதில் நான்கு நாடகங்கள் உள்ளன. இதுவும் வானொலி, மேடை நாடக நூ லாகும்.

### 3. இலக்கிய நாடகங்கள்

இதில் ஆறு நாடகங்கள் உள்ளன. இந்நூல் வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டல விருதையும், கொழும்புத் தமிழ்ச் சங்க விருதையும் பெற்றது இதுவும் வானொலி நாடக நூலாகும்.

### 4. கங்கையின் மைந்தன்

வானொலி, மேடை நாடகங்கள் ஆறு இந் நூலில் இடம்பெற்றுள்ளன. தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகித்திய மண்டல சிறப்பு விருது பெற்றது. அத்தோடு வடமாகாண இலக்கிய நூல் விருதும், தமிழியல் விருதும், இங்கை இலக்கியப் பேரவை விருதும், இந்திய தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற விருதும் பெற்ற நூலாகும். (இந் நான்கு நாடக நூல்களும் மேடை நாடக வடிவிற்கு மாற்றப்பட்டு வெளிவந்துள்ளன.)

**5. பத்தினித் தெய்வம்**

இது நாட்டிய நாடக நூலாகும். இது வடமாகாண இலக்கிய நூல் விருது, தமிழ்த்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று முதலாம் பரிசு பெற்ற நாட்டிய நாடகமும், மாகாண மட்ட விசேட போட்டியில் முதலாம் பரிசு பெற்ற நாடகமுமாக இதில் இரண்டு நாட்டிய நாடகங்கள் உள்ளன.

**6. உருகி எரியும் கர்ப்பூரங்கள்**

1991ம் ஆண்டு ஆசிரியர் தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதல் நிலை பெற்று ஜனாதிபதி விருது பெற்ற நாடகமாகும் ஆகும்.

**7. சிலம்பு பிறந்தது**

இது தினக்குரல் பத்திரிகையும் பிரான்ஸ் ஒலி, ஒளி நிறுவனமும் சேர்ந்து நடாத்திய சர்வதேச வானொலி நாடகம் போட்டியில் இரண்டாம் பரிசு ரூபா 30,000 பெற்ற நாடகமாகும்.

இவர் பாடசாலை தமிழ்த்தினப் போட்டிக்கான வரலாற்று, இலக்கிய சமூக நாடகப் பிரதிகளையும் எழுதினார். இவரது எழுத்துருக்கள் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்கள் பெற்றவை.

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தான் வாழுகின்ற சமுதாயத்தை கூர்ந்து கவனித்து பாத்திரங்களைப் படைப்பதில் வல்லவர். ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு விதமான குணாம்சங்களை துல்லியமாக மண் வாசனை வீசுகின்ற நாடகங்களாக வெளிக்காட்டி படைத்துள்ளார். இவர் படைத்த பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தத்துரூபமாக அனாயாசமாக உருவாக்குவதில் கைதேர்ந்த படைப்பாளி. ஆனால் இவர் எந்தவொரு தனி நபரையும் பாத்திரமாக்காது வெவ்வேறு மனிதர்களிடமிருந்து வெவ்வேறு விதமான குணாம்சங்களை எடுத்து பாத்திரமாக படைப்பதில் இவர் வல்லவர். இவரது பாத்திரங்கள் நம்பகத்தன்மை வாய்ந்தவை. நிய மனிதர்கள் போல நடந்து கொள்வதோடு உரையாடலையும் அவ்வாறே பேசுகின்றன. தமக்கே உரிய இயல்பான பிரதேசவழக்கு மொழியாக பேசுகின்றன.

அகளங்கன் அவர்களுடைய நாடகம் பல பாடங்களை சுவைவைஞர்களுக்கு கற்றுக் கொடுக்கிறது. எம் மக்களிடையே புரையோடிப் போய் இருக்கின்ற சீதனம், பெண்ணடிமை, இராணுவ முற்றுகை, இடப்பெயர்வு, வேலைக்குப் போகும் பெண்களின் நிலை, உறவுகள், காதல், நட்பு, மக்களது பலம் பலவீனம், போட்டி, பொறாமை, எரிச்சல், பொருளாசை, மூடநம்பிக்கை போன்ற குறைபாடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள்,ஒரு பக்ஸ் வந்தவுடன் மக்கள் இடம்பெயர்வு, வவுனியாவிற்கு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இருந்து இடப்பெயர்வு, இறந்தவர்களைக் கூட அவசர அவசரமாக அடக்கம் செய்து இடம்பெயர்கின்ற தன்மை, கிளாலி பயணங்கள் போன்றவற்றை எல்லாம் காலத்தின் பதிவாக பதிவு செய்திருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நாடகங்கள் சமகாலத்துக் கதையை கருவாகக் கொண்டு காணப்படுவதால் அவற்றுக்கொரு அர்த்தமுள்ளது. எமது மக்களின் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டுகிறார். இவரது நாடகங்களின் பாத்திரங்கள் நாம் அன்றாடம் சமூகத்தில் பார்க்கும் மனிதர்களே பாத்திரமாக வந்து தங்களுக்கே உரிய இயல்பான மொழிநடையில் உரையாடுகின்றனர். அதனால் சுவைஞர்கள் அப்பாத்திரங்களுடன் ஒன்றி நாடகத்தை நன்கு இரசித்திருக்கிறார்கள்.

எந்த நாடகத்திலும் ஒரு மோதல் இருப்பது அவசியம் இதை பிரச்சினை, சிக்கல் எனப் பல பெயர்களால் அழைப்பர். சிக்கல் வந்தால்தான் நாடகத்தில் சூடு பிடிக்கும். சுவையும் பிறக்கும். அந்த மோதல் அகளங்கன் அவர்களது நாடகக் கதையிலிருந்து இயல்பாகப் பிறக்கிறது. பாத்திரங்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அறியும் ஆவலில் இரசிகர்கள் நாடகங்களை உன்னிப்பாக செவிமடுப்பர். இத்தகைய ஒரு தனிச்சிறப்பை தமிழ்மணி அவர்களுடைய நாடகங்களில் காணலாம்.

சிக்கல் இறுகி மேலும் வலுவடைய வேண்டும். சிக்கல் இறுக இறுக நாடகமும் வளர்ந்து செல்லும். பார்வையாளரது விளைவு அறியும் ஆவலும் தூண்டப்படும். எழுச்சி இல்லையேல் நாடகம் தேங்கி நிற்கும். அகளங்கன் அவர்களுடைய இந்த வானொலி நாகடங்களில் சிக்கல் வளர்ந்து வெடிக்கும் நிலையை அடைந்து உச்சக்கட்டத்தில் நிற்கும். சுவைஞர்களும் அலைக்களிக்கப்பட்டு முறுகி இருப்பர். இந்தக் கட்டத்தில் சிக்கல் அவிழ்க்கப்படும். இவரது நாடக பாத்திரங்களே தங்கள் செயற்பாடுகளால் சிக்கலை அவிழ்க்கின்றனர். அச்சிக்கல் அவிழ்ப்பு கதைக்குப் பொருத்தமான நம்பிக்கையுடன் காணப்பட வேண்டும். இல்லையேல் இரசிகர்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்வர். அகளங்கனின் இந்த நாடகங்கள் உச்சக் கட்டத்தை தொட்டு நிற்பதை நாங்கள் காணலாம்.

நாடகம் ஒரு பாடத்தைப் புகட்டுவது விரும்பத்தக்கது. சுவைஞர்களுக்கு பிற்கால வாழ்க்கையில் பிரச்சினைகள் வந்தால் அந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சிக்கல் அவிழ்ப்பு ஒரு முன்மாதிரியாக ஒரு பாடமாக இவரது நாடகங்கள் அமைவதால் அகளங்கனின் சமூகப் பார்வை அவரின் நோக்கம் நிறைவேறி விட்டதாக துணிந்து கூறலாம்.

அந்தவகையில் இவரது இந்த நான்கு வானொலி நாடகங்களும் அவரது படைப்பாளுமைக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. அதாவது வானொலி நாடகங்கள் கேட்டலுக்கு ஏற்ப நுகரப்படும் தன்மைக்கு ஏற்ப எழுதப்படுவதால் அது இயல்பு வாழ்க்கையை யதார்த்தமாக சித்தரிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதை உணர்ந்து கொண்ட அகளங்கன் அவர்கள் அவரது வானொலி நாடகங்கள் அனைத்தும் எமது அன்றாட வாழ்வை இரத்தமும் சதையுமாக படைப்பதில் வெற்றி கண்டுள்ளார்.

கிராமிய மண் கமழும் பேச்சு மொழி நடை, எமது சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சீதனம், பெண் ஒடுக்கு முறை போன்ற பிரச்சினைகளைப் பேசுவது இவற்றுக்குள்ளும் ஆத்மார்த்தமாக வாழும் மனித உறவுகள், காதல் போன்றவற்றை அவரது நாடகங்கள் பேசின. வானொலி நாடகங்களுக்கு இருக்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த அளவிலான பாத்திரங்களைப் பயன்படுத்தல் கேட்பதன் ஊடாக விளங்கிக் கொள்ளும் மொழிப் பாவனையினை பொருத்தமாகப் பிரயோகித்தல், குறைந்த நேரத்துக்குள் எடுத்தாளப்பட்ட விடயத்தைப் பேசுவதற்குரிய கட்டிறுக்கம், குறைந்த காட்சிகள் என சிறந்த வானொலி ஆசிரியருக்குரிய ஆளுமைப் பண்புகளை நாடகங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

"கூவாத குயில்கள்" நாடகத் தொகுதியில் உள்ள நான்கு நாடகங்கள் பற்றியும் சற்று ஆழமாக நோக்குகின்ற போது அகளங்கனின் ஆக்கச் சிறப்பு அதிகம் வெளிப்படுத்தப்படும் என்று கருதுகின்றேன்.

## ஆகளங்கனின் கூவாத குயில்கள்

### ஆற்றில் விழுந்த மலர்

**"ஆற்றில் விழுந்த மலர்"** என்ற அகளங்கனின் நாடகமானது பத்து காட்சிகளுக்குள் ஈழத்து பெண்கள் எதிர்கொள்கின்ற வாழ்வு பற்றிய பிரச்சினைகளை அற்புதமாக சித்தரிக்கின்றது. இவரது இந் நாடகத்தின் பிரதான பாத்திரமான மோகனா ஒரு தமிழ்ப் பெண்ணின் சிறந்த பிரதிநிதியாக காணப்படுகிறார். எமது பெண்கள் தமது விருப்பங்களை வெளிப்படையாகச் சொல்லாது தமது சிக்கல்கள், சவால்களை தமக்குள்ளே வைத்துப் போராடுவதாயும் இறுதியில் ஆற்றிலே விடப்பட்டு அந்தரத்தில் விடப்பட்ட மலரைப்போல் ஏக்கத்துடன் நிற்கும் ஒருவராக சித்தரித்துள்ளார். ஒரு நாடகம் சிறப்பாக அமைவதற்கு அதில் அமைக்கப்படும் பாத்திரங்கள், கதைப்பின்னல், கட்டமைப்பு போன்றவை சிறப்பாக அமைய வேண்டும்.

ஆற்றில் விழுந்த மலரின் முக்கிய பாத்திரங்களான மோகனா, கணேசன், குமார் போன்ற ஒவ்வொரு பாத்திரமும் மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாடகத்தின் வாசிப்பின் நிலையோ அல்லது கேட்கும் நிலையோ தூண்டப்படுவது நாடகத்தில் காணப்படும் முரண், சிக்கல் போன்றவை வளர்த்தெடுக்கப்படும் முறையிலும் அத்தோடு அடுத்தது என்ன ஆகும் என்ற எதிர்பார்க்கை நிலையை தோற்றுவிப்பதிலுமே தங்கியுள்ளது. இத்திறன் அகளங்கனிடம் மிகச் சிறப்பாக கைவரப் பெற்றிருக்கின்றது. நாடகத்தின் முரண் சிறப்பாக வளர்த்தெடுக்கப் பட்டிருப்பதுடன் உச்சக் கட்டத்தில் மோகனாவின் வாழ்க்கை மகிழ்வோடு களியும் என்ற எதிர்பார்க்கையை கொடுத்து திடீர் திருப்பு முனைகளால் அதை மாற்றியமைத்த முறைமையால் சொல்ல முடியாத மன நெருடலோடு நாடகம் விடைபெறுகிறது. மோகனா என்ற அப்பாவித்தனமான பெண்கள் எங்கள் மன இருப்பில் வேதனை தோய்ந்த முகங்களோடு பதிவிடப்படுகிறார்கள்.

### மாற்றங்கள் மாற்றவில்லை

தமிழ் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் ஒரு பகுதியை இந்நாடகம் சித்தரிக்கின்றது. அதாவது சாதாரண குடும்ப வாழ்வும், அந்த வாழ்வை முன்னெடுத்துச் செல்ல பொருளாதார ரீதியாக குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையும் இன்னும் அடிப்படையில் மனநிலை மாறாத மக்களைக் கொண்டு இப்பிரச்சினையை எடுத்துக் காட்டுகின்றார் அகளங்கன்.

பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைக்கு காரணமாக இருப்பது புரிந்துணர்வின்மை. அதாவது தன் தன் பிரச்சினையை அததற்குரியவர்கள் ஆழமாக பேசித் தீர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமையே ஆகும். இந்த மாற்றங்கள் மாற்றவில்லை என்ற நாடகத்தில் நாயகர்களான குமார், மாலதி ஆகியோர் தெளிவாகப் பேசி புரிதல்களை ஏற்படுத்தாமையே இதற்கான காரணமாகும். அதாவது இவர்களின் காதலில் இடைவெளியை ஏற்படுத்திய பிரதான சம்பவம் குமாரின் தாயின் பேராசையின் சந்தர்ப்பவாதத்தை காட்டுகிறது.

இதை தூரத்தில் உள்ள குமார் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. மாலதியும் புரிய வைக்க முயற்சிக்கவில்லை. பிரச்சினைக்கான காரணத்தை குமார் மாலதியிடமிருந்து கேட்டுக் கொள்ளவும் இல்லை. அவசரமான வார்த்தைப் பிரயோகங்கள் காதலுக்கு இடையீடாக அமைந்து விடுகிறது. அதேபோல காலம் மாறினாலும் சில பெண் அடிமைத்தனத்திற்கு பெண்களுமே பெருமளவில் காரணம் என்பதை அகளங்கன் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார். இந்த நாடகம் முரண் நிலையை தோற்றுவித்த விதம், அதனை பாத்திர வாயிலாக வளர்த்துச் செல்கின்ற விதம், சமூகத்தில் ஊடாடும் இந்த குண இயல்பு உள்ள மாந்தரை வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் தன்மை என்பன இந்த நாடகத்தின் சிறப்புக்கு காரணமாகிறது.

காஞ்சனா போன்ற நல்ல மனநிலை கொண்ட நட்பு, பரந்த சிந்தனை, முற்போக்குத் தனம் கொண்டு தமிழ் பெண்மை சிதறாமல் கச்சிதமாக எடுத்துக் காட்டும் திறமை அகளங்கனின் தனிச் சிறப்பைக் காட்டுகிறது.

காஞ்சனா குமாருடன் உரையாடும் பாங்கும் பின்பு மாலதியை மீண்டும் குமாருடன் ஆற்றுப்படுத்தும் பாங்கும் மிக அற்புதமானது. தான் நினைத்த அந்த எண்ணக் கருவை வார்த்தைகள் வாயிலாக கேட்போரின் செவி வழியே உள் நுழைத்து அகத்திலே சித்திரமாக காட்டியிருக்கும் மொழி அற்புதமானது.

**கூவாத குயில்கள்**

"கூவாத குயில்கள்" நாடகம் தமிழர் வாழ்வில் எம் மக்களின் சமகால வாழ்க்கை முறைமைகள் நம்பிக்கைகள், காலமாற்றத்திற்கேற்ப எதிர்பார்ப்புக்கள், கால இடைவெளியில் ஏற்படும் சமூக முரண்பாடுகள் மானிட தவிப்புக்கள் என்பனவற்றை இந்நாடகம் எடுத்துக் காட்டுகின்றது.

வேலை புரியும் பெண்கள் அவர்கள் மன எண்ணம், சுமை, வேலை புரிந்தாலும் காலம் மாறினாலும் பண்பு மாறாத வாழ்க்கை நிலை என்பவற்றோடு ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்ற அனுபவமும், நகைச்சுவை வாயிலாக ஆழ்மன உணர்வுகளை வெளிப்படுத்தும் உத்தியும் அகளங்கனின் படைப்பாக்க உத்தியாகும்.

இன்று எம் சமூகத்தில் மலிந்துபோய் காணப்படும் போலி வாழ்க்கையின் முகத்திரையையும் நெருக்கடிகளால் ஏற்படுகின்ற அனுபவிக்க முடியாத ஆசா பாசங்களையும் மனிதரை மனிதர் சந்தர்ப்பத்தில் தான் புரிந்து கொள்ளலாம் என்ற அடிப்படையில் தனி மனித வாழ்க்கை முக்கியப்படுத்தப்பட்டிருப்பதையும் கூவாத குயில்கள் நாடகம் மூலம் அகளங்கன் துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

பேரப்பிள்ளைகளுக்காக தவிக்கும் பாட்டன் பாட்டிகளின் நிலை பெற்ற பிள்ளைகளின் திருமணத்தைக் கூட பார்க்க முடியாத நிலை, வெளிநாட்டு மோகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய சமுதாயம் வயதானவர்களை புரிந்து கொள்ளாமை, வேலைக்குப் போகும் இன்றைய பெண்களின் நிலை, சுகமாக ஏற்று வாழ வேண்டிய வாழ்க்கையின் பல பாகங்களை சுமையாக நினைக்கும் இன்றைய நிலை என்பவற்றை பாத்திரங்களுடாக மோதவிட்டு உணர்வின் உச்ச நிலைக்கு கொண்டு சென்று அவற்றை தெட்டத் தெளிவாக காட்டும் திறனை கூவாத குயில்கள் காட்டுகின்றது.

இந்தக் கூவாத குயில்கள் நாடகம் பத்துக் காட்சிகளைக் கொண்டது. இந்நாடகமானது குயில்களுக்கு முட்டையிடத் தெரியுமே தவிர கூடு கட்டத் தெரியாது. அடைகாக்கத் தெரியாது. ஆகவே காகக் கூட்டுக்குள் தான் முட்டையிடுகிறது. இந்தக் காகங்கள் அடைகாத்து குஞ்சு பொரித்து இரைதேடி வளர்க்கின்றன. இதே போலவே வேலைக்குப் போகும் பெண்களின் பிள்ளைகளை காகங்களாக இருக்கும் முதியவர்களே வளர்க்கின்றார்கள். காலம் வரும்போது குயில் குஞ்சுகள் குயில்களுடன் சென்று விடுகின்றன. குயில் குஞ்சுகளை வளர்த்த காகங்களுக்கு குயிலோசை கேட்பதில்லை. இங்குள்ள பேரன் பேர்த்திகளுக்கும் அந்த குழந்தைகளின் குயிலோசைகளும் கேட்கவேயில்லை. இதனை மிகவும் பொருத்தமாக கூவாத குயில்கள் என்னும் தலைப்பின் மூலம் எம்மவர்களின் மனதில் ஒரு படிமத்தை ஏற்படுத்தி பதிய விட்டுச் செல்கின்றார் படைப்பாளி அகளங்கன் அவர்கள்.

**தாயும் நாயும்**

"தாயும் நாயும்" என்ற நாடகமானது 6 காட்சிகளைக் கொண்டு ஈழத்து மக்களின் புலப்பெயர்வு போலவே இடப்பெயர்வும் எமது மக்களின் முகவரியை தொலைத்தவர்களாக உருவாகின்றது. தாயும் நாயும் என்ற நாடகத்தின் மூலம் பெற்ற தாயையும் நன்றி மிக்க நாயையும் உதாசீனம் செய்யும் பாங்கை படம்பிடித்துக் காட்டுகின்றார் அகளங்கன் அவர்கள்.

எமது மக்கள் இராணுவ கெடுபிடிகளால் உடைமையை, உயிரை, உறவுகளை இழந்த படிப்பினையால் இராணுவ முற்றுகையின் போது படும் அவலங்களை உள்ளத்தை தொடும்படி எடுத்துக் காட்டியுள்ளார்.

நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை வரலாற்றுப் பதிவாக தரும்போது ஒரு எழுத்தாளர் நடுநிலை தவறாமல் நின்று கொடுக்க வேண்டும். அதேபோல் மிகைப்படுத்தலோ அல்லது பற்று மிகுதி காரணமாகவோ உணர்ச்சி வசப்படுத்தும் நிலையையோ ஏற்படுத்தாமல் முன்வைக்க வேண்டும். "தாயும் நாயும்" என்ற நாடகம் இத்தகைய பண்புகளை நிறையவே தன்னகத்தே கொண்டுள்ளது. இடப்பெயர்வு அதனால் ஏற்படும் அவலம் தடுமாற்றம் அந்தஸ்து, கௌரவம் போன்றவற்றால் ஒவ்வொருவரும் படும் தடுமாற்றத்தை துல்லியமாக படம்பிடித்துக் காட்டுகின்றார். இடப்பெயர்வின் காரணமாக குமாரும் நித்தியாவும் எங்கே போவது எதைக் கொண்டு போவது என்ற நிலையும் தாயையும் நாயையும் தவிக்க விடும் நிலையையும் மனங்களை பிணிக்கும் படி பாத்திர உரையாடல்கள் மூலம் காட்சிப்படுத்தியுள்ளார். இந்த இக்கட்டுக்குள்ளும் எரிகிற வீட்டில் பிடுங்குவதெல்லாம் லாபம் என்ற எம் இனத்தவரின் வாழும் வாழ்க்கையையும் இராசையா, சின்னத்துரை என்ற பாத்திரங்களுடாக எடுத்துக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்த போதும் தாய் என்பவள் தாய் தான். எந்த நிலை வந்தபோதும் நாய் என்பதும் நாய் தான். இந்த இரண்டுக்கும் தாயின் பெருமையையும், நாயின் பெருமையையும் கூட சுட்டிக் காட்டுவதனூடாக தனிமனிதன் தனது சுயநலத் தன்மையால் எவ்வளவு கீழ்நிலைப்பட்டிருக்கிறான் என்பதை இந்நாடகத்தின் மூலமும் இந்நாடகத்தின் தலைப்பின் மூலமும் தெளிவுபடுத்துகிறார் அகளங்கன் அவர்கள்.

பேச்சு, கவிதை, கட்டுரை, இலக்கியம், இலக்கணம், வரலாறு எனப் பல்வேறு விடயங்களிலும் தொடர்ச்சியாக எழுதி வருகின்ற அகளங்கனின் ஆக்கத்திறனுக்கு பல்பரிமாணங்கள் உண்டு. அதில் ஒன்றாக அவரது நாடக ஆக்கத்திறன் காணப்படுகிறது. இலக்கிய நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள், சமூக நாடகங்கள் எனப் பலவற்றையும் எழுதி தனது நாடக ஆக்கத்திறனை நிருபித்துள்ள ஒரு கலைஞராக அகளங்கன் அவர்கள் திகழ்கிறார்கள். அவரிடம் இருந்த தமிழ் அறிவு, மொழி ஆளுமை, படைப்பாக்கத்திறன், தொல்சீர் இலக்கியங்களில் அவருக்கு இருக்கும் தாடனம், சமூகப் பார்வை போன்ற பலவும் அவரது நாடகங்களுக்கு சிறப்பை சேர்த்துள்ளன.

மணிவிழா நாயகனாக சிறப்படையும் தமிழ் மணி அகளங்கன் அவர்கள் எல்லா நலன்களும் வளங்களும் வாழ்வில் பொலிந்து சிறந்து வாழ்வதற்கும், நூற்றாண்டு விழா காணவும், பல்வேறு அரிய நல் படைப்புக்களை பிரசவிக்கவும், எல்லாம் வல்ல ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டி வாழ்த்துகிறேன். அவருக்கு எந்நாளும் அருகிருந்து ஊக்கப்படுத்தும் உந்து சக்தியாக இருக்கும் திருமதி. அகளங்கன் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**துரைராசா இளங்குமரன்,**
விரிவுரையாளர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

**கவிப்பேரரசு கண்ணதாசன் மன்றம் (20.09.1982)**

தங்களின்
சேரர் வழியில் வீரர் காவியத்தை
சோராது கொஞ்சம் நெஞ்சில் திணிக்க
வீர உணர்வும் விழுமும் காவிய நினைவும்
சேர வந்திட சிறப்பாய் மகிழ்ந்தேன்

கற்புடை கண்ணகி கன்னியை போற்றி
கற்புடை காவியம் செய்தீர்
சொற்புதிதான சோதிமிகு கவியுலகில்
நற்காவியம் கண்டேன் நான் மகிழ்ந்தேன்

**அன்புடன் கலா விஷ்வநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# ஆசான் அகளங்கனும் அவரின் அலைக்குமிழ் நாவலும்

**திரு.க.சுவர்ணராஜா**
உப பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

ஒரு சமூகத்தின் உருவாக்கத்தில் இலக்கியத்தின் பங்கு மகத்தானதாகும். சமூக உருவாக்கத்தின் ஒரு பிரதான அம்சமாக இலக்கிய உருவாக்கம் திகழ்கின்றது. ஒரு சமூகத்தின் செழிப்பும், வனப்பும், பண்பாட்டுக் கோலங்களும் இலக்கியத்தின் ஒழுங்கமைப்பினால் கட்டி எழுப்பப்பட்டதாகும்.

சமூகத்தின் பிரதான அங்கமாகிய இலக்கியத்தைப் படைப்பவர்களும், அவ்விலக்கியங்களைப் போற்றுபவர்களும், இலக்கியப் படைப்பாற்றல்களைப் பாதுகாப்பவர்களும் அதனை விளங்கிக்கொள்ளுமாறு எளிய நடையில் பல்வேறு வடிவங்களில் மக்களிடையே எடுத்துச் செல்பவர்களும் அச் சமூகத்தின் அச்சாணியாக விளங்குகின்றனர். அத்தோடு சமூகத்தில் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டி இலக்கிய இரசனையை விதைத்து, வளர்ந்து வரும் இளம் உள்ளங்களில் இலக்கியத்தை வளர்த்தெடுப்பவர்களும் அச் சமூக உருவாக்கத்தில் மறைந்தும் மறையாமலும் நின்று பங்களிப்புச் செய்கின்றனர்.

மேற்கண்ட வரிகள் என்னுள்ளே எழும்போது புன்னகை தவழும் என் ஆசான் **அகளங்கன்** மட்டுமே என் மனதில் காட்சி தரமுடியும். ஏனெனில் எனக்குள்ளேயும் ஆசான் அகளங்கன் விதைத்த விதைகள் ஆங்காங்கே என் தொழில்சார் புலத்திலும், என் சுயவிருத்தியிலும், என் எழுத்திலும், என் இலக்கிய ஆர்வத்திலும் பூக்களாய்ப் பூத்து நிற்கின்றன. என் இலக்கிய மனத்தோட்டத்தின் நிறைய பூக்களின் சொந்தக்காரன் ஆசான் அகளங்கன் மட்டுமே எனச் சொல்லிக்கொள்வதில் நான் பெருமையடைகின்றேன்.

அறுபதுகளில் அடியெடுத்து வைத்திருக்கும் ஆசான் அகளங்கன் அவர்களின் மணிவிழா மலரில் அவர் எழுதிய **அலைக்குமிழ்** நாவல் பற்றி எழுதுவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை என் வாழ்நாளின் வெற்றிகளில் ஒன்றாகவே கருதுகின்றேன். அலைக்குமிழ் நாவல் பற்றிய பார்வையோடு கலந்து ஆசான் அகளங்கன் அவர்களின் நிழலில் நான் பெற்ற இலக்கிய அனுபவங்களையும் இத்தோடு பகிர்வதற்கு முனைகின்றேன். நிச்சயமாக இது ஆசான் அகளங்கன் பற்றிய புகழுரை அல்ல. ஒரு நன்றியுரையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலைக்குமிழ் (நாவல்)** 1977 இல் எழுதப்பட்டு 2011 இல் பிரசுரமாகியது. ஆசான் அவர்களின் 23ஆம் வயதில் எழுதப்பட்டது. அவரின் 23ஆம் வயதின் இலக்கியப்பார்வை, சமூக நோக்கு, விழுமியப்பார்வை, மண் பற்றிய நேசம் என்பன கலந்து வரும், புதினம் இது. அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மன்ற தலைவராகவும், ஒரு உயர்கல்வி மாணவனாகவும் திகழும் காலங்களில் எழுந்த கண்ணோட்டங்கள் இந்நாவலில் வெளிப்படுகின்றது.

இந்நாவலைப்பற்றி நான் எழுத முற்படும்போது இந்த நாவல் எழுதப்பட்ட காலத்தினை நான் திரும்பிப் பார்க்கின்றேன். எனக்கு 17 வயது. நான் பாடசாலை மாணவன். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன். கொஞ்சம் இலக்கிய ஆசை. அப்போது ஆசான் அகளங்கன் அவர்களை தூரத்தே நின்று இரசித்த காலம், மறைந்த அதிபர் **திரு.கா.லோகசிங்கம்** அவர்கள் என்னை அருகில் அழைத்து ஆசான் அகளங்கன் அவர்களுக்கு அறிமுகப்படுத்திய காலம். ஆசான் அகளங்கனைப் போன்று மேடைகளில் பேச வேண்டுமென ஆவல் துளிர்த்த காலம் அது. இப்போது, அப்போது அவரால் எழுதப்பட்ட நாவல் பற்றி கண்ணோட்டமிடுகின்றேன். பெருமைப்படுகின்றேன்.

அலைக்குமிழ் நாவலை வாசித்த போது எனக்குள் சில மதிப்பீடுகளை உருவாக்கிக் கொண்டேன்.

- அலைக்குமிழ் சமூகப் பிரச்சினைகளை அலசுகின்றதா?
- சமுதாய ஒப்புரவு பற்றிய சிந்தனைகளைக் கொண்டதா?
- படிப்பினை தரும் சிந்தனைக்களமாக உள்ளதா?
- 37 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தை எனக்குக் காட்டுகின்றதா?
- சமூக சட்ட விதிகளை, ஒழுக்கங்களைக் கையாளுகின்றதா?
- மண்வாசனை கமிழ்கின்றதா?
- எங்காவது கொஞ்சம் அரசியல் பேசுகின்றதா?
- வன்னியின் மாண்பினை எடுத்துரைக்கின்றதா?

என்பதே அந்த மதிப்பீடுகளாகும்.

நான் தேடிய சகல விடயங்களும் நாவலினுள்ளே பொதிந்திருப்பது மகிழ்ச்சிதரும் விடயமாகும். ஆசான் அகளங்கன் எப்போதும் நேர் நிலை நின்று சிந்திப்பவர், மரபு இலக்கியத்தையும் நவீன இலக்கியத்தையும் ஒன்று சேர இரசிப்பதில் ஆர்வமுள்ளவர்.

அலைக்குமிழ் நாவல் அவரின் எழுத்துலக பரிச்சயத்தின் ஆரம்பக் காலகட்டங்களில் எழுதப்பட்டது. அக்காலத்திலேயே சமூக வரலாற்றை அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்தும் நாவலாசிரியரின் பாத்திரத்தை அவர் கையாண்டுள்ளார். மண்வாசைன கமழ பண்பாட்டின் அபத்தமான பக்கத்தை நாகரிகமாக தனது நாவலில் எடுத்துரைத்துள்ளார். அலைக்குமிழில் கூறப்பட்ட காதலித்தல், கைவிடுதல், காதலித்து கர்ப்பமாக்கி கைவிடுதல், இரத்த உறவுகள் அறியாது காதலித்து துன்புறுதல், தற்கொலை செய்தல் போன்ற அபத்தமான விடயங்கள் இன்னும் எம் சமூகத்தில் தொடர்கின்றன. அதனை 37 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக காதலின் பரிமாணங்களோடு ஆசான் அகளங்கன் எடுத்துக்காட்டியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகர், மோகன், சந்திரா என்ற பாத்திரங்களுள் நிகழும் உறவுமுறை, பாசம், அன்பு, பிரிவுத்துயர், சுயகட்டுப்பாடு, ஒத்துணர்வு என்பவற்றை வயலோடு, வாசலோடு, ஊர்த் திருவிழாவோடு, பிரயாணங்களோடு இணைத்து நாவல் செல்லும் விதம் சலிப்பின்றிப் படிக்கத் தூண்டுகின்றது.

அலைக்குமிழ் நாவலினை 21க்கும் 25க்கும் வயதிற்குட்பட்ட 10 பேரிடம் வாசிக்கக் கொடுத்தேன். அவர்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. மிகவும் எளிமையான நடையில் அமைந்த நாவல்
2. நான் வாசிக்கும் முதல் நாவல் இது. எவ்வித சலிப்புமின்றி தொடர்ந்து வாசித்து முடித்தேன்.
3. நாவல் ஆசிரியர் தனது இளமைக்கால எண்ணங்களை சமூக மதிப்பீட்டுடன் கொஞ்சம் கற்பனை கலந்து சொல்வது எனக்குப் பிடித்திருக்கின்றது. ஆனால் நாவலின் நாயகி தற்கொலை செய்து கொள்வதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.
4. நாவல் ஆசிரியர் பன்முகத்திறன் கொண்டவர் என்பதை நாவலின் வார்த்தை வரிகள் புடம்போட்டுக் காட்டுகின்றன.
5. இன்றைய எமது இளைஞர்களின் வாழ்க்கையை நிச்சயம் இந்த நாவல் மறு மதிப்பீடு செய்கின்றது.
6. நாவலின் பல்வேறு கட்டங்களில் பிரதிபலிப்புச் சிந்தனை தொடர்கின்றது. மனித வாழ்க்கைக்கு அவசியமான பிரதிபலிப்பு பற்றிய நோக்கு வரவேற்கத்தக்கது.
7. எனக்கு இந்நாவலில் மிகவும் பிடித்த விடயம் இயற்கை பற்றிய வர்ணனைகள் ஆகும். இயற்கையை வர்ணிப்பதற்கு நாவலாசிரியர் எடுத்துக் கையாளும் நுட்பங்களும் சொற்களும். நானும் ஓமந்தைப் பகுதிக்குள் பிரவேசித்துவிட்டேன். உதாரணமாக "மேகங்கள் திரண்டு மழைபொழியப் போகும் அறிகுறியைக் கண்டதும் மயில்கள் தோகையை விரித்துக் களிப்பினால் நர்த்தனஞ் செய்கின்றன." போன்ற வரிகள்..
8. புதூர்த் திருவிழா பற்றி நாவலாசிரியர் குறிப்பிடும் ஆன்மீக விடயங்களும், சமூக விடயங்களும் இன்றும் இடம்பெறுகின்றன. உதாரணமாக ஆஸ்திகர் அருள் வேண்டி வருவார்கள். நாஸ்திகர் பொழுதுபோக்க வருவார்கள்.
9. அந்தக் காலத்தில் கடித பரிமாற்றம் எவ்வாறு உறவு நிலைகளைப் போற்றிப் பாதுகாத்தது என்பது இன்றைய நவீன தொடர்பாடல் உலகிற்கு ஒரு செய்தியாகும். காதலின் வழி அன்பு மட்டுமல்ல, மொழிவிருத்தி, கவிதைநயம், இலக்கிய அலசல், என்பனவும் இடம் பெற்றுள்ளமையை இந்நாவல் எடுத்துக்காட்டுகின்றது.
10. நாவலை வாசிக்கும் போது ஒரு திரைப்படம் என்னுள்ளே ஓடியது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. உரைநடையால் மனித உணர்ச்சிகளை வெளியிட முற்படும் அகளங்கன் அவர்களின் எழுத்துக்கள் என்னை பெரிதும் கவர்ந்தன.
11. காதல் என்பது அன்பைத்தவிர வேறெதையும் தாங்கி வருவதில்லை, என்ற காதலின் புனிதத்துவம் பற்றி விதந்துரைக்கும் அலைக்குமிழ் இன்றைய சமூகத்திற்கான ஒரு போதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் மேற்கண்ட கருத்துக்கள் ஆசான் அகளங்கன் அவர்களுடைய நாவல் காலம் கடந்தும் விரும்பப்படும் ஒரு நாவல் என்பதை உணர்த்தி நிற்கின்றது

கலைஞன் என்பவன் ஏனைய மனிதர்களிடமிருந்து பெரிதும் வேறுபடுகின்றான். தனக்கென ஒரு தனிப்பார்வை உடையவன் என்பது இலக்கிய விமர்சகர்களின் கருத்தாகும். ஆனால் ஆசான் அகளங்கன் அவர்கள் எங்களை இலக்கியம் படைக்கத் தூண்டும் போது தனது பார்வையை எங்களுக்குள் செலுத்தாது எங்கள் பார்வையை நாங்கள் நன்கறிய வழிகாட்டுவது அவரது சிறப்பம்சமாகும். இந்த நாவல்கூட புதிதாக நாவல் எழுத முற்படும் புதியவர்களுக்கு ஒரு இலகுவான வழிகாட்டியாகும்.

பல இலக்கிய வடிவங்கள் பிரதிபலித்துக் காட்டுதல், படம் பிடித்துக் காட்டுதல் என்பவற்றைச் சரியாகக் கையாளுவதில்லை. இதனால் அதனை நுகருபவர்கள் சமூக சிந்தனை, பண்பாட்டுக் கரிசனை என்பவற்றை மறந்து செயல்படத் தொடங்கி விடுகின்றனர். உதாரணமாக இன்றைய தென்னிந்திய தமிழ்சினிமா ஆசிரியர்களைக் கேலி செய்யும் கதாநாயகர்களை அதிகம் காட்டுகின்றது. இதனை இரசிக்கும் மாணவர் கூட்டம் பொருத்தமற்ற நடத்தைகளையே வெளிக்காட்டுகின்றது. இவ்வகையில் ஆசான் அகளங்கன் தனது படைப்புக்களைப் படைக்கும் போது தனிமனித நடத்தைகளையும், சமூக நடத்தைகளையும் ஆத்மார்த்தரீதியில் பாதுகாப்பதை கருத்திற் கொள்பவர். அதற்கு இந்த நாவல் ஒரு சான்றாக அமைகின்றது.

ஆசான் அகளங்கன் தனது படைப்புகளில் அரசியல் பற்றி உணர்ச்சிபூர்வமாகப் பேசி அதனை வாசிப்பவர்களை ஆவேசப்படுத்தி வேடிக்கை பார்க்கும் போலித் தோற்றம் கொண்டவரல்ல. வரலாற்றோடு மண்பற்றோடு இலக்கியத்தைக் கலந்து அரசியலை உணரச் செய்பவர். மற்றவர்கள் தனது படைப்புகளால் வழிதவறிப் போகாது பாதுகாப்பவர். இந்நாவலில் கூட இடம்பெறும் தற்கொலைகள் பொருத்தமான முடிவா என்பதை பாத்திரங்களின் ஊடாகவே விவாதித்திருப்பது, ஒரு சிறப்பம்சமாகும்.

**க.சுவர்ணராஜா**
உபபீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01
# நன்றி

அணிந்துரை வழங்கிய அறிஞர்களுக்கு

1. பேராசிரியர் கலாநிதி - அ.சண்முகதாஸ் Ph.D. அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக் கழகம்)
நூல் - 1. அலைக்குமிழ் (நாவல்) - 1978
2. வாலி (ஆய்வு) - 1987

2. கவிஞர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை M.A.Ph.D. அவர்கள்
(அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தலவாக்கலை)
நூல் - சமவெளி மலைகள் (அகளங்கன் - சு.முரளிதரன் கவிதைகள்) - 1985

3. வித்தியா பூஷணம் கலாநிதி.நா.சுப்பிரமணியன் M.A.Ph.D. அவர்கள்
(விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ். பல். கழகம்)
நூல் 1. இலக்கியத் தேறல் (கட்டுரை) - 1988
2. நளவெண்பா (கதை) - 1989

4. பேராசிரியர் கலாநிதி.சி.மௌனகுரு M.A.Ph.D. அவர்கள்
(தலைவர், நுண்கலைத் துறை கிழக்கு பல்கலைக் கழகம்)
நூல் 1. அன்றில் பறவைகள் (நாடகம்) - 1992

5. கலாநிதி துரை மனோகரன் M.A.Ph.D. அவர்கள்
(விரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக் கழகம்)
நூல் 1. இலக்கியச் சிமிழ் (கட்டுரை) - 1992

6. கலாநிதி க.அருணாசலம் M.A.Ph.D. அவர்கள்
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக் கழகம்)
நூல் 1. மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் ஆய்வு - 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. திரு.பொ.கனகரத்தினம் அவர்கள்
(முன்னாள் அதிபர் வ/சைவப்பிரகாச மகளிர் மகா வித்தியாலயம்)
நூல் - இலக்கிய நாடகங்கள் - 1994

8. கலாகீர்த்தி பேராசிரியர்.சி.தில்லைநாதன் M.A.Ph.D. அவர்கள்
(பேராதனைப் பல்கலைக்க கழகம்)
நூல் - இலக்கியச் சரம் (கட்டுரை) - 2000

9. சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள்
(தலைவர், இந்து மாமன்றம் வவுனியா)
நூல் - பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை) - 2003

10. கலாபூஷணம் தமிழ்மணி இலக்கியச் செல்வர்
கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
நூல் - நறுந்தமிழ் (கட்டுரை) - 2006

11. திருமதி.அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள்
(மூத்த ஊடக வியலாளர்)
நூல் - பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு) - 2007

12. கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் M.A.Phd அவர்கள்
(ஆங்கில வரிவுரையாளர், யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாகம்)
நூல் - பத்தினித் தெய்வம் (நாட்டிய நாடகம்) - 2008

13. காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள்
நூல் - கம்பனில் நான் (கட்டுரை) - 2013

14. எழுத்தாளர் தெளிவத்தை ஜேசேப் அவர்கள்
நூல் - முற்றத்துக் கரடி (சிறுகதை) - 2014

**அகளங்கன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

## நூல் வெளியீட்டு நிகழ்வுகளில்

# சிறப்புப் பிரதிகள் பெற்று உதவிய பெருந்தகைகள்

**நூல்** : **"வாலி"**
யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மன்ற வெளியீட்டு நிகழ்வில்

முதற் பிரதி பெறுபவர் : கவிஞர் இ.முருகையன் B.Sc.M.A
(சிரேஸ்ட உதவிப் பதிவாளர்)

சிறப்புப் பிரதிகள் பெறுவோர் : திரு.ஐ.திராவிடதாசன். (லக்ஷ்மி விலாஸ், யாழ்ப்பாணம்)
திரு.க.இலகுப்பிள்ளை (முகாமையாளர் TIP TOP.யாழ்ப்பாணம்)

---

**நூல்** : **"இலக்கியத்தேறல்"**
வவுனியா முத்தமிழ்க் கலாமன்ற வெளியீட்டு நிகழ்வில்

முதற் பிரதி பெறுபவர் : திரு.க.தர்மலிங்கம். (தலைவர் கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்கம் வ.தெ.த.பி.)

சிறப்புப் பிரதி பெறுவோர் : திரு.கா.லோகசிங்கம்.
(தலைவர் கிராமோதய சபை வவுனியா நகரம்)
திரு.M.நடராசா. (தலைவர் விவசாயிகள் சங்கம் வவுனியா மாவட்டம்)
திரு.S.சிவலிங்கம். (சிவசங்கரி மில் வீதி வவுனியா)
திரு.A.சிவசுப்பிரமணியம். (கிருபா ஏஜன்சி வவுனியா)
திரு.T.பூபாலசிங்கம். (சிங்கம்ஸ் ரேடர்ஸ் வவுனியா)
திரு.S.வில்வராஜா. (பாம் கவுஸ் வவுனியா)
திரு.க.கந்தசாமி. (வாகினி கோட்டல் வவுனியா)
ஜனாப் M.S.நவாஸ். (P.M.S.நகை மாளிகை வவுனியா)
திரு.வை.செ.தேவராஜா
திரு.ச.சுப்பிரமணியம்.
திரு.S.K.சின்னத்தம்பி (வைரவ புளியங்குளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.S.கேதாரலிங்கம். (தவசிகுளம்)
திரு.மு.பொன்னம்பலம். (தாண்டிக்குளம்)
திரு.K.P.கந்தசாமி (நெடுங்கேணி)

நன்றி : வவுனியா ப.நோ.கூ.ச. தலைவர்,
திரு.சூ.ஞானப்பிரகாசம் அவர்கள்

---

நூல் : **"இலக்கியத் தேறல்"**
பலாலி ஆசிரிய கலாசாலைத் தமிழ் மன்ற வெளியீட்டு நிகழ்வில்

சிறப்புப் பிரதி பெறுவோர் : "சிவதர்ம வள்ளல்", "சிவநெறிப் புரவலர்"
திரு.க.கனகராஜா. J.P.
(அதிபர் மில்க்வைற் தொழிலகம் யாழ்ப்பாணம்.)
திரு.சி.நமசிவாயம். பொதுச் செயலாளர், யாழ் வர்த்தக சங்கம் (சிவகுமார் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.)
திரு.அ.கதிர்காமநாதன். (அதிபர் உமா பிரிண்ட்டர்ஸ்)
திரு.K.அரசரெத்தினம். (கவிதா பார்மசி, கே.கே.எஸ். வீதி.தட்டாதெரு. யாழ்ப்பாணம்.)
திரு.K.R.டேவிட் (பிரபல எழுத்தாளர்)
செல்வி.எஸ்.சின்னப்பு.
(அதிபர்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திரு.K.சதாசிவமூர்த்தி.
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை.)
திருமதி ராஜன் மங்களா. (விடுதி மேற்பார்வையாளர். பலாலி ஆசிரிய கலாசாலை.)

---

நூல் : **"அன்றில்ப் பறவைகள்"**
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மேற்பிரிவுத் தமிழ் மன்ற வெளியீட்டு நிகழ்வில்

முதற் பிரதி பெறுபவர் : திரு.சு.வீரசிங்கம் அவர்கள். (தலைவர் கூட்டுறவுச் சங்கம் வவுனியா தெற்கு தமிழ் பிரிவு.)

